# அமிர்தலிங்கம்
# சகாப்தம்



ஈழத் தமிழர் அரசியல் வானில் மக்கள் தலைவனாகக் கோலோச்சியவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள். அவர் 1989 யூலை 13ஆந் திகதி பலிகொள்ளப்பட்டதை அடுத்துத் தமிழ்ச் சமூகம் அவரது கொலை பற்றி மௌனம் சாதிக்கிறது. நான்கு தசாப்தங்கள் (1949 - 1989) தலைக்குமேல் தூக்கி வைத்துப் போற்றிய தலைவரது புகழ் சொல்லவும், நாமம் சொல்லிப் பேசவும், அவரது அளப்பரிய சாதனைகளைப் பதிவு செய்யவும் சமூகம் மிரளுகிறது.

அமிர்தலிங்கம் அவர்களின் கொலைக்கான காரணத்தை அவர் பற்றிய நூல்கள் தெளிவாகச் சொல்லாவிட்டால் அவர் ஏதோ தவறு இழைத்தமைக்காகவே கொலை செய்யப்பட்டார் என்றே இனிவரும் இளைய தலைமுறைகள் நம்ப இடம் வைக்கும். ஈழத் தமிழ் மக்கள் தலைவனின் மேலான பங்களிப்பைத் தமிழினம் மீட்டுப் பார்க்க இந்த நூல் துணைசெய்கிறது.

முதற் பாகத்தில் அரசியல் வாழ்க்கையைச் சுருக்கமாகச் சொல்லி, இரண்டாம் பாகத்தில் கொலைக்கான காரணங்களும், கொலை செய்தவர்கள் செய்வித்தவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய செய்திகளும், கொலை தொடர்பாக இதுவரை சொல்லப்படாத செய்திகளும், கொலை பற்றிப் பலர் ஆங்காங்கு எழுத்திற் தெரிவித்த மக்களை அடையாத செய்திகளும், கண்கண்ட சாட்சிகளும் உள்ளன.

மூன்றாம் பாகத்தில் ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையை - சாணக்கியத்தைப் புறக்கணித்ததால் ஏற்பட்ட விளைவுகள் சொல்லப்பட்டுள்ளன. 1987 -2001 வரையான 14 வருடப் போரின் போது மக்கள் அனுபவித்த அவலங்கள், துயரங்கள், துன்பங்கள், கொடுமைகள், இழப்புக்கள் அத்தனையும் அமிர்தலிங்கம் அவர்களின் தீர்க்கதரிசனத்தை இடறியதன் விளைவுகள். மக்களின் உயிருடைமைகளை முதன்மைப்படுத்தி உரிமைப் போராட்டங்களை முன்னெடுக்கின்ற மனிதநேயமுள்ள தீர்க்கதரிசனம் நிறைந்த அமிர்தலிங்கம் அவர்கள் போன்ற தலைவர்கள் சமுதாயத்தின் சொத்து. அத்தலைவர் [illegible]



# அமிர்தலிங்கம் சகாப்தம்

# அமிர்தலிங்கம் சகாப்தம்

கதிர் பாலசுந்தரம்

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை
லண்டன்

Amirthalingam Sagaptham (In Tamil)
Political Biography: Amirthalingam Era

Published by:
Amirthalingam Memorial Foundation
e-mail : b_amirthalingam@hotmail.com

© Kathir Balasundaram

ISBN. : 0-9543502-2-7

1st Edition : 13 July 2004

Pages : xxiv + 424

Cover Design
K. Krishnarajah

Typeset by
M/s. Platinum Graphics,
Pondicherry- 605 001.

Printed at
M/s. Sunmathi Publishing Works,
Bangarunaicken Street,
Chennai - 600 002.



முனைவர் **குமரிஅனந்தன்**
முன்னாள் தலைவர்
தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி
காமராஜர் நிலையம்
50, வெட்டகட்ட நாராயண சாலை
தியாகராய நகர்.
சென்னை - 600 017.

# அணிந்துரை

அண்ணல் அமிர்தலிங்கம் அவர்கள் சகாப்தம், மீண்டும் உயிர்த்தெழும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையின் அடிப்படையில் எழுத்துருவாக்கம் பெற்றுள்ள இந்த நூல், காலத்தின் கட்டாயம். நூலாசிரியர் திரு. கதிர் பாலசுந்தரம் அவர்கள் ஈழத் தமிழர்களின் நான்கு தசாப்த அரசியல் வராலாற்றை, ஒரு பார்வையாளனாகக் கண்டுணர்ந்த நிலையில் உண்மைத் தகவல்களை ஆதாரங்களுடன் நிறுவி இந்நூலைப் பேசவைத்துள்ளார். மிக வேகமான ஓர் உன்னத அரசியல் சக்தியாகப் பிரவேசித்த அமிர்தலிங்கம் அவர்கள், ஈழத் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக நாற்பது ஆண்டுகள் மணிமுடிதரித்த வரலாறு சிறப்பாக எடுத்துரைக்கப்படுகிறது. அமிர்தலிங்கம் சகாப்தம் வரலாறாகிவிட்ட இத்தருணத்தில் இது ஒரு வரலாற்று ஆவணமாக வெளிவருகின்றது.

மூன்று பாகங்களைக்கொண்ட 'அமிர்தலிங்கம் சகாப்தம்' நூல் அமிர்தலிங்கம் அவர்களின் அரசியல் பிரவேசம், வட்டுக்கோட்டையில் வெற்றியெனத் தொடங்கி, வேறு யாரும் பதிவுசெய்ய இயலாத எண்ணற்ற சம்பவத்தொகுப்புகளோடு உயிரோட்டமாக நகர்கின்றது. ஆசிரியர் அண்ணலின் மனிதநேயப் பண்புகளையும், தமிழர்மீதும் தமிழ்மீதும் அவர் கொண்ட தணியாத ஈடுபாட்டையும் செம்மையாகப் படம்பிடித்துள்ளார். இலக்கிய நயமிக்க, அவர்தம் உரை வீச்சு இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர் ஒலித்த பாங்கினையும், வரலாற்று ஆவணங்களாகத் திகழும் அவர்தம் உரைகளின் முத்திரை பதிக்கக்கூடிய பகுதிகளையும் இந்நூலில் பார்வைக்கு வைத்துள்ளார். எதிரிகளையும் நட்பாக்கி ஈழத்தமிழ் மக்களின் நலன் ஒன்றே குறிக்கோளென்று வாழ்ந்த அரிய மனிதர் அமிர்தலிங்கம் அவர்கள். அன்னாரின் கொலை ஒரு தொடர் கதையென்று ஆசிரியர் ஆதாரங்கள் சமர்ப்பிக்கின்றார். அண்ணலின் அரசியல் கொலை, ஈழத்தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வெற்றிடத்தை நிரப்ப இயலாதோர் கையாண்ட யுக்திகளில் ஒன்றுதான் அவர்மீது புழுதிவாரி இறைத்தல். அவ்வாறு விமர்சனத்துக்கு உட்பட்ட பல நிகழ்வுகளை ஆசிரியர் முன்வைத்து, மக்கள் மனதில் உள்ள மயக்கங்களைத் தெளிவுபடுத்துவதை

அவதானிக்க முடிகின்றது. காலம் ஒருபோதும் கறைபடிந்ததல்ல. நிதர்சன உண்மைகள் ஒரு போதும் ஒட்டுத்திரைகளினால் மறைந்து போவதில்லை என்று அடித்துக் கூறுகின்றார்.

அமிர்தலிங்கம் அவர்களது அரசியல் அணுகுமுறைகள் எப்போதும் ஒட்டுமொத்தத் தமிழர்களின் பிரதிபலிப்பாகவே அமைந்தன. கடல் பல கடந்து ஈழமக்களின் இன்னல்களைப் பறைசாற்றிய அமிர்தலிங்கம் அவர்களின் எதிர்கால நோக்கும், அவர் கடைப்பிடித்த இந்திய மைய வெளிநாட்டுக் கொள்கையும் வரலாற்றில் வியக்கத்தக்க சாதனைகளாகப் பதிவாகியுள்ளன. நேற்று இன்று நாளையும் அவர்தம் வெளிநாட்டு அணுகுமுறை சிரஞ்சீவித்தியமுடையது. ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகமயப்படுத்த அரும்பாடுபட்ட அண்ணல் அவர்களின் நெடிய அரசியல் வரலாற்றுப் பயணத்தின் விழுதுகள் 'அமிர்தலிங்கம் சகாப்தம்' என்னும் இந்நூலில் ஆசிரியர் திரு. கதிர் பாலசுந்தரம் அவர்களின் எழுத்தோவியமாகக் காட்சி தருகின்றன.

அண்ணல் தனது காலத்திலேயே தமிழ் மக்கள் எதிர் நோக்கிய பல பிரச்சினைகளுக்கும் தீர்வுகண்டுவிட்டதாக மூன்றாம் பாகத்தில் ஒரு பட்டியலைப் பார்வைக்குச் சமர்ப்பித்திருக்கும் ஆசிரியர், சமஷ்டி அரசியல் தவிர்ந்த இன்றுள்ள பிரச்சினைகள் அஹிம்சையில் நம்பிக்கை வைக்காதவர்களால் முகிழ்த்தவை என்ற கருத்தை முன்வைக்கின்றார். உண்மைகள் கசக்கின்ற சமூகத்துக்கு இது ஒரு சவாலாக அமைகிறது.

படிப்போர் நெஞ்சம் நெகிழ்ந்திடும் வகையில் உருவாக்கம் செய்யப்பட்டுள்ள 'அமிர்தலிங்கம் சகாப்தம்', ஒரு முழுமைபெற்ற அரசியல் வரலாற்றின் மூச்சாகவும் சதையாகவும் இரணமாகவும் அமைந்துள்ளது. அண்ணல் அமிர்தலிங்கம் அவர்களது வாழ்க்கைவரலாறு, ஈழத்தமிழ் மக்களின் நாலு தசாப்த விடுதலைப் போராட்ட வரலாறாகவும் அமைகின்றது. ஈழச் சமூக, அரசியல் வரலாற்று ஆய்வாளர்களை ஈர்க்கும் வகையில், பல்வேறு தரவுகள் ஆசிரியரின் சொந்த அனுபவத்தின் வெளிப்பாடாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் அழியாப் புகழுக்கு அணிசேர்க்கும் விதமாக இந்நூல் வெளிவருகின்றது.

உலகெங்கும் பரவி வாழ்கின்ற ஈழத்தமிழ் மக்கள் தம்மழலைகளுக்குத் தமிழையும் போதித்து, அமிர்தலிங்கம் அவர்களின் விடுதலை வரலாற்றையும் கூறிவைக்கவேண்டியது, அவர்களின் தவிர்க்க முடியாத கடமை. இல்லையெனில் விக்கிரமாதித்தன் என்றொரு பேரரசன் ஆண்டான் ..... நலம் பலவும் செய்தான் என்று காற்றோடு காற்றாய் ஈழத்தமிழர் வரலாறு நாடற்ற, மொழியற்ற, கலாச்சாரம் மறந்த வரலாறாகிவிடும். ஈழத்தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்த போதிலும் ஈழமண்ணின் இறையாண்மை போற்றிடும் வகையில் அமிர்தலிங்கம் அவர்களின் அரசியல் வாழ்க்கை வரலாற்றை அடித்தளமாகக் கொள்ளவேண்டும். புலம் பெயர்ந்த ஈழத்தமிழ்





மக்கள் தமிழ் பண்பாட்டையும் தமிழ் மொழியையும் சிறப்பாகப் போற்றி வரும் - புதிய சூழலில் எழுதப்பட்டுள்ள - இந்நூல் எதிர்காலச் சந்ததிகளுக்கு வரலாற்றுக் கதாநாயகன் அமிர்தலிங்கம் அவர்களின் மகத்துவங்களைச் சொல்ல உதவும் என்பது திண்ணம். 'அமிர்தலிங்கம் சகாப்தம்' தமிழர்தம் வரலாற்றுப் பொக்கிசமாக வெளிவரத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டுள்ள நூலாசிரியர் திரு. கதிர் பாலசுந்தரம் அவர்கள் தமிழ் மக்களின் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்.

நம் முன்னே அமிர்தலிங்கத்தைக் கொண்டு வந்து நிறுத்துகிறார் திரு. கதிர் பாலசுந்தரம். தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் பேச்சையும், மூச்சையும் அர்ப்பணித்தவர் அமிர்தலிங்கம் அவர்கள். வாழ்க்கைத் துணையாக அமைந்த மங்கையர்க்கரசியார் வீராங்கனையாக தமிழ்ப் பெண்ணிற்கேயுரிய நற்பண்புகளோடு துணை நின்றார்.

சென்னை சேப்பாக்கம் விருந்தினர் விடுதியில் அவர்கள் தங்கியிருந்த போது நாங்கள் உணவருந்தி உரையாடியதெல்லாம் மனக்கண் முன்னால் வந்து நிற்கிறது.

அமரத்துவம் தரும் அமிர்தம், குழையும் தன்மையுடையது. லிங்கம் குழைவார்க்கு அருள் தருவது; ஆனால் குலைக்கக் கருதுவோருக்கு குலை நடுக்கம் செய்ய வல்லது.

அமிர்தலிங்கனாரிடம் நட்போடு பழகுகின்றவர்களுக்கு அமிர்தமாகவும்; தமிழுக்குப் பகைவரிடம் சிறிதும் வளைந்து கொடுக்காத லிங்கமாகவும் காட்சியளித்தார்.

அவர் மரணம் கேட்டு நெஞ்சம் நொறுங்கி கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கியவர்களில் யானும் ஒருவன்...

புன்னகைக்கும் முகம் எங்கே

பொங்கி வரும் தமிழ் தந்த உருவம் எங்கே எங்கே என்று அழுது அரற்றியது இதயம்.

நன்மகன் ஒருவரை வன்முறை பலிகொண்டதே என்று பொருமிக்கொண்டே அவருடைய உருவப்படத்தை ஏந்தி ஆலங்குளம் என்ற ஊரிலிருந்து ஆறுமுகன் கொலு வீற்றிருக்கும் திருச்செந்தூர் வரை பாதயாத்திரை செய்தோம்.

வழியெல்லாம் நின்ற மக்கள் விழியெல்லாம் நீர்மல்க அவருடைய படத்திற்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்நூல் வெளிவரும் வேளை ஈழத்தமிழ் மக்களின் தீராப் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தர தீர்வு ஏற்படுமாயின், அதுவே அமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றிய

அரசியல் போராட்டங்களுக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாக அமையும். அண்ணலின் அரும்பெரும் பணிகளை ஒன்று திரட்டி, வரலாற்றை மீள்பார்வைக்குத் தரும் 'அமிர்தலிங்கம் சகாப்தம்' ஈழத்தமிழர் நலனில் அக்கறைகொண்ட ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கையேடாகும்.

தமிழுக்கு உயிர் ஈந்தவர் வாழ்க்கையை உயிரோட்டமாக எழுதியுள்ள திரு. கதிர் பாலசுந்தரம் அவர்களின் எழுத்தாற்றலைப் போற்றுகின்றேன்.

தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தன் இன்னுயிர் நீத்த அண்ணல் அமிர்தலிங்கம் அவர்களின் சகாப்தம் மறுமலர்ச்சிபெறும் காலம் வெகு தொலைவில் இல்லை. பொன்னான அந்தக் காலத்தின் எழுந்தருள்கையை எதிர்பார்த்து வாழும் ஈழத்து உறவுகளுக்குப் தமிழ் மக்களின் இதயம் நிறைந்த ஆசிகளும் வாழ்த்துக்களும்.

குமரிஅனந்தன்
சென்னை - 600 017.



# முகவுரை

ஈழத் தமிழ்ச் சமூகம் வாய் திறக்க அக்கம் பக்கம் பார்க்கிறது. ஈழத் தமிழர் அரசியல் வானில் மக்கள் தலைவனாகக் கோலோச்சியவர் அமிர்தலிங்கம் அவர்கள். அவர் 1989 யூலை 13ந் திகதி பலிகொள்ளப்பட்டதை அடுத்துத் தமிழ்ச் சமூகம் அவரது கொலை பற்றி மௌனம் சாதிக்கிறது. நான்கு தசாப்தங்கள் (1949 - 1989) தலைக்குமேல் தூக்கி வைத்துப் போற்றிய தலைவனது புகழ் சொல்லவும், நாமம் சொல்லிப் பேசவும், அவனது அளப்பரிய சாதனைகளைப் பதிவு செய்யவும் சமூகம் மிரளுகிறது. இது புலம் பெயர்ந்து வாழும் நாடுகளுக்கும் பொருந்தும். புத்தி ஜீவிகள் என்று தம்மை அடையாளப்படுத்து வதில் பெருமை கொள்பவர்கள், தபசிகளாக மாறிவிட்டார்கள். எதிர்கால வரலாற்றாசிரியர்கள், வரகவிகள், இரத்த வாரிசுகள் ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களை முழுமையாகப் பார்க்க இந்த நூல் உதவும்.

1996ஆம் ஆண்டில் பத்திரிகையாளர் ரி. சபாரத்தினம் அவர்கள் 'ஒரு மிதவாதியின் கொலை' என்ற அமிர்தலிங்கம் அவர்கள் பற்றிய அரசியல் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதி வெளியிட்டார். அந்த நூலையடுத்து 'வரலாற்றின் மனிதன்' என்னும் நூல் 2002 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட.து. இது பல பிரமுகர்களின் கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு நூலாகும். கணினி இணையதளங்களில் பத்திரிகையாளர் கே.ரி.இராசசிங்கம், பேராசிரியர் சச்சி சிறீகாந்தா ஆகியோர் வெளியிட்ட நூல்களில் குறித்த ஓரிரு அத்தியாயங்கள் அவர் பற்றிப் பேசுகின்றன. அவரது சொற்பொழிவுக்ளைக் கொண்ட பல ஒலி, ஒளி நாடாக்களும், பிற பிரசுரங்களும் கனடா தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையிடம் உள்ளன.

ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் ஜென்ம எதிரிகள் அவரைச் சுயநல அரசியல் வாதியாகவும், உரிமைப் போராட்டத்தில் அவர் புரிந்த சாதனைகளை மூடிமறைத்தும் அல்லது அவர் செய்த

சாதனைகளை வேறுநபர்களின் தலையில் சுமத்தியும், அவர் செய்யாதவற்றை அவர் செய்தார் என்று கதைகட்டியும் அவரது அரசியல் வரலாற்றைக் கயிறு திரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். இன்னும், இளைய தலைமுறையினர் அமிர்தலிங்கம் அவர்கள் பற்றி அறியாதவர்களாக உள்ளனர். "கேட்டது தமிழ் ஈழம் கிடைத்தது ஜப்பான் ஜீப்" என்ற கவிதை அடிகளை வைத்து இளைய தலைமுறை ஏதோ லஞ்சம் பெற்றவர், சிங்களவனிடம் கையுறை பெற்றவர், பேரினவாதச் சிங்களவரின் கையாள் என்று அவரைத் தப்பாக நினைக்கிறார்கள். 1990 மார்ச் மாதம் மாத்தையா 'லங்கா காடியன்' பத்திரிகை ஆசிரியர் மேவின் டி சில்வாவுக்குக் கொடுத்த பேட்டியில் 'அமிர்தலிங்கம் ஒரு தமிழ் ஈழ எதிரி. தமிழ்த் துரோகி. இந்திய ஏஜன்ட்' என்று சொன்னதை ஒரு பகுதி மக்கள் நம்புகிறார்கள். அதனால்தான் கொலை செய்யப்பட்டார் என்றும் தப்பாக நினைக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு அமிர்தலிங்கம் அவர்களது அரசியல் சரித்திரம் தெரியாது. இந்த நூல் நாங்களும், எங்கள் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும், பீட்டப் பிள்ளைகளும் சந்ததிகளும் ஒரு உத்தம புருசனது புனித நோக்கத்தைக் கொண்ட வாழ்க்கை வரலாற்றை அறியவும், அவரைப் போல உயர்ந்த எண்ணங்களுடன் மனித குலத்துக்குத் தொண்டாற்றவும் வழிசெய்யும். அவரது அரசியல் வாழ்க்கை வரலாறு பாரத காவியம் போல நீண்டது. அதனை மிகச் சுருக்கமாகவே சொல்லியுள்ளேன்.

அன்னாரது பாராளுமன்றப் பேச்சுக்கள் பல வரலாற்றுப் பொக்கிசங்களாகும். இலக்கிய நயம் இழையோடும் உணர்ச்சி கக்கும் உரிமைக் குரல்கள் அவை. அவரது நாடாளுமன்றப் பேச்சுக்கள் மேடையில் பார்த்த அமிர்தலிங்கனாரைவிட உன்னதமான இன்னொரு மகாமேதை அமிர்தலிங்கனாரை வாசகன் முன் நிறுத்தும். மாதிரிக்காக அவற்றில் ஒரு சில பேச்சுக்களின் சில பாகங்கள் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளன. அவை அவர் தமிழ் இனத்தின் விடுதலைமீது வைத்திருந்த புனித தீவிர பற்றைக் காட்டும்.

அமிர்தலிங்கம் அவர்களின் கொலைக்கான காரணத்தை அவர் பற்றிய நூல்கள் தெளிவாகச் சொல்லாவிட்டால் அவர் ஏதோ தவறிழைத்தமைக்காகவே கொலை செய்யப்பட்டார் என்றே இனிவரும் இளைய தலைமுறைகள் நம்ப இடம் வைக்கும். அப்படி அவர்கள்





கருதுவதற்கு அமிர்தலிங்கம் அவர்கள் பற்றி வெளியிடப்படும் நூல்களே துணை போகும். ஈழத் தமிழ் மக்கள் தலைவனின் மேலான பங்களிப்பைத் தமிழினம் மீட்டுப் பார்க்க இந்த நூல் துணைசெய்கிறது. முதல் பாகத்தில் அரசியல் வாழ்க்கையைச் சுருக்கமாகச் சொல்லி, இரண்டாம் பாகத்தில் கொலைக்கான காரணங்களும், கொலை செய்தவர்கள் செய்வித்தவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய செய்திகளும், கொலை தொடர்பாக இதுவரை சொல்லப்படாத செய்திகளும், கொலை பற்றிப் பலர் ஆங்காங்கு எழுத்தில் தெரிவித்த மக்களை அடையாத செய்திகளும், கண்கண்ட காட்சிகளும் உள்ளன.

மூன்றாம் பாகத்தில் ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையை-சாணக்கியத்தைப் புறக்கணித்ததால் ஏற்பட்ட விளைவுகள் சொல்லப்பட்டுள்ளன. 1987 -2001 வரையான 14 வருடப் போர்களின் போது மக்கள் அனுபவித்த அவலங்கள், துயரங்கள், துன்பங்கள், கொடுமைகள், இழப்புக்கள் அத்தனையும் அமிர்தலிங்கம் அவர்களின் தீர்க்கதரிசனத்தை இடறியதன் விளைவுகள். மக்களின் உயிருடைமைகளை முதன்மைப்படுத்தி உரிமைப் போராட்டங்களை முன்னெடுக்கின்ற மனிதநேயமுள்ள தீர்க்கதரிசனம் நிறைந்த அமிர்தலிங்கம் அவர்கள் போன்ற தலைவர்கள் சமுதாயத்தின் சொத்து. அத்தலைவர்களின் உயிரைப் பறித்தெடுப்பது அச் சமுதாயத்துக்கு இழைக்கப்படும் அநீதி ஆகும்.

அமரர்கள் தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் அவர்களின் அரசியற்-கொள்கைகளை யடுத்துத் தமிழ்நாடு சென்னையில் உள்ள பெரியார் திடலில் அமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றிய உரை, அவரது இளமைக்கால உணர்ச்சி பொதிந்த தர்க்க வாதங்களை ஒட்டாத செய்தியாகவும்- "எனக்கு ஏதும் நடந்தால் என் தொல்லை முடிந்ததென்று போய்விடுவேன். எனக்கு என்ன நட்டம்? தர்மலிங்கம் மரணித்து விட்டார். அவருக்கு என்ன நட்டம்? ஆலாலசுந்தரத்துக்கு என்ன நட்டம்?" என்ற அவரின் வாய்மொழிகளும் - வாழ்க்கையில் நொந்திருந்த சமயம் அன்றைய உழைப்பைத் தானம் செய்துவிட்டு "அவர் வீடு வேறு? என்னுடைய வீடு வேறோ?' என்று மொழிந்தமையும் - யாழ் பல்கலைக்கழக வாயிலில் நின்று "மாணவர்கள் கைகளால் மரணித்தால் எனக்குச் சொர்க்கம் கிடைக்கும்" என்று பகர்ந்தமையும் பிறவும் ஆன்மீகத்தை நோக்கிய சிந்தனையாகவும் அமைந்து -

அவரை அடிமுடிகாண முடியாத விஸ்வரூபியாகத் தரிசனத்துக்கு வைக்கிறது.

எங்கள் மண்ணில் ஜனநாயக தர்மங்கள் கண்கலங்குகின்றன. கோயபல்ஸ் பிரசாரம் சூடாகவே இருக்கிறது. எனினும் ஜனநாயக மாதாவை அமுக்கி வைத்திருந்த இரும்பு மேகங்கள் கலைய ஆரம்பித்துள்ளன. இனி அடக்கத்தில் புதைகுழியில் நாறும் உண்மைகள் கசியத் தொடங்கும். அந்த அலங்கோலங்களைக் கண்டும் கேட்டும் சகித்தும் மௌனிகளாக முன்னர் வாழ்ந்த மந்தைகள் மீண்டும் மேய்ச்சல் தரவவைகளில் இறங்கிச் சுயரூபத்தைக் காட்டும். அப்பொழுது அண்ணல் ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் மீண்டும் உயிர்த்தெழுந்து காட்சி தருவார்.

- கதிர் பாலசுந்தரம்



# அடக்கம்

அணிந்துரை - ஸ்ரீ குமரி அனந்தன்
முகவுரை
பாகம் 1
அதிகாரம்
-வாழ்க்கை வரலாறு-

| | | |
|---|---|---|
| 1 | உதயம் | 1 |
| 2 | வளரும் பயிர் | 6 |
| 3 | இந்திய வம்சாவழித் தமிழர் | 16 |
| 4 | முதலாவது களம் | 21 |
| 5 | வட்டுக்கோட்டையில் வெற்றி | 24 |
| 6 | நாடாளுமன்றத்தில் கன்னிப் பேச்சு | 27 |
| 7 | யுத்தத்தின் தழும்புகள் | 34 |
| 8 | நாடாளுமன்றத்தில் - சிங்களச் சட்டம் பற்றி | 36 |
| 9 | திருமலை யாத்திரை | 49 |
| 10 | இங்கிலாந்தில் அமிர்தலிங்கனார் | 52 |
| 11 | பண்டா-செல்வா ஒப்பந்தம் | 54 |
| 12 | ஸ்ரீ அழிப்புக் கதாநாயகன் | 55 |
| 13 | வங்கக் கடல் கடந்து உதவிக்கரம் | 61 |
| 14 | சிறுபான்மைத் தமிழர் | 64 |
| 15 | பகிஷ்கரிப்புப் போராட்டம் | 67 |
| 16 | சத்தியாக்கிரகம் | 73 |
| 17 | பணாகொட முகாமில் தம்பதிகள் | 78 |
| 18 | மனிதநேயம் | 81 |
| 19 | டட்லி-செல்வா ஒப்பந்தம் | 83 |

20 தேசிய அரசில் தமழரசுக் கட்சி 85
21 நாடற்ற 10 இலட்சம் தமிழ் மக்கள் 96
22 வட்டுக்கோட்டையில் தோல்வி ஏன்? 103
23 கௌதாரியும் வானம்பாடியும் 108
24 தமிழ் நாட்டில் தந்தையுடன் 113
25 மல்லாகத்தில் மாநில மாநாடு 117
26 பேசித் தீர்க்க விரும்பாத அரசு 120
27 உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடு 123
28 மொழிவழித் தரப்படுத்தல் 126
29 கச்சதீவில் இரகசியச் சந்திப்பு 130
30 ஒரு தமிழ் இன்ஸ்பெக்டர் 133
31 இராச துரோகக் குற்றச்சாட்டு 136
32 தலைவர்கள் மறைவு 140
33 காங்கேசன்துறையில் வெற்றி 145
34 ஸ்ரீமாவோவின் குடியியல் உரிமைகள் பறிப்பு 149
35 மாவட்ட அபிவிருத்திச் சபை 158
36 தமிழ் நாட்டில் அபயக் குரல் 165
37 குதிரைச் சவுக்கால் அடிப்பேன் 168
38 எனக்குச் சொர்க்கம் கிடைக்கும் 182
39 அமெரிக்காவில் அமிர்தலிங்கனார் 176
40 வெளியுறவுக் கொள்கை 182
41 ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார்
நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை 186
42 தமிழர் பிரச்சினையை உலகமயப்படுத்தல் 194
43 ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுடன் தொடர்பு 199
44 தொல்லை தீர்ந்ததென்று போய்விடுவேன் 205
45 மூன்று முக்கிய அம்சங்கள் - ஸ்ரீ ராஜீவ் காந்திக்கு 210
46 அரசியல் கட்சிகள் மகாநாடு 221
47 புலம்பெயர்ந்தோர் இரட்சகர் 227
48 உச்ச இராசதந்திர இரகசியம் - ராஜீவ் காந்தி 229
49 யாழ்ப்பாணம் வீழ்ச்சி அடையக்கூடாது 234
50 இந்திய-இலங்கை ஒப்பந்தம் 240
51 உரலில் அகப்பட்டது 246





52 கூட்டணிக்கு ஒரு படிப்பினை - 1989 தேர்தல் 252
53 கிளிநொச்சியில் நினைவுத் தூபி 260
54 மங்கையர்க்கரசி அம்மையார் 276
55 உரிமைப் போராட்ட வரலாறு 295

பாகம் 2
அழிப்பின் கதை

56 கொலைச் சூழ்நிலை யோகேஸ்வரனின்
வன்னிப் பயணம் எதிர்க் கட்சிகளின் எதிரொலி 295
57 மானுடம் முழுமைக்கும் அவமானம் 303
58 அமைச்சர் ரஞ்சன் விஜரத்ன? 310
59 கொலை செய்தவர்கள் - ஆதாரங்கள் 319
60 இந்திய உளவுத்துறையா (சுயுறு)? 325
61 கொலை ஒரு தொடர் கதை 332
62 இறுதி அஞ்சலி 342
63 கொலையின் நோக்கம் 354

பாகம் 3
விளைவுகள்

64 அர்த்தமற்ற அழிவுகளும் இழப்புக்களும் 382
65 வரலாறு பேசுகிறது 399



திரு. அ. அமிர்தலிங்கம

1927 - 1989





பெரியார் ஈ.வே.ரா.வுடன் தந்தை செல்வநாயகம்,
அ. அமிர்தலிங்கம் மற்றும்
திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் (1972)



தமிழரசுக் கட்சியின் பன்னிரண்டாவது மாநில மாநாடு - மல்லாகம்
ஆறாவது தலைவராக அமிர்தலிங்கம் பதவியேற்பு
(1973)





திரு. அமிர்தலிங்கம் மற்றும்
திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள்
இந்திரா காந்தியுடன் (1978)



திரு. அமிர்தலிங்கம் கலைஞர் கருணாநிதி அவர்களுடன்





சென்னையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் இல்லத்தில்
திரு. அமிர்தலிங்கம்,
திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மற்றும்
டாக்டர் அ. பகீரதன் அவர்கள் (1978)



கொழும்பில் கூட்டமொன்றில் தொண்டமான்,
நீலன் திருச்செல்வம் அவர்களுடன் திரு. அமிர்தலிங்கம் (1982)





திரு. அமிர்தலிங்கம் புதுதில்லியில் அனைத்து கட்சி தலைவர்களுடன் வாஜ்பாய், சுர்ஜித்சிங் பர்ணாலா, வை. கோபாலசாமி (1983)



இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தம்பதியருடன்
திரு. அமிர்தலிங்கம் மற்றும்
திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் (1983)



# பாகம் 1

# அரசியல் வாழ்க்கை வரலாறு

மக்கள் தலைவர்கள் அரசியல் பயணத்தில் வாழும்வகை
சொல்லும் இலக்கியமாகி இலக்கணம் படைத்தவர்
அமரர் அமிர்தலிங்கம்.

## அதிகாரம் - 1
## உதயம்

ஈழத் தமிழ் மக்கள் - புலம் பெயர்ந்தவர்கள் சேர - மௌன விரதம் அனுட்டிக்கின்றனர். அவர்கள் தாம் கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும் படுபொய் என்று தெரிந்து கொண்டும், கருங் குழாய்க்கும் அக்கினிக் குஞ்சுக்கும் அஞ்சி, போலிக்கு 'ஆமாம் சாமி' போடுகின்றனர். விடுதலைக்கு ஆயுதம் ஏந்திய தமது குருதியில் அவதரித்த குஞ்சுகள், கருத்து வேற்றுமைக்காக உடன்பிறப்புக்களைக் கொன்று வெறியாடுவதைக் கண்டும் காணாதவர்களாக வாழப்பழகியுள்ளார்கள். மொத்தத்தில் சுயமாகச் சிந்திப்பதை மறந்த சமுதாயமாக மறு அவதாரம் எடுத்துள்ளது. அந்தகாரத்துள் அமிழ்ந்துள்ள அந்தச் சமூகத்தைத் தட்டி எழுப்பிச் சிந்திக்கச் செய்யவே, விருந்துக்கு வந்தவர்களால் 1987 யூலை 13ந் திகதி படுகொலை செய்யப்பட்ட அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் நாலு

தசாப்த அரசியல் சரித்திரம் சொல்லப்படுகிறது. படுகொலை செய்யப்பட்ட வேளை அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். அதன் முன்னர் அவர் 1977 தொடக்கம் 1983 வரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர். முதலாம் வகுப்பில் சித்தியெய்திய கலைப்பட்டதாரியும் சட்டத்தரணியுயாகும். கரும் பசாசுகளின் வெங்கனல் தீப்பந்தங்களால் புதைகுழிகளில் அடக்கம் செய்யப்பட்ட உண்மைகள் எழுந்து தரிசனம் நல்கத் தாமதமாகலாம். ஆனால், அவை நிரந்தரமாக மரிப்பதில்லை.

இலங்கையின் வட அந்தத்தில் அமைந்த தீபகற்பம் யாழ்ப்பாணம். வற்றாத தரைக்கீழ் நீர்வளம் பெற்ற மாரி மழைப் பூமி. பனங் கூடல்கள். மா பலா வாழைச் சோலைகள். அவற்றின் மத்தியில் அமைந்த குடி மனைகள். வயல்கள் தோட்டங்கள் நிறைந்த பச்சைப் பயிர்வளங்கள். உழைப்புக்கு உதாரணமாக வாழும் உத்தம மனிதர்கள். திக்கெட்டும் இறை தலங்கள். காலையில் துயில் எழுப்பும் திருக்கோவில் மணி ஓசைகள். வீதிகளை நிறைத்துச் செல்லும் மாணவர்கள். பகலவன் மறையப் பணி முடிந்து இல்லங்களை நோக்கி விரையும் ஆடவர்கள். மாலையானதும் விளக்கேற்றி இறைவன் துதி பாடும் மாதர்கள். அவர்களில் ஒருவர்தான் அப்பாப்பிள்ளை அமிர்த லிங்கம் அவர்கள். அரசியலைத் தெய்வப்பணியாக மேற்கொண்ட பெருமகன். அவர் அரசியல்வாதி எப்படி வாழவேண்டும் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்த அற்புதமான மேதை. கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பனவற்றின் குறியீடு. கறை படியாத கை. எதுவித தீய பழக்கமும் தெரியாத, புனிதங்கள் நிறைந்த மாமனிதர். சீரிய குடும்பத் தலைவனுக்கு எடுத்துக்காட்டு. ஒழுக்கத்தில் தழும்பாத பரிபூரண நிறை குடம். பகைவனாக இருந்தாலும் விழுந்துவிட்டால் ஓடிச் சென்று தூக்கி அணைத்துத் துணைபுரியத்தான் தெரிந்தவர். மனிதநேயத்தின் ஊற்று. மக்களின் விடிவுக்காக உழைக்கும் இலட்சியம். சத்தியத்தில், தர்மத்தில் நம்பிக்கை. அறிவு, ஆற்றல், விவேகம், சாதுரியம், தீர்க்கதரிசனம், துணிவு யாவும் ஒருங்கே நிறைந்த மகாமேதை. அபார ஞாபக சக்திக்கு ஒரு எடுத்துக்காட்டு. சோவெனக் கொட்டும் மழை போலத் தமிழிலும் ஆங்கிலத்திலும் சொற்பொழிவாற்றும்-விவாதிக்கும் ஆற்றல். வாரம் ஏழு நாட்களும் நள்ளிரவைக் கடந்தும் களத்தில் நின்று உழைப்பவர். அதிகாலை ஆறு மணிக்குத் துயில் எழுந்து யோகாசனம் செய்து தேக ஆரோக்கியத்தைப் பேணி, தமிழ் இனத்தின் விமோசனத்துக்காகத் தன்னை அர்ப்பணித்த கடும் உழைப்பாளி. இவ்வகையான குணச்சித்திரங்கள் அனைத்தும் ஒருங்கே நிறைந்த ஒரு தலைவனை ஈழத் தமிழ்ச் சமூகம் வேண்டிநின்ற வரலாற்றுக் காலகட்டம் - இலங்கைச் சுதந்திரத்தை யடுத்துச் சிங்காசனம் ஏறிய நச்சு மனிதன் (முதலாவது பிரதம மந்திரி டி.எஸ்.சேனநாயக்க) ஆட்சிபண்ணிய காலப் பகுதி. அவனிடமிருந்து தப்பத் தமிழ்ச் சமுதாயம் எழுப்பும் அபய ஒலி கேட்கும் இருண்ட அரசியல் சூழல்.



பிரித்தானிய சாம்ராச்சியத்தில் குடியேற்ற நாடாக விருந்த இலங்கைத் தீவு 1948 பெப்புருவரி நாலாம் நாள் சுதந்திரம் பெற்றது. ஆறு மாதங்கள் நகர்ந்து முடிய முன்னரே பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருந்த சிங்களவர்கள், பத்து இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் குடியியல் உரிமைகளைப் பறித்தனர். அடுத்த ஆண்டு அவர்களின் வாக்குரிமையையும் பறித்தனர். அத்தோடு தமிழர்களது பாரம்பரிய பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்தனர். தமிழர்களை அவர்களுடைய பாரம்பரிய தாயகத்திலேயே சிறுபான்மையாக்கும் சதிமுயற்சியைப் பாராளுமன்றம் மேற்கொண்டது. சிறுபான்மைத் தமிழர்களால் அந்த இனவிரோத முயற்சிகளைத் தடுத்து நிறுத்த முடியாத வரலாற்றுக் காலகட்டம். அந்த அநியாய அட்டூழியங்களுக்குள் வதைபட்டு அழிந்து போகாமல் தமிழ் மக்களைக் காப்பாற்றக்கூடிய ஒரு தலைவனைத் தமிழ் ஈழம் வேண்டி நின்ற காலகட்டம்.

காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஒரு இராணி நியாயவாதி. அவர் தீர்க்கதரிசனமாக, சிங்களவர்கள் பாராளுமன்றப் பெரும்பான்மையை உபயோகித்துச் சிறுபான்மைத் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரசைகளாக்கச் சதிசெய்வதாகக் குரலெழுப்பினார். வட கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்களைக் குடியேற்றி அங்கு வாழும் தமிழர்களை - அவர்களது சொந்தப் பிரதேசத்திலேயே - சிறுபான்மை யாக்க முயல்வதாகச் சாடினார். சிங்களப் பெரும்பான்மையினரது

அடாத்தான முயற்சிகளை எதிர்த்து, தமிழ் மக்களது உரிமைகளைப் பாதுகாக்கத் தமிழ் அரசுக் கட்சியை ஸ்தாபித்தார். அவர் கொழும்பில் வாழ்ந்து படித்து நியாயவாதித் தொழிலால் பெருஞ் செல்வம் திரட்டியவர். யாழ் தெல்லிப்பழையைப் பிறந்தக்மாகக் கொண்ட அவர், யாழ் மண்ணின் மணம் இழந்த கொழும்பு மேல்தட்டு வகுப்பைச் சேர்ந்தவர். மெலிந்த தோற்றமுடைய, நடுவுச்சி பிரித்துச் சீவிய நரைத்த கேசத்தையுடைய, ஓரளவு பிராமணத் தோலுடைய நாதஸ்வர இசையை விரும்பிக் கேட்கின்ற கிறீஸ்தவர் அவர். பெரும்பாலும் இந்து சமயத்தவர்களான ஈழத் தமிழர்கள் அவரை மிக்க மரியாதைக்குரிய பெரியாராக அன்றும் இன்றும் மதிக்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் பெண்கள் அவரது பாதங்களைத் தொட்டு வணங்குவதைப் பார்த்திருக்கிறேன். அவர் மிக விரைவிலேயே நோய்வாய்ப்பட்டார். அவர் மேடையில் சொல்வதை இன்னொருவர் திருப்பிச் சபைக்கு உரத்துச் சொல்லவேண்டிய நிலைக்கு ஆளானார். அவ்ரால் சிந்திக்க முடிந்ததே தவிர தனது தத்துவங்களைத் தனக்குப் பரீட்சயமில்லாத வட-கிழக்கு மாகாணங்களுக்கு எடுத்துச் சென்று பிரசாரம் செய்யும் தேகாரோக்கியம் உடையவராக அவர் இருக்கவில்லை. வேறு சில வயது முதிர்ந்த தலைவர்கள் தமிழ் அரசுக் கட்சியில் இருந்த பொழுதும், திரு.செல்வநாயகம் அவர்களின் ஆரோக்கிய-இயலாமையை நிறைவேற்றக் கூடிய தலைவனுக்குரிய சகல குணச்சித்திரங்களும் உடையவர்களாக எவரும் இருக்கவில்லை. திரு.செல்வநாயகம் அவர் கள் அரசியற் களத்தில் ஏற்படுத்திய வெற்றிடம் கொழும்பு பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த - யாழ் மண்ணில் ஆழவேர் பாய்ச்சிய, மத்தியதர வகுப்பைச் சேர்ந்த இருபத்தொரு வயது நிரம்பாத மாணவன் அமிர்தலிங்கம் அவர்களைத் தன்பால் இழுத்து வைத்துக்கொண்டது. ஏனெனில் தந்தை செல்வா என்று மிக்க மரியாதையாகக் குறிப்பிடப்படும் திரு.செல்வநாயகம் அவர்களது ஆரோக்கியம் ஒரு வெற்றிடத்தைத் தமிழர் அரசியற் களத்தில் ஏற்படுத்தியிருந்தது. அதனை நிரப்பக்கூடிய விடுதலைப் போராட்ட இயக்கத் தலைவனுக்குத் தேவையான குணச்சித்திரங்கள் அனைத்தும் அவரிடம் இருந்தன. அதனால் அவரே தந்தை செல்வாவின் ஏக வாரிசானார்.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆழத் தடம் பதித்தவர் அமிர்தலிங்கம் அவர்கள். அச்சில் வார்த்தது போன்ற



பளபள உடல்வாகு. வதனத்தில் சொரியும் தேஜஸ். புன்னகையால் வசீகரிக்கும் அழகான 5'5" இளைஞர். வெள்ளை வேட்டியும் கட்டைக்கைச் சேட்டும் அணிந்து ஆடம்பரமில்லாது மேடைகளில் தோன்றி, இராஜகம்பீரமாக ஒலிவாங்கி முன்நின்று மக்களைக் காந்தமாகக் கவர்ந்த அவரின் அரசியல் பிரவேசம் ஒரு புது யுகத்தின் வருகையாகும். இளம் திரைப்படக் கதாநாயகனின் கவர்ச்சியோடு பவனிவந்த அவரின் ஆரம்ப கட்டம் அற்புதமானது. அரசியல் பாடம் சொல்லி மக்களைக் களத்துக்கு அழைத்து வந்த காலம். வடகிழக்கில் அவரது மந்திரக் குரலின் வெங்கல நாத ஒலியைக் கேட்க மக்கள் வெள்ளமாக அள்ளுப்பட்ட காலம். அவரின் கன்னங்களில் வழியும் புன்னகையைக் காணாத கண்கள், சொற்களில் திரண்டு வரும் புரட்சிக் கருத்துக்களைக் கேளாத செவிகள், இன உணர்ச்சிகளை உள்வாங்கித் துள்ளி எழாத உள்ளங்கள் வடகிழக்கில் இல்லை. விடுதலைக் களத்தில் "நான் முன்னே செல்கிறேன். நீங்கள் பின்னே வாருங்கள்" என்று தொண்டர்களைப் பின்னேவிட்டு தான் முன்னின்று அடி, உதை, சிறை பட்ட சரித்திர புருஷன் அவர். ஈழத் தமிழ் மக்கள் விடுதலையே தன் வாழ்வின் இலட்சியமாக வாழ்ந்தவர். அவர் தமிழ் இனத்தின் விடுதலைக் களத்திலே நான்கு தசாப்தங்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள், அவலங்களோடு ஆவணப்படுத்திய சாதனைகள் ஏராளம். தமிழ் மக்கள் நலனை முன்வைத்து வளர்ந்த அவரது விடுதலைப் போராட்ட வரலாற்றுக்கு விழுந்த முற்றுப் புள்ளியை நியாயப் படுத்த முடியாது.

இலங்கையின் வடபால் அமைந்த சீரும் சிறப்பும் மிக்க யாழ்ப்பாணக் கிராமமான தென் பண்ணாகத்தில் 1927ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ந் திகதி பிறந்த அமிர்தலிங்கம் அவர்கள் உலகம் அறிந்த உத்தம மக்கள் தலைவராக உயர்வெய்திய வரலாறு அற்புதமானது. அவரது நாற்பது ஆண்டு கால அரசியல் வரலாறும் ஈழத் தமிழர்களது அரசியல் வரலாறும் பின்னிப் பிணைந்து ஒன்றேயாய் அமைந்துள்ளன. ஒரு சாதாரண மனிதன் தனது வாழ்க்கையைக் கண்டிப்பான ஒழுக்கக் கட்டுப்பாடுகளுள் வரையறை செய்து, தன்னைத் தலைமைக்கு ஏற்ற வகையில் கல்வி கேள்விகளில் வளர்த்துக்கொண்டு, அரசியல் அரங்கில் கால் பதித்துத் தனது மக்களை வழிநடத்திச் சென்ற மகத்துவத்தைக் காணலாம்.

இவரது தந்தையார் சின்னட்டியார் அப்பாப்பிள்ளை. தாயார் பெயர் வள்ளியம்மை. 1879ஆம் ஆண்டு பிறந்த தந்தையார் 17வது வயதில் மலேசியா சென்று புகையிரத நிலைய அதிகாரியாக உத்தியோகம் வகித்தவர். நேர்மையும் வீரமும் நிறைந்த செயல்கள் காரணமாக அவரை 'றெமோ' என அழைத்தனர். மலாய் மொழியில் 'றெமோ' என்றால் புலி. வேலையில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டு இலங்கை திரும்பினார். தந்தையாரும் சமூக சேவைப்பணியில் ஈடுபட்டவரே. சங்கானை கிராமசபைத் தலைவராக இருந்தவர். இருதய நோய் காரணமாக 1954இல் காலமாகினார். தாயார் 1975ஆம் ஆண்டு காலமானார். குடும்பத்தில் மூத்த மகனாக அவதரித்த அமிர்தலிங்கம் அவர்களுக்கு மூன்று ஆண் சகோதரர்கள். சொக்கலிங்கம் அவருக்கு அடுத்தவர். அவர் ஒரு சட்டத்தரணி. யாழ்ப்பாணத்தில் நியாயவாதியாகத் தொழில் பார்த்த அவர் புலம் பெயர்ந்து லண்டனில் வாழ்ந்தவர். காலமாகிவிட்டார். அடுத்தவர் வாசுதேவலிங்கம். யாழ்ப்பாணத்தில் மூளாயில் வசிக்கும் இவர் ஒரு வர்த்தகர். இளையவர் திகம்பரலிங்கம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தவர். பின்னர் நைஜீரியாவில் ஆசிரியராகப் பணிபுரிந்து இப்பொழுது கனடாவில் வசிக்கிறார். பண்டாரவளை வர்த்தகர் வல்லிபுரம் அவர்களின் மூத்த மகள் மங்கையர்க்கரசியாரைக் கைப்பிடித்த அமிர்தலிங்கம் அவர்களுக்கு காண்டீபன், பகீரதன் என இரண்டு ஆண்மக்கள். இருவரும் லண்டனில் வாழ்கின்றனர். இளைய மகன் பகீரதனும் அவரது துணைவியார் மலர்விழியும் லண்டனில் டாக்டர்களாகப் பணியாற்றுகின்றார்கள்..

## அதிகாரம் 2
## வளரும் பயிர்

1931 அமிர்தலிங்கம் அவர்கள் குழந்தையில் மிக அமைதியாகவும், பொறுமையுடையவராகவும் காணப்பட்டார். அதனால் அவரைத் 'தருமா' எனச் செல்லமாக அழைத்தனர். பாரதத்தில் வருகின்ற பாண்டவரில் மூத்தவர் தருமர். அவர் பொறுமையின் ஊற்று. ஒழுக்கத்தின் சிகரம். புத்திசாதுரியம் மிக்க அவரின் வார்த்தைகள் தெய்வ வாக்காகக் கொள்ளப்பட்டன. 'தருமர்' என்றழைக்கப்பட்ட அமிர்தலிங்கம் அவர்கள் தனது கல்வியைப் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் 1931ஆம் ஆண்டு ஆரம்பித்தார். 1936இல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சேர்ந்தார். வீட்டிலிருந்து கல்லூரிக்கு நடந்தே செல்வார். வேட்டி கட்டி, மடியில் நூல் நிலையத் திறப்புத் தொங்க தினம் கறுப்புக் குடையோடு சென்று படித்தவர். நண்பகல் வீடு சென்று உணவருந்தி மீண்டும் பாடசாலை சென்றவர். அவ்வேளை அவர் ஏதாவது ஒரு புத்தகத்தை வாசித்தபடி செல்வார். கல்லூரியில் ஆசிரியர்கள் யாவரதும் நன்மதிப்பைப் பெற்ற உத்தம மாணவனாகவும், ஏனைய மாணவர்களை வழிநடத்தும் ஆளுமை மிக்க மாணவனாகவும் திகழ்ந்தார். அங்கு அதிபராக இருந்த திரு. பி.ஜி. தம்பியப்பா அவர்கள் அவரது அதிதிறமைகளைக் கண்டு அவரின் கல்வி வளர்ச்சிக்கு மிக்க ஊக்கம் கொடுத்தார். இவரின் வாதத் திறமையை உணர்ந்த திரு. சிவராசா ஆசிரியர் லத்தீன் மொழி சொல்லிக் கொடுத்தார். மனிதனை முழுமையாக்க நூலறிவு இன்றி அமையாதது. அதனை உணர்ந்து கல்லூரியின் வாசிகசாலையை நன்கு பயன் படுத்தினார். வாசிக சாலையின் திறப்பு அவர் மடியில் துயின்றது. நடுநிசிவரை கண்விழித்து நூல்களை வாசிப்பது அவரது பழக்கம். ஏழாம் வகுப்பில் படிக்கும் பொழுதே மகாபாரதம் நான்கு பாகங்களையும் வாசித்து முடித்தவர். விக்டோரியாக் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு 1946ஆம் ஆண்டில் தெரிவானார். அக்கல்லூரியில் இருந்து பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான முதல் மாணவர் இவரே. அக்காலத்தில் அது ஒரு பெரும் மகத்தான சாதனை என்று போற்றப்பட்டது. ஒரு நன்மாணாக்கன் எவ்வகையில் தன் பணியை முன் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்கு அமிர்தலிங்கம் அவர்களது மாணவப் பருவம் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

1946 கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பிரபல்யமாக விளங்கிய தமிழ் மாணவர். கல்வி, பேச்சு, எழுத்து, விவாதம் ஆகியவற்றில் கொடிகட்டிப் பறந்தார். அக்காலத்தில் மார்க்சிய சிந்தனைகளில் ஈடுபாடுடையவராக இருந்தார். சிறிது காலம் டாக்டர் என்.எம்.பெரேராவின் அரசியல் மாணவராக இருந்தார். வேறு சில நண்பர்களோடு அவருடைய வீடு சென்று கார்ல்மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ட்ராஸ்கி ஆகியோரின் தத்துவங்களைக் கற்றார். புரட்சியின்

தந்தை என்று அழைக்கப்பட்ட திரு. பிலிப் குணவர்த்தன அவர்களது வீடு சென்று மார்க்சீய பாடம் கற்றார். அச்சிங்களத் தலைவர்கள் இருவரிடமும் பெற்ற பயிற்சி பிற்காலத்தில் அவர் சமதர்ம சிந்தைனைகளில் காலூன்றி நின்று மக்களை அரவணைத்துத் தன்பின்னே அழைத்துச் செல்லப் பேருதவியாக அமைந்தது.

பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்தார். அப்பொழுது சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் காலம் தொடக்கம் திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் கியூ.சி. அவர்கள் வரை சிந்திக்காத புரட்சிகரமான ஒரு முன்னெடுப்பைச் செய்தார். அவர் அகன்று பரந்த தமிழகத்தைக் கனவு கண்டார். அதன் விளைவாக தமிழ்ச் சங்கத்தில் பின்வரும் தீர்மானத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றினார்: "மட்டக்களப்பையும் அனுராதபுரத்தையும் தென் எல்லையாகவும், வேங்கடத்தை வட எல்லையாகவும் கொண்ட ஒரு சுதந்திர தமிழகம் நிறுவ வேண்டும். சேதுவை மேடுறுத்தி வீதி சமைக்கவேண்டும்" என்னும் தீர்மானமே அது. சிங்கள மாணவர் மத்தியில் இச்செய்தி குரோதத்தை உருவாக்கியது. இனவாதிகளான அவர்கள் தம்மின ஆசான்களுக்குப் பற்ற வைத்தார்கள். தண்டிப்பதற்கு வேறு வழி கிட்டாதபடியால் பல்கலைக்கழக விடுதியில் நடந்த ஒரு சம்பவத்தைச் சாட்டாக வைத்து, விடுதி மாணவர் கூட்டம் நடந்துகொண்டிருந்த பொழுது - சிங்களப் பேராசிரியர் ரத்தினசூரியவினால் வெளியேற்றப்பட்டார். அப்பொழுது "எமக்கு ஒரு தனி நாடும் வேண்டும். எமக்கு ஒரு தனிப் பல்கலைக்கழகம் வேண்டும்" என்று குரல் கொடுத்தபடி வெளியேறினார். இது நடந்தது கொழும்பில். 1947ஆம் ஆண்டு. இற்றைக்கு 55 வருடங்களுக்கு முன்னர். இச்சம்பவம் அப்படியே அச்சொட்டாகப் பிற்காலத்தில் கொழும்புப் பாராளுமன்றத்தில் - பேரினவாத குரோதக் காட்சிகள் - பலதடவைகள் புதுமெருகுடன் அரங்கேறின. இருகால வரலாற்றுச் சம்பவங்களையும் கோர்த்துப் பார்க்கின்ற வேளை நெஞ்சம் புல்லரிக்கிறது.

1948இல் ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்து கலைப் பட்டதாரியாக முதலாம் வகுப்பில் சித்தி எய்தியபின்னர், அதே ஆண்டில் சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். சட்டக் கல்லூரியில் 1950இல் தமிழ்ச் சங்கத்தை ஸ்தாபித்து 1950-1951 வரை அதன் தலைவராகக்



கடமையாற்றினார். சட்டக் கல்லூரிப் பரீட்சைகள் மூன்றிலும் முதல் வகுப்பில் சித்தி அடைந்து 1951இல் நியாயவாதியாகக் கடமையாற்றத் தொடங்கினார்.

அதற்கு முன்னரே அவரது அரசியற்பணி தொடங்கிவிட்டது. 1949இல் வாரப் பத்திரிகையான 'சுதந்திரனில்' சுயநிர்ணய உரிமை பற்றிக் கட்டுரை எழுதினார். அதனை வாசித்த காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினரும், இராணி நியாயவாதியுமாகிய திரு. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் (தந்தை செல்வா) அவர்கள் கடிதம் எழுதி அவரைத் தன் இல்லத்துக்கு அழைத்தார். அதனையடுத்து அவர் தந்தை செல்வா அவர்களின் உத்தம சீடரானார். அமிர்தலிங்கம் அவர்களின் மகத்துவத்தை நாடறிய வைத்தவர் தந்தை செல்வா அவர்களே. தந்தை செல்வா அவர்கள் தான் ஆரம்பித்த புதிய கட்சியின் வளர்ச்சிக்காக மக்களை இழுத்துவரும் அமிர்தலிங்கம் அவர்களது மந்திரக் குரலைப் பயன்படுத்தியதோடு கட்சியை வடகிழக்கில் மட்டுமல்லாமல் மலைநாட்டிலும் உள்ள மூலைமுடுக்கெங்கும் எடுத்துச் செல்லும் பிரசாரப் போதகராகவும் அவரைப் பயன்படுத்தினார்.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழியினரின் வாக்குரிமையைப் பறிக்க பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு 1949இல் இந்திய-பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அதற்கு திரு. ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் துணைபோன காரணத்தால் அக்கட்சியின் காங்கேசன்துறைப் பா.உ. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் தலைமையில் கோப்பாய் பா.உ. கு.வன்னிசிங்கம், திருகோணமலை பா.உ. எஸ்.சிவபாலன் ஆகியோரும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதனும் அக்கட்சியைவிட்டு வெளியேறினர். அவர்கள் தமிழ் அரசுக் கட்சியை ஸ்தாபிக்கக் கொழும்பில் நடாத்திய ஆலோசனைக் கூட்டங்களிலும் அமிர்தலிங்கம் அவர்கள் பங்கு கொண்டார்.

1949 டிசம்பர் மாதம் 18ந் திகதி கொழும்பு மருதானையில் உள்ள அரசினர் எழுது வினைஞர் சங்கக் கட்டடத்தில் தமிழரசுக் கட்சி (Federal Party) உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

அக்கூட்டத்தில் திரு.எஸ்ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தில் சொல்லப்பட்டது: ". . . . இன்றைய அரசாங்கத்தின் கொள்கையின் நோக்கத்தையும் ஆபத்தையும் உணர்ந்து, நாட்டின் ஒற்றுமைக்குப் பாதகமற்ற முறையில் - எமது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரே வழி - ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் ஓர் அங்கமாக இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சுயாட்சி அரசை நிறுவுவதே என்பதைத் தெளிவாகக் கண்டு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாக அமைந்து, இந்நாட்டுத் தமிழ் பேசும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் 'சுயாட்சி' என்ற இலக்கை அடைவதற்கு, இடையறாது உழைக்க உறுதி பூண்ட, தமிழ் பேசும் மக்களின் தேசிய நிறுவனமாக இயங்குவது என்று தீர்மானிக்கிறது."

கட்சி உத்தியோக பூர்வமாக நிறுவப்பட முன்னரே தமிழ் அரசுக் கட்சியை அறிமுகஞ் செய்யும் பிரசாரம் தொடங்கி விட்டது. யாழ்ப்பாணத்தில் முதலாவது பிரசாரக் கூட்டம் நல்லூரில் உள்ள கைலாய பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. கல்வியங்காட்டில் சைவம் கடைக்கு அப்பாலிருந்து நந்திக் கொடியோடு 60 பேர் வரையானோர் ஊர்வலத்தில் சென்று கூட்டவிடத்தை அடைந்தனர். ஆனால் அங்கு வந்த தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் கையாட்கள் அடாவடித்தனம் பண்ணினர். ஒருவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் பெயரைப் பிரேரித்து அவர்தான் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவார் என்றார். மேடையில் நின்ற தந்தை செல்வா அவர்கள் கையைப் பக்கப்பாட்டில் அசைத்து ஏதோ வாதாடினார். அதே சமயம் தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கனகரத்தினம் மேடையில் ஏறிவிட்டார். அவர் வழமையைப் போல நீலக்கரை மடித்த சால்வை அணிந்திருந்தார். புத்தூர் ஸ்ரீசோமாஸ் கந்தக் கல்லூரியில் பயின்ற நீர்வேலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அவரது சால்வையைப் பிடித்து மேடையின் பின்பக்கம் இழுத்தார். கனகரத்தினம் அவர்களின் முதுகில் ஒருவர் பிடித்துத் தள்ளினார். பொலிசார் வந்தனர். ஒரு பொலிஸ் அதிகாரி ஒரு குறிப்பிட்ட சட்ட இலக்கத்தைக் கூற கூட்டம் நடத்துவதற்குத் தடை போட்டார். இரண்டாவது கூட்டம் மாவிட்டபுரம் கந்தசுவாமி



கோவிலில் நடந்தது. அது ஒரு சிறிய கூட்டம். அதில் அமிர்தலிங்கம் அவர்கள் கலந்து உரையாற்றினார். மூன்றாவது கூட்டம் ஆவரங்கால் சிவன்கோவில் கிழக்கு வீதியில் ஆசிரியர் திரு. பொ.சிவகுரு தலைமையில் நடந்தது. கிட்டத்தட்ட 600 பேர் வரை கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தைக் குழப்ப அப்பொழுது கோப்பாயில் உயர் பதவியில் இருந்த ஒருவர் - தமிழ்க் காங்கிரசின் தீவிர ஆதரவாளர் - கார்களில் பொல்லுகளுடன் அடியாட்களைக் கொண்டு வந்திருந்தார். கார்கள் மேற்கு வீதியில் நிறுத்தப்பட்டிருந்தன. ஒரு காரில் இருந்தபடி அந்த உத்தியோகத்தர் ஒலி பெருக்கியில் வந்த உரைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். தமிழரசுக் கட்சியின் கோப்பாய்ப் பாராளுமன்ற உறுப்பினர் கு.வன்னியசிங்கம் அவர்கள் இந்திய வம்சாவழியினரின் பிரசா உரிமைப் பறிப்புப் பற்றி மேடையில் நின்று உரையாற்றும் பொழுது, கூட்டத்தைக் குழப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஒரு மின்னல் சலசலப்பு. அக்கூட்டத்தைக் குழப்பும் நோக்கோடு வந்தவர்கள் பயத்தில் பின்வாங்கினர். அத்தோடு தமிழரசுக் கட்சியின் கூட்டங்களைக் குழப்பும் கைங்கரியத்தை தமிழ்க் காங்கிரஸ் அன்றுபட்ட அனுபவத்தோடு நிறுத்திக் கொண்டது. ஆவரங்கால் கூட்டத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் உரையாற்றும் பொழுது அவர் தமிழ் மொழியின் சிறப்பையும், தமிழர் வீரபாரம்பரியத்தின் சிறப்பையும் எடுத்துச் சொன்னதோடு ஈழத் தமிழர் கௌரவமாக வாழ சமஷ்டி அமைப்பே உகந்தது என்றும் சுந்தரத் தமிழில் அடைமழை போலச் சொரிந்தார். அப்படியான உணர்ச்சியை ஊற்றெடுக்க வைக்கும் உரையை அந்தக் கிராம மக்கள் அதன் முன்னர் கேட்டதில்லை. அது மக்களை உணர்ச்சி கொள்ளச் செய்தது. அந்தச் சிறிய கிராமத்தில் அடுத்த தினம் அந்த இளைஞனின் உணர்ச்சி மயமான பேச்சைப்பற்றியே தோட்ட வரம்புகளில் கமக்காரர்கள் கூடியிருந்து பேசினர்.

சமஷ்டி என்றால் என்ன என்று மக்களுக்குத் தெரியாத காலம். ஒற்றை ஆட்சி என்றால் என்ன என்று புரியாத காலம். பாராளுமன்றத்தின் அதிகாரம் என்ன என்பது மக்களுக்கு விளங்காத காலம். மக்கள் அரசியல் அந்தகாரத்துள் வாழ்ந்த காலம். தந்தை செல்வநாயகம் அவர்கள் தனது - ஒற்றையாட்சி அதிகாரத்தைப் பரவலாக்கி வடகிழக்கில் சுயாட்சியுடைய சமஷ்டி அரசை நிறுவும்

கொள்கையையும், சிங்கள அரசு குடியேற்றத் திட்டங்கள் மூலம் வடகிழக்கில் சிங்களவரைக் குடியேற்றித் தமிழ் பேசும் மக்களை அவர்களது பாரம்பரிய தாயகத்திலேயே சிறுபான்மையாக்க எடுத்துள்ள முயற்சிகளையும், இந்திய வம்சாவழித் தமிழரின் பிரசாவுரிமையைப் பறித்த அநியாயத்தையும் பற்றிய - தமிழ் அரசுக் கட்சிக் கொள்கைகளை மக்களுக்குச் எடுத்துச் சொல்லி மக்களைக் கட்சியின் பக்கம் இழுக்க அமிர்தலிங்கம் அவர்களை நன்கு பயன்படுத்தினார். அன்னாரின் கடல்மடை திறந்த பேச்சைக் கேட்கவும் அழகான வசீகரமான அந்தப் பையனைப் பார்க்கவும் சாரி சாரியா மக்கள் கூடினர். ஆரம்பகாலத்தில் - மேடைப் பேச்சுக்கு அழைக்கப்படும் அமிர்தலிங்கம் அவர்கள் தன்னை இறுதியாகப் பேச்சுக்கு அழைக்கப்படும் வரை பெரும்பாலும் மேடையின் பின் புறத்தில்தான் காணப்படுவார். சினிமா நட்சத்திரத்தை விசிறிகள் சூழ்ந்து கொள்வது போல அவரைச் சூழ்ந்து இளைஞர்கள் நிற்பார்கள். அவரை அருகே நின்று பார்த்துவிடத் துடிக்கும் அல்லது அவரோடு பேசத் துடிக்கும் அல்லது அரசியல் பாடம் கேட்கும் வசியத்தில் மயங்கிய இளைஞர் கூட்டம் அது. இந்தக் காட்சி அவர் போகும் ஒவ்வொரு கிராமத்திலும் அரங்கேறும்.

அமிர்தலிங்கம் அவர்களது கொள்கைப் பற்றையும், நேர்மையையும், கடும் உழைப்பையும், அவர் கல்வி கேள்விகளில் விஞ்சி நிற்பதையும் தந்தை செல்வா அவர்கள் ஆரம்பத்திலேயே கண்டு கொண்டார். காலப் போக்கில் கட்சியின் உயர் பதவிகளை அவரிடம் நம்பிக்கையோடு ஒப்படைத்தார். இறுதிக் காலத்தில் தன் பணியைத் தொடர்ந்து சுமக்க வல்லவர் அமிர்தலிங்கம் அவர்களே என்பதில் உறுதியாக இருந்தார். அதனால்தான் "என்னுடைய காலத்தில் தமிழர்களுக்கு விடிவு கிட்டாமல் போகலாம். ஆனால் அது தம்பி அமிர்தலிங்கம் காலத்தில் கட்டாயம் நிறைவேறும்" என்று மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தார். ஏன் கட்சியின் ஏனைய பிரமுகர்களைப் பற்றித் தந்தை மூச்சுவிடவேயில்லை? இதை நினைவில் வைத்து பின்னர் சொல்லப் போகும் ஒரு கசப்பான நிகழ்வை நோக்க வேண்டி உள்ளது.

1950 தமிழரசுக் கட்சியின் முதலாவது உரிமைப் போராட்டம் 1950 ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்துவிட்டது. இலங்கை 1948 பெப்புருவரி 4ந் திகதி சுதந்திரம் அடைந்த பின்னர் முதலாவது மகாதேசாதிபதியாகப் பதவி வகித்தவர் சோல்பரி பிரபு என்ற ஆங்கிலேயர். இவரே இலங்கைக்கு ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தைச் சிபாரிசு செய்தவர். அவர் ஜனவரியில் யாழ்ப்பாணத்துக்கு ஒரு விஜயத்தை மேற்கொள்ளவிருந்தார். அவர் சிபாரிசு செய்த அரசியல் திட்டமே தமிழர்களின் இன்னல்களுக்கெல்லாம் காரணம். எனவே "தமிழினத்தின் வைரியை வரவேற்காதீர்" என்ற தலைப்பில் கட்சி ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டது. அவருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக யாழ் நகர மண்டபத்தில் ஜனவரி 22ந் திகதி ஒரு கூட்டம் நடாத்த மண்டபத்துக்கு உரிய கட்டணம் செலுத்தப் பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். எதிர்ப்புக் கூட்டம் நடைபெற விருந்த தினம் நகரமண்டபம் பூட்டப்பட்டிருந்தது. பொலிசார் அங்கு காவலில் நின்றனர். திடீரென கட்சித் தொண்டர்கள் கூட்டம் தனியாருக்குச் சொந்தமான ஒரு 'கராஜில்' நடைபெறும் என்னும் துண்டுப் பிரசுரத்தை விநியோகித்தனர். எனவே அக்கூட்டம் குறித்த 'கராஜில்' நடைபெற்றது. அக்கூட்டத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் மலைநாட்டு மக்களின் பிரஜா உரிமையைப் பறித்த சட்டத்தையும், அரசின் குடியேற்றக் கொள்கையையும் எதிர்த்து ஒரு உணர்ச்சிமயமான உரையாற்றினார். அப்பேச்சு அவரை யாழ் மண்ணுக்கு அடையாளங் காட்டியது.

1951 தமிழ் அரசுக் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு திருகோணமலையில் ஏப்பிரல் மாதம் 12ந் திகதி தொடக்கம் 15ந் திகதி வரை நடந்தது. அதன் தலைமை உரையிலே திரு.எஸ்ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் "பல்லின மக்கள் வாழும் நாடுகளில், சிறுபான்மை மக்கள் தொடர்ந்து நிலைத்துச் சிக்கல் இல்லாமல் வாழச் சில பாதுகாப்புக்கள் இன்றியமையாதன. முதலாவது அதனது மக்கள் எண்ணிக்கை. இரண்டாவது அதனுடைய பிரதேசம். ஆனால் இந்த ஆகக்குறைந்த அம்சங்களே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ளன. ஏழு இலட்சம் இந்தியத் தமிழர்களின் வாக்குரிமைகளைப் பறித்தமை, பாராளுமன்றத்தில் தமிழர்களின் வாக்குப் பலத்தைக் கிட்டத்தட்டப் பாதியாகக் குறைத்துள்ளது. இப்பொழுது எமது நிலப்பிரதேசத்தை அவர்கள் சூறையாடுகிறார்கள்" என்று கூறினார்.

ஏப்பிரல் மாதம் 15ந் திகதி திருகோணமலை முற்றவெளியில் நடந்த முதலாவது தேசிய மகாநாட்டில் பேசுவதற்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை அமிர்தலிங்கம் அவர்கள் நன்கு பயன்படுத்தி, இலங்கை முழுவதற்கும் தான் உரிமைப் போராட்டத் தானையை வழிநடத்தப் புறப்பட்ட இளஞ் சிங்கம் என்பதை வெளிப்படுத்தினார். பிரமாண்டமான அக்கூட்டத்தில் அவர் பேசுவதற்குக் கொடுக்கப்பட்ட விடயம், திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களது அரசியல் முயற்சிகளை விமர்சிப்பதே. ஒரு மணி நேரம் மக்கள் சமுத்திரத்தைக் கரகோசத்தில் வைத்திருந்த அமிர்தலிங்கம் அவர்கள் - பேச்சின் சிகரத்தில் நின்று கேட்டார்: "திரு. பொன்னம்பலம் அவர்களே! நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். சிதைவுக்கு உள்ளாகும் பிரித்தானிய சாம்ராச்சியத்தின் தலைவனாக, தான் இருக்கவிரும்ப வில்லை என்று, இரண்டாவது மகாயுத்த காலத்தில் பிரதம மந்திரியாக இருந்த வின்சன் சேர்ச்சில் கூறினார். திருவாளர் பொன்னம்பலம் அவர்களே! நான் உங்களைக் கேட்கின்றேன். தமிழ் பேசும் மக்களைத் திட்டமிட்டே அழித்து வருகின்ற சிங்கள அரசாங்கத்தோடு ஏன் சேர்ந்து இருக்கிறீர்கள்? நீங்கள் அங்கே தமிழ் மக்களின் அழிவுக்குத் தலைமை தாங்குகிறீர்களோ?"

1952 அதனைத் தொடர்ந்து அவரது அரசியல் வாழ்க்கை தமிழ் மக்களின் இன்னல்களை மையமாக வைத்து வளரத் தொடங்கியது. அவர் 1952இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் வீ.வீரசிங்கம், கே.கனகரத்தினம், ரி.ருத்திரா, சி.ரகுநாதன், ஏ.வைத்தியலிங்கம் ஆகியோரை எதிர்த்துப்போட்டி யிட்டார். 4,500 வாக்குகள் பெற்று மூன்றாவதாக வந்தார். வெற்றி பெற்ற வீரசிங்கம் 1,187 அதிகப்படியான வாக்குகளைப் பெற்றார். அப்போது அமிருக்கு வயது 24. இவரோடு கூடப்போட்டியிட்டவர்கள் அனைவரும் யாழ்ப்பாணச் சமூகத்தில் அன்று ஒவ்வொரு துறையில் பிரபல்யமான மதிப்புமிக்க பெரியார்கள். இன்னும் அவர் எதிர்பாராமல் திடீரெனத் தந்தை செல்வா அவர்களின் வேண்டுகோளை அடுத்து அவர் கொடுத்தனுப்பிய 8000 ரூபாவுடன் தேர்தல் களத்தில் இறங்கினார். தன்னுடைய தொகுதியில் அவர் நேரத்தைச் செலவிட முடியாதபடி இளைஞர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளுக்கு அவரை அழைத்துச் சென்றனர். இன்றேல் முதலாவது



தடவையே அவர் தேர்தலில் வெற்றி பெற வாய்ப்பிருந்தது. இத்தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி ஏழு வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது. அவர்களில் கோப்பாயில் கு.வன்னியசிங்கம் அவர்களும், திருகோணமலையில் என்.ஆர்.இராசவரோதயம் அவர்களும் மட்டுமே வெற்றி பெற்றனர். ஏழு தொகுதிகளிலும் மொத்தமாக 45,331 வாக்குகளைக் கட்சி பெற்றது. காங்சேன்துறையில் தந்தை செல்வநாயகம் அவர்களை சு.நடேசன் அவர்கள் தோற்கடித்தார். எனினும் தமிழ் அரசுக் கட்சி தனது விடுதலைப் பணியில் தீவிரமாக ஈடுபட்டது.

1953 ஜனவரி 14ந் திகதி தைப்பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத் தெருவில் உள்ள தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் திரு. கு.வன்னியசிங்கம் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் வாலிப முன்னணி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அதன் முதல் தலைவராக அமிர்தலிங்கம் அவர்கள் தெரிவு செய்யப் பட்டார். தொடர்ந்து நாடெங்கிலும் இளைஞர்களை வாலிப முன்னணியில் சேர்த்து வாலிப முன்னணியைப் பலம் பொருந்திய போராட்ட இயக்கமாக மாற்றினார். இந்த வாலிப முன்னணியே வடகிழக்கில் இளைஞர் மத்தியில் சுதந்திர உணர்ச்சியை கொழுந்துவிடச் செய்தது.

1954 யூலை மாதம் அன்னாரது திருமணப்பதிவு நடைபெற்றது. திருமணப் பதிவு முடிந்ததும் கரவெட்டியில் நடை பெற்ற மேடைக் கருத்தரங்கில் அளவெட்டியைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வி.பொன்னம்பலத்துக்கு எதிராகத் தனது வாதங்களை முன்வைத்தார்.

ஆரம்ப காலத்திலேயே அவர் மக்கள் நலனுக்கு முதன்மை கொடுத்துப் பணியாற்றியதை அவதானிக்க முடியும். அவருக்கு வீடானது நள்ளிரவின் பின்னர் தூங்கி அதிகாலையில் எழுந்து யோகாப்பியாசம் செய்வதற்கு மட்டுமே. மற்றும்படி அவர் ஈழத்தின் எங்கோவொரு இடத்தில் ஏதோவொரு தொண்டில் புன்னகை ததும்ப உற்சாகமாக ஈடுபட்டிருப்பார். அந்தப் புன்னகைகூட அவரின் ஒப்பில்லாத தனிச் சொத்து. பணம் பண்டம் சொத்துச் சேர்க்கவேண்டும், அழகான மனை அமைக்கவேண்டும், அதில் ஆடம்பரப் பொருட்கள் நிறைந்திருந்து கண்களைப்பறிக்க வேண்டும் என்று

ஆசைப்பட்டதில்லை. அவர் ஓர் ஆடம்பரப் பொருளை வைத்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். அதுதான் அவருடைய 'டயறி'. அழகாகவும் பெரிதாகவும் இருக்கும். அந்த நாட்குறிப்பு அவர் பேசவேண்டிய கூட்டங்கள், சந்திக்க வேண்டிய மனிதர்கள், பங்கு கொள்ள ஒப்புக்கொண்ட பொதுக் கொண்டாட்டங்கள், செய்யவேண்டிய பணிகள் பற்றிய அறிவிப்பு ஏடாகவிருக்கும். ஆடம்பரமாக வாழவேண்டும் என்று அவர் விரும்பியதில்லை. உல்லாசமாகப் பொழுதுபோக்க நேரம் ஒதுக்கியதில்லை. பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவே நேரம் இருந்ததில்லை. தம்பாட்டில் வளரட்டும் என்று விட்டுவிட்டார். இரவில்தான் நேரம் இல்லையென்றால் காலையில் யோகப் பயிற்சி முடிந்ததும், வீட்டைவிட்டு வெளியேறும்வரை புதினப் பத்திரிகையில் மூழ்கிவிடுவார். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று வாழ்ந்த பெருந்தகை அவர். அவருக்குக் குடும்பம் பிள்ளைகள், சொத்து சுகம் எல்லாம் இரண்டாம் பட்சமே.

# அதிகாரம் 3
# இந்திய வம்சாவழித் தமிழர்

1954 இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் வேறுபாடின்றி அரவணைத்துச் சென்றவர் அமிர்தலிங்கம் அவர்கள். அவர் இலங்கை இந்திய காங்கிரஸ் கட்சியின் ஹட்டன் மகாநாட்டுக்குத் தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதியாக 1952இல் சென்றிருந்தார். இரண்டாவது தடவையாக 1954 இல் அவர் கட்சியின் பிரதிநிதியாக ஹட்டன் மகாநாட்டுக்கு அனுப்பப்பட்டார். அங்கு உரையாற்றும் பொழுது இலங்கைத் தமிழர்களைச் சிங்கள அரசு மேலும் பலவீனப்படுத்த முயல்கிறது என்று எச்சரித்ததோடு "அவர்கள் உங்களுடைய பிரசா உரிமையைத் திருடி இருக்கிறார்கள். அவர்கள் எங்களுடைய நிலங்களைத் திருடுகிறார்கள். அவர்கள் உங்களது எண்ணிக்கையைக் குறைத்துவிட்டார்கள். அவர்கள் எங்களது பிரதேச நிலப்பரப்பைச் சூறையாடுகிறார்கள். நாங்கள் அதனை அனுமதிக்கக்கூடாது. எதிர்க்க வேண்டும். எதிர்க்கவேண்டும். நான் அதனை எதிர்க்கிறேன். எதிர்ப்பேன்" என்று அறைகூவல் விட்டார். மலைநாட்டைப் பற்றிப் பட்டும் படாமலும் எமது அரசியல் தலைவர்கள் நடந்து கொண்ட பொழுதும் அமிர்தலிங்கம் அவர்கள் மலைநாட்டு இந்திய தமிழர்பால் மிக்க நேசம் பாராட்டினார்.



இந்திய வம்சாவழித் தமிழர் விடயத்தில் தமிழரசுக் கட்சி அதிக அக்கறை காட்டவில்லை என்ற கருத்தும் உண்டு. அவர்களுக்கு என்று இருந்த நிறுவனங்களின் தலைவர்கள் தனித்த இயல்புகளோடு இயங்கினர். அதுவே முக்கிய காரணம் எனினும் அமிர்தலிங்கம் அவர்களின் பங்களிப்பும், தமிழரசுக் கட்சியின் பங்களிப்பும் இருந்தது என்பதற்கு அத்தாட்சியாக 'வரலாற்றின் மனிதன்' பவளவிழா மலரில் முன்னாள் விரிவுரையாளர் ச.சந்திரசேகரன் தெரிவித்த சில கருத்துக்கள் அப்படியே தரப்படுகின்றன.

"மலையகப் பட்டதாரி ஆசிரியர்கள் தொழில்களுக்கு விண்ணப்பித்தனர். மலையகத்தில் முன்னணியில் இருந்த தொழிற் சங்கத் தலைவர்களிடம் சென்று தமக்கு ஆசிரியர் தொழில் பெற்றுத்தர உதவும்படி கேட்டபோது அமைச்சர்களாக இருந்த அவர்கள் உதவ முன்வரவில்லை. ஏனெனில் படித்த பட்டதாரிகள் வளர்ந்து வருவது தமக்கு இடையூறாக இருக்கும் என்று நினைத்தனர். மலையகப் பட்டதாரி இளைஞர்கள் தமிழரசுக் கட்சியின் உதவியை நாடினர். தந்தை செல்வா அமிர்தலிங்கம் அவர்களிடம் அப்பொறுப்பை ஒப்படைத்தார். அவர் கல்வி அமைச்சராக இருந்த இரியகொல்ல அவர்களிடம் சென்று மலையகத்தின் கல்வி நிலைமையை எடுத்துக் கூறினார். அத்துடன் மலையகப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க வேண்டும் என்றும் வாதாடினார். அவரது கோரிக்கையின் பயனாக மலையகத்தின் இந்திய வம்சாவழித் தமிழர்கள் பலருக்கு ஆசிரியர் பதவி கிடைத்தது."

"அது மாத்திரமல்ல, ஒரு வெளிநாட்டுப் பிரசையை மணந்த இலங்கையர் தனது வாழ்க்கைத் துணைக்காக வருடா வருடம் பெருமளவு பணத்தை அரசுக்கு வரியாகச் செலுத்த வேண்டி இருந்தது. எமது தலைவர்களாக இருந்தவர்கள் அரசுடன் பேசுவதற்கு மறுத்து விட்டனர். நான் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக அமிர் அவர்களைச் சந்திக்கச் சென்றேன். நாடாளுமன்றம் சென்று நான் மலையகத்தில் இருந்து வந்திருக்கிறேன் என்றும் அவரைச் சந்திக்க விரும்புவதாகவும் தகவல் அனுப்பினேன். நேரம் சென்றுகொண்டே இருந்தது. அவருடன் எனக்கு நேரடியான, நெருங்கிய பழக்கம் இல்லை. நான் நம்பிக்கை இழந்த நேரத்தில் அமிர் சபையில் இருந்து வெளியே வந்தார். தான் சபையில் உரையாற்றிக் கொண்டிருந்ததாகவும் அதனால்

தாமதமாகிவிட்டது என்றும் மன்னிப்புக் கோரினார். அது அவருடைய பண்பைக் காட்டியது. எனது பிரச்சினைகளைச் செவி மடுத்துக் கேட்டார். நாடாளுமன்றத்தில் அது பற்றிப் பேசித் தகுந்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். பாராளுமன்றத்தில் "வெளிநாட்டு வாழ்க்கைத் துணைவர்கள் ஆடம்பரப் பொருள் அல்ல. எனவே ஆடம்பரப் பொருளாக நினைத்து விதிக்கும் வரியை உடனே நீக்க வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார். அப்போது நிதியமைச்சராக இருந்த ரொனி டி மெல் அவ்வரியை உடனடியாக நீக்குவதாக வாக்குறுதி அளித்தார். சில நாட்களில் எனது மனைவியின் தற்காலிக வதிவிடப் பத்திரத்தைப் புதுப்பிக்கச் சென்றபோது குடிவரவு அலுவலர் தமக்கு அரசாங்க உத்தரவு வரவில்லை என்றும் வரி கட்ட வேண்டும் என்றும் கூறினார். மீண்டும் அமிர் அவர்களின் உதவியை நாட வேண்டி இருந்தது. அவர் உடனே நிதி அமைச்சருடன் தொடர்பு கொண்டு உடனடியாக அரசு ஆணை அனுப்ப ஏற்பாடு செய்தார். அவரது முயற்சியால் வெளிநாட்டவரை மணந்த அனைத்து இலங்கையருமே நன்மை பெற்றனர்."

"தமிழரசுக் கட்சி மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகம் என்ற தொழிற் சங்கத்தை 1962 டிசம்பர் 22ந் திகதி ஆரம்பித்தது. மலையகத்தின் பல பகுதிகளிலும் கழகம் பரவியது. இளைஞர்கள் பலர் கழகத்தில் சேர்ந்தனர். ஆனால் ஏற்கனவே மலையகத்தில் வேரூன்றி இருந்த தொழிற் சங்கங்கள் தமிழரசுக் கட்சியின் தொழிலாளர் கழகம் வளரவிடாது பல இடையூறுகள் செய்தன. இலங்கைத் தொழிலாளர் கழகப் பணிமனைகள் தாக்கப்பட்டன. அங்கெல்லாம் அமிர் அவர்கள் உடனடியாகச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிந்தார். மலையகத் தொழிலாளர் களுக்காகப் பல தொழில் நீதிமன்றங்களில் வழக்காடியமை குறிப்பிடத் தக்கது."

"அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள் மலையக மக்களுடைய கலை, கலாச்சார வளர்ச்சிக்கும் பெரிதும் துணை நின்றார். 1963ஆம் ஆண்டு மலையகத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் பாரதிக்கு விழா எடுத்தனர். இளைஞர்கள் பாரதியாரின் பேர்த்தி விஜயபாரதியை இலங்கைக்கு வரவழைத்தனர். இந்த முயற்சிகளுக்கெல்லாம் பெருந் துணையாக இருந்தவர் அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களே. பல



அமைச்சர்களுடன் தொடர்பு கொண்டு விழாக்கள் சிறப்பாக அமைய உதவி புரிந்தார்."

"1983 இனக் கலவரத்தை அடுத்து தமிழகத்தில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களுக்குப் பல உதவிகளைப் பெற்றுத் தந்தார். குறிப்பாக தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருடன் தொடர்பு கொண்டு அகதிகளாகச் சென்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் எவ்வித தடையும் இன்றித் தமது கல்வியைத் தொடர உதவி புரிந்தார். தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களே இட ஒதுக்கீடு காரணமாக உயர் கல்வி கற்க கல்லூரிகளில் இடம் கிடைக்காதபோது, அகதிகளாகச் சென்ற தமிழ் மாணவர்கள் உயர் கல்வி கற்க உதவியவர் அமிர்."

அமிர்தலிங்கம் அவர்கள் பலதடவைகள் பலமணி நேரம் பாராளுமன்றத்தில் இந்திய வம்சாவழித் தமிழர்களின் பிரச்சினைகள் பற்றி வாதாடினார். இலங்கைத் தமிழர்களின் உரிமைக்காக எவ்வளவு அக்கறை காட்டினாரோ அதேவகையில் இந்திய வம்சாவழித் தமிழர்கள் விடயத்திலும் அக்கறை காட்டினார். 1966 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கல்வி சம்பந்தமான ஒரு வெள்ளை அறிக்கை பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வேளை கல்வி அமைச்சரும், ஒரு சில உறுப்பினர்களும் பெருந்தோட்டப் பாடசாலைகளில் சிங்கள மொழி மூலம் கல்வி போதிக்க வேண்டும் என்றனர். ஒரு இனத்தை அழிப்பதற்கு அதைவிடச் சிறந்த ஆயுதம் தேவை இல்லை. அதனை அமிர்தலிங்கம் அவர்கள் முற்றாக நிராகரித்தார். அந்த வெள்ளை அறிக்கை தொடர்பாகப் பாராளுமன்றத்தில் பேசியபொழுது அவர் சொன்னார்:

"எனது நிலையைத் தெளிவு படுத்த இன்னும் இரண்டு முக்கிய குறிப்புக்களை முன்வைக்க விரும்புகின்றேன். அதில் ஒன்று பெருந்தோட்டப் பாடசாலைகள் பற்றியது. வெள்ளை அறிக்கையில் பெருந்தோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் பிள்ளைகளது கல்விச் சுமை தோட்ட உடமையாளர்களிடம் விடப்பட்டுள்ளது. அது சற்றேனும் திருப்தியான முறையல்ல. இந்த நாட்டில் உள்ள சகல மக்களுக்கும் ஒரேவகையான கல்வி வழங்கல் அமையவேண்டும். பொறுப்பற்ற முறையிலே மோசமாக

நிருவகிக்கப்படும் பாடசாலைகளில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் பயில்கிறார்கள். இன்றுள்ள இந்தப் படுமோசமான கல்வி நிருவாக அமைப்புக்கு ளிருந்து அவர்கள் விடுவிக்கப்படவேண்டும். சில பிள்ளைகள் கல்வி பெறுவதே இல்லை. அது அரச செயல் முறையின் சீர்கெட்டதனத்தைக் காட்டுகிறது. நாங்கள் அவர்களுக்கு அரசாங்கம் பாகுபாடற்ற கல்வி வழங்க வேண்டும் என்று கோருகின்றோம். அது அவர்களுடைய தாய் மொழியிலேயே புகட்டப்படவேண்டும். அவர்களின் கல்வி மொழி என்னவாக இருக்க வேண்டும் என்ற கேள்விக்கே இடம் இல்லை. அதைப் பற்றிக் கேள்வி எழுப்பக்கூடாது. நான் முன்னரே சொல்லி யுள்ளேன். கல்விமான்கள் யாவரும் ஒரு பிள்ளை அதன் தாய் மொழியிலேயே கல்வியைப் பெறவேண்டும் என்று கூறியுள்ளார்கள். எனவே எமது நிலைப்பாடும் சந்தேகமில்லாமல் பெருந்தோட்டப் பாடசாலைகளில் பயிலும் தமிழ் தொழிலாளர்களது பிள்ளைகள் தமிழ் மொழி மூலமே கல்வியூட்டப்பட வேண்டும் என்பதே. அதுவும் அரசாங்கம் முறையான பாடசாலைகளை அமைத்துத் தமிழ் மொழி மூலம் கல்வியூட்டவேண்டும்."

அவர் தொடர்ந்து பேசும் பொழுது கூறினார்: "நிதிப் பிரச்சினை உள்ளதாக எமக்குச் சொல்லப்பட்டது. அதில் சந்தேகம் இல்லை. எனினும் பெருந்தோட்டப் பாடசாலைகளில் நிறைவான கல்வி வழங்கப்படுகிறதா என்பதனை அரசாங்கம் கண்காணிக்கவேண்டும். அவை சரியான முறையில் பாடசாலைப் பரிசோதகர்களால் மேற்பார்வையிடப்படுகிறதா என்று அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும். இந்த அதிஷ்டம் இல்லாத குழந்தைகளுக்கு அதனையாவது செய்யும்படி வேண்டுகின்றோம். இன்றைய நிலையில் தோட்ட உடமையாளர்கள் பாடசாலைகளை நடாத்த பணம்கண்டுபிடிக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். பெருந்தோட்டங்களுக்கு வரிவிதிப்பதன் மூலம் நிதிப் பிரச்சினையைப் போக்கி அரசாங்கமே பெருந்தோட்டப் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்தவேண்டும். தேசிய பாடசாலைகளின் ஒரு அங்கமாக பெருந்தோட்டப் பாட சாலைகள் கொண்டுவரப்பட்டு, அங்கு தமிழ் மொழி மூலம் கல்வி புகட்ட வேண்டும் என்று கோருகின்றோம்."



# அதிகாரம் 4
# முதலாவது களம்

1954 யாழ் மண்ணில் விடுதலைப் போராட்டத்தை அரங்கேற்றி வைத்தவர் அமிர்தலிங்கம் அவர்கள். அதற்கு முன்னோடியான நிகழ்வுகள். 1954இல் யூ.என்.பி. கட்சியைச் சேர்ந்த பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல யாழ்ப்பாணம் வந்தார். யாழ் மாநகர சபை முன்றலில் சட்டத்தரணி சி.பொன்னம்பலம் தலைமையில் அவருக்குப் பெரும் கோலாகல வரவேற்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்த விழாவிலே சேர் ஜோன் கொத்தலாவல பேச எழுந்ததும் - அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் அங்கு சென்றிருந்த தமிழரசு வாலிப முன்னணியைச் சேர்ந்த சுமார் 200 இளைஞர்கள் - தாம் மறைத்து வைத்திருந்த கறுப்புக் கொடிகளை உயர்த்தி 'கொத்தலாவல திரும்பிப் போ' என்று ஆங்கிலத்தில் கோஷமிட்டபடி மேடை அருகே சென்று ஆர்ப்பாட்டஞ் செய்தனர். பார்வையாளராக வந்த சிலரும் இளைஞர்களோடு சேர்ந்து கொண்டனர். அவ்வேளை கோஷமிட்டவர்களைக் கலைக்கப் பொலிசார் குண்டாந்தடி அடிப் பிரயோகம் நடாத்தினர். அமிருக்குப் பட்ட அடியில் இருந்து இரத்தம் சிந்தியது. சேட் கிழியுமளவுக்கு அடிபட்டார். செங்குருதி தோய்ந்த உடையுடன் வீதியில் இறங்கினார். இமை கொட்டாத கண்கள் பல அவர் தோற்றத்தில் அசைவிழந்து நின்றன. அவருடைய அந்தச் செங்குருதியே தமிழர் உரிமைப் போராட்டத்துக்குக் கொடுக்கப்பட்ட முதற் களப் பலியாகும். காவல்துறைக்கு அடங்கி மந்தைகளாக வாழ்ந்து பழகிப் போன யாழ்ப்பாண மக்களுக்கு அமிர்தலிங்கம் அவர்களின் இரத்தம் சிந்திய கறுப்புக் கொடிப் போராட்டம் வீரதீரச் செயலாகப்பட்டது. இந்த உணர்ச்சியைத் தூண்டும் நிகழ்வே அமிர்தலிங்கம் அவர்களை இளைஞர் மத்தியிலே வீரபுருஷனாக - கதாநாயகனாக உயர்த்தி வைத்தது. பிற்காலத்தில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடப் புறப்பட்ட வரலாற்றுக்கு இந்தக் கறுப்புக் கொடி நிகழ்ச்சி நாளுக்கிட்ட அத்திபாரமாக அமைந்தது.

1955 சிங்கள அரசியல் வாதிகள் யாவரும் சிங்களமும் தமிழும் சமஅந்தஸ்துடைய அரசகரும மொழிகளாக இருக்கும்

என்பதனை 1955ஆம் ஆண்டு வரை ஏற்றுக்கொண்டவர்கள். 1944 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன 'சிங்களம் அரசகரும மொழியாக இருக்கும்' என்று ஒரு பிரேரணையைச் சட்ட சபையில் முன்வைத்தார். அதற்குக் கல்வி அமைச்சர் சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா 'சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளும் அரசகரும மொழிகளாக இருக்கும்' என்ற திருத்தத்தைக் கொண்டு வந்தார். திருத்தத்தை ஆமோதித்துப் பேசிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா "தமிழ் மொழியை அரசகரும மொழியாக ஏற்றுக் கொள்வதில் எதுவித கேடும் விளையும் என்று நான் நினைக்கவில்லை. இரண்டு மொழிகளையும் உத்தியோக மொழிகளாக்குவதை நான் எதிர்க்கவில்லை. அல்லது அதனால் ஏதும் தீமைகள் அல்லது அபாயம் அல்லது துன்பம் விளைய எதுவித சாத்தியமும் இல்லை" என்று மிக ஆணித்தரமாகத் தனது வாதங்களை முன்வைத்தார். இறுதியில் ஜே.ஆர்.ஜயவர்த்தனவும் சிங்கள மொழிக்கு உள்ள அதேயுரிமை தமிழ் மொழிக்கும் இருக்க வேண்டும் என்பதனை ஏற்றுக்கொண்டார்.

1955இல் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பிரதம மந்திரி சேர் ஜோன் கொத்தலாவல யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவருக்குக் கொக்குவில் மக்கள் ஒரு வரவேற்புபசாரம் செய்தனர். அதில் கலந்து கொண்ட பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவையிடம், வைபவத்துக்குத் தலைமை தாங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ஹன்டி பேரின்பநாயகம், யூ.என்.பி. கட்சியின் மொழிக் கொள்கையை உறுதிப்படுத்தும்படி கேட்டார். அவரது கேள்விக்கு விடையளிக்கும் பொழுது சேர் ஜோன் கொத்தலாவல "சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமவுரிமை என்ற கட்சியின் கொள்கையில் மாற்றம் இல்லை. விரைவில் யாப்பில் அதனைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்" என்று உறுதி அளித்தார்.

ஆனால் ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே, களனியில் 1956 பெப்புருவரியில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மகாநாட்டில் வைத்து 'சிங்களம் மட்டுமே' உத்தியோக மொழியாக இருக்கும் என்று பிரகடனம் செய்யப்பட்டது. அதற்குப் போட்டியாக ஸ்ரீலங்கா சதந்திரக் கட்சித் தலைவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா 24 மணி நேரத்துள் 'சிங்களம் மட்டும் உத்தியோக மொழி' சட்டமாக்கப்படும் என்று பிகடனம் செய்தார். இவையாவும் ஆட்சிப்



பீடத்தைக் கைப்பற்றத் தமிழர்களைப் பணயம் வைத்த சிங்கள அரசியல் தலைவர்களின் கீழ்த்தரமான சாணக்கியத்தையே காட்டுகின்றன.

இதனை அடுத்து அமிர்தலிங்கம் அவர்கள் தான் கலந்து கொண்ட கூட்டங்கள் யாவற்றிலும், சிங்களக் கட்சிகளின் குத்துக்கரணங்களைக் குத்திக் காட்டி, காரசாரமாக சிங்கள அரசியல் தலைவர்களை விமர்சித்தார். உலகின் பல நாடுகள் சிறுபான்மை மக்களின் மொழிக்குப் பெரும்பான்மை மக்களின் மொழிக்கு நிகரான அந்தஸ்தை, சமஷ்டி ஆட்சி அமைப்பின் மூலம் வழங்கி உள்ளதை மக்களுக்கு விளக்கி, தமிழர்களை எதிர் நோக்கி உள்ள பிரச்சினைகளைச் சமஷ்டி அமைப்பின் மூலமே தீர்க்கலாம் என்று பிரசாரித்தார். அதே சமயம் தமிழ் மக்கள் தமது அடிப்படை உரிமைகளைப் பெறவும், சமஷ்டி ஆட்சியமைப்பை ஏற்படுத்தவும் சிங்கள அரசை எதிர்த்துப் போராட வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார்.

மக்களைக் களத்துக்கு அழைத்துவரும் பெரும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கூட்டப் பிரசாரத் துண்டுப்பிரசுரத்தில் அவரின் பெயர் கண்டு மக்கள் சேனைசேனையாகப் பிரசாரக் களத்தில் குவிந்தனர். வடகிழக்கு மாகாண நகரங்களில் மட்டுமல்லாது குக்கிராமங்கள் தோறும் நடந்த அரசில் பிரசாரக் கூட்டங்களில் எல்லாம் சோர்வில்லாமல் கலந்து கொண்டார். மோட்டார்வண்டி செல்லாத மூதூர்ப் பகுதிக் குக்கிராமங்களுக்கும் முதலைகள் நிறைந்த ஆறுகளைக் கடந்து சென்று பிரசாரம் செய்தவர். ஒரு சமயம் கூட்டம் முடிந்து திரும்பியபொழுது ஆற்றைக் கடக்கப் பாதையில்லாது ஆற்றோரம் இரவு முழுவதும் தென்னோலைமீது தூங்கித் தன் அரசியல் பணியைத் தொடர்ந்த பெருமகன் அவர்.

யாழ் மண்ணில்
கறுப்புக் கொடி
அரங்கேற்றி,
அதனால் அடியுதை
பெறுவதையும்
அரங்கேற்றி,

களத்தில் நின்று
தன் செங்குருதி
அரங்கேற்றி -

விடுதலைக் களத்துக்கு
அரியோம்நமவென
மக்களை அழைத்துச் சென்றவர்
அமிர்தலிங்கனார்

## அதிகாரம் 5
## வட்டுக்கோட்டையில் வெற்றி

1956 சிங்களத் தலைவர்களின் விசமத்தனங்களைக் கண்டித்து, தமிழ் அரசுக் கட்சி பெப்புருவரி 20 திகதி ஒரு ஹர்த்தாலை மேற்கொள்ள முனைந்து, அதில் கலந்து கொள்ள மக்களை அழைத்தது. அதுவே தமிழ் அரசுக் கட்சி மக்களை ஒட்டுமொத்தமாக முன்வைத்து நடத்திய அரசுக் கெதிரான முதல் உரிமைப் போராட்ட முயற்சியாகும். ஹர்த்தால் பெரும் வெற்றியளித்தது. அது யாழ்ப்பாணத்தில் அதுவரை கொடிகட்டிப் பறந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் அஸ்தமனத்தைச் சுட்டிக்காட்டியது.

நடக்கவிருந்த பாராளுமன்றத் தேர்தலை ஒட்டி மார்ச் மாதம் 30ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் உரையாற்றும் பொழுது சொன்னார்: "பல்லின, பலமொழி பேசும் மக்கள் வாழும் நாடுகளில் உத்தியோக மொழிச் சிக்கல்களைத் தவிர்க்கச் சமஷ்டி ஆட்சி முறை வெற்றியோடு கைக்கொள்ளப் பட்டதற்குப் பல உதாரணங்கள் உண்டு. இந்தச் சமஷ்டி ஆட்சி முறை நாட்டின் ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாக்கக் கூடியது. இலங்கையில் குறிப்பாகப் பௌத்த மதத்தைச் சாராத அல்லது சிங்களம் தாய் மொழியாக இல்லாத மக்களுடைய அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க மிக உகந்த அரசியல் முறை சமஷ்டி அமைப்பாகும்."



அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டு 14,937 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஏ.வைத்தியலிங்கம் அவர்களைவிட 4,087 அதிகப்படியான வாக்குகளைப் பெற்றார். தமிழரசுக் கட்சி 14 தொகுதி களில் போட்டியிட்டு, மொத்தம் 10 தொகுதிகளில் வெற்றி ஈட்டியது. மொத்தமாக 1,42,034 வாக்குகளைத் தமிழ் அரசுக் கட்சி பெற்றது. தந்தை செல்வநாயகம் அவர்கள் காங்கேசன்துறையிலும், கோமான் கு.வன்னியசிங்கம் அவர்கள் கோப்பாயிலும் வெற்றி பெற்றனர். இத்தேர்தல் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு திருப்பு முனையாக அமைந்தது. தமிழ் மக்கள் உரிமைப் போராட்டத்துக்குத் தயார் என்று பச்சைக் கொடி காட்டிய தேர்தலாக அமைந்தது. தமிழ் மக்களின் அங்கீகாரம் பெற்ற ஒரே கட்சி என்ற அந்தஸ்தைத் தமிழ் அரசுக் கட்சி பெற்றது.

தமிழ் ஈழ அரசியல் வரலாற்றில் அற்புதமான சாதனைகளை ஆவணப்படுத்திய அமிர்தலிங்கம் அவர்கள் அவதரித்த மண் பண்ணாகம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்கில் அமைந்த பண்பால் பெருமையால் செல்வச் செழிப்பால் கலைச் செழிப்பால் உயர்ந்த பூமி தெற்குப் பண்ணாகம். இதன் பெருமைக்குரியது அமிர்தலிங்கம் அவர்களது பாட்டன் பரம்பரைக்குரிய விசுவத்தனை முருகமூர்த்தி கோவில். அதன் தெற்கே அமைந்த தேசியத்தனை நிலவளத்தில் பயிர்கள் செழிப்புற்றுக் காணப்படும். இக்கோவிலை மையமாகக் கொண்டவர்கள் யாவரும் வேளாள வம்சத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு பகுதியினர் கமக்காரர்களாகப் பண்ணாகத்தில் தொழில் பார்க்க, ஒரு பகுதியினர் சிங்கப்பூர் சென்று உழைத்து வருபவர்களாக இருந்தனர். அமிர்தலிங்கம் அவர்களின் உறவினர் சிலர் திரும்பி வராமல் அங்கேயே நிரந்தரமாக வாழ்கின்றார்கள். இன்னும் தொடர்பு இருக்கிறது. இவ்வகையிலேயே அமிர்தலிங்கம் அவர்களது தந்தை யாரும் சிங்கப்பூரில் வேலை பார்த்து ஊர் திரும்பியவர். கோலாலம பூருக்கும் பண்ணாகத்துக்கும் நல்ல தொடர்பு இருந்தது. அதனை ஒட்டிய ஒரு சம்பவம். அமிர்தலிங்கம் அவர்களது தந்தையார் அப்பாப பிள்ளை கோலம்பூரில் வாழ்ந்த சமயம், அங்கு தொழில் புரியச் சென்ற அவரது மைத்துனர் காலமாகிவிட்டார். அக்காலத்தில்

பிரேதத்தை உடன் பண்ணாகம் கொண்டுவர வசதி இல்லை. அவரின் மரணத்துக்குக் கவலை தெரிவித்து அப்பாப்பிள்ளை அவர்களுக்கு உறவினர் ஒருவர் ஒரு கவிதை எழுதி அனுப்பியிருந்தார். அது:

"கல்லான தூணைக் கறையான் அரித்ததுவோ?
மண் கிண்டலாகாதென்று
விண்ணாளப் போனீரோ போனீரோ? ......" என்றிருந்தது.

இக்கவிதை தென் பண்ணாகம் மக்களின் கடல் கடந்து திரவியம் தேடும் முயற்சியைக் கிண்டல் பண்ணுகிறது. அதாவது கமம் செய்து பிழைக்கத் தெரியாது கடல் கடந்து போனதால் வந்த வினை என்று கூறுகிறது.

தென் பண்ணாக மக்கள் மிக்க கட்டுப்பாடு உடையவர்கள். குடும்ப உறவுகளுக்கு மதிப்பளிப்பவர்கள். தங்களது குடும்பங்களை விட்டு வெளியில் விவாக உறவு வைப்பதானால் அதனை அவர்கள் யாவரும் சேர்ந்தே தீர்மானிப்பர். வைபவ சமயங்களில் செம்பு தண்ணி கொடுப்பதானால் முதலில் அமிர்தலிங்கம் அவர்களது சிறிய தகப்பனார் பரிகாரியார் செல்வத்துரைக்குக் கொடுத்த பின்னரே மற்றவர்கள் கைகழுவி சபைக்குச் செல்வர். மூத்தவர்களுக்கு, பாரம்பரிய வழமை களுக்கு மரியாதை கொடுக்கும் சமூகம். இக்கிராமத்தவர்கள் முன்னர் ஆண்டு தோறும் பூதத்தம்பிவிலாசம் நாடகம் பழகி, பரியாரியார் வளவில் மேடை அமைத்து அதனை அரங்கேற்றியவர்கள். மேடையைச் சுற்றியிருந்து விடியவிடியக் கூத்துப்பார்த்தவர்கள். அது அமிர்தலிங்கம் அவர்களது இளமைக்காலத்தோடு நின்றுபோனது. இக்கிராமத்தின் இன்னொரு கலாச்சார அம்சம் வருசப் பிறப்பை அடுத்து தயிர் முட்டி உடைக்கும் போட்டியாகும். அது ஒரு பெரும் கொண்டாட்டமாக நிகழும். புளியமரக் கொப்பில் தயிர் முட்டியைக் கட்டித் தொங்க விடுவர். அதனை அடித்து உடைத்து வெற்றி பெறுவருக்கு மாலையிட்டு வீரவணக்கம் செலுத்தப்படும். இவ்வகையான பல சிறப்பும் பெருமை யும் நிறைந்த கிராமத்தின் பின்னணி, உறவினரின் இறுக்கமான பிணைப்பு என்பன அமிர்தலிங்கம் அவர்களின் அரசியல் வாழ்க்கைக்கு மிகவும் உதவியதை அவதானிக்க முடிகிறது. அதாவது அமிர்தலிங்கம் அவர்கள் தன்னை ஒரு இறுக்கமான ஒழுக்கவியல் கட்டுப்பாடுகளுள் வைத்துக்கொண்டு தனது அரசியல் முயற்சிகளை மேற்கொள்ள



உதவியுள்ளது.

ஒழுக்கம் விழுப்பந் தரும்.
அப்பழுக் கற்ற
அரசியல் வாழ்வின்
இலக்கியத்துக்கு
ஒரு மகான்
தென் பண்ணாகம்
பரிசளித்த
அரசியல் வித்தகர்
அமிர்தலிங்கனார்.

# அதிகாரம் 6
# நாடாளுமன்றத்தில் கன்னிப் பேச்சு

1956 பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் நிகழ்த்திய நீண்ட கன்னிப் பேச்சு ஒரு வரலாற்றுப் பொக்கிசம். அச்சமயம் எதிர்காலத்தில் தமிழர்கள் ஆயுதம் தூக்குவார்கள் என்பதை அழுத்திக் கூறிய முதலாவது தீர்க்கதரிசி அவர். அந்தப் பேச்சு அவரின் அதீத புலமையையும், துணிவையும், தான் கொண்ட கொள்கையில் அவருக்கு உள்ள அசைக்க முடியாத பற்றையும் வெளிப்படுத்தியது. வரலாற்றையும் இலக்கியத்தையும் பொதறிவையும் கையாண்டு தனது வாதத்தை நிகழ்த்தினார். அவர் ஆங்கிலத்தில் மழையாகப் பொழிந்து சிந்திக்க வைத்த அவரது கன்னிப் பேச்சை சபை அசையாமல் அவதானித்தது. அகில உலகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் திறம்ம யாகப் பேசக் கூடியவர்கள் மூவர். அதில் ஒருவர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அமரர் அறிஞர் சி.என்.அண்ணாதுரை அவர்கள். மற்றவர் புதுடில்லி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள். மூன்றாம் நபர் அமிர்தலிங்கம் அவர்கள் என்று இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி குமரி அனந்தன் சொல்கிறார். அவரின் கணிப்புச் சரி என்பதை அன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் மெய்ப்பித்தார். எல்லோரும் அவரது கன்னிப் பேச்சை மௌனமாக அவதானிக்க பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.

பண்டாரநாயக்க மட்டும் இறுதிக் கட்டத்தில் ஒரு முறை சீண்டிப்பார்த்தார். அவரின் கன்னிப் பேச்சின் சிலபகுதிகள் தரப்படுகின்றன.

"கௌரவ சபாநாயகர் அவர்களே, எனது தொகுதி மக்களின் அல்லது தமிழ் மக்கள் ஒரு பிரிவினரின் நன்மைக்காகச் சின்னச் சின்ன சலுகைகளை இரந்து கேட்க நான் இந்தச் சபைக்கு வருகை தரவில்லை. சமஷ்டி ஆட்சி அமைப்பை இந்த நாட்டில் ஏற்படுத்தி தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்குச் சமமான உரிமைகளுடன் வாழ வழிசமைக்க விரும்பும் ஒரு அரசியல் கட்சியின் அங்கத்தவனாக வருகை தந்துள்ளேன். நான் எனது கோரிக்கையை வரலாற்று அடிப்படையிலோ புவியியல் அடிப்படையிலோ வைக்கப்போவ தில்லை. இந்த நாட்டில் தமிழ் பேசுபவர்கள் ஒரு தேசிய இனம். அவர்கள் அடிப்படை உரிமைகளுக்கு உரித்துடையவர்கள் என்ற கருத்தை முன்வைத்துப் பேசவிரும்புகிறேன். அதாவது தமிழ் பேசும் மக்கள் தெளிவான தேசிய இனத்துவத்தை உடையவர்கள் என்ற அரசியல் தத்துவத்தின் அடிப்படையிலேயே எனது கருத்தை முன்வைக்கின்றேன்."

"நாங்கள் ஒரு குறித்த நிலப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கட் சமுதாயம். நாங்கள எங்களை ஒரு தனித்துவ சமுதாயமாகக் கருதுகின்றோம். நாங்கள் எங்களது அடையாளங்களையும் மொழியையும் பேணிப் பாதுகாக்க விரும்புகின்றோம். இன்றைய அரசியல் திட்டம் சோல்பரி பிரபுவினாலும் அவரைச் சேர்ந்தவர்களினாலும் எங்கள் மீது திணிக்கப்பட்டதாக நாங்கள் கருதுகின்றோம். 1945இல் அதனை தமிழ் காங்கிரஸ் நிராகரித்தது. அந்த அரசியல் திட்டம் தமிழ் பேசும் மக்களை சிங்களப் பெரும்பான்மையில் தங்கி இருப்பவர்களாக அவர்களுக்குக் கீழ்மைப்பட்டவர்களாக, அவர்களின் அடிமைகளாக ஆக்கியுள்ளது. தமிழ் மக்களைச் சிங்களம் பேசும் மக்கள் தயவில் அநாதரவாக விட்டுள்ளது."

"மொழி அடிப்படையிலேதான் நாங்கள் சமஷ்டி ஆட்சி அமைப பைக் கோருகின்றோம் என்பதல்ல எங்கள் தத்துவம். அதிலும் பார்க்க வலுவான அடிப்படை உரிமைகளை ஆதாரமாகக் கொண்டது எமது கேள்வி. இன்றைய அரசாங்கமும் அதற்கு முந்திய அரசாங்கமும் சிங்களத்தை உத்தியோக மொழியாக ஆக்க எடுத்த முயற்சி ஒரு



தீராத வியாதியாகி அது அரசியல் முழுமையையும் பற்றிப் பிடித்துள்ளது. அது பல்லின மக்கள் வாழும் - அதாவது இரண்டு தெளிவான தேசிய இனங்கள் வாழும் நாட்டில் ஒரு இனமக்களுக்கு மட்டும் உரிய அரசை ஏற்படுத்தி உள்ளது. ஒரு மொழி பேசப்படுகின்ற பெரிய பிரித்தானியாவுக்கு உரிய அரசியல் திட்டத்தை நகல் எடுத்து இலங்கைக்கு அறிமுகப்படுத்தி உள்ளது. பிரித்தானியாவில் வேல்ஸ் மொழி ஸ்கொச் மொழி என்பனவற்றைக் கொன்று ஒழித்தே ஒரு மொழி ஆட்சி முறை அங்கு ஏற்படுத்தப்பட்டது. பெரிய பிரித்தானி யாவுக்கு உரிய அரசியல் திட்டம் இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் மீது திணிக்கப்பட்டுள்ளது. சோல்பரி அரசியல் திட்டமே இன்றைய எல்லா அரசியல் வியாதிகளுக்கும் மூல காரணம்."

"எனது நண்பர் பருத்தித்துறைப் பிரதிநிதி அவர்கள் (திரு.பி.கந்தையா, கம்யூனிஸ்ட் கட்சி) பெரும்பான்மைச் சிங்கள மக்களின் மனமாற்றத்துக்குத் தமிழ் பேசும் மக்களின் குறுகிய இன்வாதமே காரணம் என்று விளக்கமளிக்க முற்பட்டார். அவருக்குத் தெரியாது போலவிருக்கிறது - தமிழ் பேசும் மக்களே இலங்கைக்கு சுதந்திரம் வேண்டும் என்று முதன் முதலில் குரல் கொடுத்தவர்கள் என்பது. இலங்கைத் தேசிய காங்கிரசை நிறுவிய சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களே இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று முதலில் குரல் எழுப்பியவர். அதே அருணாசலம் அவர்கள் 1924ஆம் ஆண்டில் இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்து வெளியேறி 'தமிழ் லீக்' அமைப்பதற்கு என்ன காரணம்?"

"1948 வரை ஐக்கிய இலங்கை என்ற தாரக மந்திரத்துள் சிக்கி இருந்து - தமிழ் பேசும் மக்களும் சிங்கள மக்களும் இணைந்து வாழமுடியும் - என்று போதித்து வந்த கௌரவ வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் (திரு.சி.சுந்தரலிங்கம்) ஏன் கடந்த புதன்கிழமை தனது பழைய கொள்கையைக் கைவிட்டு அப்படி ஒரு பேச்சை இந்தச் சபையில் நிகழ்த்தினார்? அது அவரின் குறுகிய இனவாதம் அல்ல. தமிழ் மக்களுக்கு வரப் போகும் அபாயத்தை உணர்ந்தே அவர்களின் சட்டப்படியான உரிமைகளைப் பாதுகாக்க அவ்வாறு திருப்பஞ்செய்து குரல் கொடுத்தார். அது தமிழ் பேசும் மக்களின் குறுகிய இனவாதம் அல்ல."

"கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டிலே தேசியம், இனவாதம் என்ற பதங்கள் புதிய கருத்தில் புழக்கத்தில் விடப் பட்டுள்ளன. சிங்களவர்களுடைய இனவாதத்தைத் தேசியம் என்று வர்ணிக்கப்படுகிறது. சிங்கள மொழியை உத்தியோக மொழியாக் குவது தேசியம் என்றாகி உள்ளது. ஆனால் தமிழ் மக்கள் தங்களு டைய மொழிக்குச் சம உரிமை இருக்கவேண்டும் என்று கேட்பது இனவாதம் என்று பேசப்படுகிறது. இலங்கை முழுவதையும் தமது நாடு என்று கூறுவதை - தங்களுடைய சனசமுத்திரத்தை எமது பிராந்தியத்துள் திணிப்பதைச் சிங்களவர்கள் தேசியம் என்று சொல்கிறார்கள். வரலாற்றுக்கு முந்திய காலந் தொடக்கம் வாழ்ந்து வந்த தமது தாயக நிலப் பிரதேசத்தைப் பாதுகாக்க முனைவதை இனவாதம் என்று முத்திரை குத்துகிறார்கள்."

"கௌரவ கல்வி மந்திரி அவர்கள் கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தை ஒரு தேசிய திட்டம் என்று பேசினார். அரசாங்கம் இனவாதி களின் பேச்சுக்குச் செவி சாய்க்க மாட்டாது என்று சொன்னார். இந்தச் சபையின் தளத்தில் நின்று சொல்கிறேன் அல்லை, கந்தளாய், கல்ஓயா திட்டங்களுக்கு அனுப்பப்பட்ட ஆயிரக் கணக்கான தமிழர்களுடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கபபட்டுள்ளன. குறித்த மாவட்டங்களில் உள்ள உள்ளூர் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன. தெற்கே இருந்து வந்த விண்ணப்பங்களுக்கு முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது. சென்ற தடவை ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முழுநாட்டையும் சிங்கள மயமாக்க அப்படி ஒரு முயற்சியில் இறங்கியது. தமிழ் மக்கள் தமது தாயகம் என்று உரிமை கொண்டாடும் நிலப் பிரதேசத்தை இல்லாமல் செய்ய அப்படி ஒரு முயற்சி. அவ்வகையில் அமைந்த சூழ்ச்சியான திட்டத்தின் மூலம் ஒரு தேசிய இனத்தை அழிப்பதையே நாம் எதிர்க்கின்றோம்."

அவர் 1956 பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சி பற்றி விமர்சனம் செய்த பின்னர், தொடர்ந்து பேசுகையில் கூறினார்:

"கௌரவு கல்வி அமைச்சரின் வார்த்தைகளில் இந்த அரசாங்கம் ஒரு சோசலிச அரசாங்கம். நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கு அடிப்படை அரசியல் உரிமைகளை வழங்க மறுக்கும் இந்த அரசாங்கம்



எந்த வகைச் சோசலிசத்தைச் சார்ந்தது? எனக்கும் சோசலிசங்கள் பற்றித் தெரியும். ஹிட்லருடைய தேசிய சோசலிசத்தை நாசிக் கட்சியினர் தமது கொள்கைகளில் சேர்த்துக்கொண்டார்கள். அதுதான் 'மஹாஜன எக்சத் பெரமுன' (MEP) பிரதிநிதிகளின் சோசலிசம். எனக்குத் தெரிந்தளவில் அவர்களுடைய சோசலிசம் எந்த மாக்சிச சித்தாந்தத்தையும் அடிப்படையாகக் கொண்டதாக இல்லை."

"மற்ற கட்சிகளைப் போலவே எமது சமஷ்டிக் கட்சி சோசலிச சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சி. எனது கட்சியின் சார்பில் நான் சொல்கிறேன், நாங்கள் சோசலிச கோட்பாடுகளிலும் சோசலிச அரசிலும் இந்த நாட்டில் உள்ள மற்றவர்களைப் போலவே நம்பிக்கை உடையவர்கள். ஆனால் அந்த சோசலிசம் ஹிட்லர் வகைச் சோசலிசமாக இருப்பதை நாங்கள் விரும்பவில்லை. அவ்வகையான சோசலிசந்தான் இந்த நாட்டில் நடை முறைக்கு வருமாகவிருந்தால் நிட்சயமாக நாங்கள் அதனை எதிர்த்துப் போராடி மரணிப்பமே தவிர சிங்கள ஆட்சியின் கீழ் அடிபணிந்து நிரந்தர அடிமைகளாக இருக்க மாட்டோம்."

"தமிழ் இளைஞரின் சார்பாக நான் பேச விரும்புகிறேன். அவர்கள் குறுகிய மனம் படைத்தவர்கள் அல்லர். சர்வதேச சக்திகளின் உலக செயல்பாடுகள் தெரியாதவர்கள் அல்லர். நாங்கள் இரந்து கேட்கவில்லை. நாம் எங்கள் உரிமையைத் தட்டிக் கேட்கின்றோம். நாங்கள பிச்சை கேட்கவில்லை. நான் மீண்டும் சொல்கின்றேன் - நாங்கள் சுயநிர்ணய கோட்பாட்டின் அடிப்பண்டயில் எமது உரிமையைக் கோருகின்றோம். எங்கள் நிலப் பிரதேசத்தில் எம்மை நாமே ஆள உள்ள உரிமையைக் கோருகின்றோம். கௌரவ வவுனிய உறுப்பினர் (திரு.சி.சுந்தரலிங்கம்) எமது சமஷ்டிக் கோரிக்கையை ஒரு பெண் ஒரு ஆடவனை மணக்க ஆசைப்படுவது போலவும், ஆனால் அதற்கு விருப்பம் இல்லாத அந்த ஆண் முரண்டு பிடித்து இணங்க மறுப்பதாகவும் சொன்னார். அதற்கு முரணாக அவரின் சகோதரர், ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சி.நாகலிங்கம் அவர்கள் ஒரு வழக்கில் 'ஒத்துப்போக முடியாத ஒரு குடும்பம் விவாகரத்துப் பெறுவதற்குப் பதிலாக சட்டத்தின் துணையுடன் பிரிந்து வாழலாம்' என்று கூறினார். அதேநிலைதான் இன்று எங்களுக்கு. அந்நிய எஜமான்கள் தாம் நாட்டைவிட்டு வெளியேறும் பொழுது வலுக்

கட்டாயமாகச் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் விவாகம் செய்து வைத்தார்கள். தமிழ் பேசும் மக்கள்தான் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மணமகள். சிங்களம் பேசும் மக்கள்தான் வீர மணமகன். அவர்கள் இருவரும் கட்டாயமாக விவாகம் செய்து வைக்கப்பட்டார்கள். இந்த விவாகத்தின் மூலம் சம்பந்தப்பட்ட தலைவனானவன் தலைவி யின் உரிமைகளை அடக்கி ஒடுக்கவழி செய்யப்பட்டுள்ளது. தலைவன் சர்வாதிகாரமாக ஆட்சி நடத்துவதற்காக தலைவியின் கழுத்தை நெரித்துக் கொல்ல முனைகின்றான். நாங்கள் அதனை எதிர்க்கின்றோம். நாங்கள் சொல்கின்றோம் 'நாங்கள் பிரிந்து வாழ்வோம். எங்களுக் கிடையில் பிரிந்து வாழும் உரிமை இருக்கும். பிள்ளைகளின் நலன் கருதி முற்றாகப் பிரிந்து செல்லாமல் நாங்கள் மத்திய அரசாங்கம் ஒன்றை வைத்திருப்போம்.' இந்த வகையான அரசியல் அமைப்பையே - அதாவது சமஷ்டி அரசியல் அமைப்பையே நாம் கேட்கின்றோம். ஆனால் ஒரு விடயத்தை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகின்றேன். எமது தலைவர் சமஷ்டி அரசியல் அமைப்பை முன்வைத்தபொழுது மற்றர்வர்கள் விரும்பமாட்டார்கள் என்பதற்காக எதையும் மறைத்துச் சொல்லவில்லை."

"தமிழ் பேசும் மக்கள் எமக்குத் தேர்தலில் அளித்த அதிகார-உரிமையை கௌரவ பருத்தித்துறை உறுப்பினர் (தி.பி.கந்தையா) ஏற்க மறுக்கின்றார். அவருக்குச் சொல்ல விரும்புகின்றேன் - தமிழ் பேசும் மக்கள் வாழும் அறுபத்தொன்பது சதவீத தேர்தல் தொகுதிகள் சமஷ்டி அமைப்பைக் கோரும் கட்சி உறுப்பினர்களைத் தெரிந் தெடுத்திருக்கின்றன. தமிழ் பேசும் மக்களின் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலான பிரதிநிதிகள் சமஷ்டி அமைப்பிற்கு ஆதரவாக உள்ளனர். அவர்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் அரசாங்கத்திற்குத் தமிழ் பேசும் மக்களின் கருத்தை எடுத்துக் கூறி இந்த நாட்டின் எதிர்கால அரசியல் அமைப்பைத் தீர்மானிக்கும்படி வேண்டுகின்றோம். நான் முன்னரே சொன்னது போல நாங்கள் இங்கு வந்திருப்பது யுத்தப் பிரகடனம் செய்யவல்ல. அந்தக் காலம் வரும். நிட்சயமாக வரும்."

"சபையின் மறுபக்கத்தில் உள்ள கலைப் பாடங்கள் படித்த எனது நண்பர்கள் மகாபாரதத்தில் இருந்து எடுகோள்கள் காட்டினால் அதை இரசிப்பார்கள் என்று எண்ணுகின்றேன். பாண்டவர்கள் சார்பாகக் கிருஷ்ணர் கௌரவர்களிடம் சட்டப்படியான உரிமை கோரி தூது போனார். நாங்கள் தமிழ் பேசும் மக்கள் சார்பில் பெரும்பான்மை யினரான உங்களிடம் தூது வந்துள்ளோம். நாங்கள் சிறுபான்மை யினராக இருக்கலாம். ஆனால் வரலாற்றின் ஆதாரப்படி நோக்கினா லும்சரி அல்லது அரசியல் நீதியின் பிரகாரம் நோக்கினாலும்சரி தமிழ் பேசும் மக்கள் சிங்களம் பேசும் மக்களுக்குச் சமமான உரிமை உடையவர்களே. சிங்கள மக்களின் பிரதிநிதி களாகிய உங்களிடம் நீங்கள் இந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தில் எங்களுக்கு உரிய பங்கைத் தர மறுக்காதீர்கள் என்று கேட்கின்றோம். சிறுபான்மை சிறுபான்மைதான். அதனால் பெரும்பான்மையினருக்கு உரிய அரசியல் அதிகாரங்களும் சலுகைகளும் எமக்கு உரியதல்ல என்று சொல்வது தர்மமல்ல. நாங்கள் எங்களது மொழியைப் பெரும்பான்மை மக்களிடம் திணிக்கவேண்டும் என்று குரல் கொடுக்கவில்லை. நாங்கள் சொல்வதெல்லாம் நீங்களும் வாழுங்கள். எங்களையும் வாழவிடுங்கள்." அவர் தொடர்ந்தும் தனது கன்னி உரையை நிகழ்த்தினார்.

ஒற்றையாட்சியின் கீழ் வடகிழக்கில் சுதந்திரமான தமிழராட்சி என்று அவர் பிரசாரித்த கொள்கையை அவர் மறையும் வரை கடைப்பிடித்ததைக் காணலாம். தனிநாடு பற்றி சி.சுந்தரலிங்கம், வி.நவரத்தினம், ஆயுதக் குழுக்கள் ஆர்ப்பரித்த பொழுதும், அது மக்கள் அழிவுக்கே காரணமாகும் என்ற ஒரே காரணத்துக்காகவே அதனை உறுதியாக எதிர்த்தார். 1977 தேர்தலில் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்த பொழுதும், தகுந்த மாற்று வழி செய்யின் மக்கள் சம்மதத்துடன் அதனை ஆலோசனைக்கு எடுக்கத் தயார் என்று பாராளுமன்றத்தில் தெரிவித்த செய்தி பிறிதோர் இடத்தில் விபரமாக உள்ளது. அவரது கொள்கை தீர்க்கதரிசனமானது என்பதை நோர்வே அனுசரணையுடன் விடுதலைப் புலிகள் 2002 பெப்புருவரி தொடக்கம் 'தமிழ் ஈழம்' என்ற கொள்கையைக் கைவிட்டு - இலங்கை அரசோடு நடாத்தும் பேச்சுவார்த்தைகள் உறுதி செய்கின்றன.

# அதிகாரம் 7
# யுத்தத்தின் தழும்புகள்

1956 கொழும்புச சத்தியாக்கிரகத்தின் பொழுது அடையாளம் கண்டு மண்டை உடைக்கப்பட்ட ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் அமிர்தலிங்கம் அவர்களே. சத்தியாக்கிரகிகள் மத்தியில் இருந்த அவரைச் சிங்களக் காடையர்களுக்குக் காட்டிக் கொடுத்தவர் கள் பாராளுமன்றத்தில் அவரோடுசேர உறுப்பினர் களாகவிருந்த சிங்களச் சகபாடிகளே. அதற்கு முன்னோடியான சம்பவங்கள்.

யூன் 5ந் திகதி -- ஒக்ஸ்போட் பல்கலைக்கழகப் பட்டதாரியான - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டார நாயக்காவினால் தனிச் சிங்கள மசோதா பாராளுமன்றத்தில் விவாதத் துக்கு வைக்கப்பட்டது. அதன் முன்னர் ஆட்சி மொழியாக ஆங்கிலம் மட்டுமே இருந்தது. தனிச் சிங்களச் சட்டமூலத்தை எதிர்த்துத் தமிழ் அரசுக் கட்சி கொழும்பு பாராளுமன்றத்துக்கு எதிரே ஒரு சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்தத் திட்டமிட்டது.

சத்தியாக்கிரகத்தில் பங்குகொள்ள யாழ்ப்பாணம், மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட தொண்டர்கள் பம்பலப்பிட்டி விநாயகர் கோவில் வளவில் தங்க வைக்கப்பட்டார்கள். அவர்களோடு கொழும்பைச் சேர்ந்தவர்களும் இணைந்து கொண்டனர். மொத்தம் 200 பேர் வரை இருக்கும். யாவரும் காலையில் கொடிகளோடு பாராளுமன்றத்தை நோக்கி வீதிவழியே நடந்து சென்றனர். திருவாளர்கள் செல்வநாயகம் வன்னியசிங்கம் அமிர்தலிங்கம் வி.நவரத்தினம் ஆகியோர் தொண்டர்களுக்குத் தலைமை தாங்கிச் சென்றனர்.

சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களான. கே.எம்.பி. இராசரத்தின, நிமால் கருணதிலக்க ஆகியோரும் ஏனையோரும் கொண்டு வந்த 500 சிங்களக் காடையர்கள் வரிசையாக காலி வீதிவழியே நடந்து சென்ற சத்தியாக்கிரகிகளைத் தாக்கினார்கள். அதனால் அவர்கள் பாராளுமன்றம் செல்ல முடியாமல் காலிமுகத் திடலில் இருந்து சத்தியாக்கிரகம் செய்தனர். சிங்களக் காடையர்கள்



சத்தியாக்கிரகிகள் சிலரை இழுத்துச் சென்று பேரை ஏரிக்குள் வீசினர். சத்தியாக்கிரகிகள் மீது காறித் துப்பினார்கள். ஒருவன் சிறுநீரைப் பீச்சி அடித்தான். இன்னொருவன் அமிரின் அருகே இருந்த தாமரைக்குளம் செல்லையாவின் காதைக் கடித்து எடுத்தான். அமரர் வன்னியசிங்கம் அவர்களின் சேட்டை ஒருவன் கிழித்தான். சத்தியாக்கிரகிகள் கைகளாலும் கால்களாலும் கம்புகளாலும் கற்களாலும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இருபது சத்தியாக்கிரகிகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஒரு சிங்களக் காடையன் ஏவலுக்கு எடுபட்டு அமிர்தலிங்கம் அவர்களைக் கல்லால் தாக்கினான். அதனால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. வைத்திய நிலையம் அழைத்துச் செல்லப்பட்டார். அந்தக் காயத்துக்குக் கட்டிய கட்டுடன் அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றம் சென்றார். அவருடன்கூட வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் சி.சுந்தரலிங்கம் சென்றார். பாராளுமன்றத்துள் கால்வைத்ததும் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா "மதிப்புக்குரிய யுத்தத்தின் தழும்புகள் - Honourable wounds of war" என்று குத்தலாகக் குறிப்புரை சொன்னார். (இவர் பின்னர் 1959ஆம் ஆண்டு மஞ்சள் காவியுடை தரித்த சிங்களப் புத்த பிக்குவால் அவரது இல்லத்துள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டவர்.) பிரதமரின் நக்கல் கேட்ட சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிட்டுக் கிண்டல் பண்ணினார்கள்.

புத்தமதம் கருணை போதிக்கின்றது. மெத்தப் படித்த புத்தமத பாராளுமன்ற உறுப்பினர்கள் நொந்து போய்வருகின்ற மனிதனுக்கு நாலு ஆறுதல் வார்த்தைகள் கூறாமல் விட்டிருக்கலாம். ஆனால் அதன் மேல்சென்று தாழும் அமிர்தலிங்கம் அவர்களைக் கிண்டல் வார்த்தைகளாலும் செயல்களாலும் வதைத்தனர். சிங்களத் தலைவர்களே இப்படி யென்றால் அவர்களது பாமர வாரிசுகள் எப்படி இருப்பார்கள்? அதுதான் 1958 இனக் கலவரத்தின் பொழுது பொலநறுவையையடுத்த மகாஓயாக் காட்டுக்குள் கொதிக்கும் தார்ப் பீப்பாக்களுள் தமிழ்க் குழந்தைகளை அவர்களது பெற்றார்களின் கண்முன்னேயே வீசி 'பைலா' ஆடினார்கள். 1983 இனக் கலவரத்தின்பொழுது கொழும்பு வீதிகளில் சென்ற தமிழர்களின் உடல்களில் பெற்றோல் ஊற்றிக் கொழுத்திவிட்டு, அவர்கள் ஓவென்று

பரந்து கொழுந்துவிட்ட தீசுவாலையோடு ஓலமிட்டு ஓடுவதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தார்கள். இப்படியான ஒரு மிருக இனத்தோடு போராடியதுதான் அமிர்தலிங்கம் அவர்களது அரசியல் வரலாறு.

# அதிகாரம் 8
# நாடாளுமன்றத்தில் சிங்கள மொழிச் சட்டம் பற்றி

சிங்களம் மட்டும் உத்தியோக மொழிச் சட்டம் இரண்டாவது வாசிப்பின் போது அமிர்தலிங்கம் அவர்கள் அதனை எதிர்த்து பாராளுமன்றத்தில் இரண்டு நாட்கள் - யூன் 11, 12ந் திகதிகளில் - உரை நிகழ்த்தினார். அவரின் வாதங்கள் அற்புதமானவை. தமிழன் ஒவ்வொருவனும் அவர் கூறிய நியாயங்களைத் தெரிந்திருக்கவேண்டும். அதன் சில பகுதிகள் மட்டும் தரப்படுகின்றன:

"கௌரவ சபாநாயகர் அவர்களே, தமிழர்களின் உரிமையைக்கோரி, தமிழ் மொழியும் இந்நாட்டின் ஆட்சி மொழியாக நிலவ வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துப் பேசுகின்ற இச்சந்தர்ப்பத்திலே, நான் அம்மொழியிலே பேசாதுவிடுவது உண்மையில் சொல்லுக்கும் செயலுக்கும் வேற்றுமை பாராட்டுவதாக முடியும். அதனால் ஆரம்பத்தில் தமிழில் பேசி, பின்னர் ஆங்கிலத்தில் பேசுவதாக நான் தீர்மானித்திருக்கின்றேன்."

"இன்று, இச்சபையிலே சிங்களம் மட்டும் உத்தியோக மொழி என்ற சட்டத்தை விவாதித்துக்கொண்டிருக்கின்ற சமயத்திலே, இலங்கையின் சரித்திரத்தில் முன் என்றுமே இல்லாத ஒரு பெரும் கொந்தளிப்பு, ஒரு கிளர்ச்சி இந்நாட்டிலே ஏற்பட்டுள்ளது. இந்தப் பாராளுமன்றத்தைச் சுற்றிச் செய்யப்பட்டுள்ள பாதுகாப்புக்கள், இரும்பு வேலிகள் - இவற்றைப் பார்த்தாலே இந்நாட்டிலே எவ்வளவு கொந்தளிப்பு, குழப்பம், கலக்கம் இந்தச் சட்டத்துக்கு எதிராக இருக்கின்றது என்பதை நீங்கள் அறியக்கூடியதாக இருக்கின்றது. இத்தனை எதிர்ப்புக்களின் மத்தியிலே, நாட்டில் முன்னெப்பொழுதும் நடைபெற்றிருக்காத கொந்தளிப்பினிடையே இந்த அரசாங்கம் இந்தச்



சட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்றது. ஆனால், இச்சட்டத்தைப் புகுத்தும் அமைச்சர்கள் ஆட்சியாளர்கள், தமிழ் மக்களைத் தங்களோடு ஒத்துழைக்கும்படி கேட்கின்றார்கள். தங்களோடு ஒத்துழைத்து இச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு ஒத்தாசை செய்யும்படி கேட்கின்றார்கள். அரசாங்க கட்சியின் சார்பாகப் பேசிய ஒவ்வொரு அங்கத்தவருடைய பேச்சையும் நாங்கள் கவனித்தால் அவர்கள் எல்லோரும் பேச்சின் இறுதியில் தங்களோடு ஒத்துழையுங்கள் என்ற வேண்டுகோளுடன்தான் பேச்சை முடித்தார்கள். ஆனால் அவர்கள் எதற்கு ஒத்துழைக்கும்படி கேட்கின்றார்கள்? ஓநாய் ஆட்டுக் குட்டியைத் தன்னுடன் ஒத்துழைக்க அழைத்தது போல, சிங்கம் தன்னோடு ஒத்துழைக்க மான்குட்டியை அழைத்தது போல, அரசாங்க கட்சியினர் தமிழ் மக்களைத் தங்களோடு ஒத்துழைக்கும்படி அழைக்கின்றார்கள். இது எனக்கு ஒரு கதையைத்தான் ஞாபகமூட்டுகின்றது. ஒரு பெரிய தனவந்தன் எவ்வளவோ சன்மானம் கொடுத்து ஒரு சிங்கத்துடன் ஒரு ஆட்டுக் குட்டி சமாதானமாக, ஒற்றுமையாக ஒரு ஆற்றங்கரை ஓரத்திலே வாழ்வது போல ஒரு ஓவியத்தை வரையுமாறு ஒரு சைத்திரிகனைக் கேட்டுக்கொண்டான். எத்தனையோ மாதங்களாக அந்தச் சைத்திரிகன் பாடுபட்டு அழகிய முறையிலே அந்தப் படத்தைத் தீட்டியெடுத்தான். ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழித்துத் தீட்டி எடுத்த அந்தச் சித்திரத்தை மிக்க ஆவலுடன் அந்தத் தனவந்தன் பார்த்த பொழுது ஆறு இருந்தது. அழகிய புல் தரை இருந்தது. மரங்கள் இருந்தன. சிங்கம் அங்கே தெரிந்தது. ஆனால் ஆட்டுக் குட்டியை அங்கே காணோம். "ஆட்டுக் குட்டியைக் காணவில்லையே. ஏன் ஐயா, ஓர் ஆட்டுக் குட்டியும் சிங்கமும் ஒத்து வாழ்வதைச் சித்தரிக்கும் சித்திரமல்லவோ நான் வரையச் சொன்னேன். நீர் என்ன கீறி வந்திருக்கிறீர்?" என்று கேட்டான் அந்தத் தனவந்தன். சைத்திரிகனின் பதில் என்ன தெரியுமா? "அந்த ஆட்டுக் குட்டி சிங்கத்தின் வயிற்றுள் சுகமாக இருக்கிறது ஐயா" என்று பதில் அளித்தான். அது போன்றே அரசாங்க கட்சி அங்கத்தினர்கள் தங்களுடன் ஒத்துழைக்கும்படி கேட்கிறார்கள். ஓநாய் ஆட்டுக் குட்டியைக் கூடிவாழ அழைத்த கதையைத் தமிழினம் நன்கு அறியும். அது போன்று அரசாங்கத்தின் பசப்பு வார்த்தைகளை, தேனொழுக இனிக்க இனிக்கப் பேசிய பேச்சுக்களை, இனியும் தமிழினம் நம்ப

மாட்டாது. இதனை நான் தமிழ் இனத்தின் சார்பாக எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்."

"தமிழ் இனத்தின் மத்தியிலே முன் என்றும் இல்லாதவாறு கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதை எங்கு சென்றாலும் காணலாம். அது ஒரு அமைதியான சமுதாயம். முன் ஒரு பொழுதும் ஆத்திரமடையாத சமுதாயம். அதன் சரித்திரத்திலே அது ஒரு பொழுதும் எதற்குமே ஆத்திரப்பட்டதில்லை. ஆத்திரப்படுவது எங்கள் சுபாவம் இல்லை. ஆனால் ஆத்திரப்படுவதற்கு நேரம் வந்தால் மரணத்துக்கும் அஞ்சாது - அவர்கள் இலட்சியம் நிறைவேறும் வரை - அந்தப் போராட்டத்தை விடவே மாட்டார்கள் என்பது நீங்கள் சரித்திரத்திலே கண்ட உண்மை."

"இந்தச் சட்டமானது எங்களைச் சிங்கள சமுதாயத்தின் மீளா அடிமைகளாக்கிவிடும். இந்தக் கொடிய சட்டத்தை நான் என் வாழ்வுள்ள வரையும், என் கடைசி மூச்சு உள்ள வரையும் எதிர்ப்பேன் என்பதைத் தமிழினத்தின் சார்பாகக் கூறுகின்றேன்."

இதனையடுத்து அவர் ஆங்கிலத்தில் உரையாற்றத் தொடங்கினார்.

"எதிர்ப்பக்கதில் உள்ள அரசாங்க கட்சி உறுப்பினர்கள் நியாயத்தின் உண்மையை விளங்கிக் கொள்வதற்காக நான் இந்த உரையை நிகழ்த்தவில்லை. எனக்குத் தெரியும் அவர்களது மரத்த மண்டை ஓடுகளுள் எந்த நியாயமும் செல்ல வழி இல்லை என்பது. அவர்கள் எங்களுக்குச் சொல்கிறார்கள் - "எங்களுக்குச் சிங்கள மக்கள் ஆணை தந்துள்ளார்கள். நாங்கள் அதனை (தண்டனையை) நிறைவேற்றப் போகிறோம்" என்று. அவர்கள் இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களுக்கு (மரண) தண்டனைவிதித்து அதனை நிறைவேற்றும் கடமையைச் செய்யும் பாத்திரம் ஏற்றுள்ளார்கள். எனது பேச்சின் நோக்கம் அவர்களைத் தமிழர் பக்கம் திருப்பஞ் செய்வதல்ல."

"என் முன்னே முதலாவது வரிசை ஆசனத்தில் இந்த நாட்டு மாக்சியத்தின் தந்தை என்று சொல்லப்படுகின்ற - கௌரவ விவசாய-உணவு அமைச்சர் (திரு. பிலிப் குணவர்த்தனா) இருப்பதைக் காண்கிறேன். நான் 10 வருடங்களுக்கு முன்னர் பல்கலைக்கழக மாணவனாக இருந்த பொழுது மாக்சிய தத்துவங்களைக் கற்றுக்கொள்ள அவரது வீட்டுக்கு 1946, 1947களில் பலதடவைகள் போனது அவருக்கு ஞாபகம் இருக்குமோ இல்லையோ தெரியாது. அந்தப் புரட்சித் தந்தையின் அந்த மாக்சிய சிந்தனைகள் எல்லாம் எங்கே போய்விட்டன? சிங்கள மொழி வெறியனாக அவர் என் கண் முன்னே இருப்பதை பார்க்கின்ற வேளை - தமிழ் பேசும் மக்களுக்கு இரட்சிப்புக் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை."



"கௌரவ உதவி சபாநாயகர் அவர்களே, நான் இதனைச் சொல்லலாமா? இந்த நாட்டுத் தமிழ் மக்களுடைய வரலாறு பெரும்பான்மைச் சமூகத் தலைவர்களை நம்பி ஏமாற்றப்பட்ட வரலாறாக உள்ளது. நான் இதனை மிக்க பொறுப்போடுதான் சொல்கின்றேன். நான் கடந்துபோன பழைய காலத்துள் நுழைய விரும்பவில்லை. இந்த நூற்றாண்டை மட்டும் எடுத்துக்கொள்வோம். 'றைபிள்' கொலைக் கருவிகளின் உதவியுடன் பிரித்தானியர் இந்த நாட்டின் அதிகாரத்தில் இருந்து ஆட்சி செய்த 1915ஆம் ஆண்டின் இருண்ட காலப் பகுதியில் - சிங்கள-முஸ்லிம் இனக்கலவரத்தை அடுத்துச் சிங்களத் தலைவர்கள் சிறைச்சாலைக் கம்பிகளின் உள்ளே இருட்டறைகளுக்குள் இருந்த சமயம் - வீதிகளில் தென்பட்ட சிங்களவர்களை எல்லாம் பிரித்தானிய சிப்பாய்கள் சுட்டுக் கொன்ற பொழுது - சிங்களவர்களுக்காக யாரும் குரல் எழுப்ப இல்லாத பொழுது - ஒரு தமிழ்த் தலைவர், சேர் பொன்னம்பலம் இராமநாதன், யுத்தகால நீர்மூழ்கிக் கப்பல்களின் அபாயங்களையும் பொருட்படுத்தாமல் பிரித்தானியா சென்று சிங்கள மக்களுக்காக வாதாடினார். அதற்கான என்ன பரிசை - என்ன நன்றியைத் தமிழர்களுக்குக் கொடுத்தீர்கள்? எங்களுடைய உடைகளை அணிந்து நாங்கள் கொழும்பு வீதிகளில் செல்ல முடியாமல் உள்ளது. அந்தளவுக்கு எங்களது நிலைமை மோசமாகி உள்ளது. நாங்கள் அழிவில் இருந்து உங்களைப் பாதுகாத்த அதே நாட்டில், நாங்கள் வேட்டையாடப் படுகின்றோம். வென்றெடுக்கப்பட்ட சுதந்திரத்தில் தமிழர்களுக்கு என்ன பங்கு உள்ளது?"

"அது மட்டுமல்ல. 1918 இல் இலங்கைத் தேசிய காங்கிரசை அமைத்து இந்த நாட்டின் தேசியவிடுதலைக்கான போராட்ட முயற்சிகளைச் சிங்களவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தவர் சேர் பொன்னம்பலம் அருணாசலம். ஒரு சிங்கள தலைவராலும் அதனை மறுக்க முடியாது. வென்றெடுத்த சுதந்திரத்தில் தமிழ் மக்களுக்கு என்ன பங்கு இருக்கிறது?"

"கௌரவ உதவி சபாநாயகர் அவர்களே, நிட்சயமாக எனக்குத் தெரியும் என் எதிரே உள்ள நண்பர்கள் எனது பேச்சை, குறுகிய இனவாதப் பேச்சென்று அடையாளம் செய்வார்கள் என்று. அவர்கள் சொல்லக்கூடும் வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் வடிகட்டிய இனவாதத்துள் மூழ்கிப் போயிருக்கிறார் என்று. அது அழியும் தறுவாயில் உள்ள - எல்லாவகையான சட்டங்களாலும் அடக்கி ஒடுக்கப்படுகின்ற - ஒரு தேசிய இனம் பற்றிய இனவாதம். அழியும் தறுவாயில் உள்ள மக்களின் சட்டப்படியான உரிமைகளுக்காக வாதாடுவது இனவாதம் என்றால் நான் அப்படி அழைக்கப்படுவதைப் பற்றிப் பெருமைப்படுகின்றேன்."

"நீண்ட காலத்துக்கு முன்னர் அல்ல 1948இல்தான் பிரசா உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்பொழுது எதிர்க்கட்சியில் இருந்த, ஆனால் இன்று அரச தரப்பில் உள்ள கௌரவ விவசாய அமைச்சர், கௌரவ கைத்தொழில் அமைச்சர், கௌரவ கல்வி அமைச்சர் (டபிள்யூ. தகநாயக்கா) ஆகியோர் அந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார்கள். அந்தச் சமயத்திலே மிகவும் கவர்ச்சியாக சிறுபான்மை மக்களின் உரிமைகள் பற்றிப் பேசினார்கள். திரு. உதவி சபாநாயகர் அவர்களே, அதுதான் எமக்கு அச்சமாக உள்ளது. தாங்கள் சொன்னதை அப்படியே விழுங்கி ஏப்பம்விட்டுவிட்டு - தங்கள் கடந்த காலத்தைப் புதைகுழியில் போட்டுப் புதைத்துவிட்டு புதுக்கதை பேசுகிற ஒரு கூட்டத்தோடு நாங்கள் பேரம் பேச வேண்டி உள்ளது. அப்படியானவர்களில் நாம் நம்பிக்கை வைக்க முடியாது. அப்படியான வாழ்க்கைச் சரித்திரம் உடையவர்களின் உறுதி மொழிகளில் கூற்றுக்களில் உத்தரவாதங்களில் நாம் நம்பிக்கை வைக்க முடியாது."

"தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து உழைத்திருக்காவிட்டால் 1948இல் இலங்கை பூரண சுதந்திரம் பெற்றிருக்க முடியாது. அடிக்கடி கௌரவ வவுனியா உறுப்பினர் (திரு.சுந்தரலிங்கம்) இந்தச் சபைக்கு நினைவூட்டியது போல 1947இல் சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்து சுதந்திரத்துக்குக் குரல் கொடுத்திருக்காவிட்டால் இலங்கை சுதந்திரம் பெற்றிருக்க முடியாது. அச்சமயத்தில் எங்கள் தமிழ்த் தலைவர்கள் சுதந்திரம் பெற ஒத்துழைத்தார்கள். இப்பொழுது நீங்கள் எங்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? நாங்கள் குறுகிய இனவாதிகள். நாங்கள்



சிங்கள சமூகத்தோடு ஒத்துழைக்க வில்லை. சிங்கள தேசத்தின் முன்னேற்றத்தைத் தடை செய்கிறோம். எதிர்ப் பக்கத்தில் அமர்ந்துள்ள கௌரவ ஹொறன நாடாளுமன்ற உறுப்பினர் (பலன்சூரிய) ஒழிப்பு மறைப்பில்லாமல் அடிக்கடி வெறும் பசப்பு வார்த்தைகள் பேசும் அவர் ஒரு உறுதிமொழியையும் முன்வைக்காது சொல்கிறார்: "நாங்கள் உங்களை எங்களோடு இரண்டறச் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றோம். அதை ஏன் எதிர்க்கிறீர்கள்?" என்று கேட்கிறார். அதிலும் பார்க்க கோமாளித்தனமான ஒரு முன்வைப்பு இருக்க முடியுமா? எனது நண்பர் கௌரவ ஹொறன பாராளுமன்ற உறுப்பினரின் வாசகங்கள் எனக்குச் சுறா ஒன்று ஒரு சின்ன மீனுக்குச் சொன்ன கதையை ஞாபகமூட்டுகிறது. "நான் உனக்கு எனது வயிற்றில் வசதியான வதிவிடம்தர முயல்கிறேன். ஏன் அதனை எதிர்க்கிறாய்?" என்று சுறா அந்தச் சின்ன மீனைக் கேட்டது. இதற்காகத்தான் சிங்கள மொழிச் சட்ட மூலத்தை அறிமுகஞ் செய்துள்ள அரசாங்கம் எங்களை அழைக்கிறது."

"தனிச் சிங்கள சட்ட மூலத்தினை நாம் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு இன்னும் ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். இலங்கை சிறிய நாடு. அதனால் இரண்டு மொழிகளை வைத்துக்கொள்வது சாத்தியம் இல்லை என்று வாதாடுகிறார்கள். உண்மையில், கௌரவ தம்புள்ள நாடாளுமன்ற உறுப்பினர் முழுநேரமும் இரண்டு பெண்டாட்டிகளைப் பற்றியே கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறார். அது அவர் இரண்டு பெண்டாட்டிகளோடு அதற்கு முன்னர் ஈடுபட்டதன் பிரதிபலிப்போ என்னவோ தெரியாது. நான் நினைக்கிறேன் பண்டைய சிங்கள அரசர்கள் இரண்டு பெண்டுகளை வைத்திருந்த பாரம்பரியத்தைப் பின்பற்றுகிறார் என்று."

"திரு. உதவி சபாநாயகர் அவர்களே, உண்மையில் இரண்டு மொழிகளை அடக்க முடியாத அவ்வளவு சின்ன நாடா இலங்கை? சுவிற்சலாந்தை எடுத்துப் பாருங்கள். 16,000 சதுர மைல் பரப்புக் கொண்டது அந்த நாடு. இலங்கையிலும் ஐந்தில் மூன்று பங்கு பரப்பளவை மட்டுமே கொண்டது. இந்த நாட்டிலும் சனத்தொகை குறைவாக உடைய நாடு அது. அவர்கள் நாலு மொழிகளை சமவுரிமையுடைய உத்தியோக மொழிகளாக வைத்திருக்கின்றனர். அதுதான் சுவிற்சலாந்தில் உள்ள ஜனநாயகம். கௌரவ கல்வி

அமைச்சர் தமிழர்கள் சனத்தொகையில் 11 சதவீதம் என்று குறைத்துச் சொல்லப் பெரிதும் முயன்றார். ஆகவே தமிழர்களுடைய மொழிக்குச் சமத்துவம் கொடுக்கத் தேவை இல்லை என்று கூறுகிறார். அவருக்குத் தெரியாது போலும் சுவிற்சலாந்தில் றோமானிய மொழிகளைப் பேசுவோர் ஒரு சதவீதம் மட்டுமே என்று. அந்த ஒரு சதவீதம் உள்ள மொழிக்கு சுவிற்சலாந்தில் ஜேர்மனிய இத்தாலிய ஃபிரஞ்சு மொழிகளுக்கு உள்ள சம உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. கௌரவ ஹொறறன் நாடாளுமன்ற உறுப்பினர் இரண்டு மொழி இருந்தால் ஐக்கியப்பட்ட இலங்கை இருக்கவியலாது என்று வருத்தப்பட்டார். அவர் பௌத்த மடங்களில் பயின்ற பாளி மொழிப் பாடப் புத்தகங்களில் சுவிற்சலாந்து, கனடா, பெல்ஜியம், இரசியா, சீனா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் பற்றி எதுவும் இல்லைப் போலும். பல மொழிகள் பேசப்படும் குறிப்பிட்ட தொகை மக்கள் வாழும் எல்லா ஜனநாயக நாடுகளிலும் உத்தியோக மொழியாக அவர்களது மொழியைப் பயன்படுத்தும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இன்றைக்குச் சகல அரசியல் சிந்தனையாளர்களும் ஒருமுகமாகச் சொல்கிறார்கள் - ஒரு நாட்டில் ஒன்றிற்கும் மேற்பட்ட மொழித் தொகுதிகளை வைத்திருப்பதும் செயல்படுத்துவதும் இயலக்கூடியதே என்று."

"சுவிற்சலாந்தில் சிறுபான்மை மக்களின் தொண்டைக்குள் தனித்து ஒரு மொழி மட்டும் திணிக்கப்படாத காரணத்தால் அந்த நாட்டில் ஜேர்மனியர் ஃபிரெஞ்சுக்காரர்கள் இத்தாலியர்கள் நட்பாகவும் ஐக்கியமாகவும் வாழ்கிறார்கள். சுவிற்சலாந்தின் சனத்தொகையில் பெரும்பான்மையினரான ஜேர்மானியர்கள் 80 சதவீதம் - இந்த நாட்டிலே உள்ள சிங்கள சனத்தொகைச் சதவீதத்திலும் அதிகம். அவர்கள் விரும்பியிருந்தால் இத்தாலிய பிரெஞ்சு மக்களின் தொண்டைக்குள் ஜேர்மனிய மொழியைத் திணித்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் அது அந்த நாட்டின் சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படுத்தி இருக்கும். சுவிற்சலாந்து எல்லைகளை அண்டிய அயற் பிரதேசங்களில் ஜேர்மனியர்களும் ஃபிரெஞ்சுக்காரர்களும் இத்தாலியர்களும் ஒருவரோடு மற்றவர் போர் புரிந்து கொண்டிருந்த வேளையில், சுவிற்சலாந்தில் வாழ்ந்த ஜேர்மனியர்களும் ஃபிரெஞ்சுகக்காரர்களும் இத்தாலியர்களும் நட்பாக ஐக்கியமாக வாழ்ந்தார்கள். ஏன் என்றால் அவர்கள் சமத்துவ உரிமையுடன் வாழ்ந்ததே அதற்குக் காரணம். அந்த நாட்டவர்கள் ஓர் அரசியல் கட்டுமானம் வைத்திருக்கிறார்கள். அது அவர்கள் எல்லா இனத்தவர்களும் சமத்துவ உரிமையுடைய வர்கள் என்பதைப் பேசுகிறது. அது ஒரு இனம் எஜமான் என்றும் மற்றது அதற்குக் கீழ்மையானதென்றும் நியாயம் பேசவில்லை."



"சிங்களவர்கள் நினைக்கிறார்கள் தாங்கள் ஆட்சியாளர்கள் என்றும், தாங்கள் பிரித்தானிய எஜமான்களின் இடத்தை வகிப்பதாகவும். ஒரே ஒரு வித்தியாசம். இவர்களுடைய தோல்கள் பிரிதானியரின் தோல்களிலும் இருண்டது. இவர்கள் தாங்கள் பிரித்தானிய சாம்ராச்சிய காலணிக்குள் புகுந்து விட்டதாக எண்ணிக்கொண்டு இலங்கையின் வடக்கையும் கிழக்கையும் ஆள முனைந்து நிற்கிறார்கள். இவர்கள் முழுத் தீவையும் ஆளுவதோடு, நாடு முழுவதும் தங்கள் மொழியைத் தனித்து உத்தியோக மொழியாக வைத்திருக்கப் பார்க்கிறார்கள்.

நீங்கள் தவறாகக் கணக்குப் போடாதீர்கள். தூண்டல்கள் வாக்குறுதிகள் வெருட்டல்கள் கட்டாயப்படுத்தல்கள் - இவற்றின் மூலம் சுயகௌரவமுள்ள தமிழ் பேசும் மக்களை வளைத்துச் சிங்கள உத்தியோக மொழிச் சட்டத்தை ஏற்கச் செய்யலாம் என்று கற்பனை பண்ணாதீர்கள். தமிழ்ச் சமூகத்துக்கு என்ன நேர்ந்தாலும் அதனை எதிர்த்து நாம் வன்மையாகப் போராடுவோம்.

மன்னிக்கவும். எனது பேச்சின் பொழுது இந்தச் சபையில் உள்ள மற்றும் எவரிலும் உணர்ச்சிவசப்பட்டு கோபப்பட்டு பேசியமை சந்தர்ப்பத்தின் நிர்ப்பந்தத்தால் நேர்ந்தது. தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள மக்களின் உணர்ச்சிகளையே நான் பிரதிபலித்தேன். உங்களுக்குத் தெரியும் தமிழ் மக்கள் மற்றவர் மனதை நோகப்பண்ணாத அமைதியான அடங்கிப்போகிற சுபாவம் உடையவர்கள் என்பது. அவர்கள் 5000 வருட கலாச்சாரப் பாரம்பரிய பெருமையை உடையவர்கள். எங்களுடைய நாகரிகம் கூப்பாடு போடாமல் பொறுமையாக அமைதியாக வாழக் கற்றுத் தந்துள்ளது. பொறுமையின் எல்லைக்கே செல்கின்ற சமுதாயம் நாங்கள். ஆனால் பொறுமைக்கு ஒரு எல்லை உண்டு.

தமிழ்ச் சமுதாயம் இந்த நாட்டிற்குப் பிச்சைக்காரர்களாகவோ அடிமைகளாகவோ வந்தவர்கள் அல்லர். இவர்கள் இந்த நாட்டில் எஜமான்களாகவே வாழ்ந்தவர்கள். வேறு ஒரு சமதாயத்தின் தயவில்

வாழ்ந்தவர்கள் அல்லர். சுயகௌரவமுள்ள மக்களாகிய நாங்கள் அரசியல் அதிகாரத்தில் எமக்கும் பங்கு இருக்க வேண்டும் என்று சொல்கின்றோம். நாங்கள் காண்பதென்ன? எங்களுக்குத் தண்ணி காட்டியுள்ளார்கள். நாங்கள் ஏமாற்றப்பட்டோம். எங்களுடைய சட்டப்படியான உரிமைகள் எமக்குக் கிடைக்காமல் செய்யப்பட்டுள்ளது. இது இந்தச் சிங்கள மொழிச் சட்டத்துடன் ஆரம்பித்தது ஒன்று அல்ல. இதற்கு முன்னதாக பிரசா உரிமைச் சட்டத்தோடு ஆரம்பித்து விட்டது."

"இவர்களது உறுதி மொழிகளை நம்பலாமா? கௌரவ கல்வி மந்திரி அவர்கள் (டபிள்யூ.தகநாயக்க - மாக்சிய சித்தாந்தத்தில் ஊறி வாழ்ந்து சகல இனமக்களின் அனுதாபத்தைப் பெற்ற முன்னைநாள் ஆசிரியர்) 1941 ஆம் ஆண்டு இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் பேசுவதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். அக்கூட்டத்துக்கு பாடசாலை மாணவனாக இருந்த திரு. சுந்தரலிங்கம் அவர்கள் தலை தாங்கினார். நானும் அக்கூட்டத்தில் கௌரவ கல்வி மந்திரி அவர்கள் பேச்சைக் கேட்கப் போயிருந்தேன். அவர் அங்கு காரில் வரவில்லை. புகையிரதத்தில் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்து, யாழப்பாணத்தில் புகையிரதத்தால் இறங்கியதும் பஸ் வண்டியில் ஏறி பேசவேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்தார். அவரைப் புகையிரத நிலையத்திலிருந்து ஏற்றிவரக் கார் போயிருந்தது. அப்பொழுது காலியின் மேயராக இருந்த அவரை வரவேற்கப் புகையிரத நிலையத்தில் மக்கள் கூடி நின்றனர். அச்சம்பவத்தின் பின்னர் தமிழ்ச் சமுதாயம் அவரைக் காந்தியாகப் போற்றியது. அந்த ஏழைப் போலிக் காந்தியை நாம் இப்பொழுது கல்வி மந்திரியாகக் காண்கின்றோம். அப்பேற்பட்ட பிரமுகர்களே தங்கள் கொள்கைகளை மாற்றிக் குத்துக்கரணம் அடித்துப் பேரினவாத அடக்கு முறையின் வீரப்புதல்வர்களாக மாறி எம்மை ஒடுக்க முற்பட்டிருப்பதை அவதானிக்கின்ற பொழுது - தமிழ்ச் சமுதாயம் இன்றுள்ள சிங்களத் தலைவர்களின் உறுதிமொழிகளில் நம்பிக்கை வைக்க முடியமா?"

"சில அங்கத்தவர்கள் சிங்களத்தை உத்தியோக மொழியாக்கு வதன் மூலம் படித்த சிங்கள இளைஞர் மத்தியில் உள்ள வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கலாம் என்று கூறுகிறார்கள். அவர்களுடைய விவாதம் என்ன பேசுகிறது? சிங்கள இளைஞர்கள்



தங்களுடைய செல்லப் பிள்ளைகள். அவர்களையே தாங்கள் கவனமாகப் பேண வேண்டும். தாங்கள் சிங்களவர்களை மட்டும் பாதுகாப்போம்- தமிழர்களுக்கு வேலை வழங்காது தூக்கி எறிவோம் என்று பேசுகிறார்கள் என்பதுதானே? அது பிரச்சினையைத் தீர்க்குமா? அப்படியான மனப்போக்குடைய அரசாங்கம் தமிழ் இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பது தனது கடமை இல்லை என்று கருதுமானால், அவர்களுக்கு நான் கூறுகிறேன் 'நீங்கள் இந்த நாட்டுத் தமிழ் இளைஞர்களை ஆள முற்படவேண்டாம். எங்களுக்கு எங்களைப் பார்த்துக்கொள்ளத் தெரியும். எங்களுடைய உரிமைகளில் தலையிட வேண்டாம்' என்று."

"நாங்கள் பாராளுமன்றக் கட்டடப் படிகளில்தான் சத்தியாக்கிரகம் செய்ய வந்துகொண்டிருந்தோம். தனிச் சிங்கள மொழி வீரர்கள் - சிங்க இனத்தின் வாரிசுகள் - எங்களைச் சுற்றி நின்று எங்களை நையப் புடைத்தார்கள். நாங்கள் அமைதியான ஆட்டுக் குட்டிகள் போல அந்த விடத்திலேயே - காலிமுகத் திடலில் - அமர்ந்தோம். நாங்கள் போராட விரும்பவில்லை. வீரம் இல்லாத காரணத்தினால் அல்ல - எங்களுடைய முஸ்டிகளில் வலு இல்லாத காரணத்தினால் அல்ல. நாங்கள் சத்தியாக்கிரகிகள் என்றபடியால் அமைதியாக இருந்தோம். எங்களுக்கு வன்முறையில் நம்பிக்கை இல்லை. ஆனால் சிங்களம் மட்டும் வீரர்கள் என்ன செய்தார்கள்? ஒரு வேளை தாம் சிங்கத்தின் வழிவந்த இனம் என்பதைக் காட்டப் போலும் ஒருவன் தன்னுடைய பற்களால் ஒரு சத்தியாக்கிரகியின் (தாமரைக் குளம் செல்லையாவின்) காதைக் கடித்து எடுத்தான்."

அமிர்தலிங்கம் அவர்கள் தனது பேச்சை இரண்டாம் நாள் யூன் 12ந் திகதி மாலை 2 மணிக்குத் தொடர்ந்த பொழுது யூன் 6ந் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து வடகிழக்கு மாகாணங்களில் நடந்த ஹர்தாலைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டுத் தனது வாதங்களை முன்வைக்கத் தொடங்கினார்.

"இந்த நாட்டின் அரசாங்கம் செய்வது போன்று பெரிய பிரித்தானிய அரசாங்கம் அயர்லாந்தில் ஆங்கிலத்தை மட்டும் உத்தியோக மொழியாக்கியதால் அந்த நாட்டில் என்ன நடந்தது? ஸ்ரான்லி றன்டல் எழுதிய 'ஐரோப்பாவில் மொழிகளும் அரசியல் காரணிகளும்' என்ற

நூலில் 87ஆம் பக்கத்தில் சொல்லி இருப்பதை வாசிக்கிறேன். "மொழிப் பிரச்சினை எவ்வகையில் ஒரு நாட்டின் கருத்து முரண்பாடுகளுக்கும் போராட்டங்களுக்கும் காரணமாகும் என்பதற்கு அயர்லாந்து சிறப்பான எடுத்துக்காட்டாக உள்ளது. 19ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் அயர்லாந்தின் பெரும்பான்மை மக்களின் மொழி அயிறிஸ் மொழியாக இருந்தது. அந்த நூற்றாண்டின் முடிவிலே அயிறிஸ் மொழி மலைப்பிரதேச மாவட்டங்களிலும் மேற்கு அந்தப் பிரதேசங்களிலும் மட்டுமே வழக்கில் இருந்தது. அயிரிஸ் மொழியின் இந்தத் துரித வீழ்ச்சிக்குக் காரணம் ஆங்கிலம் பேசுபவர்களுக்கு வழங்கப்பட்ட பொருளாதார, சமூக, அரசியல் சலுகைகளும், 19ஆம் நூற்றாண்டு மத்தியில் பிரித்தானிய அரசு தனித்து ஆங்கில மொழி மூல ஆரம்ப பாடசாலைகளை ஆரம்பித்தமையுமேயாகும். அயர்லாந்தில் நடந்த வரலாற்றை ஒட்டியதாக உள்ள இந்தச் தனிச் சிங்களச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், தமிழ் பேசும் சமூகத்துக்கு என்ன நடக்கும்? நாங்கள் எண்ணிக்கையில் படிப்படியாகச் சுருங்குவோம். அது தமிழ் பேசும் மக்கள் முற்றாக அழிந்துபோகவே வழிசெய்யும்."

இச்சமயத்தில் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஆர்.சிங்கில்ரன் சல்மன் குறுக்கீடு செய்து, தான் ஒரு அயிரிஸ்காரர் என்றும், ஆங்கிலம் சிறந்த மொழிதானே என்றும் சொன்னார். அதற்கு அமிர்தலிங்கம் அவர்கள் தமக்கே உரிய நையாண்டி மொழியில் பதில் கொடுத்தார்.

"உண்மையில் அவர் தேசியத்தை இழந்த அயிரிஸ்காரர். அவர் தன்னுடைய தாய் மொழிப்பற்றை அடியோடு மறந்தவர். அவருடைய வார்த்தைகள் எனக்கு மூதுரையில் வரும் ஒரு வாலறுந்த நரியின் கதையை ஞாபகப்படுத்துகிறது. அந்த வாலிழந்த நரி ஏனைய நரிகளும் வாலிழக்க வேண்டும் என்று பிரசாரித்தது. அது போலத்தான் கௌரவ அங்கத்தவருடைய பேச்சும் உள்ளது."

சட்டத்துறைக்குப் படிக்க விரும்பும் தமிழ் மாணவர்கள் சிங்களத்தில் சித்தி எய்தியிருக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் முன்வைப்பை எதிர்த்து வாதடிய முடிவில் அவர் சொன்னார்:

"திரு. சபாநாயகர் அவர்களே, நான் எனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். சிங்களம் படிக்க வேண்டும் என்ற கருத்தைத் தமிழர்கள் எதிர்க்கவில்லை. அவர்கள் சிங்களம் படிக்கத்



தயாராக இருக்கிறார்கள். சிங்களம் மட்டுமல்ல வேறும் மொழிகளையும் படிக்க ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் இன்றைய சந்தர்ப்பத்தில் - இன்றைய அரசியல் சூழ்நிலையில் சிங்களத்தை எங்களுடைய தொண்டைக்குள் திணிக்க முற்பட்டு நிற்கிறீர்கள். அதனையே எதிர்க்கின்றோம்."

"நாங்கள் இந்த நாட்டை நேசிப்பதனால், இந்த நாடு இரண்டு போராடும் பகை நாடுகளாகப் பிரியக் கூடாது என்று விரும்புகிறோம். எங்களுடைய கட்சி அதற்குத் தீர்வு வைத்திருக்கிறது. அதுதான் சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்துவது. அந்த வகை ஆட்சியிலே சிங்களவர்கள் தமிழர்களின் எஜமானாக இருப்பது தவிர்க்கப்படும். தமிழர்கள் தங்கள் பிரதேசத்தில் தம்மைத்தாமே ஆளுவார்கள். நாங்கள் இருபகுதியும் - இரண்டு தேசிய இனங்களும் ஐக்கியமாக சமபங்காளிகளாக முழுநாட்டின் சுபீட்சத்துக்காகவும் ஒன்று சேர்ந்து உழைக்கலாம்."

"இந்த நாட்டின் சிங்களப் பெரும்பான்மை தங்களுடைய மொழியையோ 'கலாச்சாரத்தையோ எம்மீது திணித்து தமிழ் பேசும் மக்களை அழிக்க முற்பட்டால் நாங்கள் இறுதி மூச்சுள்ளவரை போராடுவோம். வின்சன் சேர்சிலின் வார்த்தைகளில் சொல்வதானால் - 'கையேந்தி நிற்கின்ற அடிமைத்தனமான இனமாக வாழ்வதிலும் கண்ணீரையும் வியர்வையையும் இரத்தத்தையும் சிந்த நாம் ஆயத்தமாக இருக்கின்றோம்.' திரு. சபாநாயகர் அவர்களே இது விழித்தெழுந்த தமிழ் பேசும் சமுதாயத்தின், தமிழ் இளைஞர்களின் செய்தி. நன்றி."

அமிர்தலிங்கம் அவர்களது கன்னிப் பேச்சின் பொழுதும், சிங்கள மொழி சட்டமூல விவாதத்தின் பொழுதும் இரண்டு தமிழ்ப் பெரியார்கள் இளைஞராக இருந்த அமிர்தலிங்கம் அவர்களுக்கு இடையிடையே 'குறிப்புரை சொல்லி' உற்சாகம் கொடுத்தனர். ஒருவர் வவுனியா நாடாளுமன்ற சுயேட்சை உறுப்பினர் அடங்காத் தமிழர் என்று அழைக்கப்பட்ட முன்னாள் கணிதப் பேராசிரியர் சி.சுந்தரலிங்கம் அவர்கள். அடுத்தவர் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் 'அட்வகேற்' கோமான் கு.வன்னியசிங்கம் அவர்கள். 1956இல் வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினராகப்

பாராளுமன்றத்துள் புகுந்த கையோடு மணித்தியாலக் கணக்கில், நாட்கணக்கில் சபையை அவர் திணறடித்தார். அவருடைய வார்த்தைகள் எறிகணைகளாகப் புறப்பட்டன. 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று முக்கண்ணனை வாதுக்கழைத்த நக்கீரனைப் போலத் துணிந்து பெருந்தலைகளை எல்லாம் உருட்டத் தொடங்கினார். அவரின் தீரம் நிறைந்த வாதங்களை ஜீரணிக்க முடியாத சிங்கள சமூகம் விரைவிலேயே அவரைத் துட்டகாமினியின் கண்களால் பார்க்கத் தொடங்கியது. (கி.மு. 2ஆம் நூற்றாண்டில் அனுராதபுரத்தை 44 ஆண்டுகள் ஆண்ட தமிழ் மன்னன் எல்லாளனை முறியடிக்க இனவெறி கொண்டு தென் இலங்கையில் இருந்து படையோடு புறப்பட்ட சிங்கள அரசன்தான் துட்டகாமினி என்னும் காமினி அபய.)

அவருடைய ஆங்கில தமிழ்ப் புலமையும் வரலாற்று ஞானமும் பொதறிவும் துணிவும் ஞாபகசக்தியும் விவாதிக்கும் திறனும், அணிகளைக் கோர்த்து இலக்கிய நயம்படப் பேசும் ஆற்றலும் அவருக்குக் கைகொடுத்தன. உணர்ச்சிபடப் பேசுவதில் மட்டும் அல்லாமல் கிண்டலாகப் பேசுவதிலும், நக்கல் பண்ணுவதிலும், இரட்டைக் கருத்தில் பேசுவதிலும், தோலுரித்துக் காட்டுவதிலும் வல்லவராக இருந்தார். கதைகளைச் சொல்லித் தனது விவாதத்தை இரசனையோடு அற்புதமாக நகர்த்தும் ஆற்றல் பெற்றிருந்தார். புத்தி ஜீவிகள் அவரின் சொற்பொழிவு ஆற்றலைக் கண்டு மூக்கிலே விரலை வைத்து அதிசயித்தனர்.

தனிச் சிங்கள உத்தியோக மொழி விவாதத்தின் போது ஒரு கட்டத்தில் ஒரு சிங்கள உறுப்பினர் அமிர்தலிங்கம் அவர்களைப் பார்த்து "உனது தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பேன்" என்றார். உடனே "அதை மீண்டும் உன் மூஞ்சியில் துப்புவேன்" என்றார் அமிர்தலிங்கம் அவர்கள். அதனைக் கேட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிர்ச்சியில் அவரை உற்று நோக்கினர். 'திணிப்பேன்' என்று சொன்னவர் விறைத்துப்போயிருந்தார். இது ஒரு சின்ன ஆரம்பம் என்பதைச் சிங்கள அரசியல்வாதிகள் பின்னரே உணர்ந்தனர். அந்தத் தனிச் சிங்கள மொழி விவாதத்தில் கலந்துகொண்ட திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தமிழர்களைத் தனி அரசு கோரும் நிர்ப்பந்தத்துள் தள்ள வேண்டாம் என்று விண்ணப்பித்தார். சமசமாசக்



கட்சிப் பிரமுகர் கொல்வின் ஆர்.டி. சில்வா "இரண்டு மொழிகள் ஒரு அரசுக்கு அத்திபாரம். ஒரு மொழி இரண்டு அரசுக்கு அத்திபாரம்" என்று எச்சரித்தார். அந்த மசோதா பாராளுமன்றத்தில் யூன் 15ந் திகதி நிறைவேற்றப்பட்டுச் சட்டமாக்கப்பட்டது. 56 வாக்குகள் சாதகமாகவும் 29 வாக்குகள் எதிர்த்தும் அளிக்கப்பட்டன.

அன்றுதான் அவரது மூத்த மகன் காண்டீபன் பிறந்தார்.

# அதிகாரம் 9
# திருமலைப் பாதயாத்திரை

1956 யூலை 5 - 16வரை தமிழ் அரசுக் கட்சி நடாத்திய திருமலைப் பாதயாத்திரை தமிழ் மக்களின் இனவிடுதலைப் போராட்டத்தின் இன்னொரு பரிமாணமாகும். அப்பாத யாத்திரையில் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைவரை தொண்டர்களோடு ஒன்றாக நடந்து சென்ற ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் அமிர்தலிங்கம் அவர்கள் மட்டுமே. இது தமிழ் மக்களின் போராட்ட உணர்வுகள் வளர்ந்து செல்வதைச் சிங்கள அரசுக்கு எதிர்வு கூறிய ஒரு பாரிய விடுதலை முயற்சியாகும். அன்றைய காலகட்டத்தில் அது புரட்சியாகவே மக்களால் கருதப்பட்டது. மட்டக்களப்பின் தெற்கே உள்ள திருக்கோவிலில் இருந்து தொண்டர்கள் திருகோணமலைக்குக் கால்நடையாகச் செல்லவும் - வடக்கே யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் தொண்டர்கள் முல்லைத்தீவு திரியாய் வழியாகக் கால்நடையாகத் திருகோணமலை செல்லவும் - பாதயாத்திரையாகச் சென்ற தொண்டர்கள் திருகோணமலையில் ஒன்று கூடவும் - அங்கு ஒரு அதிமுக்கிய பிரகடனம் வெளியிடவும் திட்டமிடப் பட்டிருந்தது. பொன்னாலையில் அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் புறப்பட்ட பாதயாத்திரைத் தொண்டர்கள் யாழ் நகர் வந்து தீவுப் பகுதி, காங்கேசன்துறைப் பகுதிகளில் இருந்து வந்த பாதசாரிகளுடன் இணைந்து கண்டி வீதி வழியாகச் சென்று கைதடியில், கோப்பாயில் இருந்து வந்த தொண்டர்களோடு இணைந்து, கொடிகாமத்தில் பருத்தித்துறையிலிருந்து வி.வி.வேலுப்பிள்ளை அவர்கள் தலைமையில் வந்த தொண்டர்களுடன் இணைந்து பளை கிளிநொச்சி வழியாக

மான்குளம் அடைந்து அங்கிருந்து ஒட்டிசுட்டான் தண்ணீரூற்று முல்லைத்தீவு அலம்பில் தென்னைமரவாடி கொக்குத்தொடுவாய் கொக்கிளாய் திரியாய் புல்மோட்டை குச்சவெளி நிலாவெளி உப்பு வெளி வழியாகத் திருகோணமலையை அடைந்தார்கள். நடைபவனியில் சென்றவர்கள் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடிகளைத் தாங்கிய வண்ணம்,

"திருமலைக்குச் செல்லுவோம்
சிறுமை அடிமை வெல்லுவோம்"

என்று ஆரம்பிக்கும் பண்டிதர் இளமுருகனாரின் திருமலை யாத்திரைப் பாடலை இசைத்தபடி சென்றனர்.

வழிநெடுகிலும் மக்கள் கரைகடந்த மகிழ்ச்சியிலும் உணர்ச்சியிலும் காணப்பட்டனர். பந்தல்கள் அமைத்து வரவேற்று தாகசாந்தி செய்தும் உணவளித்தும் மகிழ்ந்தனர். இலங்கை இந்தியப் பத்திரிகைகள் பாதயாத்திரைக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி கள் வெளியிட்டன. சிங்கள அரசைப் பாதயாத்திரை திகைக்க வைத்தது. வடக்கே யிருந்து சென்ற தொண்டர்கள் முல்லைத்தீவைக் கடந்ததும் விமானப்படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர்கள் மிகத் தாழப்பறந்து வெருட்டல் பண்ணின. அதனை யாரும் பொருட்படுத்த வில்லை. பாதயாத்திரிகர்களுக்குப் பாதுகாப்பளிக்க அனுப்பப்பட்டவை என்று அரசு கூறியது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தொண்டர்களோடு நடந்து திருகோணமலையை அடைந்த ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் மட்டுமே. அது அவர் தமிழர் உரிமைப் போராட்டத்தை எடுத்துச் செல்வதில் வைத்திருந்த பக்தி பூர்வமான ஈடுபாட்டைக் காட்டும். அவர் வாய்ச் சொல்லில் மட்டும் வல்லவரல்ல செயலிலும் அதனைச் செய்வார் என்பதைத் தமிழ் மக்களுக்கு உணர்த்தியது.

இந்தப் பாதயாத்திரை நிகழ்வு வடகிழக்கு தமிழர்கள் மத்தியில் - குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் - பேரினவாத சிங்கள அரசுக்கு எதிரான உணர்ச்சிகளை வளர்த்தது. அதாவது அரசியலைப் பற்றி அவ்வளவுக்கு அக்கறை கொள்ளாது இன்னும் ஒதுங்கி வாழ்ந்த தமிழ் சமூகத்தைத் துடித்து எழச் செய்தது.



கிழக்கிலங்கையின் பாதயாத்திரைத் தொண்டர்கள் தென் அந்தத்தில் உள்ள புகழ் பூத்த தமிழ்க் கிராமமான திருக்கோவிலில் இருந்து அறப்போர்த் தலைவர் அரியநாயகம், தம்பிமுத்து ஆசிரியர் ஆகியோர் தலைமையில் புறப்பட்டது. கிழக்கு மாகாண பாதயாத்தி ரையை கு.வன்னியசிங்கம் பா.உ. அவர்கள் ஒழுங்கு படுத்தினார். திருக்கோவிலில் இருந்து புறப்பட்ட தொண்டர்கள் அக்கரைப்பற்று ஒலுவில் காரைதீவு கல்முனை களுவான்சிக்குடி ஆரயம்பதி யூடாக மட்டக்களப்பை அடைந்தனர். அங்கிருந்து செ. இராசதுரை பா.உ. அவர்கள் தலைமையில் புறப்பட்ட தொண்டர் படையில் 10 வயதுச் சிறுமி திருமலை ராணியும் கலந்து கொண்டமை மக்கள் மத்தியில் போராட்ட உணர்ச்சியைத் துடிக்கச் செய்தது. அந்தத் தொண்டர்கள் வாழைச்சேனை கற்குடா பனிச்சங்கேணி வெருகல் கிளிவெட்டி மூதூர் வழியாகத் திருகோணமலையை அடைந்தனர். வடக்கிலும் தெற்கிலும் இருந்து வந்த பாதயாத்திரைத் தொண்டர்கள் திருகோணமலையில் மடத்தடியில் சந்தித்தனர். அந்தப் பாத ஜாத்திரை மொத்தம் பத்து நாட்கள் எடுத்தது.

மகாநாட்டின் மூன்றாவது நாள் பிரமாண்டமான ஒரு கூட்டம் திருகோணமலை முற்ற வெளியில் கட்சியின் புதிய தலைவர் கு.வன்னியசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்த மகாநாட்டில் 4-அம்சத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது:

1 சமஷ்டி அரசமைப்புக்குள் அடங்கிய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிவழிச் சுதந்திர அரசுகள் அமைக்க வேண்டும்.

2. தமிழ் மொழியை அதற்குரிய பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும். சிங்களத்துக்குரிய சமத்துவ உரிமைகளுடன் கூடிய உத்தியோக மொழியாக அமைய வேண்டும்.

3 தோட்ட மாவட்டங்களில் வாழும் தொழிலாளர்களின் பறிக்கப்பட்ட பிரஜா உரிமை, வாக்குரிமை என்பன மீள வழங்கப்படவேண்டும்.

4 பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் கொள்கையை உடனடியாக நிறுத்த வேண்டும்.

அந்தப் பிரகடனம் அரசாங்கத்துக்கு ஒரு காலக்கெடு கொடுத்தது. 'தமிழ் பேசும் மக்களது வடகிழக்குத் தாயகத்தில் தன்னுரிமை கொண்ட பிரதேச சுயாட்சி அரசை அரசாங்கம் 1957 ஆகஸ்ட் 20ந் திகதிக்கு முன்னர் நிறுவாவிட்டால், தமது இலட்சியத்தை அடைவதற்காகக் கட்சி சாத்வீகப் போராட்டத்தை மேற்கொள்ளும்' என்று அப்பிரகடனம் கூறியது. அக்கூட்டத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் அப்பிரகடனத்தை வலியுறுத்தி நிகழ்த்திய உரை மக்களை உணர்ச்சி கொள்ளச் செய்தது. விடுதலைப் போராட்டத்தின் எதிர்கால நட்சத்திரமாக அவர் மக்கள் மனதில் பதிவாகினார்.

# அதிகாரம் 10
# இங்கிலாந்தில் அமிர்தலிங்கனார்

1957 அமிர்தலிங்கம் அவர்கள் ஈழத் தமிழர் பிரச்சினையை உலகமயப்படுத்த வேண்டிய அவசியத்தை ஆரம்பத்திலேயே உணர்ந்திருந்தார். உலக பாராளுமன்றங்களுக்கு இடையிலான மகாநாட்டில் கலந்து கொள்ள இங்கிலாந்து செல்ல ஒரு வாய்ப்புக்கிட்டியது. அதுவே அமிர்தலிங்கம் அவர்களது முதலாவது வெளிநாட்டுப் பிரயாணம். அவர் அந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொண்டார். இங்கிலாந்தில் இருந்து திரும்பி வந்த பின்னர் யாழ். அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசும் பொழுது,

"எனது இங்கிலாந்துப் பயணம் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை மிகவும் பயன் தந்த ஒரு பயணமாகும். நான் அந்த மகாநாட்டிலே இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை அவர்கள் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். எனது பேச்சு முடிவில் அங்கு வருகை தந்த பல பிரதிநிதிகள் என்னை அணுகி தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை மேலும் தெரிந்து கொண்டார்கள்."

அமிர்தலிங்கம் அவர்கள் எங்கு சென்றாலும் தமிழர் பிரச்சினையைப் பிரசாரப்படுத்துவது அவரது ஆரம்பகாலத்தில்



தொடங்கிய ஒரு முயற்சியாகும். அவர் தனது பட்டப் படிப்புக்கு ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்தவர். ஆங்கிலத்தில் சொற்பொழி வாற்றும் பொழுது அல்லது விவாதிக்கும் பொழுது வார்த்தைகள் சோவென அள்ளுப்பட்டு வந்து கேட்போரைப் பற்றி வைத்திருக்கும். அவரது முயற்சிகளின் பல வெற்றிகளுக்கு அவரது ஆங்கிலப் புலமையே காரணம்.

உலகப் பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றிய உரை, அந்த மகாநாட்டிற்குச் சென்ற சிங்களப் பிரதிநிதிகளின் இதயத்தைத் தைத்தது. அதுதான் அவரது வெளியுலக உறவின் ஆரம்பம் என்பதனையும், அது எதிர்காலத்தில் வளர்ந்து ஆலவிருட்சமாக உலகம் முழுவதும் பரவப்போவதையும் அவர்கள் உணரவில்லை. எனினும் அவர்கள் எண்ணங்களில் நஞ்சு அரும்பிவிட்டது என்பதனை, லண்டனிலிருந்து கொழும்பு திரும்பிய பின்னர் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்று விளம்பரப்படுத்தியது.

அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் பேசும் மக்கள் பிரச்சினைகளில் காட்டும் அக்கறை உதவி அமைச்சர் எம்.பி.டி சொய்சாவை ஆத்திரம் அடையச் செய்தது. எனவே அமிர்தலிங்கம் அவர்களை ஒரு தீவிரவாதி என்றும், யாழ்ப்பாணத்தில் வாழும் சிங்களவரை வெளியே துரத்த முயற்சிக்கிறார் என்றும் பாராளுமன்றத்தில் கண்டனக் குரல் எழுப்பினார். அதற்கு அமிர்தலிங்கம் அவர்கள் பின்வருமாறு விடை பகர்ந்தார்:

"எங்களுக்குச் சிங்கள மக்கள்மீது எந்தவித குரோதமும் இல்லை. நாங்கள் எதிர்ப்பதெல்லாம் மகாஜன எக்சத் பெரமுனவினால் கட்டவிழ்த்து விடப்படும் இனக்குரோத சக்திகளையே. தமிழ் அரசுக் கட்சி சிங்களவர்கள் தமிழ் பிரதேசங்களில் வாழக்கூடாது என்று ஒருபொழுதும் கூச்சலிட்டதில்லை. கட்சி எதை எதிர்க்கிற தென்றால் திட்டமிட்டுத் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் காலத்துக்குக் காலம் நடக்கும் சிங்களக் குடியேற்றங்களையே."

கொழும்புப் பாராளுமன்றத்து சிங்கள உறுப்பினர்களின் தொடர்ந்த இம்சைக்கு இலக்கான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் அமிர்தலிங்கம் அவர்கள் மட்டுமே. வேறு எந்தத் தமிழ் உறுப்பினரையும் பேசும்பொழுது அவர்கள் தொடர்ந்து குறுக்கீடு செய்து இம்சைப்

படுத்தியதில்லை. ஏனெனில் ஏனையவர்கள் வாங்கிக்கட்ட நேரிடும் என்பதற்காக அடக்கி ஒடுக்கி வாசித்தார்கள். சிங்கள புத்திஜீவிகள் அமிர்தலிங்கம் அவர்களின் வல்லமையை மனவுறுதியை விடுதலைமீதுள்ள வேட்கையை நன்கு உணர்ந்திருந்தனர். அவர் எப்படியும் தனது நோக்கத்தை நிறைவேற்றி விடுவார் என்று அஞ்சினார்கள். அவர்கள் அஞ்சியது முற்றிலும் சரி என்பது ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் இந்திய லோக சபையில் 1983 இனக் கலவரத்தை "இன அழிப்பு" என்று கண்டனம் செய்தமையும், 1987இல் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கு எழுதிய 'பரம இரகசியக் கடிதமும்', அவர் 'யாழ்ப்பாணம் வீழ்ச்சி அடையக் கூடாது' என்று இலங்கைக்கான இந்திய தூதுவர் தீக்சித் மூலம் அனுப்பிய வாய்மொழிச் செய்தியும் உறுதிப்படுத்தின.

# அதிகாரம் 11
# பண்டா செல்வா ஒப்பந்தம்

1957 திருகோணமலைப் பிரகடனத்தை அடுத்து வடகிழக்கில் அரசுக்கு எதிரான உணர்ச்சி கொதித்தது. மந்திரிகள் வடகிழக்கிற்கு வருவது சங்கடமாகியது. பெப்புருவரி 4ந் திகதி நடந்த சுதந்திரதினத்தன்று கடைகளை அடைத்தும் கறுப்புக் கொடிகள் பறக்கவிட்டும் எதிர்ப்புக் காட்டப்பட்டது. கிழக்கு மாகாணம் சென்ற கல்வி அமைச்சர் டபிள்யூ. தகநாயக்காவுக்கு மருதமுனையில் மிதியடி வீசப்பட்டது. மன்னார் சென்ற நிதி அமைச்சர் ஸ்டான்லி சொய்சாவுக்கு பலத்த எதிர்ப்புக் காட்டப்பட்டது. தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் திரட்டப்படுவதையும், மக்கள் உணர்ச்சிப் புயலாக உருவாகுவதையும் அவதானித்த பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தந்தை செல்வநாயகம் அவர்களிடம் தூது அனுப்பி அவரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்.

அதனையடுத்து தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 1957 யூலை 26ந் திகதி பண்டா-செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டது. பிரதேச சபைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் செய்யப்பட்ட



ஒப்பந்தமாகும். வடமாகாணம் ஒரு பிரதேசமாகவும், கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேசங்களாகவும் பிரிக்கப்படும். குறித்த மாகாணங்களின் எல்லைகளுக்கு அப்பால் உள்ள இரண்டு அல்லது மூன்று பிரதேசங்கள் விரும்பினால் ஒன்றாக இணையவும் வழிசெய்யப்பட்டது. பிரதேச சபை உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்படுவார்கள். இந்தச் சபைகளுக்கு அரசாங்கம் அதிகாரங் களைப் பரவுதல் செய்யும். எந்த எந்த அதிகாரங்கள் பிரதேச சபைகள ிடம் கையளிக்க வேண்டும் என்பதும் வரையறை செய்யப்பட்டது. அதாவது விவசாயம், கூட்டுறவு, காணி-காணி அபிவிருத்தி, குடியேற்றம், கல்வி, கைத்தொழில், மீன்பிடி, வீடமைப்பு, சமூகசேவை, மின்சாரம், நீர்வளத் திட்டங்கள், போக்குவரத்துப் பாதைகள் என்னும் துறைகள் பிரதேச சபைகளிடம் விடப்படும். குடியேற்றத்தைப் பொறுத்தவரை குடியேற்றவாசிகளைத் தெரிவு செய்தல், குடியேற்றத் திட்டங்களில் வேலை செய்வோரைத் தெரிவு செய்தல் அதிகாரங்கள் பிரதேச சபைகளிடம் விடப்படும். பிரதேச சபைகளுக்கு வரி அறவிடும் உரிமையும் வெளிநாடுகளில் கடன் பெறும் உரிமையும் வழங்கப்படும்.

ஒப்பந்தத்தை அடுத்து மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மகாநாடு கூடியது. இரவு முழுவதும் நடந்த விசயாலோசனைக் குழுவில் அந்த ஒப்பந்தத்தின் போதாமை பற்றி அமிர்தலிங்கம் அவர்கள் காரசாரமாக விமர்சித்தார். தந்தை செல்வா, டாக்டர் நாகநாதன் ஆகியோரால் அவரைச் சமாதானப்படுத்த முடியவில்லை. தலைவர் வன்னியசிங்கம் அவர்கள் அமிர்தலிங்கம் அவர்களைக் கடுமையாகக் கண்டித்தார். எனினும் அமிர்தலிங்கம் அவர்களது எதிர்ப்புக் கிடையில் விசயாலோசனைக் குழு ஒப்பந்தத்தை ஏற்பதாக முடிவெடுத்தது.

அதே சமயம் மட்டக்களப்பு நகர மண்டபத்துக்கு வெளியே முற்றவெளியில் முன்னாள் கணிதப் பேராசிரியரும் வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. சி.சுந்தரலிங்கம் அவர்கள் திடீரெனத் தோன்றினார். ஒரு சிறு கூட்டம் அவரைச் சூழ்ந்தது. பண்டா-செல்வா ஒப்பந்தம் பற்றிக் குறைகூறி உரை நிகழ்த்தினார். 'மலை கொண்டு வருவதாகப் புறப்பட்டவர்கள் சுண்டெலி பிடித்து வந்துள்ளதாக' நையாண்டி செய்தார். அச்சமயம் இன்றும் கூட்டணி மத்திய செயற் குழுவில் சுறுசுறுப்பாக இயங்குகின்ற ஒரு உறுப்பினர் திரு. சுந்தரலிங்கத்திடம் கேள்விகள் எழுப்பினார். அவரை

சுந்தரலிங்கத்தின் ஆதரவாளர் ஒருவர் கத்தியால் குத்த முனைந்தார். அவரோடு கூடச் சென்ற ஆசிரியர் அவரைப் பாதுகாத்தார். அத்தோடு திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் ஒப்பந்தத்தை எதிர்த்துப் பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் வெளியிட்டது.

மாலையில் மட்டக்களப்பு முற்றவெளயில் தமிழ் அரசுக் கட்சியின் மகாநாட்டுப் பொதுக் கூட்டம் தொடங்கியது. தெற்கே திருக்கோவில் தொடக்கம் வடக்கே பனிச்சங்கேணிவரையான மக்கள் அங்கு பேரலையாகத் திரண்டிருந்தனர். யாழ்ப்பாணம், வவுனியா மன்னார் திருகோணமலைப் பகுதிகளிலிருந்தும் பெருமளவு ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் முதலாவதாகப் பேச அனுப்பப்பட்டவர் அமிர்தலிங்கம் அவர்களே. அவர் பண்டா-செல்வா ஒப்ந்தத்தை வரவேற்று அது ஒரு முதல்படி அதனைத் தமிழ் மக்கள் எற்க வேண்டும் என்று தனக்கே உரிய சிம்மக் குரலில் பேசினார். விசயாலோசனைக் குழுவில் அதிருப்தி தெரிவித்தவர் மேடையில் அதனை வரவேற்றுப் பேசினார். அதுதான் அமிர்தலிங்கம் அவர்களின் சிறப்பு. கட்சி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதின் பின்னர் அவர் பெரும்பான்மை முடிவை அப்படியே ஏற்றுக் கொண்டார். அது ஜனநாயக நடை முறைகளில் அவருக்கு இருந்த பெரு மதிப்பைக் காட்டுகிறது.

# அதிகாரம் 12
# சிங்கள ஸ்ரீ அழிப்புப் போராட்டம்

1958 ஸ்ரீ அழிப்புப் போராட்டம் அமிர்தலிங்கம் அவர்களை யாழ்ப்பாண மண்ணுக்குப் புதிய ஒரு கதாநாயகனாக விளம்பரம் செய்தது.

வாகனங்களின் எண்களின் முன்னர் CEY என்னும் ஆங்கில எழுத்தே இருந்தது. ஒரு நாள் அனுராதபுர போக்குவரத்துச் சேவையைச் சேர்ந்த் பஸ்வண்டி ஒன்று CEYக்குப் பதிலாக சிங்கள ஸ்ரீ இலக்கத் தகடுடன் யாழ் பஸ்வண்டி நிலையத்தை அடைந்தது. அதை அறிந்ததும் அமிர்தலிங்கம் அவர்கள் சில இளைஞர்களையும் அழைத்துச் சென்று அந்த இலக்கத் தகடுமீது தார் பூசி சிங்கள ஸ்ரீ எழுத்தை அழித்தார். அவர் அப்பொழுது வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர். ஒரு தினம் ஸ்ரீ அழிப்பில் ஈடுபட்ட வேளை காவல்துறையினர் அமிர்தலிங்கம் அவர்களைக் கைது செய்து ஜீப்பில் ஏற்றினர். உடன் வாலிப முன்னணியைச் சேர்ந்த கொக்குவில் 'தமிழன் பாசறை' அருணாசலம் ஜீப்பின் முன் சக்கரத்துக்குக் குறுக்கே படுத்து வழிவிட மறுத்தார். இப்பொழுது வட அமெரிக்காவில் பொஸ்ரன் நகரில் வாழும் ஸ்ரீதரன் பொலிஸ் ஜீப் 'பொனற்றில்' ஏறி நின்று உரையாற்றினார். அந்தத் திகில் மிக்க சம்பவங்கள் இளைஞர்கள் அண்ணல் அமிர்தலிங்கம் அவர்களை எவ்வுளவுக்கு நேசித்தார்கள் என்பதைக் காட்டும்.



ஸ்ரீ அழிப்புப் போராட்டம் தொடர்ந்தது. கடைகளில் உள்ள பெயர்ப் பலகைகளிலும், எல்லைக் கற்களிலும் காணப்பட்ட சிங்கள எழுத்துக்கள் எல்லாம் தார்பூசி அழிக்கப்பட்டன. அமிர்தலிங்கம் அவர்கள் ஆரம்பித்த அந்த ஸ்ரீ அழிப்புப் போராட்டம் மக்கள் போராட்டமாக மாறியது. அமிர்தலிங்கம் அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி ஆங்கில எழுத்துக்குப் பதிலாக தமிழ் எழுத்தோடு தொடங்கும் இலக்கத் தகடுகளுடன் மோட்டார் வாகனங்கள் யாழ்ப் பாண வீதிகளில் பவனி வந்தன. அதனை ஒரு புரட்சியாகவே சமூகம் கருதியது. கட்சியின் முன்னெடுப்பு இன்றியே அது ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் முதிய தலைவர்கள் அவரது செயலில் குற்றம் கண்ட போதிலும் தனது வாதத் திறமையால் அவர்களையும் தனது போராட்டத்துள் கொண்டு வந்தார். கட்சி அந்தப் போராட்டத்தை வடகிழக்கு முழுவதும் விஸ்தரித்தது. கட்சித் தலைவர்கள் தாம் முன்னே நின்று ஆதரவாளர்களை பின்னே வைத்துப் போராட்டத்தை நடத்தினர். அதுதான் தமிழரசுக் கட்சியின் குணச் சித்திரம்.

இப்போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கைதாகினர். கைது செய்யப்பட்டவர்கள் நீதி மன்றங்களில் நிறுத்தப் பட்டனர். குற்றம் வித்திக்கப்பட்டது. குற்றத்தைச் செலுத்த மறுத்துச் சிறை சென்றனர். பாரர்ளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் சிறை சென்றனர். தந்தை செல்வா அவர்கள் மட்டக்களப்பில் கைதாகி குற்றப் பணம் செலுத்த மறுத்து 15 தினங்கள்

சிறையில் அடைக்கப்பட்டார். அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் செனேற்றர் ஜி.நல்லையா, ரி.சிறீதரன் ஆகியோர் யாழ் பஸ் நிலையத்தில் வைத்து சிங்கள ஸ்ரீ எழுத்துப் பொறித்த பஸ்வண்டியின் சிங்கள எழுத்தை அழித்துத் தமிழில் எழுதியபோது (ஏப்ரல் 19 ந் திகதி) கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். ஒக்டேபா 15 ந் திகதி நீதிபதி பி.சி.எஸ். டேவிட் 25 ரூபா அபராதம் விதித்தார். அபராதம் செலுத்த மறுத்ததால் யாழ்ப்பாணச் சிறையில் 15 தினங்கள் அடைக்கப்பட்டார்கள். அதுவே அமிர்தலிங்கம் அவர்களின் முதலாவது சிறைப் பிரவேசம். சிறையிலிருந்து மீண்ட அமிர்தலிங்கம் அவர்களுக்கு யாழ் முற்றவெளியில் உள்ள முனியப்பர் கோவிலின் முன் மக்கள் வரவேற்பு வைத்தனர். அதாவது சரியாகச் சொல்வதானால் மக்கள் அவரைத் தமது தலைவராக உயர்த்தும் கைங்கரியத்தின் ஒரு ஆரம்ப காட்சி என்றே அதனை வர்ணிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் சிங்கள பேரின வாதிகளுக்கு எதிராகப் பின்னர் செய்த போராட்டங்களுக்கு எல்லாம் ஆரம்பப் படியாகவே ஸ்ரீ அழிப்புப் போராட்டம் அமைந்தது. அத்தோடு தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் தொடங்கிய ஸ்ரீ அழிப்புப் போராட்டமே தமிழரசுக் கட்சியின் எதிர்காலப் போக்கைத் தீர்மானித்தது. அதுவரை காலமும் நேரடிப் போராட்டம் பற்றிச் சிந்திக்காத கட்சியை அமிர்தலிங்கம் அவர்களின் போராட்டம் சிந்திக்கச் செய்தது. திட்டங்களை முன் வைத்தால் மக்கள் போராட்டத்துக்கு ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று பச்சைக் கொடி காட்டியது அவரது ஸ்ரீ அழிப்புப் போராட்டம். அதன் விளைவாகக் கட்சி ஆரம்பித்த போராட்டமே சத்தியாக்கிரகம். அவற்றில் மக்கள் சுதந்திர தாகத்தோடு பல்லாயிரக் கணக்கில் கலந்து கொண்டனர்.

இன்னும் ஒன்றை ஈழத் தமிழ் மக்களுக்கு அழுத்தமாக ஸ்ரீ அழிப்புப் போராட்டம் வெளிச்சம் இட்டது. இன விடுதலைப் போராட்ட முன்னணியின் முதல் மனிதனாகத் துணிவோடு நின்று போராட்டத்தை வழிநடத்த வல்ல பண்ணாகம் பரிசளித்த சிந்தனைத் திறனும், திட்டமிடல் வல்லமையும் நிறைந்த கதாநாயகனாக அமிர்தலிங்கம் அவர்கள் தலைவர்களுக்கும் மக்களுக்கும் தோற்றம் அளித்தார். அமிர்தலிங்கம் அவர்கள் வடகிழக்குத் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கி அவர்களுடைய இன்னல்களைக் களையும் பொறுப்பைத் தனது தலையில் சுமக்கப் போகிறார் என்பதையும், மக்கள் அவரின் பின்னே செல்ல ஆயத்தமாகி விட்டார்கள் என்பதையும் ஸ்ரீ அழிப்புப் போராட்டம் மறைமுகமாகச் சுட்டியது.



1958 இச்சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி, பண்டா-செல்வா ஒப்பந்தம் நாட்டைப் பிரிக்கப் போவதாகக் குற்றஞ்சாட்டிச் சிங்கள மக்களிடையே துவேசத்தைப் பரப்பியது. 'முதலடி' (First Step) என்று தலைப்பிட்ட பலவாயிரம் பிரசுரங்களை விநியோகித்து -- வடகிழக்கு மகாணங்களில் பலவாயிரம் சதுரமைல் பூமியை பண்டாரநாயக்கா சிங்களவருக்கு இல்லாமல் தமிழருக்கு விற்று விட்டதாகப் பிரசாரம் செய்தது. அந்த இனக்குரோத நடவடிக்கைகளுக்கு ஜே.ஆர்.ஜயவர்தன என்ற மரத்த இதய மனிதன் தலைமை தாங்கினார். அத்தோடு அவர் எதிர்ப்பைக் காட்டக் கண்டிக்கு அரை நிர்வாணமாகப் பாதயாத்திரை போக முயன்றார். கம்பஹாவுக்கு அப்பால் போக முடியவில்லை. 'எக்சத் பிக்கு பெரமுனையின்' தலைமையில் 200 பிக்குமார்கள் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்துப் பிரதமரின் இல்லத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனால் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க 1958 ஏப்பிரல் மாதம் அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்.

ஜே.ஆர்.ஜயவர்த்தனவே முதன் முதலில் 1958இல் தமிழர்களுக்கு எதிராகச் சிங்கள மக்களைத் துவேசம் கொள்ளச் செய்தவர். அதுவரை சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சகோதரர்களாகவே வாழ்ந்தவர்கள். அதற்கு அவர்களது கலாச்சாரம் சமயம் மொழி என்பன பின்னிப்பிணைந்து இருந்தமையே காரணம். வரலாற்றில் சில சந்தர்ப்பங்களில் தமிழ் மன்னர்களையும், அரச சபையில் தமிழ் அறிஞர்களையும் ஏற்று தமிழர்களோடு ஐக்கியமாக வாழ்ந்த சிங்கள சமூகத்துக்கு நஞ்சூட்டியது ஜே.ஆர்.ஜயவர்த்தனவே. 1958 கலவரத்தை தூண்டியவரும் இந்த மனிதரே. அன்று அந்தச் செட்டியார் சிங்கள மக்களைத் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டாது விட்டிருந்தால் தமிழர் பிரச்சினை அப்பொழுதே திரு. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவினால் தீர்க்கப்பட்டிருக்கும். தொடர்ந்து தமிழர்களுக்கு எதிராகச் சிங்களவர்களை ஏவி இருபகுதியையும் முட்டி மோதவைத்து முழு இலங்கைக்கும் கேடு விளைவித்த, இந்த ஜே.ஆர். என்ற மனிதர் யார்? உண்மையில் பரம்பரைப் பௌத்தரா? உண்மையில்

தூய சிங்களவரா? இவரின் பூட்டனார் 19ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலிருந்து வந்து இலங்கையில் குடியேறிய தமிழர். செட்டியார் வம்சத்தைச் சேர்ந்தவர். இந்த மனிதர் 1940ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபை அரசியலில் புகுந்தார். அதன் பின்னர் 1943இல் சட்டசபை உறுப்பினராகத் தெரிவானார். பின்னர் பாராளுமன்றத்துள் நுழைந்தார். பண்டாரநாயக்க குடும்பமும் சேனநாயக்க குடும்பமும் அமர்ந்துள்ள அரியாசனத்தில் தானும் ஏறிக் குந்துவதற்காக - இரண்டு நட்பாக வாழ்ந்த இனங்களை மோதவிட்ட இந்த நரிப் புத்தி படைத்த மனிதன் - முழு நாட்டையும் பேரழிவிற்கு உட்படுத்திய ஒரு மனிதகுல விரோதி. மனிதநேயமற்ற கல்நெஞ்சன். ஒரு குட்டி இலங்கைக்குள் கிட்டத்தட்ட 65.000 மக்கள் மரணிக்கவும், ஆயிரக்கணக்கனா மக்கள் அங்கவீனர்களாகவும், இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாகவும், இலங்கையில் நான்கு தசாப்தங்களுக்கு மேல் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இரத்த வெள்ளத்தில் உழன்று கொடுந் துயர் அனுபவிக்கவும் இந்த மனிதகுல விரோதியின் அரியாசனம் ஏறும் பதவி மோகமும் அதிகார வெறியுமே மூலகாரணம்.

ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆரம்பித்து வைத்த நச்சு முன்னெடுப்பு அந்த மனிதனோடு மரணித்துவிடவில்லை. அதனையே ஜனாதிபதிகள் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், ரணசிங்க பிரேமதாசாவும் முன்னெடுத்தார்கள். இப்பொழுது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், ஜே.வி.பி. கட்சியினரும் அந்த இனவிரோத முயற்சிகளுக்குத் தலைமை தாங்குகின்றனர். சிங்களத் தலைவர்கள் ஏன் இப்படியான இனவிரோத செயல்களில் ஈடுபடுகிறார்கள்? பதில் மிகவும் எளிதானது. அரியாசனத்தில் ஏறுவதற்குத் தமிழர்களைப் பலிவைப்பதைத் தவிர அவர்களது இனிப்புப்பணியாரப் புத்திக்கு வேறு எதுவும் எட்டுவதாக இல்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் சிங்களப் பொதுமக்கள் புத்திக்கு இவர்களது அரியாசனம் ஏறும் திருவிளையாடலின் நோக்கம் பிடிபடாமல் இருப்பதே. கழுதையென்ன குதிரைக் குட்டியா போடும்?



# அதிகாரம் 13
# வங்கக் கடல் கடந்து உதவிக் கரம்

1958 அமிர்தலிங்கம் அவர்கள் தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கு அர்ப்பணித்தவர். அதனை சுட்டிச் சொல்ல, துணைவி மங்கையர்க்கரசி அம்மையாரையும் இழுத்துக்கொண்டு வங்கக்கடலைத் தாண்டிய கதையைச் சொல்லாம்.

பௌத்த குருமார், பேரின தீவிரவாதிகள் ஆகியோரின் எதிர்ப்புக் காரணமாக பண்டா-செல்வா ஒப்பந்தத்தைப் பிரதமர் பண்டாரநாயக்கா தூக்கி வீசினார். அதனை அடுத்துத் தென் இலங்கையில் இனக்கலவரம் வெடித்தது. இந்தக் கலவரத்தின் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியே இருந்தது. மகாதேசாதிபதி ஒலிவர் குணதிலக்க ஜே.ஆர்.ஜயவர்த்தனவே கலவரத்தின் பின்னணியில் இருந்ததாகக் குறிப்பிட்டார். மே 25ந் திகதி பொலநறுவையில் வைத்து மட்டக்களப்புப் புகையிரதம் புரட்டப்பட்டது. அதில் பிரயாணம் செய்த தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். தப்பியவர்கள் ஓடிச் சென்று அரச கரும்புத்தோட்டத்துள் ஒளித்தார்கள். பொலனறுவையில் உள்ள தமிழர்களையும் அடித்து வெருட்டிச் சென்று கரும்புத்தோட்டத்துள் அடைத்தனர். அவர்கள் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓவென்று பரந்த கரும்புத் தோட்டத்தின் மத்திக்குள் புகுந்து ஒளித்தனர். சிங்களப் பாவிகள் கரும்புத்தோட்டத்தைச் சுற்றிப் பெற்றோல் ஊற்றித் தீமூட்டி அவர்களைத் துடிக்கத் துடிக்கக் கொன்றனர். மலையகத்தில் இருந்து மட்டக்களப்பை நோக்கி ஓடிவந்த தமிழர்கள், எல்லையில் உள்ள மகா ஓயாக் காட்டுக்குள் ஒழித்தனர். அங்கு சென்ற சிங்கள வெறியர்கள் பெற்றார் கண்முன்னே குழந்தைகளைக் கொதிக்கும் தார்ப் பீப்பாக்களுள் வீசினர். தாயின் முன்னே மகளைக் கற்பழித்தனர். தந்தையின் கண்களின் எதிரே மைந்தர்களின் தலைகளை வெட்டி எறிந்தனர். தென் இலங்கையில் 500 தமிழ்க் குடும்பங்கள் வீடுகளை விட்டு அடித்துத் துரத்தப்பட்டன. இலங்கை முழுவதும் மொத்தம் 1000க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். தமிழரசுக் கட்சி, அதன் வாரப் பத்திரிகையான சுதந்திரன் என்பன தடை செய்யப்பட்டன.

1958 மே - தென் இலங்கையில் நடந்த இனக்கலவரத்தை அடுத்து நாடு முழுவதும் இரவு நேர ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப் பட்டிருந்தது. யாழ்ப்பாணத்திலும் பழிவாங்கும் உணர்ச்சி கொதித்தது. யாழ்ப்பாணம் ஆரிய குளச்சந்திக்கு அருகாமையில் இருந்த பௌத்த கோவில் இடிக்கப்பட்டது. வடக்கிற்கும் கிழக்கிற்குமான போக்குவரத துச் சேவைகள் துண்டிக்கப் பட்டிருந்தன. அப்பொழுது மட்டக்களப்பில் இருந்து செல்லையா இராசதுரை பா.உ. அவர்கள் தமிழ் அரசுக் கட்சியிடம் தந்தி மூலம் "என்னால் சமாளிக்க முடியவில்லை. யாராவது தலைவர்கள் உடனடியாக வாருங்கள்" என்று உதவி கேட்டார். மூத்த தலைவர்கள் பிரயாண வசதி யின்மையை எண்ணி இயலாமையில் வாடினர். அவ்வேளை கட்சியின் அப்பணியைப் புனித பணியாகக் கருதி அமிர்தலிங்கம் அவர்கள் மனமுவந்து ஏற்றார். அவர் தனது துணைவி மங்கையர்க்கரசியாரையும் அழைத்துக் கொண்டு இயந்திரப் படகு மூலம் மட்டக்களப்பை அடைந்த வரலாறு அவரின் துணிவை மட்டும் அல்ல அவர் மட்டக்களப்பு மக்கள் மீது வைத்திருந்த நெருக்கமான பற்றையும் பாசத்தையும் காட்டுகிறது. தமிழரசுக் கட்சியில் கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம் அவர்களும் பண்ணாகத் திருப்பூமியின் மைந்தன் அ.அமிர்தலிங்கம் அவர்களும் பாலும் தேனும் வழிந்தோடும் மட்டகளப்புமீது விசேட பாசம் செலுத்தியவர்களாகும். ஆபத்தாண்டவர்கள் போல மட்டக்களப்புக்கு ஓடிச்சென்று அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டவர்கள். அமிர்தலிங்கம் அவர்கள் மட்டக்களப்பிற்குச் செல்வதற்கு வீரபூமி வல்லுவெட்டித்துறை வைரமாளிகை உரிமையாளர் 'இளையாச்சி' விசைப் பட்கையும் மாலுமிகளையும் கொடுத்து உதவினார். கொந்த ளிக்கும் வங்காள விரிகுடாக் கடலை ஊடறுத்த விசைப் படகில் அவருக்குப் பாதுகாவலனாக கொக்குவில் 'தமிழன் பாசறையைச்' சேர்ந்த அருணாசலம் சென்றார். அதனைத் தொடர்ந்து நடந்த சம்பவங் களை 'வரலாற்றின் மனிதன்' பவள விழா மலரில் திரு.ஆவரங்கால் சின்னத்துரை அவர்கள் கூறியிருப்பவை மாற்றமின்றி முன்வைக்கப்படுகிறது:

"திரு. அமிர்தலிங்கம் இளைஞர் படை ஒன்றுடன் மட்டக்களப்புக்குக் கடல் வழியாகச் செல்வதாக மகாதேசாதிபதி ஒலிவர் குணதிலகவுக்கு யாழ்ப்பாணத்து இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதற்கு உரிய சம்பிரதாயங்களை மீறி - அவர் மட்டக்களப்பை அடைந்ததும் அவரையும் ஏனையவர்களையும் கைது செய்யும்படி மகாதேசாதிபதி ஆணை பிறப்பித்திருந்தார். 40 மணித்தியாலங்கள் பிரயாணம் செய்து நள்ளிரவு மட்டக்களப்பு வாவியை வந்தடைந்த இயந்திரப் படகு இரவு வேளை ஊரடங்குச் சட்டம் காரணமாக வாவியிலேயே தரித்து நின்றது. இராணுவம் அமிர்தலிங்கம் அவர்களையும் ஏனையவர்களையும் கைது செய்ய நகர் முழுவதும் பரந்து காவல் புரிந்தது. விடிந்து மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்துக்கு எதிர்ப் பக்கம் உள்ள வாவி இறங்குதுறையில் அவர்கள் கால் மிதித்ததும் அவர்களைப் பொலிஸ் கைது செய்ய ஆயத்தமாக நின்றது. ஒரு பெரும் மக்கள் கூட்டம் அங்கு திரண்டு நின்றது. பாதுகாவலனாகச் சென்ற அருணாசலம் கையசைத்துப் பார்வையாளர் மத்தியில் நின்ற ஒருவரை அழைத்து; அமிர்தலிங்கம் அவர்களின் பாது காப்பிற்காகக் கொண்டு சென்ற - புதினத்தாளில் சுற்றிய கைத்துப்பாக்கியையும் ரவைகளையும் கொடுத்தார். பொலிசார் கைது செய்வதில் ஏற்பட்ட பிச்சுப் பிடுங்கலில் கைத் துப்பாக்கி கைமாறியதைக் கவனிக்கவில்லை.

கொக்குவில் 'தமிழன் பாசறை' அருணாசலம் கொடுத்த அந்தப் 'பார்சலை' வாங்கிய நபரை - சுமார் மூன்று தசாப்தங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தின் அதிசிறந்த அதிபர் என்று 'Saturday Review' பத்திரிகை அதன் ஆசிரிய தலையங்கத்தில் போற்றி இருந்தது. இராணுவ சிப்பாய்கள் மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் கழுகுக் கண்களால் போவோர் வருவோர்களைத் துருவிக்கொண்டு நின்றனர். பொதியை வாங்கியவர் அவர்களைக் கடந்து சென்று பஸ் நிலையத்தின் எதிரே அமைந்த திருமலை ராணி வீட்டில் வைத்து அதனைத் திறந்து பார்த்தார். அதற்கிடையில் அமிர்தலிங்கம் தம்பதியினரையும் அருணாசலத்தையும் ஏனையவர்களையும் பொலிசார் கைது செய்து கொண்டு போய்விட்டார்கள். பொலிஸ் நிலையத்தில் இருந்தபடியே மாகா தேசாதிபதியுடன் திரு. அமிர்தலிங்கம் தொடர்பு கொண்டார். 'மட்டக்களப்பைப் பிடிக்கப் போபவன் தனது மனைவியையும் அழைத்துப் பேவானா?' என்று எதிர்வாதம் புரிந்தார். மகாதேசாதிபதி மன்னிப்புக் கேட்டதோடு கொழும்பு செல்லவும் விமானம் ஒழுங்கு

செய்து கொடுத்தார். வரப்போகும் ஆபத்தை உணராமலே அவர் மாஹா ஓயாக் காட்டுப் பகுதியிலும் பொலனறுவைக் கரும்புத்தோட்டங்களிலும் தமிழர்கள் உயிரோடு எரிக்கப்பட்ட செய்திகளையும், கொதிக்கும் தார் பீப்பாக்களுள் குழந்தைகள் பெற்றார் முன்னிலையில் வீசப்பட்ட கொடுமைகளையும் பாராளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரும் அவசரத்தோடு புறப்பட்டார். ஆனால் கொழும்பு சென்றதும் அவர் கைது செய்யப்பட்டுத் திருவாளர்கள் கு.வன்னிசிங்கம் பா.உ. ந.இ. இராஜவரோதயம் பா.உ. வி.என்.நவரத்தினம் பா.உ. செனட்டர் ஜி. நல்லையா ஆகியோருடன் கொழும்பு புல்லர்ஸ் வீதியில் உள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு உரிய வாசஸ்தலத்தில் 4 மாதங்கள் காவலில் வைக்கப்பட்டார்."

# அதிகாரம் 14
# சிறுபான்மைத் தமிழர்

1960 ஜனவரி 21. தமிழரசுக் கட்சியின் 7வது மாநில மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடை பெற்றது. பட்டிருப்பு பா.உ. திரு.எஸ்.எம். இராசமாணிக்கம் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இம்மகாநாட்டில் நிறைவேற்றப் பட்ட 4 தீர்மானங்களில் சிறுபான்மைத் தமிழர், அரசியல் தொடர்பான தீர்மானங்கள் இரண்டும் முக்கியமானவைகளாகும். சிறுபான்மை மக்கள் தொடர்பான தீர்மானத்தைத் தயாரிப்பதில் அமிர்தலிங்கம் அவர்களே முக்கிய பங்கு வகித்தார். அவருடன் நெருங்கிப் பழகிய சிறுமான்மைத் தமிழர்கள் தங்களது கொண்டாட்ட வைபவங்களுக்கு அவரை அழைப்பது உண்டு. அந்தளவுக்கு அவர்களுடன் நெருங்கிப் பழகிய அவர், நொந்து வாழ்ந்த சிறுபான்மை மக்கள் விடயத்தில் மிகவும் இரக்கமுடையவராகக் காணப்பட்டார். அவர்களுக்குக் கைகொடுத்துத் தூக்கிவிடத் துடித்தார். அந்த மாநில மகாநாட்டிலே சிறுபான்மை மக்களின் இடர்களை முற்றாக நீக்க வேண்டும் என்ற பிரேரணையை ஒட்டிப் பேசிய பொழுது அவர் கூறினார்:



"நாங்கள் பெரும்பாலான கோவில்களையும் உணவகங்களையும் சிறுபான்மை மக்களுக்குத் திறந்துள்ளோம். அது சாதிப் பிரச்சினை யைத் தீர்க்காது. உயர் சாதியினரது உள்ளங்கள் இன்னும் விரிவடைய வேண்டும். சாதி என்ற நாமம் அடியோடு ஒழியவேண்டும்."

'இலட்சிய இதயங்களோடு' என்ற அவர் எழுதிய கட்டுரையில் சிறுபான்மைத் தமிழர் பற்றிய அவரது சிந்தனையைக் காண முடிகிறது. அது பற்றிய அவரின் சில வாசகங்கள்:

"தமிழ்ச் சமுதாயம் காலங்காலமாக ஊறிவிட்ட எத்தனையோ அநீதிகளைத் தன்னகத்தே சுமந்து நிற்கிறது. சுதந்திரப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமாயின் சமூக அநீதி என்ற சுமை தூக்கி வீசப்படவேண்டும்."

"அடிமைப்பட்ட ஆபிரிக்க சமூகங்களில் பிரபுத்துவ முறை உண்டு. பொருளாதார ஏற்றத்தாழ்வு உண்டு. ஆனால் இத்தனைக்கும் மேலாகப் பிறப்பினால் உயர்வு தாழ்வு பேசுகின்ற, - தொட்டால் தீட்டு என்று கூறுகின்ற, ஆண்டவன் சந்நிதியிலும் எட்ட நில் என்று தள்ளி வைக்கின்ற கொடுமை இந்தியாவிலும் இலங்கையிலுந்தான் உண்டு. நிறத் திமிர் வேற்று இனத்தவனை ஒதுக்கி வைக்கின்றது. ஆனால் தீண்டாமை தன்னினத்தவனையே தாழ்த்தி ஒதுக்குகின்றது. உலகெல்லாம் பரந்து வாழுகின்ற தமிழ் இனம் அடையும் சிறுமை அத்தனைக்கும் மூல காரணம் தீண்டாமைக் கொள்கையினால் எம்மினத்தில் ஒரு பகுதியினருக்கு நாம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இழைக்கும் கொடுமையின் மொத்த விளைவே என்பது எனது திடமான நம்பிக்கை. தந்தை செல்வாவின் தலைமையில் கடந்த 30 ஆண்டுகளாக இந்தக் கொடுமையின் கோரத்தைக் குறைத்து இருக்கின்றோம். ஆனால் அதை முற்றாகக் களைய வேண்டியது, சாதிப்பிரிவினையின் வேரையும் கிள்ளி எறிய வேண்டியது இளைஞர் சமுதாயத்தின் கடமையாகும்."

யாழ்ப்பாணத்தில் உள்ள தேநீர்க் கடைகளில் சாதி அடிப்படையில் பாரபட்சம் காட்டுவதை ஒழித்த பெருமை தமிழ் அரசுக் கட்சியின் திருவாளர்கள் கு.வன்னியசிங்கம், சு.நடராசா, அ.அமிர்தலிங்கம் ஆகியோருக்கு உண்டு. யாழ் நகர தேநீர்ச்சாலை உரிமையாளர்கள் அனைவரும் யாழ் நகரமண்டபத்துக்கு

அழைக்கப்பட்டு, சாதிபேதம் பாராட்டுவதை விடவேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் முதற்படியாக 1958ஆம் ஆண்டு நவம்பர் 24ந் திகதி தொடக்கம் ஒரு வாரம் தீண்டாமை ஒழிப்பு வாரமாக அனுட்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சாதி பற்றி மார்க்சியவாதிகள் நிரம்பப் பேசி சிறுகதைகளும் நாவல்களும் எழுதிய பொழுதிலும் அவர்கள் அதுவிடயமாகப் பின்தங்கிய சமூகத்தில் எதையாவது பெரிதாக நடைமுறையில் சாதித்ததாகப் பெருமைப்பட முடியாது. பிற்காலத்தில் சமூகத்தை ஓரளவு விழிப்படையச் செய்தனர். அவ்வளவுதான். தமிழரசுக் கட்சியே சமபந்தி போசனம் நடாத்தி சாதி ஒழிப்புத் துறையில் ஒரு திடீர்ப்பாய்ச்சல் செய்தது. அது யாழ்ப்பாணச் சமூகத்தைப் பொறுத்தளவில் ஒரு புரட்சியே. சிறுபான்மைத் தமிழர்களை அரசியல் வானில் அதி உயர்ந்த இடத்துக்கு உயர்த்தி வைத்தது. திரு. ஜி.நல்லையா அவர்களைச் செனட்டராக்கியது - 1957. பிற்காலத்தில் உடுப்பிட்டித் தொகுதியில், பலத்த எதிர்ப்புக்கு மத்தியில், திரு. இராசலிங்கம் அவர்களைப் பாராளுமன்றத் தேர்தலில் நிறுத்தி வெல்ல வைத்தது. 1981 மாவட்ட சபைத் தேர்தலில் திரு. இராசேந்திரனையும் திரு. நடேசுவையும் நிறுத்தி வெல்ல வைத்தது. எந்தக் கட்சியும் யாழ்ப்பாணத்தில் நினைத்துப் பார்க்க முடியாத வரலாற்றுச் சாதனை.

இன்னும் திரு. செல்லன் கந்தையன் அவர்களை யாழ் மாநகர சபையின் மேயராக்கியது - அதன் மூலம் அவரை யாழ் மண்ணின் தலைமகனாக்கியது. புதுக்கி அமைத்த யாழ் பொது நூலக நிலையத்தைத் திறக்கும் வாய்ப்பை அவருக்கு - தமிழர் விடுதலைக் கூட்டணி வழங்கியது. ஆனால் அவர் அதனைத் திறக்கும் வாய்ப்பை இழந்தார். "சிறுபான்மைத் தமிழ் மகனின் நாமம் வரலாற்றுப் பதிகல்லில் பொறிக்கப்படாமல் இருப்பதற்காகவே எனது உரிமையை விடுதலைப் புலிகள் தட்டிப் பறித்துள்ளார்கள்" என்று மேயர் திரு. செல்லன் கந்தையன் அவர்கள் கொழும்புப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும். கோவில்கள் திறக்கப்படவேண்டும். உணவகங்கள் திறக்கப்பட வேண்டும். உயர் சாதியினரின் உள்ளங்கள் திறக்கப்படவேண்டும் என்ற தமிழரசுக் கட்சியின் முயற்சிகள் நிரம்பச் சாதகமான சாதனைகளை வரலாற்றில் பதிவு செய்தன. ஆனால் அது புரட்சியாக நடை பெறவில்லை. படிமுறையாக நடந்தது.



அதே மகாநாட்டில் அமிர்தலிங்கம் அவர்கள் அரசியல் தொடர்பான பிரேரணையை ஒட்டிப் பேசிய பொழுது "மொழிப் பிரச்சினை மட்டும் தமிழருக்கு உள்ள பிரச்சினையல்ல. அதே அளவுக்கு நிலப் பிரச்சினையும் எமக்கு முக்கியமானதாக உள்ளது. காலாதி காலமாகத் தமிழர் பிரதேசங்களாக இருந்த கல்ஓயா, மன்னம்பிட்டி, பதவியா தவிர திருகோணமலை கல்முனை மாவட்டங்களில் உள்ள பல கிராமங்கள்கூட சிங்களவர் பெரும்பான்மைக் பிரதேசங்களாக மாறியுள்ளன. அரசாங்கம் திட்டமிட்டுச் சிங்களவருக்கு உதவி அளித்துத் தமிழர் பிரதேசங்களைப் பறிக்கிறது" என்று கூறினார்.

# அதிகாரம் 15
# பகிஷ்கரிப்புப் போராட்டம்

1960 அரசாங்கம் மொழிப் பிரச்சினையைத் தீர்க்க விடாப்பிடியாக மறுத்தது. அதனால் தமிழ் அரசுக் கட்சி ஜனவரி 30ந் திகதி தனிச் சிங்கள சட்டத்தை எதிர்த்து வடகிழக்கு மாகாணங்களில் பரவலாகப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை ஆரம்பித்தது. தொண்டர்களோடு தலைவர்கள் கூட்டம் கூட்டமாக அரச அலுவலகங்களுக்குப் போய் எதிர்ப்பு நடவடிக்கை மேற் கொண்டனர். திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தலைமையில் ஒரு பிரிவினர் கச்சேரிக்குப் போனார்கள். திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் ஒரு பிரிவினர் நீதி மன்ற அலுவலகங்களுக்குச் சென்றனர். அங்கு அலுவலகங்களில் வேலை செய்தவர்களிடம் "அரசாங்கம் வடகிழக்கில் தமிழ் மொழியை அரச கரும மொழியாக ஏற்க மறுத்துவிட்டது. எங்கள் பிறப்புரிமைகளுக்காக நாங்கள் போராடுகிறோம்" என்று கூறி யவர் "அரச சேவையாளருக்கு விண்ணப்பம்" என்ற மூன்று கோரிக் கைகளை முன்வைத்த துண்டுப் பிரசுரத்தை விநியோகித்தார். அதில் குறிப்பிடப்பட்டவை:

"உங்கள்மீது எங்களுக்குத் தனிப்பட்ட மனஸ்தாபம் இல்லை. தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய நிலப்பிரதேசத்துள் சிங்கள மொழியை நடைமுறைப்படுத்துபவர் எவராவது இருப்பின் அவர்களுக்கு நாங்கள் ஒரு விண்ணப்பம் செய்ய விரும்புகின்றோம். சிங்களம் பேசும் மக்களுக்கு சிங்களம் எவ்வளவு முக்கியமோ, அதே போலத் தமிழ் பேசும் மக்களுக்குத் தமிழ் இருக்க வேண்டும். வடகிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாக தமிழ்மொழி இருக்க வேண்டும் என்ற தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த வேண்டுகோளை நியாயயீனமான, ஜனநாயகத்துக்கு விரோதமான அரசு நடைமுறைப்படுத்த மறுத்துவிட்டது. எமது கேள்விக்கு எதிர்மாறாக அரசாங்கம் சிங்களத்தை எமது தொண்டைக்குள் திணிக்க முயல்கிறது. தமிழ் மக்களுக்கு வேறு மார்க்கம் இல்லை. நாம் அரசாங்கத்தின் அந்தக் கொடிய மொழிக் கொள்கையை எதிர்க்க வேண்டும். எமது உரிமையை நிலைநாட்ட நாங்கள் ஜீவமரணப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். அதன்காரணமாகவே எங்களது இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டம் அமைகிறது."

"1 தயவு செய்து சிங்களத்தில் வேலை செய்ய வேண்டாம்.

2 சிங்களக் கடிதங்களுக்குப் பதில் அளிக்காதீர்கள்

3 சிங்களத்தில் ஒப்பம் இடாதீர்கள். சிங்கள றப்பர் முத்திரைகளைப் பாவிக்காதீர்கள்."

போராட்டம் பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. அக்காலப் பகுதியில் பாடசாலைகளில் சிங்களமும் ஒரு பாடமாகப் போதிக்கப் பட்டது. அதனை பகிஷ்கரிக்கக் கோரியே பாடசாலைகளுக்குச் சென்றார்கள். அமிர்தலிங்கம் அவர்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சென்றார். அங்கு உரையாற்றும்பொழுது பழைய ஒரு சம்பவத்தை மாணவர்களுக்குக் கூறினார்:

"நாங்கள் விரும்பியே சிங்களம் பயில்கிறோம். எங்களுடைய தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பதையே எதிர்க்கின்றோம். பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் என்னைப் பார்த்து "உன்னுடைய தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பேன்" என்று கூறினார். நான் அவருக்குச் சொன்னேன் "நான் அதனை உன்னுடைய முகத்தில்



துப்புவேன்" என்று. அதனைக் கேட்ட மாணவர்கள் எழுந்து நின்று ஐந்து நிமிடங்கள் கரகோஷம் செய்தனர். அதன்பின்னர் அவரை விளையாட்டு மைதானத்தைச் சுற்றி மூன்று முறைகள் சுமந்தார்கள்.

இந்தப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டன. கூட்டங்கள் வைத்து மக்களுக்குப் போராட்டம் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. புதிய தொண்டர்கள் சேர்க்கப் பட்டார்கள். பெப்புருவரி 4ந் திகதிய சுதந்திரதினத்தைப் பாரியளவில் துக்க தினமாக அனுட்டிக்கத் தீர்மானிக்கப்பட்டது. உரும்பிராயில் இருந்து யாழ் நகருக்கு ஒரு பிரமாண்டமான ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது. அந்த ஊர்வலத்தில் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் ஒரு சவப்பெட்டி காவிச் சென்றனர். அதனுள் சிங்களம் மட்டும் சட்டம், நீதிமன்ற மொழிச் சட்டம், இலங்கை யாப்பு என்பனவற்றின் பல பிரதிகள் வைக்கப் பட்டிருந்தன. ஊர்வல இறுதியில் அவை தீமூட்டி எரிக்கப்பட்டன. இறுதிக்கிரியைகளை தீவுப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.ஏ.கந்தையா அவர்கள் நடாத்தினார். இந்த ஆரம்பமுயற்சிகள் மக்களை விழிப்படையச் செய்யவும், அடுத்து மேற்கொள்ள விருந்த 'கச்சேரிப் போராட்டத்துக்கு' மக்களை ஈர்க்கவுமே பயன்படுத்தப்பட்டன. இம்முயற்சியில் அமிர்தலிங்கம் அவர்களும் அவர் தலைமையில் இயங்கிய வாலிப முன்னணியும் பெரும் பங்குவகித்தன.

1960 மார்ச் பாராளுமன்றத் தேர்தல். அமிர்தலிங்கம் அவர்கள் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாகை சூடினார். இத்தேர்தலில் 11,524 வாக்குகள் பெற்றார். இரண்டாவதாக வந்த சமசமாசக் கட்சியைச் சேர்ந்த எஸ்.சுந்தரசிவம் 3,614 வாக்குகள் பெற்றார். 7,910 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிகண்டார். இத் தேர்தல் மக்கள் அவர்பால் வைத்திருந்த நம்பிக்கையை காட்டுவதோடு அமையாது, மக்கள் நம்பிக்கையோடு ஈழத் தமிழ் இனத்தின் எதிர்காலத்தை அவரிடம் ஒப்படைக்க உறுதி பூண்டதையும் காட்டும். தமிழரசுக் கட்சி இத்தேர்தலில் 19 தொகுதிகளில் போட்டியிட்டது. அதில் 15 தொகுதிகளில் வெற்றி பெற்றது. மொத்தம் 1,76,492 வாக்குகளைப் பெற்றது.

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டும் அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறின. கூடிய

தானங்களைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவைக் கேட்டது. தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க ஒப்புதல் தந்தால் ஆதரிப்பதாக தந்தை செல்வா அவர்கள் சொன்னார்கள். ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு மறுத்தது. அதனால் அது தோற்கடிக்கப்பட மீண்டும் அதே ஆண்டில் யூலை மாதத்தில் ஒரு தேர்தல் நடாத்தப்பட்டது.

1960 யூலை பாராளுமன்றத் தேர்தலில் அமிர்தலிங்கம் அவர்கள் மீண்டும் வட்டுக்கோட்டையில் போட்டியிட்டார். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஏ.வைத்தியலிங்கம் அவர்களுடன் நேரடிப் போட்டி இருந்தது. அமிர்தலிங்கம் அவர்கள் 13,454 வாக்குகளைப் பெற்றார். வைத்தியலிங்கம் அவர்கள் 5,206 வாக்குகளைப் பெற்றார். 8,248 அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். தமிழரசுக் கட்சி 22 தொகுதிகளில் போட்டியிட்டு 16 ஆசனங்களைக் கைப்பற்றியது. மொத்தம் 2,18,753 வாக்குகளைப் பெற்றது. அத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமராகினார்.

இந்த அம்மணி, 1959ஆம் ஆண்டு ஒரு பௌத்த பிக்குவால் வீட்டில்வைத்துச் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சொலமன் பண்டாரநாயக்காவின் மனைவியாகும். கணவன் சுடப்பட்ட சத்தம் கேட்டு ஓடிவந்து சுட்ட பிக்கு துப்பாக்கியோடு நிற்பதைப்பார்த்தவர். அவர் அந்த துப்பாக்கியாள் மீது பாய்ந்து தாக்கியதாகப் பேசப்படுகிறது. ஸ்ரீமாவோ றத்வத்தை 1916 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17ந் திகதி பிறந்தவர். செல்வச் செழிப்புப்புரளும் பிரபல நிலவுடமைக் குடும்பத்தைச் சேர்ந்த பார்னஸ் றத்வத்தையின் ஆறு பிள்ளைக்ளில் மூத்தவர் இவர். பௌத்த மதத்தவரான ஸ்ரீமாவோ கொழும்பில் கத்தோலிக்க கன்னியர் பாடசாலையில் கல்வி பயின்றார். இருபத்திநாலு வயதாக இருக்கும் பொழுது சொலமன் வெஸ்ற் றிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்காவைத் திருமணஞ் செய்தார். இங்கிலாந்தில் 'ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் பயின்ற பண்டாரநாயக்க அப்பொழுது சிங்கள மஹா சபையின் தலைவராகவும், சட்டசபையில் ஒரு அமைச்சராகவும் இருந்தார். இவர்கள் இருவரும் கொய்கம என்ற உயர்ந்த வேளாளர் சாதியைச் சேர்ந்தவர்கள்.



கணவன் இறக்கும் வரை அரசியல் பற்றி எதுவும் தெரியாத, அரசியல் பற்றிக் கணவனுடன் நாட்கணக்கில் உரையாட வருபவர்களுக்கு உணவும் சிற்றுண்டியும் தயாரிக்கும் அடக்கமான அடுப்பங்கரை அம்மணியாக இருந்து அரசியலுக்கு வந்தவர் ஸ்ரீமாவோ. சரளமாக ஆங்கிலம் பேசும் இவர் கண்டிக் கலாச்சாரத்துக்கு அமைந்த மாதிரிச் சேலை அணிபவர். இந்த அரசியல் அனுபவம் இல்லாத அம்மையார்கூட தமிழரை நசுக்கும் விடயத்தில் சிங்கள சமூகத்தின் மஹாவம்ச குணத்தை மூர்க்கமாக வெளிப்படுத்துபவராகவும், ஏனைய சிங்கள அரசியல் தலைவர்களைப் போலவே தூரப்பார்வை அற்று நாட்டுக்கு உயிரழிவு பொருளழிவு கொண்டுவந்த பழியில் ஒரு பகுதியைச் சுமப்பவராகவும் உள்ளார். இவர், தமிழ் இனத்தின் பெருந்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களை மூன்று தடவைகள் சிறைவைத்துத் தனது பேரினவாதச் செருக்கை ஒழிப்பு மறைப்பின்றிக் காட்டியவர்.

1960 நவம்பர். 1961 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் தனிச் சிங்களச் சட்டம் அமுலாக்கத்துக்கு வரவிருந்தது. அதனைப் பற்றிப் பேசுவதற்காகத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தலைமையில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை 1960 நவம்பரில் அலரிமாளிகையில் சந்தித்தனர். இச்சந்திப்பில் அரசாங்க தமிழ் உத்தியோகத்தர்கள் தொடர்பாகவே பேசச் சென்றிருந்தனர். அப்பொழுது தந்தை செல்வா அவர்கள் அமிர்தலிங்கம் அவர்களைக் கட்சியின் சார்பில் பேசவைத்தார். அமிர்தலிங்கம் அவர்கள் பிரதமருக்கும் அவரது உதவியாட்களுக்கும் சொன்னார்:

"சிங்களம் மட்டும் சட்டம் இரண்டு வகையான அரசாங்க உத்தியோகத்தர்களை உருவாக்கி உள்ளது. அச் சட்டம் உருவாக்கப்பட முன்னர் சேவையில் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள், அதன் பின்னர் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் என இரு வகையினர் உள்ளனர். முதற் தொகுதியினர் ஆங்கில மொழி மூலம் தெரிவானவர்கள். அவர்கள் அந்த மொழியிலேயே தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்க வேண்டும் அல்லது பூரண உதவிக் கொடுப்பனவுகளோடு அவர்கள் ஓய்வு பெற அனுமதிக்கப்படவேண்டும். அவர்களைச் சிங்களத்தில் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்துவதோ

அல்லது போதிய நட்டவீடு இல்லாமல் வேலையால் நிறுத்துவதோ மனிததன்மைக்கு முரணானது மட்டுமல்ல சட்டத்துக்கும் முரணானதுமாகும். சிறு உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்களுக்குச் சிங்களம் தேவை என்று கட்டாயப்படுத்தக் கூடாது. புதிதாகச் சேர்பவர்களுக்குச் சிங்களத்தில் அறிவு பெற போதிய அவகாசம் கொடுக்கவேண்டும்."

தமிழ் அரசாங்க ஊழியரது மொழியுரிமை பற்றிய பேச்சுத் தோல்வியில் முடிந்தது. மொழிப் பிரச்சினைத் தீர்வு, றப்பர் போல நீண்டு இழுபட்டமை தமிழரசுக் கட்சி சாணக்கியத் திறமையின்றி சாத்வீக வழியில் போராடியதால் ஏற்பட்டதல்ல. பிரச்சினை நீண்டு சென்றமைக்குச் சிங்கள அரசியல் தலைவர்கள் இரண்டு அணிகளாகப் பிரிந்து நின்று ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக - தமிழர்களைப் பலிக்கடாக்களாக வைத்து - சிங்களப் பொதுமக்களைப் பிழையான வழியில் சிந்திக்கத் தூண்டியமையே காரணமாகும். இத்தனை அழிவுகளுக்குப் பின்னரும், இத்தனை வருடங்கள் கழித்தும் சிங்கள எஜமான்களது அரசியல் சூதாட்டத்தை இன்னும் (2003) சிங்கள சமூகம் உணரவில்லை. அனுபவத்தில் இருந்து எதனையும் அந்த அப்பாவிச் சமூகத்தால் கற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதை எண்ணும் பொழுது அவர்கள்மீது பரிதாபமாக இருக்கிறது. சிங்கள அரசர்களும் பிரதானிகளும் தங்களை ஆளப்பிறந்த ஆண்டவன் படைப்புக்கள் என்ற சாதாரண சிங்கள சமூகத்தின் இரத்தத்தில் ஊறிப்போன அடிமைத்தனப் புத்தியை, சிங்கள அரசியல்வாதிகள் நன்கு பயன்படுத்துகின்றனர். சிங்கள சமூகம் அனுபவத்தில் இருந்து படித்துக்கொள்ள மறுக்கின்றது. அதனையே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரான கோசங்களும், அதனை ஆதரித்துச் செம்மரி மந்தைகளாக சமூகம் வீதியில் இறங்கிக் கூச்சல் போடுவதும் விளம்பரம் செய்கிறன. இதுவரை காலமும் இரண்டு எஜமான்கள் சிங்கள சமூகத்தின் செம்மரித்தனத்தைப் பயன்படுத்தினர். இப்பொழுது அது மூன்றாக அதிகரித்துள்ளது. இதற்கு எதிர்மாறாக தமிழ்ச் சமூகம் சுதந்திரத்தின் பின்னைய - 1948 - தனது சரித்திரதையே மறந்த ஏமாளிச் சமூகமாக மாறி உள்ளது. அஹிம்சைப் போராட்டத்தின் மூலம் அமிர்தலிங்கம் அவர்களும் ஏனைய தலைவர்களும் ஜனநாயக வட்டத்துள் நின்று மொழியுரிமை, இந்திய பிரஜாவுரிமை, தரப்படுத்தல்,



பாரம்பரிய நிலப்பிரதேசவுரிமை ஆகிய துறைகளில் பெற்ற வெற்றிகளை சமூகம் மறந்து நிற்கிறது. அதற்கு ஒரு காரணம் துப்பாக்கிக் கலாச்சாரம் செய்த கதவடைப்பாகும்

# அதிகாரம் 16
# சத்தியாக்கிரகம்

1961 - பெப்புருவரி 20 - தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுத்த பேரினவாத அரசை எதிர்த்து, தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணக் கச்சேரியின் எதிரில் ஆரம்பித்த சத்தியாக்கிரகப் போராட்டம், தமிழ் ஈழ வரலாற்றில் ஒரு சகாப்தத்தின் ஆரம்பத்தைக் காட்டும். இது போன்ற மக்கள் எழுச்சிப் போராட்டம் பின்னர் இதுவரை பதிவாகவில்லை. இதனை திட்டம் இடுவதில் முதன்மை வகித்தவர் தீவகம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.நவரத்தினம் அவர்கள்.

யாழ்ப்பாணம்: சத்தியாக்கிரகிகள் முதல் நாள் தந்தை செல்வா, வி.நவரத்தினம், அமிர்தலிங்கம், வி.ஏ.கந்தையா முதலிய தலைவர்களின் தலைமையில் ஊர்வலமாகச் சென்று கச்சேரி வாசலை காலை 7.30 மணிக்கு அடைந்து அதன் வாசல்களில் நிரையாக அமர்ந்தனர். முதல் வரிசையில் தலைவர்கள் இருந்தனர். இரண்டாவது வரிசையில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் இருந்து பக்திப் பாடல்கள் பாடினார். அவர் பாடுவதைப் பின்பற்றி ஏனையவர்கள் பாடினர். இந்து கிறிஸ்தவ இஸ்லாமிய பக்திப் பாடல்கள் பாடப்பட்டன.

இரண்டாம் நாள் (பெப்புருவரி 21) பொலிசார் வீதிகளுக்குத் தடை போட்டு நின்றனர். மக்கள் ஒழுங்கைகள் வழியாக வந்து 5000 பேர்வரை கூடினர். மூன்றாம் நாள் பெண்கள் தினமாகும். திருமதி மங்கையர்க்கரசி அவர்கள் தலைமையில் 500 பேருக்கு மேலான பெண்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். அதனைவிட ஆயிரக்கணக்கில் ஆண்கள் திரண்டிருந்தனர். அதனை அடுத்து சத்தியாக்கிரகம் மட்டக்களப்பு திருகோணமலை மன்னர் வவுனியா நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. பொலிசார் கச்சேரி

உத்தியோகத்தர்களை உள்ளே அனுப்ப முடியாத ஆத்திரத்தில் சத்தியாக்கிரகிகளை நையப் புடைத்தனர். இரத்தம் தோய்ந்த நிலையிலும் சத்தியாக்கிரகிகள் பின்வாங்க வில்லை. பொலிசார் பின்வாங்கினர். அதுவரை பகல் வேளையில் மட்டும் நடந்த சத்தியாக்கிரகம் 24 மணி நேரத்தையும் அடக்கி மேற்கொள்ளப்பட்டது. நாலாம் நாள் அரச அலுவலக சேவையாளர்கள் தாம் மேற்கொண்டு வேலைக்குச் செல்வதில்லை என்று முடிவெடுத்தனர்.

5ஆம் நாள். 7.45 மணிக்குப் பொலிஸ் அத்தியட்சர் ஆர்ண்ட் பொலிஸ் படையுடன் கச்சேரி வாசலுக்கு வந்தார். "கால்களில் பிடித்து இழுத்தெறி" என்று உதவி அத்தியட்சர் மகேந்திரனுக்குக் கட்டளை போட்டார். அப்புறப்படுத்திய சத்தியாக்கிரகிகள் இடத்தைப் புதிய சத்தியாக்கிரகிகள் நிரப்பினர். சனம் பெருமளவில் வந்து சேர்ந்தது. பொலிஸ் அத்தியட்சர் தனது ஜீப் வாகனத்தை கச்சேரி வளவினுள் கொண்டு செல்ல முற்பட்டார். டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன் வண்டியின் முன்சக்கரத்தோடு உடலை வைத்துத் தரையில் படுத்தார். பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் துரைரத்தினம் மறு சக்கரத்துக்கு கால்களை உதை கொடுத்தபடி இருந்தார். தீவுப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் வி.ஏ.கந்தையா வாகன பொனற்றில் சாய்ந்தபடி இருந்தார். மக்கள் வாகனத்தின் பாதையில் வானத்தைப் பார்த்தபடி படுத்தனர். பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வெடிக்கச் செய்தனர். பின்னர் பொலிஸார் சத்தியாக்கிரகிகளைக் குண்டாந் தடிகளாலும் சப்பாத்துக் கால்களாலும் வன்மையாகத் தாக்கினர். நாகநாதன், அமிர்தலிங்கம், துரைரத்தினம், கந்தையா ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களும் காயம் அடைந்தனர். டாக்டர் நாகநாதனுக்கு அடித்த குண்டாந்தடி இரண்டாக முறிந்தது. அவர் அந்த முறிந்த குண்டாந்தடியை ஞாபகப் பொருளாகப் பாதுகாத்தார். தலைவர்கள் தொண்டர்களை முன்னேவிடாமல், தாம் முன்னணியில் நின்று பேராட்டத்தை நடாத்தினர். இந்த அம்சம் தமிழ் அரசு-கூட்டணி கட்சியின் பேராட்ட காலம் முழுவதும் நிலைத்து ஒரு முன்னுதாரணமாக அமைகிறது. அஹிம்சைவழி விடுதலைப் போராட்டம் காரணமாக மோசமாக அடிபட்டவர்கள், மரணித்தவர்கள் தலைவர்களே. மூதூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.த.ஏகாம்பரம், தீவுப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வீ.ஏ.கந்தையா அவ்வகையில் காவல்துறையினரின் தாக்குதல் காரணமாக மரணமான தலைவர்களே.



சத்தியாக்கிரகம் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய நகர்களிலும் நடை பெற்றது. அவற்றைப் பார்வையிடுவதற்காக தந்தை செல்வா, அமிர்தலிங்கம், வி.நவரத்தினம் ஆகியோர் திக் விஜயம் மேற்கொண்டனர். மட்டக்களப்பின் சத்தியாக்கிரகக் காட்சிகள் அவர்களை மிகவும் கவர்ந்தன. கச்சேரியை எவரும் அடையாமல் இருக்க வத்தைகள் மூலம் வாவியின் நீர்ப்பகுதியைத் தடை செய்து சத்தியாக்கிரகம் செய்தனர். அங்கு மட்டக்களப்பு பா.உ. செ.இராசதுரை, செனட்டர் திரு. மு.மாணிக்கம், சட்டத்தரணி சாம் தம்பிமுத்து, செல்வி கலா மாணிக்கம், அறப்போர் முன்னணித் தலைவர் அரியநாயகம், நொத்தாரிசு கந்தையா, கல்முனை வேல்முருகு மாஸ்டர், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.சி.அகமது, சி.மூ.மாணிக்கம், பொ.மாணிக்கவாசகர், ஆகியோரின் தலைமையில் சத்தியாக்கிரகம் வெற்றிகரமாக நடை பெற்றது. மன்னாரில் பாராளுமன்ற உறுப்பினர் வி.ஏ.அழகக்கோன் தலைமையிலும், வவுனியாவில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற தா.சிவசிதம்பரம் அவர்கள் தலைமையிலும் சத்தியாக்கிரகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. திருகோணமலையில் பாராளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இராஜவரோதயம், த.ஏகாம்பரம், பா.நேமிநாதன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. அங்கும் பொலிசாரினால் சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்டனர். மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் த.ஏகாம்பரம் அவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார். அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பதினெட்டாம் நாள் காலமானார். மூதூர் மக்களினால் இருதடவைகள் முதலாவது பராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர் அமரர் ஏகாம்பரம் அவர்கள்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள், பாடசாலை உயர் வகுப்பு மாணவர்கள் கூட்டம் கூட்டமாகச் சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டனர். கிராம மக்கள் முறைவைத்து முழுக்கிராமங்களுமே பங்கு கொண்டன. அதுவரை காலமும் யாழ்ப்பாணக் கச்சேரி வாசலே தெரியாத மக்கள் ஏராளம் அங்கு வந்து சேர்ந்தனர். புகைவண்டிகளில் சீட்டில்லாமல் பிரயாணம் செய்தனர். பஸ்வண்டிகளில் பிரயாணம் செய்யும் பொழுது பிரயாணக் கட்டணம் செலுத்த மறுத்தனர்.

வடகிழக்கில் அரச நிர்வாகம் செயலிழந்தது. அரசாங்கம் மேலதிக படைகளை அனுப்பியது. மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் 500 மேலதிக படைகள் அனுப்பப்பட்டன. தபால் புகையிரத வண்டி மூலம் மேலதிக கடற்படை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது. அதே சமயம் ஒரு தொகுதி கடற்படையினர் விமான மூலம் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டனர். அதுவே இலங்கை வரலாற்றில் ஒழுங்கு கட்டுப்பாட்டை நிலைநிறுத்த விமான மூலம் முதன்முறை படை நகர்த்தப்பட்டதாகும்.

மார்ச் மாதம் 1ஆம் திகதி யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் 36 இடங்களில் கடற்படைக் காவல் மையங்கள் அமைக்கப்பட்டன. யாழ் நகருக்குள் எவரும் உட்புகக் கூடாது என்று கடற்படை தடை போட்டது. சத்தியாக்கிரகிகள் திருப்பி அனுப்பப்பட்டனர். அவர்கள் ஒழுங்கைகள் வழியாகவும், தனிப்பட்டவர் காணிகளூடாகவும் கச்சேரி வாசலை அடைந்து சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டனர். மூளாயிலிருந்து வந்த அமிர்தலிங்கம் அவர்களது காரை மாநகர எல்லையில் கடற்படை மறித்து உட்செல்ல அனுமதிகொடுக்க மறுத்தது. அமிர்தலிங்கம் அவர்கள் தான் கட்சிக் காரியாலயத்துக்குச் செல்வதாக வாதாடினார். சிறிது நேரத்துள் அவர் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போனதை அவதானித்த அரசாங்கம் ஏப்பிரல் 5ந் திகதி திரு.செல்வநாயகம் அவர்களைப் பேச்சு வார்த்தைக்கு வரும்படி கொழும்புக்கு அழைத்தது. வழமையைப் போலவே அவர் தன்னுடன் அமிர்தலிங்கம் அவர்களை அழைத்துக்கொண்டு கொழும்பு சென்றார். திரு.செல்வநாயகம் அவர்கள் அரசாங்கத்துடனோ வேறு நிறுவனங்களுடனோ, வெளிநாடு செல்லும் வேளையிலோ பேச்சுவார்த்தைக்குச் செல்லும் வேளைகளில் எல்லாம் அமிர்தலிங்கம் அவர்களை அழைத்துச்செல்வதை ஒரு கட்டாய தேவையாகக் கடைப்பிடித்தார். கட்சியில் மூத்த சட்டத்தரணிகள் மற்றும் அறிஞர்கள் இருந்தபோதும், அமிர்தலிங்கம் அவர்களை அழைத்துச் செல்லுவதை வழமையாக்கிக் கொண்டமைக்குக் காரணம், அவர் அமிர்தலிங்கம் அவர்களது விவேகத்திலும், சாதுரியத்திலும், அரசியல் சாணக்கியத்திலும், விவாதத் திறமையிலும் வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கையேயாகும்.



அவர்கள் இருவரும் ஏப்பிரல் மாதம் 5ந் திகதி பலாலியில் இருந்து இரத்மலானைக்கு விமானத்தில் சென்றனர். அங்கு அவர்கள் திருவாளர்கள் இராசமாணிக்கம், டாக்டர் நாகநாதன் இருவரையும் அழைத்துக்கொண்டு இரவு 7.30 மணிக்குத் திருச்செல்வம் அவர்களுடைய இல்லம் சென்றனர். அங்கு அரசாங்கம் அனுப்பிய அமைச்சர் சாம் பி.சி. பெர்னான்டோவைச் சந்தித்தனர். அச்சமயம் தந்தை செல்வா அவர்கள் மொழி தொடர்பான 4 கோரிக்கைளை முன்வைத்தார்.

1. வடகிழக்கின் நிர்வாக மொழியாகத் தமிழ் மொழி இருக்க வேண்டும்.
2. வடகிழக்கு நீதி மன்றங்களின் மொழியாகத் தமிழ் மொழி இருக்க வேண்டும்.
3. தனிச் சிங்கள மொழிச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.
4. வடகிழக்கிற்கு அப்பால் வாழும் தமிழ் பேசும் மக்களின் மொழிப் பிரச்சினைகளைப் போக்க வழி செய்யப்படவேண்டும்.

சாம் சி பெர்னான்டோ, தந்தை செல்வாவின் கோரிக்கையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையாரின் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார். அமைச்சரவை அதனை நிராகரித்தது.

தோல்வியை அடுத்து சத்தியாக்கிரக முன்னெடுப்புகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன. தபால் சேவை நடத்துவதென்றும், நில அபிவிருத்தி, குடியேற்றம் தொடர்பான சட்டங்களை மீறுவதென்றும் தந்தை செல்வா முடிவெடுத்தார். அதனைத் தொடர்ந்து ஏப்பிரல் 14 ந் திகதி தமிழரசுக் கட்சி தபால் சேவையை ஆரம்பித்தது. தபால் முத்திரைகளை வெளியிட்டது. முதல் நாள் மட்டும் தந்தை செல்வா அவர்கள் 5000 புத்து சத முத்திரைகளையும், முத்திரை பதித்த ஒன்று 15 சதவிலையுடைய 2,500 என்வலப்புகளையும், ஒன்று 5சத விலை பதித்த 1,500 போஸ்ட் காட்களையும் விற்பனை செய்தார். தமிழரசு முத்திரை ஒட்டிய தாபால் சேவை யாழ்ப்பாணத்தில் அறிமுகமானது. முதலாவது கடிதத்தை மு.சிவசிதம்பரம் பா.உ.

அவர்கள் அரசாங்க அதிபருக்கு விநியோகித்தார். இரண்டாவது கடிதத்தை டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன் அவர்கள் யாழ்_பொலிஸ் அத்தியட்சருக்குக் கையளித்தார். ஏப்பிரல் 15ந் திகதி தந்தை செல்வநாயகம் அவர்கள் அரச நிலத்தைப் பங்கீடு செய்ய விண்ணப்பங்கள் கோரி அறிவித்தல் வெளியிட்டார். ஆயிரக்கணக்கானவர்கள் விண்ணப்பித்தனர்.

# அதிகாரம் 17
# பணாகொட முகாமில் தம்பதிகள்

1961 ஏப்பிரல் யாழ்ப்பாணக் கச்சேரி எதிரே சத்தியாக் கிரகத்தில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்த திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களுக்கு, இராணுவ புலனாய்வுத் துறையினர் மேலிட உத்தரவின்படி தன்மீது கண்வைத்திருப்பது தெரியாது. வேறு பல பெண்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட பொழுதும், துப்பறிவோர் மங்கையர்க்கரசி அம்மையாரின் நடமாட்டத்தையே மிகவும் கூர்ந்து அவதானித்தார்கள். அது கைக் குழந்தையையுடைய அமிர்தலிங்கம் தம்பதியினருக்குத் தெரியாது.

தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகத்தை முறியடிக்கும் நடவடிக்கைகளில் அரசு இறங்கியது. சத்தியாக்கிரகம் நடந்த அனைத்து நகர்களுக்கும் மேலதிக படைகள் அனுப்பப்பட்டன. அவசர்கால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அத்தோடு நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக ஏப்ரல் 17ந் திகதி ஊரடங்குச் சட்டமும் பிரகடனப்படுத்தப்பட்டது. ஐந்து மாவட்டங்களின் நிர்வாக ஆட்சியும் இராணுவ தளபதிகளின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன்படி யாழ்ப்பாண ஆட்சித் தளபதியாக லெப்ரினட் கேணல் ஏ.ஆர்.உடுகம நியமிக்கப்பட்டார். மட்டக்களப்புக்கு லெப்ரினட் கேணல் பி.டி.ரமநாயக்காவும், மன்னாருக்கு மேஜர் ரி.எல்.பி.சாலியும், திருகோணமலைக்கு லெப்ரினட் கேணல் எல்.என்.விக்கிரமசூரியாவும் நியமிக்கப்பட்டனர்.

அன்று நள்ளிரவு ஐந்து மாவட்டங்களிலு முள்ள சத்தியாக்கிரக மையங்களையும் படைகள் சுற்றி வளைத்தன. காலையான பொழுது



படைகள் சத்தியாக்கிரகிகளை அப்புறப்படுத்தி, அரச அலுவலகங்களின் வாயில்களை இயல்பு நிலைக்குக் கொண்டு வரும் வேலையைச் செய்து முடித்திருந்தன. இராணுவம் தலைவர்கள் அனைவரையும் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு சென்று மகரகம நகரின் அருகே உள்ள பணாகொட முகாமில் சிறை வைத்தது. அமிர்தலிங்கம் அவர்களோடு அவர்தம் மனைவியார் மங்கையர்க்கரசி அம்மையாரும் கைதாகினார். அப்பொழுது அவர்களது இளைய மகன் பகீரதனுக்கு ஒன்றரை வயது. அவர்களின் பிள்ளைகள் இருவரையும் அவரது இளைய சகோதரர் திகம்பரலிங்கமும் துணைவியாரும் (மங்கையர்க்கரசியாரின் இளைய சகோதரி) காங்கேசன்துறைக்கு அழைத்துச் சென்று கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படும் பெற்றாரைக் காட்டினார்கள். மொத்தம் 74 பேர் பணாகொட இராணுவ முகாமில் சிறை வைக்கப்பட்டனர். அவர்களில் திருமதி மங்யைர்க்கரசி அமிர்தலிங்கம் ஒருவர் மட்டுமே பெண்ணாவார்.

சத்தியாக்கிரகத்துக்கு மலையகத் தமிழ் மக்களும் ஆதரவளித்தனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ. தொண்டமான் அவர்கள் சத்தியாக்கிரகம் நடந்த இடங்களுக்குச் சென்று தனது ஆதரவைத் தெரிவித்தார். தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டபொழுது இ.தொ.கா. பிரதிநிதி நடேசபிள்ளை அவர்களும் கைது செய்யப்பட்டார். சத்தியாக்கிரகம் முறியடிக்கப்பட்டதை எதிர்த்து மலையகத் தோடத் தொழிலாளர்கள் ஏப்பிரல் 25ந் திகதி பரிபூரண வேலை நிறுத்தம் செய்தனர். அதனால் தோட்டப் பகுதிகளுக்கும் இராணுவம் அனுப்பப்பட்டது.

தலைவர்கள் கைது செய்யப்பட்ட அடுத்த தினம் கடற்படையினர் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் அரசுக் கட்சித் தலைமைக் காரியாலயத்துக்குச் சென்றனர். அங்கு அவர்கள் தேடிப் போன ஆவணங்கள் எல்லாம் அதன் முன்னரே அப்புறப்படுத்தப்பட்டு விட்டதைக் கண்டு ஏமாந்தனர். வரப்போகும் அபாயத்தை உணர்ந்த - கைது செய்யப்படாமல் தப்பி இருந்த - ஆவரங்கால் சின்னத்துரை அவர்கள் அவற்றை அப்புறப்படுத்தித் தனது கிராமத்துக்கு எடுத்துச் சென்றுவிட்டார். பூனை குட்டியைக் காவியதைப் போல அவற்றை அவர் இடம்மாற்றிக்கொண்டிருந்தார்.

தலைவர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து மக்களை வழிநடத்த எவரும் இருக்கவில்லை. இளைஞர்கள் பருத்தித்துறை, வல்லுவெட்டித்துறை, கைதடி, சுன்னாகம், ஆவரங்கால், அச்சுவேலி ஆகிய இடங்களில் ரோந்து சென்ற படைகள்மீது கல்லெறிந்தனர். பருத்தித்துறையில் படையினர் கல்லெறிந்தவர்கள்மீது சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார். வல்லுவெட்டித்துறையில் படைகள் சுட்டதில் மூவர் காயமடைந்தனர். காங்கேசன்துறையிலும் பருத்தித்துறையிலும் வீதிகளின் குறுக்கே தடைகள் போடப்பட்டன. 23ந் திகதி யாழ்ப்பாணத்தில் ஆனைக் கோட்டையில் அரச உடமையான பஸ் வண்டி தாக்கப்பட்டது. அதே தினம் திருகோணமலையில் சாம்பல்தீவில் ஒரு பஸ்வண்டி தாக்கப்பட்டது. உப்புவெளி சாம்பல்தீவு கிராமங்களில் படைகள்மீது கல்லெறி நடத்தப்பட்டது. மட்டக்களப்பில் ஏறாவூரில் ரோந்து சென்ற இராணுவத்தின்மீது சரமாரியாகக் கல்லெறிவிழுந்தது. இராணுவம் சுட்டத்தில் ஒருவர் காயமடைந்தார். 27ந் திகதி உரும்பிராயில் இராணுவ வண்டி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. வடகிழக்கு முழுவதும் இளைஞர்கள் எதிர்ப்புக்காட்டினர். இதுவே தமிழ் ஈழ உரிமைப் போராட்ட வரலாற்றில் இளைஞர்களின் வன்முறைப் போராட்டம் பற்றிய முதல் பதிவாகும். இளைஞர்களின் ஆத்திர உணர்வு 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்ற பழமொழியை ஞாபகமூட்டுகிறது. தமது உரிமைகளைக் கேட்ட சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்காது, அவர்களைத் துப்பாக்கியால் அடக்கப் படைகள் அனுப்பப்பட்டமை இளைஞர்களுக்கு அரசியல் பாடம் சொல்லிக் கொடுத்தது. அஹிம்சை வழியில் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆயுதப் போராட்டமே பொருத்தமானது என்று அவர்கள் எண்ணத் தூண்டியது.

அரசாங்கம் மிகக்கண்டிப்பான பத்திரிகைத் தணிக்கையை அமுல் படுத்தியது. அதனால் மக்களுக்கு உண்மைச் செய்திகள் எட்ட வாய்ப்பிருக்கவில்லை. அதனைப் போக்குமுகமாக 'சத்தியாக்கிரக' என்ற மாதமிருமுறை ஆங்கில ஏடும் 'தமிழன் கண்ணீர்' என்னும் தமிழ் பத்திரிகையும் தட்டச்சில் பதியப்பட்டு இரகசியமாக வெளியிடப்பட்டன. இராணுவத்தின் கண்ணில்பட்டால் அப்பத்திரிகை ஆசிரியர்களின் கதி அதோகதியாகியிருக்கும். இந்தப் பத்திரிகையாளர்கள் சிறையில் இருந்த அமிர்தலிங்கம் அவர்களது ஆதரவையும் ஆலோசனையையும் பெற்றிருந்தனர். அவர்களின்



பெயர்கள் தருணம் வரும்பொழுது வெளியிடப்படும் என்று அமிர்தலிங்கம் அவர்கள் தமிழரசுக் கட்சியின் 'வெள்ளிவிழா மலரில்' குறிப்பிட்டிருந்தார். அந்த ஏடுகள் அரசாங்கத்தின் இருட்டடிப்புக்குள்ளான செய்திகளை ஈழத்தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்தின.

தலைவர்கள் சிறையில் 170 தினங்கள் வைக்கப்பட்டனர். அவர்கள் பகுதி பகுதியாக விடுதலை செய்யப்பட்டனர். இறுதியாக 1961 ஒக்டோபர் 4ந் திகதி பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுதலையாகினர். அமிர்தலிங்கம் தம்பதியினர் புகையிரதத்தில் வருவதையறிந்து மக்கள் யாழ் புகையிரத நிலையத்தை நிறைத்துப் பூமாலைகளுடன் வழிபார்த்தது நின்றனர். அமிர்தலிங்கம் தம்பதியினரை மக்கள் வெள்ளம் மலர் மாலை சூடி ஊர்வலமாக அழைத்துச் சென்றது. அக்கால கட்டத்தில் தமிழ் மக்களின் நம்பிக்கைச் சொத்தாக அவர்கள் இருந்த காரணத்தால் அப்படியான ஒரு மாபெரும் வரவேற்பு

# அதிகாரம் 18
## மனிதநேயம்

1961 அமிர்தலிங்கம் அவர்கள் மார்க்சிய 'சிந்தனைகளில் தோய்ந்தவர். அதனால் அவர் உயர்வு தாழ்வு, சாதி பேதம், மதபேதம், பிரதேச வேறுபாடு போன்ற குறுகிய சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட, மனித நேயம் உடையவராகத் திகழ்ந்தார். உதாரணமாக அவர் இஸ்லாமிய மக்கள்மீது காட்டிய நேசத்தைக் கூறலாம்.

ஒரு பதமாக ஒரு சிறு சம்பவத்தைக் கூறலாம். 1961ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ந் திகதி கள்ளக் குடியேற்றக் காரர்களைத் தடுப்பதற்காகப் பாராளுமன்றத்தில் ஒரு மசோதாக் கொண்டு வரப்பட்டது. அச்சமயம் அமிர்தலிங்கம் அவர்கள் சிறையில் இருந்த ஒரு முஸ்லிம் சகோதரர் பற்றித் தெரிவித்த வாசகங்கள் தரப்படுகின்றன:

"மன்னாரில் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஒருவருடைய எழை மனைவி எழுதிய பரிதாபகரமான விண்ணப்பத்தை இன்று காலையில் நான் பார்த்தேன். கனம் பாராளுமன்றக் காரியதரிசியும் அதனைப் பார்த்திருப்பார். எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த கப்பு மரைக்கார் கச்சி

முகம்மது என்னும் ஒருவர் அனுரதபுரச் சிறையிலே அடைத்து வைக்கப்பட்டுள்ளார். காரணம் தெரியாது. ஆறு மாத காலமாக அவருடைய மனைவியும் எட்டுக் குழந்தைகளும் போசிக்க எவரும் அற்றிருக்க, கச்சி முகம்மது சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார். அவரது குடும்பத்தவர்கள் இந்த அரசாங்கத்துக்கும் பாராளுமன்றக் காரியதரிசிக்கும், பிரதம மந்திரிக்கும் மகஜர்கள் அனுப்பிக்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் ஆலோசனைச் சபையின் முன்னிலையிலே தங்களுடைய நிலையை எடுத்து விளக்கி இருக்கிறார்கள். அவருக்கு அரசாங்கம் அளித்த, கிராமத் தலைவர் அளித்த, கிராம சங்கத் தலைவர் அளித்த, இன்னும் கிராமப் பெரியார்கள் அளித்த நற்சாட்சிப் பத்திரங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவருக்கும் கடற்தொழிலுக் கும் எதுவித தொடர்பும் இல்லை. ஆனால் அவர் ஆட்களை ஏற்றி இறக்கும் தோணி வைத்திருந்தார் என்று யாரோ ஒரு பொலிஸ் அதி காரி சொன்னாராம். அந்தப் பொலிஸ் அதிகாரிக்குக் கையுறை கொடுக்காதபடியால் அப்படி ஒரு தண்டனை. அதற்காக ஆறுமாத காலமாக அவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அவரிடம் தோணி இல்லை என்று மீன்பிடி இலாகாவே கூறுகின்றது. உடனடியாக அவரை விடுதலைசெய்ய வேண்டுகிறேன்."

அவர் முஸ்லிம் சமுதாயத்தின் மீது நீங்காத பாசம் வைத்திருந்தார். தமது விடுதலைப் பிரயாணத்தில் முஸ்லிம் மக்களை யும் அதிகார உயர் பீடத்தில் தமக்குச் சமமாக வைத்து, அவர்களையும் அரவணைத்துச் செல்ல விரும்பினார். அவரின் தூரப் பார்வையை பாராளுமன்ற விவகார அமைச்சராக இருந்த அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்கள் 'நேர்கின்ற அஞ்சாமை' என்ற தனது கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"1965இல் செனட் சபை என்னும் மேல் சபையில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டு விட்டது. அப்பதவிக்குத் தமிழ் தலைவர்களில் தகுதி படைத்தோர் பலர் இருந்தனர். அவர்களில் எவரையும் சிபாரிசு செய்யாமல் கிழக்கிலங்கையில் தமிழரசுக் கட்சியை வளர்த்த இருவரில் ஒருவரான மசூர் மௌலானா என்ற முஸ்லிமை செனட் சபைக்கு நியமிக்க வேண்டுமென பிரேரித்தவர் அமிர்தலிங்கந்தான். தமிழ்த் தலைவர்களான தந்தை செல்வநாயகம் உட்பட, நாகநாதன், இராசமாணிக்கம் போன்ற பலரிடம் பேசி மசூர் மௌலானாவை தெரிவு செய்ய வாதிட்டு வாகை சூடினார். முஸ்லிம் சமூகத்தை இந்தத்



தலைவன் எந்தளவு தன் நெஞ்சில் சுமந்துள்ளான் என்பதற்கு, இது ஒரு பதச் சோறு மட்டுமே."

தமிழரசுக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களாக முதன் முதலில் தெரிவு செய்யப்பட்ட மாமாவும் மருகனுமாகிய ஜனாப் காரியப்பர் (கல்முனைத் தொகுதி), ஜனாப் முஸ்தபா (பொத்துவில் தொகுதி) தொடக்கம் பின்வந்த முஸ்லிம் சகோதரர்கள் யாவரும், பாராளுமன்ற உறுப்பினர்களாகியதும் கட்சியை விட்டு வெளியேறிய மனதை நெருடும் சரித்திரம் தமிழரசுக் கட்சிக்கு உண்டு. எனினும் அமிர்தலிங்கம் அவர்கள் வடகிழக்கு முஸ்லிம் சமூகத்தை அரவணைத்தே சென்றுள்ளார். இன்றில்லையேல் நாளை அவர்களுடன் சேர்ந்தே ஆட்சியை முன்னெடுக்க வேண்டும் என்ற கொள்கை யுடையவராக இருந்தார். அதனைத் தமிழரசு-தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சி அரசாங்கத்துடன் காலத்துக்குக் காலம் செய்துகொண்ட உடன்படிக்கைகளிலும் அவதானிக்க முடிகிறது.

# அதிகாரம் 19
# டட்லி-செல்வா ஒப்பந்தம்

1963 ஜனவரி 5. தமிழ் மக்களின் உரிமைகளை அரசு பறித்த காரணத்தால் யாழ்ப்பாணம் வரும் அமைச்சர்கள் யாவருக்கும் தமிழ் அரசுக் கட்சி கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிப்பது வழமையாக இருந்த காலம். அமிர்தலிங்கம் அவர்கள் போராடுகளத்தில் முதல் மனிதனாக இல்லாமல் எந்தக் கறுப்புக் கொடிப் போராட்டமும் நடந்ததில்லை. கல்வி மந்திரி பதியுத்தீன் மஃமுது, வர்த்தக மந்திரி ரி.பி.இலங்கரத்தின ஆகிய இருவரும் பருத்தித்துறையில் கூட்டுறவு மொத்த வியாபார நிறுவனத்தைத் திறந்துவைக்க வந்த சமயம் அமிர்தலிங்கம் பா.உ., துரைரத்தினம் பா.உ. வி.ஏ.கந்தையா பா.உ. ஆகியோரும் தொண்டர்களும் கறுப்புக்கொடி காட்டி "திரும்பிப் போ. எங்களுக்கு நீங்கள் தேவை இல்லை" என்று கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். யாழ் பொலிஸ் அத்தியட்சர் வண்டசன் தலைமையில் வந்த பொலிசார் ஆர்ப்பாட்டம் செய்தவர்களைத் தாக்கினர். அதில் கந்தையா அவர்கள் மிகவும் வன்மையாகத்

தாக்கப்பட்டதால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அமிர்தலிங்கம் அவர்கள் மிக மோசமாக அடிக்கப்பட்டார்.

வாலிப முன்னணித் தலைவராக இருந்த அமிர்தலிங்கம் அவர்களினாலேயே ஒவ்வொரு கறுப்புக்கொடிப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. அரசியல் ஞானம் - விளிப்புணர்வு மக்களிடம் காணப்படாத இருண்ட காலகட்டம். ஆர்ப்பாட்டங்களை, போராட்டங் களை விரும்பாத அடங்கியொடுங்கி வாழப்பழகிவிட்ட ஒரு சமூகத்தை உறக்கத்திலிருந்து எழுப்பிக் களத்திற்குக் கொண்டுவரவேண்டி இருந்தது. மேடையில் நின்று கணீரென்ற குரலில் விடும் அழைப்பால் மட்டும் அது சாத்தியப்பட்டிருக்க முடியாது. மக்கள் - குறிப்பாக இளைஞர்கள் - அமிர்தலிங்கம் அவர்களின் பின்னே அள்ளுப்படக் காரணம் அமிர்தலிங்கம் அவர்கள் ஒவ்வொரு போராடு களத்திலும் முதல் முன்னணிவீரராக நின்று -- வழிகாட்டியமையேயாகும். இராமர் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என்று ஒதுங்கி வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தை, உணர்ச்சிகொள்ளச் செய்து உரிமைப் போராட்ட களத்துக்கு அழைத்து வந்த பெருமை அவருக்கு உண்டு.

ஐந்தாவது தேர்தல் களம்

1965 அமிர்தலிங்கம் அவர்கள் தனது 38வது வயதில் ஐந்தாவது தேர்தல்களத்தில் இறங்கினார். தமிழரசுக் கட்சியின் சார்பில் மீண்டும் 1965இல் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டார். இது ஒரு நான்கு முனைப்போட்டியாக இருந்தது. இவரை எதிர்த்து தமிழ் காங்கிரசைச் சேர்ந்த கே.சுப்பிரமணியம், சுயேட்சையாக ஏ.தியாகராசா, கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஐ.ஆர்.அரியரத்தினம் ஆகியோர் போட்டியிட்டனர். அமிர்தலிங்கம் அவர்கள் 15,498 வாக்குகள் பெற்றார். இரண்டாவதாக வந்த சுப்பிரமணியம் அவர்கள் 4,359 வாக்குகள் பெற்றார். 11,139 அதிகப்படியான வாக்குகள் பெற்று அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். தமிழரசுக் கட்சி 17 ஆசனங்களைக் கைப்பற்றியது. மொத்தம் 2,17,986 வாக்குகளைப் பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி 66 ஆசனங்களையும், சுதந்திரக் கட்சிக் கூட்டமைப்பு 56 ஆசனங்களையும் கைப்பற்றின. அதனால் ஐக்கிய தேசியக் கட்சி தமிழரசுக் கட்சியின் ஆதரவை நாடியது.



ஒப்பந்தம்

1. டட்லி சேனநாயக்க அவர்களும் தந்தை செல்வநாயகம் அவர்களும் பேசி ஒரு கனவான் ஒப்பந்தம் செய்தனர்
2. வடகிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகவும் ஆவணப்படுத்தும் மொழியாகவும் தமிழ் மொழி இருக்கும்.
3. வடகிழக்கு மாகாணங்களின் நீதிமன்றங்கள் தமிழில் கருமமாற்றவும், அவற்றை ஆவணப்படுத்தவும் தமிழ் மொழி பயன்படுத்தப்படும்.
4. அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்ட மாவட்ட சபைகள் நிறுவ வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி வடகிழக்கு மாகாணங்களில் மேற்கொண்டு குடியேற்ற முயற்சிகளில் ஈடுபடாது.
5. தமிழ் அரசாங்க உத்தியோகத்தரது பிரச்சினைகள் நிர்வாக வழியில் தீர்க்கப்படும்.

அந்த ஒப்பந்தப் பிரகாரம் தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்தோடு இணைந்தது.

# அதிகாரம் 20
# தேசிய அரசில் தமிழரசுக் கட்சி

1966 1965இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலை அடுத்து வந்த காலப் பகுதியில் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் நாயகமாக இருந்தார். அவரது குரலும் செயலுமே கட்சியில் முதன்மை பெற்றிருந்தன. 'காட்போட் ஹிட்லர்' என்று இராசதுரை கட்சிக் கூட்டத்தில் குறிப்பிடுமளவுக்கு அவரின் அன்றைய செல்வாக்கும் அதிகாரமும் கட்சியில் கொடிகட்டிப் பறந்தன. எதிர்ப்புக்கள் மலிந்த சோதனை மிக்க இக்கால கட்டத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் கட்சியின் செயற்பாடுகளை கையாண்ட விதம், அவர் எவ்வளவு நிதானமாகவும் பொறுப்புணர்வுடனும் மிகுந்த சாணக்கியத்துடனும் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச்

சென்றார் என்பதைக் காட்டும். தமிழ் அரசுக் கட்சி, யூ.என்.பி. கட்சியுடன் ஒப்பந்தம் செய்து தேசிய அரசில் இணைந்து அதனை ஆதரிக்க ஒப்புக்கொண்டது. டட்லி சேனநாயக்க தமிழ் அரசுக் கட்சிக்கு 3 மந்திரிப் பதவிகள் கொடுக்க முன்வந்தார். நாலு கேட்டாலும் கொடுக்க ஆயத்தமாக இருந்தார். அது கட்சியின் கொள்கைக்கு எதிரானது என்று சொல்லி ஏற்க மறுத்தனர். கட்சியின் அங்கத்தவரல்லாத திரு. மு.திருச்செல்வம் அவர்கள் மந்திரிசபையில் சேரும்படி தந்தை செல்வாவினால் கேட்கப்பட்டார். அவர் ஓய்வு பெற்ற சட்டமா அதிபராகும். அவர் உள்ளூராட்சி அமைச்சராகினார். அவரிடம் மாவட்ட சபைக்கான வெள்ளை அறிக்கை தயாரிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. அம் முயற்சி இழுபட்டுக் கொண்டிருந்தது. வடகிழக்கு நிர்வாகத்தில் தமிழ் மொழியை உபயோகத்துக்குக் கொண்டுவர முடியுமா என்ற கேள்வி தலைதூக்கி நின்றது. கல்வி அமைச்சர் ஐ.எம்.ஆர்.ஏ.ஈரியகொல வடகிழக்கிற்கு வெளியே உள்ள தமிழ் மாணவர்களின் போதனா மொழியைச் சிங்கள மொழியாக மாற்ற அதிரடி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தார். வடகிழக்குத் தமிழ் பாடசாலைகளுக்கும் முஸ்லிம் பாடசாலைகளுக்கும் சிங்கள ஆசிரியர்களை அனுப்பத்தொடங்கினார். அதேவேளை கட்சிக்குள் பாராளுமன்ற உறுப்பினர்கள் செ.இராசதுரை, தீவகம் வி.நவரத்தினம், கா.பொ.இரத்தினம், செனற்றர் மாணிக்கம் ஆகியோர் அமிர்தலிங்கம் அவர்களைச் சாடிக்கொண்டிருந்தனர். தேசிய அரசாங்கத்தில் இருந்து வெளியேறும்படி நெருக்கினர். அதே வேளை வாலிப முன்னணியின் ஒரு பிரிவினரும் தமிழரசுக் கட்சி தேசிய அரசைவிட்டு வெளியேற வேண்டும் என்று வற்புறுத்தினர். தந்தை செல்வா அவர்கள் தான் நிபந்தனையற்ற ஆதரவு தருவதாகப் பிரதமர் டட்லிக்கு வாக்களித்திருப்பதாகவும், வெளியேறுவது தருமமல்ல வென்றும் பதிலளித்துக்கொண்டிருந்தார். இக்கால கட்டத்தில் கட்சி சம்பந்தமான சகல கேள்விக்கணைகளும் அமிர்தலிங்கம் அவர்களை நோக்கியே வீசப்பட்டன. தந்தை செல்வா அவர்களை நோக்கியல்ல. அது இன்னொருபுறத்தில் தமிழ் சமுதாயம் அவர் தலைமையை ஏற்று நிற்பதை விளம்பரப்படுத்தியது. பிரதமர் டட்லி சேனநாயக்காகூட அமிர்தலிங்கம் அவர்களோடுதான் பிரச்சினைகள்பற்றிப் பெரும்பாலும் கலந்து முடிவு செய்தார். அமிர்தலிங்கம் அவர்கள் ஏழு அதிமுக்கிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்தது. இப்படியான



ஒரு இக்கட்டான சூழ்நிலையில், அமிர்தலிங்கம் அவர்கள் மிகவும் சாதுரியமாக கட்சி சிதைவடையாமல் பாதுகாத்து, சாதனைகளை வரலாற்றில் பதித்து, தமிழ் இனத்தை வழிநடத்தியதை அவதானிக்க முடிகிறது.

முதலாவது பிரச்சினை: தமிழ் அரசுக் கட்சி, யூ.என்.பி. தலைமையிலான தேசிய அரசில் சேர்ந்ததை ஒருபகுதித் தமிழர்கள் மட்டுமல்லாமல், இடதுசாரிகளும் வன்மையாகக் கண்டித்தனர். மலைநாட்டில் உள்ள பூண்டுலோயாவில் நடந்த ஒரு பகிரங்கக் கூட்டத்தில் அதற்கு அமிர்தலிங்கம் அவர்கள் பின்வருமாறு பதில் அளித்தார். "தமிழ் அரசுக் கட்சி தேசிய அரசாங்கத்தை அமைக்க யூ.என்.பிக்கு ஆதரவு வழங்கி இருக்காவிட்டால், இதுவரையில் இந்த நாட்டில் ஒரு சர்வாதிகார அரசு தோன்றியிருக்கும். நாங்கள் அடிமைகளாகியிருப்போம்" என்று அமைச்சர் ஜே.ஆர்.ஜயவர்த்தன கூறுகிறார். நாங்கள் ஜனநாயக அடிப்படைகளுக்காகவே தேசிய அரசில் சேர்ந்தோம். எங்களுக்கு ஜனநாயகத்தில் பற்று உண்டு. நாங்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை உடையவர்கள்."

இரண்டாவது பிரச்சினை: தமிழர் விரோதியான கல்வி அமைச்சர் ஐ.எம்.ஆர்.ஏ.ஈரியகொலயிடம் கல்வி வெள்ளை அறிக்கை தயாரிக்கும் பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்தது. அவர் தமிழர்களுக்கு எதிரான தனது இனவிரோத நடவடிக்கையைத் துரிதப்படுத்த வெள்ளை அறிக்கையைப் பயன்படுத்தினார். அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட முன்னரே, அதில் உள்ள விதிகளை நடை முறைப்படுத்துவதில் ஈரியகொல ஈடுபட்டிருந்தார். வடகிழக்கிற்கு வெளியே உள்ள தமிழ்ப் பிள்ளைகளின் போதனா மொழியை, சிங்கள மொழியாக மாற்ற நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தார். குறிப்பாக பெருந்தோட்டப் பாடசாலைகளில் பயிலும் இந்திய வம்சாவழித் தமிழ்ப் பிள்ளைகளின் போதானா மொழியை சிங்களமாக மாற்ற முயன்றுநின்றார். வேறும், பெரிய பாடசாலைகளில் உள்ள தமிழ்ப் பிரிவுகளை மூடினார். மலைநாட்டில் உள்ள ஹாகலை, தலவாக்கொல்லை அரசினர் பாடசாலைகளின் தமிழ்ப் பிரிவுகள் மூடப்பட்டன. நுகேகொடை சென் ஜோன்ஸ் கல்லூரி, கொழும்பு கோட்டை கிறிஸ்தியன் கல்லூரி என்பனவற்றின் தமிழ்ப் பிரிவுகளும் மூடப்பட்டன. வடகிழக்கில் உள்ள தமிழ் முஸ்லிம்

பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்களை சிங்களம் படிப்பிக்க அனுப்பத் தொடங்கினார். மட்டக்களப்பில் உள்ள கல்குடாத் தொகுதி யூ.என்.பி. பாராளுமன்ற உறுப்பினர் கே.டபிள்யூ.தேவநாயகம் தனது தொகுதித் தமிழ்ப் பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்பும்படி பாராளுமன்றத்தில் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார். இப்படியான சூழ்நிலையில் அமிர்தலிங்கம் அவர்கள் பிரதமர் டட்லி சேனநாயக்காவை அடிக்கடி சந்தித்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வெற்றி கண்டார். ஒருமுறை தமிழ் மாணவர்களது போதனா மொழிவிடயமாக தமிழ் அரசுக் கட்சியினர் பிரதமர் டட்லி சேனநாயகாவுடன் பேசிய பின்னர், கூடத்தைவிட்டு வெளியே வந்தனர். அப்பொழுது ஊடகவியலாளர்கள் பிரதமரிடம் 'மாணவர்களது போதனா மொழிவிடயமாக என்ன முடிவு செய்துள்ளீர்கள?' என்று வினாவினர். உடன் பிரதமர் டட்லி சேனநாயக்கா அமிர்தலிங்கம் அவர்களின் கையில் பிடித்து இழுத்து "இவர் பதில் அளிப்பார்" என்றார். அதனைத் தொடர்ந்து அமிர்தலிங்கம் கூறினார்: "மாணவர்களது போதனா மொழியைப் பொறுத்தவரை, தமிழ் மாணவர்களது போதனா மொழி தமிழாக இருக்கும். கல்விக் கொள்கை சம்பந்தமான வெள்ளை அறிக்கை அமைச்சரவையில் கவனிக்கப்படும் என்று பிரதம மந்திரி அவர்கள் ஒப்புதல் தந்துள்ளார்" என்று கூறினார். யூ.என்.பியின் தேசிய அரசாங்கத்தில் தமிழ் அரசுக் கட்சி அங்கமாக இருந்த காரணத்தால்தான், கல்வி அமைச்சர் ஈரியகொலயின் தமிழர் விரோத செயல்களை முறியடிக்க முடிந்தது. வடகிழக்கிற்கு வெளியே தமிழ் மாணவரின் போதனா மொழியாக தமிழை ஏற்கவைத்தது ஆர்ப்பாட்ட மில்லாத ஒரு பெரும் சாதனை. தலையை மூடிப் பேரலையாக வந்த அபாயத்தைத் தடுத்து நிறுத்திய பெருமையின் முதன்மை அமிர்தலிங்கம் அவர்களுக்கே உரியது.

மூன்றாவது தமிழ் மொழி உபயோகம்: தமிழ் அரசுக் கட்சி உத்தியோக மொழி விடயமாகப் பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு முறையிட்டதன் பேரில், அவர் செயற்பட முடியாதிருந்த 1958 தமிழ் மொழி (விசேட) சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்து ஆவன செய்யும்படி அமைச்சர் திருச்செல்வம் அவர்களைக் கேட்டுக்கொண்டார். திருச்செல்வம் அவர்கள் சாதுரியமிக்க துரித செயற்பாடுகள் மூலம் தேவையான சட்ட மாற்றங்களை ஒரு குறுகிய



கால எல்லைக்குள் செய்ய அது சட்டமாக்கப்பட்டது. எதிரிகள் களம் அமைக்க முன்னரே அதிரடியாக தமிழ் மொழிச் சட்டம் 1966, ஜனவரி 8ந் திகதி நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 72 அங்கத்த வர்களும் எதிராக 40 அங்கத்தவர்களும் வாக்களித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மூதூர் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் அப்துல் மஜீத் சார்பாக வாக்களித்தார். அதனால் வடகிழக்கில் தமிழ் மொழி அரசகரும மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் சட்டப்படி ஏற்படுத்தப்பட்டது. அச்சட்டத்தில் சொல்லப்பட்டது:

1 1956 உத்தியோக மொழிச் சட்டம் 33, சிங்களம் அரசகரும மொழியாக இருக்கும் என்று கூறுகிறது. அதற்கு ஊறுபடாதவிதத்தில் தமிழ் மொழி பயன்படுத்தப்படும்.

2 அ. வடக்கு கிழக்கு மாகாணங்களில், கசல அரசாங்க, பொதுத்தாபன, கூட்டுத்தாபன கட்டமைப்புகளிலும் - நாளாந்த நிர்வாகத்துக்கும், ஆவணப்பதிவுகளுக்கும் - தமிழ் மொழி பயன்படுத்தப்படும்.

ஆ. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிரசைகளுடனும் அல்லது தமிழ் மொழியில் நிர்வாகம் செய்யும் உள்;ர் சபைகளுடனும் எல்லாவிதமான எழுத்து மூலமான தொடர்புகளும் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் தமிழ் மொழிமூலமே மேற்கொள்ளப் படவேண்டும்.

3 வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அலுவலகங் களாலும் கூட்டுத்தாபனங்களாலும், பிற அரச நிறுவனங் களாலும் வெளியிடப்படும் வர்த்தமானிகள், வெளியீடுகள், சுற்றுநிருபங்கள் தமிழ் மொழியில் அமையவேண்டும்.

1966 தமிழ் மொழிச் சட்டம், 1958இல் பண்டாரநாயக்கா தமிழ் மொழி (விசேட) சட்டத்தில் வழங்கியதிலும் கூடிய அதிகாரம் தமிழுக்கு வழங்கி உள்ளதாக எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். அரசாங்கம் பொலிசாரை ஏவியது. பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைச் சுட்டும், துரத்தி அடித்தும் குழப்பக்காரர்களைக் கலைத்தனர். பொலிசார் சுட்டதில் இரத்தினசார என்ற பௌத்த பிக்கு மரணமானார். மொழி உரிமை கேட்டதற்காக 1956இல்

அமிர்தலிங்கம் அவர்களது மண்டையைக் காலி முகத்திடலில் அடித்து உடைத்த, 1958இல் கொழும்பு புல்லஸ் வீதியிலும், 1961இல் பணாகொடை இராணுவ முகாமிலும் இரண்டு தடவைகள் அமிர்தலிங்கம் அவர்களைச் சிறைவைத்த அதே சிங்கள அரசு, அமிர்தலிங்கம் அவர்களின் இராசதந்திரத்துக்கு எடுபட்டு, பௌத்தபிக்கு இரத்தினராசவின் குருதியை கொழும்பு வீதிகளில் அபிசேகம் செய்து தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்தை 1966இல் வழங்கியது. தமிழ் அரசுக் கட்சியின் இராசதுரை-நவரத்தினம் கோஷ்டி உட்படச் சில பாராளுமன்ற உறுப்பினர்களும், வாலிப முன்னணி யினரில் ஒரு பிரிவினரும் அமிர்தலிங்கம் அவர்கள் தேசிய அரசோடு சேர்ந்துநின்று தமிழர் பிரச்சினையைத் தீர்க்க எடுத்த முயற்சிமீது தொடர்ந்து குற்றம் கண்டபோதிலும், வடகிழக்கில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாகச் சட்டப்படி சிங்கள அரசாங்கம் ஏற்கவைத்தமை, அமிர்தலிங்கம் அவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்-முஸ்லிம் மக்களுக்கும் கிடைத்த மகத்தான வெற்றியாகும். 1956 தொடக்கம் 1964 வரை எதிர்தரப்பில் நின்று ஆர்ப்பாட்டங்கள், கறுப்புக்கொடிகள், பாத யாத்திரைகள், சட்ட மறுப்புக்கள், சத்தியாக்கிரகங்கள் மூலம் செய்ய முடியாதவற்றை, தேசிய அரசில் மூன்று வருடங்கள் தமிழ் அரசுக் கட்சி ஒட்டி நின்றபொழுது செய்து முடிக்க முடிந்தது. அதற்குக் காரணம் அமிர்தலிங்கம் அவர்கள் கட்சியின் ஒருபிரிவினரின் சாணக்கியமற்ற உளறலைக் கேட்டு, தேசிய அரசைவிட்டு அவசரப்பட்டு வெளியேறாமல், ஒட்டி நின்று கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தியமையேயாகும். முன்னர் அரசாங்கத்தை மூர்க்கமாக முன்னணியில் நின்று எதிர்த்த அமிர்தலிங்கம் அவர்களின் போக்கில் பாரிய மாற்றத்தை அவதானிக்க முடிகிறது. காலவோட்டத்தில் சிங்கள அரசின் இனவாதம் தணிவதை மையமாக வைத்து, அதற்கு ஏற்ப இராசதந்திர அணுகுமுறைகளில் மாற்றத்தைக் கைக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்த்ததை அவதானிக்க முடிகின்றது. வயது முதிர்ச்சியோடு அணுகு முறைகளும் நிதானம் பெறுகின்றன. கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் - வண்டியைத் தவறவிடாமல் அதில் ஏறிப்பிரயாணம் செய்கிறார். இக்கால கட்டத்தில் திரு.அமிர்தலிங்கம் அவர்கள் அணுகுமுறைகளில் வேறுபட்டு அனுபவப்பட்ட இராசதந்திரியாக உயர்ந்து நிற்கிறார்.



நாலாவது பிரச்சினை: 1967 பெப்புருவரியில் இந்திய வம்சாவழித் தமிழர் தொடர்பான இந்திய-இலங்கை உடன்படிக்கை (நடைமுறைப்படுத்தல்) மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பாகத் தமிழ் அரசுக் கட்சி 3 நிபந்தனைகள் விதித்தது:

1 கட்டாய நாடுகடத்தலை நிறுத்தவேண்டும்.

2 கட்டாயமாக யாராவது நாடு கடத்தப்பட்டால், அதற்கு எதிராக மேன்முறையீடு செய்ய சட்ட வசதி செய்ய வேண்டும்.

3 பதிவு செய்யப்பட்ட பிரசைகளுக்கு பிரத்தியேக இடாப்பு வைத்திருக்க வேண்டும்.

பிரதமர் டட்லி சேனநாயக்கா, எவரும் கட்டாயமாக நாடுகடத்தப்பட மாட்டார்கள் என்று தமிழ் அரசுக்கட்சிக்கு வாக்குறுதி அளித்தார். அவர் தனது வாக்குறுதியைக் காப்பாற்றினார். முன்னைய ஒப்பந்தத்தில் இந்தியா 7 பேருக்கு பிரசாவுரிமை வழங்கி அவர்களை இந்தியாவுக்கு அழைத்தபின்னர், இலங்கை 4 பேருக்குப் பிரசாவுரிமை வழங்கும் என்று இருந்தது. இந்தியாவுக்கு அனுப்பும்வரை காத்திராமல் பிரசாவுரிமை வழங்கப்படும் என்ற புதிய விதி சட்டத்தில் சேர்க்கப்பட்டது. இந்தச் சட்டப்படி 75,000 பேருக்குப் பிரசாவுரிமை வழங்கப்பட்டது. இந்திய வம்சாவழித் தமிழர் பற்றிய புதிய சட்டம் தமிழரசுக் கட்சியின் முயற்சிக்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றியாகும். இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியதும் தொண்டமான் ஊடகவியலாளர்களுக்குக் கூறியது, "போராட்டம் ஒருவகையாக முடிவுக்கு வந்தவிட்டது. நாடற்றவர்கள் என்ற நிலையில் எமது தமிழ்மக்கள் அனுபவித்த துன்பம் ஒழிந்தது."

இந்திய-இலங்கை உடன்படிக்கை மசோதா பற்றிய விவாதம் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற வேளை அமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றிய உருக்கமான உரை இந்த அத்தியாய முடிவில் அமைகிறது.

ஐந்தாவது பிரச்சினை: அரசு கள்ளக் குடியேற்றத்தைத் தவிர்ப்பதற்காக அடையாள அட்டை அறிமுகப்படுத்த ஆட்களைப் பதிவு செய்தல் சட்டம் கொண்டு வந்தது. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் யாவரும் அறிமுக அட்டை வைத்திருக்கவேண்டும் என்பது சட்டம். இச்சட்டத்தைத் தீவுப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்

திரு.வி.நவரத்தினம் கடுமையாக எதிர்த்ததோடு கட்சியைவிட்டும் நீங்கினார். அடையாள அட்டையை வைத்துக்கொண்டே இராணுவம் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்தும் என்பதே அவரது வாதம். காலம் அவரது வாதம் பிழை என்பதை அத்தாட்சிப்படுத்துகிறது. இன்றைய சூழ்நிலையில் பாதுகாப்புப் படைகளின் துன்புறுத்தலில் இருந்து தப்புவதற்கு அது துணை புரிகிறது. எழுந்தமானத்துக்குக் கைதுகள் நிகழாமல் ஓரளவுக்காவது தடுக்கிறது. திரு.நவரத்தினம் சிந்தனையாளர் என்பதை மறுப்பதற்கு இல்லை. அவர் அதனை அமிர்தலிங்கம் அவர்களில் தவறுபிடிப்பதற்காகப் பயன்படுத்தியமை தெளிவாகத் தெரிகிறது. கட்சியின் மூளையென்று ஒரு சந்தர்ப்பத்தில் வர்ணிக்கப்பட்ட அவர், தன்னை அதிபுத்திசாலியாகச் சித்தரித்துக்கொண்டு காரிய மாற்றியுள்ளார். அந்த அம்சம் அவரின் தூரப் பார்வையை மறைத்துவிட்டது. அவர் செய்த மிகப் பெருந்தவறு, ஜனநாயக வழியில் நின்று கட்சியின் பெரும்பான்மையினரின் முடிவை ஏற்க மறுத்ததோடு, இந்திய-இலங்கை மசோதா சட்டமாக்கப்பட்ட பொழுது சேர்ந்து வாக்களிக்காமல் வெளியில் நின்று பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தும், பின்னர் ஆளடையாளப் பதிவுச் சட்டவாக்கத்தின் பொழுது கட்சியை விட்டு வெளியேறியமையுமாகும். அவர் தனிக் கட்சி அமைத்தார். பிரிந்து சென்று தமிழ் ஈழம் அமைப்பதுதான் பிரச்சினைக்குத் தீர்வு என்றார். திரு. சுந்தரலிங்கமும் அதனையே சொன்னார். ஆயுத இயக்கங்களும் அதனையே உயர்த்திப் பிடித்திருந்தன. விடுதலைப் புலிகளே அந்த விடயத்தில் கோட்டைவிட்டு நிற்கிறார்கள். மக்களுக்கு ஜதார்த்தம் புரிகிறது. 'தமிழ் ஈழம்' கோஷம் கேட்க நன்றாக இருக்கிறது. அவ்வளவுதான்.

ஆறாவது பிரச்சினை: அமிர்தலிங்கம் அவர்களை எதிர்த்தவர்கள் தமிழரசுக் கட்சியின் இராசதுரை-நவரத்தினம் கோஷ்டி மட்டுமல்ல. லங்கா சமசமாசக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கொல்வின் ஆர்.டி சில்வாவும் சொட்டை சொன்னார். அதாவது தமிழ் அரசுக் கட்சி தமிழர்களின் உரிமைகளை பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு விற்று விட்டதாகவும், கட்சி உடையப் போவதாகவும், முதலாளிகள் முதலாளிகளுடன் சேர்ந்துவிட்டார்கள் என்றும் சாடினார். அதற்கு அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் பின்வருமாறு பதிலளித்தார்:



"கனம் கொல்வின் ஆர்.டி.சில்வா அவர்கள், எமது கட்சி அங்கத்தவர் தீவுப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் நவரத்தினம் எமது கட்சிக் கொறடாவை மீறியதைச் சொல்லி, என்னைக் கிண்டல் செய்தமை என்னை நோகடிக்கிறது. அத்தோடு தமிழ் அரசுக் கட்சி உடைகிறது என்றும் கிண்டல் செய்தார். நான் நினைக்கிறேன் அவரது சொந்த அனுபவமே அவர் எமது கட்சி உடையப்போகிறது என்று இரக்கம் கொள்ளச் செய்திருக்கிறது என்று. இந்த மனிதர் ஒருகாலத்தில் இந்திய போல்செவிக்-லெனினிஸ்ற் கட்சித் தலைவராக இருந்தது எனக்கு ஞாபகம். அந்தக் கட்சி உடைந்து சிதறியது. நான் அறிந்தவரை அவர் அதன் பின்னர் பொல்செவிக் லங்கா சமச மாஜ கட்சியில் சேர்ந்தார். அதுவும் நீண்ட நாட்கள் நிலைக்கவில்லை. பின்னர் அவர் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்தார். பரிதாபம். அதுவும் உடைந்தது. அண்மைக்காலம் வரை தனது சகபாடிகளாக இருந்த எட்மன்ட் சமரக்கொடி, மெரில் பெர்னான்டோ இருவரையும் சென்ற கிழமை அவர் திட்டுவதை நான் கேட்டேன்."

தொடர்ந்து பேசினார்: "நாங்கள் முதலாளித்துவ கட்சியுடன் இணைந்து விட்டதாகச் சொல்கிறார். 1960, 1965 ஆம் ஆண்டுகளில் லங்கா சமசமாஜக் கட்சி, தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவை வேண்டிநின்றது. அப்பொழுது தமிழ் அரசுக் கட்சி முதலாளித்துவக் கட்சி இல்லையா? ஒரு வேளை அப்பொழுது சில்வா முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்திருக்கலாம். இப்பொழுது அவர் ஏழைத் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவராக உள்ளாரோ? இந்த நாடு முழுமைக்கும் அவர் வகுப்பு விளங்கும். அவர் சேர்ந்துள்ள திருமதி பண்டாரநாயக்கா எந்த வகுப்பைச் சேர்ந்தவர்? அவரும் டாக்டர் சில்வாவைப் போல தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவரோ?"

தொடர்ந்து கூறினார்: "நான் ஒரு காலத்தில் டாக்டர் சில்வாவின் இரசிகன். இப்பொழுதும் அவரது ஆங்கில புலமையினதும், சட்ட வித்துவத்தினதும் இரசிகன். யாழ்ப்பாணப் பருவநீதிமன்றத்தில் அவரின் கனிட்ட உதவியாளனாகக் கடமை பார்த்தவன் நான். அச்சமயத்திலே அவர் யூரிகள் அனைவரையும் வசியப்படுத்தி ஒரு குற்றவாளியை விடுதலை செய்வித்ததைப் பார்த்தேன். எனக்கு நன்றாகத் தெரியும் அந்தக் குற்றவாளி கொலை செய்தவர் என்று. அது வேறு ஒருவகைச் சூழ்நிலையில் நான் கண்ட டாக்டர் கொல்வின்."

கொல்வின் ஆர்.டி சில்வா இலங்கையின் மிகப் பிரசித்தி பெற்ற சட்டமேதை. 'நம்பர் வன்' மேதை என்று கூறலாம். அவரையே அமிர்தலிங்கம் . அவர்கள் வாதத்தால் அடித்துமுறிப்பதைக் காண்கின்றோம். அமிர்தலிங்கம் அவர்களிடம் இருந்த ஒரு பெருந் திறமை அவர் நொடிப் பொழுதில் தன்மீது ஏவும் நாகாஸ்திரத்தைக்கூட தவிடுபொடியாக்கும் திறமையும் ஆற்றலும் கைவரப் பெற்றவராக இருந்தமையே. சிங்கள உலகில் மேதாவிலாசம் உடையவர்களான டாக்டர் என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்தனா, டபிள்யூ.தகநாயக்கா, ஆர்.ஜி.சேனநாயக்கா போன்றவர்களே அமிர்தலிங்கம் அவர்களிடம் நிரம்ப வாங்கிக்கட்டியவர்கள்தான். அதனால்தான் அவர் மறையும் வரை சிங்கள உலகம் அவரைத் தமது உரிமைகளைப் பங்குபோட்டுப் பறிக்க அவதரித்த சோழ மன்னர்களின் வாரிசாகக் கருதிப் பகைத்தனர்.

இக்கால கட்டத்தில் மார்க்சியத்தின் பாதுகாவலர் டாக்டர் என்.எம்.பெரேரா, உள்ளூராட்சி அமைச்சர் திருச்செல்வம் அவர்கள் மீது ஒரு நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வந்தார். அதாவது திருச்செல்வம் அவர்கள் தண்ணீர்த் திட்டங்களை எல்லாம் தமிழர் பிரதேசங்களுக்கு வழங்கி உள்ளதாக. அவர் அவ்வகையான எதிரடி நடவடிக்கை மேற்கொள்ளக் காரணம் அக்காலப்பகுதியில் தமிழர் பாரம்பரிய பிரதேசங்களில் நிறுவப்பட்ட தண்ணீர்த் திட்டங்களே. அவையாவன: வடக்கில் வாதரவத்தை, கட்டைவேலி, வட்டுக்கோட்டை ஆகிய ஊர்களிலும், கிழக்கில் துறைநீலாவணை, நற்பட்டிமுனை ஆகிய ஊர்களிலும் அமைக்கப்பட்ட தண்ணீர்த் திட்டங்களையே டாக்டர். பெரேரா சுட்டிக்காட்டினார். இப்பகுதி மக்கள் நன்னீருக்காக மைல் கணக்காக நடக்கவேண்டியிருந்த பிரதேசங்கள். புத்தூர் கிழக்கில் உள்ள வாதரவத்தை தொண்டைமனாறு ஏரியோரம் உள்ள வளங்கள் குறைந்த சிறு கிராமம். காலப்போக்கில் கிணறுகள் யாவுமே உவர்நீராகிவிட்டன. ஆவரங்கால் க.சின்னத்துரை, வாதரவத்தை வாசியான கிராமசபை அங்கத்தவர் கந்தசாமியையும் அழைத்துக் கொண்டு கொழும்பு சென்று, அமைச்சர் திருச்செல்வம் அவர்களுக்கு வாதரவத்தைக் கிராமத்து நீர்ப்பிரச்சினையை விளக்கி உதவி கோரினார். அமைச்சர் நினைத்தவுடன் ஒரு இடத்தைத் தெரிவு செய்ய முடியாது. அதற்கான ஆய்வுகள் மேற்கொண்டபின், புத்தூர் மேற்கிலிருந்து - கிட்டத்தட்ட இரண்டு மைல்கள் தொலைவில் இருந்து வாதரவத்தைக்குத் தண்ணீர் வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. தண்ணீர் வார்ப்பது கோடி புண்ணியம் கொண்டு வரும். அதுகூட டாக்டர் பெரேராவுக்கு எரிச்சலை ஊட்டியிருக்கிறது. இவர்கள்தான் இலங்கையின் மாநாம தேரர் வழிவந்த சமதர்மப் போதகர்கள்.



தேசிய அரசில் தமிழ் அரசுக் கட்சி சேர்ந்த வேளை மாவட்ட சபை சட்டமாக்கல் ஒரு நிபந்தனையாக விருந்தது. 1968இல் யூ.என்.பி. கட்சியின் போக்கில் இறுக்கம் தென்படத் தொடங்கியது. தொடர்ந்தும் தேசிய அரசில் இருப்பதில் பயன் இல்லை என்பது அமிர்தலிங்கம் அவர்களுக்கு விளங்கியது. 1967 நவம்பரில் நடந்த தமிழ் அரசுக் கட்சிப் பொதுச்சபையில் 'தேசிய அரசில் இருந்து கட்சி வெளியேறவேண்டும்' என்ற வாலிப முன்னணியின் பிரேரணையை தீவுப் பகுதி பா.உ. வி.நவரத்தினம், மட்டக்களப்பு பா.உ. செ.இராசதுரை திருகோணமலை பா.உ. எஸ்.எம்.மாணிக்கராசா ஆகியோர் முன்வைத்தனர். அதில் தந்தை செல்வநாயகம் அவர்கள் சில திருத்தங்கள் செய்து சபைக்குச் சமர்ப்பித்தார். அதனைச் சபை ஏகமனதாக ஏற்றது. ஆனாலும் இளைஞரிடையே அதிருப்தி தொடர்ந்து இருந்தது. பாராளுமன்றத்தில் கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்த பொழுது, அந்தப் பணி அமிர்தலிங்கம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் 1968 ஆகஸ்ட் மாதம் 10ந் திகிதி பாராளுமன்றத்தில் "தமிழ் அரசுக் கட்சி தொடர்ந்தும் தேசிய அரசை ஆதரிக்கும்" என்று தெரிவித்தார். அந்த உரையை ஆற்றி வெளியே வந்ததும் பத்திரிகை நிருபர் ரி.சபாரத்தினத்திடம் "என்னுடைய பரிதாப நிலையைப் பாருங்கள். எனக்குத் தெரியும் உந்த மனிதர் டட்லி எங்களைக் கைவிடுவார் என்று. அவர் முற்றாக அப்படிச் செய்யுமட்டும் நான் ஏமாற்றுகிறார் என்று வெளியே சொல்ல முடியாது" என்றார். பேச்சுவார்த்தையை முறித்த பழி தமிழரசுக் கட்சியின்மீது விழாமல் இருக்க அப்படி ஒரு பொறுமையைக் கையாள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார். வரலாறும் வண்டியைத் தவறவிட்டவர்கள் என்று குற்றம் சாட்டாமலிருக்க அது உதவியது. அதாவது சிங்கள அரசே தொடர்ந்தும் 1965 ஒப்பந்தத்தை முறித்தது என்று சொல்ல அது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

1968 செப்ரெம்பர் மாதம் தேசிய அரசைவிட்டு தமிழரசுக் கட்சி வெளியேறும் சந்தர்ப்பத்தை டட்லி சேனநாயக்காவே ஏற்படுத்தினார்.

சைவப் பெருமக்கள் கேட்டதற்கு இணங்க அமைச்சர் திருச்செல்வம் அவர்கள் திருகோணமலையில் கோணேஸ்வரர் ஆலயம் உள்ள பிரடரிக் கோட்டையைப் புனித பிரதேசமாக்க முயற்சி மேற்கொண்டார். பௌத்த மத தலைவர்கள் அது பற்றிப் பிரதமர் டட்லி சேனநாயக்காவை விசாரித்தார்கள். அவர் தன்னைக் கேளாது அம்முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக திருச்செல்வத்தின் மீது குறை கண்டார். அது தன்னுடைய உள்;ராட்சி அதிகாரத்துள் வருவதால் விசாரிக்கவில்லை என்று அவர் பதில் அளித்தார். அதனால் ஏற்பட்ட சர்ச்சையைத் தொடர்ந்து திருச்செல்வம் அவர்கள் அமைச்சரவையில் இருந்து விலகினார். அதனைத் தொடர்ந்து தமிழ் அரசுக் கட்சி தேசிய அரசை ஆதரிப்பதைக் கைவிட்டது. எதிர்க் கட்சிக்குச் சென்றது.

# அதிகாரம் 21
# நாடற்ற பத்து இலட்சம் தமிழ் மக்கள்

1967 இலங்கையின் பாரம்பரிய தமிழர்கள் விடயத்தில் மட்டும் அல்லாமல் இந்திய வம்சாவழித் தமிழர்கள் விடயத்திலும் மிக்க அக்கறை உடையவராக அமிர்தலிங்கம் அவர்கள் திகழ்ந்தார். பெப்புருவரி 7ந் திகதி பராளுமன்றத்தில் நாடற்றவர்களாக ஆக்கப்பட்ட பத்து இலட்சம் தமிழ் மக்கள் பற்றிப் பேசும் பொழுது, பிரச்சினையைத் தீர்க்கச் சூழ்நிலை பொருத்தமாக இருப்பதாகவும், அவர்கள் விடயத்தில் மனிதாபிமானத்துடன் நடந்து பிரச்சினையைத் தீர்க்கும்படியும் வேண்டுகோள் விடுத்தார். அப்பேச்சின் சில பகுதிகள் மட்டும் தரப்படுகின்றன.

"கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டிலே வாழுகின்ற பத்து இலட்சம் தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கின்ற ஒரு சட்டத்தை யொட்டி நடபெறும் இந்த விவாதத்திலே தமிழிலே பேசவேண்டியது அத்தியாவசியம் என்ற காரணத்தினால் நான் தமிழிலே பேச விரும்புகின்றேன். இந்த நாட்டிலே உள்ள தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க முற்பட்ட போதிலும் அந்த



அந்தக் காலத்திலே எதிர்க் கட்சியில் இருந்தவர்கள் இனவாத கண்ணோட்டத்திலே இந்தப் பிரச்சினையை அணுகிய காரணத்தினாலே இது ஒரு தீராத பிரச்சினையாக இருந்து கொண்டு வருகிறது."

"இன்று நேற்று அல்ல நமது நாடும் இந்தியாவும் விடுதலை அடைய முன்னரே இந்தப் பிரச்சினையை ஒட்டி இலங்கையின் அரசியல் தலைவர்களுடன் இந்திய அரசியல் தலைவர்கள் பேச்சுவார்த்தைகள் நடாத்தி இருக்கிறார்கள். 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டும் இதனால் பாதிக்கப்படுகின்ற மக்களைக் கலந்து கொள்ளாமல், அவர்களுடைய கருத்துக்களை அறிய முற்படாமல் அவர்களும் மனிதர்கள், மனித உணர்வும் உரிமைகளும் உடையவர்கள் என்று உணராமல், பண்டமாற்றுக்குரிய பொருட்களாக அவர்களைக் கருதிக்கொண்டு, வாயில்லாத பூச்சிகளாக அவர்களை நினைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று இந்நாட்டு அரசியல் வாதிகள் நினைத்த காரணத்தினால்தான் இந்தப் பிரச்சினை தீராமல் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்கின்றது. 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் சட்டபூர்வமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று கருதி, இந்தியர்-பாகிஸ்தானியர் பிரசா உரிமைச் சட்டத்தை நிறைவேற்றினார்கள். அந்நாளிலே இந்தத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரே தாபனமாக இருந்த இலங்கை-இந்தியக் காங்கிரசும், அவர்களுடைய பிரதிநிதிகளாக இச்சபையிலே வீற்றிருந்த எட்டு அங்கத்தவர்களும் அந்தச் சட்டம் அக்கிரமானது என்று அதனை எதிர்த்தார்கள். இந்த நாடடிலே வாழுகின்ற தொழிலாளர் இயக்கங்களைச் சேர்ந்த அத்தனைபேரும் - அன்றைய சமசமாசக் கட்சியில் இருந்தவர்கள், கொம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தவர்கள், இந்திய பொல்செவிக் லெனின் கட்சியில் இருந்த கொல்வின் ஆர்.டி.சில்வா, இன்று பேசிய பாணந்துறை அங்கத்தவர் (திரு.லெஸ்லி குணவர்த்தன) ஆகியோர்களும், இச்சபையிலே வீற்றிருந்த மற்றும் பல அங்கத்தவர்களும் அந்தச் சட்டத்தை எதிர்த்தார்கள். அவர்கள் மாத்திரம் அல்ல இந்த நாட்டு தமிழினத்தின் பிரதிநிதிகளான கௌரவ காங்கேசன்துறை அங்கத்தவரும் அவரைச் சேர்ந்தவர்களும் அந்தச் சட்டத்தை எதிர்த்தார்கள். இந்திய அரசாங்கமும் - காலம் சென்ற பிரதமர் நேருவினுடைய அரசாங்கம் - அந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள

மறுத்தது. இவ்வளவு எதிர்ப்புகளுக்கு மத்தியில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்று அன்று அரசாங்கம் நினைத்தது. ஆனால், அன்று நிறைவேற்றப்பட்ட சட்டம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக அதனை வளர்த்தது. இந்த நாட்டின் அரசியலிலே இந்தச் சட்டம் ஒரு புரையோடிய புண்போல இப்பிரச்சினையை ஆக்கிவிட்டது என்றே நான் கருதுகிறேன்."

தொழிலாளர் நலன் சார்ந்த கட்சிகள் வெளிப்படையாக எதிர்ப்புக் காட்வில்லை என்றும், ஆனால் சுதந்திரக் கட்சி இனவாத கண்ணோட்டத்தில் பிரச்சினையை அணுகுவதாகவும் கூறிவிட்டுத் தொடர்ந்து பேசுகையில் சொன்னார்:

"இந்தியர்-பாகிஸ்தானியர் பிரசா உரிமைச் சட்டத்தை நிறைவேற்றியதோடு இலங்கை-இந்தியர் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று அரசாங்கம் நினைத்தது. ஆனால், நடந்தது என்ன? ஒரு இலட்சத்து முப்பத்தையாயிரம் பேர்வரை குடியுரிமை பெற்றார்கள். எஞ்சியவர்கள் நாடற்றவர்கள் என்ற ஒரு வகுப்பிலே இந்த நாட்டில் வாழ்ந்துகொண்டு, இங்கேயே உழைத்துக் கொண்டு, இந்நாட்டின் செல்வத்துக்குத் தமது உழைப்பைக் கொடுத்துக்கொண்டு, இந்த நாட்டின் அரசியல் வாழ்க்கையிலே பங்கற்றவர்களாக, நேற்று கௌரவ பாணந்துறை அங்கத்தவர் குறிப்பிட்டது போன்று, எந்த நேரத்திலும் ஒரு மனத் தாங்கலோடு, இந்த நாட்டின் ஆட்சிக்கு விரோதமான மனப்பான்மையோடு வாழக்கூடியவர்களாக விடப்பட்டார்கள். அப்படி விடப்பட்ட பத்து இலட்சம் பேரின் பிரச்சினையைத் தீர்க்கத்தான் 1954ஆம் ஆண்டு நேரு-கொத்தலாவல ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் பின்னர் எத்தனையோ தடவைகள் இரு நாடுகளின் பிரதம அமைச்சர்களும் சந்தித்துப் பேசினார்கள். ஆனால் பிரச்சினை தீர்க்கப்படவில்லை."

"இப்பொழுது நல்ல ஒரு சூழ்நிலை இந்த நாட்டிலே நிலவிக்கொண்டிருக்கிறது. சரித்திரத்தில் முதன் முறையாக இந்த நாட்டில் வாழும் மக்களில் எல்லாப் பகுதியினரும் ஒரு தேசிய அரசாங்கத்தில் இன்று இணைந்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது மிகவும் பொருத்தமானது. மிகவும்



சுலபமானது. மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களுடைய மாபெரும் ஸ்தாபனத்தின் சார்பில் இரண்டு நியமன அங்கத்தவர்கள் இந்தச் சபையிலே இன்று இடம் பெற்று இருக்கிறார்கள். இந்த நாட்டுத் தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் அத்தனைபேரும் அரசாங்கக் கட்சியில் அமர்ந்து இருக்கிறார்கள். இந்த விதமான சூழ்நிலையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் இதற்கு ஒரு நிரந்தர பரிகாரத்தைக் காண முடியும்."

"கௌரவ எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் அரசாங்கம் கொண்டு வருகிற எதனையும் எதிர்க்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் அணுகாமல் இந்த நாட்டைப் பல வருடங்களாகப் பாதித்துக்கொண்டு இருக்கின்ற ஒரு பெரிய அரசியற் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் இந்த மசோதாவை அணுகும்படி கேட்டுக்கொள்கின்றேன்."

"இங்கு கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மசோதாவின் அடிப்படை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தமாகும். அந்த ஒப்பந்தத்தினால் இந்தப் பிரச்சினையை முற்றாகத் தீர்க்க முடியாது. அந்த ஒப்பந்தத்திலே அவர்கள் கணக்கிட்ட 9 இலட்சத்து 75 ஆயிரம் மக்களில், 8 இலட்சத்து 25 ஆயிரம் பேருடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்குத்தான் ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டதாகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வளவு பேருடைய பிரச்சினையைக்கூட உடனடியாகத் தீர்க்கும் நோக்கத்தோடு அந்த ஒப்பந்தம் செய்யப்படவில்லை. 15 ஆண்டுகளிலே அதைத் தீர்ப்பதற்காக அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனபடியால் ஒரு நாளிலோ, ஒரு வருடத்திலோ, ஒரு அரசாங்கத்தின் ஆயுட் காலத்திலோ இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற அபிப்பிராயத்தை மனதிலே வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தை எதிர்க்க வேண்டாம் என்று நான் எதிர்க் கட்சிகளைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் முதல் விதியிலே அதன் நோக்கம் சொல்லப்பட்டுள்ளது. அதாவது, இந்த நாட்டிலே வாழுகின்ற இந்திய வம்சாவழியினரில் இலங்கைப் பிரசைகளாகவோ இந்தியப் பிரசைகளாகவோ ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்படாதவர்கள், ஒன்றில் இலங்கைப் பிரசைகளாகவோ அல்லது இந்தியப் பிரசைகளாகவோ ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதே ஒப்பந்தத்தின் நோக்கம்.

உண்மையிலே எந்த ஒரு மனிதனும், நாடு அற்றவனாக, தான் ஒரு நாட்டின் பிரசை என்ற நிலைமை அற்று வாழ்வது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சாசனத்துக்கு முரணானது. நமது நாடு ஏற்றுக்கொண்ட மனித உரிமை சாசனத்துக்கு முரண்பட்ட ஒரு நிலையிலேதான் இந்த நாட்டின் 10 இலட்சம் மக்கள் நாடற்றவர்களாக இருக்கிறார்கள்."

"கௌரவ சபாநாகர் அவர்களே, யார் இந்த நாடற்றவர்கள்? அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் அவர்களுடைய முன்னோர்களை இந்தியாவில் இருந்து இங்கு அழைத்து வந்தார்கள். மழையின்மையால் ஏற்பட்ட பஞ்சத்தால் வதைந்த மக்கள் புலம்பெயரச் சம்மதித்தார்கள். 1871 - 1881 ஆண்டுக் காலப் பகுதியில் வருடம் 24,000 பேர் கொண்டு வரப்பட்டார்கள். முதலில் ஆண்கள் மட்டும் கொண்டு வரப்பட்டார்கள். பின்னர் பெண்களும் கொண்டுவரப்பட்டார்கள். கோப்பி தேயிலை றப்பர்த் தோட்டங்களை ஆக்குவதற்கு அவர்களைப் பயன்படுத்தினார்கள். அற்ப ஊதியத்தைக் கொடுத்து அவர்களுடைய உழைப்பைக்கொண்டு தமக்குச் செல்வத்தைத் தேடினார்கள். காடு மேடாகக் கிடந்த பூமியைப் பொன்கொழிக்கும் பூமியாக இத்தொழிலாளர்கள் மாற்றினார்கள். அவர்களுடைய நெற்றி வியர்வை மாத்திரமல்ல - அவர்களுடைய இரத்தம் மாத்திரமல்ல, அவர்களுடைய உடல்கள்கூட தேயிலைச் செடிக்குப் பசளையாக மண்ணோடு மண்ணாய்க் கலந்தது. தலைமன்னாரில் இறக்கப்பட்டு மலைநாட்டை நோக்கி நடையில் கொண்டு செலல்லப்பட்டபொழுது வழிகளில் - பாம்பு கடித்து அல்லது மலேரியாவினால் அல்லது பட்டிணியால் - மரணமானவர்கள் எத்தனை பேர்? இந்த நாட்டு மண் முழுவதுமே சிதறிக் கிடக்கிறது, பரந்து கிடக்கிறது இத்தொழிலாளர்களுடைய முன்னோர்களின் எலும்புகள். அந்த விதமாகக் கொண்டு வரபப்பட்ட தொழிலாளர்கள் என்ன வாக்குறுதி கூறி அழைத்து வரப்பட்டார்கள்? அவர்களுக்கு இந்த நாட்டு மக்களைப் போல, சகல உரிமைகளையும் பெற்று வாழுகின்ற நிலைமை இருக்கும் என்ற உறுதியுடன் அழைத்து வரப்பட்டார்கள். அன்றைய ஏகாதிபத்திய அரசாங்கம் அளித்த வாக்குறுதி இது. அவர்களுக்கு இந்த நாடு தவிர வேறு நாடு தெரியாது. கடலையே கண்டறியாமல், மலை நாட்டில் தேயிலை றப்பர்ச் செடிகளைப் போல



வேரூன்றிவிட்டவர்கள் பலர் அங்கே இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பார்த்து "நீங்கள் நாடற்றவர்கள்" என்று சொன்னால் அது மனிதத்தன்மையாகுமா? அவர்களைத் "திரும்பிப் போ" என்று கூறினால் அவர்கள் எங்கே செல்ல முடியும். அவர்களில் பலருக்குத் தங்களுடைய முன்னோர்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பதே தெரியாது. எந்த ஊரில் இருந்து வந்தவர்கள் என்பதை அறியவே மாட்டார்கள். அங்கே உற்றார் உறவினர் யாராவது இருக்கிறார்களா என்பதும் அவர்களுக்குத் தெரியாது."

"நான் எங்களுடைய கொள்கையைத் தெளிவாக இந்நாட்டு மக்கள் அத்தனைபேரும் அறியத்தக்கதாக இந்தச் சபையிலே எடுத்துக் கூறு விரும்புகிறேன். எங்களது கருத்து என்ன வென்றால், இந்த நாட்டைத் தமது தாயகமாகக் கருதுபவர்களுக்கு இந்நாட்டுப் பிரசா உரிமை வழங்கப்பட வேண்டும். இந்தியாவைத் தமது தாயகமாக் கருதி இங்கிருந்து உழைத்து அங்கு செல்ல வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இந்தியப் பிரசா உரிமை வழங்கி திரும்பிச் செல்ல ஏற்ற வசதிகள் வாய்ப்புக்கள் அத்தனையும் செய்துகொடுக்கப்பட வேண்டும் என்பதுதான்."

**அறிஞர் சி.என். அண்ணாதுரை**

1969 ஏப்பிரல் மாதம் தமிழ் நாட்டில் இருந்து பிரபல தமிழ் அறிஞர் சிலம்புச் செல்வர் சிவஞானகிராமணியார், உடுவிலில் நடந்த தமிழரசுக் கட்சியின் 11வது மாநில மகாநாட்டு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள யாழ்ப்பாணம் வந்திருந்தார். கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு தேசிய பத்திரிகை சிவஞானகிராமணியார் அவர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டதையும், மகாநாட்டு மண்டபத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சி.என்.அண்ணாதுரை அவர்களின் படம் தொங்கவிடப் பட்டிருந்ததையும் கண்டித்துச் செய்தி வெளியிட்டது. 'ரைம்ஸ் ஓ.்.ப் சிலோன்' பத்திரிகை அது விடயமாக அமிர்தலிங்கம் அவர்களைப் பேட்டி கண்டது. அப்பொழுது அவர் கொடுத்த விளக்கம்:

"பத்திரிகைகளில் சில அறிஞர் அண்ணாதுரை அவர்களின் படம் மகாநாட்டு மண்டபத்தில் பார்வையில் இருந்ததைக் குறை கூறி யுள்ளன. ஆனால் அவை அங்கு தொங்கிய புத்த பெருமான்,

ஏசு கிறீஸ்துநாதர் படங்களைப் பற்றி வசதி கருதி மூச்சுவிடவே இல்லை. இவ்வகையான பத்திரிகைகளுடன்தான் நாங்கள் திருப்தி அடைய வேண்டி உள்ளது. மேலும், சுயநலத்துக்காக பொறுப்பில்லாத அல்லது தேசப்பற்று இல்லாத ஒரு கட்சி என்று பிரசாரிப்பது பொறுப்பற்றவர்கள் வேலையாகும். பத்திரிகைகளும் குழப்பக்காரருமே எங்கள் நோக்கத்தைத் தவறாக மக்கள் மத்தியில் பரப்புகிறார்கள். தமிழ் அரசுக் கட்சிக்கு இலங்கையின் எதிர்கால நலன்களிலும், இலங்கைத் தமிழர்களின் எதிர்கால நலன்களிலும் மிகவும் அக்கறை என்றும் உள்ளது. நாங்கள் வெளி நாட்டுக் கட்சிகளுடன் தொடர்பு வைத்திருப்பவர்கள் அல்ல" என்றும் கூறினார்.

1985 ஒரு மனிதன் தனது சந்ததிகளுக்காக ஒரு மாமரத்தை நட்டான். அதற்குக் கோடையில் கிரமமாக நீர் ஊற்றிவந்தான். அருகில் கிணறோ ஆறோ இல்லை. வெகுதூரம் நடந்து சென்று குடத்தில் தண்ணீர் கொண்டு வந்து நீர் ஊற்றி வளர்த்தான். அத்தாவரத்தை மிருகங்கள் சேதப்படுத்தாமல் இருக்கக் கூடுகட்டியிருந்தான். மரம் மிருகங்களின் வாய்க்கு எட்டாதளவு உயரம் வளருமட்டும் அந்தக் கூட்டை அவதானமாகப் பேணிவந்தான். அந்த மரம் காய்க்கத் தொடங்கும் காலம் வந்தது. அந்த மனிதர் தனது பேரப் பிள்ளைகள் தான் நட்ட மரத்தின் பழங்களை வெகு விரைவில் சுவைக்கப் போகின்றனர் என்று எண்ணி எண்ணி ஆனந்தப்பட்டார்.

அவருக்கு ஒரு பேரன். படிப்பிலே கோட்டைவிட்டாலும் துடிப்பான பையன். கெற்றப் போலால் அணில் அடிக்கப் போனவன் மாமரம் ஓங்கி வளர்ந்து விட்டதையும் அது பூத்துக் காய்க்கப் போவதையும் கண்டான். அவனுக்கு தானே அந்த மாமரத்துக்கு எசமானாக வரவேண்டும் என்ற பேராசை தோன்றியது. அவன் தானே மாங்காய்களைப் பறித்து இனபந்துகளுக்குக் கொடுத்து மகிழ விரும்பினான். கிழவன் உயிரோடு இருந்தால் தன்னைப் பழம் பறிக்கவிடார் என்று எண்ணினான். எனவே நண்பர்களையும் அழைத்துக்கொண்டு அவரின் வீட்டுக்குப் போய், 'தாத்தா' என்று அழைத்து அவரைச் சுட்டுச் சடலத்தைச் சுடலையில் வீசிவிட்டான். இக்கதையை எடுத்துச் சென்று உங்கள் தோழர்களுக்குச் சொல்லுங்கள்.

மூலம்: பெரியார் திடலில் அமிர்தலிங்கனார் உரைத்தது



# அதிகாரம் 22
# வட்டுக்கோட்டையில் ஏன் தோல்வி?

1970 பாராளுமன்றத் தேர்தலில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் ஒற்றை ஆட்சிக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் தயவோடு தமிழர் தம் உரிமைகளைப் பெற்று வாழவேண்டும் என்ற கொள்கையை முன் வைத்தார். அத்தோடு தமது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை அரசு கௌரவமாக நடத்துகிறது என்றும் பிரசாரம் செய்தார். அதற்கு மாறாகச் சுந்தரலிங்கம் அவர்கள் பிரிந்து சென்று தனியரசு அமைக்க வேண்டும் என்று பிரசாரம் செய்தார். இவர்களுக்கு அமிர்தலிங்கம் அவர்கள் 1970 ஏப்பிரல் 10ந் திகதி டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன் அவர்களை ஆதரித்து நல்லூரில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பதில் சொன்னார்:

"திருவாளர் பொன்னம்பலம் அவர்கள் தங்கள் கட்சியினரை யூ.என்.பி. அரசு கௌரவமாக நடாத்துகிறது என்று சொல்கிறார். அது ஏனெனில் அவர்கள் தமிழ்ச் சமூகத்துக்கு அரசு செய்யும் அநியாயங்களை எதிர்த்து வாய் திறக்காமல் நல்ல பிள்ளைகளாக நடிப்பதால் ஆகும். உங்களுடைய வீட்டுக்குள் ஒரு திருடன் வந்ததும், நீங்கள் உடனடியாக அலுமாரியின் திறப்பைக் கொடுத்தால் அவன் உங்களைத் துன்புறுத்தமாட்டான். அவன் மரியாதையுடன் உங்களைக் கதிரையில் இருக்கச் சொல்வான். அவன் தன்பாட்டில் எல்லா நகைகளையும் சுருட்டிக்கொண்டு போய்விடுவான். இதன் காரணமாகத்தான் சிங்களவர்கள் தமிழ்க் காங்கிரஸ்காரர்களைக் கௌரவமாக நடாத்துகிறார்கள். தமிழரசுக் கட்சியினராகிய நாம் சிங்களவர்களுக்கு எதிர்ப்புக் காட்டுவதால் நாங்கள் அடிபடுகிறோம். எங்களைப் பொறுத்தவரை தமிழ் பேசும் மக்களது உரிமைகளுக்கும் விடுதலைக்கும் போராடுவது ஒரு புனித பணி. சிங்கள அரசிடம் அரச ஆலவட்ட மரியாதை பெறுவது எமது எதிர்பார்ப்பு அல்ல."

தனிநாட்டுக் கொள்கையோடு தேர்தலில் போட்டியிட்ட சுந்தரலிங்கம் அவர்களுக்குப் பின் வருமாறு பதில் சொன்னார்:

"திருடன் உங்கள் வீட்டுக்குள் புகுந்து விட்டான் என்பதற்காக நீங்கள் உங்கள் வீட்டைச் சுற்றி வேலி போட்டுக் கொண்டு அயலவர்களிலிருந்து உங்களைத் தனிமைப் படுத்த விரும்ப மாட்டீர்கள். ஆகவே நீங்கள் உங்கள் உரிமைகளைப் போராடிப் பெற்று அயலவர்களோடு நட்பாக வாழவேண்டும்."

1970 பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக அமிர்தலிங்கம் அவர்கள் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டார். இவரை எதிர்த்து திரு. ஏ.தியாகராசா அவர்கள் போட்டியிட்டார். காரைநகர் இந்துக் கல்லூரியின் முன்னைநாள் அதிபரான தியாகராசா தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டார். தியாகராசா அவர்கள் 14,359 வாக்குகளும், அமிர்தலிங்கம் அவர்கள் 13,634 வாக்குகளும் பெற்றனர். தியாகராசா அவர்கள் 725 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். இத்தேர்தலில் தமிழரசுக் கட்சி 2,45,747 வாக்குகளைப் பெற்று 13 ஆசனங்களைக் கைப்பற்றியது. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 3 ஆசனங்களையும், சுதந்திரக் கட்சி தலைமையில் போட்டியிட்ட ஐக்கிய முன்னணி 106 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 17 ஆசனங்களையும் பெற்றன

அமிர்தலிங்கம் அவர்கள் அந்தத் தொகுதியில் அதன் முன்னர் 5 தடவைகள் வெற்றி பெற்றவர். அவரின் தோல்வி தமிழரசுக் கட்சி வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எல்லாத் தொகுதியினரும் அவரது தோல்விக்கு ஓரளவுக்குக் காரணமாக விருந்தனர். அவருடைய தொகுதியில் அவர் தங்கிநின்று தனக்கு வாக்குச் சேகரிக்க ஏனைய தொகுதியினர் அனுமதிக்கவில்லை. அவர் நிட்சயமாக வெல்லுவார் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் இருந்தது. ஏனைய தொகுதிகளுக்கு ஓடியோடிப் பிரசாரம் செய்ய வேண்டியிருந்ததால் அவர் தனது தொகுதியில் புதிதாக அவிட்டு விடப்பட்ட சூதாட்டத்தை உணரவில்லை. காரைநகர் பிரபலமான வர்த்த சமூகத்தைக் கொண்ட தீவு. அரசாங்கம் சார்பான பாராளுமன்ற உறுப்பினர் இருந்தால் அது அவர்களது வர்த்தகத்துக்கு உதவியாக இருக்கும். எனவே 'தீவு' என்ற குறுகிய பிரதேச துவேச யுக்தியைப் பயன்படுத்தினர். தீவுப் பகுதி மக்கள் முழுவதும் ஒட்டு மொத்தமாக தியாகராசாவுக்கு வாக்களித்தனர். தீவுக்கு அப்பால் வாழ்ந்த தமிழ் காங்கிரசின் ஆதரவாளர்களும் தியாகராசாவை ஆதரித்தமையால் அவரால் வெற்றி பெற முடிந்தது. அதற்கு முன்னைய தேர்தல்களில் அப்படியான பிரதேச துவேச பிரசாரம் இருக்கவில்லை. அதே பிரதேச யுக்தியை காரை தீவு வர்த்தக சமூகம் நிரந்தரமாக்கிக் கொண்டுள்ளது. இப்பொழுது யூ.என்.பி கட்சியின் திரு. ரி.மகேஸ்வரனுக்கு காரைதீவு வர்த்தகர்கள் ஆதரவு இருப்பதால் அவர் யாழ்ப்பாணத்தில் யூ.என்பி. சார்பில் அடுத்தடுத்து இரண்டு முறைகள் வெற்றி பெற்றுள்ளார். அவர்கள் யாழ்ப்பாணத்துக்குப் பேரினவாத சிங்களக் கட்சியைச் சுயசம்பாத்தியத்துக்காகக் கொண்டு வந்துள்ளனர். தமிழர் உரிமைகளைப் பறித்த, 1983 இனக்கலவரத்தில் 6000 தமிழரைக் கொன்ற யூ.என்.பி. கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் காரைதீவு வர்த்தகர்கள் கோட்டை கட்டியுள்ளார்கள். தமிழ் மக்கள் உரிமைக்காகப் போராடுகிற இச்சந்தர்ப்பத்தில் காரைநகர் செல்வந்தர்கள் தமது வாணிப நலனை மட்டும் மனதில் வைத்துச் செயல்படுவது நியாயமா என்பதை அவர்களே சிந்திக்க வேண்டும்.



1970இல் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் புதிய அரசு நிறுவப்பட்டது. சமசமாசக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா அரசியல்திட்ட விவகார அமைச்சராக்கப் பட்டார். அவர் ஒரு புதிய அரசியல் திட்டத்தைத் தயாரிக்கப் பணிக்கப்பட்டார். அவர் திரு. திருச்செலவம் அவர்களோடு தொடர்பு கொண்டு தமிழரசுக் கட்சியின் ஆதரவை நாடினார். 1970 யூலை 11ந் திகதி தமிழரசுக் கட்சியின் செயற் குழு வவுனியாவில் கூடியது. அதில் பங்குபற்றியவர்கள் பல சலுகைகளை அரசியல் திட்டத்தில் தருவதாக வாக்குறுதி அளித்தபடியால் அதனை ஆதரிக்கவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார்கள். ஆனால் அந்த அரசியல் திட்டத்துக்கு ஆதரவு கொடுக்கக்கூடாது என்ற கருத்தை அமிர்தலிங்கம் அவர்கள் முன்வைத்தார். அரசாங்கத்தின் உள் நோக்கம் சோல்பரி அரசியல் திட்டம் சிறுபான்மையோரின் பாதுகாப்பிற்காக வழங்கிய 29அம் சரத்தையும், சிறுபான்மையோருக்கு ஓரளவு பக்க பலமாக உள்ள 'செனேற்' சபையையும் இல்லாமல் செய்வதே என்று வாதிட்டார். செயற் குழு அதுவிடயத்தை தமிழ் அறிஞர்களைக் கலந்து ஆலோசிப்பதென முடிவு செய்தது.

யூலை மாதத்தில் வெள்ளவத்தையில் உள்ள சைவ மங்கையர் கழக மண்டபத்தில் ஒரு கூட்டம் தமிழ் அரசுக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பிற தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும், தமிழ் கல்விமான்களும் கலந்து கொண்டனர். அவர்கள் கலந்துரையாடிய பின்னர் கட்சியை அரசாங்கத்தின் அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்ளும்படியும், சமஷ்டிக் கோரிக்கையை சமர்ப்பிக்கும்படியும் ஆலோசனை வழங்கினர். அதன்படி தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் நிர்ணயக் குழு ஒரு மாதிரி சமஷ்டி அரசியல் திட்டம் தயாரித்து, அதனைச் கொல்வின் ஆர் டி சில்வாவின் செயற் குழுவுக்கு செப்டம்பர் மாதம் 24ந் திகதி சமர்ப்பித்தது. அரசியல் நிர்ணயசபை அதனை நிராகரித்தது. அதனையடுத்து தமிழரசுக் கட்சி சில்வாவின் புதிய அரசியல் திட்டத்திற்குச் சில திருத்தங்களைச் சமர்ப்பித்தது. அதாவது அரசியல் திட்டத்தில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட வேண்டும் என்று திருத்தம் சமர்ப்பித்தது. அதனையும் அரசாங்கத்தின் அரசியல் நிர்ணயசபை நிராகரித்தது.

அமிர்தலிங்கம் அவர்களின் எச்சரிக்கை தீர்க்கதரிசனமாக அமைந்து அவரது சிந்தனைத் தெளிவைப் பகிரங்கப்படுத்தியது. அதுவரைகாலமும் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்த 'செனேட்' சபையும் இல்லாமல் போனதோடு, 29வது சரத்தும் இல்லாமல் போனது. அத்தோடு சிறுபான்மையினருக் கிருந்த அற்பசொற்ப பாதுகாப்பும், அமிர்தலிங்கம் அவர்கள் ஆருடம் கூறியது போல அரசியல் திட்டத்தில் இருந்து துடைத்தெறியப்பட்டது.

### வாழ்ந்து காட்டிய பெருமகன்

அமிர்தலிங்கம் அவர்கள் சேவை தூய்மையானது. அவர் பட்டம் பதவிகளுக்காக அரசியலில் புகுந்தவர் அல்லர். அவர் அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டிருந்தால், சிங்களத் தலைவர்கள் அவரை மாலை மரியாதையுடன் வரவேற்று அமைச்சரின் ஆசனத்தில் அமர்த்தியிருப்பார்கள். அமிர் மக்கள் சேவை மகேசன் சேவை என்று நம்பியவர். தனது பணி நொந்துபட்ட தனது உடன்பிறப்புக்களின் விடுதலைக்காக, இதயசுத்தியோடு தன்னை அர்ப்பணித்துப் போராடி வெற்றி பெறவேண்டும் என்பதே.



அவரது இலட்சியத்தை உறுதிப்படுத்த இரண்டு சம்பவங்கள். ஒன்று அவர் 1970 தேர்தலில் தோற்ற பின்னர் அரசியலில் அவ்வளவு அக்கறை காட்டமாட்டார் என்று அவரைப் புரிந்து கொள்ளாத சிலர் தவறாகக் கணிப்பிட்டனர். அவர்கள் தமது தவறைப் பின்னரே உணர்ந்தனர்.

அமிர்தலிங்கம் அவர்களது மனோபலத்தின் சக்தியை அக்காலம் எடுத்துக் காட்டியது. அவர் தேர்தலில் தோற்றிருந்த காலத்தில் இலங்கையின் பல பாகங்களிற்கும் சென்று கட்சிக் கிளைகளை புதிதாக நிறுவுவதிலும் தொண்டர்களை ஊக்குவித்தலிலும் ஈடுபட்டார். இக்காலத்தில் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு பெறுவதற்காக இந்தியாவுக்கும் சென்றார். கட்சி முன் எடுத்த பணிகளில் எல்லாம் தலைமை தாங்கி முழுமூச்சாக ஈடுபட அவருக்குப் போதிய நேர அவகாசம் கிடைத்தது. இந்த எழுத்தாளர் பல தடவைகளில் மூன்றாம் வகுப்பு புகையிரத வண்டியில் அவரைச் சந்தித்தார். அப்பொழுதுதான் அவர் கிழக்கு மாகாணத்துக்கு மட்டுமல்ல மலை நாட்டுக்கும் கட்சித் தொண்டிற்காகப் போய்வருவதைத் தெரிந்து கொண்டார்.

இன்னும் தனது நியாயவாதி தொழிலை மேற்கொண்டு தனது கடன்களை அடைத்ததோடு மட்டுமல்லாமல் பூர்த்தி செய்யப்படாத தனது வீட்டைக் கட்டி முடிக்கவும் அவருக்கு அரிய வாய்ப்புக் கிடைத்தது. வீட்டுக்குத் தேவையான குளிரூட்டி -பிரீசர்- ஒன்றும் அவரால் வாங்க முடிந்தது.

தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல் தோல்வியை வெற்றிப் படியாக்கியவர். அவர் பாராளுமன்றம் செல்லாது விட்டமை தமிழ் மக்களுக்குத்தான் பாதகமாக அமைந்தது. 1970 - 1976 காலப்பகுதியில் அவர் பாராளுமன்றத்தில் இல்லை. அக்காலப் பகுதியில் பாராளுமன்றத்தில் தமிழர்களின் குரல் அடக்கியே வாசிக்கப்பட்டது. தமிழர்களுடைய எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை. அவர் பாராளுமன்றத்தில் இல்லாத வாய்ப்பைப் பேரினவாத அரசாங்கம் நன்கு பயன்படுத்தியது. தமிழர்களுக்கு எதிராகப் புதிய பிரச்சினைகள் தலையெடுத்தன. பல்கலைக்கழகம் புகும் வைத்திய, பொறியியல் தமிழ் மாணவர் தொகையை ஒட்டுமொத்தமாக வேரோடு சரித்த மொழிமூலத் தரப்படுத்தல் அநியாயம் இக்காலப்பகுதியிலேயே இடம்

பெற்றது. அவர் பாராளுமன்றத்தில் இக்காலப் பகுதியில் இருந்திருந்தால் மொழி மூலத் தரப்படுத்தல் கொடுமையை முளையிலேயே கிள்ளி எறிந்திருப்பார். அடுத்த பாரர்ளுமன்றத் தொடரில் அவர் பாராளுமன்றம் சென்றதன் பின்னரே அப்பிரச்சினை 30:55:15 திட்டத்தின் மூலம் தீர்க்கப்பட்டது. அத்தோடு தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்து சிறைகளில் நீண்ட காலம் பூட்டிவைத்துச் சித்திரவதைப்படுத்தும் வெறியாட்டமும் இக்கால கட்டத்திலேயே ஆரம்பித்தது. அவர் பாராளுமன்றத்தில் இருந்திருந்தால் அரசாங்கம் இளைஞர்களை எழுந்தமானத்துக்குக் கைது செய்யவிட்டிருக்க மாட்டார். காங்கேசன்துறை இடைத் தேர்தலை இழுத்தடிக்க விட்டிருக்க மாட்டார். நட்டம் அவருக்கு அல்ல, தமிழ் இனத்துக்குத்தான்.

# அதிகாரம் 23
# கௌதாரியும் வானம்பாடியும்

அமிர்தலிங்கம் அவர்கள் பற்றி இன்னொரு விடயம் - ஏன் அப்படி என்று பலரையும் சிந்திக்க வைத்த ஒரு தொடர் கதை. தமிழ் அரசுக் கட்சி வளர்ச்சியைத் தமது மேடைப் பேச்சு வன்மையால் வளர்த்தவர்கள் மத்தியில் மட்டக்களப்பு செல்லையா இராசதுரை அவர்களும் அமிர்தலிங்கம் அவர்களும் முக்கியமானவர்கள். குறிப்பாக இராசதுரை அவர்கள் சில கூட்டங்களுக்கு வடகிழக்கின் ஏனைய பாகங்களுக்குப் பேச்சிற்கு அழைக்கப்பட்டாலும், மட்டக்களப்பைத் தமிழ் அரசுக் கட்சியின் கோட்டையாக்கிய பெருமைக்கு உரித்துடையவர். சொல்லாடல்தான் அவரிடம் இருந்த அரசியற்கள ஆயுதம். குறியீடாகத் தாடி வைத்த திருக்கோவில் அறப்போர் முன்னணித் தலைவர் அரியநாயகம் அவர்கள் தென் மட்டக்களப்பைத் தமிழ் அரசுக் கட்சியின் கோட்டையாக வைத்திருந்தார். அத்தோடு கல்முனை ஜனாப் மசூர் மௌலானாவும் ஓரளவுக்கு கட்சி மட்டக்களப்பில் வேர்பாய்ச்ச ஆரம்பத்தில் உதவியவர். ஆனால் அமிர்தலிங்கம் அவர்களது பாதங்கள் வடக்கிலும் கிழக்கிலும் படாத தமிழ்க் கிராமங்களே இல்லை. அவர் தனது பேச்சின் மூலமும்



செயல் மூலமும் தமிழ் அரசுக் கட்சியை - கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம் அவர்களுக்குப் பின்னர் - வடக்கிலும் கிழக்கிலும் மலைநாட்டிலும் கிளைகள் அமைத்து வளர்த்த உரிமைக்கும் பெருமைக்கும் உரித்துடையவர். கட்சியின் இரண்டு அற்புதமான பேச்சாளருக்கும் இடையில் கட்சிப் பதவியைக் கைப்பற்றுவதில் போட்டி இருந்தது என்று பேசப்படுவது பொருத்தம் அல்ல. அப்படிச் சிலர் முத்திரை பதிப்பதற்கு அமிர்தலிங்கம் அவர்களின் வல்லமையின்-எழுச்சியின் மீது அவர்கள் கொண்ட காழ்ப்புணர்வே காரணம். தர்மத்தின்பால் நின்று சொல்வதானால் அதனை ஒருதலைப்போட்டி யென்றே கூற வேண்டும்.

இக்கால கட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு, தந்தை செல்வா அவர்களின் வேண்டுதலின் பெயரில், அமிர்தலிங்கம் அவர்கள் விண்ணப்பம் சமர்ப்பித்தார். உடனடியாக இராசதுரை அவர்களும் தான் தலைமைப் பதவிக்குப் போட்டியிடப் போவதாக அறிவித்தார். இரண்டு வாரப் பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்தவர்தான் இராசதுரை அவர்களின் அரசியற் குரு. அந்தக் குரு முதலில் தனக்கு செனற் சபை ஆசனம் கிடைக்க வில்லை என்ற வன்மத்தில் சிஷ்யனை போட்டிக்கு ஏவிக்கொண்டிருந்தார். ஏனெனில் மு.மாணிக்கம் அவர்களும், மசூர் மௌலானா அவர்களும் செனேற் சபை உறுப்பினர்கள் ஆகுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் அமிர்தலிங்கம் அவர்களே. பின்னர் அந்தக் குரு தனக்குத் திருகோணமலைத் தொகுதியில் போட்டியிடச் சீட்டுக் கிடைக்கவில்லை என்ற வன்மத்தை மனதில் வைத்துக்கொண்டு சிஷ்யனை ஏவிக் கட்சிக்குள் குழப்பத்தை உண்டாக்க முயன்றார். குருவின் ஏவுதலில் இராசதுரை அவர்கள், கட்சிமாற அதற்கு முந்திய பராளுமன்றப் பருவத்தின் பொழுதே (1970-1976) தருணம் தேடிப் பார்த்தவர். அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்த வேளை, தனது குருவின் ஆலோசனைப்படி அரசாங்கத்தில் இணைய விரும்பி 1975ஆம் ஆண்டு பத்திரிகையாளர் திரு.கே.ரி.இராசசிங்கத்தை தூது அனுப்பினார். தூது சென்ற அவரே தனது 'சொல்லப்படாத கதை' என்ற இணையதள அரசியல் வரலாற்று நூலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இராசசிங்கம் அமைச்சர்கள் ஃபீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவையும், ரி.பி.இலங்கரத்தினவையும் சந்தித்து இராசதுரையின் விருப்பத்தைத்

தெரிவித்தார். இராசதுரை சிரேட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதால் அவர் அமைச்சர் பதவியை எதிர்பார்ப்பதாகக் கூறினார். அவர்கள் இருவரும் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாருடன் கலந்து பேசிவிட்டு அப்பொழுது வசதியாக அமைச்சர் பதவி காலியாக இல்லை என்றும், அடுத்த முறை அமைச்சரவை மாற்றி அமைக்கும் பொழுது தரலாம் என்றும் அவரைப் பக்கம் மாறி வந்து தம்முடன் சேரும்படியும் கேட்டனர். எப்பொழுது அமைச்சரவை மாற்றம் நிகழும் என்பதை அவர்களால் உறுதியாகக் கூறமுடியாமல் இருந்தது. அமைச்சர் பதவி இல்லாமல் வரமுடியாதென்று கூறிய இராசதுரை அவர்கள் தொடர்ந்தும் தமிழ் அரசுக் கட்சியில் இருந்தார்.

1977 தேர்தல் முடிந்த பின்னர் தொடர்ந்தும் அமைச்சர் பதவியை எதிர்பார்த்து அதற்கு ஏற்றபடி கட்சியின் செயற்குழுக் கூட்டங்களுக்குப் போகாமலும், கட்சியின் கொள்கைக்கு மாறாக அமைச்சர்களை வரவேற்கும் முயற்சிகளிலும் இறங்கித் தன்னைத் தாவலுக்குத் தயார் செய்தார். இடையில் 1978இல் ஆவரங்காலில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ள - மாநாட்டு அழைப்பாளர்களில் ஒருவரான - ஆவரங்கால் சின்னத்துரையின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் சென்றார். அங்கு கொக்குவில் அருணாசலத்தின் 'தமிழன் பாசறை' இல்லத்தில் தங்கி நின்றார். கட்சியின் பொதுச் சபைக் கூட்டங்களுக்குச் சமூகமளிக்கவில்லை. ஆனால் மாகாநாட்டில் கலந்து செந்தமிழை அள்ளிச் சொரிந்து - ஒரு இலட்சம் மக்களின் கரகோசம் பெற்றார்.

அமைச்சர் பதவி வாய்ப்பை ஐக்கிய தேசியக் கட்சி வழங்க முன்வந்ததும் 1979 மார்ச் மாதம் 23ம் திகதி கூட்டணியைவிட்டுத் தாவல் பண்ணி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து பிரதேச அபிவிருத்தி-இந்து சமய விவகார அமைச்சரானார். காசி ஆனந்தன் வடிவில் இராசதுரை அவர்களுக்குக் கிடைத்தது வெறும் சாட்டே. மட்டக்களப்பில் காசி ஆனந்தன் அடம்பிடித்துத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டதற்கும், இராசதுரை கட்சியைவிட்டு விலகியதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இராசதுரை அவர்கள் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அமிர்தலிங்கம் அவர்களோடு பதவிக்காகக் கட்சிக்குள் முட்டி மோதினார். தகுதி இருந்திருந்தால் அவரைத் தந்தை செல்வாவும் தலைமைப் பீடமும் ஏகமனதாக உயர்த்தி



இருக்கும். தந்தை செல்வா அவர்கள் அமிர்தலிங்கம் அவர்களின் தலைமைத்துவப் பண்புகள் பற்றிக் கூறிய கருத்துக்கள் வேறிடங்களில் சொல்லப்பட்டுள்ளன. அப்படியாக திரு. இராசதுரை அவர்களைப் பற்றி அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு வார்த்தை தன்னும் சொன்னதில்லை. இறக்கை இருந்தும் பறக்க முடியாத கௌதாரி தனது இயலாமைக்காக வானம்பாடிமீது வசை பொழிவது போன்ற போட்டியே அவர்களுக்கிடையில் நிலவியது.

மருதனாமடத்தில் நடந்த மாநாட்டின் பொழுது இராசதுரை அவர்கள் தலைமைப் பீடத்துக்குப் போட்டியிடப் போவதாக அறிவித்ததும், அமிர்தலிங்கம் அவர்கள் தான் தலைவர் பதவிக்குப் போட்டியிட விரும்பவில்லை என்ற இராஜினாமாக் கடிதத்தைச் சமர்பித்து ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் அவர் சொல்லிய கருத்து:

"தமிழ் பேசும் இனத்தினது வரலாற்றின் ஒரு முக்கிய கட்டத்தில் நாம் சிக்குண்டு இருக்கின்றோம். தமிழ் மக்களின் மத்தியில் நெருக்கமான ஐக்கியம் தேவைப்படும் இச்சந்தர்ப்பத்தில், கட்சிக்குள் சிலர் பிளவை உண்டு பண்ண முயல்கிறார்கள். 1961, 1969 ஆகிய ஆண்டுகளில் எனது பெயர் செயலாளர் நாயகம் பதவிக்கு பிரஸ்தாபிக்கப்பட்ட பொழுதும் என்னுடன் போட்டியிட முன்வந்தனர். (இராசதுரையைக் குறிக்கின்றார்) ஆனாலும் திரு. செல்வநாயகம் அவர்களின் முயற்சியால் அது தவிர்க்கப்பட்டது. அப்படியான செய்கையின் மூலம் நான் பதவிப் பேராசை பிடித்தவன் என்ற ஒரு கருத்து வளர்க்கப்பட்டுள்ளது. எனக்கு அப்படி ஆசை ஏதும் இல்லை. இப்படியான சின்னத்தனங்களைக் கட்சிக்காகப் பொறுத்து வந்தேன். கட்சி தொடங்கிய காலத்தில் இருந்து 1961 வரை எதுவித கட்சிப் பதவிகளும் அற்ற தொண்டனாகவே இருந்தேன். அதேவிதமான தொண்டனாக நான் கட்சியில் பணியாற்றுவேன். நான் வகிக்கும் செயலாளர் நாயகம் பதவியில் இருந்தும் விலகுகிறேன்."

பதவியை விரும்பாத பெருந்தன்மை. தமிழ் பேசும் இனத்தின் தொண்டனாகவே வாழ்ந்துவிடத் துடிக்கும் இதயம். புழுதிவாரித் தூற்றிய பொழுதும் தமிழனின் சேவையை இலட்சியமாகக் கொண்ட வாழ்க்கை. அமைச்சர் பதவியால் விலைக்கு வாங்க முடியாத வைராக்கியம். கறை படியாத கை. நேர்மையான நெஞ்சு. அஞ்சா

நெஞ்சம். வெள்ளை உள்ளம். அவர்தான் கருவிலே திருவருள் பெற்ற அமிர்தலிங்கனார்.

தமிழரசுக்கட்சி-தமிழர் விடுதலைக் கூட்டணியின் சாபக்கேடு பதவிக்கேற்ற கல்வித் தகைமைகளோ, உழைப்பு வல்லமையோ, விவேகமோ சாதுரியமோ, விடுதலைப் போராட்ட உணர்வோ ஆங்கிலமொழி வல்லமையோ இல்லாமல் தலைமைப் பதவியில் கண்வைத்துக் கட்சிக்குக் கரிபூசியவர் ஒருவர் மட்டுமல்ல. இது முடிகிற கதையாக இல்லை. இப்பொழுதும் தொடர்கிறது. முடவன் நூறு மீட்டர் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற வேண்டுமானால் அவனோடு ஓடுபவனும் முடவனாக இருக்க வேண்டும். கூட்டணி ஆதரவாளர்கள், அதனை வழிநடத்தும் அதிகாரமுள்ள பிரமுகர்கள் சிந்திக்க வேண்டும்.

அமிர்தலிங்கம் அவர்கள் கட்சிப் பதவிகளைத் தேடிப் போனவர் அல்லர். பதவிகள் அவரைத் தேடி வந்தன. அதற்கு முக்கிய காரணம் அவரது ஆங்கிலமொழியின் உன்னத வல்லமையும், அபார ஞாபக சக்தியும், விவேகமும், சாணக்கியமும், அற்புதமான விவாதத் திறமையுமே. அத்தோடு கடும் உழைப்பாளியாக இருந்ததோடு சாதுரியமாகவும் பக்தி பூர்வமாகவும் தனது பணியை இயல்பாகச் செய்யக் கூடிய குணநலன்களை இயற்கையாகப் பெற்றிருந்தார்.

**அவருடைய வீடு வேறோ?**

அமிர்தலிங்கம் அவர்களை அரசியல்வாதியாகவே பார்த்துப் பழகிப் போன பெரும்பாலான மக்களுக்கு அவரது இன்னொரு பக்கம் தெரியாது. ஒரு பதமாக ஒரு சின்னக் கதை.

1970 பராளுமன்றத் தேர்தலில் தோற்றிருந்த சமயம் அமிர்தலிங்கம் அவர்கள் சட்டத்தரணித் தொழில் புரிந்து சம்பாதித்தார். அவ்வேளை ஒரு பிற்பகல் கட்சியின் மூத்த உறுப்பினர் திரு. அந்தோனிப்பிள்ளை மரியநாயகம் அவரைப் பார்க்க மூளாயில் உள்ள அவரது வீட்டுக்குப் போயிருந்தார். அவர் வீட்டில் இல்லை. எதிர்பார்த்து வீட்டில் காத்திருந்தார்.

அமிர்தலிங்கம் அவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் இருந்து திரும்பி வந்து மரியநாயகம் அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார். சொற்ப வேளையில் ஒரு மிக வயது முதிர்ந்த மனிதர் அங்கு சென்று "வீடு மேய்வது இரண்டு போகம் தப்பிவிட்டது. வீட்டில் ஒரே ஒழுக்கு. தம்பி உங்களை நம்பித்தான் வந்திருக்கிறேன்" என்று மிகவும் மனமுடைந்து கூறினார். அந்த மனிதரின் வார்த்தைகளை அமைதியாக உள்வாங்கிய அமிர்தலிங்கம் அவர்கள் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. தனது சட்டைப் பையில் இருந்த 50.00 ரூபாவை எடுத்து அந்த முதியவருக்குக் கொடுத்தார். பணத்தை வாங்கிய மனிதர் போய்விட்டார். மரியநாயகம் அவர்கள் மௌனமாக அவரைக் கேள்விக் குறியோடு பார்த்தார்.



"இன்றைய உழைப்பு அவ்வளவுந்தான். அவருடைய வீடு வேறு, என்னுடைய வீடு வேறோ?" என்ற பதிலே கிடைத்தது.

அதன் கருத்து தன்னை மிகவும் சிந்திக்க வைத்தது என்றும், இப்பொழுதுதான் தனக்கு அவரின் அரசியல் அவதாரம் தெளிவாகப் புரிகிறது என்றும் திரு.மரியநாயகம் கூறுகிறார். கனடாவில் ஒன்ராரியோ மாகாணத்தில் இப்பொழுது வாழுகின்ற முதியவர் மரியநாயகம் அவர்களுக்குப் பகர்ந்த வார்த்தை, நாமும் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் விஸ்வரூபத்தின் ஒரு அங்கத்தைத் தரிசிக்க வைக்கிறது.

# அதிகாரம் 24
# தமிழ் நாட்டில் தந்தை செல்வாவுடன்

1972 தமிழ் அரசுக் கட்சிக்கு ஆரம்பத்தில் வெளிநாட்டுக் கொள்கை என்று எதுவும் இருக்கவில்லை. அப்படி ஒன்று தேவை என்று அக்கட்சி எதிர் பார்க்கவில்லை. தமது சாத்வீகப் போராட்டங்கள் மூலம் தமது பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று நம்பியது. ஆனால் சிங்கள அரசாங்கம் பிரச்சினைகளைத் தீர்க்காது, இழுத்தடித்து ஏமாற்றி அவமதித்தும், முப்படைகளை ஏவியும், இனக்கலவரங்கள் ஏவியும் தமிழர்களை அடிமைகளாக இரண்டாந்தரப் பிரசைகளாக நடாத்தியது. அதன் காரணமாகத் தமிழ் அரசுக் கட்சி வெளிநாட்டுக் கொள்கையை வகுக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது. தமிழகத்தின் உதவியோடு பிரச்சினைகளைத் தீர்க்க முனைந்தது. தமிழ் அரசுக்

கட்சியை கடல் கடந்து உதவிநாடிச் செல்ல வைத்தது பேரினவாத அரசாங்கத்தின் அடம்பிடித்த அடாவடித்தனங்களே.

தமிழ் நாட்டில் அறிஞர் அண்ணாதுரையின் திராவிட முன்னேற்றக் கழகம் புயல் வேகத்தில் சமூ அரசியற் புரட்சி நடத்திக் கொண்டிருந்தவேளை. 1948ஆம் ஆண்டை அடுத்த காலப் பகுதியில் கழகத்தின் 25 சத சின்னச் சின்னப் புத்தகங்களும், மற்றும் நூல்களும் இலங்கையிலும் சமூக அரசியல் புரட்சிக் கருத்துக்களை வளர்த்தன. அதனால் கவரப்பட்ட அமிர்தலிங்கம் அவர்கள், தமிழ் நாட்டுத் தலைவர்கள் பற்றி எல்லாம் நன்கு தெரிந்து வைத்திருந்தார். ஏ.வி.பி.ஆசைத்தம்பி, இராம அரங்கண்ணல், இங்கர்சால், இரா. நெடுஞ்செழியன், ஈ.வி.கே.சம்பந்த் போன்ற கீழ்மட்டத் தலைவர்களைக்கூட ஆரம்ப காலத்திலெயே தெரிந்தவராகவிருந்தார். அதுவே அவர் தந்தை செல்வாவையும் அழைத்துக்கொண்டு உதவிகோரித் தமிழ் நாடு செல்ல உந்துகோலாகவிருந்தது.

அதுவரை வேறு எந்த ஈழத் தமிழர் கட்சியும் தமிழ் நாட்டின் உதவியை நாடியதில்லை. முதன்முறை 1972இல் தமிழரசுக் கட்சியினர் தமிழகம் சென்று தமிழ்த் தலைவர்களைக்கண்டு எடுத்த முயற்சி உற்சாகமூட்டுவதாக இருக்கவில்லை. மேல்மாடிகளில் வசித்த தலைவர்களைப் பார்க்க, தந்தை செல்வா அவர்களைத் தூக்கிச் செல்லவேண்டியிருந்தது என்று, பின்னர் டாக்டர் ஸ்ரீனிவாசன் தலைமையில் லண்டனில் நடந்த ஒரு கூட்டத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் கூறியதை ஒளிநாடாவில் பார்த்துக் கேட்க முடிகிறது. அப்பொழுது பல தலைவர்கள் "நாங்கள் என்ன செய்யமுடியும்? போனவிடத்தில் ஏன் வம்பு" என்று கையைவிரித்தார்கள் என்று சொல்லியுள்ளார்.

ஆனால் 1978இல் ஈழத் தமிழ்த் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழகம் சென்ற பொழுது, அவரைப் பார்க்க தமிழகத் தலைவர்கள் அவரது இருப்பிடம் தேடிச் சென்றனர். பின்னர் தமிழ் இளைஞர்கள் முயற்சிக்கு அங்கீகாரம் அளித்தனர். தமிழ் நாட்டை - இந்தியாவை ஈழத் தமிழர் பக்கம் திருப்பிய பெருமையை தமிழ் அரசுக் கட்சியையும் - தமிழர் விடுதலைக் கூட்டணியையும் தவிர வேறு எவரும் கோர முடியாது. அதிலும் அந்த முயற்சியில்



அமிர்தலிங்கம் தம்பதியினரின் பங்கே தலையானது என்பதை யாரும் மறுக்க முடியாது.

1972இல் தந்தை செல்வா அவர்களும் அமிர்தலிங்கம் அவர்களும் தமிழகம் சென்றார்கள். அதன் முன்னதாக யாழ்ப்பாணம் இருந்து சென்ற திரு.ஆ.இராசரத்தினம் அவர்கள், உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா சனார்த்தனம் அவர்களுடன் இணைந்து தேவையான ஒழுங்குகள் யாவற்றையும் செய்திருந்தார். தமிழ்நாடு கவனர் கே.கே.ஷா, திராவிடக் கழகத் தலைவர் பெரியார் ஈ.வே.ரா., முதலமைச்சர் மு.கருணாநிதி, கல்வி அமைச்சர் இரா நெடுஞ்செழியன், ம.பொ.சிவஞானம், எம்.ஜி.இராமச்சந்திரன், முன்னைநாள் முதலமைச்சர் எம்.பக்கவத்சலம், முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத், காங்கிரஸ் தலைவர் காமராஜர், அன்பில் தர்மலிங்கம், மற்றும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், சினிமா நடிகர் எஸ்.ஏ.அசோகன், தொழில் அதிபர்கள், சட்டவல்லுநர்கள், கல்விமான்கள், மாணவர் இயக்கங்கள், பத்திரிகையாளர்கள் முதலியவர்களைச் சந்தித்து இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஆத்மீக உதவி கோரினர். அவர்கள் யாவரும் தமது உதவிகள் என்றும் இலங்கைத் தமிழர் பக்கம் இருக்கும் என்று உறுதியளித்தனர். அவர்களுக்கு அளிக்கபப்பட்ட ஒரு பொது வரவேற்பில் சென்னை மேயர் காமாட்சி ஜெயராமன் தனது வரவேற்புரையில் ஐந்து கோடி தமிழ் மக்களது ஆதரவு ஈழத் தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்துக்கு என்றும் பக்கபலமாக இருக்கும் என்று உறுதி அளித்தார். உலக தமிழ் இளைஞர் பேரவை கோகலே மண்டபத்தில் அளித்த வரவேற்பில், அதன் தலைவர் டாக்டர் ஆர். ஜனார்த்தனம் தமது ஆதரவு தொடர்ந்தும் இலங்கைத் தமிழருக்கு உண்டு என்று சொன்னார். இந்தியா நோக்கிய இந்தப் பயணம் வரப்போகும் ஒரு நீண்ட வெளியுறவுக் கொள்கை வளர்ச்சியின் ஆரம்பம் என்பதையும், அந்த வரப்போகும் நீண்ட வரலாற்றின் கதாநாயகனாக அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் அமையப் போவதையும் அன்று எவரும் ஆருடம் கூறவில்லை.

### தமிழர் ஐக்கிய முன்னணி - TUF

1972 இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைப் பிரிந்து

நின்று தீர்க்க முடியாது என்ற அபிப்பிராயம் சகல தமிழ் அரசியல் தலைவர்களிடமும் வேரூன்றி இருந்தது. தலைவர்கள் யாவரும் இணைந்து கருமமாற்ற வேண்டும் என்ற கருத்தை நடைமுறைப்படுத்துவதில் முன்னின்று உழைத்தவர்கள் அமிர்தலிங்கம் அவர்களும், தமிழ் காங்கிரசைச் சேர்ந்த சிவசிதம்பரம் அவர்களுமாகும். திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் வயது காரணமாக இணைந்து செயல்படாமல் இருந்தாலும் அவரது மேலான ஆதரவே இரு கட்சிகளும் ஒன்றிணையக் காரணம்.

இதன் காரணமாக 1972 மே 14ந் திகதி தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, அகில இலங்கைத் தமிழர் மகாசபை என்பன இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணியாகச் செயல்பட்டன. தமிழர் ஐக்கிய முன்னணி செயற்படத் தொடங்கினாலும் பழைய தமிழ் அரசுக் கட்சியினரே அப்பெயரில் கூடுதலாக இயங்கினர். இதனால் ஏற்பட்ட நன்மை யாதெனில் யாழ்ப்பாண அரசியல் வானில் கீரியும் பாம்புமாக இருந்த தமிழ் அரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசும் தமது பகைமைகளை மறந்து தமிழ் மக்கள் நலன் கருதி ஒன்று பட்டமையே.

எனினும் பின்னர் (1977) தமிழ்க் காங்கிரசின் முக்கிய பிரிவினர், யாழ்ப்பாண நகரத்தில் போட்டியிடத் தமது உறுப்பினர் குமார் பொன்னம்பலத்துக்கு இடம் வழங்கவில்லை என்ற சாட்டில் பிரிந்து சென்றனர். குமார், கூட்டணி வழங்கிய வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட மறுத்து - அடம்பிடித்து வெளியேறினார். இன்று கூட்டணியின் முக்கிய எதிரி தமிழ்க் காங்கிரசே. அதனால் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயர் தமிழரசுக் கட்சியின் மாற்றுப் பெயராகவே அமைகிறது.

**இளைஞர்களின் தீவிர போக்கு**

இக்காலப் பகுதியில் இளைஞர்கள் தீவிர சிந்தனைக்குள் தள்ளப்பட்டனர். பௌத்த சிங்கள பேரினவாத அரசுகளை நம்பக் கூடாது, ஒற்றை ஆட்சிக்குள் பிரச்சினைகளைத் தீர்க்கவியலாது, சமஷ்டிக் கொள்கையைக் கைவிட்டு பிரிந்து செல்லும் கொள்கையை மேற்கொள்ள வேண்டும் என்ற கொள்கையை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியைச் சேர்ந்த இளைஞர்கள் விடாப்பிடியாக முன்வைக்கத் தொடங்கினர். குறிப்பாக ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் ஆதரவோடு பங்களாதேசம் பாகிஸ்தானில் இருந்து பிரிந்து தனி அரசு அமைத்தமை இளைஞர்களை அதனை ஒட்டிய சிந்தனையில் ஈடுபடுத்தியது. இளைஞர்கள் கிராமங்கள் தோறும் சென்று பிரசாரம் செய்ததோடு சிங்கக் கொடியை எரித்தல் போன்ற சின்னச் சின்ன சம்பவங்களிலும் ஈடுபட்டனர்.



துப்பறியும் தமிழ்ப் பொலிசார் இளைஞரைப் பின்தொடரும் படி பணிக்கப்பட்டிருந்தனர். ஒரு மாலை வேளை முன்னர் குடும்பமாகப் பழக்கமான ஒரு பொலிஸ் அதிகாரி சிவில் உடையில் இந்த நூல் ஆசிரியரிடம் வந்தார். அடுத்தநாள் "அச்சுவேலிக் கூட்டத்தில் பேச வேண்டாம். உம்முடைய 'பைல' காங்கேசன்துறை காவல் நிலயம் அனுப்பப்பட்டுள்ளது. உங்களைக் கண்காணிக்கச் சொல்லி மேலிட உத்தரவு. கவனம்" என்று புத்திமதி சொன்னார். இந்த ஆசிரியர் அப்படி இளைஞரோடு சேர்ந்து தீவிரமாக ஈடுபட்டவர் அல்லர். அற்ப சந்தேக மானவர்களுக்கும் பொலிஸ் நிலையங்களில் கோப்புகள் திறக்கப்பட்டன. அக்காலப் பகுதியில் 72 இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், இ.போ.ச. சுப்பிரமணியம் முதலியவர்கள், குறிப்பிடக்கூடியவர்கள். இவர்களில் 42க்கு மேற்பட்டவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைவைக்கப்பட்டிருந்தனர். அவ்வேளை செய்யப்பட்ட சித்திரவதை காரணமாகச் சிலர் எதிர் காலத்தில் நோய்வாய்ப்பட்டனர். சிலர் நீண்ட காலம் வாழ முடியாமல் போய்விட்டது.

# அதிகாரம் 25
## மல்லாகத்தில் மாநில மகாநாடு

1973 தமிழ் அரசுக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணியுமே - குறிப்பாக அமிர்தலிங்கம் அவர்களது உணர்ச்சியைத் தூண்டும் பேச்சுக்களே இளைஞர்கள் ஆயுதம் ஏந்தக் காரணம் என்று பிரசாரம் செய்பவர்களும் உண்டு. அது உண்மையல்ல.

இளைஞர்களின் தூரப்பார்வையின்மையை அமிர்தலிங்கம் அவர்கள்மீது சுமத்தும் முயற்சியாகும். இளைஞர்கள் அமிர்தலிங்கம் அவர்களை வன்முறையின் பக்கம் இழுக்க முயன்று தோல்வி கண்டனர். அதுவே உண்மை.

இக்கால கட்டத்தில் அரசாங்கத்தின் தரப்படுத்தல் கொள்கையால் ஆத்திரமுற்ற இளைஞர்கள் தமிழரசுக் கட்சி சாத்வீகப் போக்கைக் கைவிட வேண்டும் என்று கட்சிக்கு நெருக்குவாரம் கொடுக்கத் தொடங்கினர். குறிப்பாக அமிர்தலிங்கம் அவர்களை நோக்கியே அந்த நெருக்குவாரம் இருந்தது. இளைஞர்களின் நெருக்குவாரம் அவர்கள் பிரிந்து சென்று தனித்து இயங்கும் வரை இருந்தது. அதன் பிற்பாடும் சிலதடவைகள் அவர்கள் அமிர்தலிங்கம் அவர்களைத் தம்பக்கம் இழுக்க முனைந்து தோற்ற விபரம் வேறு ஓரிடத்தில் உள்ளது. அந்த 'இழுவை' முயற்சி முதன் முறையாக மல்லாகம் மகாநாட்டில் வெளிப்படையாகத் தெரிந்தது. 1973 யூலை 25ந் திகதி தமிழரசுக் கட்சி அமிர்தலிங்கம் அவர்களை ஏகமனதாகத் தலைவராகத் தெரிவு செய்தது. செப்ரம்பர் மாதம் 9ந் திகதி மல்லாகத்தில் தமிழரசுக் கட்சியின் 12வது மாநில மகாநாடு நடந்தது. தலைவரின் தலைமை உரை இளைஞர்களின் நெருக்குவாரத்துக்கும் தீவிர சிந்தனைகளுக்கும் பதில் அளித்தது.

அவர் தனது தலைமை யுரையின்பொழுது "சிங்களவரின் ஆதரவோடு எமது உரிமைகளை நாம் வென்றெடுக்க முடியாதென்ற நிலை நிட்சயமாக வருமானால், தமிழர்கள் தமது பாரம்பரிய நிலப்பிரதேசத்தில் தனி அரசை - ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் உள்ள பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையைப் பாவித்துப் பிரிந்து சென்று - தனி அரசை நிறுவுவதைத் தவிர வேறு வழியில்லை" என்று கூறினார்.

தொடர்ந்தும் "சிதைந்து கொண்டிருந்த பிரித்தானிய சாம்ராச்சியத்தில் இருந்து இலங்கையை விடுதலை செய்ய என்று பேச்சளவில் தெரிவித்து 1972இல் ஆக்கப்பட்ட குடியரசு அரசியல் திட்டம், தமிழர்களின் அடிமைத்தனச் சங்கிலியை மேலும் இறுக்கி உள்ளது. சில சட்டங்களைத் தெரிந்தெடுத்து அவற்றை அஹிம்சை வழியில் சற்றும் வழுவாமல் மீறுவோம். ஆயிரக்கணக்கில் சிறை



செல்வோம். இன்று எமக்கு தேவைப்படுவ தெல்லாம் புரட்சிகரமான உணர்வு. அந்த வகையிலேயே ஆயுதம் தரித்த அரசுக்கு நிராயுத பாணிகளான தமிழ் பேசும் மக்கள் எதிர்ப்புக் காட்ட முடியும்" என்று கூறியதோடு இளைஞர்களின் உணர்வுகள் எதிர் காலத்தில் கருத்தில் எடுக்கப்படும் என்றும் கூறினார்.

அதனை உள்வாங்கிய இளைஞர்கள் அவர் தலைமைப் பேருரையை முடித்ததும் அவரைத் தோள்களில் சுமந்து சென்று, மாநாடு நடந்த மல்லாகம் சந்திக்கு அருகே அமைந்த மேன்மாடி வீட்டுக்கு வடக்கில் இருந்த வெளியில் பலதடவைகள் சுற்றி வந்தனர்.

இத்தனைக்கும் அமிர்தலிங்கம் அவர்கள் வன்முறை பாவித்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று ஒரு வார்த்தைதன்னும் பேசவில்லை. கருத்தில் எடுக்கப்படும் என்று மட்டுமே கூறினார். அவரை வன்முறையின் கதாநாயகனாக்க இளைஞர்கள் பல தடவைகளில் பின்னர் முனைவதைக் காணலாம். அவர் சரிப்பட்டு வரமாட்டார் என்பதை உணர்ந்த பின்னரே தலைமை மோகத்தில் மூழ்கி வெவ்வேறு இயக்கங்களை ஆரம்பித்தனர்.

தமிழர் ஐக்கிய முன்னணி 1973 அக்டோபர் 2ந் திகதி சட்ட மறுப்புப் போராட்டம் தொடங்கியது. பாவித்த 15 சத முத்திரையை ஒட்டிக் கடிதங்களை அனுப்பும் சட்ட மறுப்புச் செய்தது. பின்னர் வடகிழக்கில் உள்ள கோவில்களில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தது. அவ்வேளை தமிழர் ஐக்கிய முன்னணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் அவர்கள் "வடகிழக்கில் செய்கை பண்ணாமல் ஏராளமான நிலம் உண்டு. அவற்றைப் பாவித்து விவசாயம் செய்ய முடியாமல் பல தடைச் சட்டங்கள் உள்ளன. தமிழர் ஐக்கிய முன்னணி அந்தச் சட்டங்களை அடுத்த கட்டத்தில் மீறும்" என்று சொன்னார்.

இக்காலகட்டத்தில் தந்தை செல்வா அவர்கள் அமிர்தலிங்கம் அவர்கள் பற்றித் தெரிவித்த ஒரு கருத்து:

"தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று இப்போது அதைக்கொண்டு நடாத்தும் திரு. அமிர்தலிங்கத்திடம் நான் காணும் முக்கிய சிறப்பியல்பு அவருடைய அஞ்சாமையாகும். மிகப் பலம் வாய்ந்த எமது எதிரியாகிய இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து

நாம் போராடுவதற்கு அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களே வேண்டும். அமிர்தலிங்கத்திடம் பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் சிறப்பாகச் சொற்பொழிவாற்றும், விவ்ாதிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். தலைவன் ஒருவனுக்கு வேண்டிய குணங்கள் அவரிடம் உண்டு. ஈழத் தமிழ் மக்களது விடுதலைக்குப் போராடுவதற்கு அவருக்குப் போதிய காலம் இருக்கின்றது. வயதைப் பொறுத்தவரை யில் அவரை ஓர் இளைஞர் என்றுதான் சொல்லவேண்டும்."

தந்தை செல்வநாயகம் அவர்கள் இப்படியான ஒரு செய்தியை ஏன் வெளியிட்டார்? கட்சியில் பல படித்த மேதைகள் இருந்தாலும் - அமிர்தலிங்கம் அவர்களைத் தவிர வேறு எவரும் தனக்குப் பின்னர் விடுதலை முயற்சிகளைக் கொண்டு நடத்தும் வல்லமையுள்ளவராக இல்லை என்பதைத் தெளிவாக உணர்ந்தார். கட்சியில் நாளுக்கு நாள் செல்வாக்கு வளர்ந்து கொண்டிருந்ததைக் கண்டு சிலர், அமிர்தலிங்கம் அவர்களின் சாதுரியத்திலும் திறமையிலும் வளர்ச்சியிலும் பொறாமை கொண்டுள்ளதைக் கண்டார். நேரடியாக அவர்களை எச்சரிப்பது ஏற்புடைத்தல்ல. அதன் காரணமாகவே அப்படியான ஒரு செய்தியைத் தெரியப்படுத்தினார். அதன் மூலம் தன்னுடைய வாரிசு அமிர்தலிங்கந்தான் என்பதனைக் கட்சித் தலைவர்களுக்கு மட்டுமல்லாமல் மக்களுக்கும் தெரியப்படுத்தினார். அதனால் எதிர் காலத்தில் தலைமைப் போட்டியால் கட்சி பிளவுபடாமல் இருக்க அவரது செய்தி உதவியது.

# அதிகாரம் 26
# பேசித்தீர்க்க விரும்பாத அரசு

1973 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையார் உணவு உற்பத்திக்கு மக்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார். அக்காலத்தில் அம்மையார் பேச்சுவார்த்தையை விரும்புவது போன்ற தோற்றம் தெரிந்தது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அமிர்தலிங்கம் அவர்கள் தமிழரசுக் கட்சியின் ஆதரவு அரசின் உணவு உற்பத்தி முயற்சிக்கு



உண்டு என்று தெரிவித்தார். இதனை அடுத்து வந்த காலப் பகுதி வடமாகாண விவசாயிகளின் மண்வீடுகள் கல்வீடுகளாக மாறிய பெருமையுடையது.

1973 அக்டோபர் 10ந் திகதி காரைநகரில் நடந்த கூட்டத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் பேசும் பொழுது தமிழர் ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமாக இருக்கிறது, அரசாங்கம் தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறினால் வெளிநாடுகள் தலையீடு செய்யவும் வாய்ப்பாகிவிடும் என்றும் எச்சரித்தார். அடுத்த நாள் இந்தியாவின் 'பிறெஸ் ரஸ்ற்' க்கு அளித்த பேட்டியில் தமிழர் ஐக்கிய முன்னணி மோதலைத் தவிர்க்க விரும்புவதாகவும், அரசும் அதே போலப் பேச்சுவார்த்தையை விரும்பினால் தாமும் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமாக இருப்பதாகவும் தெரிவித்தார். ஆனாலும் அரசு பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவில்லை.

1973 டிசம்பர் 2ந் திகதி தமிழர் ஐக்கிய முன்னணி சட்ட மறுப்புப் போராட்டத்தை ஆரம்பிக்கும் பணியை ஒரு குழுவிடம் ஒப்படைத்தது. அக்குழுவில் திருவாளர்கள் அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், வி.என்.நவரத்தினம், எக்ஸ்.எம்.செல்லத்தம்பு ஆகியோர் அங்கம் வகித்தனர். இந்தக் குழுவின் முக்கிய பணியாக இருந்தது சிறை வைக்கப்பட்டிருந்த 42 இளைஞர்களையும் டிசம்பர் 2ந் திகதிக்கு முன்னர் மீட்பதாகும் அல்லது அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தச் செய்வதாகும். இது தொடர்பாக அமிர்தலிங்கம் அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

"காவல் துறையினர் நடைமுறையில் உள்ள சாதாரண சட்டதிட்டங்களைப் பயன்படுத்தவில்லை. சட்டமா அதிபர் காவல்துறையினருக்கு அறிவுறுத்தல் கொடுத்த பின்னரும், யாழ்ப்பாணப் பொலிசார் சில இளைஞர்களுக்கு எதிராகக் குற்றச் சாட்டு எதுவும் காணாத போதிலும், தொடர்ந்தும் விசாரணைகள் முடியவில்லை என்று சாட்டுச் சொல்லி இழுத்தடிக்கின்றனர். ஒன்றரை வருடங்களாக எதுவித முடிவும் எடுக்காமல் சிறையில் வைத்திருக்கிறார்கள். வி.தர்மலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் சிறையில் இருப்போர் தாக்கப்பட்டதாகத் தெரிவித்த போதிலும் அவர்

1972இல் மட்டக்களப்பில் கைதான காசி ஆனந்தனைப்பற்றியே குறிப்பாகக் குறிப்பிட்டார்."

கட்சியின் நடவடிக்கைகளை அடுத்து 25 பேர் தவிர ஏனையவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

அமிர்தலிங்கம் அவர்கள் மேடையிலும் பாராளுமன்றத்திலும் பேசும் பொழுது தீவிரவாதியாகவே தென்படுவார். ஆனாலும் நடைமுறையில் எந்தப் பிரச்சினையையும் ஜனநாயக விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டுச் சமாதானமாகத் தீர்க்க ஆயத்தமாகவேயிருந்தார். அதனாலேயே பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரைப் பேச்சுக்கு அழைத்தார்.

சிங்கள அரசாங்கங்கள் இதற்கு முன்னரும் பல தடவைகள் தமிழ் மக்கள் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க தமிழ் அரசுக் கட்சியை அழைத்து 'உனக்கும் பேய். உன் அப்பனுக்கும் பேய்' என்று சொன்னவர்கள்தான். அவர்கள் தங்கள் அரியாசனத்தைக் காக்க அல்லது எதிரியிடமிருந்து அரியாசனத்தைக் கைப்பற்ற வேண்டிய தருணங்களில் தமிழரசுக் கட்சியை நாடிப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தனர் அல்லது தமிழ் அரசுக் கட்சியின் போராட்டங்கள் உச்சம் பெற்ற வேளைகளில் பேச்சு வார்த்தைக்கு ஒருப்பட்டனர். பின்னர் பேச்சுவார்த்தையை நீட்டி வளர்த்து முறித்து ஏமாற்றியவர்கள்தான். அவர்களது கொண்டைப்பணியாரப் புத்திக்கு ஆட்சியைக் கைப்பற்ற ஒரு குறித்த இராசதந்திரத்தைவிட வேறொன்றும் எட்டவில்லை. அந்தச் சிங்கள இராசதந்திரம் காலத்தைக் கடத்தி ஏமாற்றுவதே. 1970 தேர்தலில் மிகப் பெரும்பான்மையோடு ஆட்சியைக் கைப்பற்றிய பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு தமிழ் அரசுக் கட்சியின் தேவை இருக்கவில்லை. அதனால் அமிர்தலிங்கம் அவர்களது அழைப்பை நிராகரித்தார்.



# அதிகாரம் 27
## உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு

1974 யாழ்ப்பாணத்தில் 1974 யூன் மாதம் 10ம் திகதி ஆரம்பமான நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடும் ஈழத் தமிழரின் போராட்டத்திற்கு இன்னொரு காரணமாகியது.

அமெரிக்கா, இரசியா, இந்தியா ஆகிய நாடுகளில் இருந்தும் அறிஞர்கள் வந்திருந்தனர். யாழ்ப்பாண நகர் விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகளெல்லாம் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. மகாநாட்டின் இறுதி தினமான 19ந் திகதி ஒரு பொதுக்கூட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் வைக்க ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஏறக்குறைய ஐம்பதினாயிரம் மக்கள் - ஆண்களும் பெண்களும் - குழுமியிருந்தனர். மக்கள் வெள்ளத்தைக் கொள்ள முடியாத மண்டபம். அதனால் வீரசிங்கமண்டப வாசலில் மேடைபோட்டு பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களது தலைமையில் பேராசிரியர் நைனா முகம்மது அவர்கள் பேசிக்கொண்டிருந்தார். அவ்வேளை இந்தியாவில் இருந்து வருகை தந்த டாக்டர் இரா. சனார்த்தனம் அங்கு காட்சி கொடுத்தார்.

அச்சமயம் வீதிவழியே 'ரோந்து' வந்த பொலிசார் வீதிகளை நிறைத்து நின்ற மக்களை ஊடறுத்துச் செல்ல முடியவில்லை. சனம் வழிவிட மறுத்தது. சிறிது நேரத்தால் இரண்டு பொலிஸ் ரக்குகளில் வந்த பொலிசார் வழிவிடக் கேட்டனர். மக்கள் நகரவே இடமிருக்கவில்லை. அவர்கள் அமைதியாக நின்றனர். பொலிசார் வானத்தை நோக்கிச் சுட்டனர். பின்னர் கூட்டத்தின்மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். மேடையில் ஒரு கண்ணீர்ப் புகைக் குண்டு விழுந்தது. பேராசிரியர் வித்தியானந்தன் மட்டும் இருந்தவிடத்தைவிட்டு அசையவில்லை. இன்னும் ஒரு சிலரே மேடைப்பக்கம் நின்றனர். மக்கள் சிதறி நாலா பக்கமும் ஓடினர். ஏராளமானவர்கள் ஓடித் தப்ப வழி தெரியாமல் கோட்டையைச் சுற்றிய அகழியில் குதித்தனர்.

அவ்வேளை அங்கு நின்ற அமிர்தலிங்கம் அவர்கள் மேடையில் இருந்த திரு. ஜனார்த்தனம் அவர்களை ஒரு மதிலுக்கு மேலால்

தூக்கி எடுத்துப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு போய் வேறு பெயரில் அவரை விமானத்தில் ஏற்றி இந்தியாவுக்கு அனுப்பினார். பொலிசாரின் துப்பாக்கி ரவைகள் மின்சார வயர்களைக் கத்தரிக்க அந்த வயர்கள் அறுந்து விழுந்து 9 பேர் மின்சாரம் தாக்கி இறந்தனர்.

இந்த நிகழ்வு அரசாங்கத்துக்கு எதிரான பகைமை உணர்வை தமிழ் மக்கள் மத்தியில் மேலும் வளர்த்தது. ஏ.எஸ்.பி. சந்திரசேகர தலைமையில் வந்த பொலிசார் திரும்பிச் சென்று வேறு பாதையால் செல்ல முடியும். அவர்கள் வேண்டு மென்றே அப்படியான ஒரு வன்முறையில் இறங்கினர். அதனை அடுத்து வந்த காலப் பகுதியில் ஒருதினம் இளைஞர்கள் திடுதிப்பென பொலிஸ் வாகனத்தின் மீது குண்டெறியும் வன்முறைச் சம்பவத்தில் இறங்க 9 பேரின் மரணமே உடனடிக்காரணமாகியது. அந்தப் பரிதாப சம்பவம் இளைஞர்கள் மத்தியில் பழிவாங்கும் உணர்வைத் தூண்டியது. அதற்கு அடிப்படையில் காரணமானவர்களைப் பழிவாங்கத் துடித்தனர்.

1974 உரும்பிராயைச் சேர்ந்த பொன்னுத்துரை சிவகுமாரன் யூன் 4ந் திகதி சைனைட் உட்கொண்டு மரணித்த செயல் வரலாறாகியது. இனவிடுதலைக்காகத் துடித்து எழுந்த சிவகுமாரன், தனது முயற்சிகளுக்குப் பணம் தேவைக்காக கோப்பாய் மக்கள் வங்கிக் கிளையை கொள்ளையடிக்கச் சென்றார். வங்கியில் நின்ற பொது மக்களுக்கு அவரது நோக்கம் தெரியாது. அவரையும் தெரியாது. முயற்சி பலனளிக்காது போக மக்கள் அவரைப் பிடிக்க எத்தனித்த பொழுது கிழக்கே உள்ள கடனீரேரி ஓரம் உள்ள வெளி நோக்கி ஓடத்தொடங்கினார். அது பொலிசாருக்கு வாய்ப்பாக இருந்தது. பொலிசாரிடம் அகப்படாமல் இருப்பதற்காக சைனைட் உட்கொண்டு தனது உயிரைப் போக்கிக் கொண்டார்.

சிவகுமாரனின் சடலம் யாழ்ப்பாணம் வைத்திசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சமயம் திருவாளர்கள் அமிர்தலிங்கம் சிவசிதம்பரம் இருவரும் அவரைப் பார்த்தனர். பின்னர் உரும்பிராயில் நடந்த இறுதிக்கிரியைகளிலும் இருவரும் கலந்து அஞ்சலி செலுத்தினர். அச்சமயம் அமிர்தலிங்கம் அவர்கள் மனதைத் தொடும் வகையில் உரை நிகழ்த்தினார். அந்த உரையில்:



"தமிழ் மக்களின் ஈடேற்றத்துக்காகத் தம்பி சிவகுமாரன் விலைமதிப்பற்ற தனது உயிரைத் தியாகம் செய்துள்ளார். அது ஒரு வீரச் செயல். தமிழர்களின் பிறப்புரிமையான விடுதலைக்கு அவர் போதித்து செயற்படுத்திய வன்முறை முன்னெடுப்புப் போராட்ட முறைக்கு நான் முரண்பட்டவனாக இருக்கின்ற போதிலும், அவருடைய அற்பணிப்புக்கும் தியாகத்துக்கும் நான் தலை வணங்குகிறேன்."

அமிர்தலிங்கம் அவர்கள் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டமை அவரைச் சிவகுமாரனின் வன்முறை முன்னெடுப்புகளோடு இணைத்துக் குற்றம் காண சிங்கள அரசுக்கு வாய்ப்பளித்தது. அவர் தனது உரையின்போது வன்முறைக்கு எதிரானவர் என்று தெளிவாகச் சொல்லியதை அரசு கவனத்தில் எடுக்கவில்லை. அவரின் தூண்டுதலின் பெயரிலேயே சிவகுமாரன் யாழ் ஏ.எஸ்.பி. சந்திரசேகரவின் பொலிஸ் ஜீப்மீது குண்டு வீசியதாகவும், அவரை ஒரு தீவிரவாதியாகவும், வன்முறையாளருக்குப் பின்னே அவர் உள்ளார் என்றும், தாம் அவரது நடவடிக்கைகளை அவதானிப்பதாகவும் குற்றம் சுமத்தியது. இதனை வைத்துக் கொண்டுதான், தமிழர்கள் பலர் அவரை வன்முறையாளரின் ஆரம்ப கால அக்கிரமங்களோடு தொடர்பு படுத்த முனைந்து பார்த்தனர். அவர்கள் ஒன்றில் அமிர்தலிங்கம் அவர்களின் உயர்ச்சியைக் கண்டு பொறாமைப்பட்டவர்களாக அல்லது கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட இடம் கிடைக்கப் பெறாதவர்களாக அல்லது தேர்தல் களத்தில் எதிர் பக்கத்தில் நின்று வெற்றியைப் பறிகொடுத்தவர்ளாக உள்ளனர். இந்தச் சிறு கூட்டத்தில் எழுத்தாளர்களும் பத்திரிகையாளரும் நியாயவாதிகளும் வேறு சிலரும் அடங்குவர்.

அமிர்தலிங்கம் அவர்கள் தமிழருக்கான விடுதலையை ஒன்றில் வன்முறையாலும் பெறமுடியும் அல்லது சாத்வீக வழியிலும் பெற முடியும் என்ற நம்பிக்கை உடையவர். அதில் அவர் சாத்வீக வழியைத் தெரிவு செய்திருந்தார். அதற்காக அவர் எதிரியின் கொள்கை பிழை என்று சொல்லவில்லை. அது பாதிக்கப்பட்டவர் களுக்காகப் போராடும் அவனுடைய ஜனநாயக உரிமை என்றே நம்பினார். அதன் அடிப்படையிலேயே அவர் கொலை செய்யப்பட்ட தினத்திலும் வன் முறையாளருடன் பேச்சில் ஈடுபட்டார்.

# அதிகாரம் 28
# மொழி வழித் தரப்படுத்தல்

1973 தமிழ் இளைஞர்கள் சிங்கள அரசாங்கத்தை எதிர்த்து ஆயுதம் ஏந்த உடனடிக்காரணமாக அமைந்த பாதகச் செயல் மொழி மூலத் தரப்படுத்தலாகும்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் திறமை அடிப்படையிலேயே தெரிவு செய்து வந்த பழைய முறை தமிழர்களுக்கு மிக்க வாய்ப்பானதாக இருப்பதைச் சிங்களத் தலைவர்கள் அவதானித்தனர். குறிப்பாக விஞ்ஞானம், மருத்துவம், பொறியில் துறைகளில் சனத்தொகை விகிதாசாரத்துக்கு மேலாகக் கூடுதலான இடங்கள் தமிழர்களுக்குக் கிடைத்தன. உதாரணமாக 1954 ஆம் ஆண்டில் விஞ்ஞானத்துறைக்கு 145 தமிழ் மாணவர்களும் 142 சிங்கள மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். 1965 - 1970 ஆண்டு காலப் பகுதியில் மருத்துவ துறைக்கு 464 தமிழ் மாணவர்களும், 410 சிங்கள மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அதே காலப் பகுதியில் பொறியில் துறைக்கு 346 தமிழ் மாணவர்களும் 336 சிங்கள மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். சனத்தொகையில் சிங்களவர்கள் 74 சதவீதம். ஆனால் சனத்தொகை விகிதத்துக்குக் கூடுதலான எண்ணிக்கையில் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதைக் கண்டு ஏற்பட்ட பொறாமையே மொழிவழித் தரப்படுத்தலுக்கு உரிய ஒரே காரணம்.

அதைப் பறிப்பதற்காகக் கொண்டு வரப்பட்டதே கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைப் (பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சை) புள்ளிகளை மொழி ரீதியில் தரப்படுத்த எடுத்த முயற்சிகளாகும். அதன் முன்னணியில் நின்றவர் சிறில் மத்தியூ என்ற சிங்கள பாராளுமன்ற உறுப்பினர். அதாவது முன்னர் ஆங்கிலத்தில் வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டன. ஆங்கிலத்திலேயே விடைகள் எழுதப்பட்டன. இப்பொழுது ஆங்கிலத்தில் தயாரிக்கும் வினாத்தாள்கள் சிங்களத்துக்கு மொழி மாற்றம் செய்யப்படும் பொழுது அதனைச் சிங்கள மாணவன் சரியாக விளங்கிக்கொள்ள முடியாமல் உள்ளதாகவும், ஆனால் தமிழில் மொழி மாற்றம் செய்யும் பொழுது அதனைத் தமிழ் மாணவன் இலகுவாகப் புரிவதால் அவன் கூடுதலான புள்ளிகளைப் பெறுவதாகவும் கூறி, சிங்கள மாணவர்களுக்கு விசேட நன்கொடைப் புள்ளிகள் வழங்கப்பட்டன. விஞ்ஞான பாடங்களுக்கே அப்படி வழங்கப்பட்டன. 1971இல் சிங்களப் பொறியில் மாணவர்களுக்கு 21 புள்ளிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இதில் கவனிக்க வேண்டியது. உச்சப் புள்ளிகளைப் பொறுத்தவரை ஒரே கூட்டுத்தொகையில் பல மாணவர்கள் இருப்பார்கள். உதாரணமாக 328 புள்ளியை ஆறுக்கு மேற்பட்ட மாணவர்களும், 327 புள்ளியைப் பத்துக்கு மேற்பட்ட மாணவரும் பெற்றதுண்டு. 21 மேலதிக புள்ளி ஒரேயடியாகத் தமிழ் மொழியில் பரீட்சை எழுதிய மாணவர்களைக் குப்புறத் தள்ளி விழுத்தியது. ஐந்தாம் வகுப்பில் புலமைப் பரிசில் பெற்ற மாணவர்கள் பொதுவாக யாவரும் ஒன்றில் பொறியில் அல்லது மருத்துவ பீடம் செல்லும் வாய்ப்பிருந்தது. தரப்படுத்தல் முறையால் தமிழ் பேசும் கல்வி உலகம் திடீர் அதிர்ச்சிக்குள் சிக்கியது. புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களும் பெற்றோரும் நிலை குலைந்து கண்கலங்கி நின்றனர்.

மொழிமூல தரப்படுத்தலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கண்டிப்போடு நடைமுறைப்படுத்தியது. பாராளுமன்றம் கையை விரித்து, அதர்மத்தின் பாதுகாவலனாக மாறி இருந்தது. அது தனிமனித சமத்துவ உரிமைகளை உதாசீனம் செய்து, ஜனநாயக விழுமியங்களைக் கொச்சைப்படுத்தியது. அதன்விளைவு தமிழ் இளைஞர் மத்தியில் வன்முறை வெடித்து நியாயங் கேட்கத் தொடங்கியது.

அரசாங்கத்தின் தரப்படுத்தல் கொள்கையே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தச் செய்தது. தரப்படுத்தலால் சமூகத்தில் விழுந்த பாரிய பேரிடியை அக்காலத்தில் சிரித்திரன் சஞ்சிகையில் வெளி வந்த போட்டியில் முதற் பரிசு பெற்ற 'முட்டைப் பொரியலும் முழங்கையும்' என்ற சிறுகதை யதார்த்தமாகச் சுட்டிக்காட்டியது. பரீட்சையில் தனது மூத்த மகனிலும் குறைவாகப் புள்ளிகள் பெற்ற சிங்கள மாணவன், பொறியியல்துறைப் படிப்புக்குத் தெரிவாக, தனது மகன் சாதாரண பௌதிக விஞ்ஞானப் படிப்புக்கும் தெரிவு செய்யப்படாததை அவளால் நியாயப்படுத்த முடியவில்லை. படிப்பில்

சூரர்களாகிய தனது பிள்ளைகள் ஐந்தும் டாக்டர்களாகவும் எஞ்சினியர்களாகவும் வருவார்கள் என்று நம்பியிருந்த அந்தத் தோடக்கார மாது மனம் பேதலிக்கிறாள். பின்னர் ஐந்து பிள்ளைகளது புத்தகங்களையும் முற்றத்தில் போட்டு எரித்துச் சாம்பலாக்கிவிட்டுப் பிள்ளைகளைத் தோட்டத்துக்கு அனுப்புகிறாள். இவ்வகையில் பாதிக்கப்பட்டவர்கள்தான் முதலில் ஆயுதந்தூக்கினார்கள். மொழிமூலத் தரப்படுத்தல் கொடுமையை எதிர்த்துச் சிவகுமாரன், சத்தியசீலன், அரியரத்தினம், முத்துக்குமாரசாமி ஆகியோர் தமிழ் மாணவர் பேரவை என்ற அமைப்பை உருவாக்கினர். ஆரம்பத்தில் இதன் அங்கத்தவர்களாக க.பொ.த. உயர் வகுப்பு மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டனர். இந்த அமைப்பே ஆயுதப் போருக்கு வழிசமைத்தது.

தரப்படுத்தல் முறைக்கு யாழ் மாணவ சமூகம் பெரும் எதிர்ப்புக் காட்டியது. அதனால் அதனைப் பரிசீலிக்க 'பீற்றர் கெனமன் கொமிசன்' விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து சில அதிபர்களைத் தூண்டி அந்த விசாரணைக் குழுவிற்கு அறிக்கைகள் அனுப்பச் செய்வதில் அமிர்தலிங்கம் அவர்கள் ஈடுபட்டார். அதன் பின்னர் மாவட்டக் கோட்டா முறை கொண்டு வரப்பட்டது. அதிலும் பெரும் ஓட்டைகள். 1979 ஆம் 1980ஆம் ஆண்டுகளில் மாவட்ட கோட்டா முறையில் காணப்படும் குறைபாடுகளை அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் இரு தடவைகள் கொண்டு வந்த ஒத்திவைப்புப் பிரேரணைகள் மூலம் எடுத்துக் காட்டினார்.

இந்தக் கோட்டா முறையின்படி 30 சதவீத இடங்கள் திறமைக்கும், 55 சதவீத இடங்கள் மாவட்ட சனத்தொகை அடிப்படையிலும், 15 சதவீத இடங்கள் பின் தங்கிய மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டன. இந்தக் கோட்டா முறை நியாயமானது. பின்தங்கிய மாவட்டங்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. திறமை அடிப்படையில் தமிழ் மாணவர்கள் மேலதிக இடங்களைப் பெற முடிந்தது. ஆனால் 14 வருட உள்நாட்டுப் போர் (1987-2001) அதனையும் இல்லாமல் செய்தது மட்டும் அல்லாமல் மாவட்ட கோட்டாவுக்கே யாழப்பாணத்தில் மாணவர்கள் தேவையான புள்ளிகளைப் பெறமுடியாத ஒரு பரிதாப நிலைக்கு யாழ்ப்பாணக் கல்வியைக் கொண்டு சென்றுள்ளது. பழைய இடத்துக்கு வர இன்னும் ஒரு அரை நூற்றாண்டு போதாது.



பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள் பெறும் புள்ளிகள் நீண்ட காலம் இரகசியமாக இருந்து வந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் கா.பொ.இரத்தினம் அவர்கள் ஒவ்வொரு வருடமும் - பல்கலைக்கழகத் தெரிவு வெளிவந்ததும் - பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானவர்கள் பெற்ற புள்ளிகளைப் பாராளுமன்றப் பதிவேட்டில் வெளிவரச் செய்தார்.

மொழிமூல தரப்படுத்தலை அடுத்து, 1974இல் இளைஞர்கள் வன்முறையை முன்னெடுக்க அவசரப்பட்ட சமயம், தமிழர்களின் ஒன்று தவிர்ந்த அடிப்படை உரிமைப் பிரச்சினைகள் அதற்கு முந்திய தேசிய பாராளுமன்றப் பருவத்தின் பொழுது (1965 -1969) தீர்க்கப்பட்டுவிட்டன. தீர்க்கப்படாத சிங்களக் குடியேற்றம் தொடர்பான பிரச்சினை, கைகழுவப்பட்ட பிரச்சினையாக மாறியிருந்தது. மொழிப் பிரச்சினை, தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினை, தமிழ் மாணவர் போதனா மொழிப் பிரச்சினை என்பன தீர்க்கப்பட்டுவிட்டன. 1967 இந்திய-இலங்கை (நடைமுறைப்படுத்தல்) சட்டப்படி குடியியல் பிரச்சினையின் உக்கிரம் தணிக்கப்பட்டது. படிமுறையாகத் தீர்க்க ஒப்புக்கொள்ளப்பட்டது. 2003இல் அப்பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்பட்டது. 1974ஐ அடுத்து வந்த காலப்பகுதியில் இளைஞர்கள் முதலில் தமிழ் அரசுக் கட்சியையும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் வனமுறைப்பக்கம் சரித்துவிட அடம்பிடித்து நின்றனர். அந்தப் போக்கு மல்லாகம் வருடாந்த மாநாட்டில் 1973இல் ஆரம்பித்து, 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்குப் பின்னரும் நீடித்தது. கூட்டணி - அதாவது அமிர்தலிங்கம் அவர்கள் வன்முறைப்பக்கம் சரிய இடம் கொடாத காரணத்தால், இளைஞர்கள் பிரிந்து சென்று ஆயுத இயக்கங்களை ஆரம்பித்தனர். பிரிந்து சென்ற பின்னரும் அவர்கள் அவரைத் தமது பக்கம் இழுக்க முனைந்தனர். அது வேறு ஓரிடத்தில் சொல்லப்பட்டுள்ளது.

1980இல் தரப்படுத்தல் பிரச்சினை 30:55:15 என்ற திட்டத்தின் மூலம் தீர்க்கப்பட்ட பின்னரும் இளைஞர்கள் வன்முறை வழியைக் கைவிடவில்லை. இக்காலத்தில் சமஷ்டி ஒன்றே தீர்க்கப்படாமல் இருந்த முக்கிய பிரச்சினை. எனினும் இளம் இரத்தத் துடிப்பில் 'தமிழ் ஈழக்' கோசத்தை ஓங்கி ஒலிக்கத் தொடங்கினர். இறுதியில்

(2003) தமிழ் ஈழத்தைப் பற்றி எந்த ஆயுத இயக்கமும் மூச்சுவிடுவதாக இல்லை. அப்படியானால் இரண்டு தசாப்தங்கள் எதற்காக ஆயுதம் ஏந்திப் போராடினார்கள்? மக்கள் சிந்திக்க வேண்டும். தனக்காக இன்னொருவன் சிந்திக்க அனுமதித்துத் தலையாட்டக்கூடாது. இராசதந்திர விவேகத்துடன் காய்களை நகர்த்திக்கொண்டிருந்த அமிர்தலிங்கம் அவர்களின் தீர்க்கதரிசனத்தை இளைஞர்கள் மதிக்காததின் விளைவே, அவர்கள் வரவழைத்த உள்நாட்டுப் போரும் அதனால் தமிழ் மக்கள் எதிர் நோக்கிய துன்பங்கள் பேரழிவுகளுமாகும்.

# அதிகாரம் 29
# கச்சதீவில் இரகசிய சந்திப்பு

1974 மொழிமூலத் தரப்படுத்தலை அடுத்து எழுந்த இளைஞர்களின் கிளர்ச்சிகளின் காரணமாக அரசாங்கம் அமிர்தலிங்கம் அவர்களது நடவடிக்கைகளில் உக்கிரமாக இருந்தது. அன்றைய காலகட்டத்தில் அவசரகாலச் சட்டத்தின்கீழ் 'exitpermit' என்ற முறை அமுலில் இருந்தது. எவரும் அனுமதி பெற்றே வெளிநாடு செல்ல முடியும். அதன் பிரகாரம் அவர் 1974 டிசம்பர் 17ந் திகதி வைத்திய தேவைக்காக இந்தியாவுக்குப் பிரயாணம் செய்ய அனுமதி கேட்ட பொழுது, அதனை ஸ்ரீமாவோ அம்மையாரின் அரசு நிராகரித்து, அவரது கடவைச் சீட்டைப் பறிமுதல் செய்தது. அந்த விடயத்தைப் பாராளுமன்றத்தில் தமிழர் ஐக்கிய முன்னணி எழுப்பிய பொழுது உதவி வெளி நாட்டமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் தேசிய நலன்களை முன்னிட்டும் அனுமதி வழங்கப்படவில்லை என்று பதில் அளித்தார். அத்தோடு அமிர்தலிங்கம் அவர்கள் அதற்கு முன்னரும் வைத்திய தேவைக்காக இந்தியா போவதாகக் கூறிச்சென்று அங்கு வைத்திய சேவையைப் பெறவில்லை என்றும், அதற்குப் பதிலாக அரசியல் பிரசார முயற்சிகளில் ஈடுபட்டார் என்றும் குற்றம் சுமத்தினார். அரசாங்கத்தின் தொடர்ந்த கெடுபிடிகளுக்கு மத்தியிலும், அமிர்தலிங்கம் அவர்கள், கடற்படையின் கண்களுக்குச் சிக்காமல் கடல் வழியாகப் படகில் பிரயாணம் செய்து,



கச்சதீவில் டாக்டர் ஜநார்த்தனம் அவர்களை இரகசியமாகச் சந்தித்தார். கச்சதீவு முன்னர் இந்தியாவுக்குச் சொந்தமாக இருந்தது. மக்கள் குடியிருப்புக்கள் அற்ற அத்தீவைப் பின்னர் இலங்கைக்கு வழங்கியது. இத்தீவு இலங்கையின் வடமேற்கே கரைக்கு வெகு அப்பால் உள்ள ஏகாந்தமான தீவாகும்.

**அதிர்ச்சிகொடுத்த அரசியல் கொலை**

1975 விடுதலைப் புலிகள் ஒரே ஒரு முறைதான் தாங்கள் கொலை செய்தவர்கள் பட்டியலை 1978 ஏப்பிரல் 28ந் திகதி வெளியிட்டார்கள். அதில் பதினொரு கொலைகளுக்கு உரிமை கோரியிருந்தார்கள். அந்தக் கோரிக்கை முதன் முதலில் 'வீரகேசரி' நாளேட்டில் பிரசுரமாகி யிருந்தது. அப்படி வெளியிடப்பட்ட பட்டியல் அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த வேளை (1977-1983), அவரது கொழும்பு அலுவலகத்தில் வேலை பார்த்த வறுத்தலைவிளான் கிராமத்தைச் சேர்ந்த யுவதியினால் அவருக்குத் தெரியாமல் தட்டச்சு எந்திரத்தில் அச்சடிக்கப்பட்டது. அதில் அவர்கள் தங்கள் இயக்கம் அதுகாலவரை கொலை செய்தவர்களின் பெயர்களை வெளியிட்டிருந்தார்கள். அதில் முதலாவது பெயர் மேயர் அல்பிரட் துரையப்பாவினுடையது.

1974 யூன் மாதம் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடந்தது. இறுதி தினத்துக்குப் பெருந்தொகையாக மக்கள் வருவார்கள். அதற்காக இறுதிநாள் விழாவை துரையப்பா விளையாட்டரங்கில் வைப்பதற்கு அனுமதி கேட்டபொழுது, மேயர் துரையப்பா அனுமதி வழங்க மறுத்துவிட்டார். அதன் காரணமாக அதனை வீரசிங்கம் மண்டப வாசலில் வைக்க நேர்ந்தது. வாசலுக்கும் கூட்ட மைதானத்துக்கு மிடையில் ஒரு வீதி. வீதி நிறைந்த மக்கள் வெள்ளம். அசைய இடமில்லை. அச்சமயம் அங்கு வீதியூடாகச் செல்ல வந்த பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக, மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்து 9 பார்வையாளர் அந்த மின்சாரக் கம்பிகளில் சிக்கி இறந்தனர். விளையாட்டரங்கைக் கொடுத்திருந்தால் அந்த மரணங்கள் ஏற்பட்டிருக்கா என்ற வாதங்கள் தலையெடுத்தன. அதற்காக மேயர் துரையப்பாவைப் பழிவாங்கச் சிலர் துடித்தனர்.

யூலை மாதம் 27ந் திகதி மேயர் துரையப்பா பொன்னாலையில் உள்ள கிருஷ்ணன் கோவிலுக்குக் கும்பிடச் சென்றார். அவர் வழமையில் அங்கு இறைவன் தரிசனத்துக்குச் செல்வது வழக்கம். அச்சமயம் அவரை எதிர்பார்த்து மூவர் அங்கு நின்றனர். மேயர் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த சமயம் அவர் றிவோல்வரினால் சுடப்பட்டு அவ்விடத்திலேயே மரணமானார்.

சுட்டவர்கள் இரவானதும் இணுவில் சென்று தங்கள் நண்பர் வீட்டில் உணவருந்திவிட்டு தலைமறைவாகி விட்டனர். விருந்தளித்தவர் அடுத்த நாட்காலையில் மூளாயில் உள்ள அமிர்தலிங்கம் அவர்களது வீட்டிற்குச் சென்றார். அவர் துரையப்பாவின் கொலைச் செய்தியை - சம்பந்தப்பட்டவர்கள் தலைமறைவுச் செய்தியை - எடுத்துச் சென்றார். அதனைக் கேட்டு அமிர்தலிங்கம் அவர்கள் சந்தோசப்படுவார் என்ற நம்பிக்கையிலேயே அவர் அங்கு சென்றார்.

அமிர்தலிங்கம் அவர்கள் கதவைத் திறந்து விசாரித்ததும், அவர் உணர்ச்சி வசப்பட்டு "உங்களை யார் சுடச்சொன்னது? ஆர் உங்களுக்கு உரிமை தந்தது? உயிரைப் பறிப்பது பாதகமல்லவா? என்ன அநியாயம் பண்ணி இருக்கிறார்கள்?" என்று சத்தம் போட்டார். அமிர்தலிங்கம் அவர்கள் விடுதலைக்கு எதிரானவர்களைக் காரசாரமாக-உக்கிரமாக-ஆவேசமாகக் கண்டித்தாலும், அவர் ஜனநாயக வழிக்குட்பட்டே பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற இறுக்கமான கருத்தை உடையவராக இருந்தார். மிட்டாய்க்கு உரத்துக் கத்தி தனது ஆசையைத் தீர்த்துக்கொள்ளும் குழந்தையின் உள்ளத்தை ஒத்ததே அவரது - மேடை, பாராளுமன்ற - ஆவேசப் பேச்சுக்கள். அதற்கு மேல் சென்று, தனது எதிர்பார்ப்பை நிறைவேற்ற அவர் வன்முறையை ஆதரித்ததற்கு ஆதாரம் இல்லை.

1974 யூன் மாதத்தில் சைனட் சப்பி மரணித்த பொன்னுத்துரை சிவகுமாரனின் இறுதிக்கிரியைகளில் உரும்பிராயில் உரை நிகழ்த்தியபோதும் தான் வன்முறைக்கு எதிரானவர் என்பதை 'பெடியளுக்கு' தெளிவாகக் கூறியவர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வி.தர்மலிங்கம், மு.ஆலாலசுந்தரம் ஆகியோர் 1985 செப்டம்பரில் கொலை செய்யப்பட்டதை யடுத்து சென்னையில் பெரியார் திடலில் நடந்த இரங்கல் கூட்டத்தில் "இந்தச் செயல் (கொலைச் செயல்) எங்கே போய் முடியப் போகிறது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்" என்று வேண்டுகோள்விடுத்தார்.



வன்முறை வளர்வதற்கு அமிர்தலிங்கம் அவர்கள் காரணம் என்ற கருத்தைச் சிலர் வலிந்து நிலை நிறுத்த முயல்வதும் உண்டு. வாலிப முன்னணியின் தலைவராக இருந்த பொழுது அவர் இளைஞர்களை, கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்களுக்கும், சட்ட மறுப்பு நடவடிக்கைகளுக்கும் பயன் படுத்தினார். அதில் தான் முதல் மனிதனாகச் செயல்பட்டார். ஆனால் ஜனநாயக வரம்புக்குள் நின்றே தனது போராட்டங்களை முன்னெடுத்தார். அதனை விரும்பாத தீவிர இளைஞர்களே அவருக்குக் கட்டுப்படாது வன்முறைகளில் ஈடுபட்டார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த முயன்ற அவரது முயற்சி பலன் அளிக்கவில்லை. அதுதான் உண்மை என்பதை, 1981இல் சந்ததியார் பற்றி அமிர்தலிங்கம் அவர்கள் இராசகுலசூரியருக்குக் கூறிய வாசகம் - "பெடியள் அவை தீர்மனம் எடுத்துப் போட்டு ஆலோசனை கேட்க என்னிடம் வருகிறார்கள்" - தெளிவாகப் பேசுகிறது. (இச்சம்பவம் வேறோரிடத்தில் விபரமாக உள்ளது.)

# அதிகாரம் 30
# ஒரு தமிழ் இன்ஸ்பெக்டர்

1975 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாருக்கு அமிர்தலிங்கம் அவர்கள் ஒரு சிம்மசொப்பனமாகவிருந்தார். 1970இல் அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்தது அவருக்கு மிக்க மகிழ்ச்சியாகவிருந்தது. இனிமேல் அரசியல் பக்கம் தலைகாட்டமாட்டார் என்று நம்பினார். சிங்களச் சமூகம் அவரது தோல்வி கண்டு வெடிகொழுத்தி ஆர்ப்பரித்தது. அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அமிர்தலிங்கம் அவர்கள் தீவிரமாக அரசியல் விடுதலை முயற்சிகளில் ஈடுபடுவதைக் கண்டு அச்சம் கொண்டார். அவர் தமிழ் நாட்டின் உதவியுடன் தான் நினைத்ததைச் சாதித்துவிடுவார் என்று அஞ்சினார். அந்த அச்சமே அமிர்தலிங்கம் அவர்கள் வீட்டுக்கு ஒரு பெரிய பொலிஸ் படையை அனுப்பக் காரணம்.

அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் இல்லாதபொழுதும் அவர் விடுதலை முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டார். அக்கால கட்டத்தில் இளைஞர்களின் வன்முறைகள் தலைகாட்டத் தொடங்கி யிருந்தன. அதனால் அவரின் தலைமையிலேயே இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கி உள்ளார்கள் என்று அரசு தவறாக நம்பியது. அவர் மீது குற்றங்கண்டு அவரைச் சிறைப்படுத்தும் முயற்சியில் இறங்கியது. அதன் ஒரு கட்டமாகத் துப்பறியும் பொலிசார் முடுக்கிவிடப்பட்டனர். அமிர்தலிங்கம் அவர்களது மூளாயில் உள்ள வீட்டுக்கு இளைஞர்கள் அடிக்கடி போய்வருவதாகவும், அவரது வீட்டில் ஆயுதங்கள் இருக்கலாம் என்றும் தகவல்கள் கிடைத்தன. எனவே அங்கு ஆயுதங்கள் இருக்கும், அவற்றைவைத்தே அமிர்தலிங்கம் அவர்களைக் கைது செய்யலாம் என்ற நம்பிக்கையில் அவரது வீட்டைச் சோதனையிடத் தீர்மானிக்கப்பட்டது. கொழும்பில் இருந்து மேலதிகமான பொலிசார் யாழ் பொலிஸ் நிலையம் கொண்டு வரப்பட்டனர். ஒரு அதிகாலை ஏராளமான ரக்வண்டிகளில் பொலிசார் மூளாய் நோக்கிப் புறப்பட்டனர். அதன் பின்னர் நடந்த சம்பவங்களைத் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் இவ்வாறு சொல்கிறார்:

"காலை ஏழு மணி. என் கணவர் யோகாசனம் முடித்துவிட்டுக் கோப்பி குடிப்பதற்காகச் சமையலறைப் பக்கம் வந்து கொண்டிருந்தார். அப்பொழுது நான் கோப்பி தயாரித்துக்கொண்டு நின்றேன். வீட்டின் பின்பக்கம் சப்பாத்துக் கால்களின் ஓடும் சந்தடி கேட்டது. பொலிசார் பலர் ஓடிவந்து கொண்டிருந்தனர். சிலர் அங்கும் இங்கும் பொருட்களைப் புரட்டி எதனையோ தேடுவது போலத்தெரிந்தது. அப்பொழுது எனது கணவர் கோடிப் பக்கம் சென்று "உத்தரவில்லாமல் ஏன் வளவுக்குள் புகுந்தீர்கள்? என்ன தேடுகிறீர்கள்?" எனக் கேட்டார். அவர்கள் "டி.ஐ.ஜி. முன்பக்க வாசலில் நிற்கிறார்" என்று சொன்னார்கள். எனது கணவர் வீட்டின் முன்பக்கம் சென்றார். நான் பின் தொடர்ந்தேன். அங்கு டி.ஐ.ஜி. சில்வா நின்றார். அவரோடு இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை நின்றார். 'வீட்டைச் சோதனையிட மேலிட உத்தரவு' என்று பதில் சொன்னார்."

வீட்டின் எதிரே வீதி நீளத்துக்குப் பொலிஸ் வாகனங்கள். போதாததற்குத் தென் மேற்கில் அமைந்த வயல்வெளிக்குள்ளும் பொலிஸ் வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. 50 வண்டிகள் வரையிருக்கும். மூளாய் அரசடிச் சந்தியில் ஒரு 'மெசீன் கண்' பூட்டி வைத்திருந்தனர். ஏராளமான பொலிசார் துப்பாக்கிகளை நீட்டியபடி நின்றனர். சுற்றி உள்ள வளவுகளுக் குள்ளும் பொலிசார் நிறைந்து நின்றனர். அவர்களின் துப்பாக்கிகள் வேலிகளுக்கு மேலால் தெரிந்தன. ஏதோ போருக்கு வந்தவர்கள் போலக் காணப்பட்டனர். பொலிசார் கூட்டம் கூட்டமாகச் சோதனையிடத் தொடங்கினர். அறைகளில் இருந்த ஒவ்வொரு பொருளையும் புரட்டி எடுத்தனர். மெத்தையைப் பிய்த்துப் பார்த்தனர். எனது கணவரின் கோப்புக்களைத் துருவித்துருவி ஆராய்ந்தனர். கடிதங்களை வாசித்தனர். சமையல் அறையிலும் அப்படியே. மூடிய பாத்திரங்களை எல்லாம் திறந்து பார்த்தனர். வீட்டில் உள்ள மரங்களும் தப்பவில்லை. தென்னம் வட்டுக்களையும் விட்டு வைக்கவில்லை. தண்ணீர் தாங்கியினுள் புகுந்து பார்த்தனர். குப்பைக் குவியலைக் கிளறினர். மலசல கூடத்துக் கழிவுக் குழியை உடைத்துப் பார்த்தனர். என்கணவரைப் பார்த்து "உங்களுக்குப் பாதுகாப்பாக 2,000 பேர் உள்ளதாக அறிகிறோம்" என்று டி.ஐ.ஜி கேட்டார். அதற்கு எனது கணவர் "நானும் எனது மனைவியும், இந்த வேலைக்காரப் பையனும் மட்டுமே இங்கு வாழ்கின்றோம்" என்று சொன்னார்.



"என்னையும் கணவரையும் விசாரிக்க வேண்டும். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் செல்ல ஜீப் வாகனத்துள் ஏறும்படி கட்டளையிட்டார்கள். எனது கணவர் பொலிஸ ஜீப்பில் ஏற மறுத்து தனது காரில் என்னை ஏற்றிக்கொண்டு அவர்களோடு புறப்பட்டார். அப்பொழுது கணவர் பொலிசார் என்ன விசாரிப்பார்கள்? எப்படிப் பதில் அளிக்கவேண்டும் என்று சொன்னார். அது விசாரணையின் பொழுது எனக்குப் பெரிய உதவியாக இருந்தது. எங்கள் வாகனத்தின் முன்னும் பின்னும் ஏராளமான பொலிஸ் வாகனங்கள் நிரையாக வந்தன. எங்கள் கார் பெற்றோல் இல்லாமல் கல்லுண்டாய் வெளியில் நின்றது. பொலிசார் போய்ப் பெற்றோல் வாங்கி வந்தனர். அதன் பின்னர் நாங்கள் அவர்களுடன் சென்று யாழ் பொலிஸ் நிலையத்தை அடைந்தோம். பொலிஸ் நிலையத்தை அடைந்ததும் விசாரணை தொடங்கியது. இடையில் ஒரு முறை சான்ட்விச்சும் தேநீரும் தந்தனர்."

"பொலிஸ் நிலையத்தில் எனது கணவரை டி.ஐ.ஜி. சில்வா விசாரணை செய்தார். வேறு ஓரறையில் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை என்னை விசாரணை செய்தார். அவரோடு இரண்டு

பெண் பொலிசாரும் இருந்தனர். பஸ்தியாம்பிள்ளை கட்டைக் காற்சட்டை அணிந்திருந்தார். அவர் தனது தொடையை அடிக்கடி உள்ளங்கையால் தட்டியபடி என்னைச் சுற்றி வந்து முழுசிப் பார்த்துக் கேள்விகள் கேட்டார். சில சமயம் குரலை நெருமி வெருட்டினார். எனது இளைய மகனைப் பிடித்து வந்து சித்திரவதை செய்யப் போவதாக உறுமினார். நான் அவரைப் பார்த்து "இவ்வளவு கேவலமாக நடத்துகிறியே. பதவி உயர்வு பெறத்தானே உப்படிச் செய்கிறாய். நீ என்ன தமிழனா?" என்று கேட்டேன். அவன் ஓவென்று உரத்து ஊளையிட்டான். அந்தச் சத்தம் அடுத்த அறையில் கேட்டது. எனது கணவர் சில்வாவிடம் முறையிட, சில்வா அங்கு வந்து அமைதியாக விசாரிக்கும்படி கூறிவிட்டுச் சென்றார். இரவு 10.30 மணிக்குத்தான் விசாரணை முடிந்தது. அதன் பின்னரே வீடு செல்ல அனுமதித்தனர்."

கணவனையும் மனைவியையும் சேர்த்துப் பொலிசாரும் இராணுவமும் இம்சைப்படுத்தியது இந்த ஒரு தடவை மட்டுமல்ல. அது பல தடவைகள் நடந்தது. இலங்கை வரலாற்றில் வேறு எந்தத் தம்பதிகளும் அரசியல் காரணங்களுக்காக இப்படி இம்சிக்கப்பட்ட தில்லை. ஆனாலும் அவர்கள் இருவரும் பயந்து ஒதுங்கி இருக்காமல் என்றும் தமது விடுதலை முயற்சியில் சுறுசுறுப்பாகவே இருந்தனர்.

# அதிகாரம 31
# இராசதுரோக குற்றச்சாட்டு

1976 மே 14ந் திகதி வட்டுக்கோட்டை மகாநாட்டில் தமிழர் ஐக்கிய முன்னணி (TUF) என்ற கட்சியின் பெயர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) என்று நாமகரணம் செய்யப்பட்டது. எனினும் தமிழில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரே புழக்கத்தில் உள்ளது.

அந்த மகாநாட்டில் சுயநிர்ணயவுரிமை அடிப்படையில் சிங்கள அரசிலிருந்து பிரிந்து சென்று தனியரசு அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்த மகாநாட்டிலே அமிர்தலிங்கம் அவர்கள் பேசும்பொழுது தமிழரது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சிங்கள



அரசோடு மேற்கொண்ட ஒப்பந்தங்களையும் பேச்சுவார்த்தைகளையும் குறிப்பிட்டு சிங்கள அரசு எல்லாவற்றையும் இழுத்தடித்துச் சீர்குலைத்த வரலாற்றை எடுத்துச் சொன்னதோடு "1972 குடியரசு அரசியல் திட்டம் தமிழ் மக்களுக்கு விழுந்த இறுதி அடியாகும். அதன் பின்னரும் நாங்கள் சிங்களவரோடு சமாதானமாக வாழவிரும்பினோம். நாங்கள் 1966 தமிழ் மொழி சட்டங்களை புதிய அரசியல் திட்டத்தில் சேர்க்கும்படி கேட்டோம். எங்கள் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. அதன் பிற்பாடும் நாங்கள் அரசியல் திட்டத்தில் சேர்ப்பதற்காக 6 அம்சத் திட்டம் ஒன்றை அனுப்பினோம். அதுவும் புறக்கணிக்கப்பட்டது" என்று கூறினார்.

1976 தமிழ் அரசியல்வாதிகளில் அமிர்தலிங்கம் அவர்கள் மீதே சிங்கள அரசுக்கு மிகுந்த அச்சம் இருந்தது. 1970 தொடக்கம் 1976 வரை பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் இல்லாததினால் சிங்கள அரசியல் வாதிகள் நின்மதியாக வாய்க்கு வந்தபடி தமிழர்கள் பற்றிப் பேசமுடிந்தது. பாராளுமன்றத்துக்கு வெளியில் இருந்தாலும் அவர் ஸ்ரீமாவோ அம்மையாரின் அரசை நிம்மதியாக இருக்கவிட வில்லை. அதனால் அமிர்தலிங்கம் அவர்களின் விடுதலையை நோக்கிய முயற்சிகளை முறியடிக்க இராசதுரோகக் குற்றஞ் சுமத்தி அவரை நிரந்தரமாகச் சிறையில் அடைத்து வைக்க அம்மையார் வலைவிரித்தார். அந்த வாய்ப்பு அவருக்கு 1976 மே மாதம் கிடைத்தது.

வட்டுக்கோட்டை மாநாடு முடிந்து ஒரு மாதத்தின் பின்னர் - 1976 மே 21ந் திகதி - அமிர்தலிங்கம் அவர்களோடு சேர பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் வி.என்.நவரத்தினம், கே.பி.இரத்தினம், கே.துரைரத்தினம் ஆகியோர் யாழ்ப்பாணப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர். அடுத்த தினம் நடைபெறவிருந்த குடியரசுத் தினக் கொண்டாட்டங்களில் மக்களைக் கலந்து கொள்ள வேண்டாம் என்ற துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்த வேளையே அவர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்டார்கள். அடுத்த தினம் அமிர்தலிங்கம் அவர்கள் அவரது மூளாயில் உள்ள வீட்டுக்குப் பொலிசாரினால் கொண்டு செல்லப்பட்டார். ஆறு ரக் வண்டிகளில் கொண்டு சென்ற இராணுவ கடற்படை வீரர்கள் அவரது வீட்டைச் சுற்றித் தயார் நிலையில் நின்றனர். அவருடைய

வீடு சல்லடை போட்டுத் தேடப்பட்டது. அவரது கோப்புக்கள் கடிதங்கள் யாவும் ஆராயப்பட்டன. ஆயுதக் குழுக் களோடு தொடர்பு படுத்தி அவரை இராச துரோகக் குற்றச்சாட்டுக்கு உட்படுத்தி ஜீவிய காலம் முழுவதும் சிறையில் வைக்கவே அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஒரு சின்ன ஓட்டைத் துப்பாக்கி அல்லது ஒரு கிழிந்த கடிதம் கிடைத்திருந்தால்கூட ஸ்ரீமாவோ அம்மை யார் அமிர்தலிங்கம் அவர்களை ஜீவியம் முழுமையும் சிறைக்குள் பூட்டி இருப்பார். எதிர்மாறாக அந்தத் தேடல் அவரது வன்முறைக்கு எதிரான அரசியல் சிந்தாந்தத்தை உறுதிப்படுத்தவே உதவியது.

நால்வரும் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு குற்றப் புலனாய்வு இலாகா கட்டடத்தில் வைக்கப்பட்டார்கள். பத்துத் தினங்கள் அவர்களை எவரும் சந்திக்க அனுமதி வழங்கப்படவில்லை. அமிர்தலிங்கம் அவர்களை மடக்கிவிட்டதாகச் சிங்கள அரசியல் தலைவர்கள் ஆனந்தித்தார்கள். பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மே 23ம் திகதி தம்புள்ள மகாவித்தியாலயத்தில் நடந்த கூட்டத்தில் "தனிநாடு கேட்ட அமிர்தலிங்கத்தை உள்ளே போட்டுள்ளேன். அவன் 20 வருடங்கள் வெளியே வரமாட்டான். இனி நாட்டிலே கலகம் பண்ண முடியாது" என்று தனது வீரப்பிரதாபத்தைச் சொல்லிப் பெருமைப்பட்டார். சிங்களக் கூட்டம் பெரும் கூச்சல் போட்டு வரவேற்றது. புதினத்தாள்கள் செட்டை கட்டிப் பறந்தன. இந்த எதிருணர்ச்சிகளுக் கெல்லாம் காரணம் நிராயுதபாணியான அமிர்தலிங்கம் என்ற தனிமனிதனின் அறிவையும் ஆற்றலையும் இனப்பற்றையும் உறுதியையும் விடுதலை வேட்கையையும் கண்டு சிங்களத் தலைவர்கள் - மதத் தலைவர்கள் தொடக்கம் அரசியல் தலைவர்கள் வரை - எல்லோரும் ஒட்டு மொத்தமாகப் பயப் பூச்சாண்டிக்குள் சிக்கி இருந்தமையே.

சாதாரண வழக்கு முறைகளில் அவர் தப்பிவிடுவார் என்பதற்காக யூரிகள் இல்லாத மூன்று நீதிபதிகள் கொண்ட ரயல்-அற்-பார் (Trail-at-bar) முறையில் வழக்கை விசாரிக்க உத்தரவு போடப்பட்டது. தந்தை செல்வநாயகம் அவர்கள் தலைமையில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள், மு.திருச்செல்வம் அவர்கள் மற்றும் 58 வழக்குரைஞர்கள் வழக்காடத் தோன்றினார்கள். யூன் 18ந் திகதி கொழும்பு உயர்நீதிமன்றத்தில் விசாரணை தொடங்கியது. நீதிமன்ற



எழுதுவினைஞர் "குற்றவாளியா அல்லது சுற்றவாளியா?" என்று அமிர்தலிங்கம் அவர்களை வினாவினார். திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் அப்படி அவர் கூறத் தேவை இல்லை - அவர் அவசரகாலச் சட்டமும் அரசியல் திட்டமும் செல்லுபடி யற்றவை என்று வாதாடுகிறார் என்றார். அதன் பின்னர் அமிர்தலிங்கம் அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அவர் நீதிபதிகளுக்குக் கூறினார்: "இந்த நீதிமன்றம் செல்லுபடி யற்ற ஒரு அரசில் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. அதனால் நான் குற்றவாளி என்றோ சுற்றவாளி என்றோ தெரிவிக்க விரும்பவில்லை."

பின்னர் நீதிமன்றம் கூடிய் பொழுது திரு. ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் அவசரகாலச் சட்டம், அரசியல் திட்டம் என்பனவை செல்லுபடியாகதவை என்று தெரிவித்தார்.

திரு. மு.திருச்செல்வம் அவர்கள் வாதிட்ட பொழுது 'சோல்பரி அரசியல்திட்டம் அதில் மாற்றங்கள் செய்ய மட்டுமே அனுமதிக்கிறது. முழுமையாக அரசியல் திட்டத்தைத் தூக்கி எறிய அனுமதிக்க வில்லை. அதனால் 1972 அரசியல் திட்டம் செல்லு படியாகாது' என்று வாதிட்டார்.

செப்டம்பர் 16ந் திகதி நீதிபதிகளின் தலைவர் செய்சா அவர்கள் தீர்ப்பை வாசித்தார். "அவசரகாலச் சட்டம் உரிய முறையில் வெளியிடப்படவில்லை. ஆகவே நாலு குற்றவாளிகளையும் விடுதலை செய்கிறேன். அரசியல் திட்டம் பற்றிய விடயம் இந்த நீதிமன்றத்துக்கு உட்பட்ட விடயமல்ல" என்று தீர்ப்பளித்தார்.

அரசாங்கம் மிரண்டது. சட்டமா அதிபரை ஏவி உச்ச நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்வித்தது. பின்னர் சட்டமா அதிபர் பின்வாங்கினார். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குற்றச்சாட்டுகளை நிராகரித்து 1977 பெப்புருவரி 10ந் திகதி நாலு குற்றவாளிகளையும் விடுதலை செய்தனர்.

# அதிகாரம் 32
# தலைவர்கள் மறைவு

1977 முதுபெருந் தலைவர்கள் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களும், தந்தை செல்வா அவர்களும் அடுத்தடுத்து இறைவனடி சேர்ந்தனர். அதனால் அமிர்தலிங்கம் அவர்களின் சுமை மேலும் அதிகரித்தது. அவர்கள் இருவரும் வாழ்ந்த காலத்திலேயே விடுதலை முயற்சிகளை வழி நடத்திய அனுபவம் இருந்தமையால் அவருக்கு விடுதலை முயற்சிகளை முன்னெடுப்பதில் அத்தனை சிரமம் இருக்கவில்லை.

1977 தமிழரசுக் கட்சிக் காலத்தில் - அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவராக இருந்த திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களை கடுமையாக விமர்சித்தவர்களில் முதன்மையானவர் அமிர்தலிங்கம் அவர்கள். ஆனால் பின்னர் தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்பதால் விடுதலைப் போராட்டத்தில் ஏற்படும் பின்னடைவைக் கருத்தில் கொண்டு இரண்டு கட்சிகளையும் ஒன்றிணைப்பதில் முன்னின்று உழைத்தவர் அமிர்தலிங்கம் அவர்கள். தந்தை செல்வா அவர்களை திரு. ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களுடைய வீட்டுக்கு அனுப்பி இருகட்சிகளையும் இணைப்பதில் வெற்றிகண்டார். அமரர் பொன்னம்பலம் அவர்களும் தமிழினத்தின் ஒற்றுமையின் அவசியம் கருதி பெருந்தன்மையோடு ஒத்துழைத்தார். பாராளுமன்றத்தில் சட்டமேதை அமரர் பொன்னம்பலம் அவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து உரையாற்றும் போது அமிர்தலிங்கம் அவர்கள் கூறினார்:

"இந்த நாட்டின் அரசியல் வானில் 45 ஆண்டுகளுக்கு மேலாகச் சுடர்விட்டுப் பிரகாசித்த ஒரு நட்சத்திரமாகத் திருவாளர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் விளங்கினார். 1931 ஆம் ஆண்டிலே இளைஞராக முல்லைத்தீவுத் தொகுதியிலே அரசாங்க சபைத் தேர்தலில் போட்டியிட்ட அவர், அன்று தொடக்கம் தமது இறுதிக் காலம் வரை இந்நாட்டிலே எல்லோராலும் மதிக்கப்பட்ட ஓர் ஆற்றல் மிக்க தலைவராக விளங்கினார். அரசியல்துறையில் மாத்திரமல்ல சட்டத் துறையிலும் தனக்கென ஒரு தனி இடத்தை இந்நாட்டில் பெற்றுக்கொண்டவர் திருவாளர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள்.



இந்நாட்டின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த குற்றவியல் வழக்குகளில் அவர் தோற்றாத வழக்குகள் இல்லை என்றே கூறலாமம்."

"1962ஆம் ஆண்டில் நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய ஆட்சியைக் கவிழ்க்கும் சதி முயற்சி என்று கூறப்பட்ட அந்த வழக்கிலே அவர் எடுத்துக்கொண்ட பங்கும் ஆற்றிய முக்கியமான சட்ட வாதங்களும் இந்நாட்டின் சட்ட நூல்களிலே என்றும் நின்று நிலவும். சட்டத்துறையில் அவருடைய சேவை இறுதியாகப் பெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சென்ற ஆண்டு இந்நாட்டிலே அவசரகாலச் சட்டத்தின் கீழ் பாரதூரமான குற்றங்கள் சாட்டப்பட்டு, நானும் இந்தச் சபையின் கௌரவ உறுப்பினர்கள் மூவரும் மூன்று நீதிபதிகளின் முன்னிலையில் நிறுத்தப்பட்ட நேரத்தில், அவசர காலச் சட்டத்தின் அத்திவாரத்தையே தாக்கி அந்த வழக்கைக் கேட்கும் அதிகாரம் அதற்கு இல்லை என்று அரச நீதிமன்றம் கூறக்கூடிய அளவுக்கு வாதாடி எமக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கச் செய்தவர் திருவாளர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களாவர்."

"சட்டத்துறையில் அவரது மேதா விலாசம் அதி உன்னதமாக இருந்ததோடு இந்நாட்டு மக்கள் மத்தியில், அரசியல் துறையிலும் அவர் ஒரு தன்னிகரற்ற தலைவராக விளங்கினார். இந்நாட்டின் அரசியலிலே பாரதூரமான மாற்றங்கள் ஏற்பட்ட நேரத்திலே, அதாவது 1944-1945 ஆம் ஆண்டிலே சோல்பரி ஆணைக்குழு இந்நாட்டிற்கு ஓர் அரசியல் அமைப்பைச் சிபாரிசு செய்ய வந்த நேரத்திலே இந்நாட்டின் தமிழ் மக்களுக்காக மாத்திரம் அல்ல, இந்நாட்டிலே உள்ள சிறுபான்மை மக்கள் அத்தனைபேருக்குமாக வாதாடும் ஒரே குரலாக திருவாளர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களுடைய குரல் ஒலித்தது. அன்று சமபல பிரதிநிதித்துவம் சட்ட மன்றத்தில் இருக்க வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்து அவர் வாதாடினார். அவருடைய வாதத்தின் பலனாகச் சட்ட மன்றத்தில் சமபல பிரதிநிதித்துவம் கிடைக்காவிட்டாலும் சிறுபான்மையினருக்குச் சில சட்டபூர்வமான பாதுகாப்புகள் அன்றைய அரசியல் அமைப்பிலே 29 ஆம் விதியின் கீழ் அளிக்கப்பட்டன. 1972 ஆம் ஆண்டு ஆக்கப்பட்ட இன்றைய குடியரசு அரசியல் யாப்பிலே அந்தப் பாதுகாப்பும் நீக்கப்பட்ட நிலை அவருக்கு மிகவும் வேதனையைக் கொடுத்தது. அதுகாறும் தான் கொண்டிருந்த அரசியல் கருத்துக்களை மறு பரிசீலனை செய்யும் நிலைக்கு அவரைக்கொண்டுவந்து நிறுத்தியது."

"அவர் எவ்வளவு தூரம் சிறுபான்மையினரின் உரிமைக்காக வாதாடினாரோ அதே அளவு தனி மனிதனுடைய அடிப்படை உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டும், அவை நிலைநாட்டப்பட வேண்டும் என்னும் குறிக்கோளை அவர் கொண்டிருந்தார். இந்த இலட்சியங்கள் எல்லாம் சிதறிடிக்கப்பட்ட சூழ்நிலையில்தான் அவர் தமிழ் மக்களை ஒன்று சேர்க்கும் முயற்சிக்குத் தமது முழு ஆதரவையும் அளித்தார். அவர் இந்நாடு தோற்றுவித்த தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவராக விளங்கினார். இந்நாட்டில் மாத்திரமல்ல ஐக்கிய நாடுகள் சபையில்கூட அவருடைய சிம்மக் குரல் ஒலித்தது. ஆங்கிலத்திலும் தமிழிலும் எல்லோரும் வியக்கத்தக்க சிறந்த பேச்சாளராக அவர் விளங்கினார். அறிவும் ஆற்றலும் சட்டத் திறமையும் மக்களை வழி நடத்தும் சக்தியும் மக்களைக் கவரும் தன்மையும் அமைந்த ஒரு பெருந் தலைவரை இந்நாடு பொதுவாகவும் தமிழ் இனம் குறிப்பாகவும் இழந்துவிட்டது."

### தந்தை செல்வாவின் மறைவு

1977 தமிழர்களின் உரிமைகள் சூறையாடப்படுவதை முதன் முதலில் தமிழ் சமுதாயத்துக்கு எடுத்துச் சொல்லி சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்துவதன் மூலமே அதனைத் தடுக்கலாம் என்று கூறியவர் தந்தை செல்வநாயகம் எனப்படும் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள். காங்கேசன்துறைத் தொகுதியில் இருந்து ஏழு தடவைகள் பாராளுமன்றம் சென்ற தந்தை செல்வா அவர்கள் மலேசியாவில் ஐபொக் என்ற நகரில் 1893இல் பிறந்து இலங்கை வந்து ஆரம்ப கல்வியை தெல்லிப்பழை யூனியன் வளாகத்தில் பெற்றார். பின்னர் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, கல்கிசை சென். தோமாஸ் கல்லூரி என்பனவற்றில் படித்தார். லண்டன் பல்கலைக் கழகப் பட்டப் படிப்பை முடித்த பின்னர் சென். தோமாஸ் கல்லூரி, வெஸ்லி கல்லூரி என்பனவற்றில் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆசிரியராக இருந்தவேளை சட்டம் படித்து நியாயவாதியாகினார். 1947இல் இராணி நியாயவாதியாக்கப் பட்டார். இலங்கையின் சுதந்திரத்துக்கு முன்னதாக 1947இல் நடந்த முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் காங்கேசன் துறையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்திய வம்சாவழித் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்த ஐக்கிய தேசியக் கட்சி அரசோடு இணைந்ததை அடுத்து,



தமிழ்க் காங்கிரஸ் தலைமைப் பீடத்தோடு கருத்து வேறுபாடு கொண்டு அக்கட்சியில் இருந்து விலகி 1949இல் தமிழ் அரசுக் கட்சியை (Federal Party) நிறுவினார். கட்சி நிறுவப்பட்ட காலத்திலேயே அமிர்தலிங்கம் அவர்கள் கட்சியில் இணைந்திருந்தார்.

பிற்காலத்தில் தந்தை செல்வா அவர்கள் நோய்வாய்ப்பட்டு இருந்தமையால் அவரால் சாதாரணமாக இயங்கிக் கடமையாற்ற முடியவில்லை. கூட்டங்கள், பேட்டிகளின் பொழுது தந்தை அவர்கள் தனது வார்த்தைகளை உரத்த தொனியில் சொல்லும் பொறுப்பை அமிர்தலிங்கம் அவர்களிடமே விட்டிருந்தார். இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தியாவிலும் இப்பணியை அவர் செய்தார். தந்தை அவர்கள் தனது இறுதிக்காலத்தில் தனது பணி முழுவதையும் அமிர்தலிங்கம் அவர்களிடமே விட்டிருந்தார். அமிர்தலிங்கம் அவர்கள் தந்தையின் பணிகளைச் சுமந்தார் என்பதிலும் அமிர்தலிங்கம் அவர்களது முன் எடுப்புகளைத் தந்தை செல்வா அவர்கள் அங்கீகரித்தார் என்பதே பொருத்தமானது.

தந்தை செல்வா அவர்கள் 1977 ஏப்பிரல் 5 ந் திகதி மறைந்தார். அவரது இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாண முற்ற வெயில் இலட்சக் கணக்கான மக்களின் முன்னிலையில் நடை பெற்றது. அமிர்தலிங்கம் அவர்கள் அங்கு உரையாற்றும் பொழுது "எமது தலைவரின் மறைவு என்னைப் பொறுத்தவரை தனிப்பட்ட பெரும் இழப்பாகும். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் அவரின் மேலான சிந்தனைகளை சிரமேற் சுமந்தவன். அவர் எனக்குத் தத்துவ ஆசானுக்கு மேலானவர். அவர் என்னுடைய வழிகாட்டி. அவர் எனது குரு. அவரது முன்னெடுப்புகளை நான் எதிர்த்ததும் உண்டு. உதாரணமாக பண்டாரநாயக்க -செல்வநாயகம் உடன்படிக்கையை நான் எதிர்த்தேன். அந்த உடன்பாடு எனக்குத் திருப்தி தரவில்லை. செயற் குழுவில் நான் எனது எதிர்க் கருத்தை வெளிப்படையாகச் சொன்னேன். அவர் நியாயங்கள் சொன்னார். அதன்பின்னர் நான் அதனை ஏற்றேன். அன்று பிற்பகல் மட்டக்களப்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேச என்னை முதலாவதாக அனுப்பினார். நான் அந்த ஒப்பந்தத்தைத் தமிழ் மக்கள் வரவேற்கவேண்டும் என்று பேசினேன்."

தந்தை செல்வாவின் மறைவுக்கு நாடாளுமன்றத்தில் அனுதாபம் தெரிவித்த பொழுது அமிர்தலிங்கம் அவர்கள் கூறிய வாசகங்களில் சில: "திருவாளர் செல்வநாயகம் அவர்களுடைய சட்ட மேதா விலாசத்தைப் பற்றி, எனக்கு முன் பேசிய கௌரவ வர்த்தக அமைச்சர் எடுத்துக் கூறினார். இந்நாட்டின் சொத்துரிமைச் சட்டத் துறையில் திருவாளர் செல்வநாயகம் அவர்கள் தமக்கென ஒரு உன்னத இடத்தைப் பெற்றிருந்தார். இந்த நாட்டின் சட்ட அறிக்கை நூல்களிலே அவர் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் வாதாடிய எண்ணற்ற வழக்கு களின் விபரங்களை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. அவர் 1947 ஆம் ஆண்டிலே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் உறுப்பினராக இந்தச் சபையில் பிரவேசித்தார். அன்று தொடக்கம் சட்டத்துக்கு இரண்டாவது இடத்தைக் கொடுத்து தமது சமூகத்துக்காக உழைக்கும் பணிக்கு முதலிடம் கொடுத்து, தாம் சட்டத் துறையில் திரட்டிய செல்வம் அனைத்தையும் தனது இனத்துக்காக அர்ப்பணித்த, தமது உடல் நலத்தையும் இழந்து, தமது கடைசி மூச்சு வரைக்கும் தமிழ் இனத்தை வாழ வைக்க வழிகாட்டிய உத்தமராக அவர் விளங்கினார். அவருடைய விரோதிகளிற்கூட அவரது அப்பழுக்கற்ற நேர்மையைப் பாராட்டாதவர் இருக்க முடியாது. அரசியலில் அவரிடம் இருந்து நாம் கற்றுக்கொண்ட ஒரு பாடம் 'எந்த நேரத்திலும் நேர்மையைக் கைவிடாது, சொன்ன சொல்லை எப்பொழுதும் காப்பாற்றி நடக்க வேண்டும்' என்பதே. இந்த நாட்டிலே ஒரு சிறந்த சட்ட மேதையாக, சட்ட உலகம் மதிக்கின்ற ஒரு நேர்மையாளனாக, நெறியாளனாக, உத்தமனாக, மனித குலத்தைக் காப்பாற்றக்கூடிய ஒரு மாண்புமிகு தலைவனாக அவர் விளங்கினார்."

தந்தை செல்வாவின் மறைவின் பின்னர் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழர் அரசியல் வாழ்வில் பெரும் சுமைகளைச் சுமக்க வேண்டியவரானார். 1977ஐ அடுத்து வந்த காலப்பகுதி அரசியல் கொந்தளிப்பு மிக்கதாக இருந்தது. இருண்ட ஒரு எதிர் காலத்தினூடாக விடியலைத் தேடவேண்டியவராக இருந்தார். அமிர்தலிங்கம் அவர்களிடம் அரசியல் பாடங்கள் கேட்டவர்களே அவருக்கு எதிராகத் திரும்பிய காலம். பேச்சுவார்த்தை தேவையில்லை துப்பாக்கி போதும் விடுதலை பெற என்ற கருத்து வலுத்த காலம். பிரகடனங்கள் மூலம் தமிழ் ஈழத்தைப் பெற்றுவிடலாம் என்ற போலிக் கூச்சல்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குழப்பம் புரிந்த காலம். கூடப்பிரயாணித்த சிலரே பிரச்சினைகளைக் கிள்ளிவிட்டனர். உள்வீட்டுள் செல்லப்பிள்ளையாக இருந்து அரசியல் கற்றவர்களே அண்ணலுக்கு அரசியல் போதிக்க முற்பட்டனர். மறுபுறம் இராணுவ அட்டூழியங்களின் அதிகரிப்பு. இன்னொருபுறம் போரினால் மக்கள் எதிர்நோக்கிய புதிய புதிய இன்னல்கள். இப்படியாக எதிரே நிறைந்து கிடந்த சவால்களைச் சமாளித்து விடுதலை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய வரலாற்றின் பூகம்ப காலம். அதற்கேற்ப அவர் புதிய இராசதந்திரப் பாதைகளைத் திறக்க வேண்டிய நிலையில் இருந்தார். அதில் பிரதானமானதுதான் அவரது வெளியுறவுக் கொள்கை.



# அதிகாரம் 33
# காங்கேசன்துறையில் வெற்றி

1977 தேர்தல் வந்த பொழுது காங்கேசன்துறைத் தொகுதியில் யார் போட்டியிடுவார் என்ற கேள்வி எழுந்தது. காங்கேசன்துறை புத்தி ஜீவிகள் நிறைந்த ஒரு தொகுதி: ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாக விவாதிக்கக் கூடிய உயர்பட்டங்கள் பெற்ற திறமைசாலியை கல்விமானைத் தொகுதி எதிர்பார்த்து நின்றது. செனேற்றர் நடராசா வட்டாரம் அத்தொகுதி தமக்கே உரியது என்று பிரசாரம் செய்தது. அவருக்குச் சந்தர்ப்பம் கொடுப்பது வாக்குகள் ஒரு பகுதியை இழக்க வைக்கும் என்ற பல கடிதங்கள் கட்சித் தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டன. பேராசிரியர் சு.வித்தியானந்தன் பெயரும் முன வைக்கப்பட்டது. பேராசிரியருக்கு அந்த முன்வைப்பே தெரியாது. காங்கேசன்துறைத் தொகுதியைச் சேர்ந்த, பாடசாலைப் படிப்பு மட்டும் உடைய சிறைசென்ற இளைஞர் பேரவையைச் சேர்ந்த ஒருவர், ஒரு பிரமுகரையும் கூட்டிக்கொண்டு மூளாய் சென்று அமிர்தலிங்கம் அவர்களிடம் தன்னைக் காங்கேசன்துறைத் தொகுதிக்கு அபேட்சகனாக நியமிக்க சிபாரிசு செய்யும்படி கேட்டார். இவரது செயல் மேடையில் ஏற்றிய எஜமானையே ஏப்பம்விடக்கூடியவர்கள் கட்சியின் தயவில் தம்மை வளர்கிறார்கள் என்பதைக் கட்டியங்கூறியது. கூட்டணிக் கிளைகள் பல அமிர்தலிங்கம் அவர்களைக் காங்கேசன்துறைத் தொகுதியில்

போட்டியிட நியமிக்கும்படி கட்சித் தலைமையகத்தை வேண்டினர். சிலர் நேரில் அவரைச் சந்தித்து அழைத்தனர். யாழ்ப்பாணம் அவரின் சேவையை நன்கு உணர்ந்த காலப் பகுதி அது. வட்டுக்கோட்டையில் அதன் முந்திய தேர்தலில் அவர் தோற்றமை தமிழ் மக்களின் உள்ளங்களில் முள்ளாகக் குத்திக் கொண்டிருந்தது. அந்தத் தொகுதி வர்த்தக நலன்களை மையமாகக் கொண்ட வாக்கு வங்கியைக் கணிசமானவளவு கொண்ட தொகுதியாக மாறியிருந்தது. அவரைக் காங்கேசன்துறை மக்கள் அழைத்தமைக்கு அதுவும் ஒரு காரணம். இன்னும் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் மக்களின் பொதுச் சொத்தாகவே கணிக்கப்பட்டார். அதனால் எவரும் அவரை காங்கேசன்துறைத் தொகுதியில் எதிர்த்துப் போட்டியிட முன்வர மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் திரு. எஸ்.ஸ்ரீதரன் என்பவர் சுயேட்சையாகப் போட்டியிட்டார். அவர் வெற்றி பெறுவதற்காகப் போட்டியிடவில்லை. அமிர்தலிங்கம் அவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுச் சரித்திரம் படைத்துவிடுவார் என்ற காழ்ப்புணர்ச்சியிலேயே போட்டியிட்டார். அமிர்தலிங்கம் அவர்கள் 31,833 வாக்குகள் பெற்றார். ஸ்ரீதரன் 5,322 வாக்குகள் பெற்றார். 25,833 அதிகப்படியான வாக்குகள் பெற்று பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். இது அவர் பாராளுமன்றம் சென்ற 6வது தடவையாகும்.

1977 பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வி அடைந்தது. எட்டு ஆசனங்களை மட்டுமே பெற்றது. யூ.என்.பி. கட்சி ஆட்சி பீடம் ஏறியது. தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்களுடன் இரண்டாவது இடத்தைக் கைப்பற்றியது. அதனால் எதிர்பாராத விதமாக தமிழர் விடுதலைக் கூட்டணியே எதிர்க்கட்சித் தலைமையைப் பெற அழைக்கப்பட்டது. அமிர்தலிங்கம் அவர்கள் ஆழ்ந்து சிந்தித்தபின்னர் தனது சக தலைவர்களுடன் அதனை ஏற்பதால் ஏற்படக் கூடிய நற்பலன்களைப் பற்றிக் கலந்து பேசியே அப்பதவியை ஏற்றார். அவ்வேளை அவர்மீது சேற்றை வாரிப்பூசிப் பழக்கப்பட்டவர்கள் கண்டனக் கணைகளை வீசினர். அமிர்தலிங்கம் அவர்களும் பதவி மோகத்துள் வீழ்ந்துவிட்டதாக ஆர்ப்பரித்தனர். ஆனால் அவர் பதவியை ஏற்ற பின்னர் நடந்த நிகழ்வுகள், அவர் கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாமல் பெற்றமை ஒரு தீர்க்கதரிசனமான செயல் என்பதை உறுதி செய்தன.



உலகம் எல்லாம் சென்று ஈழத் தமிழர் அவலங்களைப் பிரசாரிக்க அவருக்கு அருமையான வாய்ப்புக்கள் கிடைத்தன. உலக தலைவர்கள் பலரைச் சந்தித்தார். இந்தியாவில் சகலதரப்பு அரசியல் தலைவர்களையும் சந்தித்தார். யாவருடனும் நட்புறவை வளர்த்தார். தனது உலக வலத்தில் இலங்கையில் பெரும்பான்மை இனமான சிங்களவர்களுக்கு இணையான சமத்துவம் சிறுபான்மைத் தமிழருக்கு இல்லை என்பதனையும், சிங்கள அரசு தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக நடாத்துகிற தென்றும், சிங்களப் பேரினவாத அரசு முப்படைகளையும் ஏவி சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிராகப் புரியும் அநீதிகளையும் கொடுமைகளையும் கொலைகளையும் உலக மயப்படுத்த எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிய உரிமைகளையும், சிறப்பதிகாரங்களையும் பயன்படுத்தினார். அப்பதவி காரணமாக இலங்கைக்கான உலக நாடுகளின் தூதுவர்களும், வெளிநாடுகளில் இருந்து இலங்கை வந்த அரசியல் தலைவர்களும் ஏனைய தலைவர்களும் அடிக்கடி அவரைச் சந்தித்தனர். இவருடைய எதிர்க் கட்சித் தலைவர் பதவிக் காலத்திலேயே இலங்கைத் தமிழர்களது பிரச்சினைகள் உலகத்துக்குத் தெரிய வந்தன. அதன் பேற்றால்தான் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிராஞ்சு, ஜேர்மனி, சுவிற்சலாந்து, கனடா, ஒஸ்ரேலியா போன்ற நாடுகள் சிங்கள அரசாங்கம் சொல்வதை மட்டும் கருத்தில் எடுக்காமல் தமிழர் பிரச்சினையில் அக்கறை காட்டத் தொடங்கின. இலங்கை அரசாங்கம் தனது அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற வகையில் உலக நாடுகள் கருத்துத் தெரிவிக்கத் தொடங்கின. இன்னும் புலம் பெயர்ந்த மக்களை மேற்கு நாடுகள் அரவணைத்து அகதி அந்தஸ்து வழங்கித் தாராளமாக உதவவும், உள்நாட்டில் அகதிகளாகிவிட்ட மக்களுக்கு உலக நாடுகள் பொருளாதார மருத்துவ உறையுள் வசதிகள் செய்யவும் அவருடைய எதிர்க் கட்சிப் பதவிக்கால முயற்சிகள் பெரும் பங்களிப்புச் செய்தன. 1983 இனக் கலவரத்தை அடுத்து இந்தியா உட்பட உலக நாடுகள் யாவும் ஏக குரலில் இலங்கை அரசின்மீது கண்டனம் தெரிவிக்க அமிர்தலிங்கம் அவர்கள் தனது எதிர்க் கட்சித் தலைவர் பதவியைப் பயன்படுத்திச் செய்த பிரசாமே காரணமாகும். அவர் சேவைகள் தெய்வ சித்தமே.

லண்டனில் விளம்பரக் கூச்சல்

1978 அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வாய்ப்பைப் பயன்படுத்தி இரண்டாம் முறை இலண்டன் சென்றார். அவரது நோக்கம் வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் மூலம் உலக அபிப்பிராயத்தை ஈழத் தமிழ் மக்கள் பால் திருப்புவிப்பதே. அந்த விஜயம் உலகத்தில் புலம்பெயர்ந்து வாழுகின்ற ஈழத் தமிழர்களின் அரசியல் ஞானக் குறைபாடு எவ்வளவுக்கு விடுதலைக்கு முட்டுக்கட்டையாக உள்ளது என்பதையும், ஈழத்து அரசியல் ஓடுகளத்தின் பிரிவினைகள் வெட்டுக்கள் குத்துக்கள் யாவற்றுக்கும் மூலகாரணமாக இருப்பதையும் தெளிவாகக் கண்டார். லண்டன் விஜயம் பற்றி அவர் 'இலட்சிய இதயங்களாடு' என்ற நூலில் ஆவணப்படுத்தியுள்ளது:

"1978ஆம் ஆண்டு நான் லண்டன் சென்ற போது அங்கு அப்போதிருந்த 16 இயக்கங்களோடும் தொடர்பு கொண்டேன். ஒவ்வொரு குழுவினரோடும் பல மணித்தியாலங்களைச் செலவிட்டேன். ஒரு சில இயக்கங்கள் தீவிர இடதுசாரிச் சித்தாந்தங்களில் மூழ்கித் தமிழர் விடுதலைக் கூட்டணியை முதலாளித்துவ அமைப்பென்றும் அது அழிக்கப்பட வேண்டியதென்றும் கருத்துக் கொண்டிருந்தன. அந்தக் கருத்தை ஈழத்துக்கும் எற்றுமதி செய்து இங்கும் தமிழ் நாட்டிலும் கூட்டணிக்கு விரோதமான அமைப்புகளை ஏற்படுத்துவதிலும் பிரசாரங்கள் நடாத்துவதிலும் ஈடுபட்டிருந்தன. இன்றும் அந்த முயற்சிகள் நடைபெற்றுவருவதையும் எம் இளைஞர்கள் மத்தியிலும் அதானால் ஏற்பட்ட பிரிவினைகள் பூசல்களையும் இலட்சியப் பற்றுள்ளோர் அறிவார்கள்."

"வெளிநாடுகளில் வாழும் எம் அன்புச் சகோதரர்கள் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை உலகறியச் செய்வதில் குறுகிய காலத்தில் சிறந்த பணி புரிந்திருக்கின்றனர். விளையாட்டு மைதானத்தை தமிழ் ஈழப் போராட்டக் களமாக மாற்றினர். இலங்கைத் தூதுவராலயத்தின் முன் எத்தனையோ மறியல் போராட்டங்களை நடத்தினர். ஐ.நா. மன்றத்தில் இரண்டு நிமிடமாவது திரு. வைகுந்தவாசன் ஈழத்தின் குரலை ஒலிக்கச் செய்தார். பத்திரிகைப் பேட்டிகள், சட்டமன்றத் தீர்மானங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் எத்தனையோ விடுதலை



இயக்கத்தை உலகின் முன்நிறுத்த உதவினர். இந்த இலட்சிய இதயங்களின் பங்கை எவரும் மறக்க முடியாது."

"ஆனால் நாம் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன தமிழ் ஈழ விடுதலைப் போர் இந்த ஈழ மண்ணில்தான் நடைபெற வேண்டும். ஏழாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து தொலைக்கட்டுப் பாட்டின் மூலம் விடுதலையை முன்னெடுத்துச்செல்ல முடியாது."

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்காதவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்பி, கூட்டணிக்கு எதிராக 'சுதந்திரன்' பத்திரிகை மூலம் பிரசாரம் செய்தார்கள். சிலர் போன நாடுகளில் தாம் கற்ற மார்க்சீய சித்தாந்தங்களை ஈழத்தில் பரப்பப் பணம் அனுப்பிக் குழப்பம் செய்வித்தார்கள். வேறு சில புத்தி சீவிகள் வெளிநாடுகளில் விளம்பரம் தேட காலத்துக்குக் காலம் அட்டகாசமான வேலைகளில் ஈடுபட்டனர். இன்னும் காழ்ப்புணர்வு கொண்ட சிலர் தமிழ் ஈழத்தில் வேரூன்றி நிலைத்த தமிழர் விடுதலைக் கூட்டணயின் ஆணி வேரை அறுக்க அவாப்பட்டுச் செயற்பட்டார்கள். இத்தனைக்கும் மத்தியிலும் அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் இயங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியை வெட்டிச் சாய்க்க முடியவில்லை என்றால் அதற்கு மக்கள் அவரது முன்னெடுப்புகள்மீது வைத்திருந்த நம்பிக்கையே காரணம்.

# அதிகாரம் 34
# ஸ்ரீமாவோ அம்மையாரின் குடியியல் உரிமை பறிப்பு

அமிர்தலிங்கம் அவர்களது மகத்துவத்தில் அவரது மன்னிக்கும் குணநலன் ஒன்று. அதனை முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் தெளிவாக முன்வைக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் அதற்கு முந்திய அரசாங்க

ஆட்சிக் காலத்தில் (1970 -1976) பிரதமராக இருந்த பொழுது குற்றங்கள் புரிந்ததாகக், கூறி, அதனை விசாரிக்க 1977ல் பதவிக்கு வந்த ஐக்கி தேசியக் கட்சி அரசாங்கம் ஒரு விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை அமர்த்தியது. அந்த ஆணைக்குழு அவரைக் குற்றவாளியாகக் கண்டது. அதனை ஆதாரமாக வைத்து அவருக்குத் தண்டனை வழங்கி அவரின் குடியியல் உரிமைகளைப் பறித்து - 7 வருடங்கள் பாராளுமன்றப் பக்கம் தலைகாட்டாமல் இருக்க - ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பாராளுமன்றத்தில் ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பித்தது. அவரோடு சேர அவரது உறினர் ∴பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மீதும் அப்படியான குற்றச் சாட்டுக்கொர்ண்டு வந்தது. அந்தச் சட்டமூலத்தைப் பிரதம மந்திரி ரணசிங்க பிரேமதாச சபையில் சமர்ப்பித்தார். அமிர்தலிங்கம் அவர்கள் ஸ்ரீமாவோ அம்மையார்மீது கொண்டுவரப்பட்ட குற்றங்கள் அநீதியானவை என்பதை உணர்ந்து, நியாயத்தின்பால் நின்று அவருக்காகப் பேச முன்வந்தார். ஸ்ரீமாவோ அம்மையார் அமிர்தலிங்கம் அவர்களை எப்பொழுதும் சிங்கள சமூகத்தின் உரிமைகளைத் தட்டிப் பறிக்கப் புறப்பட்ட தானையின் தலைவனாகவே பார்த்தவர். அமிர்தலிங்கம் அவர்களை அவர் மூன்று முறைகள் சிறைவைத்தவர். பிரதமராக இருந்தபொழுது அம்மையார் தனக்குச் செய்த கொடுமைகளுக்காகச் சந்தர்ப்பம் வாய்த்துவிட்டது என்று அமிர்தலிங்கம் அவர்கள் அவரைப் பழிவாங்க முனையவில்லை. அதற்கு எதிர்மாறாக அரசாங்கம் அவருக்கு எதிராகக் கொண்டுவந்த பிரேரணை அநீதியானது, வழமைக்கு மாறானது, காழ்ப்புணர்வில் கொண்டு வரப்பட்டது, முன்மாதிரி இல்லாதது என்ற காரணத்தால் தர்மத்தின் வழிநின்று ஸ்ரீமாவோ அம்மையாருக்காகப் பாராளுமன்றத்தில் 1980 ஆக்டோபர் 16ந்திகதி பல மணி நேரம் வாதாடினார். அவரது தர்மவாதத்தின் முக்கிய பகுதிகள் தரப்படுகின்றன:

"கௌரவ சபாநாயகர் அவர்களே, கௌரவ பிரதம மந்திரி (திரு.ஆர்.பிரேமதாச) கொண்டுவந்துள்ள இரண்டு பிரேரணைகள் நீதிபதியின் கடமைகளைச் செய்வதற்கு இந்தப் பாராளுமன்றத்தை ஈடுபடுத்த விருக்கின்றன. நான் சபையின் இருபக்கத்திலும் உள்ள சகல கௌரவ அங்கத்தவர்களையும் வேண்டிக்கொள்வது - அதாவது எங்களோடு சபையில் வீற்றிருக்கின்ற சகபாடியான முன்னாள் பிரதமருக்கும் (ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க), பாராளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினர் பீலிக்ஸ் ஆர்.டி. பண்டாரநாயக்காவுக்கும் எதிரான வழக்கில் - நீங்கள் நீதிபதிகளின் கடமைகளைச் செய்யவேண்டி உள்ளது என்பதை மனத்தில் நிறுத்திக்கொள்ளுங்கள். ஆகவே நாங்கள் எல்லோரும் கடந்த கால கோபதாபங்கள்-மனக்கசப்புகளை ஒருபுறத்தே ஒதுக்கிவைத்து விட்டுத் தர்மத்தின் வழிநின்று சரியோ பிழையோ வென்று தீப்பளிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலையில் உள்ளோம்."



"கௌரவ பிரதம அமைச்சர் தனது பேச்சின் பொழுது கௌரவ அத்தனகலை உறுப்பினர் (ஸ்ரீமாவே பண்டாரநாயக்க) தனது அரசாங்கத்தின் பொழுது (1970-1976) அன்றைய எதிர்க்கட்சி (ஐக்கிய் தேசியக் கட்சி) அங்கத்தவர்களுக்கு எதிராகவும், பொதுவாக அன்றைய எதிர்க் கட்சிக்கு எதிராகவும் தனது பதவிக் காலத்தில் புரிந்த அநீதியான செயல்களை அட்டவணைப்படுத்தினார். நான் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவன். எங்கள் கட்சியினர் ஸ்ரீமாவோ அம்மையாரின் சென்ற அரசினால் பட்ட துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. உண்மையில் நாங்கள் உங்களிலும் கூடுதலாக அநீதிக்கு ஆளானவர்கள். அம்மையார் அவசரகால சட்டத்தை நீடித்த குற்றத்தைக் கௌரவ பிரதம அமைச்சர் சொன்னார். அவ்வாறு நீடித்தபடியால்தான் நானும் என்து மூன்று சக அங்கத்தவர்களும் யாரும் சந்திக்க முடியாதபடி சிறைவைக்கப்பட்டு மூன்று நீதிபதிகளின் முன்னர் (ரயல்-அற்-பார்) நிறுத்தப்பட்டோம். நாங்கள் அவசரகாலச் சட்டம் செல்லுபடியாகாது என்று வாதிட்டோம். அதனால் நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம்."

"அவசரகாலச் சட்டப் போர்வைக்குள் மறைந்திருந்து காங்கேசன்துறைத் தேர்தலை இரண்டு வருடங்கள் தள்ளிப்போட்ட குற்றச் சாட்டையும் பிரதமர் குறிப்பிட்டார். அதன் காரணமாக காங்கேசன்துறைத் தொகுதி மக்களுக்கு அவர்களது பிரதிநிதி நாடாளுமன்றத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்பு மறுக்கப்பட்டது."

"சென்ற அரசாங்கத்தினால் பல தவறான செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு முந்திய அரசாங்கங்களாலும் பிழைகள் விடப்பட்டன. சுதந்திரத்தின் பின்னர் இருகட்சிகளும் மாறி மாறி அரசாங்கத்தை அமைத்தன. எங்களது கட்சியைப் பொறுத்த வரையில்

எல்லா அரசாங்கங்களாலும் நாம் பாதிக்கப்பட்டோம். தொடர்ந்தும் இடர்களுக்கு ஆளாகின்றோம். ஆனால் நாங்கள் மதியிழந்து நடுநிலையி லிருந்து விலகவில்லை. நாங்கள் நியாயத்தில் இருந்து வழுவவில்லை. நாங்கள் தர்மத்தின்பால் நிற்கின்றோம். சென்ற அரசாங்கத்தினால் நாங்கள் பட்ட துன்பங்கள்-வேதனைகள் அனந்தம். இருந்தபோதிலும் நாங்கள் வெளிப்படையாகச் சொல்கிறோம் அரசியல் எதிரிகளைச் சாடுவதற்கு நீங்கள் மேற்கொண்டுள்ள முறை அதர்மமான தென்று. இவ்வகையான நடைமுறைகள் மத்திய கிழக்கு நாடுகளில் அல்லது வேறு நாடுகளில் நடந்து இருக்கலாம். ஆனால், இந்த நாட்டு ஆழ்ந்த சமய நம்பிக்கை உள்ள பௌத்தர்கள் இந்துக்கள் கிறீஸ்துவர்கள் முஸ்லிம்கள் மன்னியுங்கள் என்று போதனை செய்கிறார்கள். பௌத்தம் கருணை போதிக்கிறது. அதற்கு எதிர்மாறாக இந்த முறையில் அரசியல் எதிரிகளைத் தண்டிக்க முயல்வது முறையல்ல."

"கௌரவ சபாநாயகர் அவர்களே, கௌரவ பிரதம அமைச்சர் (திரு.பிரேமதாச) சொன்னார் "குடியியல் தவறுகளுக்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தண்டிப்பது அல்லது பராளுமன்ற உறுப்பினர்களை வெளியேற்றுவது இதுதான் முதல் தடவை அல்ல" என்று. நான் ஒத்துக்கொள்கின்றேன். ஆனால், அந்தப் பழைய வழக்குகளைப் பொறுத்த வரையிலே அந்த அங்கத்தவர்கள் புரிந்த குற்றங்கள் செய்யப்பட்ட பொழுது அவை தண்டனைக்குரிய குற்றங்களாக இருந்தன. இலஞ்ச ஆணைக் குழுவினால் அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். ஆரம்பத்தில் தொடக்கம் - இலஞ்சம் - சட்டப்படி இந்த நாட்டில் குற்றமாகக் கொள்ளப்பட்டது."

"பிரதம அமைச்சர் குற்றவியல் நீதி விசாரணைக் குழுவால் விசாரணை செய்யப்பட்ட வழக்குகளைக் குறிப்பிட்டார்கள். அவை இலஞ்சம் சம்பந்தமானவை. ஆனால் அவசரகால சட்டத்தை நீடித்தால் அது குற்றம் என்று சட்டம் சொல்லவில்லை. இந்த நாட்டில் எந்தக் காலத்திலும் அது குற்றமாகக் கொள்ளப்பட்ட தில்லை."

"கௌரவ பிரதம அமைச்சர் குறிப்பிட்ட முதலாவது குற்றம் - திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க முட்டையும் பாலும் சந்தைப் படுத்தல் இலாகாவுக்கு விற்றார் என்பதாகும். அதன் அடிப்படையில்



திரு. பணண்டாரநாயக்க இலஞ்சம் புரிந்தார் என்று விசாரணைக்குழு தீர்ப்பளித்தது. நான் அந்த வழக்கின் சாதக பாதகங்களைப் பேசவிரும்பவில்லை. கால் நூற்றாண்டு காலம் குற்றவியல் சட்டத்தரணியாகக் கடமையாற்றியவன் என்ற முறையில் சொல்வது அதனை ஒரு சாதாரண நீதிமன்றம்கூட ஏற்றுக்கொள்ளாது. கிராம நீதி மன்றங்கூட எற்காது. அவர்கள் தேர்தல் சட்டப்படி அதனை ஒரு குற்றம் என்று சொல்கின்றனர். அவர்கள் சொல்கின்றார்கள் நாடாளுமன்ற அங்கத்தவராக இருக்கும் வேளையில் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்வது அல்லது அதன் மூலம் நன்மைகள் பெறுவது குற்றம் என்று. ஆனாலும் தேர்தல் சட்டத்தின்கீழும் அது இலஞ்சம் என்று சொல்லப்படவில்லை. அந்தச் சட்டத்தின் மூலம் . ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைப் பதவி இழக்கச் செய்யலாம். ஆனால் அவரது குடியியல் உரிமைகளைப் பறிக்க முடியாது. இந்த அடிப்படையிலேயே ஆணைக்குழுவால் குற்றங்காணப்பட்ட கம்புறுபிட்டிய அங்கத்தவர் (திரு.அல்பேட் டி சில்வா) திரும்பவும் கம்புறுபிட்டிய அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துடன் ஒப்பந்தம் வைத்திருந்தார் என்று அவரது குடியியல் உரிமை பறிக்கப்படவில்லை. பதவியில் இருந்து மட்டும் நீக்கப்பட்டார்."

"அரசியல் திட்டத்தின் 13வது விதியில் சொல்லப்படுவது: 'ஒருவன் குற்றம் செய்தபொழுது தண்டனைக்கு உரியதற்றதான அக்குற்றத்திற்குப் பின்னர் அவனுக்குத் தண்டனை வழங்க முடியாது. ஒருவன் குற்றம் செய்தபொழுது நடைமுறையில் இருந்த அந்தக் குற்றத்திற்கான தண்டனையைவிட மேலதிக தண்டனையை அவனுக்குப் பின்னர் வழங்கக் கூடாது' என்று. அதாவது புதிய தண்டனையைப் பின்னெடுத்துச் சென்று வழங்க முடியாது. இதனை நான் சொல்வது ஏன் என்றால் ஆணைக்குழுவினரால் கௌரவ அத்தனகலை அங்கத்தவர்மீதும், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கமீதும் காணப்பட்ட குற்றங்கள் அவை செய்யப்பட்ட காலத்தில் சட்டப்படி குற்றங்கள் அல்ல. அரசியல் திட்டத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளையே நீங்கள் மீறுகின்றீர்கள். அத்தோடு நீங்கள் பங்காளிகளாக உள்ள மனித உரிமைகள் உத்தரவாதங்களையே மீறுகின்றீர்கள்."

"இப்பொழுது நாம் தண்டனைக்கு வருவோம். கௌரவ சபாநாயகர் அவர்களே ஒருவருடைய குடியியல் உரிமைகளைப் பறிப்பது தண்டனையா? ஒரு மனிதனுடைய தலையை இல்லாமல் செய்வது மரண தண்டனை என்றால், இது அரசியல் தண்டனை. இது அரசியல் கொலை. கௌரவ அத்தனகலை அங்கத்தவரின் பதவியைக் கொலை செய்ய முற்பட்டுள்ளீர்கள். அதுதான் ஒருவருக்கு வழங்கக் கூடிய ஆகக்கூடிய தண்டனை. இதனை நீங்கள் தண்டனை அல்ல என்று சொல்ல முடியாது. இன்று தண்டனைக் குரியதாக உள்ள குற்றங்களை இறந்த காலத்துக்கு நகர்த்தித் தண்டனை வழங்க முற்பட்டுள்ளீர்கள். அது நீங்கள் உத்தரவாதம் அளித்துள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானது. உலக மனித உரிமைகள் பட்டயத்தை மீறுகின்றீர்கள். நீங்களும் பங்காளிகளாக உள்ள மனித உரிமைகள் உறுதி மொழிகளை மீறுகின்றீர்கள். இந்த உறுதிமொழிகள் அனைத்திற்கும் இந்த அரசாங்கமும் நாடும் ஒப்பங் கொடுத்துள்ளதை மறந்து செயல்படுகின்றீர்கள்."

"முதலாவதாக, நீங்களே குற்றங்களை உருவாக்குகிறீர்கள். அதாவது இன்றைய சட்டத்தைப் பின்னோக்கி நகர்த்தித் தண்டனை வழங்க முற்பட்டுள்ளீர்கள். இரண்டாவதாக, விசேட ஆணைக்குழுவை விசாரணைக்கு அமர்த்துவது உண்மையான செயற்பாடுகளைக் கண்டு பிடிக்கவே. இந்தியாவில் ஷா ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அதேபோல் தமிழ் நாடு முதலமைச்சர் பற்றி விசாரிக்க சக்கரியா ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆணைக்குழுவால் குற்றவாளியாகக் காணப்பட்டால், சரியான நடைமுறைப்படி அவர்கள்மீது குற்றத்தாக்கல் செய்ய வேண்டும். குற்றவாளியால் - இயலுமாயின் - அவர் தான் குற்றவாளி அல்ல என்பதனைத் தெரிவித்துத் தன்னைப் பாதுகாக்கச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும். அந்த அடிப்படை உரிமை எமது அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தான் மனித உரிமைகள் உலக பட்டயமும் விதித்துள்ளளது. விசேட ஆணைக்குழு உண்மையைக் கண்டுபிடிக்க நியமிக்கப்பட்டதாயின் அதன் முடிவுகளை அமுல் படுத்த முன்னர் கலந்தாலோசனை செய்யவேண்டும். அத்தோடு ஒரு முறையோ இரண்டு முறையோ மேல் முறையீடு செய்ய விதியிருக்க வேண்டும். நீங்கள் சட்ட நடைமுறைகளை எல்லாம் செயலிழக்கச் செய்கிறீர்கள்."



"கௌரவ பிரதம அமைச்சர் கௌரவ அத்தனகலை உறுப்பினருக்கு எதிராகப் பல குற்றங்களைக் குறிப்பிட்டார். அவற்றில் பல நம்பிக்கையில்லாப் பிரேரணை நடைமுறையில் தீர்க்கப்பட வேண்டியவை. அவை சென்ற பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு உட்படுத்தப்பட்டுச் சபையில் விவாதிக்கப்பட்டு, அவர் தன் சார்பான வாதங்களை முன்வைத்த பின்னர் அவர் குற்றவாளி அல்ல என்று பெரும்பான்மையானவர்களால் தீர்ப்பளிக்கப்பட்டவை. அப்பொழுது வேறு ஒரு கட்சி ஆட்சியில் இருந்தது. இன்றைக்கு அவருடைய அரசியல் எதிரிகள் ஆட்சியில் பெரும்பான்மையோடு இருப்பதால் அவரைக் குற்றவாளியாக்க முயல்கின்றார்கள். இது ஜனநாயகம் அல்ல. ஆணைக்குழுவின் தீர்ப்பின்படி என்று சொல்கின்றார்கள். இந்த நாட்டு குற்றவியல் சட்டத்தில் இல்லாத ஒரு குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்தச் சபையில் இருந்து அவரை அகற்றப் பார்க்கின்றீர்கள்."

"இவ்வகையான அரசியல் குற்றங்களை முன்வைப்பதற்கு சிறந்த இடம் தேர்தல் காலத்து பிரசார முயற்சிகளாகும். அதன்படி மக்கள் தீர்ப்பளித்துவிட்டார்கள். அவர்கள் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைக் குற்றவாளியெனத் தீர்ப்பளித்து அவரைப் பாராளுமன்றம் செல்லாமல் தோற்கடித்துவிட்டார்கள். ஆனால் அதே மக்கள் கௌரவ அத்தனகலை அங்கத்தவரை (திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா) இந்தச் சபைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். அத்தனகலை வாக்காளரது தீர்ப்பை நீங்கள் மதிக்க வேண்டும். அத்தனகலை வாக்காளரின் தீர்ப்பை மாற்றி எழுத உங்களுக்கு அதிகாரம் இல்லை."

"விசேட ஆணைக்குழுக்களின் நோக்கம் மக்கள் தெரிந்து கொள்வதற்காக சம்பந்தப்பட்டவர்களின் குற்றங்களை வெளிப்படுத்துவதே. அதன்படி மக்கள் தீர்ப்பளிப்பார்கள். நீங்கள் எவரையும் இந்தச் சபையில் இருந்து வெளியேற்றத் தேவையில்லை. அதுதான் ஜனநாயகம் செயற்படும் சீரிய வழிமுறை. இந்தப் பாராளுமன்றமும், அதற்கு முன்னர் சட்ட சபையும், 'பீனல்' சட்டப்படி இலஞ்சக் குற்றம் புரிந்த அங்கத்தவர்களை வெளியேற்றி உள்ளது. ஆனால் வரலாற்றில் என்றுமே குற்றம் செய்த பொழுது சட்டத்தில்

குற்றம் என்று இருக்காத குற்றத்திற்கு அங்கத்தவரைப் பதவி நீக்கம் செய்தது கிடையாது."

"சகல விடயங்களையும் மீளாய்வு செய்யும்படி அரசாங்கத்தை நான் வேண்டிக்கொள்கின்றேன். இந்தச் சபையில் வாக்களிப்பு எப்படியிருக்கும் என்பது முடிந்த கதை என்பது எனக்குத் தெரியும். அப்படியிருந்தும் அரசாங்கத்தின் உச்சத்தில் உள்ள மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களை இந்த நாட்டின் ஜனநாயகத்தின் பெயரால் வேண்டிக்கொள்வது - இந்த விடயத்தில் தயக்கமின்றி அவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தித் தலையிட்டு செய்யப்படவிருக்கும் அநீதியைப் போக்கும்படி வேண்டிக் கொள்கின்றேன்."

"இந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்க ஜனாதிபதி ∴போட் - (வாட்டர்கேட் ஊழலில் சம்பந்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி) நிக்சன் அவர்களை மன்னித்தபொழுது - கூறிய சில வார்த்தைகளை முன்வைக்க விரும்புகிறேன்:"

"என்னுடைய கவலை எல்லாம் இந்தப் பெரும் நாட்டின் எதிர்காலம் பற்றியதாகவே உள்ளது ...." - ஜனாதிபதி ∴போட்

"நானும் எனது கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கடுமையான வேறுபாடுகள் உடையவர்கள். ஆனால், எங்களில் எவரும் இலங்கையின் சுமுக வாழ்வில் அமைதியின்மை குழப்பம் ஏற்படுவதை விரும்பவில்லை. அந்த அடிப்படையில்தான் அமெரிக்க ஜனாதிபதி போட் சொன்னார்:"

"எனது மனச்சாட்சி எனக்குச் சொல்கிறது எனது கடமை தனிப்பட சமாதானத்தைப் பிரகடனம் செய்வது மட்டுமல்ல சகல வழிவகைகளையும் பயன்படுத்தி அதனை உறுதிப்படுத்துவதும் எனது கடமை என்று ...." - ஜனாதிபதி ∴போட்.

"அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை உள்நாட்டில் அமைதியை உறுதிப்படுத்தும் என்று நான் நினைக்கவில்லை. அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை எங்களுடைய மதிப்பை வெளிநாடுகளில் உயர்த்தாது என்று கருதுகிறேன். இந்த நாட்டில் 12 வருடங்கள் பிரதமராக இருந்தவரின் குடியியல் உரிமைகளைப் பறிப்பதைக் கேட்டு பல வெளிநாட்டுப் பிரமுகர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளார்கள். அவர் பிரதமாராக இருந்த சமயம் என்னை மூன்று தடவைகள் சிறை வைத்தவர். இருந்தும் அவர் இந்த நாட்டின் பிரதமராக 12 வருடங்கள் பதவி வகித்தபடியால் அவரது குடியியல் உரிமையைப் பறிப்பது, அவரை இந்தச் சபையில் இருந்து வெளியேற்றுவது முறையல்ல."



"அதன் காரணமாகவே அமெரிக்க ஜனாதிபதி ∴போட் அவர்கள் எவரும் வேண்டுகோள் செய்யாமலே தனது சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி - நிக்சன் அவர்களை மன்னித்து - ஐக்கிய அமெரிக்காவைப் பற்றிப்பிடித்து எரிந்த கசப்பான உணர்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவர் வழங்கிய தீர்ப்பு தர்ம செயலாக எனக்குப்படுகிறது. இதனை நான் கௌரவ அத்தனகலை உறுப்பினரின் சார்பாகச் சொல்லவில்லை. இந்த நாட்டின் உயர்பீடத்தை அலங்கரிக்கும் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் நாட்டின் ஜனநாயக புனிதத்தைப் பாதுகாக்க அமெரிக்க ஜனாதிபதி ∴போட் அவர்களது முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன். தர்மத்தின் வழிநின்று அரசோச்ச மறுப்பது ஒவ்வொருவருக்கும் துன்பம் கொண்டுவரும். நியாயம் செய்யப்பட்டால் மட்டும் போதாது. அது நியாயமாகச் செய்யப்பட்டதாக மற்றவருக்குத் தெரியவேண்டும். எனவே அரசாங்கத்தின் அரசியல் எதிரிகளுக்கும் நியாயம் செய்யப்படவேண்டும்."

"கௌரவ பிரதம அமைச்சர் அவர்களே, நீங்கள் ஒரு முதிர்ச்சி அடைந்த இராசதந்திரியாக வளர்ந்து உயர்ந்து நிற்பதை நான் காண்கின்றேன். இந்தவகையான செயலில் ஈடுபடாதீர்கள் என்று உங்களை வேண்டிக்கொள்கின்றேன். அது அரசாங்கத்துக்கோ, எதிர்க்கட்சிக்கோ நாட்டுக்கோ நன்மை பயக்காது. நன்றி."

வாழ்க்கையிலும் அவர் பகைவனை மன்னிக்கும் பெருந்தன்மையான குணத்தை உடையவராக விருந்தார். 1977 தேர்தலின் பொழுது தெல்லிப்பழை தபாற் கந்தோருக்கு அருகே ஒரு பிரசாரக் கூட்டம் நடந்தது. அக்கூட்டம் நடந்து கொண்டிருந்த பொழுது கற்கள் சில மேடையில் வந்து வீழ்ந்தன. மேடையில் இருந்த ஒருவரின் தோளை ஒரு கல் பதம் பார்த்தது. அமிர்தலிங்கம் அவர்கள் அந்தக் கல்லை எடுத்துப் பார்த்துவிட்டு அதனை மேசையில் வைத்தார். அந்தக் கல்லை எறிவித்த கூட்டத்தின் தலைவர் வெளிநாட்டு

மதுவிற்பனை செய்யும் கடைச் சொந்தக்காரர். முருகப் பெருமானின் மறு பெயரைக் கொண்டவர். அவரது கடை வீதிக்கு மேற்குப் புறத்தில் இருந்தது. அவரை நையப்புடைக்கப் புறப்பட்ட இளைஞர்களை அமைதிப்படுத்தினார். எதிர்க்கட்சித் தலைவராகிய பின்னர், அந்த மதுபானக் கடைக்காரரின் அனுமதிப்பத்திரத்தை ரத்துச்செய்விக்க அவரது ஆதரவாளர்கள் விண்ணப்பம் எழுதிக்கொண்டு கூட்டமாக அவரது மூளாய் வீட்டிற்குச் சென்றனர். அவர்களுக்கு "நான் தமிழ் மக்களைக் காக்கப் புறப்பட்டவன். தெரியாத்தனமாகச் செய்யும் பிழைக்கு எவரையும் தண்டிக்கக்கூடாது. அந்த மனிதர் நேற்று வந்து என்னிடம் மன்னிப்புக் கேட்டவர். நான் அவரை மன்னித்துவிட்டதாகக் கூறிய வாக்குறுதியை மீற முடியாது" என்று கூறி அமைதிப்படுத்தித் திருப்பி அனுப்பிவிட்டார். அதுதான் அமிர்தலிங்கனாரின் குணச்சித்திரம்.

# அதிகாரம் 35
# மாவட்ட அபிவிருத்திச் சபை

1980 இளைஞர் பேரவை அமிர்தலிங்கம் அவர்களின் சாத்வீகப் போக்கிற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி, 1980ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29ந் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொடர்பைத் துண்டிக்கப் போவதாக அறிக்கை வெளியிட்டது. அந்த குழப்க்காரக் கூட்டத்துக்கு மாவை சேனதிராசா தலைமை தாங்கினார். கோவை மகேசனின் தலைமையில் கூட்டணியை எதிர்த்தவர்களோடு மாவை சேனாதிராசாவும் சேர்ந்து கொண்டார். கூட்டணியில் இருந்து தான் இராஜினாமாச் செய்துவிட்டதாக மாவை சேனாதிராசா 1980 மே மாதம் 31ந் திகதி அறிக்கை வெளியிட்டதாக 'ஒரு மிதவாதியின் கொலை' என்ற நூலில் ரி.சபாரத்தினம் கூறியுள்ளார்.

1980 ஆகஸ்ட் மாதம் பிரதமர் பிரேமதாசவின் அரசு தமிழரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முதற்படியாக மாவட்ட அபிவிருத்திச் சபை ஆட்சி முறையை முன்வைத்தது. வவுனியாவில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுசபைக் கூட்டத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் பேசும் பொழுது - மாவட்ட சபை ஆட்சி முறை நிர்வாகத்தைப் பரவலாக்கவும், வடகிழக்குப் பொருளாதார அபிவிருத்திகளில் தமிழர்கள் பங்கு கொள்ளவும், தமிழர் நிலப்



பிரதேசம் பறிபோகாமல் பாதுகாக்கவும் வாய்ப்புள்ளதாகச் சொன்னார். "முன்னர் தமிழர் தாயகத்தில் சிங்களவர்களைக் குடியேற்றித் தமிழ்ப் பிரதேசத்துள் சிங்கள ஆதிக்கத்தை ஏற்படுத்தியது சிங்கள அரசு. இப்பொழுது எல்லைப்புறங்களில் உள்ள தமிழர் பிரதேசங்களைப் பிரித்தெடுத்து, சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து தமிழரின் நிலப்பரப்பைக் குறைக்க முனைந்துள்ளது. அந்தச் சூழ்ச்சிக்கு மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டம் முற்றுப் புள்ளி வைத்துள்ளது" என்று பொதுச் சபைக்கு விளக்கினார். உதாரணமாக 1974ஆம் ஆண்டு வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைத்த, திருகோணமலை மாவட்டத்தில் இருந்த தமிழர் வாழும் நிலப்பிரதேசமான தென்னைமரவாடி, புல்மோட்டைக் கிராமங்களைப் பிரித்து எடுத்து அனுராதபுர சிங்கள மாவட்டத்தோடு இணைக்கப்பட்டது. மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டப் பிரகாரம் தென்னைமரவாடி, புல்மோட்டைக் கிராமங்கள் மீண்டும் திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. வேறும் தமிழர்களின் தாயகமான வவுனியா மாவட்டத்தின் வடபகுதியைப் பிரித்து எடுத்து, சிங்கள மாவட்டமான மதவாச்சி மாவட்டத்தில் இருந்து பிரித்தெடுத்த பகுதியோடு இணைத்து ஒரு சிங்கள வவுனியா மாவட்டம் உண்டாக்க எடுத்த முயற்சிக்கு மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டம் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது என்றும் விளக்கம் கூறினார்.

வவுனியா நகர மண்டபத்தில் நடந்த கூட்டணிக் கட்சிக் கூட்டத்தில் - ஆரம்பத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்கப்படாது என்ற கருத்தைக் கட்சியின் சிலர் காரசாரமாக வெளியிட்ட பொழுதும் - பொதுச் சபை அதனை ஒரு மனதாக ஏற்றது. ஆனால் கூட்டணியின் இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்கள் - இவர்களுக்கு மாவை சேனாதிராசா தலைமை தாங்கினார் - கோவை மகேசன் கூட்டத்தோடு சேர்ந்து கூட்டணிக்கு எதிராகப் போர்க்கொடி ஏந்தினார்கள். அண்ணல் அமிர்தலிங்கம் அவர்கள்மீது புழுதிவாரித் தூற்றினார்கள். அவர் 10 மணி நேரம் நடந்த கூட்டம் முடிந்து இரவு 9.00 மணிக்கு வெளியே வந்த பொழுது "அமிர்தலிங்கம் ஜயவேவ" (ஜயவேவா என்றால் வெற்றி) என்று சிங்களத்தில் கோசமிட்டனர்.

1981 மாவட்ட அபிவிருத்திச் சபைக்கான தேர்தல் யூன் 4ந் திகதி நடைபெறவிருந்தது. அதில் தமிழர் விடுதலைக் கூட்டணி,

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி என்பன தேர்தல் களத்தில் மோதின. மக்களைத் தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்று ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் தீவிர பிரசாரம் செய்தன.

மாவட்ட சபைத் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்கள் பரவலாக நடந்தன. தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர்களை ஆதரித்து, மே மாதம் 8ந் திகதி யாழ் நகரில், ஐந்து சந்தியில் ஒரு கூட்டம் நடந்தது. அச்சமயம் இமாம் அவர்கள் பேசிக்கொண்டு நின்றார்கள். அமிர்தலிங்கம் அவர்கள் 'பிளேன் சோடா' பருகிக்கொண்டிருந்தார். அச்சமயம் ஆறு விடுதலைப் புலி உறுப்பினர்கள் அங்கு வந்து, அவரது வாகனத்தைச் சாரதியிடம் பறித்தெடுத்து, அதற்குள் ஏறியிருந்து யன்னல் வழியாக ஆகாயத்தில் சுட்டபடி ஜனக் கூட்டத்துள் வாகனத்தைச் செலுத்தினர். மக்கள் பயத்தில் கத்திக் குழறிக்கொண்டு சிதறி ஓடினார்கள். மேடையில் இருந்தவர்களும் ஓடிவிட்டனர். அமிர்தலிங்கம் அவர்கள் மட்டும் அஞ்சாது மேடையில் நின்று நடப்பதை அவதானித்தார். ஓடி மறையாமல் ஒருவர் மட்டுமே உதவிக்கு நின்றார். அவர் யாழ் உதவி மேயர் எம்.ரி.செல்வத்துரை. "உங்களுக்கு ஏதன் ஆபத்துச் செய்வார்களோ தெரியாது. நீங்கள் இவ்விடத்தைவிட்டுப் போங்கள்" என்று அமிர்தலிங்கம் அவர்கள் செல்வத்துரைக்குக் கூறினார். அவர் "எது நடந்தாலும் நடக்கட்டும். உங்களைவிட்டுப் போகமுடியாது" என்று கூறிவிட்டு மேடையில் நின்றார். அமிர்தலிங்கம் அவர்கள் துப்பாக்கிக்குப் பயந்து ஓடவில்லை. அது ஒரு இனத்தை விடுதலைப் பாதையில் வழி நடத்தும் தலைவனுக்கு இருக்க வேண்டிய குணச்சித்திரம். ஆகாயத்தில் சுட்டு மிரட்டி மக்களைக் கலைத்தபின்னர் அந்த இளைஞர்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அமிர்தலிங்கம் அவர்கள் "மக்களின் தீர்ப்பை நாங்கள் ஏற்க ஆயத்தமாக இருக்கிறோம். நீங்கள் அவர்கள் தீர்ப்புச் சொல்லுமட்டும் பொறுத்திருந்து பாருங்கள்" என்று அறைகூவல் விட்டார். இக்கட்டான கால கட்டத்தில் மக்களை அம்போ எனக் கைவிட்டு உயிரைப் பொத்திக்கொண்டு ஓடாமல் தன்மீது மக்கள் சுமத்தியுள்ள பொறுப்புக்களை உணர்ந்து நிதானமாக எதிரிகளுக்கு நியாயம் சொன்னார். அவரது இந்தத் துணிவு ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை நிலைகொண்டிருந்ததைக் காணலாம். பிரசாரக் கூட்ட



அரங்கைவிட்டுச் சென்ற இளைஞர்கள் அமிர்தலிங்கம் அவர்களின் வாகனத்தை படு வேகமாக ஓட்டிச் சென்று கோம்பையன் மயானத்தின் முன்னர் விட்டு அதன் கண்ணாடிகளை அடித்து நொருக்கினர், ரயர்களைச் சுட்டுச் சேதப்படுத்தியதோடு 'பொனற்றுள்' கைக்குண்டு ஒன்றையும் வைத்துவிட்டுச் சென்றனர்.

அந்த நிகழ்ச்சி யாழ்ப்பாணத்திற்குள் சோதர அராஜகன் புகுந்துவிட்டான் என்று கட்டியம் கூறியது. அடுத்து வந்த காலப் பகுதியில் ஜனநாயக தர்மங்கள் தமிழ் ஈழத்தில் அக்கிரமத்துக்கு அடிபணியத் தொடங்கின. மனிதவிழுமியங்களையும் சத்தியங்களையும் கழுத்தில் நெருடித் திருகும் காட்சிகள் அரங்கேறத் தொடங்கின. இருண்ட கீழறைகளில் இரும்புக் காப்புகளில் பிணைத்த கால்கள், வேதனையின் அகோரத்தில் இரவின் அமைதியைக் கிழித்துத் தூரக் கேட்கும் மரண ஓலங்கள், நீதிபதிகள் இல்லாமலே மரண தீர்ப்புக்கள் வாசிக்கும் துப்பாக்கிகள், குருதி வழியும் மனிதர்களைக் காவும் தந்திக் கம்பங்கள், கம்பங்களில் ஒட்டிய குருதியை சுவைக்கும் தெரு நாய்கள், வீதி ஓரங்களில் வீசி எறிந்த கருகிய சடலங்களைச் சூழ்ந்து விடாமல் கரையும் காகங்கள், தரைக்கு வெளியே தெரியும் புதைக்கப்பட்ட சடலங்களின் கால்கள், தெருவோரக் கம்பில் குத்தி வைத்த மனித தலைகள், சந்தியில் டயர்களின் மேல் எரியும் பிரேதங்கள், 'இனிக் கொண்டாடலாம்' என்னும் இழவுச் செய்திகள் - இவை எங்கள் மண்ணின் வீர மைந்தர்கள், தமது தொப்பூழ்கொடி உறவுகளுக்கு எதிராகச் சரித்திரமாக்கிய செங்குருதி அபிசேகக் காட்சிகள். அதுவே இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கால் நூற்றாண்டின் தமிழ் ஈழக் கலாச்சாரமாக மாறியது. இத்தனையும் விடுதலை என்ற பெயருக்குள் மோட்சம் தரும் புனித யாகங்களாகக் கொள்ளப்பட்டன. சகோதர அக்கிரமங்களுக்கு அஞ்சி ஒடுங்கிய மக்கள் வாயில்லாத மனிதக்கூடுகளாக-செம்மரி மந்தைகளாகக் கோலம் கொள்ளத் தொடங்கினர்.

மே மாதம் 31ந் திகதி யாழ் நகரில் வண்ணார்பண்ணையில் உள்ள நாச்சிமார் கோவிலடியில் இன்னொரு கூட்டணிப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அமிர்தலிங்கம் அவர்கள் பேசிக்கொண்டு நின்ற பொழுது, மேடைமீது ஏறிய 'புளட்' இயக்கப் போராளிகள் இருவர் துப்பாக்கியைக் காட்டி அவரைப் பேசக்கூடாது என்று எச்சரித்தனர்.

அண்ணல் துப்பாக்கியைக் கண்டு பயப்படுகிறவர் அல்லர். அவர் "நீங்கள் என்ன வேண்டும் என்றாலும் செய்யலாம். நான் பேசுவதை நிறுத்தப்போவதில்லை. அது எனது ஜனநாயக உரிமை" என்று கூறிவிட்டுத் தொடர்ந்து பேசினார். ஆத்திரத்தோடு மேடையை விட்டுச் சென்ற 'புளட்' இயக்கப் போராளிகள், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சாஜன்ட் புஞ்சி பண்டாவையும், கொன்ஸ்ரபிள் கனகசுந்தரத்தையும் சுட்டுக் கொன்றனர். இன்னும் இரு பொலிசாரைக் காயப்படுத்தினர். மக்கள் பயத்தில் முண்டியடித்து ஓடி மறைந்தனர். மேடையில் இருந்த பேச்சாளப் பெருமக்களும் ஓடி மறைந்து முடிந்துவிட்டது. எதிரே இரத்த வெள்ளத்தில் பிரேதங்கள். அமிர்தலிங்கம் அவர்கள் அசையவில்லை. சிங்கள இனத்தால் அதுவரை பறிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகள் தனது இரத்தத்தின் இரத்தங்களாலும் பறிக்கப்படுவதை ஜீரணிக்க முடியாமல் கல்லாக நின்றார். அரை மணிநேரம் கழித்து அங்கு வந்த பொலிசார் கோவிலுக்கும், அருகில் இருந்த வீடுகளுக்கும் இரண்டு கார்களுக்கும் தீமூட்டினர். பின்னர் இ.போ.ச. பஸ்வண்டிகளில் புறப்பட்ட அவர்கள் ஆஸ்பத்திரி வீதியில் நிரையாக அமைந்த கடைகளை எரித்தபின்னர் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அவர்கள் வீட்டையும் அவரது ஜீப்பையும் எரித்து விட்டுத் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தைத் தீக்கிரையாக்கினார்கள். இறுதியாக யாழ்ப்பாண நூலகத்தை 97.000 நூல்களுடன் எரித்துச் சாம்பலாக்கினர். இவற்றை எல்லாம் அன்று யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்த அமைச்சர்களான சிறில் மத்தியூவும் - 1994ஆம் ஆண்டு ஆக்டோபர் 24ந் திகதி கொழும்பில் தற்கொலைக் குண்டு தாரியினால் கொல்லப்பட்ட காமினி திஸநாயக்காவுமே செய்வித்தனர். அத்தோடு அவர்கள் அமிர்தலிங்கம் அவர்களைக் கைதுசெய்யும்படி யாழ்ப்பாணப் படைத்தளபதி பிகேடியர் திஸ்ஸ வீரசிங்கவை கட்டாயப்படுத்தினர்.

யூன் 3ந் திகதி யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அடுத்த நாள் அதிகாலை 2.45 மணிக்கு 100 இராணுவத்தினர் மூளாயில் அமிர்தலிங்கம் அவர்களது வீட்டுக்குப் போய் அவரைக் கைது செய்யும்படி மேலிடத்தில் இருந்து கட்டளை வந்துள்ளதாகச் சொல்லிக் கைது செய்தார்கள். இராணுவ வண்டிகள் முன்னும் பின்னும் செல்ல அவர் குருநகரில் உள்ள இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்குவைத்து அவர் ஜனநாயக செயல் முறைகளுக்கு எதிராக நடந்ததால் கைது செய்யப்பட்டதாக அவருக்கு விளக்கம் சொல்லப்பட்டது. எனினும் ஜனாதிபதி ஜயவர்த்தன தொலைபேசியில் கைது தவறுதலாக நடந்தது என்று அமிர்தலிங்கம் அவர்களுக்குச் சொல்லி விடுதலை செய்தார்.



'ஒரு சிப்பாயின் பார்வை' என்ற போர்க்கால நூலை எழுதிய மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க யாழ் நூல்நிலையம் எரிவதை பஸ்வண்டியில் இருந்து பார்த்தவர். 'அதற்கு காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை' என்று தனது நூலில் பதிவு செய்துள்ள அவர் இராணுவம் தொடர் வண்டிகளில் சென்று அமிர்தலிங்கம் அவர்களை கைது செய்ததையோ, அன்றைய தினம் அமைச்சர்கள் சிறில் மத்தியூ, காமினி திசநாயக்கா ஆகிய இருவரும் கோட்டையில் இருந்து ஏவல் செய்ததையோ ஆவணப்படுத்தாமல் வெகு சாமர்த்தியமாக நழுவியிருக்கிறார். பிரபல .போராளிகளின் பெற்றார் விபரம், தொழில் விபரம், சகோதரங்களின் விபரம், ஊர் விபரம், விலாசம் எல்லாவற்றையும் எழுதி உள்ள சரத் முனசிங்க தான் சம்பந்தப்பட்ட முக்கிய செய்திகளை மட்டும் ஏன் மூடிமறைக்கிறார்?

பேரினவாத சிங்களத் தலைவர்களின் யாழ் பொதுசன நூலக அழிப்பை அண்ணல் அமிர்தலிங்கம் அவர்கள் பின்னர் பாராளுமன்றத்தில் பேசும் பொழுது பின்வருமாறு ஆவணப்படுத்தி உள்ளார்:

"பொலிஸ் மாஅதிபரும், பிரிகேடியர் வீருதுங்காவும் யாழ்ப்பாணத்தில் இருக்கத்தக்கதாக யூன் 1ந் திகதி யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் கொடூரமானவையும் வியப்பானவையுமாகும். அதே பொலிசார் அன்று இரவு யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்குத் தீயிட்டனர். ஏறத்தாள 97,000 பெறுமதிமிக்க நூல்கள் எரிந்து கருகிப்போயின. உலகில் எங்கிருந்தும் இனிமேல் பெறுவதற்கரிய நூல்கள் பல எரிந்து போயின. அந்த நூல் நிலையத்தைக் கட்டி முடிக்க நீண்ட காலம் எடுத்தது."

"இந்த நாட்டில் வாழுகின்ற ஒரு சில மக்களின் மனநிலையைப் புரிவதற்கு இந்தச் சம்பவம் பொருத்தமான குறிகாட்டியாகும். இரண்டாம்

உலக மகா யுத்தத்தின்போது (1939-1945) பிரித்தானியாவின் மீது குண்டு வீசச் சென்ற ஜேர்மன் விமானப்படை விமானிகளுக்கு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின்மீது குண்டுகள் வீசி அதனை அழிக்கக்கூடாது என்று ஹிட்லர் உத்தரவிட்டிருந்தார். அதே போல ஜேர்மனியின் ஹைடல்பேர்க் பல்கலைக்கழகத்தைத் தவிர்க்கும்படி பிரித்தானியா தனது விமானப் படைக்குப் பணிப்புரை வழங்கியது. அறிவுத் தளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் பகைவர்களுக்கும் இருந்தது. ஆனால், யாழ்ப்பாணத்தில் கண்மூடித்தனமாக நடந்து கொண்ட பொலிசார் அங்கிருந்த நூல் நிலையத்தைக்கூட விட்டுவைக்கவில்லை."

அமிர்தலிங்கம் அவர்கள் பக்கம் இருந்த மக்களை ஜனநாயக வழியில் தம்பக்கம் திருப்ப முடியாத ஆயுத இயக்கங்கள், அவர்களைத் தம்பக்கம் சாய்க்கத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி இருள் மண்டிய அச்சச் சூழலை ஏற்படுத்தின. காற்றும் காட்டிக் கொடுக்கும் என்ற அச்சம் அரசோச்சியது. துப்பாக்கிகளுடன் சென்று வாகனங்களில் ஏற்றி இறக்கி கூட்டம் போட்டு மக்கள் தம் பக்கம் என்றனர். பாடசாலைகளுக்குள் சென்று பலாத்காரமாக மாணவர்களை வாகனங்களில் எற்றிச் சென்று ஊர்வலங்கள் நடாத்தித் தங்கள் செல்வாக்கைப் பறைசாற்றினர். துப்பாக்கி மிரட்டல்களுக்குப் பயந்த சனங்கள் ஜனநாயக உரிமைகளப் பற்றி வாய் திறக்காமல் சந்தர்ப்ப வேசம் போட்டனர். மாவட்ட சபைத் தேர்தலில் ஆயுதக் குழுக்கள் மக்களை வாக்களிக் வேண்டாம் என்று தீவிர பிரசாரம் செய்தன. அமிர்தலிங்கம் ஆட்சி அஸ்தமிக்கப் போகிறது என்ற இறுமாப்பில் இருந்தன. அவற்றின் தலையில் தீயை வாரிக் கொட்டியது போலத் தேர்தல் முடிவுகள் அமைந்தன. செனட்டர் நடராசாவின் தலைமையில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி 2,63,369 வாக்குகளையும், தியாகராசா தலைமையில் களத்தில் இறங்கிய ஐக்கிய தேசியக் கட்சி 23,302 வாக்குகளையும், (மாமனிதர்) குமார் பொன்னம்பலத்தின் தலைமையில் போட்டியிட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 21,682 வாக்குகளையும் பெற்றன. யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உரிய 10 ஆசனங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி கைப்பற்றியது. 'பொட்டர்' என்று அழைக்கப்படும் மல்லாக வாசியான செனட்டர் சுப்பிரமணியம் நடராசா யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவராக நியமிக்கப்பட்டார். வடகிழக்கின் ஏனைய பாகங்களில் நடந்த மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியே சகல இடங்களிலும் வெற்றி பெற்றது. இந்த வெற்றி ஆயுதம் ஏந்திய இயக்கங்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. 'சோத்துப் பார்சல்' கொடுக்கும் மக்கள்மீது வன்மத்தைக் காட்ட முடியாது. அதனால் ஒட்டு மொத்தமாக எல்லா இயக்கங்களும் அண்ணல் அமிர்தலிங்கம் அவர்களைப் பகைத்துக் காரசாரமாக விமர்சிக்கத் தொடங்கின. தமிழர் விடுதலைக் கூட்டணியைக் களத்தில் இருந்து அகற்றவும் அமிர்தலிங்கம் அவர்களது தலைமையைப் பறித்தெடுக்கவும் கங்கணங்கட்டின.



அரசாங்கம் மே 31ந் திகதியும் யூன் 1ந் திகதியும் யாழ் நகரில் நடந்த வன்முறைகளை விசாரிக்க ஓர் ஆணைக் குழுவை நியமித்தது. ஆனால் குற்றவாளிகள் எவருமே தண்டிக்கப்படவில்லை. இந்த நிகழ்வை அடுத்து அமிர்தலிங்கம் அவர்கள், தனது எதிர்க் கட்சித் தலைவருக்கான விசேட சலுகைகள்-உரிமைகளைப் பயன்படுத்தி அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பா, இந்தியா. ஒஸ்ரேலியா, கனடா ஆகிய நாடுகளுக்குச் சென்று தமிழர்களுக்கு இலங்கையில் பாதுகாப்பு இல்லை என்ற பிரசாரத்தை மேற்கொண்டார். அதனால் சிங்களத் தலைவர்கள் ஆவேசம் அடைந்திருந்தனர். அவர்மீது பின்னர் அரசாங்கம் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு அவரது உலகளாவிய சிங்கள அரசுக்கு எதிரான பிரசாரமே முக்கிய காரணமாகும்.

# அதிகாரம் 36
# தமிழ் நாட்டில் அபயக் குரல்

1981 அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க் கட்சித்தலைவராக இருந்த வேளை - யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்டதை அடுத்து - 1981ஆம் ஆண்டு தமிழகம் சென்று அவர்களின் ஆதரவைத் திரட்டப் பிரசாரம் செய்தார். அவரது முயற்சி பெரும் வெற்றி அளித்தது.

1981 யூன் 12 ந் திகதி சென்னையில் ஊடகவியலாளர்களைக் கூட்டி இலங்கையில் தமிழ் மக்களை இராணுவம் கொன்று கொடுமைப் படுத்துவதை எடுத்துக் கூறினார். யாழ் பொதுசன நூலகமும், யாழ் நகரும் எரிக்கப்பட்டதைக் கூறினார். தமிழ் மக்களுக்கு இலங்கையில் பாதுகாப்பு இல்லாததைக் கூறினார். அபயம் தாருங்கள் என்று வேண்டினார். அத்தோடு சகல தமிழக அரசியல் கட்சித் தலைவர் களையும் சந்தித்து தமிழ் மக்களின் இன்னல்களைக் கூறி ஆதரவு திரட்டினார் அதன் விளைவாகத் தமிழகத்தில் இலங்கைத் தமிழர் சார்பான உணர்வைக் கொந்தளிக்கச் செய்தார். அதன் விளைவு:

1981 யூன் மாதம் 20 கல்லூரிகளின் மாணவர்கள் சென்னையில் உள்ள இலங்கையின் உதவிக் ஹைகொமிசனருக்கு ஒரு கண்டன அறிக்கை சமர்ப்பித்தனர்.

1981 யூன் 10 - கலைவாணர் அரங்கில் மா.பொ.சிவஞானம் (மாநிலங்கள் சபைத் தலைவர்) கே.ராஜாராம், பி.யூ.சண்முகம் பி.மாணிக்கம் (சிபிஐ) பி.நெடுமாறன் (காங்கிரஸ்) ஆகியோர் கூட்டம் வைத்துக் கண்டனப் பேச்சுக்களை நிகழ்த்தினர்.

1981 யூன் 21 - தமிழ் இயக்கம், தமிழக ஈழ நட்புறவுக் கழகம், வளர்கலை மன்றம் என்பனவற்றைச் சேர்ந்தவர்கள் ஊர்வலமாக கவனர் மாளிகைக்குச் சென்று இலங்கையில் நடைபெறும் கொடுமைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று அறிக்கை சமர்ப்பித்தனர்.

1981 ஆகஸ்ட் 29 - திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சென்னையில் உள்ள இலங்கை ஹைகொமிசனர் அலுவலகத்தின் வாசலில் மறியல் போராட்டம் செய்தனர். 10 பெண்கள் உட்பட 127 பேர் கைது செய்யப்பட்டனர்.

1981 செப்டம்பர் 3 தொடக்கம் 1981 அக்டோபருக்கும் இடையில் சென்னையில் உள்ள இலங்கை உதவிக் ஹைகொமிசனர் அலுவலகத்தின் முன்னர் மறியல் பேராட்டம் செய்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 14,340 பேர் கைது செய்யப்பட்டனர்.

1981 செப்டம்பா 12 ந் திதி தமிழகம் முழுவதும் ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது. கட்சி வேறுபாடு இல்லாமல் சகலரும் பங்கு கொண்டனர். தமிழகம் முதுவதும் அன்று ஸ்தம்பித்தது.



1981 செப்ரம்பர் 13ந் திகதி காங்கிரஸ் (ஐ) நீலகிரியில் ஒரு மகாநாட்டைக் கூட்டி இலங்கையில் நடைபெறும் இன ஒழிப்பைக் கண்டித்துப் பிரேரணை நிறைவேற்றியது.

மேலும், தென் ஆர்க்காடு, தர்மபுரி, சேலம், கோயாம்புத்தூர், வட ஆர்க்காடு, பெரியார், திருச்சி, திருநெல்வேலி, கன்யாகுமரி மாவட்டங்களலில் பலர் தீக்குளிக்க முயன்றனர். வாகனங்கள் சேதமாக்கப்பட்டன, எரிக்கப்பட்டன.

நன்றி: ஜெயின் கமிசன் அறிக்கை

மகனை அளந்த தந்தை

1981 எதிர்க் கட்சித் தலைவராக இருந்த சமயம், அமிர்தலிங்கம் அவர்களுக்கு அவரது கொழும்பு உத்தியோக இல்லத்துக்கு ஒரு தொலை பேசி அழைப்பு வருகிறது. அது பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவில் கடமை புரிந்த ஒரு தமிழருடைய குரல்.

"உங்கள் மகன் பகீரதனுக்கு உயிரியல் விஞ்ஞானப் படிப்பிற்கு இடம் கிடைத்துள்ளது. பெரும்பாலும் பல்மருத்துவத்துக்குச் சந்தர்ப்பங் கிடைக்கலாம். நீங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருடன் கதைத்தால் மருத்துவ துறைக்கு இடம் ஒதுக்கித் தரக்கூடும்" என்பதே அச்செய்தி.

இரண்டாவது மகன் பகீரதன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 2பீ, 2சி தர சித்திகள் பெற்றிருந்தார். பல்கலைக் கழக அனுமதியை எதிர் பார்த்திருந்த அவர் தந்தையின் சம்பாசனையை அவதானித்துக் கொண்டிருந்தார். தொலை பேசிச் சம்பாசனை முடிந்ததும்,

"உன்னுடைய விருப்பம் என்ன?" என்று மகனைக் கேட்டார்.

"நான் சொன்னாலும் நீங்கள் கதைக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். எதற்காக என்னைக் கேட்கிறீர்கள்?" என்றார் மகன்.

# அதிகாரம் 37
# குதிரைச் சவுக்கால் அடிப்பேன்

1981 அமிர்தலிங்கம் அவர்கள் தனது எதிர்க் கட்சித் தலைவர் பதவியைப் பயன்படுத்தி வெளிநாடுகளில் பேரினவாத சிங்கள அரசு தமிழர்களை இம்சைப் படுத்துவதைப் பிரசாரித்தார். அதனால் சிங்களத் தலைவர்கள் அவர்மீது ஆத்திரம் கொண்டனர். அந்த ஆத்திரத்தில் யூலை 24ந் திகதி எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள்மீது இலங்கைப் பாராளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வந்தார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக உலகில் முதன் முதலில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதிராகவே. அந்தப் பிரேரணையில் 15 ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டிருந்தனர். அதனைப் பிரேரித்தவர் பாணந்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னான்டோ என்று சொல்லப்படுகிற ஒரு மனிதராகும். அச்சமயம் அமிர்தலிங்கம் அவர்கள் தனிப்பட்ட விளக்கம் சொல்ல எழுந்த பொழுது 'பொய்யன், இராசதுரோகி, புலிகளின் கையாள்' என்று சபையில் கூச்சல் எழுந்தது. சபாநாயகர் ஜனாப் எம்.ஏ.பாக்கீர் மரைக்கார் அமிர்தலிங்கம் அவர்கள் பேச அனுமதி கொடுக்க மறுத்தார். அதனை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதித் தலைவர் மதவாச்சி உறுப்பினர் மைத்திரிபால சேனநாயக்கா அந்தப் பிரேரணையால் எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை, அது சிந்திக்கத்தெரியாத மொக்கு ஜன்மங்களின் வேலையென்றும் அந்தப் பிரேரணையை நிராகரிக்கும் படியும் கேட்டார். சபாநாயகர் காலங்கடந்த விண்ணப்பம் என்று மறுத்துவிட்டார். அதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

அந்தப் பிரேர்ணையை ஒட்டி சபையில் இருந்தவர்கள் பேசும் பொழுது அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் மகாத்மா காந்தியின் அஹிம்சை பேசுவதாகவும், இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் இளைஞர்களை ஆயுதம் ஏந்திப் போராடத் தூண்டுவதாகவும், வெளிநாடுகளில் அரசாங்கத்தின் மீது சேற்றை வாரிப் பூசுவதாகவும் கண்டனம் தெரிவித்தனர். அச்சமயம் குண்டசாலைப் பாராளுமன்ற உறுப்பினர் டி.எம். சந்திரபால உதிர்த்த பொன்மொழிகள்:



"தமிழர்களின் தலைவரெனச் சொல்லப்படும் அமிர்தலிங்கத்துக்கு என்ன செய்ய வேண்டும்? சபாநாயகர் அவர்களே, எனக்கு நீங்கள் அதிகாரம் அளிப்பீர்களானால், இந்தக் கட்டடத்தில் மிக அருகே உள்ள கொன்கிறீற் தூணில் கட்டிக் குதிரைச் சவுக்கால் அடிப்பேன். அதன் பின்னர் மற்றவர்கள் என்ன விரும்பினாலும் செய்ய அனுமதிப்பேன். பேரை ஏரிக்குள் அல்லது கடலுள் வீசட்டும். அத்தோடு உடம்பு உருக்குலைந்து போயிருக்கும். அந்த உடலில் உயிர் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை." அடுத்துப் பேசிய இரத்தினபுரி உறுப்பினர் ஜி.வி. புஞ்சிநிலாமே விசத்தைக் கக்கினார்:

"சிங்கள அரசர் காலத்தில் ஒரு தண்டனை முறை இருந்தது. அதாவது, இரண்டு கமுக மரங்கள் நடப்படும். இரண்டையும் இழுத்து வளைத்துக் கயிற்றால் கட்டப்படும். பின்னர் குற்றவாளியின் கால் பாதங்களை ஒரு கமுகில் ஒன்றையும் மற்றதில் அடுத்ததையும் பிணைத்துக் கட்டுவார்கள். பின்னர் கமுகை வளைத்துக் கட்டிய கயிற்றை அறுத்து விடுவார்கள். உடம்பு இரண்டாகக் கிழியும். அமிர்தலிங்கத்தையும் காலி முகத் திடலில் அப்படிக் கமுகோடு கட்டித் தண்டிக்கவேண்டும். இந்த நாட்டு மக்கள் அப்படியான தண்டனையை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறார்கள்."

எதிர்க் கட்சித் தலைவர் மீது கொண்டு வந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையின் சூத்திரதாரி யார்? அதற்கும் ஒரு சரித்திரம் உண்டு. இந்தியாவில் இருந்து கதிர்காமக் கந்தனை வணங்க யாத்திரை சென்ற திரு. தளபதி என்ற கனவானை சிங்களவர்கள் கோடரியால் வெட்டிக் கொலை செய்தார்கள். இந்தியா பகைக்கும் என்ற அச்சத்தில் கொலை செய்தவனுக்குச் சித்தசுவாதீனம் என்று அரசு சொன்னது. பின்னர் தமது கட்சியைச் சேர்ந்தவர்தான் கொலை செய்வித்தார் என்று ஜனாதிபதி ஜயவர்த்தன ஒப்புக்கொண்டார். அந்தக் கொலையின் பின்னணியில் டாக்டர் நெவில் ∴பெர்னான்டோ உள்ளதாகக் கூறி

அவரைக் கட்சியில் இருந்து வெளியேற்றிப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிக்கப் பாராளுமன்றக் குழுவொன்றை ஜனாதிபதி நியமித்தார். அந்த விசாரணைக் குழு முன்னர் நெவில் ∴பேர்னான்டோ தோன்றி வாக்கு மூலம் அளித்தபோது அவர் சொன்னார் - 'அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை அமைச்சர்களே தயாரித்துப் பிரேரிக்கும்படி தன்னிடம் தந்தார்கள் என்றும், தான் அதனை எடுத்துக்கொண்டு ஜனாதிபதி ஜயவர்த்தனவிடம் போய் அதனைப் பிரேரிக்கலாமா என்று கேட்டதாகவும்', அதனைக் கேட்டதும் "நீர்தான் அதனைச் செய்ய வேண்டும். நீர் விரும்பியதைப் பேசலாம். நீர் கொண்டுவருகிற இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் இலங்கையில் இரத்த ஆறு ஓடும். அப்போது அமிர்தலிங்கம் வந்து முழந்தாளில் நின்று எங்கள் உரிமையைப் பற்றி இனிப் பேசமாட்டேன். எங்கள் இனத்தைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சுவார்" என்று ஜனாதிபதி ஜயவர்த்தன தனக்குச் சொன்னதாக டாக்டர் நெவில் ∴பேர்னான்டோ பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னர் கூறினார். அந்தப் பாணந்துறை நாடாளுமன்ற உறுப்பினர் நெவில் ∴பேர்னான்டோ கட்சியால் வெளியேற்றப்பட்ட பின்னர் நோய்வாய்ப்பட்டு வைத்திசாலையில் அனுமதிக்கப்பட் டிருந்தார். அவ்வேளை அமிர்தலிங்கம் அவர்கள் அவரைப் போய்ப்பார்த்து ஆறுதல் வார்த்தைகள் சொன்னார். அது அவர் எவ்வளவு பெருந்தன்மையான பெருமகன் என்பதைக் காட்டுகிறது.

சிங்கள அரசியல் வாதிகள் மட்டுமல்ல சிங்கள ஊட்கங்கள், மெத்தப் படித்த சிங்களப் பேராசிரியர்கள், பௌத்த மதத்தலைவர்கள் தொடக்கம் கொழும்புப் புறக்கோட்டையில் 'பிக்பொக்கற்' அடிக்கிற சிங்களவன் வரை அமிர்தலிங்கம் அவர்களை விரோதக் கண்களாலேயே பார்த்தனர். தமிழ் அரசியல் தலைவர்கள் வரிசையிலே சேர் பொன் இராமநாதன் அவர்கள் தொடக்கம் தந்தை செல்வநாயகம் அவர்கள்வரை பல அரசியல் வாதிகள் தமிழர் உரிமைக்காகப் போராடித்தான் இருக்கிறார்கள். எனினும் அமிர்தலிங்கம் அவர்களைப் பகைத்ததுபோல வேறு எந்தத் தமிழ்த் தலைவரையும் சிங்களவர்கள் பகைத்ததில்லை. அவர்களுக்கு அமிர்தலிங்கம் அவர்கள் சோழ இராசவம்சக் கொடியிலே அவதரித்த இளவரசனாகவே காட்சி கொடுத்தார். மகாவம்சம் சொல்லும் சோழப்படையெடுப்புக்கள் அவர்கள்



மனதில் ஆழமான கிலேசத்தைக் கல்லில் செதுக்கியது போலப் பதிந்து வைத்திருக்கின்றன. காலிமுகத் திடலில் 1956இல் சத்தியாக்கிரகம் நடந்த வேளை தற்செயலாக அவ்வழியே வந்த ஒரு சிங்களப் பட்டதாரி ஆசிரியர் தமது பங்கிற்கு ஒரு கல்லெடுத்து அமிர்தலிங்கம் அவர்கள்மீது கல்லெறிந்தான். அவ்வளவுக்கு அமிர்தலிங்கத்தைச் சிங்களவர்கள் வெறுக்கக் காரணம் என்ன?

### பாண்டி பசாரில் ஈழத்தமிழனின் தலைவிதி

1982 அமிர்தலிங்கம் அவர்கள் பாதுகாத்த பிரபாவும் உமாவும் சென்னை வீதியில் முட்டிக்கொண்டார்கள். பாண்டி பசாரில் மே மாதம் 19ந் திகதி ஓர் உணவகத்துள் இருந்து வெளியேறிய உமா மகேஸ்வரன் மீது வேலுப்பிள்ளை பிரபாகரன் றிவோல்வரினால் சுட்டார். இயக்க விதிகளுக்கு மாறாக - தங்கள் இயக்கத்தைச் சேர்ந்த தனது சொந்த ஊரான வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட - ஊர்மிளாவை உமா மகேஸ்வரன் காதல் செய்ததால், பிரபாகரன் உமா மகேஸ்வரனைப் பகைத்து, அவரைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேற்றினார். அதனைத் தொட்டுவந்த தீராத பகையே பிரபாகரன், உமா மகேஸ்வரனைக் குறிவைக்கக் காரணம். அப்பொழுது உமா மகேஸ்வரனுடன் சென்ற ஜெகதீஸ்வரனது தலையில் சூடு பட்டது. அதனையடுத்து இருவரும் சனநெருக்கம் மிகுந்த வீதியில் சுடுபட்டனர். வீதி அல்லோலகல்லோலப் பட்டது. அங்கு விரைந்த காவல்துறையினர் அவர்களைக் கைது செய்தனர். பிரபாகரன் தனது பெயரைக் கரிகாலன் எனக் கொடுத்தார். உமா மகேஸ்வரன் தனது பெயரை முகுந்தன் என்று கொடுத்தார். அவர்கள் இருவரையும் அடையாளம் கண்ட இலங்கை அரசு, அவர்களை இலங்கைக்குக் கொண்டு செல்ல இந்திய அரசோடு பேரம் பேசியது. அதற்காக இலங்கைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சென்னையில் ஆயத்தமாக நின்றார். அவர்களை ஏற்றிச் செல்ல விசேடமாக அனுப்பப்பட்ட விமானம் சென்னையில் தயார் நிலையில் நின்றது. புது டில்லியில் இருந்த இந்தியாவுக்கான இலங்கைத்தூதுவர் திலகரத்தின, இலங்கை அமைச்சரவையைச் சேர்ந்த சில அமைச்சர்கள் பிரபாகரனையும் உமா மகேஸ்வரனையும் சர்வதேச சட்ட ஒழுங்குப்படி தமது நாட்டுக்குக் கொண்டு செல்ல ஆலாய்ப்

பறந்து கொண்டிருந்தனர். பிரபாகரனையும், உமா மகேஸ்வரனையும் இந்திய அரசு இலங்கை அரசிடம் ஒப்படைக்கப் போவதை அறிந்த அமிர்தலிங்கம் அவர்கள், இந்தியத் தலைவர்களைச் சந்தித்து அவர்களை இலங்கை அரசிடம் ஒப்படைக்காமல் செய்ததோடு அவர்களுக்கு விடுதலையும் வாங்கிக் கொடுத்தார். இச்சமயத்தில் இந்தியாவில் இருந்த சின்னச் சின்னச் செல்வாக்குள்ள தமிழர்கள்கூட இருவரதும் விடுதலைக்காக தம்மாலானமட்டில் இரவிரவாக ஓடுப்பட்டுத் திரிந்தனர். உதாரணமாக தமிழரசுக் கட்சிக்காலத்தில் இருந்து அதன் பிரசாரப்பீரங்கியாக இருந்த கரிகாலன் என்னும் சட்டத்தரணி எஸ்.நவரத்தினமும், ரவி எனப்படும் டாக்டர் அமிர்தலிங்கம் பகீரதனும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ குமரி அனந்தனைச் சந்தித்து அவர் மூலம் அவர்கள் இருவரையும் இலங்கை அரசிடம் ஒப்படைக்காதிருக்க முயற்சித்ததைக் கூறலாம். அமிர்தலிங்கம் அவர்கள் பெருமுயற்சி செய்து உதவியிருக்காவிட்டால் பிரபாகரனும் உமா மகேஸ்வரனும் விடுதலையாவதற்கு அற்ப வாய்ப்பும் இருக்கவில்லை. அவர்கள் இருவரும் இலங்கை அரசிடம் கையளிக்கப் பட்டிருந்தால், அதனையடுத்து எழுதப்படுகிற தமிழ் ஈழத்தின் வரலாறும் வேறுவிதமாக அமைந்திருக்கும். ஒற்றை மனிதனின் உணர்வுகள் சில சமயங்களில் வரலாற்றை எழுதுகின்றன. அதற்கு இருபதாம் நூற்றாண்டின் இறுதி இருதசாப்தங்களின் தமிழ் ஈழ வரலாறு இன்னுமொரு சிறந்த உதாரணமாக அமைகிறது.

## அதிகாரம் 38
## "எனக்குச் சொர்க்கம் கிடைக்கும்"

1982 ஆரம்பத்தில் நடந்த யாழ் பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதப் போராட்டம், அமிர்தலிங்கம் அவர்கள் தமிழர்களது விடுதலையில் கொண்ட பக்திபூர்வமான ஈடுபாட்டை விளம்பரம் செய்கிறது. மாதகல்லைச் சேர்ந்த விமலராசன் என்ற பல்கலைக்கழக மாணவன் தங்கியிருந்த அறைக்கு, போராளி பத்மநாதனைத் தேடிச் சென்ற பொலிசார், அங்கு பத்மநாதனைக் காணவில்லை. குறித்த



அறையில் வசித்த மாணவன் மாதகல் விமலராசனைச் சிறைப்படுத்திக் கொண்டு சென்றனர். அவர் விடுதலை இயக்கங்களைச் சேர்ந்தவரல்லர். அவற்றின் ஆதரவாளருமல்லர். ஒரு வருடத்துக்கு மேலாகியும் விமலராசன் விடுதலை செய்யப்படவில்லை. அவரை விடுதலை செய்யக் கோரி யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்களின் பின்னணியில் நின்று அந்த உண்ணாவிரத நிகழ்ச்சியைத் தூண்டியவர்கள் கோவை மகேசனும் ஈழவேந்தனுமாகும். அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியைவிட்டு வெளியேறிய பின்னர், தம்மை அரசியல் வானில் அடையாளப்படுத்த மேற்கொண்ட ஒரு முயற்சியாகும். மாணவர்கள் 15 பேர் கொண்ட குழுக்களாக மாறி மாறி உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர். பத்திரிகைகள் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டன.

யாழ் பல்கலைக்கழக உண்ணாவிரதிகள் சார்பாக அமிர்தலிங்கம் அவர்கள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவைச் சந்தித்தார். மாதகல் விமலராசனது விடுதலைக்காகவும், அக்கால கட்டத்தில் சிறையில் இருந்த வேறும் 70 தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காகவும் ஜனாதிபதியுடன் பேச்சு நடாத்தினார். "உண்ணாவிரதிகளின் கேள்விக்குப் பணிந்து விடுதலை செய்தால் எதிர் வரும் காலங்களிலும் அவ்வாறே உண்ணாவிரதத்தை ஆயுதமாகப் பயன்படுத்துவார்கள். மாணவர்கள் முதலில் உண்ணாவிரதத்தைக் கைவிட்டால், நான் அடுத்த தினமே சிறையில் இருக்கும் தமிழ் இளைஞர்கள் அனைவரையும் விடுதலை செய்கிறேன்" என்று ஜே.ஆர். ஒரு முன்நிபந்தனை விதித்தார்.

கொழும்பில் இருந்த அமிர்தலிங்கம் அவர்கள் உடனே அதுவிடயத்தைத் தொலை பேசியில் யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களுக்குத் தெரிவித்து, உண்ணா விரதத்தைக் கைவிட மாணவர்களுக்கு ஆலோசனை கூறும்படி சொன்னார். அதற்குப் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள், சூழ்நிலை சரியில்லாத காரணத்தால், தான் அதுவிடயத்தில் தலையிட விரும்பவில்லை என்று அறிவித்தார்.

அதனையடுத்து அமிர்தலிங்கம் அவர்கள் தனது தெல்லிப்பழை அலுவலகத்தில் தொழில் பார்க்கும் பிரத்தியேக செயலாளர் சிவமகாராசாவுக்கு, அதுவிடயமாக மாணவர்களுடன் தொடர்பு கொண்டு ஜே.ஆரின் முன்நிபந்தனையைத் தெரிவிக்கும் படியும், உண்ணாவிரதத்தைக் கைவிடத் தூண்டும் படியும் கூறினார். செயலாளர் சிவமகாராசா யாழ். பல்கலைக்கழக மாணவன் சு.ஸ்ரீகாந்தலிங்கத்தைச் சந்தித்து செய்தியைத் தெரிவித்தார். ஸ்ரீகாந்தலிங்கம் உண்ணா விரதத்தை ஒழுங்கு செய்த மாணவ தலைவர்களைச் சந்தித்து ஜே.ஆரின் விருப்பத்தைத் தெரிவித்தார். அவர்கள் தமக்குச் சம்மதம் என்றும், எனினும் உண்ணாவிரதத்தை முன்னெடுக்கக் காரணமாக இருந்தவர்களோடு கலந்து ஆலோசனை செய்தபின்னர் அன்று பின்னேரம் பதில் சொல்வதாகவும் சொன்னார்கள். அதனை அறிந்த கோவை மகேசனும், ஈழவேந்தனும் "யாவரும் விடுதலை செய்யப்பட்டால், அமிர்தலிங்கம் அவர்களே பேர்புகழ் பெறுவார். அதற்கு சம்மதிக்க வேண்டாம். விமலர்ாசனை விடுதலை செய்தபின்னர் உண்ணாவிரதத்தைக் கைவிடுவதாகச் சொல்லவும்" என்று போதித்தார்கள்.

இரண்டு தினங்கள் கழித்து அமிர்தலிங்கம் அவர்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்தார். அவர் செயலாளர் சிவமகாராசாவுடன் ஸ்ரீகாந்தலிங்கம் வீடு சென்றார். அவர் அங்கில்லை. அவர் பல்கலைக்கழகம் சென்றுவிட்டார். அமிர்தலிங்கம் அவர்கள் மாணவர்களோடு பேசவரப் போகின்ற செய்தி பல்கலைக்கழகத்தில் சூடாகப் பரவியது. அவர் அங்கு சென்றால் அவரைத் தாக்கக்கூடிய குரோத உணர்வு மாணவர்கள் ஒரு சாரார் மத்தியில் எரிந்து கொண்டிருப்பதை ஸ்ரீகாந்தலிங்கம் அவதானித்தார். உடனே அவர் தனது மோட்டார் சைக்கிலில் ஆலாலசுந்தரம் பா.உ. அவர்களது வீட்டுக்குச் சென்றார். அவருக்குப் பல்கலைக்கழகத்தில் ஆத்திரம் அலையடிப்பதையும், அதனை அமிர்தலிங்கம் அவர்களுக்கு அறிவிக்கும்படியும் கூறிவிட்டு அவர் பல்கலைக்கழகம் திரும்பிக்கொண்டிருந்தார். பாதையில் திருநெல்வேலி 'சென்றல் நேசிங் ஹோமிற்கு' முன்னே அமிர்தலிங்கம் அவர்களது ஜீப்பைக் கண்டு, அதனை மறித்து, "அண்ணை, பல்கலைக்கழகத்தில் உங்கள்மீது மாணவர்கள் ஆத்திரமாக இருக்கிறார்கள். எக்கச்சக்கமாக ஏதும் நடந்துவிடுமோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. அங்கு செல்லாதீர்கள்" என்று வேண்டினார்.



"காந்தன், என்னைத் தாக்குவார்கள் என்று பயப்படுகிறீரா?" என்று அமிர்தலிங்கம் அவர்கள் வினாவினார்.

"அண்ணே உயிருக்கே ஆபத்துவரலாம். பின்னணியில் யாரோ நின்று மாணவர்களை ஏவிக்கொண்டு நிற்கிறார்கள். தயவு செய்து அங்கு போகவேண்டாம் அண்ணை."

"காந்தன். போவது என்னுடைய கடமை. நான் அவர்களுக்கு நியாயம் சொல்ல - புத்திமதி சொல்ல வேண்டியவன். மாணவர்கள் என்னைத் தாக்கி - அவர்கள் கைகளால் இறக்க நேரிடுமானால் - அந்த மரணத்தால் எனக்குச் சொர்க்கம் கிடைக்கும் என்றே கருதுவேன். நீ பல்கலைக்கழகம் வராதே. என்னோடு சேர அவர்கள் உன்னையும் தாக்கக்கூடும். நீ திரும்பிப் போ" என்று உறுதிபடக் கூறினார்.

அவர் திரும்பிப் போகவில்லை. உணர்ச்சிவசப்பட்ட ஸ்ரீகாந்தலிங்கம் கூறினார்:

"அண்ணை, உங்களுக்கு ஏதும் நேர நான் அனுமதிக்கமாட்டேன். எனது உயிர் போனபின்னரே அவர்கள் உங்களுக்கு ஏதும் செய்ய முடியும்" என்று கூறிய ஸ்ரீகாந்தலிங்கம் தனது மோட்டார் சைக்கிலை எடுத்துக்கொண்டு ஜீப்பின் முன்னே வேகமாகச் சென்றார். அவரின் பின்னே அமிர்தலிங்கம் அவர்களது ஜீப் சென்றது. அதனுள் கா.பொ.இரத்தினம் பா.உ. அவர்களும், அமிர்தலிங்கம் அவர்களது பாதுகாப்பு உத்தியோகத்தரும் இருந்தனர். அவர்களின் ஜீப்பின் பின்னே யோகேஸ்வரன் பா.உ. அவர்களது வாகனம் சென்றது. ஸ்ரீகாந்தலிங்கம் சற்றுத் தூரச் செல்லும்பொழுதே பல்கலைக்கழக வாசலை அடைத்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதை அவதானித்தார். அவர் படுவேகமாகத் தனது மோட்டார் சைக்கிலைச் செலுத்தியபடி பல்கலைக்கழக வாசலை நோக்கிச் சென்றார். வாசலின் குறுக்கே நின்றவர்கள் விழுந்தடித்து வழிவிட்டனர். மோட்டார் சைக்கிலைத் தொடர்ந்து இரண்டு வாகனங்களும் பல்கலைக்கழகத்துள் பிரவேசித்தன. அமிர்தலிங்கம் அவர்கள் சுணங்காது உண்ணாவிரதிகள் அருகே இருந்த மேடைக்குச் சென்றுவிட்டார். ஆத்திரம் கொண்ட மாணவர்கள் ஸ்ரீகாந்தலிங்கத்தை தாறுமாறாக அடித்தனர். அவரை அடித்த ஒருவர் இப்பொழுது லண்டனில் ஒரு வானொலி நிலையத்தில்

கடமையாற்றுகிறார். அவரது ஆதரவாளர்களால் ஓரளவுக்கு அவரைப் பாதுகாக்க முடிந்தது. அதே சமயம் அமிர்தலிங்கம் அவர்களது பாதுகாவலர் படுமோசமாகச் சித்திரவதை செய்யப்பட்டார், அவரது ஆணுறுப்பை 'ஏதோ செய்து' சித்திரவதைப்படுத்தினார்கள். எல்லா ஆத்திரத்தையும் அவர்மீதே காட்டினர். மயக்கத்தில் கிடந்த அவரைக் காவிச் சென்று பல்கலைக்கழக வாசலில் உள்ள வீதியில் வீசினர். இப்பொழுது சட்டத்தரணியான திரு. சுப்பிரமணியம் ஸ்ரீகாந்தலிங்கம் புலம்பெயர்ந்து பெரிய பிரித்தானியாவில் மிடில்செக்ஸ் நகரில் வாழ்கிறார்.

இந்தச் சம்பவம் அமிர்தலிங்கம் அவர்கள் ஏனைய சுயநல அரசியல்வாதிகள் போன்றவர் அல்லர் என்பதையும், அவர் தனது சீரிய கொள்கைக்காகத் தனது உயிரையும் தியாகம் செய்யக்கூடிய தனித்துவம் உடைய உன்னத அரசியல்வாதி என்பதையும் வரலாறு பதிவு செய்துள்ளது.

# அதிகாரம் 39
# அமெரிக்காவில் அமிர்தலிங்கனார்

1982 யூலை 5ந் திகதி அமெரிக்காவில் நியூயோக் மாநிலத்தில் உள்ள நன்யூ (Nanue) நகரில் உலக தமிழ் ஈழ மாநாடு (World Tamil Eelam Conference) நடைபெற்றது. இந்த மாநாட்டை அமெரிக்காவில் புலம் பெயர்ந்து வாழ்ந்த சில ஈழத் தமிழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இந்த மாநாட்டிலே இலங்கை, இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா, கனடா நாடுகளைச் சேர்ந்த தமிழ்ப் போராளிக் குழுக்கள், புலம்பெயர்ந்த தமிழ் புத்திஜீவிகள், தமிழ் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் முதலியோர் 200 பேர் வரையில் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டுக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் என்ற அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார். இதனை அறிந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன ஐக்கிய அமெரிக்க நாட்டு உயர் ஆட்சிப் பீடத்தோடு தொடுர்பு கொண்டு அந்த மாநாட்டைத் தடைசெய்விக்க



முயன்றார். ஆனால் 'அமெரிக்க நாட்டின் அரசியல் திட்டம் பேச்சுச் சுதந்திரம் வழங்கி உள்ளது. அதனால் அதனைத் தடை செய்ய முடியாது' என்ற கருத்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அந்த மாநாட்டைக் கூட்டியவர்கள் 'தமிழ் ஈழ இடைக்கால அரசை நிறுவவும்' என்ற தீர்மானத்தை அந்த மாநாட்டில் நிறைவேற்ற அடம்பிடித்து நின்றனர். அதாவது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது தீர்மானத்தை ஏற்று நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்ற கருத்துடையவர்களாக இருந்தனர். அதன் மூலம் தமிழ் ஈழத்தை அடைய வழிபிறக்கும் என்பது அவர்களது நம்பிக்கை. அதனை அமிர்தலிங்கம் அவர்கள் அங்கீகரிக்க மறுத்தார். எனவே அவரின் அரசியல் சாணக்கியத்தை மதிக்காமல் அவரை வெறுப்போடு நோக்கிச் சொல்லம்புகளை ஏவினர். அந்த மாநாட்டின் சில சூத்திரதாரிகள் அவரை இம்சைப்படுத்தும் நோக்கத்துடனேயே அழைப்பு அனுப்பி இருந்தனர். எனினும் அவர்களின் சுடுகணைகளைத் தூக்கி வீசிவிட்டு அமிர்தலிங்கம் அவர்கள் தனது நிலைப்பாடு சரியானது என்பதைச் சபைக்குத் தெளிவாக விளக்கினார்:

"வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழ்ச் சகோதரர்கள் மெத்தை போட்ட கதிரைகளில் 'குசாலாக' இருந்து கொண்டு தாம் நினைப்பதுதான் சரியான அரசியல் தீர்வு என்று வாதிடலாம். நாங்கள் அப்படி எழுந்தமானத்துக்கு வாயில் வருவதை எல்லாம் பேச முடியாது 'நினைத்ததை எல்லாம் போனால் போகிறது என்று செய்ய முடியாது. எங்களுக்குப் பாரிய பொறுப்பு இருக்கிறது. நாங்கள் செய்வதில் சிக்கல் ஏற்பட்டால் நாம் பொறுப்பல்ல என்று தப்ப முடியாது. ஏன் என்றால் நாங்கள் மக்கள் மத்தியில் ஜீவிப்பவர்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். நீங்கள் அப்படியில்லை. நீங்கள் அமெரிக்காவில் இருந்துகொண்டு எம்மீது கற்களை வீச முன்னர் எங்கள் முன் உள்ள பிரச்சினைகளை நோக்குங்கள்."

"எந்தச் சந்தர்ப்பத்திலாவது நான் மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டேன் என்று தோன்றுமானால், உடனடியாகவே நான் எனது தலைமையை மக்கள் நம்பிக்கைக்குப் பொறுப்பானவரிடம் கையளிக்கத் தயங்மாட்டேன்."

"நீங்கள் முன் எடுத்துள்ள 'தமிழ் ஈழ இடைக்கால அரசை நிறுவவும்' வேண்டுகோள் முயற்சியில் வெற்றிபெற 100 வீத நம்பிக்கை தேவையில்லை, 50 வீத நம்பிக்கை இருக்குமானால்கூட நான் அந்த முயற்சியில் இறங்கத் தயாராக இருக்கிறேன். அதனால் ஏற்படக்கூடிய சவால்களை ஏற்கத் தயாராக இருக்கிறேன். உங்களது முன்வைப்பு நிறைவேற எதுவித வாய்ப்பும் இல்லாத பொழுது அதில் ஈடுபடுவது விழலுக்கு இறைத்த நீரே."

அவர்களின் பிரகடனக் கோரிக்கை சிறு பிள்ளைகள் கம்பு தடி எடுத்து வீடுகட்டி மண்ணில் சோறு கறி ஆக்கி விளையாடுவது போல உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். அவர் தொடர்ந்து பேசும் பொழுது சொன்னார். "இலங்கையில் வசிக்கும் தமிழர்களின் உயிர்களுக்கும் அவர்களது உடைமைகளுக்கும் நலன்களுக்கும் நான் பொறுப்புடையவன். மக்களைப் பலிகொடுத்துப் பெறும் விடுதலையால் - மக்கள் இல்லாத மண்ணால் யாருக்கு என்ன பிரயோசனம்? பங்களாதேசம் பற்றிக் கதைக்கிறீர்கள். அங்கு 3 லட்சம் மக்களைப் பலி கொடுத்து விடுதலை வாங்கி உள்ளார்கள். அப்படி ஈழத் தமிழ் மக்கள் உயிர்களை அள்ளிக்கொடுத்துக் கிடைக்கும் விடுதலையை நான் விரும்பவில்லை. மக்களின் உயிர் என்ன வெட்ட வெட்டத் தளைக்கும் வேலிக் கதியாலா?"

தனது உரையின்போது மாவட்டசபை பற்றிய கருத்துத் தெரிவிக்க நேர்ந்தபொழுது சொன்னார்: "தமிழ் மக்கள் நீதிநியாயம் புரிந்தவர்கள். சிந்திக்கத் தெரிந்தவர்கள். நாங்கள் உன்னதம் வாய்ந்த எம் தமிழ் மக்களை மடையர்கள் என்று மற்றவர்களுக்கு விளம்பரப் படுத்தாமல் இருக்க வேண்டும். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்பவர்கள் புதுமைகள் நிகழ்த்துவதாக நினைத்துக்கொண்டு மக்கள் உயிர்களைப் பலிபீடத்தில் பணயம் வைக்க முற்படக்கூடாது. நான் உங்களிடம் இரண்டு வேண்டுகோள்கள் விடுக்கிறேன். முதலாவது - வெளிநாடுகளில் வாழும் நீங்கள் எங்களின் எல்லைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க - ஈழத் தமிழ் மக்களை ஒன்றுபடுத்த - பொருளாதாரத்தை கட்டி எழுப்ப - இலங்கையின் ஏனைய பாகங்களில் வசிக்கும் தமிழர்களை வடகிழக்கில் குடியேற்ற உதவுங்கள். இரண்டாவதாக ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு சர்வதேச ஆதரவைத் தேடித்தாருங்கள்."



ஒரு வல்லரசின் பக்கபலம் இல்லாமல் 'தமிழ் ஈழ இடைக்கால அரசை நிறுவும்' பிரகடன முயற்சியை மேற் கொள்வதால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை மாநாட்டைக் கூட்டியவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அப்படியான, அதிலும் வலுவான ஒரு 'பிரகடன' முன்வைப்பை ஒரு வல்லரசு அவர் மறைவுக்கு இரு வாரங்களுக்கு முன்னதாக அவரிடம் முன்வைத்து. இன்னொரு வல்லரசு வேறு ஒரு முன்வைப்பை அவரின் முடிவுக்கு வைத்து அவருக்கு உதவ முன்வந்தது. அப்பொழுது அமிர்தலிங்கம் அவர்களது பிரதிபலிப்பு என்னவாக இருந்தது? (பின்னர் இந்த நிகழ்வுகள் சொல்லப்படும்.)

அமிர்தலிங்கம் அவர்களது கருத்தை-புத்திமதியை உலக தமிழ் ஈழ மாநாடு (World Tamil Eelam Conference) தூக்கி வீசிவிட்டு 'தமிழ் ஈழம்' என்ற தனி அரசை ஆதரிப்பவர்களை உலகளாவிய மட்டத்தில் ஒன்று திரட்டி, புதிய சுதந்திர தேசம் ஒன்றை வடகிழக்கு இலங்கையில் உருவாக்குவதற்காக 'தமிழ் ஈழம் விடுதலைச் சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கியது. இவர்களது 'புசுபுசுத்துப்' போன முயற்சி - வெளிநாடுகளில் இருந்து கொண்டு, புலம் பெயர முடியாமல் தாயகத்தில் வாழும் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்தும் அரசியல் பாடம் நடாத்துபவர்களுக்கு - இன்னும் புத்தி புகட்டவில்லை. ஏனெனில் அவர்களுக்குத் தேவை ஆர்ப்பாட்டமான விளம்பரங்கள். அதுவும் சிலருக்கு ஒருவகை உழைப்பு.

### வன்முறைப் பொறிக்குள் சிக்கவைக்க முயன்றனர்

ஆயுத இயக்கங்கள் தமது பொறிக்குள் அமிர்தலிங்கம் அவர்களைச் சிக்க வைக்கப் பல தடவைகள் முயன்றனர். ஆனால் அவர்களால் மலையை அசைக்க முடியவில்லை. ஒரு உதாரணம்: 'புளட்' இயக்கத்தில் இணைந்து இந்தியாவில் வாழ்ந்தகாலை, உட்பூசல் காரணமாக உயிர் பறிக்கப்பட்டவர், சந்ததியார். ஒரு சமயம் அவர் யாழ்ப்பாணத்தில், கண்டி வீதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சித் தலைமை அலுவலக வாசலில் புறுபுறுத்துக்கொண்டு நின்றார். அவர் நீண்டகாலம் வாலிப முன்னணியிலும், பின்னர் இளைஞர் பேரவையிலும் இருந்தவர். சிறை சென்றவர். அவர் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியில் இருந்து வெளியேறி ஆயுதக் குழுக்களுடன் இணைந்திருந்த காலகட்டம் அது. அச்சமயம் கூட்டணி அலுவலகம்

சென்ற - சந்ததியாருடன்கூடச் சிறையிருந்த - இராசகுலசூரியர் "சந்ததியார், என்ன சத்தம் போடுகிறீர்? என்ன பிரச்சினை?" என்றார். சந்ததியார் ஒன்றும் பேசவில்லை. அமிர்தலிங்கம் அவர்களைக் குறைகூறிக்கொண்டு நின்றார். இராசகுலசூரியர் உள்ளே சென்று "அண்ணே, என்ன சந்ததியார் வாசலில் நின்று முணுமுணுக்கிறான்?" என்று அமிர்தலிங்கம் அவர்களிடம் கேட்டார். அதற்கு அவர் "பெடியள் - அவை தாங்கள் முடிவெடுத்துப் போட்டு - என்னிடம் ஆலோசனை கேட்க வருகிறார்கள்" என்று பதில் கூறினார். அவருடைய கூற்று 'பெடியளுக்கும்' அவருக்கும் இடையில் வெடிப்பு விழுந்த இடத்தைத் தொட்டுச் சொல்கிறது.

குட்டிமணியால் நிகழ்ந்த திருப்பம்

1982 வட்டுக்கோட்டைப் பாரளுமன்ற உறுப்பினர் திரு.சி. திருநாவுக்கரசு அவர்கள் காலமாகியதை அடுத்து அவரது இடத்துக்குச் சிறையில் இருந்த குட்டிமணி என்று அழைக்கப்படும் யோகச்சந்திரன் செல்வராசாவை தமிழர் விடுதலைக் கூட்டணி நியமித்தது. வல்லுவெட்டித்துறையைச் சேர்ந்த 'ரெலோ' இயக்க ஸ்தாபக உறுப்பினர்கள் இருவரில் ஒருவரான குட்டிமணி அப்பொழுது சிறையில் இருந்தார். ஒரு கைதியைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்தமைக்கு உரிய காரணத்தை அமிர்தலிங்கம் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்: "பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து, அவ்வேளை அளிக்கும் ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் தமிழ் இளைஞர்கள் நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவதை எதிர்க்கவே சிறையில் அடைத்து வைத்திருக்கும் குட்டிமணியைத் தெரிவு செய்துள்ளோம்" என்று கூறினார். தேர்தல் ஆணையாளர் குட்டிமணியின் நியமனப்பத்திரத்தை ஏற்று அது பற்றிப் பாராளுமன்றத்துக்கு அறிவித்தார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்க (ரெலோ) ஆரம்பத் தலைவர்கள் தங்கத்துரை குட்டிமணி ஆகியோர் 1981 மார்ச் 25ந் திகதி வங்கிப் பணத்தோடு சென்ற வாகனத்தை நீர்வேலி வடக்கில் பலாத்காரமாகத் தடுத்து நிறுத்தி, பாதுகாப்புக்குச் சென்ற இரண்டு பொலிசாரைக் கொன்று 79 இலட்சம் வங்கிப் பணத்தைக் கொள்ளை அடித்தனர். அத்திட்டத்தைத் தீட்டியவர் குட்டிமணியே. அதனையடுத்து 1981



ஏப்பிரல் 5ந் திகதி இந்தியாவிற்கு தப்பிச் செல்ல முயன்றவேளை பருத்தித்துறையில் மணற்காட்டில் வைத்து குட்டிமணியும் அவரோடு சேரத் தங்கத்துரையும், தேவனும் கைது செய்யப்பட்டு கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர். தங்கத்துரை, ஜெகன் ஆகியோருடன்சேர குட்டிமணி 1979 ஆம் ஆண்டு வல்லுவெட்டித்துறையில் சிவனேசன் என்ற பொலிஸ்காரரைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 1982ஆம் ஆண்டு ஒகஸ்ற் 13ந் திகதி நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டார். அதனை எதிர்த்துக் குட்டிமணி மேன்முறையீடு செய்தார். வெலிக்கடைச் சிறையில் இருந்த வேளை - 1983 யூலை இனக்கலவரத்தின் போது குட்டிமணி மேலும் 53 பேருடன் சேர சிங்களக் கைதிகளால் கொல்லப்பட்டார். கொலைஞர்கள் குட்டிமணியின் கண்களைத் தோண்டி எடுத்து சிறைச்சாலையில் உள்ள புத்தபிரான் சிலையின் புனித பாதங்களில் வைத்துப் பலி செலுத்தினார்கள். கண்களைத் தோண்டி எடுக்கக் காரணம் நீதி மன்ற விசாரணையின் பொழுது குட்டிமணி, தான் இறந்தால் தனது கண்கள் மலரும் ஈழத்தைக் காணவேண்டும் என்றும், அதற்காகத் தனது கண்களைத் தானம் செய்வதாகவும் சொல்லி இருந்தமையே யாகும். கொலையை அடுத்து கொலைஞர்கள் குட்டிமணியின் இரத்தத்தைக் குடித்தனர். அவ்வளவிற்கு குட்டிமணியைச் சிங்கள சமூகம் வெறுக்கக் காரணம் அவர் ஒரு தீவிர சுதந்திரப் போராளியாக இருந்ததோடு அவரின் விடுதலைப் போராட்ட முக்கியத்துவம் காரணமாகவே அமிர்தலிங்கம் அவர்கள் குட்டிமணியைப் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தார் என்ற கருத்தும் நிலவிமையுமேயாகும்.

பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட திரு.குட்டிமணி தன்னைச் சத்தியப்பிரமாணம் செய்யப் பாராளுமன்றத்துக்கு அழைத்துச் செல்லும்படி தேர்தல் ஆணையாளருக்கு அறிவுறுத்தல் செய்யும்படி உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தார். ஆனால் அவரது வேண்டுகோள் நீமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தெரிவாகி மூன்று மாதங்களுக்குள் சத்தியப் பிரமாணம் எடுக்காவிட்டால் அவரது தெரிவு செல்லுபடியற்றதாகிவிடும். அதன்காரணமாக திரு. குட்டிமணி மூன்று மாதம் முடிவதற்கு ஒரு தினம் இருக்க - 1983 ஜனவரி 24ந் திகதி - தனது இராஜினாமாக் டிதத்தைச் சமர்ப்பித்தார். திரு. குட்டிமணியைப் பாராளுமன்ற

உறுப்பினராக்கியமை விடுதலைப் புலிகள் வட்டாரத்தில் புகைச்சலை ஏற்படுத்தியது என்றும் அந்த நிகழ்ச்சிக்குப் பின்னரே அவர்கள் அமிர்தலிங்கம் அவர்களைக் கடுமையாகப் பகைக்க ஆரம்பித்த தாகவும் மதுரை மருத்துவக் கல்லூரி வாசலில் அக்கால கட்டத்தில் - ஒரு போராளித் தலைவருக்கும் ஒரு வைத்திய மாணவனுக்கு மிடையில் - நடந்த ஒரு சம்பாசனை தெரிவிக்கிறது.

# அதிகாரம் 40
# வெளியுறவுக் கொள்கை

1983 அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக 1977இல் பதவி ஏற்ற பின்னர் - தனது பதவிக்குரிய சலுகைகளைப் பயன்படுத்தி - தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கைக் கடல் எல்லைகளுக்கப்பால் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினார். இந்தியா, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி, சுவிற்சலாந்து, ஒஸ்ரேலியா ஆகிய நாடுகளுக்குச் சென்று தமிழர் பிரச்சினையை உலகமயப்படுத்தினார். எனினும் அவரது வெளியுறவுக் கொள்கை - தமிழ் நாட்டின் பக்க பலத்தோடு - இந்திய அரசின் உதவியைப் பெற்றுத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதாகவே அமைந்திருந்தது. அதனை சிங்கள அரசுக்கு எதிரான இராசதுரோகச் செயலாகச் சிங்களத் தலைவர்களும் கொழும்புப் பத்திரிகைகளும் கடுகடுப்போடு வர்ணித்தன. அமிர்தலிங்கம் அவர்கள் உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க வெளிநாடுகளை நாடவைத்வர்கள் சிங்கள அரசியல் தலைவர்களே. சிங்களத் தலைவர்கள் தமிழர்களை ஏமாற்றிய சந்தர்ப்பங்களை அமிர்தலிங்கம் அவர்கள் பலதடவைகள் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டதுண்டு. அவை:

1924 சேர் பொன்னம்பலம் அருணாசலம் 1918இல் தேசிய காங்கிரசை நிறுவினார். சிங்களவர்களின் பேரினவாத போக்கினால் அதிலிருந்து 1924இல் விலகினார்.

1926 எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க இலங்கைக்குச் சமஷ்டி அரசியலே மிகப் பொருத்தமானதென்றார். பின்னர் நடந்தது?



1941 யாழ்ப்பாணம் வந்த பிரபல மார்க்சிய வாதி டபிள்யூ.தகநாயக்கா தமிழர்களும் சிங்களவர்களும் சமவந்தஸ் துடையவர்கள் என்றார். தமிழர் அவரைச் சிங்களக் காந்தி என்றனர். ஏனைய மார்க்சியவாதிகளும் 1955 வரை சமஅந்தஸ்துக் கொள்கையை ஆதரித்தவர்களே. இறுதியில் யாவருமே தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்தவர்களே.

1944 மட்டக்களப்பு உறுப்பினர் நல்லையாவின் கேள்வி காரணமாகச் சட்டசபையில் தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக இருக்கும் என்று திரு. ஜே.ஆர். ஜயவர்த்தன சட்ட சபையில் பிரேரணை நிறைவேற்றியிருந்தார். பின்னர் என்ன நடந்தது?

1948 சோல்பரி யாப்பின்படி 74 சதவீத சிங்களவர்களுக்கு 80 சதவீத பாராளுமன்ற உறுப்பினர் உரிமை வழங்கப்பட்டது.

1948 தமிழர் பாரம்பரிய நிலப்பிரதேசங்களை குடியேற்றங்கள் மூலம் அபகரித்தார்கள்.

1948 இந்திய வம்சாவழித் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்து நாடாளுமன்றத்தின் தமிழர் பலத்தைக் குறைத்தார்கள்.

1955 யாழ்ப்பாணத்தில் தமிழுக்கு சமஅந்தஸ்து தரப்படும் என்று கூறிய ஐக்கிய தேசியக் கட்சி, 1956 பெப்புருவரி 18ந் திகதி களனி மகாநாட்டில் 'சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி' யென்று பிரகடனம் செய்தது.

1956 யூன் 5ந் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது.

1958 பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

1968 டட்லி-செல்வா ஒப்பந்தம் கைவிடப்பட்டது.

1972 புதிய யாப்பில் தமிழர் சார்பில் சமர்ப்பித்த ஆகக் குறைந்த பட்ச 6 அம்சக் கோரிக்கையை ஏற்க மறுத்தது.

1972 பழைய யாப்பில் சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பாக இருந்த 29வது சரத்தை நீக்கியதோடு 'செனேற் சபையையும்' இல்லாமல் செய்தது

மேற் கூறிய தொடர்ந்த சிங்களத் தலைவர்களின் திட்டமிட்ட ஏமாற்றுக்கள் காரணமாகவே தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் அமிர்தலிங்கம் அவர்கள் கடல் கடந்து இந்தியாவின் உதவியைப் பெறும் வெளியுறவுக் கொள்கையைக் கைக்கொண்டார்.

1962இல் தமிழ் அரசுக் கட்சி இந்தியா தொடர்பாகத் கடைப்பிடித்த அதே கொள்கையையே விரிவுபடுத்தி மேற்கொண்டார். 1962இல் சீன தேசம் இந்தியா மீது படை எடுத்த பொழுது மத்திய செயற் குழு நவம்பர் 18ந் திகதி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன் இறுதிப்பகுதி மட்டும் தரப்படுகிறது:

"ஏகாதிபத்திய சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தும், தனது சுதந்திரத்திற்காகவும் போராடும் இந்தியாவிற்கு - ஆதரவு நல்க வேண்டுமென்று, இலங்கை அரசாங்கத்தைத் தமிழ் அரசுக் கட்சி கேட்டுக் கொள்கிறது."

"தனது பாதுகாப்பிற்குப் போதிய ஆட்பலம் இந்தியாவிடம் இருப்பினும், மாண்பு மிக்க கொள்கைகளுக்காகவே இந்தியா போராடுவதால், மனித சுதந்திரத்துக்காக நடாத்தப்படும் இப்புனித போரில் ஒரு சிறிதளவேனும் பங்குகொள்ள விரும்புவதனால், இப்போரில் பங்கெடுப்பதற்காக - இலங்கை வாழ் தமிழ் பேசும் இளைஞர்களைத் தொண்டர்களாகச் சேரும்படி தமிழ் அரசுக் கட்சி அழைக்கிறது."

அமிர்தலிங்கம் அவர்களது வெளியுறவுக் கொள்கை காரணமாகவே, 1983 யூலை இனக் கலவரத்தை அடுத்து இந்தியப் பிரதமர் மேன்மைதங்கிய ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் இரகசிய வழிமூலம் அமிர்தலிங்கம் அவர்களை 'ராஸ்திரபதி பவனுக்கு' அழைத்தார். அப்பொழுது மன்னாரில் இருந்த அமிர்தலிங்கம் அவர்கள் மாறு வேடத்தில் சென்னையை அடைந்தார். நள்ளிரவு நேரம் தமிழ் நாட்டின் தலைவர்கள் அத்தனைபேரும் அவரை வரவேற்க விமான நிலையத்தில் வழிபார்த்து நின்றனர். தமிழ் நாடு முன்னாள் முதல் அமைச்சர் கலைஞர் கருணாநிதியும் அவர்களில் ஒருவர்.



சென்னையிலிருந்து திருவாளர்கள் மு.சிவசிதம்பரம், ஆர்.சம்பந்தன் ஆகியவர்களையும் அழைத்துக்கொண்டு பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையாரைச் சந்திக்கப் புதுடில்லி சென்றார் - 1983 ஒகஸ்ற் மாதம் 14ந் திகதி. அப்பொழுது அமிர்தலிங்கம் அவர்களுக்கு ஒரு நாட்டின் தலைவருக்கு உரிய மரியாதை கொடுக்கப்பட்டதாக அவரோடு கூடச்சென்ற அமரர் மு.சிவசிதம்பரம் அவர்கள் 'கர்ம யோகி அமரர் அமிர்' என்ற கட்டுயைில் குறிப்பிட்டுள்ளார்.

அச்சமயம் அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கு அமிர்தலிங்கம் அவர்கள் ஈழத் தமிழ் மக்களின் இன்னல்களை கண்மல்க எடுத்துரைத்து உதவி கோரினார். தனது மக்களின் சுபீட்சத்துக்காக இதய சுத்தியுடன் உழைக்கும் அமிர்தலிங்கம் அவர்களின் பணியும், அவரது சாதுரியமான இராசதந்திர அணுகு முறையும், மந்திரசக்தி கொண்ட தனது வார்த்தைகள் மூலம் ஈழத்தவர்களது இன்னல்களை விபரித்த முறையும் அன்னை இந்திரா காந்தி அவர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தது.

அவ்வேளை அம்மையார் தனது நிலைப்பாட்டைத் தெளிவாகச் சொன்னார். 'பிரிந்து சென்று தனி அரசு அமைப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது, இந்தியாவில் உள்ளது போல ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் பிரதேச சுயாட்சியை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று தெரிவித்தார். அதற்கு தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் தீர்க்கதரிசனத்தோடு பதிலளித்தார்.

"மேன்மை தங்கிய தாங்கள் திரு. ஜயவர்த்தனாவைத் தூண்டி சம்மதிக்கச் செய்ய முடியுமானால் நாங்கள் அதனை வரவேற்போம்" என்று கூறினார். அமிர்தலிங்கம் அவர்கள் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிட விரும்பவில்லை. அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே தமிழ் மக்கள் அதிஷ்டம் என்று நம்பினார். தீர்க்கதரிசனமாகப் பிரதேச சுயாட்சியைப் பற்றிக்கொண்டார்.

பேச்சு முடிவில் அடுத்த நாள் - 1983 ஒகஸ்ற் 15ந் திகதி நடக்கவிருந்த இந்திய சுதந்திரதின வைபவத்துக்கு அமிர்தலிங்கம் அவர்களை விசேட விருந்தினராகப் பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் அழைத்தார். வைபவத்துக்கு 20 நிமிடங்கள்

தாமதித்து வரும்படி அண்ணலிடம் கூறி இருந்தார். அந்தக் கொண்டாட்டத்தில் உலக நாடுகளின் தூதுவர்கள் தலைவர்கள் பலர் பங்கு கொண்டு மண்டபத்தை நிறைத்திருந்தனர். இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரும் அங்கிருந்தார். அமிர்தலிங்கம் அவர்கள் 20 நிமிடங்கள் தாமதித்து மண்டபத்துள் பிரவேசித்ததும் இந்திரா காந்தி அம்மையார் தனது இருக்கையில் இருந்து எழுந்து பல யார் தூரம் நடந்து சென்று அமிர்தலிங்கம் அவர்களை வரவேற்று அழைத்துச் சென்று தனது ஆசனத்துக்கு அருகில் அமைந்த ஆசனத்தில் அமரச் செய்தார். அம்மையாருக்கு மறுபுறத்தில் இரசிய வல்லரசின் உதவி ஜனாதிபதி இருந்தார். அப்படி ஏன் செய்தது என்று பின்னர் அமிர்தலிங்கம் அவர்களுக்கு அம்மையார் விளக்கினார். அதாவது ஈழத் தமிழ் மக்கள் பிரச்சினையை உலகறியச் செய்யவே அவ்வாறு செய்ததாகக் குறிப்பிட்டார். அதனைப் பொறுக்க முடியாத கொழும்புப் பத்திரிகைகள் விசத்தைக் கக்கின.

அதனை அடுத்து ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் லோகசபையில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றி அறிக்கை சமர்ப்பித்து உலக கவனத்துக்குக் கொண்டு வந்தார். இரண்டாவது தடவையாக நாடாளுமன்றத்தில் அவர் பேசிய பொழுது சொன்னார்:

# அதிகாரம் 41
# ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் புதுடில்லி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை

"திரு. உதவி சபாநாயகர் அவர்களே, நான் சென்ற தடவை நாடாளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையை அடுத்து திரு. அமிர்தலிங்கம் டில்லி வருவதற்காக யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்டுள்ளார். அவர் இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர் என்பதோடு இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பிரதான அரசியல் கட்சியின் செயலாளர் நாயகமும் ஆவார். அவர் என்னைச் சந்தித்தார். அவர் வெளிநாட்டு அமைச்சருடன் பேசி உள்ளார். வேறும் ஏனைய அமைச்சர்களுடனும், வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் பேசி உள்ளார்."



"இலங்கைச் சிறுபான்மைத் தமிழர்கள் எவ்வளவுக்கு பயங்கர மிருகத்தனமான துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றார்கள் என்பதை திரு. அமிர்தலிங்கம் எனக்குச் சொல்லியுள்ளார். தனிப்பட்ட முறையில் நானும், எனது அரசாங்கமும் எனது கட்சியும், இந்தச் சபையில் அவர்கள் துன்பங்கள் பற்றிப் பேசியவர்களும் மிகவும் ஆழ்ந்த கவலைக்கு ஆளாகி இருக்கிறோம். நாங்கள் அச்செயல்களைக் கண்டித்துள்ளோம். நாங்கள் இன அழிப்பைக் கண்டிக்கிறோம். இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்படும் அநியாயங்களையும் அட்டூழியங்களையும் நாங்கள் கவலையோடு உணருகின்றோம். எனினும், கௌரவ அங்கத்தவர்களுக்குத் தெரியும் எவ்வளவுக்கு எங்களது உணர்ச்சிகள் பொங்கி எழுந்தாலும், அரசாங்கம் மிகவும் கட்டுப்பாட்டோடு நடந்து கொள்ள வேண்டும் என்பது. அதன் அர்த்தம் நாங்கள் தயக்கம் காட்டுகிறோம் பின்வாங்குகிறோம் என்பதல்ல. எங்களுடைய ஒவ்வொரு காலடியையும், ஒவ்வொரு வார்த்தையையும், ஒவ்வொரு செயலையும் வெகு நிதானமாகச் செய்ய வேண்டும். ஏனெனில் அது இலங்கையில் வாழுகின்ற தமிழருக்குப் பாதகம் விளைவிக்கச் சாட்டாகிவிடும்."

"இலங்கையில் இடம்பெற்ற கசப்பான அனுபவங்களின் மனவுளைச்சலின் மத்தியில் என்னுடனும் ஏனையவர்களுடனும் சம்பாசித்த பொழுது திரு. அமிர்தலிங்கம் வெளிக்காட்டிய தலைமைத்துவ அரசியல் ஞானத்துக்கு நான் எனது மதிப்பை இவ்வேளை தெரிவிக்க விரும்புகிறேன். திரு. அமிர்தலிங்கம் எங்களது அரசின் மேலான சேவையை வரவேற்கின்றார். அவர் டில்லியில் வந்திறங்கியதும் - கடந்த காலத்தில் இலங்கை அரசாங்கத்தோடு தங்களுடைய கட்சி நடாத்திய பேச்சுவார்த்தைகள் நம்பிக்கை யிழந்துள்ளன வென்றும், தொடர்ந்து முந்திய கைவிடப்பட்ட சிங்கள அரசின் உத்தரவாதங்களை மீள முன்னெடுக்க முடியாதென்றும், அது புளித்த கதையாவிட்டது என்றும் - தெரிவித்துள்ளார். ஆனால் இந்திய அரசின் மேலான ஆலோசனை காரணமாக அடிப்படையில்

சில மாற்றங்கள் ஏற்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் திரு. அமிர்தலிங்கம் எம்முடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் பொழுது சொன்னார்: தமது கட்சி தமிழ் மக்களது உரிமைகளை நிறைவேற்றக் கூடிய ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் அமைந்த தீர்வுக்காக முயற்சிகளை மேற்கொண்டதாக. ஆனால் சிங்களப் பெரும்பான்மையினரின் புறக்கணிப்பும், தொடர்ந்த பகைமையும் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தீர்வு காணவேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பைத் தொடராமல் அதற்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளது என்றும் கூறியுள்ளார். எனினும் எமது முன்னெடுப்பு புதிய கதவுகளைத் திறந்துள்ளது. அதனை அவர்கள் பரிசீலிக்க வேண்டும்."

"நான் ஏற்கனவே சொன்னபடி, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வட்ட மேசை மகாநாட்டையே நாடவேண்டும். தமிழ் தலைவர்களுடன் எப்பொழுது மகாநாட்டை ஆரம்பிப்பது என்று முடிவு செய்வது இலங்கை அரசைப் பொறுத்தது. உடனடித் தேவை என்ன வென்றால் மக்கள் மத்தியிலே பாதுகாப்பை ஏற்படுத்துவதே. அவசரமாக ஒரு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும். தமிழர்களது விடயத்தில் நாங்கள் ஆழ்ந்த கரிசனை உடையவர்களாக இருப்பதால் நாம் எவ்வகையிலும் அவர்களுக்கு உதவி செய்ய விரும்புகிறோம். சமாதானம் ஏற்பட வேண்டுமானால் இரு பகுதியினரும் ஒருவரோடு மற்றவர் பேசவேண்டும். பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல நான் ஒரு அரச தூதுவரை இலங்கைக்கு அனுப்ப ஆயத்தமாக உள்ளேன். நாங்கள் இப்பொழுது ஜனாதிபதி ஜயவர்த்தனவுடன் தொடர்பு கொள்ள முடியும். இந்த இடைக் காலத்தில் திரு. அமிர்தலிங்கம் சென்னையில் சில நாட்கள் தங்கிவிட்டு தனது கட்சியினருடன் கலந்துரையாட யாழ்ப்பாணம் செல்கிறார்."

"இலங்கையில் தொடரும் கொடுமையான சம்பவங்கள் தொடர்பாக எமது நாட்டில் பொங்கி எழுந்துள்ள கவலையையும் கரிசனையையும் பற்றி நாடாளுமன்றத்தின் கவனத்துக்குத் தொடர்ந்து கொண்டு வரப்படுவது இது நாலாவது வாரமாகும். தமிழ் நாட்டிலும் மற்றும் எங்கணும் உள்ள தமிழ் சகோதர சகோதரிகளுடைய மனச்சஞ்சலம் எங்களுடையதும் ஆகும். இந்தச் சபையின் இன்றைய விவாதம் ஒன்றை எடுத்துக் காட்டுகிறது - அதாவது தமிழர் பற்றிய பிரச்சினைகளால் மக்கள் மத்தியில் வெடித்திருக்கிற ஆழ்ந்த உணர்ச்சிகள் நாட்டின் ஒரு பகுதியினுடையதோ அல்லது ஒரு கட்சியினுடையதோ அல்ல. அது கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் தேசம் முழுவதையும் அடக்கியதாகும்."



"எங்களை எதிர்நோக்கி உள்ள, மிக்க அவதானம் தேவையான கஷ்டமான சூழ்நிலையை உணர்ந்து கௌரவ உறுப்பினர்கள் ஆர்வத்துடன் செவி மடுத்தமைக்காகப் பெருமைப்படுகிறேன். நாங்கள் மனவுளைச்சலுடன் நுணுக்கமாக நிலைமைகளை அவதானிக்கிறோம். நாடாளுமன்றத்தின் தொடர்ந்த ஆதரவுடனும், இந்திய மக்களின் ஆதரவுடனும் பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பான சமூக சூழ்நிலையை எம்மால் தோற்றுவிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இது இனக் குரோத உணர்வுகளை போக்க மேற்கொண்ட முதல் படியாகும். இது அரசியல் தீர்வைக் கொண்டுவந்து நிரந்தரப்படுத்த ஓர் உறுதியான படிக்கல்லாக அமையும்."

ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தமிழர் பிரச்சினையை உலக மயப்படுத்தி, இலங்கையையும் எச்சரிப்பதாக இருந்தது. அது இலங்கையில் அக்கினிக் குண்டைத் தூக்கிப் போட்டது. சிங்கள சமூகம் சினந்து வெடித்தது. ஊடகங்கள் அமிர்தலிங்கம் அவர்கள் மீது வசைபாடின. அவர் கொல்லப்படும் வரை சிங்கள சமூகம் அவரை மன்னிக்கவில்லை என்பதனைப் பின்னர் இடம் பெற்ற சம்பவங்கள் எடுத்துக் காட்டின. எனினும், சில தமிழர்களும் அவர்களுடன் கைகோர்த்துச் செயற்பட்டமை விசனத்துக்குரியது.

இன்னும், ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையாரை இந்திய நாடாளுமன்றத்தில் இலங்கைக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பச் செய்த அமிர்தலிங்கம் அவர்களின் வாக்குச் சாதுரியத்தை மக்கள் ஒப்பிட்டுப் பார்க்க ஒரு கதை உண்டு.

அவரது சாதனை கி.மு. முதலாம் நூற்றாண்டில் உரோம சக்கராதிபத்தியத்தில் வாழ்ந்த மார்க் அன்ரனியை நினைவு படுத்துகிறது. மார்க் அன்ரனி எகிப்திய ராணி கிளியோபற்றாவின் பேரழகில் சொக்கிய கதையை இங்கு சொல்லப் போவதில்லை. மார்க் அன்ரனி உரோம சக்கரவர்த்தி யூலியஸ் சீசரின் படைத் தளபதியும் அரசியல் மேதையுமாகும். பேரரசன் யூலியசீசரை அவனது

அரசியல் சபையைச் சேர்ந்த யூனியஸ் புருட்டஸ், காசியஸ் லோங்னியஸ் முதலியவர்கள் சூழ்ச்சி மூலம் கொலை செய்வித்தார்கள். யூலியஸ் சீசரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு மார்க் அன்ரனி உணர்ச்சி மயமான மக்களை மின்சாரமாகக் கவர்ந்து இழுக்கும் அஞ்சலி உரையை நிகழ்த்தினான். அந்த அஞ்சலி உரை அங்கு கூடிய உரோமானிய மக்களின் உணர்ச்சிகளை பூகம்பமாக வெடிக்கச் செய்தது. மக்கள் சமுத்திரம் கொதித்து எழுந்தது. யூலியசீசரைக் கொலை செய்த புருட்டஸ் கூட்டத்துக்கு எதிராக கிளர்ந்து எழுந்தது. அவர்கள் ஓடி ஒழித்தார்கள். உரோமின் ஆட்சி மார்க் அன்ரனி வசமாகியது. இதற்கெல்லாம் காரணம் மார்க் அன்ரனியின் வாக்குச் சாதுரியமே. அப்படியான மேன்மைவாய்ந்த வாக்குச் சாதுரியத்தின் மூலமே 1983 ஆகஸ்ட் 14 அன்று பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையாரை அமிர்தலிங்கம் அவர்கள் தனது மந்திர வார்த்தைகளால் கவர்ந்து - 100 கோடி மக்களின் தலைவியை - மேலே சொன்னவாறு பாராளுமன்றத்தில் பேசவைத்தார். நாடாளுமன்றத்தின் அரசாங்க எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 538 உறுப்பினர்களையும் தனது முயற்சியை ஆதரிக்கச் செய்தார். 100 கோடி மக்களின் பார்வையை இலங்கைத் தமிழர் பக்கம் திருப்பினார். அவர்களுக்காக உணர்ச்சிகொள்ளச் செய்தார். அமிர்தலிங்கம் அவர்களோடு ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையாரைச் சந்திக்கச் சென்ற மு.சிவசிதம்பரம் நல்லூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் தான் நேரே பார்த்த நிகழ்ச்சியை 'கர்ம யோகி அமரர் அமிர்' என்ற கட்டுரையில் பின்வருமாறு விபரித்துள்ளார்.

"அமிரின் புனித நோக்கம் அன்னை இந்திரா காந்தியைக் கவர்ந்தது. தமிழர் தரப்புப் பிரச்சினைகளை அவர் நியாயபூர்வமாக முன்வைத்த முறை அவரைச் சிந்திக்கச் செய்தது. கொலைகளை கற்பழிப்புகளை தீவைப்புகளை கண்ணீர் மல்க விபரித்தவகை அவரை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியது. அதன் விளைவு - அமிருக்கு லோக சபையில் புகழ்பூத்த மதிப்புச் செலுத்தினார். தொடர்ந்து இலங்கையில் இன அழிப்பு நடைபெறுவதாக கடுமையான பதங்களைப் பயன்படுத்திச் சபைக்குத் தெரிவித்தார். இன்னொரு நாட்டைப் பற்றி ஒரு நாட்டின் தலைவியின் கண்டனக் குரல் அது. அன்னை இந்திரா காந்தியின் வாசகங்கள் இலங்கையை நடுங்க வைத்தன. இந்த நிகழ்வுதான் எமது பிரச்சினையை உலகமயப்படுத்தியது."



பின்னர் 1983 யூலை இனக் கலவர அக்கிரமங்களைக் கடுமையாகக் கண்டித்து ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்கு பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கடிதம் அனுப்பினார்.

1983 இனக் கலவரம் தொடங்கிய பின்னர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் தமிழர்கள் துன்புறுத்துவதையிட்டுத் தனது மனவருத்தத்தை ஜனாதிபதி ஜெயவர்தனாவுக்குத் தெரிவிக்க வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் நரசிம்மராவ்வை இலங்கைக்கு அனுப்பினார். பின்னர் ஒகஸ்ட் 17ந் திகதி ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் தொலை பேசியில் ஜனாதிபதிக்கு 'இனப் பிரச்சினையை தீர்ப்பது பற்றி உங்களோடு கலந்து பேச பார்த்தசாரதியை அனுப்புகிறேன்' என்ற கருத்தைத் தெரிவித்தார். திரு.பார்த்தசாரதி வெளிவிகார அமைச்சின் செயலாளர். அம்மையாரின் ஆலோசகர். 24ந் திகதி நடந்த அமைச்சர் அவையில் ஜனாதிபதி ஜயவர்த்தன பார்த்தசாரதியின் வருகையைத் தெரிவித்த பொழுது காமினி ஜயசூரிய, காமினி திசநாயக்க, ஆர். பிரேமதாச ஆகியோர் பார்த்சாரதியின் வருகைக்கு இடம் அளித்தால் வீதியில் நடக்க முடியாதென்று எதிர்த்தார்கள். அதனை திரு.ஜே.ஆர். ஜயவர்த்தன பொருட்படுத்த முடியாத, பணிந்து போகவேண்டிய சூழ்நிலை.

ஜனாதிபதி ஜயவர்த்தனவைச் சந்தித்த திரு. ஜி.பாரத்தசாரதி 'இலங்கையின் கொள்கைகளும் செயல்களும் கேந்திர முக்கியத்துவம் உடைய அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. இந்தியா இலங்கையின் உறவை முறியடிக்க விரும்பவில்லை. இலங்கை அரசுக்கும் அதனுடைய தமிழ் பிரசைகளுக்கும் இடையில் உண்மையான இணக்கத்தை ஏற்படுத்த இந்தியா விரும்புகிறது.' என்ற அன்னை இந்திரா காந்தி அவர்களின் கருத்தைத் தெரிவித்தார்.

திரு.பார்த்தசாரதியின் வருகையைத் தமிழ்ப் பத்திரிகைகள் வெகு ஆடம்பரத்தோடு வரவேற்றன. ஒரு பத்திரிகை பாரதப் போரில் அருச்சுனனின் தேரோட்டிய கண்ணனின் பெயரே பார்த்தசாரதி. அது போலவே எங்கள் இன்னல் தீர்க்க வருகிறார் பார்த்தசாரதி என்று எழுதி இருந்தது.

இந்திய முயற்சி கிட்டத்தட்ட வெற்றி பெற்றது. சர்வகட்சி மகாநாட்டின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க திரு.ஜயவர்த்தன முன்வந்தார். பார்த்தசாரதி ஜயவர்த்தனவையும் தமிழ் தலைவர் களையும்

சந்தித்த பின்னர் சமர்ப்பித்த அதிகார பரவலாக்க அரசியல் திட்டத்தை சர்வகட்சி மகாநாடு ஏற்றுக்கொண்டது. ஆனால் பின்னர் பௌத்த குருமாரும் எதிர்க் கட்சிகளும் அதனை எதிர்ப்பதாகக் கூறியும், அப்படி ஒரு மாற்றத்தைச் செய்ய தேசிய ஒப்புதல் மக்களிடம் பெறப்படவில்லை என்று கூறியும் அதனை நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஜயவர்த்தனா நழுவினார். விடயங்கள் சூடாக இருக்கும் பொழுது குனிவதும், சூடு தணிந்ததும் உதாசீனம் செய்வதும் ஜனாதிபதி ஜெயவர்தனவின் இராசதந்திரமாகும். 1983 யூலை இனக் கலவரச் சூடு தணிந்ததும் பார்த்தசாரதியின் முன்வைப்பபை உதாசீனம் செய்தார்.

1983 அக்டோபர் இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ள அமெரிக்கா சென்றிருந்தார். அவ்வேளை திடீரெனத் ஸ்ரீ பார்த்தசாரதி அமிர்தலிங்கம் அவர்களுக்கு ஒரு அவசர செய்தி அனுப்பினார். அதாவது உடனடியாக அமிர்தலிங்கம் அவர்களை நியூயோக் வருமாறு ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் அழைத்துள்ளார் என்பதே அச்செய்தி. அமிர்தலிங்கம் அவர்கள் உடனடியாக அமெரிக்கா சென்றார். அங்கு உலக தூதுவர்கள் அனைவருக்கும் அமிர்தலிங்கம் அவர்களை அறிமுகப்படுத்தி இலங்கையில் தமிழர்கள்படும் இன்னல்களை எடுத்துக் கூறுவார் என்று கூறினார். ஐக்கிய நாடுகள் தாபனத்தில் தமிழர் பிரச்சினையை முழுமையாகப் பகிரங்கப்படுத்தக் கிடைத்த அந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை அமிர்தலிங்கம் அவர்கள் செம்மையாகப் பயன்படுத்தி சிங்களப் பேரினவாத அரசு தமிழர்களின் உரிமைகளைக் கொடுக்க மறுத்துச் செய்த அநியாயங்களையும், சமாதானம் மேற்கொள்ள எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்த வரலாற்றையும் எடுத்து விளக்கினார். அந்தச் சந்தர்ப்பம் மேலும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை சர்வதேச சமூகம் தெரிந்து கொள்ள உதவியது.

இச்சந்தர்ப்பத்தில்தான் 1984 அக்டோபர் மாதம் 31ந் திகதி பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் அகால மரணம் எய்தினார்.

ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் டில்லியில் தனது இல்லத்தில் இருந்து அருகில் உள்ள அலுவலகத்துக்கு நடந்து செல்கையில் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்களான இரு சீக்கியர்களினால்



சுடப்பட்டார். இந்தியாவின் முதலாவது பெண் பிரதமரான அம்மையாரின் கன்னிப் பெயர் இந்திரா பிரியதர்சினி. இவர் 1917 நவம்பர் 17ந் திகதி புதுடில்லியில் ஆனந்த பவன் இல்லத்தில் பிறந்தார். இவர் சுதந்திரம் அடைந்த இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேருவின் மகளாகும். தாயார் கமலா நேரு. பேரன் மோதிலால் நேரு. அவரும் இந்திய அரசியலில் பிரபல்யமாக இருந்தவர். இந்திரா சாந்தி நிகேதனில் கல்வி கற்றார். அங்கு நடனம் சங்கீதம் பயின்றார். 1942 மார்ச் 26ந் திகதி பெரோஸ் காந்தியை மணந்தார். இவருக்கு இரு மகன்கள். இளையவர் சஞ்சய் காந்தி வழமையான காலைவேளை விமான சாகசப் பயிற்சியின் போது விபத்தில் சிக்கி இறந்தார். மூத்த மகன் ராஜீவ் காந்தி இந்தியாவின் பிரதமராக இருந்தவர். தற்கொலைக் குண்டுக்காரியினால் தமிழ் நாட்டில் ஸ்ரீபெரும்புத்தூரில் கொலை செய்யப்பட்டார். அன்னை இந்திரா காந்தி அவர்களது மறைவு இலங்கைத் தமிழர்களுக்குப் பெரும் இழப்பாகும்.

ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையாரின் மறைவை அடுத்து அமிர்தலிங்கம் அவர்கள் பட்ட வேதனை விபரிக்கக் கூடியதல்ல. அவர் ஈழத் தமிழன் விடிவிற்காகக் கட்டிய கோட்டைகள் தகர்ந்தன. "இலங்கைத் தமிழர்கள் தமது தாயை இழந்துவிட்டனர்" என்று அமிர்தலிங்கம் அவர்கள் அம்மையாரின் மகன் ராஜீவ் காந்தி அவர்களுக்குத் தந்தி அனுப்பினார். அவர் அந்தத் தாக்கத்தில் இருந்து விடுபடப் பல நாட்கள் எடுத்தன. அந்த பாதகச் செயல், அண்மித்துவிட்ட தமிழரின் விடிவு காலத்தைப் பறித்துக் கொண்டு பறந்து போனது.

அன்னை இந்திரா காந்தி அவர்களின் மறைவைக் கேட்டதும் எவரும் கட்டளை போடாமலே யாழ்ப்பாணம் முழுவதும் சோகத்தில் ஆழ்ந்தது. கடைகள் இழுத்து மூடப்பட்டன. பாடசாலைகள் வங்கிகள் மூடப்பட்டன. கறுப்கொடிகள் குடா நாடு முழுவதும் பறந்தன. நவம்பர் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்தில் பிறந்த 12 பெண் குழந்தைகளுக்கு இந்திரா என்று நாமகரணம் செய்யப்பட்டது. ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் இந்தியாவில் பயிற்சி பெற 1981 தொடக்கம் இடம் அளித்தவர். தமிழரின் இன்னல்களைத் தீர்க்க இறுதி அடிக்கு ஆயத்தமாக இருந்தவர். தென் இந்தியாவில் உள்ள பங்களுருக்கு படைகள் நகர்த்தப்பட்ட கால கட்டம். அன்னை

இந்திரா காந்தி அவர்கள் மரணத்தை அடுத்து யாழ்ப்பாண இராணுவ முகாங்கள் பட்டாசு கொழுத்தி மகிழ்தன. இராணுவத்தினர் வீதிகளில் இறங்கி "அம்மா எங்கே. அம்மா எங்கே?" என்று பாடினார். வேறு சில சிங்களப் படைவீரர்கள் வீதிகளில், போத்துக்கேயரிடம் இரவல் வாங்கிய 'பைலா' நடனம் ஆடினர். அதே வகையில் கொழும்பிலும் அவரது மரணச் செய்தி கேட்டு மகிழ்சி ஆரவாரங்கள் சிங்களவர்கள் மத்தியில் பெருமளவில் காணப்பட்டன.

1983 இனக் கலவரத்தை அடுத்து மாறு வேடத்தில் தமிழகம் சென்ற அமிர்தலிங்கம் அவர்கள் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கிய சேப்பாக்கத்தில் உள்ள அரச விருந்தினர் இல்லத்தில் வசித்தார். அது வாழ்க்கைக்கு ஏற்ற வசதிகள் நிறைந்த இடம் அல்ல. அதனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனி வீடு கொடுக்க முன்வந்தார். ஆனால் அண்ணல் அமிர்தலிங்கம் அவர்கள் தனது மக்கள் வீடுவாசல் இல்லாமல் ஈழத்தில் துன்பப்படுகிற பொழுது தான் மட்டும் ஆடம்பரமாக வாழ்வதா என்று தனிவீடு வேண்டாம் என்று சொல்லித் தொடர்ந்தும் அரசினர் விடுதியிலேயே வசித்தார். தேவை கருதி அவர் இந்தியாவில் வாழ்ந்த பொழுதும் அவரது சிந்தனை எப்பொழுதும் ஈழத் தமிழர் விடுதலை பற்றியதாகவே இருந்தது.

# அதிகாரம் 42
# தமிழர் பிரச்சினையை உலகமயப்படுத்தியவர்

1984 1983 இனக் கலவரத்தை அடுத்து அமிர்தலிங்கம் அவர்கள் ஈழத் தமிழ் மக்களை மறந்து இந்தியா சென்று தமிழகத்தில் வாழ்ந்தார் என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு. வேறு குற்றம் காணமுடியாமையால் அப்படி ஒரு அபத்தமான குற்றச்சாட்டு. அவர் இலங்கையில் வாழ்ந்திருந்தால் உடுவில்-மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம், கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் மு.ஆலாலசுந்தரம் ஆகியோர் 1985 செப்ரம்பர் 2ந் திகதி கடத்திச்



சென்று சுட்டுக் கொல்லப்பட்ட அதே தினம் அதே இரவு அமிர்தலிங்கம் அவர்களும் கடத்திச் செல்லப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பார். அவர்களோடு சேர்த்துக் கொல்ல வாய்ப்பில்லாமல் போய்விட்டதே என்ற ஆத்திரத்தில் ஸ்ரீசபாரத்தினம் ஆரம்பித்து வைத்த குற்றச்சாட்டே - அமிர்தலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் மக்களோடு வாழாது ஓடித்தப்பி இந்தியாவில் வாழ்ந்தார் என்பது. உயிருக்குப் பயந்து களத்தில் இருந்து ஒதுங்கியதாக அல்லது ஓடி ஒழித்ததாக அவரது வாழ்க்கைச் சரித்திரத்தில் அற்பமாகக்கூடப் பதிவாகவில்லை. "இந்தியாவில் தங்கி இருந்தால்தான் தீர்வு விடயங்களை முன்னெடுக்க வசதியாக இருக்கும்" என்று அன்னை இந்திராகாந்தி அவர்கள் வழங்கிய ஆலோசனைப்படியே அவர் இந்தியாவில் தங்கினார்.

அவர் தமிழ் நாட்டில் வாழ்ந்த பொழுது இலங்கைத் தமிழ் மக்கள் விடிவுக்காக இந்தியத் தலைவர்களைச் சந்தித்து அவர் ஆற்றிய பெரும் பணிகள் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளன இன்னும் சொல்லப்படவுள்ளன. அதுமட்டுமல்லாமல் அக்கால கட்டத்தில் உலக நாடுகளுக்குச் சென்றும், தமிழ் நாட்டிலும் புதுச்சேரியிலும் ஊருராகச் சென்று பிரசாரம் செய்தும், பத்திரிகைகள் வாயிலாகப் பிரசாரித்தும் தமிழர் பிரச்சினைகளை உலக மயப்படுத்தினார். ஒரு பதமாக, 1984 ஏப்பிரல் 18ந் திகதி அவர் 'நியூஸ்ரைம்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் சில பகுதிகள் தரப்படுகின்றன:

"சென்ற ஆண்டு (1983) தென்பகுதிச் சிங்களப் பிரதேசங்களில் தமிழர்கள் துடிக்கத் துடிக்கக் கொலை செய்யப்பட்டார்கள். ஆனால் இந்த ஆண்டு (1984) தமிழ்ப் பிரதேசத்திலேயே திட்டமிட்டுக் கொலை நடக்கிறது. ஊரடங்குச் சட்டச் சாட்டில் தமிழ்ப் பகுதிகளில் அப்பாவிப் பொது மக்கள் தங்கள் வீட்டு வாசல்களில் வைத்தும் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் ஆயுதந்தரித்த இயக்கங்களுக்கு எதிராக மக்களைத் திசைதிருப்ப முனைகிறார்கள். மூன்று நாட்களுள் ஐம்பத்து ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர். இது இராணுவத்தின் ஒழுக்கமின்மையால் நடப்பதல்ல. உதாரணமாக யாழ்ப்பாணத்தில் 58 வயது பொன்னம்பலம் என்ற ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் தனது வீட்டுக்குள் இருந்து எட்டிப்பார்த்த பொழுது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். யாழ் நகரில் உள்ள பௌத்த கோவிலான நாகவிகாரைக்கு அண்மையில் ஒன்பது பேர் சுட்டுக்

கொல்லப்பட்டார்கள். அரசடி வீதியில் ஆறு பேர் சுடப்பட்டு அவர்களது சடலங்கள் வீதிகளில் போட்டுத் தீயிடப்பட்டன. மாவனலையில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற மூன்று முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இரண்டு தினங்களின் முன்னர் திருகோணமலையில் 25 இளைஞர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாதுள்ளது."

"இந்திய அரசாங்கம் இலங்கை தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலியுடன் பேசி வன்முறைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் என்று கேட்டது. எனினும் நாளுக்கு நாள் மக்களின் துன்பங்கள் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றன. மக்களின் சாதாரண வாழ்க்கை சீர்குலைந்துள்ளது. அவர்கள் தங்களின் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட முடியவில்லை. கடல்வலய சட்டங்கள் காரணமாக மீன் பிடித்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எரி பொருள் கிடைப்பதாக இல்லை. விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து வசதிகள் ஸ்தம்பித்துள்ளன. மக்கள் நடமாட முடியவில்லை. வேலைக்குப் போக முடியவில்லை. நாளாந்த வாழ்க்கை வரவர கஷ்டமாகிறது."

"இலங்கை அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தையும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நிரந்தரமாகப் பயன்படுத்துகிறது. இந்தச் சட்டங்களுக்கு அளவுக்கு மிஞ்சிய அதிகாரங்கள் உண்டு. அதனைப் பயன்படுத்தி எதுவித சாட்சியமும் இல்லாமல் மக்களைக் கைது செய்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படுவ தில்லை. காவல்துறை அவர்களைச் சிறைக்கூட குச்சு அறைகளில் அல்லது இராணுவ சிறைகளில் அடைத்து வைத்திருக்கிறது. அவை மனித பாவனைக்கு இலாயக்கற்ற படு மோசமான இடங்கள். சில பெற்றோருக்குத் தங்கள் பிள்ளைகளை எங்கே அடைத்து வைத்திருக்கிறார்கள் அல்லது அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என்பதுகூடத் தெரியாது. அவர்களை இராணுவம் தொலைத்துக் கட்டியிருக்கக் கூடும்."

"ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு தமிழர்களின் துன்பங்கள் துயரங்களை உணர்த்துமாறு நாங்கள இந்தியாவைத் தூண்டுகிறோம்.



காலம் செல்லச் செல்லத் துன்பங்கள் அதிகரிக்கின்றன. எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் தன்னுடைய முழுமையான இராசதந்திர அதிகாரங்களைப் பயன்படுத்தி இலங்கை அரசு உண்மையான கள நிலபரத்தை உணரச் செய்வாரென்று. அவரின் முன்னெடுப்பால் தொடங்கிய சர்வகட்சி மகாநாடு ஆரம்பத்தில் இருந்தே கேள்விக் குறிக்கு உள்ளாக ஜனாதிபதி ஜயவர்த்தனவே காரணம். அரசியல் கட்சிகள் மட்டும் கலந்து கொள்ள வேண்டிய ஒரு முயற்சியில் அவர் பௌத்த மத தாபனங்களையும் மற்றும் தாபனங்களையும் கலந்து கொள்ளச் செய்தார். பௌத்த குருமார் புதுடில்லியில் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவுகளை எதிர்க்கிறார்கள். இந்தியாவின் தயவிலேயே நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம்."

### பாண்டிச்சேரியில் ஈழத் தமிழர் பிரச்சினை

1984 அமிர்தலிங்கம் அவர்கள் தமிழகத்தில் வாழ்ந்தகாலை ஈழத் தமிழர் இன்னல்களை பாண்டிச்சேரி மானிலத்தில் பிரசாரித்த முயற்சி பற்றி வரலாற்றின் மனிதன் மலரில் புதுச்சேரி டாக்டர் பாஞ். இராமலிங்கம் எழுதியுள்ளவை:

"23.3.1979இல் புதுச்சேரிக்கு முதன் முறையாக அமிர்தலிங்கம் அவர்கள் வந்தபொழுது அனைத்துத் தரப்பு அரசியல்வாதிகளும், அனைத்து அமைப்புகளும் இணைந்து வரவேற்றன. அந்த நிகழ்ச்சியின்போது அவர் ஆற்றிய உணர்ச்சிமயமான உரை புதுச்சேரியில் ஈழத் தமிழர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அன்று ஏற்றப்பட்ட தீபம் மக்களை ஈழத் தமிழர் போராட்டத்தில் அக்கறை கொள்ளச் செய்தது. புதுச்சேரியில் தமிழ் ஈழ நட்புறவுக் கழகத்தை அமிர்தலிங்கம் அவர்கள் தொடங்கி வைத்தார்."

"பின்னர் 10.11.1981, 14.7.1986, 18.6.88 ஆகிய திகதிகளில் புதுச்சேரிக்கு வருகை தந்தார். 1984இல் வருகை தந்த போது புதுச்சேரியில் இருந்து கடலூர், முட்லூர், கீரப்பாளயம், சிதம்பரம், சீர்காழி, திருக்கடையூர், காரைக்கால் என நெடும் பயணம் மேற்கொண்டு ஈழத் தமிழர்களின் இன்னல்களை புதுச்சேரி மாநிலம் முழுவதும் எடுத்துரைத்தார்."

இதுவரை சொன்ன செய்திகள் அமிர்தலிங்கம் அவர்கள் 1983 இனக் கலவரத்தை அடுத்து வந்த காலப்பகுதியில் - இந்தியாவில் தங்கியிருந்து செய்த பணிகளில் ஒரு சிறுதுரும்பே.

### ஒஸ்ரேலியாவில் பிரசாரம்

1984 அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்தகாலை ஈழத் தமிழர் பிரச்சினையை உலக மயப்படுத்த ஒஸ்ரேலியா சென்றார். அங்கு தென் அந்தத்தில் உள்ள விக்டோரியா மாநிலத் தலைநகர் மெல்பணில் பேராசிரியர் எலியேசர் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஈழத்து மக்கள் படும் இன்னல்களை எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து தலைநகர் கன்பெராவிலும், நியூசவுத் வேல்ஸ் மாநிலத் தலைநகர் சிட்னியிலும் நடந்த கூட்டங்களில் ஈழத் தமிர்கள் துன்பங்களையும் அவர்கள் படும் அவலங்களையும் விளக்கியதோடு, அவர்களின் இன்னல்களைப் போக்க உலகளாவிய ரீதியில் ஆதரவைத் தேடித் தான் ஒஸ்ரேலியா வந்துள்ளதாகவும் சொன்னார்.

ஒஸ்ரேலிய அரசாங்க மட்டத்துக்கு ஈழத் தமிழர்களின் இன்னல்களை முதன்முதலில் எடுத்துச் சென்றவர் அமிர்தலிங்கம் அவர்களே. வெளிநாட்டு அமைச்சர், குடிவரவு-அகல்வு அதிகாரிகள், மற்றும் அகதிகள் தொடர்பான நிறுவன அதிகாரிகளைச் சந்தித்து இலங்கையின் பேரினவாத அரசாங்கம் எவ்வகையிலே சிறுபான்மை இனமான தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக நடாத்துகிறது என்று எடுத்துச் சொன்னார். அத்தோடு தொலைக் காட்சியில் தோன்றி இலங்கைத் தமிழர்கள் இராணுவ கெடுபிடிகாளால் படும் அவத்தைகளையும், அரசால் பாரபட்சமாக நடாத்தப்படுவதையும் எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்தார். அவரது அவுஸ்திரேலிய திக்விஜயம், ஒஸ்ரேலிய அரசாங்கம் ஈழத் தமிழரின் பிரச்சினையைப் புதிய கோணத்திலே அணுகப் பெரிதும் உதவியது.



# அதிகாரம் 43
# ஸ்ரீ ராஜீவ் காந்தியுடனான தொடர்பு

1984 அன்னை இந்திரா காந்தி அவர்கள் மறைவின் பின்னர் அவரின் மகன் ஸ்ரீ ராஜீவ் காந்தி பிரதமரானார். அதனால் அமிர்தலிங்கம் அவர்களது இந்தியா தொடர்பான வெளியுறவு முயற்சிகள் தொய்வடைந்தன. அவர் தனது வெளியுறவுக் கொள்கையை எடுத்துச் செல்லும் மார்க்கத்தில் சிறிய ஒரு திருப்பத்தைக் கைக்கொண்டார். 1984 டிசம்பரில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் ராஜீவ் காந்தி அவர்கள் தலைமையிலான காங்கிரஸ் 538 ஆசனங்களில் 409ஐக் கைப்பற்றியது. ராஜீவ் காந்தி அவர்கள் மகத்தான வெற்றி பெற்றார். அவ்வேளை அமிர்தலிங்கம் அவர்கள் 1985 ஜனவரி 2ந் திகதி இந்தியப் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

"இலங்கையில் வாழும் 30 இலட்சம் தமிழர்களது பிரச்சினைகள் பற்றிய தீர்வு கடந்த இருவாரங்களாக ஸ்தம்பிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. இந்த ஸ்தம்பிதம் ஜனாதிபதி ஜயவர்த்தனா திடீரென சர்வகட்சி மகாநாட்டு நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வந்ததால் நிகழ்ந்துள்ளது. ஆறு தினங்கள் கழித்து அமைச்சரவை - சர்வகட்சி மகாநாட்டின் முன் ஜனாதிபதி வைத்த தீர்மானங்கள் யாவற்றையும் - தூக்கி வீசியுள்ளது (1984 டிசம்பர் 26). இந்த முடிவு ஒன்றரை வருடங்களாக இந்தியா எடுத்த முயற்சிகளை முற்றாக நிராகரித்துள்ளது." (தொடர்ந்த கடிதத்தின் முடிவில்)

"சர்வகட்சி மகாநாட்டில் முன் வைக்கப்பட்ட தீர்வுகள் தமிழ் பிரதேசங்களில் அரச பயங்கரவாதத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கக்கூடியதாக இருந்தன. சர்வகட்சி மகாநாட்டு முன்னெடுப்பு முன்னைய பிரதமர் மேன்மைதங்கிய ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களது நல்ல நோக்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது. அவர் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கும், அவர்களை இன அழிப்பில் இருந்து பாதுகாக்கவும் உதவும் என்பதற்காக சர்வ கட்சி மகாநாட்டின் செயல்பாட்டில் மிகவும் அக்கறை காட்டினார். நீங்கள் கடந்த டிசம்பர் மாதம் வெளியிட்ட அறிக்கைக்கும், தமிழ் மக்கள்மீது ஏவிவிடப்பட்டுள்ள

அக்கிரமங்களுக்கும் எதிராகத் தாங்கள் நிகழ்த்திய பேச்சுக்களுக்கும் நாங்கள் மிக்க நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். இலங்கை அரசும் தமிழ் மக்களும் பிரச்சினைகளைத் தீர்க்க உங்களை நாடுவதால், இன்றைய ஸ்தம்பித நிலையைப் போக்கக்கூடிய - அடக்கி ஒடுக்கப்பட்டு இன ஒழிப்புக்கு ஆளாகும் தமிழ் மக்கள் தங்களைப் பதுகாக்கக்கூடிய - புதிய முயற்சிகளை நீங்கள் எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். எங்களுக்கு இந்தியாவைத் தவிர வேறு உதவி இல்லை."

1985 ஜனவரி 13 ந் திகதி திரு. ஜி.பார்த்தசாரதி, பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களைச் சந்திக்க வருமாறு அமிர்தலிங்கம் அவர்களை டில்லிக்கு அழைத்தார். அடுத்த நாள் அமிர்தலிங்கம் அவர்கள் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்தார். அச்சமயம் இலங்கையில் தமிழர்களைச் சிங்கள அரசுகள் மாறிமாறி ஏமாற்றுவதையும், இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் படும் துன்பங்களையும் விபரமாக எடுத்துக் கூறினார். ராஜீவ் காந்தி அவர்களை அமிர்தலிங்கம் அவர்களது உணர்ச்சிமயமான வேண்டுகோள் கவர்ந்தது. அமிர்தலிங்கம் அவர்களது சாதுரியமான அணுகுமுறை நல்ல பலனைக் கொடுத்ததைப் பின்னர் அவதானிக்க முடிந்தது.

அமிர்தலிங்கம் அவர்கள் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்தமை இலங்கையில் பெரும் எதிர்ப்புச் சுவாலையை ஏற்படுத்தியது. அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அவரின் சந்திப்பைக் கண்டித்து 16ந் திகதி பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்தார். இலங்கையைத் துண்டாடித் தனி அரசு நிறுவ முனைபவர்கள் வெளிநாடுகளின் அரவணைப்பைப் பெறுகிறார்கள் என்று தனது அறிக்கையில் கண்டனம் வெளியிட்டார். அது விடயத்தை இலங்கை அரசு இந்திய அரசாங்கத்துக்கும் தெரியப்படுத்தியது.

அமிர்தலிங்கம் அவர்களது இராசதந்திர முயற்சிகள் காரணமாக ஜனவரி 18ந் திகதி டில்லியில் கடமை புரிந்த இலங்கைத் தூதுவர் பெனாட் திலகரத்தினவை அழைத்து தான் இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்க்க விரும்புவதாக பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் தெரிவித்தார். பெனாட் திலகரத்தினவை ஒரு தமிழர் விரோதி



என்று இந்திய ஹைகொமிசனர் ஜே.என்.தீக்சிற் முத்திரை குத்தியுள்ளார். அது விடயமாக இலங்கை ஜனாதிபதியைச் சந்திக்க விரும்புவதாகவும் கூறினார். ஆனால் ஜனாதிபதி ஜயவர்த்தன அவர்கள் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களைச் சந்திக்க விரும்பவில்லை.

திம்புக் கோட்பாடுகள்

1985 ஜனாதிபதி ஜயவர்த்தன பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலியை டில்லிக்கு அனுப்பினார். அத்துலத்முதலியின் வேண்டுகோட்படி பிரச்சினையைத் தீர்க்க புதிய முயற்சி மேற் கொள்ள ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் ஒப்புக்கொண்டார். அத்தோடு திரு. பார்த்தசாரதி அமிர்தலிங்கத்தோடு சேர்ந்து ஒரு பக்கச்சார்பாகத் தொழில்படுவதாகவும், வேறு ஒருவரை அவரின் இடத்துக்கு நியமிக்கும்படியும் வேண்டினார். அதற்கு ஒத்துக்கொண்ட ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் வெளிநாட்டுச் செயலாளர் திரு. றொமேஸ் பண்டாரியை பார்த்தசாரதியின் இடத்துக்கு நியமித்தார். அதனைப் போராளிக் குழுக்களும் அமிர்தலிங்கம் அவர்களும் விரும்பவில்லை. எனினும் இந்தியாவே பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என்று கூறிய அமிர்தலிங்கம் அவர்கள் 3 அம்சக் கோரிக்கையை முன்வைத்தார்:

1. பேச்சுவார்த்தைகளில் சகல போராளிக் குழுக்களும் கலந்து கொள்ள வேண்டும்.
2. பேச்சுவார்த்தை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெற வேண்டும்.
3. பேச்சுவார்த்தையை நிறைவேற்ற இந்தியா பொறுப்பு நிற்கவேண்டும்.

ஸ்ரீ ராஜீவ் காந்தியை மீண்டும் தமது பக்கம் திருப்பும் முயற்சியில் அமிர்தலிங்கம் ஜெயித்தார். 1985 மே மாதம் அமிர்தலிங்கம் அவர்களும் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. மு.சிவசிதம்பரம், திரு. இரா.சம்பந்தன் ஆகியோரும் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்தனர். திரு. றொமேஸ் பண்டாரியும் கலந்து கொண்டார். அவர்கள் இருவருக்கும் அமிர்தலிங்கம் அவர்கள் அரசியற்கள நிலைமைகளை எடுத்துக்கூறி போராளிக் குழுக்களையும்

பேச்சு வார்த்தைகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறி அதற்குரிய நியாயங்களையும் முன்வைத்தார். ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் அவரது வாதத்தைப் பூரணமாக ஏற்றுப் போராளிக் குழுக்களையும் சேர்த்துக்கொள்ளச் சம்மதித்தார். போராளிக் குழுக்கள் தன்மீது அபாண்டங்களைச் சுமத்திய பொழுதும், அதனைப் பொருட்படுத்தாமல் மக்களின் சுபீட்சத்தை முதன்மையாகக் கருதி அவர்களையும் பேச்சு வார்த்தைகளில் ஒன்றிணைத்துச் செல்லவிரும்பினார். போராளிக் குழுக்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வழிவகுத்த அமிர்தலிங்கம் அவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை போராளிக் குழுக்கள் விரும்பவில்லை. இக்கால கட்டத்தில் விடுதலைப் புலிகள், ரெலோ, ஈறோஸ், ஈ.பி.ஆர்.எல்.எ∴ப் (LTTE, TELO, EROS, EPRLF) அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து ஈழம் தேசிய விடுதலை முன்னணி (ENLF) என்ற அமைப்பை உருவாக்கின. அந்த அமைப்பு யூன் 29ந் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இலங்கைத் தமிழர்களின் சட்டப்படியான தலைவர்கள் தாம் என்பதைத் துறக்க வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டது. இந்த அறிக்கை இலங்கையில் பெரிதும் பத்திரிகைகளால் வரவேற்கப்பட்டது. ஏனெனில் போராளிகளைப் பேச்சு வார்த்தைகளில் சுலபமாக ஏமாற்ற முடியும், ஆனால் அமிர்தலிங்கம் அவர்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் இலகுவில் எமாற்ற முடியாதென்ற காரணத்தினாலேயே. ஆயுத இயக்கங்கள் அமிர்தலிங்கம் அவர்களைக் களத்திலிருந்து ஒதுக்குவதற்கு முதன்மை கொடுத்தார்களே தவிர, தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதன்மை கொடுக்கவில்லை. இதனை அவர்களின் தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடென்றே புத்தி ஜீவிகளால் கருதப்பட்டது.

யூன் 1ந் திகதி திரு.ஜயவர்த்தன டில்லியில் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்தார். அந்தப் பேச்சு வார்த்தைகள் திம்பு பேச்சு வார்த்தைக்கு வழி திறந்தன. பூட்டானில் உள்ள திம்புவில் 1985 யூலை 10ந் திகதி முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தை தொடங்கியது. இந்தப் பேச்சுவார்த்தையை திரு. றொமேஸ் பண்டாரியே ஒழுங்கு படுத்தினார். இந்திய அரசு அமிர்தலிங்கம் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கக் கூடாது என்றும், அவரைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கக்கூடாது என்றும்



விடுதலைப் புலிகள் புதுடில்லித் தலைவர்களுக்குத் தெரிவித்தனர். அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி மக்களால் தெரிவு செய்யப்பட்டது என்றும் அவர்களுக்கே பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள உரிமை உண்டென்றும் கூறித் திரு.பிரபாகரனின் வேண்டுகோளை நிராகரித்தனர். அமிர்தலிங்கம் அவர்களின் தலைமைத்துவத்துக்கு எதிரான இந்த வன்மமே இறுதியில் அவரின் முடிவைப் பதிவு செய்தது. அந்தச் செய்தி இரண்டாம் பாகத்தில் விரிவாகச் செல்லப்பட்டுள்ளது. திம்பு மகாநாட்டில் இலங்கை அரசும், தமிழர் விடுதலைக் கூட்டணியோடு பேராளிக் குழுக்களும் கலந்து கொண்டன. அதாவது விடுதலைப் புலிகள், ரெலோ, ஈறோஸ், ஈ.பி.ஆர்.எல்.எ∴ப் என்பனவற்றை அடக்கிய ஈழம் தேசிய விடுதலை இயக்கமும், புளோட் (PLOTE) இயக்கமும் கலந்து கொண்டன.

இலங்கையின் குழுவுக்கு திரு. ஏச்.டபிள்யூ. ஜயவர்த்தன தலைமை தாங்கினார். இவர் ஜனாதிபதி ஜயவர்த்தனவின் சகோதரர். ஒரு சட்ட வல்லுநர். போராளிக் குழுக்கள் சார்பில் தலா இரு பிரதிநிதிகளும், கூட்டணி சார்பில் திருவாளர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். போராளிக் குழுக்களின் தலைவர்களில், விடுதலைப் புலிகளின் தலைவரைத் தவிர, ஏனையவர்கள் கலந்து கொண்டனர். ஜயவர்த்தன ஐக்கியப்பட்ட ஒற்றையாட்சிக்கு உட்பட்ட பரவலாக்க தீர்வே ஏற்கப்படும் என்று கூறியதோடு அந்தக் கூட்டத்தில் மொழி, கல்வி, தொழில் சம்பந்தமான பேச்சை பற்றிய கருத்தை மட்டும் முன்வைக்கும்படி கேட்டார். அப்பொழுது போராளிகள் பக்கத்தில் மௌனம் நிலவியது.

அமிர்தலிங்கம் அவர்கள் தாம் அது பற்றிப் பேசவரவில்லை அதெல்லாம் சர்வ கட்சி மகாநாட்டில் கதைத்து முடிந்து விட்டது - நிருவாகத்தைப் பரவலாக்குதல், அது எந்த எந்த துறைகளை அடக்க வேண்டும், அதிகாரப் பிரிப்புப் பற்றியே பேச வேண்டும் என்றார். முன்னர் அரசு வழங்கிய தீர்வுகளை மக்கள் நிராகரித்து விட்டார்கள் அதனைக் கருத்தில் எடுத்து அரசாங்கமே பொருத்தமான தீர்வை முன்வைக்க வேண்டும் என்றார். அவர் பேசுவதை போராளிக் குளுக்களின் தலைவர்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போராளிக் குழுக்கள் ஒரு நாலம்சத்திட்டத்தை முன்வைத்தார்கள். அதுவே திம்புக் கோட்பாடுகள் எனப்படும். அதனை அரசு அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அந்த 4 அம்சங்கள்:

1 தமிழர்கள் தனித்த தேசிய இனம்.

2 வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகம்.

3 தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்.

4 இலங்கையைத் தாய் நாடாகக் கொள்ளும் அடிப்படை உரிமை எல்லாத் தமிழருக்கும் இருக்க வேண்டும்.

இலங்கைக் குழுவின் தலைவர் ஏச்.டபிள்யூ.ஜெயவர்தனா நாலு கோரிக்கைகளையும் நிராகரித்தார். இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை ஆரம்பத்தோடு திம்புப் பேச்சுவார்த்தை முடிவுற்றது. இதற்கு முக்கிய காரணம் இலங்கை அரச தரப்பில் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என்ற கரிசனை இன்மையே.

தொடர்ந்தும் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு அழுத்தம் கொடுத்தார். அக்கால கட்டத்தில் இந்தியாவில் முகாமிட்டிருந்த தமிழர் போராளி அமைப்புகளைப் பேச்சுக்கு வருமாறு புதுடில்லிக்கு அழைத்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியும், 'புளட்' போராளிக் குழுவும் மட்டுமே சென்றன. அமிர்தலிங்கம் அவர்கள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளக்கூடாது என்று போராளிக் குழுக்கள் அறிக்கை வெளியிட்டன. அதனை அடுத்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் 'ரெலோ' தலைவர் ஸ்ரீசபாரத்தினமும் தலைமறைவாகினர். அமிர்தலிங்கம் அவர்கள் பேச்சுக்களில் கலந்து கொள்வதை வன்மையாக எதிர்த்தவர் திரு.பிரபாகரன். அவரின் தொடர்ந்த எதிர்ப்பின் பொழுது அமிர்தலிங்கம் அவர்களுக்கு 1987 பெப்புருவரியில் பிற்பகுதியில் மயிலிட்டியில் வைத்து மரணதண்டனை விதித்ததாக கே.ரி. இராசசிங்கம் தனது இணையதள நூலில் கூறியுள்ளார்.



# அதிகாரம் 44

## தொல்லை தீர்ந்ததென்று போய்விடுவேன்

1985 செப்டம்பர் 2ந் திகதி இரவு போராளிகள் உடுவில்-மானிப்பாய் தொகுதிகளின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.தர்மலிங்கம், முன்னாள் கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆலாலசுந்தரம் ஆகிய இருவரையும் கடத்திச் சென்று சுட்டுக் கொன்று, தர்மலிங்கம் அவர்களது சடலத்தை தாவடி மயானத்தில் வீசிவிட்டு, ஆலாலசுந்தரம் அவர்களது உடலை எடுத்துச் சென்று நல்லூர் வீதியில் வீசினார்கள். (இரண்டாம் பாகத்தில் விபரமாக உள்ளது)

அமரர்கள் தர்மலிங்கம் ஆலாலசுந்தரம் அவர்களது கொலைகள் நடந்தபொழுது அமிர்தலிங்கம் அவர்கள் இந்தியாவில் சென்னையில் வாழ்ந்தார். மறைந்த தலைவர்களுக்குத் தமிழகத்தில் சென்னையில் உள்ள பெரியார் திடலில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. அதில் தமிழகத் தலைவர்களைத் தவிர, தமிழ் ஈழ இளைஞர்களும் போராளிகளும் ஏராளமாகக் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினார். அவர் மிகவும் காரசாரமாக கண்டனக்கணைகளை வீசுவார், அழுது குழறுவார் என்று சபையோர் எதிர்பார்த்தனர். ஆனால் அவர் மிகவும் நிதானமாகத் தூரப்பார்வையோடு அந்தப் பேச்சை நிகழ்த்தினார். அவரது கருத்துக்கள், சிந்தனைகள், தத்துவங்கள், பார்வைகள் - அவரது நீண்ட அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடாக அமைந்திருந்தன. அவர் கூட்டத்தில் பேசும் பொழுது கூறினார்:

"மறைந்த தலைவர்கள் தர்மலிங்கம் ஆலாலசுந்தரம் இருவரும் தமிழ் ஈழ சுதந்திரப் போராட்டத்தில் கால் நூற்றாண்டு காலத்துக்கு மேலாகத் தடம் பதித்தவர்கள். போராட்ட களத்தில் அவர்களது குணங்களை, போராட்டங்களை, சிறைவாசங்களை, துன்பங்களை அறிந்தவன் - சேர்ந்து அனுபவிக்கும் சந்தர்ப்பங்களைப் பெற்றவன் என்ற வகையிலே அவர்களது இழப்பை மிகமிக ஈடுசெய்ய முடியாது என்று கருதுகிறேன். மயானத்தில் வீசிய அவர்களது படுகொலை செய்யப்பட்ட சடலங்களுக்கு அருகில் 'காட்டிக் கொடுப்பவர்களுக்கு

- தாயக மீட்புக்கு எதிரான துரோகிகளுக்கு - இதுதான் தண்டனை' என்று எழுதிய அட்டைகள் காணப்பட்டதாகப் பத்திரிகைகளில் படித்தபோது என் மனம் பதைத்தது. இந்த அநியாய செயலைச் செய்தவர்கள் தமிழ் ஈழ விடுதலைமீது அக்கறை கொண்டவர்களாக இருக்க முடியாது. இன்றைய எமது தாயக தாகம் திடீரென்று முளைத்து எழுந்தது ஒன்றல்ல. அதன் வரலாறு அறிந்தவர்கள் அப்படியான ஒரு கொடிய செயலை நினைத்துப் பார்க்கமாட்டார்கள்.

"இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில், சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் தேசிய காங்கிரசை அமைத்து அதன் முதல் தலைவராக இருந்து - தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள், பறங்கியர் என்று பேதமற்று ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் போராடவேண்டும் என்ற கருத்தை முன்வைத்த காலம் ஒன்று இருந்தது. கட்சி அரசியல் - ஒரு மொழி, ஒரு மதம், ஒரு இனம் என்ற அடிப்படையில் செயல்படத் தொடங்கிய நிலையில், தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்துத் தோன்றியது. தமக்கு என்று ஒரு பிரதேசம் உண்டு, வேண்டும் என்ற நிலை அப்போதிருக்கவில்லை. இலங்கை முழுவதும் உள்ள தமிழ் மத்தியதர உத்தியோக வர்த்தக வகுப்பாரது நலன்களைப் பேணவேண்டும் என்ற கருத்திலேயே கருத்து முன்வைக்கப்பட்டது."

"இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்து ஆறு மாதகாலத்துள் குடியுரிமை சட்டங்கள் மூலம் மலையக தமிழர்களை நாடற்றவர்களா கவும், அடுத்த வருடம் வேறு சட்டங்கள் மூலம் வாக்குரிமை அற்றவர்களாகவும் ஆக்கினர். அச்சமயம் திருவாளர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் இணைப்பாட்சி அடிப்படையில் தமிழர்களுக்குத் தாயகம் வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். தமிழ் மக்கள் தன்னாட்சி பெற்றால் அன்றி எமக்கு வாழ்வில்லை, தமிழ் இனம் அழிந்துவிடும் என்று பிரசாரம் செய்தோம். நான் அப்பொழுது 20 வயது மாணவன். அவர்களோடு சேர்ந்து உழைத்தேன். ஆரம்பத்தில் கூட்டம் வைக்கச் சென்றவிடங்களில் கல்மாரிக்கு இலக்கானோம். எத்தனையோ துன்பங்களுக்கு ஆளானோம். 1952ஆம் ஆண்டுத் தேர்தலில் எங்களது வேட்பாளர்கள் பெரும்பாலும் தோல்வியடைந்தார்கள். கோப்பாயில் வன்னியசிங்கம் அவர்களும் திருகோணமலையில் இராசவரோதயம் அவர்களும் மட்டுமே வெற்றி



பெற்றார்கள். செல்வநாயகம் அவர்கள் காங்சேன்துறையில் தோல்வி அடைந்தார். அவ்வளவு தூரத்துக்கு எமக்குத் தமிழ்த் தாயகம் வேண்டும் என்ற குரலை மக்கள் நிராகரித்த காலம் ஒன்று உண்டு."

"அக்காலத்தில் ஆலாலசுந்தரம் 15 வயதுச் சிறுவன். ஆனால் எங்களது மேடைகளில் தோன்றிப் பேசினார். தர்மலிங்கம் அவர்கள் உடுவில் கிராம சபைத்தலைவராக இருந்தவர். தந்தை செல்வநாயகத்துக்காக உழைக்கத் தொடங்கினார். 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் ஈழ தாயக தாகத்தை விதைத்து வளர்க்க யார் உழைத்தார்களோ அவர்களது நெஞ்சுகளுக்கு நேரே துப்பாக்கிகளை நீட்ட எப்படி மனம் வந்தது? நிட்சயமாக வேதனையால் துவண்டு போகாமல் இருக்க முடியாது. யார் தூண்டி விட்டார்கள் என்று நான் சொல்லிவிட்டுப் போக வரவில்லை. யாரையும் நான் ஏமாற்ற விரும்பவில்லை. நம்மவர்கள்தான் செய்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இதைச் செய்தவர்கள் அரசியல் வரலாறு-தெரியாதவர்களாக இருக்கலாம். அதைத் தூண்டிய சக்தி எது? தமிழ் ஈழம் என்ற மரத்தை விதையாக மண்ணில் போட்ட நேரத்தில் பாதுகாவலாக இருந்தவர்களை, அது முளைத்து வளர்ந்து கனி கொடுக்கும் வேளையில் யாராவது அவர்களைத் துரோகிகள் என்று கூறத் துணிவார்களா? எனக்கு யார் மீதும் கோபம் இல்லை. ஆனால் இந்தச் செயல் எங்கே போய் முடியப் போகிறது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்? நமக்குள்ளே நாம் மோதத் தொடங்கினால் ஆளுவோருக்கு வாய்ப்பாகப் போய்விடும். திருகோணமலையில் சம்பந்தனின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. உடன் இலங்கை வானொலி அதனை ஒரு தமிழ் இயக்கத்தை சேர்ந்தவர்கள் செய்ததாகப் பிரசாரத்தில் இறங்கியது. அதனை யார் செய்தார்கள் என்பது எமக்குத் தெரியும். அவர்கள் இராணுவத்தினர் என்பதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை. இதிலிருந்தாவது நாம் படிக்க வேண்டும். நமக்குள்ளே நாம் மோதிக் கொள்வது இனவெறியன் ஜயவர்த்தனவுக்கு வாய்ப்பாகப் போய்விடும். அவன் அதனை உலகத்திற்குக் காட்டித் தான் தப்பிக்கொள்ள இடம் கொடுக்கக்கூடாது. அயர்லாந்தில் விடுதலைக்காகப் போராடியவர்களிடையே பிளவு ஏற்பட்டு, இரண்டு கோஷ்டியாக மோதத் தொடங்கிய பொழுது, அதனைச் சாட்டாகக்கொண்டு பொலிஸ் படை வீடுகளுக்கு இரவில்

சென்று கதவில் தட்டி கொலை செய்யத் தொடங்கியது. ஒருகுழுவைச் சேர்ந்தவர் ஓரிரவு கொலை செய்யப்பட்டால், அடுத் நாள் இரவு அடுத்த குழுவின் ஒருவர் கொலை செய்யப்பட்டார். தினமும் இப்படியே நடந்தது. இறுதியில் அயிரிஸ் குழுக்கள் சந்தேகத்தில் தங்களுக்குள் மோதத்தொடங்கின. அயிரிஸ் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இருந்தாவது நாம் படிக்கவேண்டியதைப் படிக்கவேண்டும். அழுது புலம்ப நான்வரவில்லை. இதுவரை எம்மில் எத்தனையோ அப்பாவிகள் இறந்துள்ளார்கள்? எத்தனையோ அரசியலை பற்றிச் சிந்திக்காதவர்களே மரணித்துள்ளார்கள். எத்தனையோ வாழவேண்டிய மக்கள் வாழ முடியாமல் தவிக்கிறார்கள். இளங்குருத்துக்கள் கருகி உள்ளன. தாய்மார்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர். சாவே சதமாகி விட்டது. மரணத்தின் விளிம்பில் மக்கள் தத்தளிகிறார்கள். இந்த நேரத்தில் இருவர் இறந்ததற்காக நான் கவலைப்படவில்லை."

"தர்மலிங்கம் அவர்களது மகன் சித்தார்தன் தனது தந்தை கொலை பற்றி என்ன சொன்னார்? 'எனது தந்தை சிங்கள இராணுவத்தின் அல்லது சிங்கள வெறியன் கையால் கொலை செய்யப்பட்டிருந்தால் கவலைப்பட்டிருக்கமாட்டேன். எம்மவர்கள் சுட்டதால் அவர் தியாகி ஆகி விட்டார்' என்று கூறினார்."

"உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும் இதைச் செய்தவர்கள் யார் என்று. அதற்காக அவர்களை நான் கோபிக்கவில்லை. இந்த நிலையில் இனவெறியன் ஜயவர்த்தனா எமது பிரிவினைகளைப் பயன்படுத்தி எம்மை அழிக்க வாய்ப்பாகிவிடும். எமது இளைஞர்கள் இந்த அநியாயமான படுகொலையில் இருந்து படிக்க வேணடியதைப் படிப்பார்களானால் பயனுள்ளதாக இருக்கும். இவர்களது இறப்பில் இருந்து ஒற்றுமைப்பட்டு செயல்பட வேண்டிய அவசியத்தை உணர்வார்களானால், அவர்களது மரணம்கூட எமது இனத்தின் விடிவுக்குப் பயன்பட்டது என்று நான் கூறுவேன். இங்கு இளைஞர்கள் இருக்கிறீர்கள். நீங்கள் இந்தச் செய்தியை உங்கள் தோழர்கள் எல்லோருக்கும், சகாக்கள் எல்லோருக்கும் எடுத்துச் சென்று சொல்லுங்கள்."

"தர்மலிங்கம் கோபிக்கத் தெரியாதவர். பகைவர்கள் இல்லாதவர். என்னிலும் பத்து வயது மூத்தவர். பார்த்தால் என்னிலும் இளமையாகத்



தெரிவார். கவலையற்ற வாழ்க்கை வாழ்ந்தவர். எப்பொழுதும் புன்னகை பூத்த முகம். அவரைப் படுகொலை செய்து மயானத்தில் போடுமளவுக்கு எமது உள்ளம் மரத்துவிட்டால் நாம் யாருக்காகப் போராடுவது?"

"இன்று எமது போராட்டம் உலகம் முழுவதின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. இந்திய அரசு கடந்த சில ஆண்டுகளாக மிக அக்கறைகொண்டு செயல்பட்டு வருகிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நாம் ஆதரவு தேடி தமிழகம் வந்தோம். திரு.செல்வநாயகம் அவர்களோடு நானும் வேறு சிலரும் வந்தோம். ஜனார்த்தனம்தான் எங்களுக்கு உதவிபுரிந்தார். நமது நாட்டு நிலைமையைப் புரிந்தவர்கள் இல்லாத காலம். "பிழைக்கப் போனவிடத்தில் ஏன் இந்த வம்பு? அங்கு தனி நாடு கேட்பதா? சென்றவிடத்தில் கூடிவாழப் பழகுங்கள்" என்று பலர் புத்திமதி கூறினார்கள். இந்திய மத்திய அரசும் எமக்கு எதிராக இருந்தது. நாங்கள் தொடர்ந்து முயன்றோம். அந்த நிலைமைகள் எல்லாம் மாறி இன்று தமிழகமும் மத்திய அரசும் உதவி செய்ய ஆயத்தமாக உள்ளன. அதனை நாம் இழக்கவேண்டாம். பாலஸ்தீனத்துக்கு அடிப்படைப் பலம் அரபு நாடுகள். அதன் தளத்தில் நின்று உலக நாடுகளின் ஆதரவை, அனுதாபத்தைப் பாலஸ்தீனம் திரட்டியது. பல நாடுகளின் ஆதரவைப் பெற்றது. ஐக்கிய நாடுகள் தாபனத்திலும் இடம் பெற்றது. எமக்கு அடிப்படையான ஆதரவு தமிழகம். அதனை ஒட்டி இந்தியா. இந்தியா இல்லாவிட்டால் உலக அரசுகளின் ஆதரவைத் திரட்டி இருக்க முடியாது. தமிழகமும் இந்தியாவும் இல்லையானால் நாம் உலக அரங்கிற்கு வந்திருக்க முடியாது. கொலை புதுடில்லியிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. கேரளத்திலும், புதுடில்லியிலும் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் ஆற்றிய உரை, இந்த இருவரது கொலைகளும் அவரது உள்ளத்தில் ஏற்படுத்தி உள்ள தாக்கத்தைக் காட்டுகிறது. சிலர் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பயப்படுத்த இக்கொலை செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். இதனைக்கண்டு நாம் பின்வாங்குவோம் என்று கூறினால் நாம் எப்பவோ ஒதுங்கி இருப்போம். 1972 ஆம் ஆண்டு, சிங்கக் கொடியை எரித்த இளைஞர்களைத் துரத்தி வந்த பொலிஸ்காரனைத் தடுத்து சேட் 'பட்டனைக்' கழற்றி என் நெஞ்சைக்காட்டி இயலுமானால் சுட்டுவிட்டுப் போ என்று தெரிவித்தவன்

நான். நாங்கள், என்று விடுதலைக் களத்தில் இறங்கினோமோ அன்றே மரணம் வரும் என்றுதான் இறங்கினோம். எனக்கு ஏதும் நடந்தால் என் தொல்லை முடிந்தது என்று போய்விடுவேன். எனக்கு என்ன நட்டம்? தர்மலிங்கம் மரணித்துவிட்டார். அவருக்கு என்ன நட்டம்? ஆலாலசுந்தரத்துக்கு என்ன நட்டம்? மரணத்தைக் கண்டு அஞ்சுவார்கள் என்று எண்ணி எம்மை வெருட்ட நினைக்கக்கூடாது. அங்கே, யாழ்ப்பாணத்தில் இலட்சியத்தைக் கடந்து வெறியாட்ட நிகழ்வு நடக்கிறது."

பெரியார் திடலில் அமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றிய உரை, அவரது இளமைக்கால உணர்ச்சி பொதிந்த தர்க்க வாதங்களை ஒட்டாத செய்தியாகவும் - "எனக்கு ஏதும் நடந்தால் என் தொல்லை முடிந்தது என்று போய்விடுவேன். எனக்கு என்ன நட்டம்? தர்மலிங்கம் மரணித்து விட்டார். அவருக்கு என்ன நட்டம்? ஆலாலசுந்தரத்துக்கு என்ன நட்டம்?' - என்ற அவரின் வாய்மொழி ஆன்மிகத்தை நோக்கிய சிந்தனையாகவும் அமைந்து, அவரை அடிமுடிகாண முடியாத விஸ்வருபியாக கோலமிட்டுத் தரிசனத்துக்கு வைக்கிறது.

# அதிகாரம் 45
# மூன்று முக்கிய அடிப்படை அம்சங்கள்

1985 அமிர்தலிங்கம் அவர்களது வெளியுறவுக் கொள்கை ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையாரின் மறைவையடுத்து சிறிது தொய்வடைந்தது. அது நீடிக்கவில்லை. விரைவிலேயே புதிய கோணத்தில் வேகம் பெறத் தொடங்கியது. அவர் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் என்ற வகையில் எழுத்து மூலமாக இலங்கைத் தமிழர்களது குறைகளை வரலாற்று ஆதாரங்களோடு ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்குச் சமர்ப்பித்தார். இந்திய தரப்பில் இலங்கைத் தமிழர்களது பிரச்சினைகள் சரிவரப் புரியப்படாத காரணத்தால் எழுத்து மூல முயற்சி இன்றியமையாததாக இருந்தது. இந்தியப் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்கு மொத்தமாக 14



கடிதங்கள் வரைந்திருந்தார். இக்கடிதங்கள் இலங்கையின் - விசேடமாக வடகிழக்கின் - அரசியல் வரலாற்றைத் தெளிவுபடுத்துவனவாக இருந்ததோடு, தமிழர்களது நாற்பதாண்டு காலப் பிரச்சினைகளைச் சொல்வனவாகவும், அதற்கு எப்படியான தீர்வு தேவை என்பதைக் கூறுவனவாகவும் அமைந்திருந்தன. அமிர்தலிங்கம் அவர்கள் பிரதம ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்குக் கடித மூலம் தெரிவித்த கருத்துக்களை முறியடிக்கும் விதத்தில் ஜனாதிபதி ஜயவர்த்தன ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தார். இருபகுதிக்கும் இடையில் - இந்தியப் பிரதமரைத் தம்பக்கம் இழுப்பதில் ஒரு வெற்றிகாண முடியாத கயிறிழுப்புப் போட்டி நிலவியது. அமிர்தலிங்கம் அவர்களுக்குப் பக்க பலமாக திருவாளர்கள் மு.சிவசிதம்பரம், இரா. சம்பந்தன் ஆகியோர் நின்றனர்.

1985 செப்டம்பர் மாதம் 9ந் திகதி அமிர்தலிங்கம் அவர்கள் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் தமிழ் மக்களின் மூன்று அடிப்படைக் கோரிக்கைகளைத் தெளிவாக எழுதி இருந்தார். அவை சிதையாத தமிழர் தாயகம், நிலஞ் சம்பந்தமான அதிகாரப் பங்கீடு, உள்நாட்டுச் சட்டமும் ஒழுங்கும் என்பன. அந்த நீண்ட கடிதத்தின் தமிழர் தாயகம் பற்றிய முக்கிய பகுதிகள் மட்டும் தரப்படுகின்றன:

"தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒரு திட்டத்தைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தங்களுக்கு நாங்கள் என்றும் ஆழ்ந்த நன்றி உடையவர்களாக இருப்போம். இலங்கை அரசு ஒத்துவர மறுக்கும் மூன்று அடிப்படைக் கேள்விகள் உள்ளன. அவற்றைத் தங்கள் சமூகத்துக்குச் சமர்ப்பித்து அதில் விட்டுக்கொடுப்புக்கள் செய்ய முடியாதென்பதையும் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்."

"பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் தொடக்கம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்களுடைய பாரம்பரிய தாயகமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. பிரித்தானியர் கரையோரங்களைக் கைப்பற்றிய பொழுது அதுவே யதார்த்தநிலை. சேர் ஹியூஜ் கிளெஹோர்ன் லண்டன் குடியேற்ற அலுவலகத்துக்கு அனுப்பிய நிர்வாகக் குறிப்பில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:"

"பண்டைக் காலத்தில் தொடக்கம் இரண்டு வேறுபட்ட இனங்கள் இந்த நாட்டைப் பிரித்து வைத்திருக்கின்றார்கள். சிங்களவர்கள் தெற்கிலும் மேற்குப்பகுதிகளிலும் வளவ கங்கை தொடக்கம் சிலாபம் வரை வாழ்கின்றார்கள். மலையாளிகள் (தமிழரைக் குறிக்கப் பயன்படுத்தி உள்ளார்) வடக்கிலும் கிழக்கிலும் உள்ளார்கள்."

"ஆங்கிலேய ஆட்சிக் காலம் முழுவதும், சுதந்திரத்தின் பின்னரும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தனித்த நிர்வாகப் பிரிவுகளாகவே கொள்ளப்பட்டன. 1972, 1978 அரசியல் யாப்பிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒரு மொழி அலகாகவே கொள்ளப்பட்டன. உள்ளூர் ஆட்சிச் சபைகளிலும் நீதி நிர்வாகத்திலும் தமிழ் மொழியை நிர்வாக மொழியாகக் கொள்ளலாம் எனக் கூறப்பட்டது. இவை தமிழ் பேசும் மாகாணங்களாகும். வடமாகாணத்தில் சனத்தொகையில் 97 சதவீதம் தமிழ் பேசுவோர் உள்ளனர். கிழக்கு மாகாணச் சனத்தொகையில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் 75 சதவீதம். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டிலும் சேர்த்துத் தாய் மொழியைத் தமிழ் மொழியாகக் கொண்டவர்கள் 86 சதவீதம். இந்தியாவில் மொழி வழியாக அரசுகள் அமைக்கப்பட்டுப் பிரச்சினைகள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ் பேசும் இரண்டு மாகாணங்களும் ஒரே அலகாக இணைக்கப்படவேண்டும்."

"தமிழ்த் தலைவர்களுக்கும் சிங்களக் கட்சிகளுக்கு மிடையில் 1957, 1960, 1965 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களிலும் இந்த இரு மாகாணங்களையும் சிதையாமல் இணைத்த அடிப்படையிலேயே ஒப்புதல்கள் அமைந்திருந்தன."

"தமிழர்களுடைய உயிர் உடைமைப் பாதுகாப்பிற்காகவும் வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைத்து, அதனைத் தமிழர் தாயகமாகப் பேணுவது அவசியமாகிறது. ஒவ்வொரு இனக்கலவரத்தையும் அடுத்து தமிழர்கள் இப்பிரதேசங்களுக்கு ஓடிவந்து அங்கு நிரந்தரமாகக் குடியேறி உள்ளார்கள். 1958, 1977, 1981, 1983 ஆண்டுகளில் தென் இலங்கையில் நடந்த இனக்கலவரங்களை அடுத்து அகதி முகாம்களில் இருந்த நூறாயிரக்கணக்கான மக்களை அரசு கப்பல்களில் ஏற்றி வடமாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் அனுப்ப வேண்டி



இருந்தது. 1977 தொடக்கம் தொடர்ந்த தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட இன அழிப்புக்கள் காரணமாகச் சிங்களப் பிரதேசங்களில் உள்ள தோட்டப் பகுதிகளில் வாழ்ந்த 2 இலட்சம் தமிழர்களும், மற்றும் பகுதிகளில் வாழ்ந்த பலவாயிரம் தமிழ் மக்களும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிரந்தரமாகக் குடியேறி உள்ளனர். குடியேறிய பிரதேசங்கள் இலங்கைப் படைகளின் அழிப்புக்கு இலக்கான பொழுது அவர்கள் கடலைக் கடந்து தென் இந்தியாவுக்கு ஓடினார்கள். 1983இன் முன்னர் இனக் கலவரங்களின் பொழுது தமிழ் மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாக ஓடவில்லை. ஏன் என்றால் மற்றைய ஏழு மாகாணங்களிலும் வாழ்ந்த தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று அங்கு வாழக்கூடியதாக இருந்தது. அகதிகளாக இலங்கையைவிட்டு வெளியேறிய மக்கள் திரும்பிச் சென்று பாதுகாப்பாக வாழ்வதற்கு இரு மாகாணங்களும் இணைந்திருப்பது அவசியம். தமிழர்களுக்குப் போதிய அதிகாரம் உடைய அரசு அங்கு அமைய வேண்டும்."

"வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரதானமாகத் தமிழ் மக்கள் வாழ்ந்த வரலாற்றையுடைய பிரதேசங்களாகும். 1921 சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களின் சகல மாவட்டங்களிலும் (யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு) தமிழ் மக்களே பெரும்பான்மையாக வாழ்ந்தனர். கிழக்கு மாகாணத்தின் சிங்களவர் சனத்தொகை 5 சதவீதத்திலும் குறைவாகவே இருந்தது. சுதந்திரத்தின் பின்னர் தமிழ் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் அரசாங்கத்தின் திட்டமிட்ட முயற்சிகளினால் தமிழர்களுடைய சனத்தொகைச் சதவீதம் பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளது. எப்படி இருப்பினும் இன்று வடமாகாணத்தில் தமிழ் மக்கள் 2.5 சதவீதமாகவும், கிழக்கு மாகாணத்தில் 42.1 சதவீதமாகவும் உள்ளனர். மொத்தமாக வடகிழக்கு மாகாணங்களில் 68.70 சதவீத தமிழ் மக்கள் வாழ்கிறார்கள்."

"1981இல் நடந்த மாவட்ட சபைத் தேர்தல்களில் தமிழ் மக்கள் ஜனநாயக வழிமுறையில் இந்தப் பிரதேசங்களைத் தமிழர் தாயகமாகத் தெரிவித்துள்ளார்கள். அம்பாறை மாவட்டம் தவிர்ந்த சகல மாவட்டங்களிலும் - யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு - தமிழர் விடுதலைக் கூட்டணியே

பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றது. அம்பாறையில் குடியேற்றத் திட்டம் காரணமாக எமக்குப் பாதிப்பு இருந்தது. திருகோணமலை மாவட்டத்தில் எமக்குக் கிடைத்த பரிபூணவெற்றி முஸ்லிம் மக்களும் தமிழர்களுடன் இணைந்து செயல்படுவதைக் காட்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றில் இரண்டு பங்குகளுக்கு மேற்பட்டவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்தனர். திருகோணமலை மாவட்டத்தில் 1977 ஆம் ஆண்டில்தான் முதன்முதலில் ஒரு சிங்களவர் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். புவியியல் தொடர்புக்காக தமிழ் மொழி அடிப்படையிலான அலகில் திருகோணமலை மாவட்டம் அடங்க வேண்டும்."

"டாக்டர் ஏச்.டபிள்யூ. ஜயவர்த்தன திம்பு மாகாநாட்டில் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் 30 சதவீத நிலப்பரப்பையும், 60 சதவீத கரையோரக் கடற்பரப்பையும் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார். வடகிழக்கு முழுவதும் வரண்ட வலயத்தில் உள்ள பெருமளவுக்கு அபிவிருத்தி செய்யப்படாத நிலப்பிரதேசம். இந்தப் பிரதேசத்துள் பெருமளவு நிலப்பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட்டு நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டு அங்கு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள் ளார்கள். அவை பதவியா, அல்லை, கந்தளாய், பாவற்குளம், மகாவிளான்குளம், கல்ஓயா என்பன. வடகிழக்கிற்கு வெளியே உள்ள குடியேற்றத் திட்டங்களில் தமிழர்கள் எவரும் குடியேற்றப்படவில்லை. அம்பாறையில் பெரும் பகுதியில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள் ளார்கள். வடகிழக்கிற்கு வெளியே தமிழர்கள் சொத்து வைத்திருப்பதோ உழைப்பதோ முடியாதகாரியமாக மாறி உள்ளது. இரு மாகாணங்களையும் இணைப்பதினால் சிங்களவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது."

மேலும் அக்கடிதத்தில், வடகிழக்கில் உள்ள நிலம் தொடர்பான அதிகாரத்தைப் பங்கிடுவது பற்றியும், உள்ளூர் சட்டம் ஒழுங்கு அதிகாரம் பற்றியும் சட்ட நுணுக்கமான கருத்துக்கள் முன்வைக்கப் பட்டிருந்தன. சுருக்கமாகச் சொல்வதாயின் நிலத்தை நிருவகிக்கும் அதிகாரமும், சட்ட ஒழுங்கு அதிகாரமும் மாநில அரசுக்குப் பாரப்படுத்த வேண்டும் என்பதாகும். இதே விடயங்கள் தொடர்பான இன்னொரு கடிதத்தை டிசம்பர் முதலாந் திகதி ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்கு அமிர்தலிங்கம் அவர்கள் அனுப்பினார்.



அமிர்தலிகம் அவர்கள் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்குத் தெரிவித்த கருத்துக்களைப் பொய் புரட்டு மிகைப்படுத்திக் கூறியது என்று நிராகரித்து ஜனாதிபதி ஜயவர்த்தன இந்தியப் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார். அதில் தமிழ் அறிஞர்கள் எழுதிய தமிழர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை, அமிர்தலிங்கம் அவர்களது கோரிக்கைக்கு எதிராகக் காட்டி ஒட்டுமொத்தமாக நிராகரித்தார்.

'தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்வைப்புக்கள் பற்றிய அவதானிப்புக்கள்' என்ற தலைப்பில் ஜே.ஆர்.ஜயவர்த்தன இந்தியப் பிரதமருக்கு 1986 ஜனவரி 30ந் திகதி ஒரு கடிதம் அனுப்பினார். அதில் குறிப்பிட்ட ஒரு சில காரசாமான செய்திகள் வருமாறு:

"தமிழ் பேசும் மக்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமிர்தலிங்கம் குறிப்பிடுவது ஒரு இனத்தை அல்ல. அது மூன்று வித்தியாசமான இனத் தொகுதிகளைக் குறிக்கும். அதாவது இலங்கைத் தமிழர்கள், முஸ்லீம்கள், இந்தியத் தமிழர்கள் என்பன. 'தமிழர்களின் பாரம்பரிய தாயகம்' என்ற பதங்கள் விடப்பட்டு 'தமிழர் தாயகம்' என்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏன் என்றால் பாரம்பரியம் என்ற கருதுகோள் ஒரு கட்டுக்கதை. அதற்கு வரலாற்று ஆதாரங்கள் இல்லை. தமிழர் தாயகம் என்ற பதத்தைப் பயன்படுத்த ஆங்கில அதிகாரி சேர் ஹியூஜ் கிளெஹோன் எழுதிய 'இரண்டு இனங்கள்' என்ற குறிப்பை ஆதாரம் காட்டுகிறார். இவர் மேற்கோள் காட்டிய கிளஹோனின் வாசகங்கள் 1799 யூன் மாதம் எழுதப்பட்டது. கிளெஹோன் முதன்முதலில் 1796ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து ஆறு கிழமைகளால் இந்தத் தீவைவிட்டுப் போனவர். பின்னர் 1798 செப்டம்பர் மாதம் 28ந் திகதி, பிரித்தானிய முதல் தேசாதிபதி பிரடரிக் நோதுடன் இலங்கைக்குத் திரும்பினார். அப்பொழுது 'டச்சு அரசாங்கத்தில் நீதி நிர்வாகமும் வருமானவரியும்' என்ற அவர் எழுதிய அறிக்கையிலேயே 'இரண்டு இனங்கள்' இலங்கையில் உள்ளன என்ற குறிப்பை எழுதினார். முத்துக் குளித்தல் தொடர்பான ஊழலில் சிக்கி வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார். ஹிளெஹோன் எட்டு மாதங்கள் மட்டுமே இலங்கையில் இருந்தார். அவருடைய நடவடிக்கையே அவருடைய நேர்மையைக் கேள்விக்கிடமாக்கிறது."

"தாயக உரிமை கோரும் தமிழர்கள் இலங்கைச் சனத்தொகையில் 12.6 வீத மக்களே. இவர்கள் 29 சதவீத நிலப்பரப்பையும், 60 சதவீத கரையோரக் கடற்பரப்பையும் உடையவர்கள். ஒரு சிறிய பகுதியினர் சரித்திரத்தை ஆதாரம் காட்டி அளவுக்கதிக உரிமை கோருகிறார்கள். 74 சதவீத சிங்கள மக்கள் வரலாற்றுக் காலத்துக்கு முந்தி இருந்தே இந்த நாடு முழுமையும் தமக்கு உரித்தாக இருந்ததெனக் கருதுகிறார்கள்."

"தாயகக் கோட்பாடு கிழக்கு மாகாணத்தில் பெருவாரியாக உள்ள குடியேற்றத் திடங்களிலிருந்தும், வடக்கில் உள்ள குடியேற்றத் திட்டங்களில் இருந்தும் சிங்களக் குடியேற்றவாசிகளை எதிர்காலத்தில் வெளியேற்ற வாய்ப்பாக அமையும். வளர்ந்து வரும் சனத் தொகைக்கு அபிவிருத்தி செய்யக் கூடியதாக உள்ள இரு பிரதேசங்களை இணைக்க முயலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முயற்சி - பெரும்பான்மையான ஆதிக்குடி வாசிகளுக்கு நல்ல நிலப்பகுதிகளைக் கிடைக்காமல் வெள்ளை இனத்தவருக்கு ஒதுக்கி வைத்திருக்கும் தென் ஆபிரிக்க ஆட்சியின் இனவெறி முயற்சியை ஒத்தாக உள்ளது."

"1921 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தின் கிட்டத்தட்ட எல்லா தமிழர் குடியிருப்புக்களும் கடற்கரை ஓரமாகவே காணப்பட்டன. அருமை பெருமையாகவே கடற்கரையில் இருந்து பத்து மைல்களுக்கு அப்பால் விரிந்து காணப்பட்டன. எதிர்மாறாக சிங்களக் குடியேற்றங்கள் கிழக்கு மாகாணத்தின் உட்பிரதேசத்தில் தொட்டம் தொட்டமாகப் பரந்து காணப்பட்டன என்று பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜி.எச்.பீரிஸ் தனது ஆய்வுக் கட்டுரையில் தெரியப்படுத்தி உள்ளார்."

"அண்மைய காலப்பகுதிகளில் சிங்களவர்கள் ஏராளமாக வடகிழக்கில் குடியேறி சனத்தொகை அமைப்பில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதாகத் தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்றனர். இந்தப் பகுதிகள் பண்டைக் காலத்தில் தொடக்கம் சிங்கள இராச்சியத்தின் பகுதிகளாக, சிங்களக் குடியேற்றங்கள் நிறைந்த பிரதேசங்களாக இருந்துள்ளன. படையெடுப்புக்கள் காரணமாக அங்கிருந்த சிங்களவர்கள் வெளியேற நேரிட்டது. இதனைத் தமிழ் வரலாற்று ஆசிரியர்களும் மறுக்கமாட்டார்கள்."



தமிழ் வரலாற்று அறிஞர்களே இப்பிரதேசங்களில் சிங்கள ஆட்சி ஆதிக்கம் இருந்ததை ஒப்புக்கொள்கின்றார்கள் என்று கூறும் சிங்கள அரசாங்கம் ஒரு பட்டியல் தமிழ் அறிஞர்களின் நூல்களில் இருந்து ஆதாரங்களை காட்டியுள்ளது:

"எல்லாளன் தோற்கடிக்கப்பட்ட காலம் தொடக்கம் 15ஆம் நூற்றாண்டின் மத்திவரை கிழக்கு மாகாணம் சிங்கள அரசர்களுக்குக் கீழ்படிவாக இருந்தது." நீதிபதி ஏச்.டபிள்யூ.தம்பையா.

"மட்டக்களப்பு முழு மாவட்டமும் கண்டி இராச்சியத்தின் பகுதிகளாக இருந்தது. சிங்கள மன்னர்கள் மட்டக்களப்புமீது ஆதிக்கம் செலுத்திய பொழுது அது புளியந்தீவு எனப்பட்டது."

முதலியார் எஸ்.ஓ.கனகரத்தினம்.

"அது (மட்டக்களப்பு மாவட்டம்) றோஹன றட்டவின் ஒரு பகுதி. மேற்குப் பக்கத்திலும் தென் பக்கத்திலும் ஏணிபோல் அமைந்த மலைப் பிரதேசத்தையும், வடக்கே மகாவலி கங்கையையும் எல்லையாகக் கொண்டது. கண்டி இராச்சியம் மத்திய, கிழக்கு மாகாணங்களின் ஒரு பகுதியையும் சப்பிரகமுவ, ஊவா, தென்மாகாணங்களையும் கொண்டதாக இருந்தது."

சேர் பொன்னம்பலம் அருணாசலம்.

"யாழ்ப்பாணத்தில் உள்ள சிங்களப் பெயர்களை உடைய ஊர்களின் நீண்ட பட்டியல் அங்கு தமிழர்களின் காலத்துக்கு முன்னர் சிங்களவர்கள் வாழ்ந்ததைக்காட்டும்."

சங்கைக்குரிய ஞானப்பிரகாசர் ஓ.எம்.ஐ.

"சிங்களவர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீண்ட காலம் வாழ்ந்ததையும், சிங்களவர்கள் மீண்டும் குடியேறும் வரை தமிழர்கள் வடமத்திய மாகாணத்தில் வாழ்ந்ததையும் இடப்பெயர்கள் சுட்டிக்காட்டுகின்றன."

பேராசிரியர் கே.இந்திரபாலா

இவர்களைத் தவிர 1660இல் திருகோணமலையில் கொட்டியாரத்தில் வந்திறங்கிய ஆங்கிலேயரான றொபேட் நொக்ஸ்

கண்டிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுக் கண்டிக்குக் கொண்டு போன வரலாற்றையும் - 17ஆம் நூற்றாண்டு போத்துக்கேய வரலாற்றாசிரியர் டி குவேரா, கோட்டை அரசனின் அதிகாரத்துள் இருந்த 15 சிற்றரசுகளில் திருகோணமலையும் மட்டக்களப்பும் அடங்கி உள்ளன என்ற குறிப்பிட்ட வரலாற்று செய்தியையும் - கண்டிய மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் 1766இல் டச்சுக்காரரோடு செய்த ஒப்பந்தத்தில், திருகோணமலை, புளியந்தீவு (மட்டக்களப்பு) ஆகிய இடங்களோடு கிழக்கு மாகாணக் கடற்கரை நீளத்துக்கு ஒரு குறிப்பிட்ட அகலப் பிரதேசத்தையும் டச்சுக்காரர்களுக்கு கையளித்த வரலாற்றையும் - தமது கடிதத்தில் சிங்கள அரசு பயன்படுத்தி இருந்தது. அத்தோடு மேலும் சில ஆதாரங்களைச் சமர்ப்பித்திருந்தனர். அவை:

"மேலே தரப்பட்ட எமது அள்ளுகொள்ளையான ஆதாரங்களுக்கு எதிராக கிளெஹோனின் குறிப்பை மட்டும் வைத்துக் கொண்டே வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பண்டைக் காலம் தொடக்கம் தமிழர்களின் தாயாகமாக இருந்தது என்ற அமிர்தலிங்கத்தின் வாதத்தை நிராகரிக்கவேண்டும். அத்தோடு பிரித்தானியர் வருகை மட்டும் இலங்கையில் இரண்டு ஆட்சிப் பிரிவுகள் - தமிழர் ஆட்சி, சிங்களவர் ஆட்சி - இருந்தன என்ற அவரது கோரிக்கையும் நிராகரிக்கப்பட வேண்டும்."

"சிங்கள மக்கள் வடகிழக்கில் குடியேறுவதைத் தமிழ் அரசியல்வாதிகள் எதிர்ப்பது நியாயமற்றது. 1981 சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி 33 சதவீத தமிழ் மக்கள் வடகிழக்கிற்கு வெளியே சிங்கள மக்கள் மத்தியில் வாழ்ந்தனர். 90 சதவீதத்துக்கும் அதிகமான இந்திய வம்சாவழித் தமிழர்கள் சிங்கள மக்களுக்குரிய மலைநாட்டின் உள்நிலவளப் பிரதேசத்தில் வாழ்கின்றனர். எனவே தமிழர் தாயகம் என்ற கேள்வி நியாயமானதல்ல."

"அரசியல் திட்டம் பிரிவ 14(1)(h) விதியின்படி எல்லாப் பிரசைகளும் இலங்கையில் விரும்பிய இடத்தில் குடியேறவும், தொழில் செய்யவும் உரிமை உண்டு. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழர் தாயகக் கேள்வி அந்த உரிமைச் சட்டத்தை மீறுகிறது."



"அரச நிலப்பரப்பைத் தனிப்பட மொழி அடிப்படையில் - 74 சதவீத மக்களை ஒதுக்கிவிட்டு - சிறுபான்மையினர் பெற நினைப்பது அநீதியானது. அரசியல் யாப்புச் சட்டத்தின் சமத்துவம் என்ற உத்தரவாதத்துக்கு முரணானது."

"பிரித்தானியர் வருகையின் பின்னர் வடக்கு கிழக்கு தனி நிர்வாகப் பிரிவுகளாக இயங்கின என்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாதம் தெளிவில்லாதது. ஏனைய மாகாணங்களும் அவ்வாறே நிர்வகிக்கப்பட்டன. 1956 வரை சகல மாவட்டங்களிலும் ஆங்கிலமே உத்தியோக மொழியாக இருந்தது. மாற்றத்துக்கு உரிய அரச உத்தியோகத்தர்கள் சகல மாவட்டங்களிலும் கடமை யாற்றினர். 1956இன் பின்னர் சிங்களம் உத்தியோக மொழியாக்கப்பட்டது. நிர்வாக வசதிக்காக 1971இல் வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி பயன்படுத்துவது அரசியல் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. பின்னர் 1978இல் தமிழ் மொழி தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிறுபான்மையினருக்கு நியாயம் செய்வதற்காக வடகிழக்கில் தமிழ் நிர்வாக மொழி ஆக்கப்பட்டதைக் காட்டி தாயக உரிமை கோருவது, இரண்டு மாகாணங்களையும் இணைக்கும்படி கோருவது எவ்வளவுக்கு நியாயமானது? இப்படியாக வழங்கப்பட்ட சலுகைகளைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு தமிழ் அரசியல்வாதிகள் விரோத நடவடிக்கைகளில் இறங்குவதினாலேயே சிங்கள சமூகம் தமிழர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறது. ஆட்சி அதிகாரத்தைப் பரவலாக்கினால் அவர்கள் பிரிந்து சென்று தனி இராச்சியம் அமைப்பார்கள் என்று சிங்கள சமுதாயம் அஞ்சுகிறது."

"இனக் கலவரங்களால் ஏற்படும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்று அமிர்தலிங்கம் கூறுகிறார். அரச படைகளையும் சொத்துக்களையும் தமிழ்ப் பயங்கரவாதிகள் தாக்கியமையே இனக் கலவரங்கள் ஏற்படக் காரணம். பயங்கரவாதிகளால் சிங்களப் பொது மக்களும் நிரம்பப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அகதிகளாகி உள்ளார்கள். பயங்கரவாதிகளை ஆதரிக்காத தமிழ் மக்கள் சிங்களப் பிரதேசங்களுக்கு வந்து பாதுகாப்பாக வாழ்கிறார்கள். எனவே பாதுகாப்பு நிமிர்த்தம் வடகிழக்கு மாகாணங்கள் தமிழர்களுக்கு மட்டும் ஒதுக்கப்படவேண்டும் என்பது கருத்தில்லாத வாதமாகும்."

"தமிழர் விடுதலைக் கூட்டணி 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் தமிழ் நாட்டில் அகதிகளாக உள்ளனர் என்றும் அவர்கள் திரும்பி இலங்கை வந்து வாழ வடகிழக்கு மாகாணங்கள் தமிழர்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறார்கள். அந்த இளைஞர்கள் அகதிகள் என்ற போர்வையில் தமிழ் நாட்டில் இராணுவப் பயிற்சி எடுக்க வந்துள்ள பயங்கரவாதிகள். இரண்டு மாகாணங்களையும் இணைப்பதனால் இந்தியாவில் இருந்து திரும்பி வருபவர்களுடைய பிரச்சினை தீராது. பயங்கரவாதிகளின் தாக்குதல்களைத் தொடர்ந்து இராணுவத்தால் பழிவாங்கப்படுவார்கள் என்றால், அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. தேசிய நலன் கருதிப் படைகளை அங்கு வைத்திருக்க வேண்டும். அதேசமயம் வடகிழக்கில் இருந்து வெளியேறிய சிங்களவர்களை அங்கு குடியேற்றிப் பாதுகாப்பு அளிக்கவும் படைகள் அங்கு நிலைகொண்டிருக்க வேண்டி யுள்ளது."

இதுவரை சொல்லப்பட்டவை தமிழர் தாயகம்-இணைந்த மாகாணங்கள் பற்றிச் சிங்கள அரசு ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்கு எழுதியதன் ஒரு சிறுபகுதிமட்டுமே. இதனைவிட அரசியல் கட்டமைப்பு, அதிகார பரவலாக்கம், நிதி நிர்வாகம், நீதி நிர்வாகம், இந்திய வம்சாவழித் தமிழர்கள், மகாவலி கங்கை விஸ்தரிப்புத் திட்டம் பற்றியும் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் கடிதம் பேசியது.

அமிர்தலிங்கம் அவர்கள் 1986 ஜனவரி 30ந் திகதி சமர்ப்பித்த 57 பக்க தீர்வுக் கோரிக்கை அறிக்கையின் ஒவ்வொரு பிரிவையும் ஜே.ஆர்.ஜயவர்த்தன நிராகரித்தார். அவ்வேளை தமிழ் நாட்டுக்கு வந்த ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் திருச்சியில் தம்மைச் சந்திக்க வருமாறு அமிர்தலிங்கம் அவர்களை அழைத்தார். அவர் திருவாளர்கள் சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகிய இருவரையும் அழைத்துக் கொண்டு திருச்சி சென்றார். அவர்கள் மூவரையும் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் தம்மோடு அழைத்துக்கொண்டு டில்லி சென்றார். அவர்களோடு கலந்து பேசியதன் பின்னர் அவர் டில்லியில் வைத்து ஜனாதிபதி ஜயவர்தனவின் பதிலைக் கண்டித்து பகிரங்கமாக ஒரு அறிக்கை வெளியிட்டார். (1986 ஏப்பிரல்).



# அதிகாரம் 46
# அரசியல் கட்சிகள் மாநாடு

1986 ஸ்ரீராஜீவ் காந்தி அவர்களின் கண்டிப்பைத் தொடர்ந்து இலங்கை அரசு சீர்திருத்தம் செய்யப்பட்ட ஒரு தீர்வு அறிக்கையை அமைச்சர் ஜனாப் ஹமீட் மூலம் டில்லிக்கு அனுப்பியது. இந்திய அரசியல் திட்டத்தில் யூனியன் பிரதேசங்களுக்கு உரியது போன்ற அதிகாரங்களைக் கொடுக்க ஜனாதிபதி ஜயவர்த்தன முன்வந்தார். தமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்று அதனை அமிர்தலிங்கம் அவர்கள் நிராகரித்தார்.

யூன் மாதம் - இந்தியாவின் அழுத்தம் காரணமாக ஜனாதிபதி ஜயவர்த்தன சகல பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளையும் அழைத்து தீர்வு விடயத்தைப் புனராலோசனை செய்ய விரும்பினார். அதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியும் அழைக்கப்பட்டது. ஆனால் அமிர்தலிங்கம் அவர்கள் இலங்கை அரசாங்கம் எதுவித பொருத்தமான தீர்வுகளையும் முன்வைக்காதபடியாலும், போராளிக் குழுக்கள் அழைக்கப்படாத காரணத்தாலும் தமது கட்சி கலந்து கொள்ள முடியாதென்றார். யூன் 5ந் திகதி அமிர்தலிங்கம் அவர்களும் மற்றவர்களும் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டு கொழும்புப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும்படி ஆலோசனை சொல்லப்பட்டது. தமிழ் நாடு திரும்பிய திருவாளர்கள் அமிர்தலிங்கம் சிவசிதம்பரம் சம்பந்தன் ஆகிய மூவரும் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு.பிரபாகரனையும் சகாக்களையும் சந்தித்து இரண்டு மணிநேரம் உரையாடினர். பின்னர் ஏனைய போராளிக் குழுத்தலைவர்களையும் சந்தித்தனர். தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் போராளிக் குழுக்களை அழைத்துப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும்படி தூண்டினார்.

யூலை மாதம் 13 - 23ந் திகதி வரை ஜனாதிபதி ஜயவர்த்தன கூட்டிய அரசியல் கட்சிகள் மகாநாட்டின் முதல் சுற்று கொழும்பில் நடை பெற்றது. போராளிக் குழுக்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கலந்து கொள்ளவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியும் வேறு

ஏழு பிரதான கட்சிகளும் கலந்து கொண்டன. கூட்டணி ஏழு தடவைகள் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டது. அந்த மகாநாட்டில் வடகிழக்கு இணைப்பு விடயம் எடுக்கப்படவில்லை. ஆனால் அதிகாரப் பங்கீடு சம்பந்தமான பல விடயங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டுத் தீர்வு காணப்பட்டது. அவை: பாதுகாப்பு, உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள், விமானத்துறை, விமானநிலையம், வெளிநாட்டு வர்த்தகம், தபால் தந்திச் சேவை, துறைமுகங்கள், மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாய்ச்சல், வர்த்தகம், வானொலி, தொலைக்காட்சி, மாகாண காவல்துறைக்கு ஆட்களைத் திரட்டுதல், உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் நியமனம், தேசிய நில ஆணைக்குழு ஒன்று நிறுவுதல் முதலிய 27 விடயங்கள் தீர்வில் அடங்கின. தமிழர்களுக்குச் சுயாட்சி வழங்கக்கூடிய அம்சங்களைக் கொண்டதாக அந்தத் தீர்வு இருந்தது. அந்த மகாநாட்டில் எடுத்த சில தீர்வுகள் அமிர்தலிங்கம் அவர்களின் சுயாட்சி நோக்கிய முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

யூலை 19 - இச்சமயத்தில் சென்னையில் இருந்த ஆயுதக் குழுக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பேச்சு வார்த்தை முன்னெடுப்புக்கு எதிராகத் தாம் யாவரும் ஒன்று சேர்ந்திருப்பதாகப் பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட்டன. அவ்வாறு வெளியிட்டவர்களில் ஒருவர் திரு.வி.பாலகுமார். அவர்கள் தமிழர்களின் பாரம்பரிய அரசியல் வாதிகளின் காலம் அஸ்தமித்துவிட்டதெனவும் அவர்கள் நாட்டில் இல்லை எனவும் அறிக்கை வெளியிட்டனர். போராளிகளின் இந்தக் கோசம் பழம் பொறுக்க வந்த குருவி ஆலவிருட்சத்தைப் பார்த்து 'உனது வேரைக் கறையான் அரித்துவிட்டது. அதனால் உனக்கு மண்ணில் உரிமை இல்லை' என்பது போலவிருக்கிறது. அன்றும்சரி இன்றும்சரி மக்களால் ஜனநாயகவழியில் அங்கீகரிக்கப்பட்ட, சட்டப்படி உரிமையுடைய ஒரேயொரு முதலிடத்தில் இருக்கும் அரசியல் தாபனம் தமிழர் விடுதலைக் கூட்டணியே. ஜனநாயக வழிமுறைப்படியோ சட்டப்படியோ தமிழர்கள் சார்பில் பேசுவதற்கு வேறு யாருக்கு உரிமை உள்ளது?

ஓகஸ்ட் 15ந் திகதி இந்த மகாநாட்டின் இரண்டாவது கூட்டத் தொடர் ஆரம்பமாகியது. அச்சமயம் சட்டவல்லுனரால் வரையப்பட்ட - நிருவாகத்தைப் பரவலாக்குவதற்கு யாப்பில் செய்ய வேண்டிய திருந்தங்கள் பற்றிப் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. பல துறைகளில்



கூட்டணியினருக்குத் திருப்தியாக இருந்தது. எனினும் நிதி, நீதி, சட்டம் ஒழுங்கு சம்பந்த விடயங்களில் ஜனாதிபதி ஜயவர்தனவும் கூட்டணியினரும் ஒரு சுமுகமான முடிவுக்கு வரத்தவறினர். பேச்சுவார்த்தை செப்டம்பர் மூன்றாவது வாரத்தில் முடிவடைந்தது.

நடந்து முடிந்த பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் இலங்கை அரசு ஒரு வெள்ளை அறிக்கையைத் தயாரித்து அதனை புதுடில்லிக்கு அனுப்பியது. அதனை இந்திய அரசு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், ஆயுதக் குழுக்களுக்கும் சமர்ப்பித்தது. ஆயுதக் குழுக்கள் ஒரேயடியாக அதனை நிராகரித்தன.

டிசம்பர் 19 தீர்வு

**1986** இச்சூழ்நிலையில் 1986 நவம்பர் 17, 18ந் திகதிகளில் பங்களூரில் 'சார்க்' (SAARC: South Asian Association for Regional Cooperation) உச்சிமகாநாடு நடக்கவிருந்தது. தமிழ் நாடு முதல் அமைச்சர் ஸ்ரீ எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களும், ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களும் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைக்கண்டுவிட நடவடிக்கையில் இறங்கினர். இந்திய அரசு தமிழ் நாடு முதலமைச்சர் மூலம் அமிர்தலிங்கம் அவர்களோடு தீர்வுகள் பற்றி புதிய கோணத்தில் ஆலோசித்தது. சார்க் உச்சி மகாநாட்டுக்காக ஜனாதிபதி திரு.ஜயவர்த்தன, இந்தியப் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி ஆகியோர் பங்களூர் வந்து ஹோட்டல் வின்சர் மனோரில் தங்கினர் அச்சமயம் தீர்வு பற்றிய பேச்சுவார்த்தை தொடர்ந்தது. ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்கு வெளிநாட்டு அமைச்சர் நட்வர்சிங், வெளிநாட்டுச் செயலாளர் ஏ.பி.வெங்கடேஸ்வரன், இணைச் செயலாளர் குல்டிப் சகாதேவ், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜே.என்.தீக்சித் ஆகியோர் உதவினர். ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்கு வெளிநாட்டமைச்சர் ஏ.சி.ஹமீட், வெளிநாட்டுச் செயலாளர் டபிள்யூ.ரி.ஜெயசிங்க, டில்லியில் இருந்த இலங்கைத் தூதுவர் திலகரத்தின ஆகியோர் உதவினர். ஜனாதிபதி ஜயவர்த்தன முன்னைய நிலையில் இருந்து சற்றுக் கீழே இறங்கி வந்திருந்தார். சென்னையில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியோடும் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய ஆயுத இயக்கங்களோடும் பேசும் பொறுப்பு

முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களிடம் விடப்பட்டது. சென்னையில் அச்சமயம் இருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே.பிரபாகரன் விமானப் படைக்குச் சொந்தமான விமானத்தில் பங்களூருக்கு அழைத்துச் செல்லப்பட்டு 'ராஜ் பவனில்' தனது சகாக்கள் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், லோறன்ஸ் திலகர் ஆகியோருடன் தங்க வைக்கப்பட்டார். அவரோடு வெளிநாட்டு அமைச்சர் நடவர்சிங் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். குறித்த ஒரு காலப் பகுதிக்குள் தமிழர்களின் உரிமைகளை வழங்க திரு.ஜெயவர்த்தன ஒப்புதல் வழங்க வேண்டும் என்றும் அதற்கு இந்தியா உறுதியளிக்க வேண்டும் என்றும் திரு.பிரபாகரன் விடாப்பிடியாக நின்றார். நட்வர்சிங் இடைக்காலத் தீர்வை ஏற்கும் படியும், பின்னர் இந்தியாவின் உதவியோடு மிகுதி உரிமைகளையும் பெறமுடியுமென்றும், அதற்கு இந்தியா உறுதியளிக்கிறது என்றும் சொன்னார். திரு. பிரபாகரன் நட்வர்சிங்கின் ஆலோசனைக்கு இணங்காது விடாப்பிடியாக நின்றதால் அவர் திருப்பிச் சென்னைக்கு அனுப்பப்பட்டார். அதன் பின்னர் அவர் நீண்ட நாட்கள் இந்தியாவில் தங்கவில்லை.

இந்திய உளவுத்துறையைச் சேர்ந்த உன்னிக்கிருஷ்ணன் மூலம் இந்திய நிலைப்பாட்டையும், இயக்கங்களின் நிலைப்பாட்டையும் அறிந்த பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி 1986 இறுதியில் அல்லது 1987 ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தை இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்த முனைந்து நின்றார். இராணுவ நடவடிக்கைகள் மூலம் யாழ்ப்பாணத்தை அடிமைப்படுத்த அத்துலத் முதலி ஆயத்தமாவதை உளவுத் துறைமூலம் ஸ்ரீ ராஜீவ் காந்தி அறிந்தார். அப்படி நடக்குமாயின் தமிழ் நாட்டைக் கட்டுப்படுத்த முடியாதென்ற காரணத்தால் மீண்டும் தீர்வு விடயத்தில் அக்கறை செலுத்தத் தொடங்கினார். எனவே திருவாளர்கள் சிதம்பரம் அவர்களையும், நட்வர்சிங் அவர்களையும் கொழும்பிற்கு டிசம்பர் 17ந் திகதி அனுப்பினார். அதனைத் தொடர்ந்து நடந்த பேச்சுவார்த்தையின் அடிப்டையில் டிசம்பர் 19இல் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டது. அதனை டிசம்பர் 19 தீர்வு எனப்படும். அதன் அம்சங்களாவன:

1 இன்றைய கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த பிரதேசம் கிழக்கு மாகாணமாக அமையும்.



2 புதிய கிழக்கு மாகாணத்துக்கு ஒரு மாகாண சபை நிறுவப்படும்.

3 வடமாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் இடையிலான நிருவாக நிறுவனம் சம்பந்தப்பட்ட தொடர்புகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் சீர்செய்யப்படும்.

4 வடக்கு கிழக்கு மாகாண மக்களின் விருப்பு அடிப்படையில் அவை இணைவதற்கு வாய்ப்பாக - இரண்டாவது அரசியல்திட்ட அபிவிருத்தியின் பொழுது - மாற்றங்கள் ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் விரும்புகிறது.

5 குறித்த ஒரு காலப் பகுதிக்கு ஒரு உதவி ஜனாதிபதி பதவியை உருவாக்க இலங்கை அரசு விரும்புகிறது.

விடுதலைப் புலிகள், அம்பாறை தமிழரின் பாரம்பரிய தாயகம் என்று கூறி டிசம்பர் 19 தீர்வை நிராகரித்தனர். ஏனைய போராளிக் குழுக்களும் நிராகரித்ததைத் தொடர்ந்து, கூட்டணியின் தீவிர போக்குடையவர்களின் விருப்பத்துக்குக் கட்டுப்பட்டு அமிர்தலிங்கம் அவர்களும் நிராகரித்தார். இக்கால கட்டத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் சிங்கள அரசியல்வாதிகளிடம் இருந்து மொழி வழியில் அமைந்த வடக்கு-கிழக்கு இணைப்புக்கு மேலதிகமாக எதையும் பெறமுடியாது என்ற கருத்தைக்கொண்டிருந்தார். அந்தக் கருதுகோளை அவரது கட்சியின் தீவிரபோக்காளர்கள் கண்டித்தனர். தந்தை செல்வா காலந் தொடக்கம் அதுவே கட்சியின் கொள்கையாக இருந்து வந்துள்ளது என்பதை அப்பொழுது எவரும் பேசவில்லை.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இனவிகித மாற்றத்தை ஆயுத இயக்கங்ளும் கூட்டணியின் தீவிர போக்காளரும் கருத்தில் எடுக்க மறுத்தனர். அதாவது யதார்த்தத்தை யதார்த்தமாகப் பார்க்க மறுத்து அடம் பிடித்தனர். அதனால் கையில் கிடைத்த ஓரளவு சாதகமான தீர்வைப் புறந்தள்ளினர்.

இக்கால கட்டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணத் தளபதி கிட்டு எனப்படும் சதாசிவம் கிருஷ்ணகுமார் தைப்பொங்கல்

தினத்தன்று - 1987 ஜனவரி 14 - யாழ்ப்பாண நிருவாகத்தை விடுதலைப் புலிகள் பொறுப்பேற்பார்கள் என்று அறிவித்தார். அதனை எதிர்த்து அரசாங்கம் யாழ்ப்பாணம் மீது பொருளாதாரத் தடைவிதித்தது. எரிபொருள் தட்டுப்பாடு நாளாந்த வாழ்க்கையை உடனடியாகப் பாதித்தது. பொருட்களின் விலைகள் திடீரென அதிகரித்தன. பொருட்களுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டது. போதாததற்கு விடுதலைப் புலிகளுக்குத் தேவையான இராணுவப் பொருட்களும் தடை செய்யப்பட்டன. அத்தோடு அரசு இராணுவ நடவடிக்கையிலும் இறங்கியது. இந்தியா அதனைத் தவிர்க்குமாறு கேட்டது. அதற்கு இலங்கை அரசு மறுத்தது. ஆகாயவிமானங்கள் பகல்வேளைகளில் குண்டுகளைப் பொழிந்தன. இரவு வேளைகளில் இராணுவ முகாங்களில் இருந்து 'செல்கள்' ஏவப்பட்டன. வானத்தில் சீறிச் செல்லும் 'செல்கள்' மக்களைப் பங்கர் வாழ்க்கைக்கு உட்படுத்தின. பொதுமக்கள் உடைமைகளும் உயிர்களும் பலியாகின. மக்கள் நித்திய பயம் சூழ்ந்த நீண்ட ஒரு புதிய வாழ்க்கைக்குள் திணிக்கப்பட்டார்கள்.

1987 ஜனவரி தொடக்கம் தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலியின் ஏவுதலில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகின. (1993ஆம் ஆண்டு 23ந் திகதி எப்பிரல் மாதம் கொழும்பில் வைத்துத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட) அமைச்சர் லலித் அத்துலத்முதலியே ஹெலிக்கொப்டரில் இருந்து எரிபொருள் நிரப்பிய முதலாவது பீப்பாக் குண்டை ஒரு மாலைப் பொழுதில் மல்லாகத்தில் ஊர்மனைமீது தள்ளிவிட்டார்.

பெப்புருவரி மாத ஆரம்பத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில் குறிப்பிடப்பட்டவை:

1 தமிழருக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவும்.

2 யாழ்ப்பாணத்துக்கான பொருநாதார தடையை உடன் நீக்கவும்.

3. டிசம்பர் 19 தீர்வுகளை உடன் அமுல் படுத்தவும்.



இலங்கை அரசு தமிழர்களது பிரச்சினைகளைப் பற்றித் தமிழ் தலைவர்களுடனோ இந்தியாவுடனோ பேசுவதைத் தவிர்த்து வந்தது. அமிர்தலிங்கம் அவர்களின் விடா முயற்சி காரணமாக பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் - திருவாளர்கள் பி.சிதம்பரம், நட்வர்சிங் ஆகியோர் 1986 டிசம்பர் 19ந் திகதி சமர்ப்பித்த தீர்வு தொடர்பாக இலங்கை அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்காத படியால் - 1987 மார்ச் மாதம் வெளிநாட்டு அமைச்சர் திரு. தினேஸ் சிங்கை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்த கொழும்புக்கு அனுப்பினார். அவருக்குத் தான் டிசம்பர் 19 தீர்வு அம்சங்களை நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி ஜயவர்த்தன கூறினார். பத்து நாட்களுக்கு யுத்த நிறுத்தம் அறிவிக்கப் போவதாகவும் தெரிவித்தார். இலங்கையில் இருந்த இந்திய உயர்ஸ்தானிகர் திரு. ஜே.என்.தீக்சிற் ஜனாதிபதி ஜயவர்தன அவர்களுக்கும் மற்றும் அமைச்சர்களுக்கும் தொடர்ந்து அழுத்தம் கொடுத்துக்கொண்டு இருந்தார். அவரைச் சிங்கள உலகம் வேம்பாக வெறுத்தது.

# அதிகாரம் 47
# புலம்பெயர்ந்தோர் இரட்சகர்

1987 அமிர்தலிங்கம் அவர்கள் இந்தியாவில் வாழ்ந்தகாலை அவருக்குச் சுவிற்சலாந்து நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் அயின்றிக்ஸ் ஒட்ஸ் அவர்களிடம் இருந்து ஒரு அவசர அழைப்பு வந்தது. சுவிற்சலாந்தில் வாழும் ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பப் போகிறார்கள் என்றும், இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுபவர்களை தென் இலங்கையில் அகதி முகாம்களில் வைத்துப் பராமரிக்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும், அதுபற்றிப் பேச உடனடியாக சுவிற்சலாந்து வரும்படியும் அழைத்திருந்தார்.

அமிர்தலிங்கம் அவர்கள் சுவிற்சலாந்து போகும் பொழுது தன்னுடன் 'இந்தியா ருடே' பத்திரிகையின் ஒரு பிரதியையும் கொண்டு சென்றார். அந்தப் பத்திரிகைக்கு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன வழங்கிய ஒரு பேட்டி இருந்தது. அதில் "தமிழர்களைப் பாதுகாக்க இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?' என்பது ஒரு கேள்வி. அதற்கு ஜே.ஆர். ஜயவர்த்தன

அளித்த பதில் "இந்தியப் படைகள் இலங்கையில் கால்வைக்கமுன்னர், இலங்கையில் வாழும் தமிழர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விடுவார்கள்" என்பதாகும்.

சுவிற்சலாந்தை அடைந்ததும் அவரை அழைத்த பாராளுமன்ற உறுப்பினர் "சுவிற்சலாந்தில் 5000 பேர் வரை தமிழர்கள் வசிக்கிறார் கள். சுவிற்சலாந்தில் உள்ளவர்கள் அனுப்பப்பட்ட கையோடு பிரான்ஸ், ஒல்லாந்து ஆகிய நாடுகளும் தமிழ் அகதிகளை அதேவிதமாக - இலங்கையில் வைத்துப் பராமரிக்கும் திட்டத்தின் கீழ் - திருப்பி அனுப்பத் திட்டம் வகுத்துள்ளன" என்ற செய்தியைச் சொன்னார். அந்த நாடாளுமன்ற உறுப்பினர் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஊடகவியலாளர்களை அழைத்து அமிர்தலிங்கம் அவர்களைப் பேட்டிகாண வைத்தார். அந்த ஊடகவியலாளர்களுக்கு 'இந்திய ருடே' பத்திரிகையைக் காட்டி அகதிகள் திருப்பி அனுப்பப் பட்டால் அவர்கள் கொலை செய்யப்படுவார்கள் என்றும், தமிழர் களைப் பலிகொடுக்கவா சுவிற்சலாந்து அரசு நடவடிக்கை எடுக்கிறது என்றும், 1951ஆம் ஆண்டு அகதிகள் பற்றிய ஜெனீவா ஒப்பந்தத்திற்கு அது முரணான செயல் என்றும் எடுத்துக் கூறினார்.

வானொலி, தொலைக்காட்சிகளில் அது முக்கிய முதல் செய்தியாகச் சொல்லப்பட்டது. அடுத்த தினம் சகல பத்திரிகைகளும் அமிர்தலிங்கம் அவர்களது வாதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. அதனையடுத்து நிதி அமைச்சர், இவர் ஒரு பெண்மணி, வெளிநாட்டு அமைச்சர், பாராளுமன்ற மனிதவுரிமைக் குழுவினர் ஆகியோர் அமிர்தலிங்கம் அவர்களை அழைத்து அவரது வாதத்தைக் கேட்டனர். பின்னர் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் அமிர்தலிங்கம் அவர்களுக்கு அறிவித்தார். அமிர்தலிங்கம் அவர்கள் தலையிடாது விட்டிருந்தால் சுவிற்சலாந்தில் உள்ள அகதிகள் மட்டுமல்லாமல் - சுவிற்சலாந்து நாட்டை முன்னுதாரணமாகக் காட்டி பிரான்ஸ், ஒல்லாந்து, ஜேர்மனி, நோர்வே, இங்கிலாந்து, கனடா, ஒஸ்ரேலியா ஆகிய நாடுகளில் உள்ள சகல அகதிகளும் திருப்பி அனுப்பப்பட்டிருப்பார்கள். புலம் பெயர்ந்து உலகம் முழுவதும் பரந்து சீரும் சிறப்புமாக வாழும் தமிழர்களுக்கு அவர் செய்த காரியம் பெரும் வரப்பிரசாதகமாக அமைந்தது.



அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதிராகப் பெருமளவில் இருட்டடிப்பு நடைபெறுவது புலம்பெயர்ந்தோர் நாடுகளிலேயே. அவரைப்பற்றித் திரிபுகள் பண்ணுவதும் அங்குதான் அதிகம். இலங்கை அரசியல் களத்தில் சென்ற நூற்றாண்டில் தேர்தல்களில் மக்களால் ஒவ்வொருதடவையும் ஓரங்கட்டப்பட்ட, பின்னர் தொண்ணூறுகளில் பத்திரிகைகளில் அரச அடாவடித்தனங்களைக் கண்டித்து நாலு கட்டுரை எழுதிய, வெளிநாடுகளில் சில கூட்டங்களில் விடுதலைபற்றிப் பேசிய குமார் பொன்னம்பலத்துக்கு வருடாந்த நினைவு தினங்கள் கொண்டாடி, இலங்கை மக்களின் இன்னல்களைத் தீர்க்கப் போராடிய மாமனிதரென பத்திரிகைளில் ஆடம்பர விளம்பரம் செய்கின்றனர். கூட்டங்கள் வைத்துப் புகழாரம் பாடுகின்றனர். முத்திரை வெளியிடுகிறன்றனர். 'கலண்டர்களில்' புகைப்படத்தைப் போட்டுப் பிரசாரம் செய்கின்றனர். எப்பொழுதும் அமிர்தலிங்கம் அவர்களையும் கட்சியையும் பகைத்து வாழ்ந்த அந்த மனிதருக்கு இத்தனை வர்ணனைகள் வண்ணப் பூச்சுக்கள் ஏன்? அமிர்தலிங்கம் அவர்களை இருட்டடிப்புச் செய்யக் கிடைத்த ஆயுதமே அந்த மாமனிதர்.

# அதிகாரம் 48
# ராஜீவ் காந்தி அனுப்பிய உச்ச இரகசிய கடிதம்

1987 ஏப்பிரல் 20ந் திகதி ஜனாதிபதி ஜயவர்த்தன அவர்கள் "இராணுவ நடவடிக்கை மூலமே தீர்வு கொண்டு வரப்படும்" என்றார். அவர் தனது நிலைப்பாட்டை விளக்கி ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அக்கடிதத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் அவருக்குக் கொடுத்துள்ள இராணுவ நடவடிக்கை காரணமாக ஏற்பட்ட மரணங்கள் அழிவுகள் மிகவும் மிகைப்படுத்தப் பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

1987 எப்பிரல் 21ந் திகதி கொழும்பு புறக்கோட்டை பஸ்தரிப்பு நிலையத்தில் ஒரு பாரிய குண்டு வெடித்தது. 107 பேர் இறந்தனர்.

300 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். அதே மாதம் திருகோணமலையில் இருந்து கொழும்பு செல்லும் பாதையில் உள்ள சிங்களப் பிரதேசத்தில் அமைந்த 'ஹபறணையிலும் ஹித்துலோட்டு வாவிலும் வைத்து பஸ்வண்டிகளில் பிரயாணம் செய்த 126 சிங்கள மக்கள் கொலை செய்யப்பட்டனர். மே 29ந் திகதி 30 பௌத்த பிக்குகள் அம்பாறையில் அரந்தலாவ என்ற இடத்தில் கொலை செய்யப்பட்டனர். இவையாவும் விடுதலைப் புலிகளால் செய்யப்பட்டவை என்று சிங்களத் தலைவர்கள் கூறினர். அதனால் சிங்களவர் தரப்பில் ஆத்திரம் சுவாலைவிட்டது. "சமாதானத்துக்காக இந்தியா சமர்ப்பித்த தீர்வுகள் நாட்டடில் சமாதனம் ஏற்பட்ட பின்னரே கருத்தில் எடுக்கப்படும்" என்று பிரதமர் ஆர்.பிரேமதாச பாராளுமன்றத்தில் சூழுரைத்தார்.

இலங்கை அரசு இந்தியாவுக்கு ஒரு சாதகமற்ற பதிலை அனுப்பிவிட்டுத் தொடர்ந்தும் தமிழரை வருத்தும் இராணுவ முயற்சிகளில் ஈடுபட்டது. அதனை அடுத்து பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு எழுதிய வெளி உலகத்துக்குத் தெரியாத இரகசிய அச்சுறுத்தல் கடிதம்:

"உச்ச இரகசியம். ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு - ராஜீவ் காந்தியிடமிருந்து. இலங்கைப் பாதுகாப்புப் படைகள் தொடங்கி உள்ள இராணுவ நடவடிக்கைகள் - குறிப்பாக கடந்த 48 மணி நேரத்துள் மேற் கொண்ட இராணுவ நடவடிக்கைகள் - எனக்கு மிக்க கவலையைத் தருகின்றன. அதனைப்பற்றி மிகவும் அக்கறை கொள்ள வேண்டியவனாக உள்ளேன். அரசியல் தீர்வில் இருந்து முற்றாக விலத்திச் செல்வதாக உள்ளது. இந்தத் தகவல் மிகவும் அபாயகரமானது என்பதை நீங்கள் ஒத்துகொள்வீர்கள். மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பப் போதிய அவகாசம் உள்ளது. இன்றைய உங்களது போக்கு அந்தப் பழைய வாசலை விரைவாக அடைத்துள்ளது. இந்த நிகழ்வுகள் எற்படுத்தக் கூடிய பாரிய விளைவுகளை நீங்கள் அவதானமாகப் பரிசீலிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட எல்லோரது நன்மைக்காகவும் உடனடியாக இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று மிகப் பணிவோடு வேண்டுகின்றேன். இப்படியான ஒரு சூழ்நிலையில் போராளிகளை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வரும்படி தூண்டுவது இயலாத காரியம் என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள். டிசம்பர் 19 தீர்வுகள் பற்றி



தெளிவில்லாமல் இருக்கிறீர்கள். பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இராணுவ நடவடிக்கைகளில் தங்கி இருப்பது, நீங்கள் மகாத்மா காந்தி அவர்களின் அஹிம்சையை உதறிவிட்டீர்கள் என்பதைக் காட்டுகிறது. வன்முறை மேலும் வன்முறையை வளர்க்கும். குரோதம் மேலும் குரோதத்தை உண்டாக்கும் என்பதனால் பேச்சுவார்த்தை மூலம் நீங்கள் பிரச்சினையைத் தீர்க்க முன்வரும்படி அடக்கமாகக் கேட்கிறேன். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினை தீர்ப்பதை இலங்கை அரசு நிராகரித்து வன்முறையை வளர்த்துச் செல்வது எம்மை முழு நிலைமைகளையும் புதிய கோணத்திலிருந்து நோக்கத் தூண்டும். இந்தத் தனிப்பட்ட செய்தியை இந்த மார்க்கமாக அனுப்பவது நீங்கள் இதன் இரகசியத்தை வெளியிட மாட்டீர்கள் என்ற நம்பிக்கையிலேயே. நல் வாழ்த்துக்கள்."

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களது வேண்டுகோளை இலங்கை அரசு தூக்கி வீசிவிட்டு யாழ்ப்பாணத்தைத் தரை மட்டமாக்கி அதன் மூலம் கட்டாய தீர்வைத் தமிழர் மீது திணிக்க முடிவு செய்தது.

1987 மே 26ந் திகதி நள்ளிரவு யாழ்ப்பாணத்தில் பலாலி முகாமிலிருந்த இராணுவம் தொண்டைமனாறு ஊடாக வடமராட்சி மீது படை எடுத்தது. இந்தப் படையெடுப்பில் பிரிகேடியர் டென்சில் கொப்பகடுவ தலையில் ஒரு படைப் பிரிவு பருத்தித்துறை நோக்கி முன்னேறியது. இன்னொரு படைப் பிரிவு கேணல் விஜய விமலரதத்தின தலைமையில் உடுப்பிட்டி நோக்கி முன்னேறியது. ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் சிறிய எதிர்ப்புக் காட்டினர். பின்னர் இராணுவம் கைகளை ஆட்டிக்கொண்டு முன்னேறியது. விமானங்கள் என்றும் இல்லாதவாறு குண்டு மாரி பொழிந்தன. வடமராட்சியில் பீப்பாக் குண்டுகள் எழுப்பிய கரும்புகை மண்டலங்கள் தரையிலிருந்து வானத்தை நோக்கி எழுந்தவண்ணம் இருந்தன. கவசவாகனங்கள் படையெடுத்தன. 75மிமி. 120மிமி றொக்கட்டுகள் பறந்து அழிவு செய்தன. நகரும் படைகளின் துப்பாக்கிச் சன்னங்கள் மழையாகப் பொழிந்தன. ஓடித்தப்பக் கூடியவர்கள் வெறும் கைகளுடன் ஓடிக்கொண்டிருந்தார்கள். ஹெலிகொப்டர்கள் பறந்து பறந்து தரையில் பயந்து ஓடும் மக்களை நோக்கிச் சுட்டன. அந்தப்படை எடுப்பு இரண்டு தினங்களில் வெற்றியாக முடிந்தது. முழு யாழ்ப்பாணமும்

ஊரடங்குச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி, புலோலி ஆகிய இடங்களில் புதிய படை முகாம்கள் நிறுவப்பட்டன. ஜனாதிபதி ஆக்கிரமிப்பு ஆவேசத்தில் படைத் தளபதிகளுக்கு கட்டளையிட்டார்: "யாழ்ப்பாணத்தை அடித்து நொருக்கித் தரைமட்டமாக்கு. யாழ்ப்பான நகரை தீக்கிரையாக்கு. பின்னர் கட்டி எழுப்பலாம்." மே 27ந் திகதி இலங்கை தேசிய வங்கியின் திறப்பு விழாவில் பேசும் போது ஜனாதிபதி ஜயவர்த்தன சொன்னார் "இந்தத் தடவை சண்டையானது சண்டைக்கு முடிவுகட்டும் சண்டை" என்றார்.

பின்னர் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் திரு. ஜே.என். தீக்சிற்றுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு தான் சொல்லும் எச்சரிக்கையை ஜனாதிபதி ஜயவர்தன அவர்களுக்கு அறிவிக்கச் சொன்னர். அவர் சொன்னவற்றை ஹைகொமிசனர் திரு.ஜே.என்.தீக்சிற் ஒரு 'என்வலப்பில்' குறித்துக்கொண்டார்.

ஜனாதிபதி ஜயவர்தன அவர்களைச் சந்தித்து பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களது செய்தியை திரு. தீக்சிற் சொன்னார். அவை:

1 இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு ஏமாற்றத்தையும், கவலையையும் கொடுத்துள்ளன.

2 1983 இனக் கலவரத்தின் பின்னர் மிகப் பெருமளிவில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். அதனால் இந்திய மக்கள் மத்தியில் ஆத்திரவுணர்வு தோன்றி உள்ளது.

3 இலங்கையின் இராணுவ நடவடிக்கை இரு நாடுகளுக்கும் இடையில் நடந்து கொண்டிருந்த பேச்சுவார்த்தையின் போக்கை முற்றாக மாற்றி உள்ளது.

4 யாழ்ப்பாணத்தில் நடப்பது இன அழிப்பு. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

5 இலங்கை தனது இராணுவ நடவடிக்கையைப் புனர் ஆலோசனை செய்ய வேண்டும். அல்லது இந்தியா தனது இலங்கை தொடர்பான கொள்கையை மாற்ற நேரிடும்.



ஜனாதிபதி ஜயவர்த்தன அவர்கள் திரு. தீக்சிற்குப் பதில் அளிக்கும் போது "அவருக்கு சொல்லு அவர் சொன்னவற்றை நான் கருத்தில் எடுக்கும் அதே சமயம் இராணுவ நடவடிக்கை தொடரு மென்று" என்று பதிலளித்தார்.

தொடர்ந்து இராணுவம் படை எடுத்து வலிவடக்கில் பாலாலி இராணுவ முகாமைச் சுற்றிய கட்டுவன், வருத்தலைவிளான், குரும்பசிட்டி, வசாவிளான். ஒட்டகப்புலம், பலாலி, மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறை, வீமன்காமம், மாவிட்டபுரம், கீரிமலைப் பகுதிகளைக் கைப்பற்றியது. பலாலி முகாமைச் சுற்றிப் பங்கர்களை அமைத்துப் பல மாதங்களாக இராணுவம் வெளியேறாமல் காவல் காத்த புலிகள் ஒற்றைச் சன்னத்தைக்கூடச் செலவழிக்காமல் பின்வாங்கினர். டாங்கிகள் இரைந்து கொண்டு முன்னேறின. விமானங்கள் குண்டுகள் போட்டன. ஹெலிகள் சன்னங்களை ஏவின. இராணுவம் மழைபோல துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி முன்னேறியது. மக்கள் குடியிருந்த ஊர்களைவிட்டுத் தலையில் மூட்டை முடிச்சுக்களுடன் தஞ்சம் தேடி ஓடினர். தெல்லிப்பழை டச்சு றோட்டில் குற்றுயிரோடு கிடந்த மனிதனை காவோலை போட்டுக் கொழுத்திச் சாகடித்தனர். சுட்டுச் செத்தவர் களைக் கிணறுகளுள் போட்டனர். ஆங்காங்கு பிரேதங்கள். குண்டு வீச்சுக்குள் சிக்கிச் சிலர் இறந்தனர். வீடுகளில் இருந்த பொருட்களை இராணுவத்தினர் கொள்ளை அடித்தனர். இந்த ஆசிரியரின் வீட்டில் இருந்த நூல் நிலையத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களைத் தெரிந்தெடுத்து பொருட்களோடு சேர அள்ளிச் சென்றனர்.

கைப்பற்றிய பிரதேசத்தின் தென் எல்லை நீளத்துக்கு இருந்த வீடுகளைத் தகர்த்தனர். அந்த நீளத்துக்குக் கம்பி வேலி போட்டனர். அதன் ஓரமாக நிலக்கண்ணி வெடிகளைப் புதைத்தனர். புதிய படை முகாம்களை அமைத்தனர். முகாம்களுக்குள் இருந்து கண்களில் எல்லைக்கப்பால் தெரிந்தவர்களை ஸ்னைப்பர் துப்பாக்கியால் தொடர்ந்து சுட்டனர். அவ்வாறு இறந்தவர்களில் ஒருவர் வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் சிவராசா.

# அதிகாரம் 49
# "யாழ்ப்பாணம் வீழ்ச்சியடையக்கூடாது"

யாழ்ப்பாணத்தில் நடக்கும் அட்டூழியங்களை அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் நாடு முதல் அமைச்சர் ஸ்ரீ எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி முறையிட்டார். அவர் உடனடியாக புதுடில்லி சென்று பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களை நடவடிக்கை எடுக்கும்படி நெருக்கினார். மற்றும் ராஜீவ் காந்தி அவர்களுக்கும், இந்திய அரசில் தலைவர்களுக்கும் இலங்கை இராணுவத்தின் படை எடுப்பால் மக்கள்படும் இன்னல்களை அமிர்தலிங்கம் அவர்கள் பிரசாரித்தார். ஊடகங்களை அழைத்துச் சிங்கள அரசு குண்டுகளைச் சரமாரியாகப் பொழிந்து யாழ்ப்பாணம் முழுவதையும் அழிப்பதாகப் பிரசாரம் செய்தார். இராணுவ ஆக்கிரமிப்பு தமிழ் நாட்டில் கொந்தளிப்பபை ஏற்படுத்தியது. தமிழ் நாடு - மத்திய அரசைப் புறக்கணித்து - யாழ்ப்பாணத்தை ஆதரித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆபத்தும் காணப்பட்டது. இந்திய மக்கள் அரசியல் ரீதியிலும் உணர்வு ரீதியிலும் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு அழுத்தம் கொடுத்தார்கள்.

பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் "யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா படைகள் வசம் வீழ்ச்சி அடையக் கூடாது" என்று இலங்கையில் இருந்த ஹைகொமிசனர் திரு. ஜே.என்.தீக்சிற்கு அறிவித்தார். தீக்சிற் அவர்கள் அந்தச் செய்தியை ஜனாதிபதி ஜயவர்தனவைச் சந்தித்துத் தெரிவித்தார். இந்திய அரசு என்ன நினைத்தாலும் இராணுவ நடவடிக்கை தொடரும் என்று ஜனாதிபதி ஜயவர்த்தன அவர்கள் சூடாகப் பதிலளித்தார்.

"இந்தியா என்ன பண்ணும் என்று நீ கருதுகிறாய்? ராஜீவ் காந்தியின் புத்திமதியைக் கேட்காவிட்டால் இலங்கைக்கு என்ன நடக்கும் என்று நீ எண்ணுகிறாய்?" என்று ஜனாதிபதி ஜயவர்த்தன அவர்கள் கோபமாக வார்த்தைகளைக் கொட்டினார்.

"ஐயா, ராஜீவ் காந்தி அவர்களின் ஆலோசனைகளைப் புறக்கணித்தால் வரும் விளைவுகளை இன்னது என்று சொல்ல முடியாது. அதற்கான பொறுப்பு தனித்து உங்கள் மீதே விழும்" என்றார் திரு. தீக்சிற்.



"என்ன வரும்" என்று திருப்பிக் கேட்டார். தமிழ் ஈழம் மலரும் என்ற கருத்துப்பட திரு. தீக்சிற் பதிலளித்தார். அத்தோடு இலங்கை ஜனாதிபதி அவர்களின் மிடுக்கு இறங்கியது.

பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் மே 28ஆம் திகதி ஊடகங்களை அழைத்து தெளிவான எச்சரிக்கைச் செய்தியை இலங்கைக்குத் தெரிவித்தார்:

"தமிழர்களின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியா தலையிடும். இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் படுகொலைகளை அதிகரிக்கின்றன. கடந்த ஒரு சில நாட்களுள் நூற்றுக் கணக்கான வர்கள் இறந்துள்ளனர். தமிழ்ப் பயங்கரவாதிகளை அழிப்பதாகச் சொல்லிக்கொண்டு அப்பாவிப் பொது மக்களைக் கொன்று குவித்துள்ளார்கள். கடந்த பல வருடங்களாக இலங்கை அரசு காலங் கடத்துவதற்காகவே பேச்சுவார்த்தையை இழுத்தடித்து வந்துள்ளது என்பது தெரியவருகிறது."

இந்தியா தாமதம் இல்லாமல் நடவடிக்கையில் இறங்கியது. யூன் 4ந் திகதி இந்தியா வத்தைகளில் யாழ்ப்பாண மக்களுக்கு உணவுப் பொருட்களையும் மருந்து வகைகளையும், வைத்தியர் களையும் அனுப்பியது. அதனை இலங்கைக் கடற்படை தடுத்தது. அதனால் அந்த வத்தைகள் திரும்பிச் சென்றன. அமைச்சர் அத்துலத் முதலி தமது கடற்படையின் செயலை வீரதீரச் செயலாகப் புகழ்ந்தார். சிங்களப் பத்திரிகைகள் தமது கடற் படையின் கெட்டித் தனத்தைப் போற்றி எழுதின. இந்திய தூதுவர் திரு. தீக்சிற்கு அது வயிற்றில் புளியைக்கரைத்து ஊற்றியது. அதனைத் தொடர்ந்து இந்தியா 'பூமாலை ஒப்பரேசனை' மேற்கொண்டது. அதன் வரை படத்தில் அமிர்தலிங்கம் அவர்களுடைய மூளாயில் அமைந்த இல்லமே பூமாலையின் பதக்கமாக அமைந்திருந்தது. யூன் மாதம் 4ந் திகதி விமானப் படையைச் சேர்ந்த AN32 வகை ஐந்து விமானங்கள் பங்களூர், தாம்பரம் ஆகிய இடங்களிலிருந்து உணவுப் பொதிகளுடன் யாழ்ப்பாணம் புறப்பட்டன. அவற்றுக்கு பாதுகாப்பாக நாலு மிராஜ் சண்டை விமானங்கள் பறந்தன. இவை மாலை 5.00 மணிக்கு யாழ்ப்பாணத்தை அடைந்தன. மொத்தம் 25 மெற்றிக் தொன்

உணவையும் மருந்துப் பொதிகளையும் யாழ்ப்பாணத்தில் போட்டன. விமானங்கள் உணவுப் பொதிகளைப் போடுவதற்கு நான்கு மணி நேரத்தின் முன்னர் திரு. தீக்சிற் இலங்கை அரசுக்கு விமானங்கள் உணவுப் பொதிகளைப் போடப் போகும் செய்தியைக் கூறினார்.

உடன் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன பிரித்தானிய, அமெரிக்க அரசுகளுடன் தொடர்பு கொண்டு, இந்தியா அடாத்துப்பண்ணுகிறது. உங்கள் உதவி தேவை என்று வேண்டினார். அவை கையை விரித்த பின்னரே 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கையைச் செய்ய ஒப்புக்கொண்டார். அரசியல் வட்டத்தில் நரியன் என்று அழைக்கப்படும் ஜயவர்த்தனவின் தோல்வி இலங்கை அரசியல் வரலாற்றில் கரும்புள்ளியாகவே அமையும். அது பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்திக்குக் கிடைத்த வெற்றியாகும். ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் எதனை ஈழத் தமிழ் மக்களுக்குச் செய்ய விரும்பினாரோ, அதனை அவர் மகன் வரலாற்றில் எழுதி முடித்தார். அந்த ஒப்பந்தத்தின் நன்மையை அனுபவிக்கத்தெரியாத ஒரு ஈழத் தமிழர் தலைமுறை இலங்கையில் வாழ்ந்ததாக எதிர்கால வரலாற்று மாணவர்கள் தங்கள் விடைத் தாள்களில் எழுதுவார்கள்.

அதன் பின்னர் இலங்கை அரசு இராணுவ நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தது. இந்தியா கடல் மார்க்கமாக உணவை அனுப்ப இலங்கை அரசு சம்மதித்தது. உப்பு, பருப்பு, தீப்பெட்டி, எண்ணெய், அரிசி, முதலிய பொருட்கள் தாராளமாக இடம் பெயர்ந்து வாழ்ந்த மக்களுக்குக் கிடைத்தன.

அமிர்தலிங்கம் அவர்களது கடிதங்களில் முன்வைக்கப்பட்ட அம்சங்களை அடிப்படையாக வைத்து இந்திய-இலங்கை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது. எனினும் அது அமிர்தலிங்கம் அவர்களது முன்வைப்பை அப்படியே ஏற்கவில்லை. இச்சமயத்தில் விடுதலைப் புலிகளும் தாம் சமாதானத்துக்கு ஆயத்தம் என்ற செய்தியை ஒரு இந்திய பத்திரிகை ஆசிரியர் மூலம் இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தினர்.

இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலக முதலாவது செயலாளர் திரு. ஹர்தீப் பூரி யாழ்ப்பாணம் சென்று இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை திரு. பிரபாகரனுக்கு விளக்கினார். அவர் இரண்டு நிபந்தனைகள்



விதித்தார். ஒன்று: 1987 மே 25ஆம் திகதியின் பின்னர் இராணுவம் வடமராட்சியில் நிறுவிய படை முகாம்களை வாபஸ் செய்ய வேண்டும். இரண்டு: எம்.ஜி.ஆரைச் சந்திக்கத் தன்னை சென்னை கொண்டு செல்லவேண்டும். அங்கிருந்து பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களைச் சந்திக்க புதுடெல்லி கொண்டு செல்ல வேண்டும் என்றும், அத்தோடு தனது பாதுகாப்பு அதிகாரிகளையும், சிரேட்ட ஆலோசகர்களையும், தனது மனைவி பிள்ளைகளையும் இந்தியா கொண்டு செல்ல வேண்டும் என்றும் கேட்டார். அதற்கு பூரி சம்மதித்து இரண்டு ஹெலிகொப்டர்களில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து திருச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து விமானத்தில் சென்னை கொண்டு செல்லப்பட்டனர். அச்சமயத்தில் விடுதலைப் புலிகளின் செய்தித் தொடர்பு சாதனங்கள் அது மகத்தான வெற்றி என்றும், தலைமை இயக்கமாக எல்.ரி.ரி.ஈ. அங்கீகாரம் பெற்றுவிட்டது என்றும் பிரகடனம் செய்தன. அந்த ஒப்பந்தம் திருவாளர்கள் அமிர்தலிங்கம் சிவசிதம்பரம் ஆகியோரைக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்ணித் தலைவர் களுக்கும் விளக்கப்பட்டது. அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டனர்.

சென்னையில் தனது குடும்பத்தைவிட்டபின் விடுதலைப் புலிகளின் தலைவர் புதுடில்லி சென்றார். அந்த ஒப்பந்தம் இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் மட்டும் செய்யப்பட விருப்பதையும், வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தற்காலிகமாக இணைப்பதையும் கொண்டுள்ளதால் தன்னால் அதனை ஏற்க முடியாதென்றார். சென்னை சென்ற பின்னரே திரு.பிரபாகரன் தான் முதலில் ஏற்றுக்கொண்ட ஒப்பந்தத்தைப் பின்னர் ஏற்க முடியாதென்று வாதாடியதாக திரு. தீக்சிற் கூறுகிறார். அதே சமயம் ஜனாதிபதி ஜயவர்தனவுக்கு பிரதமர் பிரேமதாச, அமைச்சர்கள் காமினி ஜயசூரிய, அத்துலத் முதலி ஆகியோர் வடகிழக்கைத் தமிழர் பாரம்பரிய பிரதேசமாக ஏற்கக் கூடாது, தற்காலிகமாகவும் இரண்டு மாகாணங்களையும் இணைக்கக் கூடாது என்று பெரும் அழுத்தம் கொடுத்தனர். மறு புறத்தில் ஜே.வி.பியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோவும் ஜனாதிபதிக்கு எதிராகக் கலகம் உருவாக்கத் திட்டங்கள் தீட்டிக்கொண்டிருந்தனர். ஜனாதிபதி ஜயவர்தன அவர்கள் ஒப்பந்தத்தைத் தள்ளிப் போட, வடகிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற விதியைத் தவிர்க்க, இயன்றளவு சாட்டுச்

சொல்லி முயன்று பார்த்தார். பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் சளைக்காத விடாப்பிடியான அழுத்தத்தால் - ஜனாதிபதி ஜயவர்த்தன அவர்கள் இறுதியில் அவரின் கேள்விக்கு இணங்க வேண்டியதாயிற்று. ராஜீவ் காந்தி அவர்கள் முன்வைத்தது வடக்கு கிழக்கு இணைந்த தீர்வே. ஆனால் திரு.ஜயவர்த்தன தனக்கு ஏற்படக்கூடிய கடும் எதிர்ப்பைக்காட்டி, பின்னர் அதனைத் தான் செய்து தருவதாக வாக்குறுதி கொடுத்து அதனைத் தற்காலிக இணைப்பாக்குவதில் வெற்றி கண்டார். வடகிழக்கைத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்று இலங்கை அரசை ஒப்புக்கொள்ள வைத்த மேன்மைதங்கிய ராஜீவ் காந்தி அவர்களது நாமம் தமிழ் ஈழ வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பதிவாகியுள்ளது. அத்தோடு முன்னைய ஒப்பந்தங்களைச் சிங்கள அரசு கிழித்தெறிந்தது போல இதனைத் தூக்கி வீச இந்தியா ஒரு பொழுதும் அனுமதியாத வாய்ப்பும் இருக்கிறது.

அன்னை இந்திரா காந்தி அவர்கள் இலங்கை விடயத்தைக் கையாண்ட முறைக்கும், ராஜீவ் காந்தி அவர்கள் இலங்கை விடயத்தைக் கையாண்ட முறைக்கும் வேறுபாடு உள்ளது. அன்னை இந்திரா காந்தி அவர்கள் அமிர்தலிங்கம் அவர்களை முதன்மைப் படுத்தி இலங்கையில் தலையிட்டார். இந்திய நாடாளுமன்றத்தில் பேசும் பொழுது அமிர்தலிங்கம் அவர்களது அழைப்பின் பேரில் தலையிடுவதாகப் பேசினார். உலக அரசியல் பார்வைக்கு அப்படி ஒரு அணுகுமுறை அவசியம் தேவைப்பட்டது. அவர் தனது பிராந்தியத்தில் உள்ள இலங்கையில் இன அழிப்பு நடப்பதாக உலகத்திற்குக் காட்டி நடவடிக்கையில் இறங்கினார். கொழும்பு அரசு வட்ட மேசை மாநாட்டைக் கூட்டச் செய்து அதன் மூலம் ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தார். ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் தான் தலையிடுவதற்கு உலகத்துக்குக் காரணம் காட்ட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அதை அவரின் தாயார் செய்திருந்தார். எனவேதான் தாயின் வழியைப் பின்பற்றிப் பின்னணியில் உள்ள அமிர்தலிங்கம் அவர்களை முதன்மைப்படுத்தாமல், தனது வழியில் இலங்கையில் தலையீடு செய்தார். அது பாட்டன் ஜவகர்லால் நேருவின் வழிவந்த குணச்சித்திரத்தின் ஓர் அங்கம். ஜனாதிபதி ஜயவர்த்தன அவர்கள் ராஜீவ் காந்தி அவர்களுக்கு எழுதிய ஒரு



கடிதத்தில் 'அமிர்தலிங்கம் சொல்வதை நம்ப வேண்டாம்' என்று எழுதுமளவுக்கு அமிர்தலிங்கம் அவர்களின் அழுத்தம் பின்னணியில் இருந்தது. 1985 ஜனவரி 2ந் திகதிக்கும் 1987 அக்டோபர் 28ந் திகதிக்கும் இடையில் மொத்தம் 14 கடிதங்களை பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு அமிர்தலிங்கம் அவர்கள் எழுதினார்கள். விடுதலைப் போராட்ட வரலாற்றையும், சிங்கள அரசுகளின் ஏமாற்று வித்தைகளையும் உள்ளடக்கிய அக்கடிதங்களில் தமிழர்கள் எவ்வகையான தீர்வை எதிர்பார்க்கிறார்கள் என்பது வெகு நுணுக்கமாகச் சொல்லப்பட்டிருந்தன. இக்கடிதங்கள் அனைத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்டுள்ள 'இலங்கையில் அதிகாரத்தைப் பரவலாக்குதலை நோக்கி' என்ற ஆங்கிலப் பிரசுரத்தில் உள்ளன. அவற்றை ஒட்டியே டிசம்பர் 19 தீர்வும், 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தமும் தயாரிக்கப்பட்டன. தாய் ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் புதுடில்லி நாடாளுமன்றத்தில் இலங்கை அரசை வன்மையாகக் கண்டித்த பொழுதும் செயல் முறையில் மென்மையான போக்கைக் கடைப்பிடித்தார். எதிர்மாறாக மகன் ஸ்ரீ ரராஜீவ் காந்தி அவர்கள் பிராந்திய வல்லரசின் பிரதமர் என்ற இறுமாப்போடு செயலாற்றினார். அவர் டிசம்பர் 19 தீர்ப்பை ஏற்கச் சொல்லி ஜனாதிபதி ஜயவர்தனவை வற்புறுத்தினார், 'உச்ச இரகசியம்' என்ற கடித மூலம் ஜனாதிபதியை எச்சரித்தார், தூதுவர் ஜே.என்.தீக்சிற்றை ஜனாதிபதியிடம் அனுப்பி யாழ்ப்பாணத்தில் நடப்பது இன அழிப்பு, யாழ்ப்பாணம் வீழ்ச்சி அடையக்கூடாது என்று கண்டனம் தெரிவித்தார், வத்தைகளில் உணவுப் பொருட்களும் மருந்தும் டாக்டர்களும் அனுப்பினார், மிராஜ் சண்டை விமானங்களின் உதவியோடு உணவு மருந்துப் பொட்டலங்களை ஆகாயத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் இறக்கம் செய்தார். அச்சமயம் "பிரபாகரன் உட்படப் புலிகளின் பேச்சாளர்கள் இந்நடவடிக்கையைப் பெரிதும் பாராட்டியதுடன் இந்தியாவிற்கு நன்றியறிதலையும் தெரிவித்துக்கொண்டனர்" என்று 'முறிந்த பனை' பதிவு செய்துள்ளது. கப்பல்கள் மூலம் உணவுப் பொருட்களை காங்கேசன்துறைத் துறைமுகத்தில் இறக்கி இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகம் செய்தார். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் திணித்தார், படைகளை விமானங்கள் மூலமும் கப்பல்கள் மூலமும் இறக்கினார். மகனின் பங்களிப்பு தாயாரின் மங்களிப்பைவிடப் பல மடங்கு அதிகம். அமிர்தலிங்கம் அவர்களது

வேண்டு கோளை ஒட்டி 'இந்த மண் எங்கள் சொந்த மண்' - வடகிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் - என்பதைச் ஸ்ரீலங்கா அங்கீகரிக்கச் செய்து வரலாற்றில் பதித்தவர் பாரதப் பிரதமர் மேன்மை தங்கிய ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களே. அன்றைய சூழ்நிலையில் அதனை அவர் செய்து முடித்திருக்கா விட்டால், எதிர்காலத்தில் அப்படி ஒரு வரலாற்றை எழுதும் வாய்ப்பு எப்போதாவது தமிழினத்துக்குக் கிட்டியிருக்குமா? எவ்வாறாயினும் அமிர்தலிங்கம் அவர்களுக்கு இந்திய-இலங்கை ஒப்பந்தம் பூரண திருப்தியைக் கொடுக்கவில்லை. அன்றைய சூழ்நிலையில் கிடைத்த பங்கோடு அவர் திருப்தி அடைய வேண்டியவராக இருந்தார். அதனை உணர்ந்த ஒரு வல்லரசு அவரைத் தம்பக்கம் இழுக்க முயன்ற செய்தி வேறோரிடத்தில் உள்ளது.

# அதிகாரம் 50
# இந்திய-இலங்கை ஒப்பந்தம்

1987 யூலை 27 அன்று ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் இலங்கையுடன் ஒப்பந்தம் செய்தார். அந்த ஒப்பந்தம் எழுதப்படுவதற்கு முன்னர் இயக்கங்கள் அரசியல் கட்சிகள் யாவற்றதும் ஒப்புதல் பெறப்பட்டதாக இந்திய தரப்பில் கூறப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில் குறித்த முக்கிய அம்சங்கள்:

1 வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம்.

2 தமிழும் ஆங்கிலமும் சிங்கள மொழிக்குச் சமமான உத்தியோக மொழிகளாக இருக்கும்.

3 வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்து ஒரே ஆட்சி அலகாக இருக்கும். அது தொடர வேண்டுமா என்பது ஒரு வருடமுடிவில் கிழக்கு மாகாணத்தில் நடாத்தப்படும் ஒப்புதல் வாக்கு எடுப்பு மூலம் தீர்மானிக்கப்படும். ஜனாதிபதி விரும்பினால் வாக்கெடுப்பை ஒத்திப் போடலாம்.



4 ஓர் இடைக்கால மாகாண அரசும், ஓர் இடைக்கால மந்திரிசபையும் நிறுவப்படும். அவை 17 மாதங்களுக்கு ஆட்சி செய்யும்.

5 மகாண அரசுக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய 1987 டிசம்பரின் முன்னர் தேர்தல் நடாத்தப்படும்.

6 அதிகாரங்களைப் பரவலாக்க அரசியல் திட்டத்தில் அதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்தல் வேண்டும்.

7 இராணுவம் புதிய முகாம்களை விட்டு வெளியேறி 1987 மே25ந் திகதியில் இருந்த எல்லைக்குள் செல்ல வேண்டும்.

8 அரசியல் கைதிகளுக்கும், பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.

9 வடகிழக்கு மாகாணங்களில் இருந்து அரசாங்கம் அதிரடிப் படைகளை (STF) மீளப் பெற வேண்டும். வடகிழக்கில் உள்ள ஊர்காவல் படைகளைக் கலைக்க வேண்டும்.

10 தமிழ் ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும். இதற்குக் கண்டிப்பான கால எல்லை குறிக்கப்படவில்லை.

ஒப்பந்தத்தை அடுத்து யூலை 29ந் திகதி இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வரத்தொடங்கியது. அதிகாலையிலேயே AN-12, AN-32 அன்டனோவ் வகை 24 விமானங்கள் அடுத்தடுத்து பாலாலி விமான நிலையத்தையடைந்து ஜவான்களை இறக்கின. அந்த இராட்சத விமானங்கள் இறங்குவதும் ஏறுவதுமாக இருந்தன. பாலாலியைச் சுற்றிய ஊர்மனைகளின் பனை தென்னை கமுகு ஓலைகளும் வேம்பு பலா மா தாவர கிளைகளும் ஓய்வில்லாமல் அசைந்தாடி வரவேற்றன. இந்தியக் கப்பல்கள் ஜவான்களை காங்கேசன்துறையில் இறக்கத் தொடங்கின. ஜவான்களுக்காக அறுக்கப்பட வெள்ளாடுகளும் பட்டி பட்டியாக இறக்கப்பட்டு செம்மண்ணின் மேலே தலைகாட்டும் சுண்ணக்கல்லும், காரை சூரை கள்ளிப் பற்றைகளும் நிறைந்த கலட்டிகளிலும், பனைகள் நிறைந்த பகுதிகளிலும் மேய விடப்பட்டன.

இலங்கைக்கு வந்த இந்தியப் படைப்பிரிவுகள்: 24வது காலாட் படைப் பிரிவு, 340வது காலாட் படைப்பிரிவு, பிராந்திய றிசேவ் படைப்பிரிவு, 10வது பராமிலிடரி கொமாண்டோ படைப்பிரிவு, 65வது கவச வாகனப் பிரிவு, 91வது காலாட் படைப் பிரிவு, 5வது மட்றாஸ் றெஜிமென்ட், 8வது மராத்திய றெஜிமென்ட் என்பனவே முதலில் இலங்கையை அடைந்தன. இப்படைகளுக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஹூர்கிரத் இங்கு வந்தார்.

இந்தியப் படை யாழ்ப்பாணம் வந்த இரண்டாவது தினமே உயர் பாது காப்பு வலயம் என்று சொல்லப்படும் - காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி, கட்டுவன், குரும்பசிட்டி, வறுத்தலைவிளான், தையிட்டி, வீமன்காமம், மாவிட்டபுரம் - பகுதிகளில் உள்ள வீடுகளை விட்டுப் பயந்தோடி இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்த மக்கள் தங்கள் இல்லங்களுக்குத் திரும்ப முடிந்தது. அப்பொழுது அங்கு புதிதாக முகாம் அமைத்து வாழ்ந்த சிங்களப் படை வீரர்கள் வெறுங்கைகளுடன் வெளியேறிக் கொண்டிருந்தனர். அவர்கள் பாவனைக்கு கொண்டு வந்த உணவுப் பொருட்களை எடுக்காமலே வெளியேறினர். முந்திச் சென்றவர்கள் அவர்கள் விட்டுச் சென்ற பொருட்களை அள்ளிச் சென்றனர்.

வடகிழக்கை ஆட்சி செய்ய நிறுவப்பட்ட இடைக்கால அரசின் தலைமைப் பொறுப்பு விடுதலைப் புலிகளிடமே கொடுக்கப்பட்டது. 12 பேர் கொண்ட ஆட்சிச் சபையில் விடுதலைப் புலிகளுக்கு 5 தானங்கள் வழங்கப்பட்டிருந்தன. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 2 தானங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆட்சிச் சபையின் தலைவரைத் தெரிவு செய்யும் பொறுப்பும் புலிகளிடமே விடப்பட்டது. விடுதலைப் புலிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று தமிழ் மக்களின் இன்னல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க நிரம்ப வாய்ப்பும் அதிகாரமும் கிடைத்தன. அப்பொழுது இலங்கையில் காணப்பட்ட சூழ்நிலை அதற்கு மிக வாய்ப்பாக இருந்தது.

யூன் 25ந் திகதி நிவாரணப் பொருட்கள் ஏற்றி வந்த இந்தியக் கப்பல் காங்கேசன்துறையை அடைந்தது. இந்தியத் தூதரக அதிகாரிகளான திரு. பூரியும், கப்டன் குப்தாவும் அங்கிருந்து வாகனத்தில் யாழ்ப்பாணம் சென்றனர். வீதிகளின் இருமருங்கும் மக்கள்



நின்று கையசைத்து "இந்தியா வரவேண்டும், எங்களைப் பாதுகாக்க வேண்டும்" என்று கோசம் எழுப்பினர்.

யூலை 29ந் திகதி இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் கால்மிதித்ததும் தமிழ் மக்கள் கவலைகள் எல்லாம் கதிரவனைக் கண்ட பனிபோலப் பறந்து போயிற்று. அல்லலுற்றுக் கண்ணீர் வடித்துத் திக்குத்திசை தெரியாமல் உழன்ற மக்களுக்கு அது ஒரு பொன்னான நாள். சுபீட்சம் நிறைந்த எதிர்காலம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் இந்திய ஜவான்களை ஆபத்தாண்டவர்களாகப் பார்த்தனர். தாம் காலாதி காலமாக எதிர்பார்த்த இந்தியா வாசலில் நிற்பதைக் கண்ட பொழுது பாரத தேசம் அவர்களுக்கு அருள்பாலிக்கும் தெய்வப் பூமியாகவே தெரிந்தது.

1987 இந்திய-இலங்கை ஒப்பந்தங்காரணமாக இலங்கை இராணுவம் பழைய முகாம்களுக்குள் முடங்கிக்கிடந்தது. சில சிங்கள இராணுவ அதிகாரிகள் ஆயுதம் இல்லாமல் முகாம்களை விட்டு வெளியேறி மக்களோடு மகிழ்ச்சியாக அளவளாவினர். புலிகளுக்குக் கைகொடுத்து மகிழ்ச்சி கொண்டாடினர். தங்கள் பலாலி முகாம் களுக்குப் பிரமுகர்களை அழைத்தனர். ஒரு சிலர் போய் வந்தனர்.

அதுவரை இராணுவத்துக்கும், ஷெல்லுக்கும், குண்டு வீச்சு விமானங்களுக்கும் பயந்து ஓடி ஒழித்து உயிரைப் பிடித்து அழுதுகுளறி வாழ்ந்த மக்கள் வதனங்கள், சூரியனைக் கண்ட செந்தாமரைகளாக மலர்ந்தன. மக்கள் மனநிலையை அப்பொழுது யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய சிங்கள இராணுவ அதிகாரி ஒருவர் பின்வருமாறு தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

"யாழ்ப்பாண மக்கள் அளித்த பிரமாண்டமான வரவேற்பைக் கண்டு இந்திய அதிகாரிகளும் மற்றவர்களும் ஆச்சரியப்பட்டார்கள். பட்டாசுகள் கொழுத்தப்பட்டன. மலர் மாலைகள் அணிவித்துக் கௌரவித்தார்கள். தங்களை இன்னல்களில் இருந்து விடிவிக்க வந்த ஆபத்தாண்டவர்களாக அவர்களை மதித்தார்கள். சமாதானம் வரும் என்று கனவு கண்டார்கள். ஈழம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. விடுதலைப் புலிப் பிரமுகர்களுடன் இந்திய அதிகாரிகள் கைகுலுக்கினார்கள். விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதி காக்கும் படைக்கும் இடையில் சிநேகிதபூர்வ சூழல் நிலவியமை வெளிப்படையாகத் தெரிந்தது."

"மாத்தையா இந்திய இராணுவ அதிகாரிகளோடு நட்பாகப் பழகினார். அவர் சில இராணுவ அதிகாரிகளுக்கு இறாலும் கோல்ட்லீவ் சிகரட்டும் பரிசளித்ததை மக்கள் பார்த்து மகிழ்ந்தனர்."

இந்திய-இலங்கை ஒப்பந்தப்பிரகாரம் ஆயுதக் குழுக்கள் யாவும் ஒகஸ்ற் மாதம் 5ந் திகதி ஆயுத ஒப்படைப்புக்கு அடையாளமாக, ஆயுதங்களைப் பவனியில் எடுத்துச் சென்று பலாலியில் கையளித்தன.

இந்திய ஜவான்கள் கிராமப் புறங்களில் சுற்றிவர மதில்கள் கொண்ட கல்வீடுகளையும், தோட்டங்களில் உள்ள பயிர்வளங்களையும் பார்த்தபடி வலம் வந்தார்கள். யாழ் நகர கடைகளில் உள்ள மின் உபகரணங்களை வைத்த கண்வாங்காமல் பார்த்தனர். போகும் இடம் எல்லாம் புன்னகை அவர்களை வரவேற்றது அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தமிழ் பேசிய ஜவான்களோடு மக்கள் ஆனந்தமாக உரையாடினர். அவர்கள் விடுதலை வாங்கித்தந்த தூதுவர்களாக மக்கள் கண்களில் காட்சியளித்தார்கள்.

குமரப்பாவின் திருமணத்தில் கலந்து கொண்ட இந்திய இராணுவத்தைச் சேர்ந்த கேணல் ஒருவர் மணமகளுக்கு ஒரு சேலையைப் பரிசாகக் கொடுத்தார்.

திரு. பிரபாகரனுக்கும் இந்திய இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் நட்புறவிருந்தது. யாழ்ப்பாண இந்தியப் படையின் மேலதிகாரி மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங்கை அவரது தலைமைய கத்தில் திரு. பிரபாகரன் அடிகக்கடி சந்தித்து வந்தார். தகவல்: (J.N.Dixit in his book Assignment Colombo - Pirabhakaran who used to visit Major General Harkirat Singh's headquarters often, stopped interacting with the IPKF.)

மறு பக்கத்தில் தமிழ் மக்கள் ஆவலோடு காலம் காலமாக எதிர்பார்த்த பரவலாக்கப்பட்ட வடகிழக்கு இணைந்த ஆட்சி அதிகாரத்தைப் புலிகளிடம் கையளிக்கும் இறுதிக் கட்ட ஒழுங்குகள் நடந்து கொண்டிருந்தன.

இந்திய அமைதி காக்கும் படை இலங்கையை அடைந்ததை அடுத்து, வடகிழக்கில் நிலவிய சூழ்நிலையை 'முறிந்த பனை' என்ற வரலாற்றுப் பதிவேட்டில் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது:



"இந்திய அமைதிப் படையின் வருகையை இலங்கைத் தமிழர்கள் பெரிதும் வரவேற்றிருந்தனர். அவர்கள் யுத்தத்தை அல்ல, சமாதானத்தைக் கொண்டு நடத்தவே வந்திருந்தனர். சரியான கருமங்களை ஆற்றுவதன் மூலம் அதனை அவர்கள் நல்லவாறே ஆரம்பித்தனர். அவர்களைப் போய்ச் சுரண்டிய சந்தர்ப்பங்களிலும்கூட அவர்கள் கட்டுப்பாட்டுடனேயே நடந்து கொண்டிருந்தனர். முன்னைய எதிராளிகள் புதைத்துவிட்டுப் போயிருந்த நிலக்கண்ணி வெடிகளையெல்லாம் அவர்கள் செயலிழக்கச் செய்திருந்தனர். நிலக்கண்ணி வெடிகளை அப்புறப்படுத்தும் நிகழ்ச்சியில் விபத்துக்கு உள்ளாகி எட்டாவது படைப்பிரிவினைச் (பொறியியலாளர்கள்) சேர்ந்த மேஜர் திலீப் சிங், லெப்டினட் விக்கிரம் மற்றும் மொஹிந்தர் ராவ் ஆகியோர் கொல்லப்பட்டபோது யாழ்ப்பாணம் முழுவதும் சோகத்தில் ஆழ்ந்தது. யாழ்ப்பாண மக்களுக்காகவே இவர்கள் தம்முயிரை நல்கியிருந்தனர். மொஹிந்தர் ராவின் தாய் இந்த இதயத்தைப் பிழக்கும் செய்தியைக் கேள்வியுற்றதும் "அவன் அம்மாதிரி இறந்தது குறித்துச் சந்தோசப்படுகிறேன்" என்று தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் செப்டம்பர் மத்திக்குள் இந்திய அமைதிப் படைமீது இத்தகைய களங்கம் ஏற்பட்டது எவ்வாறு சாத்தியமாயிற்று? அக்டோபர் இரண்டாவது வராத்தில் நூற்றுக் கணக்கில் அப்பாவித் தமிழ் மக்களைப் பலி எடுக்கும் கொலைப் பாதகச் செயலில் அவர்கள் இறங்கியது ஏன்?"

"அவர்கள் (அமைதிப் படையினர்) செய்த நல்ல காரியங்கள் மிகப்பல. இராணுவரீதியான செயற்பாடுகளால் பொது மக்களின் வாழ்க்கை அச்சுறுத்தப்பட்ட நிலை அநேகமாக முடிவுக்கு வந்திருந்தது. தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர் அனைவரும் எங்கும் சுதந்திரமாக நடமாட முடிந்தது. திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் தாங்கள் முன்னர் வெளியேற்றப்பட்ட இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடிந்தது. திருகோணமலை நகருக்குள் அரசாங்கத்தின் அனுசரணையுடன் சிங்களக் காடையர்களால் பலாத்காரமாகப் பறிக்கப்பட்ட உடைமைகள் அதன் சொந்தக்காரர்களுக்கு கிடைக்கும் நிலை தோன்றியது. ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் நிலக்கண்ணிவெடிகள் யாவும் அகற்றப்பட்டு, ஷெல் தாக்குதல் நின்றுபோன நிலையில் மக்கள் அவ்விடங்களில் தத்தமது வீடுகளுக்குச்

சென்று வாழக்கூடியதாக இருந்தது. புகையிரதச் சேவைகள் சீரமைக்கப்பட்டன. புன்ரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பமாகும் சாத்தியக் கூறுகள் தென்பட்டன. பெரும் இழப்புகளுக்கு உள்ளானோருக்கு நிதிகள் வழங்கப்பட்டு உதவி கிடைக்கும் நிலையும் இருந்தது. இதனைவிட அரசியற் கைதிகளும் உண்மையில் விடுதலை செய்யப்பட்ட வண்ணம் இருந்தனர்."

இந்தச் சமாதானம் பொதிந்த மகிழ்ச்சியான சூழ்நிலை திடுதிப்பெனக் சிதையப் யார் காரணம்? மக்களின் எதிர்பார்ப்புக்கள் கானல் நீராகி யாழ்ப்பாணம் மரண வீடாக மாறியதற்குக் காரணமான நிகழ்ச்சி என்ன? அந்த நிகழ்ச்சியின் சூத்திரதாரி யார்? அதனைப் பற்றி எவரும் அவ்வளவாக அலட்டிக்கொள்வதில்லை.

வீடு ஓவென்று பற்றி எரிகிறது. கொடுந்தணல் சுவாலை சுட்டெரிக்கிறது. தீக்குச்சியைத் தட்டிக் காவோலைக் கூரையைப் பற்றவைத்தவன் தப்பா? அல்லது அந்த வீட்டுக் காவல்காரன் மீதுதான் தப்பா? இந்த விசாரணை தொடர என்ன இருக்கிறது? ஆனால் தொடர்கிறதே?

# அதிகாரம் 51
# உரலில் அகப்பட்டது

தென்றல் சுகத்தில் மக்கள் ஆனந்தித்துக் கொண்டிருந்த பொழுது திடுதிப்பென மணிக்கணக்கில் இடி முழங்கித் தீப்பந்தங்கள் கொட்டியது போல சுமுகமான சூழ்நிலையை மாற்றி, இந்திய அமைதி காக்கும் படைக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் போர் வெடிக்க எவரும் எதிர்பாராத ஒரு திடீர்ச் சம்பவமே காரணமாகியது. அந்தச் சம்பவம் நடந்திருக்காவிட்டால் வரலாறு இனிமையான வேறு கதை எழுதி இருக்கும்.

1987 ஆக்டோபர் 3ந் திகதி இலங்கைக் கடற்படை பருத்தித்துறைக்கு வடக்கே பாக்கு நீரிணையில் 'கடல்புறா' என்ற வத்தையில் பிரயாணித்த குமரப்பாவையும் அவரோடு கூடச் சென்ற 16 போராளிகளையும் கைது செய்து பலாலி சிங்கள இராணுவ



தலைமையகத்தில் ஒப்படைத்தது. அவர்களை இந்திய அமைதி காக்கும் படையால் விடுவிக்க முடியவில்லை. சிங்கள அமைச்சர் அத்துலத்முதலியின் மூர்க்கம்காரணமாக அவர்களை 5ந் திகதி கொழும்புக்குக் கொண்டு செல்ல முயன்ற வேளை காவலில் இருந்த விடுதலைப் புலிப் பிரமுகர்கள் யாழ்ப்பாணத் தளபதி குமரப்பாவும், திருகோணமலைத் தளபதி புலேந்திரனும் இன்னும் பத்துப் பேரும் சைனைட் குப்பிகளைச் சப்பித் தற்கொலை செய்தனர். சைனைட் குப்பிகளைச் சப்பிய ஐவர் உயிர் தப்பினர்.

பலாலியில் இராணுவ காவலில் இருந்த அவர்களை அந்தத் துன்பியல் நிகழ்வுக்கு முதல் நாள் மாத்தையாவும், அன்ரன் பாலசிங்கமும் போய்ப் பார்க்கப் புறப்பட்ட சமயம், திரு.பிரபாகரனும் அவரது தளபதிகளும் தமது கழுத்தில் தொங்கிய சைனைட் குப்பிகளைக் கழற்றி இருவரது கழுத்திலும் அணிவித்தனர். அந்த சைனைட் குப்பிகளைக் காவலில் இருந்த போராளிகளுக்குக் கொடுக்கும் படியும் கொழும்புக்குக் கொண்டு செல்ல முற்பட்டால் தற்கொலை செய்யும்படியும் திரு.பிரபாகரன் செய்தி அனுப்பினார்.

(தகவல்: The Will to Freedom by Adale Balasingham - 'Mr.Pirbhakaran and his commanders each took off his cyanide capsule and hung it around both Bala and Mathaya's necks with instruction to deliver them to the captured cadres.)

கொழும்புக்கு 17 பேரும் கொண்டு செல்லப்படுவதை விடுதலைப் புலிகள் வன்மையாக எதிர்த்தமைக்குப் புலேந்திரன் சம்பந்தப்பட்ட ஒரு விடயமே காரணம் என்று இலங்கை இராணுவ மேஜர் ஜெனரல் முனசிங்க கூறுகிறார். மூன்று மாதங்களுக்கு முன்னர் 1987 ஏப்பிரல் மாதம் திருகோணமலையை அண்டிய கொழும்பு செல்லும் பாதையில் உள்ள சிங்களப் பிரதேசத்தில் அமைந்த ஹபறணையிலும் ஹித்துலோடடுவாவிலும் வைத்து பஸ்வண்டிகளில் பிரயாணம் செய்த குழந்தைகள் பெண்கள் உட்பட 126 சிங்கள மக்களை தன் போராளி களோடு சென்று வாள்களால் வெட்டிக் கொன்றவர் புலேந்திரன் என்று இராணுவம் கூறுகிறது. குறித்த சம்பவத்தின் பொழுது உயிர் தப்பிய இரண்டு இராணுவத்தினரை அடையாளம் காண்பிக்க ஆயத்தமாக வைத்துக்கொண்டு, குமரப்பா முதலியோரை கொழும்புக்கு எடுப்பிக்க ஒற்றைக்காலில் நின்றார் அமைச்சர் அத்துலத்முதலி. அந்தப்

பயங்கர வெறியாட்டலின் சூடு தணியாமல் இருந்ததால், அதனால் பதினேழு பேரும் ஒட்டு மொத்தமாகப் பழிவாங்கலுக்கு இலக்காக நேரிடும் என்பதற்காகவே சைனைட் வில்லைகளைக் கொடுத்து அனுப்பினார் என்று இராணுவ தரப்பில் பேசப்படுகிறது.

குமரப்பா முதலியவர்களின் மறைவால் ஆத்திரத்துக்கு ஆளான விடுதலைப் புலிகள் பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்தனர். அன்றிரவு விடுதலைப் புலிகள் தமது காவலில் இருந்த 8 சிங்கள இராணுவ வீரர்களைக் கொன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் வீசினார்கள். கண்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட பிரேதங்களில் துப்பாக்கிச் சன்னங்கள் துழைத்த அடையாளங்கள் காணப்பட்டன. அந்த நிகழ்வை 'யாழ்ப்பாணக் குடிமகன் ஒவ்வொருவனும் வெட்கித் தலைகுனிய வேண்டிய இரவு' என்று 'முறிந்த பனை' நூல் குறிப்பிட்டுள்ளது. சீமெந்துத் தொழிற்சாலையில் கடமையாற்றிய இரண்டு சிங்கள உயர் அதிகாரிகள் - பொது முகாமையாளர் திரு.ஜயமான, துணைப் பொது முகாமையாளர் திரு.கஜநாயக்க - கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். திரு.ஜயமானமீது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். அவர்கள் காப்பாற்ற முயன்றனர். முடியாமல் போய்விட்டது. அவர் "என்ன பிரச்சினை நடந்தாலும் எனக்கு ஒரு ஆபத்தும் வராது" என்று தனது மனைவிக்குச் சொல்லிவிட்டு யாழ்ப்பாணத்தில் தங்கி வேலைசெய்தவர். வல்வெட்டித்துறையில் ஒரு சிங்கள காவல்துறையினர் மதுபானக் கடையில் இருந்தபொழுது இழுத்துச் சென்று விறகு கட்டையால் அடித்துச் சாகடிக்கப்பட்டார். பின்னர் அதனைப் பொதுமக்கள் செய்ததாக பிரசாரித்தனர்.

அக்டோபர் 6ந் திகதி மாத்தையா காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு எதிரே வைத்து ஐந்து இந்திய படை வீரர்களைச் சுட்டுக் கொன்றார். தொடர்ந்து ஆங்காங்கு இந்திய அமைதி காக்கும் படை ஜவான்கள் சுடப்பட்டார்கள். இந்திய ஜவான்களுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. வளர்த்த கடா மார்பில் பாய்வதைப் பார்த்து மலைத்தனர். திருப்பிச் சுடவில்லை.

அதனைத் தொடர்ந்து இந்திய அமைதி காக்கும் படை விடுதலைப் புலிகளுக்கு எதிராக 'ஒப்பரேசன் பவான்' என்ற போரை



அக்டோபர் 09ந். திகதி ஆரம்பித்தது. அன்று தொடங்கிய போர் 1990 ஆரம்பம் வரை நடந்தது. 1987 அக்டோபர் நவம்பர் டிசம்பர் மாதங்களில்தான் இந்தியப் படைகள் நாசம் புரிந்தன. குறிப்பாக யாழ் நகரமும், அதன் புறநகர்ப்பகுதியில் அமைந்த திருநெல்வேலி, ஊரெழு, உரும்பிராய், கொக்குவில், இணுவில், நல்லூர், கல்வியங்காடு, அரியாலை, சுண்டிக்குழி ஆகிய இடங்களுமே மிகவும் பாதிக்கப்பட்டன. விடுதலைப் புலிகளை அழிப்பதாகச் சொல்லி மக்களைக் கொன்று தள்ளின. பெண்களை மானபங்கப்படுத்தின, பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கின. பொதுமக்களுக்கு சொல்லொண்ணாத் துன்பஞ் செய்தன. அதனால் மக்கள் பட்ட துன்பங்களை எழுத்தில் வடிக்க முடியாது. மக்கள் பயத்தில் விழிபிதுங்கி வாழ்ந்தனர். வடகிழக்கு மண் செங்குருதியில் நீராடியது. பல நூறு உயிர்கள் இராணுவத்தாலும், ஷெல்களாலும் பலி எடுக்கப்பட்டன. முதியவர்களின் பிணங்களும் எலும்புக் கூடுகளும் வீடு திரும்பிய பிள்ளைகளையும் உறவினர்களையும் வரவேற்றன. இக்கொடுமைகளுக்கு புலிகளின் சுரண்டல்களே பல சந்தர்ப்பங்களில் காரணமாக இருந்தன.

சமாதான காலத்தில் மக்களைத் தம் உயிர் காக்கும் வெப்ப வலயக் காடு என்றும் தம்மைக் கெரில்லாக்கள் என்றும் கூறிய விடுதலைப் புலிகள், யாழ் நகர் நோக்கி முன்னேறிய இந்தியப் படையைச் சீண்டி காடு அழிக்கப்படுவதற்குக் காரணமாகினர். அதனைப்பற்றி அவர்கள் அற்பமும் அலட்டிக் கொள்ளவில்லை. மக்கள் தமது ஊர்மனைகளுக்குள் அல்லது அகதி முகாம்கள் அருகே களமெடுக்க வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டதையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை.

அக்டோபர் 23ந் திகதி நல்லூர் அகதி முகாமருகே அவர்களுக்கு ஒரு இளைஞன் கூறினான்: "நீங்கள் சண்டைபிடித்து இந்திய படையினரை வெளியேற்றிவிட முடியுமென்றால் நீங்கள் சண்டைபிடிப்பதில் எதாவது அர்த்தம் இருக்கும். ஆனால் இங்கு நீங்கள் சும்மா சிறிது நேரம் சுட்டுவிட்டு ஓடிப்போய்விடுவீர்கள். சனங்கள்தான் இதன் மோசமான விளைவுகளை அனுபவித்து வதைபட வேண்டியிருக்கிறது. கடைசியில் உங்களால் அடைய முடிந்த இலாபம் எல்லாம் இந்தியப் படையைச் சிறிது நேரம் தாமதித்துவிட்டதாகப் பெருமையடித்துக் கொள்வதுதான்." 'முறிந்த பனைப்' பதிவிலிருந்து.

மக்களை மையமாக வைத்துப் போராட்டத்தை முன்னெடுக்காத காரணத்தினாலேயே அத்தனை அழிவுகள். அவர்களுக்கு மக்கள் இரண்டாம் பட்சந்தான். இவ்வகையில் மக்கள் பாதிப்படைந்ததற்குப் பல பரிதாப நிகழ்வுகளை உதாரணங்களாகச் சொல்லலாம்.

அக்டோபர் 12ந் திகதி திருநெல்வேலியில் விடுதலைப் புலிகள் இந்திய அதிரடிப் படை பிரபாகரனைத் தேடிவரப்போவதை முன்னரே அறிந்து எதிர்பார்த்து நின்றார்கள். "அதிரடிப் படைகளை நோக்கித் தாங்கள் சுடப்போகிறோம் என்பது அவர்களுக்கு நல்லாகவே தெரியும். அப்படியிருந்தும் புலிகள் அதுகுறித்து பொது மக்களை எச்சரித்து வைக்கவில்லை." (முறிந்த பனை) அவர்கள் சுட்டதில் 29 இந்திய இராணுவ வீரர்கள் மரணித்தனர். இந்த நிகழ்வே இந்திய அமைதி காக்கும் படை நிதானமிழந்து செயல்படக் காரணமாகியது.

ஆக்டோபர் 20ந் திகதி உரும்பிராய் காளி கோவில் அருகே ஒரு நிலக்கண்ணிவெடி வெடித்ததில் சில இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இதனால் கூடச் சென்ற இராணுவத்தினர் வெறிகொண்டு பொது மக்களைச் சுட்டுத்தள்ளினர். கொல்லப்பட்ட வர்கள், இராணுவம் தம்மை ஒன்றும் செய்யாது என்று வீடுகளுக்குள் இருந்த முதியவர்களும் குழந்தைகளும் பெண்களுமாவர். எனையவர்கள் அதற்குள் வெளியேறிவிட்டனர்.

அக்டோபர் 22ந் திகதி கல்வியங்காட்டில் பிரசன்னம் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் அவ்வூர் வாசிகளின் வீட்டு வளவுகளுக்குள் இருந்துகொண்டு இந்திய இராணுவத்தை நோக்கிச் சுட்டுவிட்டு ஓடினர். அதனால் இந்தியத் துருப்புக்கள் பொது மக்களைக் கண்டபடி சுட்டுத்தள்ளின.

நவம்பர் முதல் வாரத்தில் அச்சுவேலியில் சில விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படையின் மீது கிரனைட்டுகளை வீசிவிட்டு, சட்டத்தரணி பாலசிங்கத்தின் வீடு வழியாகத் தப்பிச் சென்றனர். இதனால் இரண்டு இந்தியப் படைவீரர்கள் கொல்லப்பட்டனர். பாலசிங்கத்தின் வீட்டிற்குள் நுழைந்த இந்தியப் படையினர் சட்டத்தரணி பாலசிங்கத்தையும், அவரது மனைவியையும், அங்கிருந்த இன்னொருவரையும் வெளியே அழைத்து வந்து சுட்டுக் கொன்றனர்.



நவம்பர் 25ந் திகதி உடுவிலில் ஊர்மனையூடாக மேஜர் பரமேஸ்வரன் தலைமையில் ஒரு படை நகர்ந்தது. விடுதலைப் புலிகள் சுட்டதில் மேஜர் உட்பட மூவர் கொலை செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்த தாக்குதலில் 12 பொது மக்கள்வரை கொலை செய்யப்பட்டார்கள்.

இந்தியப் படைகளின் கொடுமைகளை விடுதலைப் புலிகள் சுரண்டியதால் ஏற்பட்ட நாசம் என்று வாதத்துக்குக் கூறலாம். எல்லா நாசத்துக்கும் அவர்கள் சுரண்டல்தான் காரணம் அல்ல. இந்திய இராணுவம் மனித நேயமற்ற காட்டு மிராண்டித்தனமாக நடந்ததை மறுக்க முடியாது. புத்தனும் காந்தியும் வாழ்ந்து காருண்யம் போதித்த நாட்டுப் படைகளின் கொலைகளும் கொடுமைகளும் கற்பழிப்பும் பாரதத்துக்குத் தீராத அபகீர்த்தியைப் பதிவு செய்து வைத்துள்ளன.

யாழ்ப்பாண அரசினர் போதனா வைத்தியசாலையில் டாக்டர்களும் ஊழியர்களும் நோயாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். புலிகள் அங்கிருந்து சுட்டதாக இராணுவ தரப்பில் சொல்லப்பட்டது. வைத்திய சாலையைச் சுற்றி நான்கு பக்கங்களும் வீதிகள் உண்டு. அப்படியானால் வைதியசாலையைச் சுற்றி வளைத்து, பின்னர் டாக்டர்கள் ஊழியர்கள் நோயாளிகளை ஒருபக்கம் எடுத்து விடுதலைப் புலிகள் இருந்தால் அவர்களைச் சுட்டுக் கொன்றிருக்கலாம். முன் வாயில் பக்கத்தால் புகுந்து சுட்டுத் தள்ளியுள்ளார்கள். நியாயப்படுத்த முடியாத செயல்.

பலாலித் துன்பியல் நிகழ்வை அடுத்து இடைக்கால அரசையும் விடுதலைப் புலிகள் தூக்கி எறிந்துவிட்டுப் போரில் இறங்கினர். தமிழ் மக்கள் நிலை உரலில் அகப்பட்டது உலக்கைக்கு அகப்படவில்லைப் போலாகியது. மேலும் அந்த நிகழ்வு அண்டை நாடான இந்தியாவின் பகைமையை வரவழைத்து தமிழரின் விடிவுகாலத்தைக் கேள்விக் குறியாக்கியது.

தமிழ் ஈழ உரிமைப் போராட்ட வரலாற்றைப் பேரழிவு தொடராமல் வெற்றியோடு ஒன்றரைத் தசாப்தத்தின் முன்னரே - 1987இல் - முடித்திருக்கக்கூடிய வல்லமை படைத்த இரு தலைவர்களின் சாணக்கியத்தை வடகிழக்கு மக்கள் நிராகரித்துள்ளார்கள். அவர்களின் சாணக்கியத்தைப் புறக்கணித்து மட்டுமல்லாமல் அவர்களை

அழித்ததின் பலனை மக்கள் காலங் கடந்தே உணர்கிறார்கள். 1987இல் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் வழங்கிய பரிசுப் பொருளின் பெறுமதி இப்போதுதான் - வெளிநாட்டுக்கு ஓடித்தப்ப முடியாமல் - பிறந்த மண்ணில் பயந்து வாழ்கிற மக்களுக்கு விளங்குகிறது. இவர்கள் 1987இல் கிடைத்த அதிஷ்டத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்காத ஜென்மங்கள். இந்தியாவே ஈழத் தமிழர்களின் தஞ்சம் என்ற அமிர்தலிங்கம் அவர்களின் பழுத்த அரசியல் ஞானத்தை - வெளியுறவுக் கொள்கையை - புறக்கணித்தமையால் வந்த கேட்டை இப்பொழுதுதான் எல்லாம் இழந்த சமூகம் தலையில் கைவைத்தபடி அசை போடுகிறது.

# அதிகாரம் 52
# கூட்டணிக்கு ஒரு படிப்பினை

1988 டிசம்பர் மாதம் 21ந் திகதி இலங்கையில் நடந்த ஜனாதிபதி தேர்தலே தமிழர் விடுதலைக் கூட்டணி அடுத்து வந்த பாராளுமன்றத் தேர்தலில் பங்கு கொள்ள உற்சாகம் கொடுத்தது. அத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஆர்.பிரேமதாசாவும், ஸ்ரீலங்கா மகாஜன கட்சி சார்பில் ஓசி அபயகுணசேகரவும் போட்டியிட்டனர். ஓசி அபயகுணசேகர கொலை செய்யப்பட்ட விஜய குமாரதுங்கவின் வாரிசு. அவர் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான பிணக்கைத் தீர்ப்பதற்காக மனதார உழைத்தவர். யாழ்ப்பாணம் சென்றும் முயற்சித்தவர். அதன் காரணமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

"தமிழ் மக்கள் ஜனநாயக நடைமுறைகள் மீண்டும் செயல்பட உதவி புரிய வேண்டும். அவர்கள் தமது வாக்குகளை கண்ணியத் தோடு பயன்படுத்த வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களை சமாதானம் சமத்துவம் நீதிக்காகப் போராடும் ஓசி அபயகுணசேகரவுக்கு வாக்களிக்கும்படி வேண்டுகிறது."

அதே சமயம் ஆயுதக் குழுக்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எவருக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்று தெரிவித்தனர். தமிழ் மக்கள் அவர்களின் கோரிக்கைக்கு செவி



சாய்க்கவில்லை. அவர்கள் பெருமளவில் அந்தத் தேர்தலில் ஓசி அபயகுணசேகரவுக்கு வாக்களித்தனர். அந்த நிகழ்வே தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பாராளுமன்றத் தேர்தல் களத்தில் இறக்கியது.

1989 15ந் திகதி பெப்புருவரி பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்கு கொண்டது. அது அவர்களுக்கு ஒரு படிப்பினையான தேர்தலாக அமைந்தது.

கூட்டணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட முக்கிய கருத்துக்கள்:

1 வடகிழக்கிற்குப் பூரண சுய ஆட்சி வழங்கும் வரை இந்திய அமைதி காக்கும் படை இலங்கையை விட்டு வெளியேறக் கூடாது.

2 தமிழர்களின் மேலதிகாரம் நிறைந்த பாதுகாப்புப் படை வடகிழக்கில் நிறுவப்படவேண்டும்.

3 இந்திய அமைதி காக்கும் படை நிரந்தரமாக இருக்கக் கூடாது. சுதந்திர பாதுகாப்பு நிலைமைகள் சுமுக நிலைக்கு வந்ததும் அமைதி காக்கும் படை வெளியேற வேண்டும்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் வற்புறுத்தல் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணி ஆயுதக் குழுக்களான ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப், ஈ.என்.டி.எல்.எ.்.ப், ரெலோ என்பனவற்றுடன் இணைந்து 1989 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டி யேற்பட்டது. இந்திய ஹைகொமிசனர் திரு. ஜே.என்.தீக்சிற் அதனை நிறைவேற்றுவதில் விடாப் பிடியாக நின்றார். அத்தோடு தேர்தலுக்கு முன்னர் குறிப்பாக வடமாகாண மக்கள் மனநிலையயைக் கூட்டணியினர் நாடி பிடித்துப் பார்க்கத் தவறியிருந்தனர். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த நம்பிக்கையான ஆதரவாளர்களைக் கொழும்புக்கு அழைத்து முடிவு செய்திருக்கலாம். கூட்டணிக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு வாக்கு வங்கி உள்ளது. அது தன்னை எவரும் நினைத்த பாங்கிற்கு ஆட்டுவிக்க முடியாத பக்குவ நிலையை அடைந்த வாக்குவங்கி. அதனை அப்பொழுது தலைவர்கள் உணரவில்லை.

ஐந்து வருடங்களுக்கு மேல் தமிழ் நாட்டில் வாழ்ந்த கூட்டணித் தலைவர்கள் வடக்கில் உள்ள மக்களின் மன நிலையைச் சரியாகப் புரியவில்லை. கூட்டணி தனித்துப் போட்டியிடும் என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்த கூட்டணி ஆதரவாளர்களுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. கூட்டணியின் ஆதரவாளர்களில் ஒரு பகுதியினர் இயக்கங்களோடு இரண்டறக் கலந்திருந்தனர். கணிசமானவர்கள் தங்களை இனம் காட்டாமல் காலம் வரும் பொறுத்திருப்போம் என்று காத்திருந்தனர். இன்னும் ஆயுதக் குழுக்களோடு கூட்டு வைத்ததால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கூட்டணி கோட்டை விடும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமாக இருந்தது. ஊருக்குள் வந்த ஒவ்வொரு ஆயுதம் தரித்தவனுக்கும் ஊர்மனைகளுக்குள் வேண்டாதவர்கள் இருந்தனர். அபகரிப்பு களவு கொள்ளை கடத்தல் சித்திரவதை கொலை அடாவடித்தனம் பண்ணி மக்களைப் பயப்பிராந்தியத்துள் அமுக்கி வைத்திருந்த ஆயுத குழுக்களோடு கூட்டணி கூட்டுச் சேர்ந்ததற்காகக் கூட்டணிக்கு ஆதரவாளர்கள் யாழ்ப்பாணத்தில் பாடம் புகட்ட விரும்பினர். அதனால் ஒரு பகுதிக் கூட்டணி ஆதரவாளர்கள் வாக்களிக்காமல் இருக்க, ஒரு பகுதிக் கூட்டணி ஆதரவாளர்கள் 'ஈரோஸ்' கட்சிக்கு வாக்களித்தனர். அதனை அவர்கள் தெரிந்தெடுத்ததற்குக் காரணம் ஏனைய கட்டிசிகளைப் போல அத்தனை படுமோசமாக அந்த இயக்கம் மக்களை நடாத்தவில்லை என்பதே. அதன் மீதும் ஒருவரைக் கடத்தல் பண்ணிச் செய்த ஒரு பாரதூரமான குற்றச் சாட்டு இருக்கவே செய்தது. இன்னும் அமிர்தலிங்கம் அவர்களும் பிற கூட்டணித் தலைவர்களும் கொழும்பில் இருந்து விமானத்தில் பறந்து வந்து கச்சேரிக்குக் கட்டுப் பணம் கட்டச் சென்றனர். அப்பொழுது தனது தெல்லிப்பழை உத்தியோகபூர்வ அலுவலகத்தில் பிரத்தியேக காரியதரிசியாகவும், தனது தயவில் தெல்லிப்பழை பலநோக்க கூட்டுறவுச் சமாசத்தின் தலைவராகவும் இருந்த திரு. எஸ்.சிவமகாராசாவை கச்சேரியில் அமிர்தலிங்கம் அவர்கள் அவதானித்தார். சிவமகாராசா அவர்கள் 'ஈரோஸ்' அமைப்பின் சார்ப்பில் தேர்தலில் போட்டியிடக் கட்டுப் பணம் செலுத்தப் போயிருந்தார். கூட்டணியை எதிர்த்துச் சிவமகாராசா போட்டியிடுவதை அவரால் நம்பமுடியவில்லை. ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் முதலில் கூட்டணியின் ஆதரவாளரான, வலிவடக்குப் பிரதேசத்தில்



உள்ள ஒரு பிரபல கல்லூரியில் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற அதிபரின் வீடு சென்று தமது சார்பில் போட்டியிட நீண்ட நேரம் வாதித்தனர். அவர் மறுத்த பின்னர்தான் திரு. சிவமகாராசாவிடம் சென்றனர்.

கூட்டணி அபேட்சகர்கள் கச்சேரியில் நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பித்த பின்னர் பிரசாரத்துக்கு யாழ்ப்பாணப் பக்கம் தலைகாட்டவே இல்லை. முன்னைய தேர்தல் காலங்களில் யாழ்ப்பாணத்து வடலி பனை தென்னோலைகளிலும், கள்ளிப் பற்றைகளிலும், கறுத்தக் கொழும்பான் அம்பலவி மாமரங்களிலும், வேம்புகள் இலுப்பகைள் இலந்தைகள் புளிகளிலும், முருங்கை, பூவரசு கிளுவைகளிலும் பட்டுத் தெறித்த அமிர்தலிங்கம் அவர்களின் மந்திரக் குரலின் கணீர்நாதம் கேட்கவில்லை. உயிருக்குப் பயந்த சூழ்நிலையில் கூட்டணியினர் தமக்கே பாதுகாப்பு அரண் அமைத்துக் கொண்டு கூடுகளுள் கொழும்பில் வாழ்ந்தனர். யாழ்ப்பாணத்தில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்திய மாவை சேனாதிராசா பயத்தில் கொழும்பில் இருந்து போஸ்ட் காட் எழுதி வாக்களிக்கும்படி கேட்டார். அதன் பின்னர் யாழ்ப்பாணப் பக்கமே அவர் வரவில்லை. ஏனையவர்கள் போஸ்ட் காட்டே எழுதவில்லை. இயக்க்ங்கள் துப்பாக்கிகளுடன் தங்கள் கட்சிகளுக்கு வாக்கு வேட்டையாடினர். சாலைச் சந்திகள் யாவும் இயக்கங்களின் கண்களைப் பறிக்கும் பெரிய பெரிய சுவரொட்டி விளம்பரங்கள் காணப்பட்டன. அவற்றில் இருந்த அபேட்சகர்களின் வண்ணப் புகைப்படங்களும் இலக்கங்களும் கண்களைப் பறித்தன. கூட்டணி சார்பில் போட்டியிட்டவர்களின் இலக்கங்களே அவர்களது ஆதரவாளர்களுக்குக் கிட்டவில்லை. இயக்கங்களோடு கூட்டு வைத்தால் கூட்டணி ஆதரவாளர்கள் என்ன செய்வார்கள் என்பதை 1989 பெப்புருவரி தேர்தல் முடிவுகள் ஓங்கி ஒலித்து எச்சரிக்கின்றன. 2000 ஒக்டோபரில் கூட்டணியினர் தனித்துப் போட்டியிட்டு, பெரிய பிரசாரமின்றியே யாழ்ப்பாணத்தில் 3 ஆசனங்கள் பெற்றனர். 2001 டிசம்பர் பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி கூட்டு வைத்துப் போட்டி யிட்டும் 3 ஆசனங்களையே பெற்றது. எனினும் மக்கள் ஆதரித்தனர். அதற்கு விசேட காரணம் உண்டு. அரச ஆதரவு பெற்ற டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கட்சியின் அடாவடித்தனத்தை முறியடிக்க வேறு வழி இருக்கவில்லை. அதனாலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் 2001இல் கூட்டமைப்பை ஆதரித்தனர்.

1958ஆம் ஆண்டு இனக் கலவரத்தின்போது ஊரடங்குச் சட்டம் காரணமாக வங்காளவிரிகுடாவூடாக மட்டக்களப்பை அடைந்த அமிர்தலிங்கம் அவர்களுக்கு மட்டக்களப்பு மீது தனிப் பற்று. அவர் கால்கள் படாத கிராமங்கள் இல்லை. எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சமயம் புயல் அடித்த பொழுது அங்கு ஓடிச்சென்றவர். 1989 தேர்தலில் அவர் தான் நேசித்து அரவணைத்த மட்டக்களப்பில் போட்டியிட்டார். போட்டியில் அவரால் வெற்றி பெறமுடியவில்லை. சொந்த வட மாகாணத்தை விட்டுச் சென்று கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்டார். ஏன் கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்டீர்கள் என்று பத்திரிகையாளர் ரி.சபாரத்தினம் அவர்கள் கேட்டதற்கு,

"ஆதரவாளர்கள் என்னை வற்புறுத்திக் கேட்டபடியால் நான் ஒத்துக்கொண்டேன். அதற்கு ஒரு காரணம் சொல்கிறேன். 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தப் பிரகாரம் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்ந்து இணைந்திருக்க முடியுமா என்ற வாள் தலையின் மேல் தொங்குகிறது. தமிழ் மக்களின் மனோதிடமான முயற்சியினால் தான் வரக் கூடிய அபாயத்தைத் தவிர்க்க முடியும். எனது வெற்றி வடமாகாண கிழக்கு மாகாண மக்களின் ஐக்கியத்தைப் பாதுகாக்க உதவும் என்று நம்பினேன்" என்று கூறியுள்ளார்.

1970 வட்டுக்கோட்டைத் தோல்வியும் 1989 மட்டக்களப்புத் தோல்வியும் ஒருவகையில் ஒற்றுமையுடையன. 1970 வட்டுக்கோட்டை பாராளுமன்றத் தேர்தலில் அவர் தோல்விக்கு ஒரு காரணம் அவர் தீவுப் பகுதியைச் சேராதவர் என்பது. செல்வந்த வர்த்கர்களைக் கொண்ட தீவுப் பகுதி மக்கள் தங்கள் வர்த்தக நலன்களைப் பாதுகாக்க விரும்பிப் பிரதேச வாதத்தை நாடியமை விசனத்திற்கு உரியது. அது முக்கிய காரணம் அல்ல வெனிலும் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தியது பிரதேச உணர்வே. சாதாரண மக்களை மகான்களாக எண்ணிக்கொண்டு கருமமாற்றுவது பொருத்த முடையதல்ல. அதனால்தான் அவர் 1970இல் வட்டுக்கோட்டையில் வெற்றியை இழந்தார். அதற்கு முந்திய தேர்தல்களில் 'தீவான்' என்ற கோசம் எழுப்பப்படவில்லை. அதனால்தான் அப்பொழுதெல்லாம் அவரால் வெற்றி பெற முடிந்தது. தொடர்ந்து வர்த்தக நலன்களை மையமாக வைத்துத் தீவுப்பகுதி வர்த்தகர்கள் தேர்தலைப்



பயன்படுத்தத் தொடங்கியுள்ளதால் யூ.என்.பி. கட்சியைச் சேர்ந்த ரி.மகேஸ்வரனால் யாழ்ப்பாணத்தில் பாராளுமன்ற ஆசனத்தைக் கைப்பற்ற முடிகிறது.

மட்டக்களப்பில் பிரதேச உணர்வு பெரிதாக இல்லாத பொழுதும் அது வெற்றியைப் பாதிக்கக் கூடியதாகவே இருந்தது. யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று பெருமை பேசும் மக்கள் தேர்தல் விடயத்தில் தம் பெருமையை மறந்து விடுகிறார்கள். இதற்கு எதிர்மாறாகச் சிங்கள அரசியல்வாதிகள் மாகாணம் விட்டு மாகாணம் தாவிப் போட்டியிட்டு வெற்றி பெறுகிறார்கள். திரு.டபிள்யூ. தகநாயக்கா அவர்கள் தென்மாகாணத்தில் இருந்து ஊவா மாகாணம் சென்று பதுளையில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். இது அரை நூற்றாண்டுக்கு முந்திய கதை. இப்படிப் பல உதாரணங்கள் உண்டு. இந்த விடயத்தில் சாதாரண தமிழ் மக்கள் மீது குற்றம் காண முடியாது. அமிர்தலிங்கம் அவர்கள் மட்டக்களப்பில் போட்டியிடாமல் இயக்கங்களோடு கூட்டுச் சேராமல் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டிருந்தால் குறைந்தது யாழ்ப்பாணத்தில் மட்டும் நாலு ஆசனங்களையாவது பெற்றிருப்பார். அதற்கு அவரை இந்திய தலைமை அனுமதிக்கவில்லை. அவரை ஆப்பேற்றிய மரத்தில் ஏற்றி வாலை பிளவு வழியாக இழுத்துப் பிடித்துக்கொண்டு ஆப்பை இழுக்கச் செய்துள்ளார் கொழும்பில் இருந்த இந்திய ஹைகொமிசனர்.

மட்டக்களப்புத் தோல்விக்குப் பிரதேச உணர்வு மட்டுமல்லக் காரணம். அது ஒரு சிறிய பங்குதான் வகித்தது. பிரதான பங்கு ஒரு குறித்த இயக்கத்துக்கு உரியது. அந்த இயக்கத்தவர்கள் அமிர்தலிங்கம் அவர்களை விழுத்த வேண்டும் என்பதற்காக நிரம்பக் கள்ள வாக்குகளை இன்னொருவருக்குப் போட்டனர். ஆயுதம் தரித்த தமிழ் இயக்கங்களின் முதல் எதிரி சிங்கள அரசாங்கம் அல்ல. அமிர்தலிங்கம் அவர்களே. அவரை விமர்சித்துக் களம் கண்ட அவை கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவரது தோல்வியில் வெற்றிவிழா நடத்தின. தேர்தல் நடக்க முன்னரே பத்மநாபா தாம் நான்கு ஆசனங்களைக் கைப்பற்றுவோம் என்று வீரப்பிரசாரம் செய்தார்.

தேர்தலின் பின்னர் நியமனப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக அமிர்தலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டார். தேர்தலில்

இலங்கை முழுவதிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற மொத்த வாக்கு எண்ணிக்கைக்கு ஒரு நியமன பாராளுமன்ற உறுப்பினரை நியமிக்க வாய்ப்பிருந்தது. அதன்படியே அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகினார். அவரின் மறைவை அடுத்து அவரது நியமன பாராளுமன்ற உறுப்பினர் பதவி திரு. மாவை சேனாதிராசா அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதனை அடுத்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற வாக்குகளின் அடிப்படையில் நீலன் திருச்செல்வம் அவர்கள் நியமன பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 2001 டிசம்பர் தேர்தல் வாக்குகளின் அடிப்படையில் மு.சிவசிதம்பரம் அவர்கள் நியமன பாராளுமன்ற உறுப்பினராகினார்.

ஐந்து வருட இடைவேளையின் பின்னர் பாராளுமன்றம் சென்ற அமிர்தலிங்கம் அவர்கள் தமிழர்களின் இன்னல்களைத் தீர்க்கும் விடயத்தில் அக்கறையாகக் கவனம் செலுத்தத் தொடங்கினார். அனுபவ முதிர்ச்சி காரணமாக மிக நிதானமாக அடிகளை எடுத்து வைத்தார். அவர் சமாதானம் காண சகல இயக்கங்களும் மற்றும் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். 1989 மே மாதம் அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பித்த சமாதானப் பேச்சுவார்த்தையை வரவேற்றார். அவரின் உயிர் பறிக்கப்படுவதற்கு ஒன்பது தினங்களுக்கு முன்னர் யூலை 4ந் திகதி பாராளுமன்றத்தில் சொன்னார்: "நாங்கள் விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை செய்வதை வரவேற்கிறோம். ஜனநாயக நீரோட்டத்துக்குத் திரும்பியுள்ள அவர்கள் மீண்டும் காட்டுக்குள் ஓடாமல் பேச்சுவார்த்தையை நேர்மையாகத் தொடரவேண்டும். பேச்சுவார்த்தை விஸ்தரிக்கப்பட வேண்டும். ஏனையவர்களும் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ள அழைக்கப்பட வேண்டும். இந்தியாவும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும். இன்றைய அரசியல் சூழ்நிலையை எவரும் தமது அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்தக் கூடாது." அடிக்கடி அவர் இந்தியாவை அழைப்பது அவரின் அனுபவத்தின் ஏவலே. அதாவது அரசு காலத்துக்குக் காலம் பேச்சுவார்த்தை என்று சொல்லிக் காலத்தைக் கடத்திவிட்டு இறுதியில் கையை விரிப்பதே சிங்களத் தலைவர்களின் வழமையான இராசதந்திரம் என்பது அவரது முடிபு. சிங்களவரின்



அதே 'காலம் கடத்தும்' சிங்கள இராசதந்திரம் மீண்டும் வெற்றி பெறாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்தியா துணைநிற்க வேண்டும் என்றார். அதனால் இந்திய அமைதி காக்கும் படை இருக்கும் பொழுதே பிரச்சினைகளைத் தீர்க்க விளைந்தார். தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தனது இந்திய சார்பான கருத்தை வெளியிட்டு இருந்தார். இந்திய அமைதி காக்கும் படை வெளியேறினால், சிங்கள அரசியல் தலைவர்கள் சாட்டுச் சொல்லிப் பேச்சுவார்த்தையைக் குழப்புவார்கள் - தீர்வு எட்டாமல் போய்விடும் என்பதனைத் தீர்க்கதரிசனமாக உணர்ந்திருந்தார். அதனால்தான் 'இந்திய அமைதி காக்கும் படை வெளியேற வேண்டுந்தான். ஆனால் பிரச்சினைகளைத் தீர்க்காமல் அது வெளியேறுவது தமிழர் பிரச்சினைகளைத் தொடர்ந்து நீடிக்கவே உதவும்' என்று மிகத் தெளிவாகச் சொன்னார். அவர் கூறிய தீர்க்கதரிசனம் அச்சொட்டாக நடந்து வரலாறாகப் பதிவாகி இருக்கிறது. இந்தியப்படை வெளியேறியதும் விடுதலைப் புலிகளும் ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி பிரேமதாச அவர்களும் நடாத்திய பேச்சு வார்த்தை முறிந்தது. பின்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் நடாத்திய பேச்சுவார்த்தையும் முறிந்தது. அது மட்டும் அல்லாமல் பேச்சு வார்த்தைகள் குழம்பியதால் 1990 - 2001 இறுதிவரை தமிழ் மக்கள் எதிர்கொண்ட அழிவுகள் வார்த்தைகளில் அடங்கா. அமிர்தலிங்கம் அவர்களை அநுசரித்துப் போயிருந்தால் இந்திய அமைதி காக்கும் படை வெளியேற முன்னரே தமிழர்களுடைய பிரச்சினைகள் யாவும் தீர்ந்திருக்கும். இற்றைவரையில் எங்கள் நிலம் பூத்துக் குலுங்கியிருக்கும். அவரது அனுபவ முதிர்ச்சியையும் வழிகாட்டலையும் புறக்கணித்தமையால் இறுதியில் வடகிழக்குத் தமிழர்களின் இதயங்களும் சதைகளுந்தான் பதிநாலு வருடங்கள் மரணக் கூச்சல் போட்டன.

ஒரு கேள்வி தமிழ் சமுதாயத்தின் முன்னர் எழுந்து நிற்கின்றது. நோர்வே அனுசரணையில் 2002 பெப்புரவரி தொடக்கம் பேச்சுவார்த்தை நடக்கிறது. ஒப்பந்தம் எழுதி அது நடைமுறைக்கு வந்த பின்னர் சிங்கள அரசு அதைத்தூக்கி வீசினால் நோர்வே அரசு என்ன செய்யும்?

# அதிகாரம் 53
# கிளிநொச்சியில் நினைவுத் தூபி

1989 மறைந்த ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களுக்கு கிளிநொச்சிச் சந்தையில் ஒரு நினைவுத் தூபி நிறுவப்பட்டு, அது 1989 நவம்பர் மாதம் 5ந் திகதி ஆவரங்கால் க. சின்னத்துரை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மாபிள் கற்களால் அமைந்த தூபியின் மேல் அவரது அரையுருவச் சிலை. சற்றே தலையைக் குனிந்து உரையாற்றும் பாணியில் சிலை செதுக்கப் பட்டிருந்தது. அதுவே இதுகாறும் அவரது நினைவாக அமைக்கப்பட்ட ஒரேயொரு நினைவுச் சின்னமாகும். அவர் இறந்து நாலரை மாதகாலத்துள் நிறுவப்பட்டது. கண்டி வீதி வழியே செல்லும் வாகனங்கள் யாவும் அவ்விடத்தில் தரித்து நிற்க, பிரயாணிகள் வாகனங்களை விட்டிறங்கி, மறைந்த தலைவருக்கு மிரியாதை செலுத்திப் போவது ஒரு எழுதப்படாத நடைமுறை வழக்காகியது.

இந்திய அமைதிப் படை 1990 மார்ச் மாதம் இந்தியா திரும்பிய கையோடு, அந்த வரலாற்று நினைவுப் பொக்கிசத்தை - அவரைக் கோழைத் தனமாகக் பலியெடுத்து வெற்றி விழா கொண்டாடிய விடுதலை புலிகளே சுக்கு நூறாக உடைத்து நொருக்கி வீரவரலாறு பதிவு செய்துள்ளார்கள். அதன் அத்திபாரத்தையே தோண்டி எடுத்து இருந்த இடம் தெரியாமல் சரித்திரத்தைப் புதைக்க முற்பட்டுள்ளார்கள். இந்த வரலாற்று நிகழ்வு - ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களை அழித்தவர்களின் குணச்சித்திரங்களை - சமூகத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறது. உயிருடன் இருக்குமட்டும் பகைத்தவர்கள், அவரின் உயிரை எடுத்தும் ஆவேசம் தீராது, அவரது தூபி, சிலை, புகைப்படம், அவர் பற்றிய புத்தகங்கள் மீதும் தம் கைவரிசையைக் காட்டுகிறார்கள். ஏன் அவ்வளவுக்கு அவரைக் கண்டு அஞ்சுகிறார்கள்?

தமிழினத்தின், முடிசூடா மன்னனாக அரசியல் அரங்கில் கொடிகட்டிப் பறந்த அண்ணலின் நினைவுத் தூபியை அமைத்தவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அல்லர். அதை அமைத்தவர்கள் பரந்தன் இராசனின் ஈ.என்.டி.எல்.எ.'.ப். அமைபப்பினரே. நவம்பர் 5ந் திகதி காலை 9.30 மணிக்கு முன்னாள் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியால் அது திறந்து வைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொள்ள ஆவரங்கால் க.சின்னத்தரை, கதிரிப்பாய் ஏ.கே.இராமலிங்கம், யாழ். உதவி மேயர் எம்.ரி.செல்வத்துரை ஆகியோர் யாழ். நகரிலிருந்து கிளிநொச்சி சென்றிருந்தனர். தூபியைத் திறக்க ஆனந்தசங்கரி அவர்கள் கொழும்பிலிருந்து ஹெலிஹொப்டரில் வருவதாக இருந்தது. அவர் வருகை கேள்விக்குறிக்கானதால், திரு. பொன்னையா ஆசிரியர், ஆவரங்கால் சின்னத்துரை அவர்களை அணுகி, அச்சிலையைத் திறந்து வைக்கும்படி கேட்டார். அவரின் வேண்டு கோளுக்கு இணங்கி ஆவரங்கால் சின்னத்துரை அவர்கள் அச்சிலையைப் 11.00 மணிக்குத் திறந்து வைத்தார்.



அவர் அதனைத் திறந்து வைத்து உரையாற்றும் பொழுது, அந்த நினைவுத் தூபியை நிறுவிய ஈ.என்.டி.எல்.எ.'.ப். அமைப்பினருக்கு முதலில் நன்றி செலுத்திவிட்டு, அமிர்தலிங்கம் அவர்கள் மாணவனாக இருந்த காலம் தொடக்கம், ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்காக உழைத்த வரலாற்றைக் விபரித்ததோடு, அவரது வெளிநாட்டுக் கொள்கையைத் தொட்டுப் பேசும் பொழுது - அவரின் சாணக்கியத்தின் காரணமாகவே இந்திரா காந்தி அம்மையார் 1983 இனக் கலவரத்தை இன அழிப்பு என்று குற்றம் சாட்டி, ஈழத் தமிழர் பிரச்சினையை உலகமயப் படுத்தினார் என்றும், இந்தியாவின் உதவியோடுதான் ஈழத் தமிழர் பிரச்சினையதைத் தீர்க்க முடியும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார் என்றும் குறிப்பிட்டார். ஒருவரை அழிப்பதால் அவரது சேவைகளையோ, அவர் பதிவு செய்த சாதனைகளையோ, அவரது பெருமைகளையோ சரித்திரத்திலிருந்து நீக்கிவிடமுடியாது என்றும், அவரின் வெற்றிடத்தை நிரப்பக்கூடிய தலைவர்கள் எவரும் இல்லாததை, தமிழ் இனம் எதிர்காலத்தில்தான் புரிந்து வருந்தும் என்றும் குறிப்பிட்டார்.

### கொலையோடு முடியாத கதை

1989 யூலை 13ந் திகதி வியாழக்கிழமை வஞ்சகர்களின் பலியெடுப்புக்கு ஆளாகிய ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களது

வரலாறு அன்றோடு முடியவில்லை. அது நீண்டு கொண்டிருக்கிறது என்பதைப் புதிய 'சம்பவங்கள் பிரசாரிக்கின்றன. தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் 75வது பிறந்த தின நினைவையொட்டி லண்டனில் 'வரலாற்றின் மனிதன்' என்னும் பவள விழா மலர் 2002இல் வெளியிடப்பட்டது. பின்னர் கனடாவிலும் வெளியிடப்பட்டது. இது பல பிரமுகர்களின் கட்டுரைகளைக் கொண்ட ஒரு தொகுப்பு நூல். இந்த மலரை யாழப்பாணத்தில் 2003 மார்ச் மாதம் வெளியிட பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்தபின்னர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களிடம் சென்று அதனை வெளியிடக் கூடாது என்று விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனர். வேண்டுமானால் கூட்டணி அலுவலகத்தில் வைத்து வெளியிடலாம் என்றும், ஆனால் அது பற்றிப் பத்திரிகைகளில் வெளியிடக் கூடாதென்றும் எச்சரித்துள்ளார்கள். அத்தோடு இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்களும் 2003 மார்ச் 30ந் திகதி 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியிலும் "கொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் நினைவு மலரை வெளியிட விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை" என்று சொல்லி உள்ளார். துப்பாக்கியின் துணையோடு பேசுகின்றவர்கள் துப்பாக்கி இல்லாத அமிர்தலிங்கம் அவர்கள் உயிரோடு இருக்கும் பொழுதும் அவருக்குப் பயந்தார்கள். அவர் இறந்த பின்னரும் அவருக்குப் பயப்படுகிறார்கள். மறைந்த ஒருவரைக் கண்டு 14 வருடங்களுக்குப் பின்னரும் மிரளுவதைப் புரிய முடியாமல் இருக்கிறது. அவர்களின் வற்புறுத்தல் ஜனநாயக நீரோட்டத்தினுள் வர விரும்பும் அவர்களை மக்கள் சந்தேகிக்க இடம் வைக்கிறது. அவர்களின் ஜனநாயக விரோத செயல் காரணமாக அந்த மலர் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட வில்லை. ஏன் வெளியிடக் கூடாது என்று மக்களுக்குச் சொல்லி இருக்க வேண்டும். அவர்கள் அதைச் சொல்லவில்லை. சொல்ல முடியாது. அவர்கள் எதை மறைக்கிறார்கள் என்பது இரண்டாம் பாக இறுதி அத்தியாயங்களில் சொல்லப்படுகிறது.



# அதிகாரம் 54
# மாதரசி மங்கையர்க்கரசி அம்மையார்

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அம்மையார் ஈழத்தமிழர் அரசியல் வானில் முதலில் உதித்த நட்சத்திரம். தமிழ் ஈழ உரிமைப் போராட்ட களத்தில் 39 வருடங்கள் உழைத்த வரலாற்றை உடையவர். சிங்கள அரசியல் வாதிகள் அவரை வார்த்தைகளால் கொன்றார்கள். சிறையில் அடைத்து வதைத்தார்கள். சிங்களக் காவல்துறையினர் அவரின் கண் எதிரே, உயிர் பதைக்க கணவனை அடித்து வதைத்தார் கள். அது போதாதென்று அம்மையார் விருந்து கொடுத்து அரவணைத்த தமிழர்களே அவரது கணவனைப் பச்சை இரத்தம் கொட்டச் சுட்டுக் கொன்று அவருக்கு வெள்ளைச் சேலை கட்டியுள்ளார்கள்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களின் தந்தையார் வல்லிபுரம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பண்டாரவளையில் பிரபல வர்த்தகராக இருந்தவர். தாயார் நாகம்மா மூளாய் கிராமத்தைச் சேர்ந்தவர். 1933ஆம் ஆண்டு யூலை 3ந் திகதி பிறந்த மங்கையர்க்கரசி அம்மையார் பிறந்து வாழ்ந்த ஊரும் மூளாய் கிராமமே. அவரே குடும்பத்தில் மூத்த பிள்ளை. அவருக்கு ஞானாம்பிகை, கிருஷ்ணவேணி என்னும் இரு சகோதரிகளும், கணேசானந்தன், கோபாலச்சந்திரன் என்னும் இரு சகோதரன்களும் உண்டு. தங்கை ஞானாம்பிகை, அமிர்தலிங்கம் அவர்களின் இளைய சகோதரன் திகம்பரலிங்கத்தை மணம்முடித்துள்ளார்.

அம்மையார் தனது ஆரம்ப கல்வியை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் பெற்றார். பின்னர் சேர் பொன் இராமநாதன் மருதனாமடத்தில் நிறுவிய பெண்களுக்கான கல்லூரியில் பயின்றார். தமிழ்க் கலாச்சாரத்தின் காவல் நிலையமான அக்கல்லூரியில் அவர் பெற்ற பயிற்சி அவரது கயிற்றில் நடக்கும் அரசியல் சார்ந்த வாழ்க்கைக்கு மிக்க வழிகாட்டியாக அமைந்தது. அவரது இனிய குரல் கல்லூரியில் அவருக்கு ஒரு தனி மதிப்பான இடத்தைப் பெற்றுக் கொடுத்தது. ஒரு தினம் அமிர்தலிங்கம் அவர்கள் இராமநாதன் பெண்கள் கல்லூரிக்கு விசேட சொற்பொழிவாற்றச் சென்றார். அந்த

வைபவத்தில் அம்மையார் தமிழ் மொழியின் மேன்மை பற்றி ஒரு பாடல் பாடினார். அவரின் தேன் சிந்தும் இனிய குரலே அவர்களின் திருமண வாழ்க்கையை எழுதியது.

ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் வெற்றியின் பின்னணியில் மங்கையர்க்கரசி அம்மையாரே உள்ளார். ஒவ்வொரு ஆணின் வெற்றியின் பின்னணியிலும் ஒரு பெண் இருக்கிறாள் என்ற முது மொழிக்கு இலக்கியமாக வாழ்ந்தார். தனது வாழ்க்கைத் தலைவன்து உத்வேகத்துக்கு உந்து சக்தியாக இருந்தவர் மங்கையர்க்கரசியார். அண்ணலின் எழுச்சியில் அம்மையாரின் பங்களிப்பு மகத்தானது. அவருக்கு ஈடான மாதரசியை உலக அரசியல் வரலாற்றில் சந்திக்க முடியவில்லை. அவரின் பங்களிப்புக் காரணமாகவே அண்ணலால் விடுதலைப் போராட்டத்தில் முழுப் புலனையும் செலுத்த முடிந்தது.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களே தமிழ் ஈழ உரிமைப் போராட்ட அரசியல் துறைக்கு வந்த முதல் தமிழ்ப் பெண்மணி. 1989இல் கணவன் மறையும் வரை விடுதலைப் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டவர். அவர் தமிழரசுக் கட்சியின் மாதர் முன்னணியின் ஆரம்பகால உறுப்பினர். ஆரம்பகாலத்தில் இடையிடையே தமிழரசுக் கட்சி மேடைகளில் தோன்றிய செல்விகள் பத்மாவதி வேலுப்பிள்ளை, கமலா நாகலிங்கம், பத்மா பஞ்சநதேஸ்வரன், செல்வநாயகி அமரசிங்கம், கலா மாணிக்கம், ரூபராணி யோசப், செல்வமணி வடிவேல், திருமதி மானரட் பிரான்சிஸ் என்போர் காலகதியில் ஒதுங்கிக் கொண்டார்கள். எனினும் மங்கையர்க்கரசியாரின் பங்கு தொடர்ந்து நீண்டு கொண்டிருந்தது.

மங்கையர்க்கரசியார் தமிழ் அரசுக் கட்சி அரசியல் மேடையில் முதன் முதலில் தோன்றியது ஆவரங்காலில் உள்ள சிவன் கோவில் மேற்கு வீதியிலாகும். அதன் தெற்கே இலுப்பை, மா, தென்னஞ் சோலை. ஒரு மாலை நேரம். இலுப்பை மரத்தின் கீழே ஒரு மேசை. சில கதிரைகள். மேசையின் மேல் ஒரு 'பெற்றோ மாக்ஸ்' விளக்கு ஒளிபரப்பிக் கொண்டிருந்தது. அதன் ஓரமாக ஒலிவாங்கி. அதுதான் மேடை எதிரே கோவில் வீதியின் பச்சைப் புற்றரையில் ஆண்கள் மட்டுமே பார்வையாளர். 800 பேர்வரை யிருக்கும். பெரும்பாலும் வேட்டியும் தோளில் துண்டும், துண்டில்லாதவர்களுமே. ஒரு சில பெண்கள் சற்று அப்பால்' பழவளவின்' முன் ஒழுங்கையில நின்றனர். பேச்சுக்களின் இடையே அவர் அழைக்கப்பட்டார். இளமையின் எழில் பூத்துக் குலுங்க, பூவும் பொட்டுமாக எழுந்த - கணவருக்குப் பிடித்தமான 'பிங்' வண்ணச் சேலையணிந்த மங்கையர்க்கரசி "தமிழுக்கும் அமுதென்ற பெயர் - இந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்னும் பாரதிதாசனின் பாடலைப் பாடினார். ஒரு கணம் சபை கீதத்தின் இன்பத்தில் நீராடியது. அந்தக் குரலின் மந்திர இனிமை சபையோரை அப்படியே தனது விசிறிகளாக மடக்கிக்கொண்டது. முக்கண்ணனின் திருவீதியில் ஆரம்பித்த அரசியற்பணி, திருக்கூத்தன் கருணையால் அவரது கணவன் மறைக்கப்படும் வரை தொடர்ந்தது.



ஆவரங்கால் சிவன்கோவிலுக்கும் தமிழரசு-கூட்டணிக்கும் மிகுந்த நெருக்கம் உண்டு. யாழ் குடாநாட்டின் மத்தியில் இருதயம் போல அமைந்துள்ள இக்கோவில் யாழ்-பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ளது. தமிழ்க் காங்கிரசி லிருந்து பிரிந்து தமிழ் அரசுக் கட்சி தோன்றிய பின்னர் 1949இல் நடந்த முதலாவது கூட்டம் - கல்லெறிக்கு உட்படாது அமைதியாக நடந்த கூட்டம் - ஆவரங்கால் சிவன்கோவில் கிழக்கு வீதியில்தான் இடம்பெற்றது. தமிழ் ஈழப் பிரகடனம் செய்த பின்னர் நடந்த முதலாவது தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாடும், 1976இல் ஆவரங்கால் சிவன்கோவிலின் கிழக்கே உள்ள பரந்த வெளியில்தான் நடைபெற்றது. அன்று ஒரு இலட்சம் பார்வையாளர்கள் கூடியிருந்தனர். இத்திருக்கோவிலில் எழுந்தருளி யுள்ள சிவபிரானுக்கு ஒரு பெருமையுண்டு - நேர் எதிரே உள்ள பரந்த வெளியைத் தாண்டினால் தொண்டைமானாறு கடனீரேரி. அதன் கிழக்குக் கரையில் உள்ள கரதடித்திடலில் ஒரு மயானம். கோவிலின் மூலஸ்தானத்தில் நின்று பார்த்தால் சுடலையில் எரியும் சிதையிலிருந்து எழுந்தாடும் சுவாலை கண்களை நிறைக்கும். அந்தச் சுடுகாட்டில் சிவபிரான் அர்த்தசாமத்தில் கூத்தாடுவதாக ஐதீகம் உண்டு. இந்தக் கோவிலின் கிழக்கு வீதியில்தான் அமிர்தலிங்கம் அவர்கள் ஒரு பாரிய கிராம மக்கட் கூட்டத்தின் முன் முதன் முதலில் தோன்றி உரையாற்றித் தனது அரசியற் பிரயாணத்தை முன்னெடுத்தார்.

ஆவரங்காலில் முதன் முதலில் மேடையில் தோன்றி இசை மூலம் மக்களைக் கவர்ந்த மங்கையர்க்கரசி, பின்னர் மேடையில்

தோன்றிப்பாடுவதை மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கத் தொடங்கினர். முன்னரெல்லாம் அரசியல் கூட்டங்களுக்குப் பெண்கள் செல்வதில்லை. மங்கையர்க்கரசியாரின் அரசியல் பிரவேசத்தோடு பெண்களும் அரசியல் கூட்டங்களில் பெரும் எண்ணிக்கையில் பங்கு கொள்ளத் தொடங்கினர். சத்தியாக்கிரகப் போராட்டத்தின் பொழுது, இரண்டாவது தினம் அவரது தலைமையில் 500 பெண்கள் யாழ் கச்சேரியின் எதிரில் நடந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டனர். யாழ்ப்பாண கிடுகு வேலிகளுக்குள் கட்டுப்பெட்டிகளாக வாழ்ந்த பெண்களை அரசியல் களத்துக்கு இழுத்து வந்தவர் அவர்.

பெண்களுக்கு அழகு கொடுக்கும் மெலிந்த உருவம். சுமாரான உயரம். பூவும் பொட்டுமாகப் பெரும்பாலும் கணவனுக்குப் பிடித்த 'பிங்' வண்ணச் சேலை அணிந்து எளிமையான தோற்றத்துடன் தனது கணவனுடன் மேடையில் ஏறிவரும் காட்சி - அப்பொழுது மக்கள் கரகோசம் செய்யப் - புன்னகை பூத்தபடி இரு கைகளையும் கூப்பிச் சபையைக் குனிந்து வணங்கிவிட்டு அமருதல் - தினம் தினம் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் நிகழ்ச்சியே. நேரம் ஆகஆக மக்கள் எப்போது மங்கையர்க்கரசியாரின் குரல் கேட்கும் என்ற ஏக்கத்தில் இருப்பர். அவர் உரையாற்றுவது குறைவு. அவரது இனிய கீதத்தைச் செவிமடுக்கவே ஒரு கூட்டம் முன்னிரவின் இறுதிவரை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும். பிற்காலத்தில் "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே" என்ற பாரதிதாசனின் கீதம் முன்னிரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு மக்கள் உணர்ச்சி களைத் துள்ளி யெளச் செய்யும். அந்த இனிமையின் நாதம் அவரது விசிறிகளாகிய ஜீவன்களையெல்லாம் ஒருகணம் மெய்மறக்கச் செய்யும். விடுதலை உணர்ச்சியைப் பொங்கச் செய்யும். அவரின் குரலின் இனிமையைக் கேட்காத செவிகள், அவரை மேடையிலே காணாத கண்கள் வடகிழக்கு இலங்கையில் இல்லை என்றே சொல்ல வேண்டும். அவரது விடுதலை உணர்ச்சி ஊட்டும் கீதத்தைக் கேட்கக் கண்விழித்திருந்த கண்கள் எத்தனை எத்தனையோ. இலங்கையில் மட்டுமல்ல தமிழகத்திலும் புதுச்சேரியிலும் அவரின் ஈழத் தமிழர் சார்பான விடுதலைக் குரல் ஒலித்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம் அவர்களது மறைவோடு மங்கையர்க்கரசியாரையும் மறந்து விட்டார்கள்.



அரசியல் தலைவர்கள் அநியாயமாக அழிக்கப்படும் சமயங்களில், அவர்களது இடங்களுக்கு அவர்களது துணைவியரை நியமிக்கும் பெருந்தன்மையான வழமை ஒன்று உண்டு. ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா, பேரியல் அஸ்ரப் முதலியோர் அவர்களது மறைந்த துணைவர்களின் இடங்களை நிரப்ப அழைக்கப்பட்டனர். இன்னும் பாகிஸ்தான், பங்களாதேஸ் இந்தியா ஆகிய நாடுகளிலும் இந்த மனித நேயத்தைக் காட்டும் வழமை உள்ளது. ஆனால் ஏன் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அம்மையார், அவரின் மறைந்த கணவரின் காலியான இடத்துக்கு நியமிக்கப்படவில்லை? அவர் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் எந்தத் தமிழ் பெண் மணியையும்விடப் பல மடங்கு பங்குகொண்டவர். அவர் வடகிழக்கில் ஏறி இறங்கிய அரசியல் மேடைகள் 4500க்கு மேல். இந்தியாவில் வேறு. அவரது தேன் சிந்தும் குரல் தெற்கே பொத்துவில் தொடக்கம் வடக்கே பருத்தித்துறை வரை, மேற்கே சிலாபம் தொடக்கம் கிழக்கே வெருகல் வரை உள்ளவர்களின் செவிகளில் இன்னும் விடுதலை உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்கிறது. கட்சியின் சகல போராட்டங்களிலும் ஆரம்பத்தில் இருந்து கலந்து கொண்டவர். ஏழு மாதப் பாலகனை இடுப்பில் சுமந்து கொண்டு ஸ்ரீயழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர். ஒரு வயது இளைய மகன் வீட்டில் தவிக்க 170 நாட்கள் பனாகொட இராணுவ சிறைக்குள் அடைக்கப்பட்டவர். திரு. மு.சிவசிதம்பரம் அவர்களை நியமித்திருந்தால் கூட அவரது பங்களிப்பு படிப்பு அறிவு ஆற்றல் சாணக்கியம் ஆங்கில புலமை காரணமாக நியமிக்கப்பட்டார் என்று சொல்லாம். அப்படி எதுவும் நடக்கவில்லை.

அமிர்தலிங்கம் அவர்களது காலியான நியமன உறுப்பினர் இடம் மாவை சேனாதிராசாவுக்கு வழங்கப்பட்டது. அவர் மிகப் பிந்தி எழுபதுகளில் கட்சிக்கு வந்தவர். கூட்டங்களில் பேசியவர் சிறை இருந்தவர் என்பதை மறுப்பதற்கு இல்லை. அவரைப் போலவே கூட்டத்தில் பேசிச் சிறையிருந்தவர் நீண்ட பட்டியல் ஒன்று கட்சியில் உண்டு. மாவை சேனாதிராசா அமிர்தலிங்கம் அவர்களது குடும்பத்தோடு மிக நெருங்கிப் பழகியவர். அவர்களோடு வாழ்ந்தவர். அவர்தான் முதல் மனிதனாக நின்று அந்தப் பதவியை அம்மையாருக்குப் பெற்றுக் கொடுத்திருக்கவேண்டியவர். அது போகட்டும் அடுத்து இரண்டாவதாக அல்லது மூன்றாவதாகக் கிடைத்த

நியமன உறுப்பினர் பதவியையாவது மங்கையர்க்கரசி அம்மையாருக்கு கூட்டணி வழங்கி இருக்கலாம்.

1957 ஆரம்பத்தில் இருந்து கட்சி நடாத்திய போராட்டங்களில் எல்லாம் அம்மையார் கலந்து கொண்டவர். 1957இல் நடந்த சிங்கள ஸ்ரீ அழிப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டார். மூத்த மகன் காண்டீபன் ஏழுமாதக் குழந்தை. அக்குழந்தையையும் காவிக்கொண்டு ஸ்ரீயழிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டார். மகனுக்கு பாலூட்டிவிட்டு வீதியில் நின்று அங்கு வந்த வாகனத்தின் சிங்கள ஸ்ரீ எழுத்தை அழித்தபொழுது கைது செய்யப்பட்டு சுன்னாகம் காவல் நிலையம் கொண்டு செல்லப்பட்டார். அவரின் வழக்கு மல்லாக நீதிமன்றத்தில் நடந்தது. கோடு கலையும்வரை சிறையிடப்பட்டார். இவரோடுசேர திருமதி கோமதி வன்னியசிங்கம், செல்வி மங்களா கிஸ்தோபர் ஆகியவர்களுக்கும் கோடு கலையும்வரை சிறை தீர்ந்தது.

1958 மே மாதம் - தென் இலங்கையில் நடந்த இனக் கலவரத்தை அடுத்து நாடு முழுவதும் இரவு நேர ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பி லிருந்து செல்லையா இராசதுரை பா.உ. அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு "உதவிக்கு வாருங்கள்" என்று தந்தி மூலம் அபயக் குரல் அனுப்பி இருந்தார். அவ்வேளை தனது கணவனுடன் இயந்திரப் படகு மூலம் மட்டக்களப்பை அடைந்த வரலாறு விடுதலைப் போராட்டத்தில் அம்மையாரின் பங்களிப்பின் கனதியைச் சொல்லும். வேறு பெண்மணியாக இருந்தால்- 'கலவர சமயம். ஊரடங்குச் சட்டம் வேறு. கொந்தளிக்கும் வங்கக் கடல். சிங்கள கடற்படை கண்டால் துலைஞ்சுது. பயங்கர பிரயாணம். வேண்டாம் முட்டாள் தனம்' - அப்படி இப்படிச் சாட்டுச் சொல்லி, மட்டக்களப்புக்குத் தான் செல்லாமல் இருப்பதோடு கணவனையும் அங்கு செல்லாது தடுத்திருப்பார். இந்த அம்மையார் தியாகம் புனிதமானது. உயிரை கையில் பிடித்துக் கொண்டுதான் கணவனையும் இழுத்துக்கொண்டு இராட்சத அலைகளோடு கொந்தளிக்கும் வங்கக் கடலில் பிரயாணம் செய்தார். இப்படிப் பல சம்பவங்கள். அவரின் பங்களிப்பை கூட்டணி மறந்தாலும் தமிழ்ச் சமுதாயம் என்றும் மறக்கக் கூடாது.



மட்டக்களப்பு வாவியை அடைந்து இறங்கு துறையில் கால் வைத்ததும் காவல் துறையினர் மங்கையர்க்கரசி அம்மையாரையும் அவர்தம் கணவரையும் கைது செய்தமை வேறோர் இடத்தில் விபரமாகச் சொல்லப்பட்டுள்ளது.

1961 பெப்புருவரி தொடக்கம் ஏப்பிரல் 17ந் திகதி வரை யாழ்ப்பாணக் கச்சேரி முன் நடந்த சத்தியாக்கிரகத்தில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அம்மையாரை யாழ்ப்பாணம் முழுமையும் தரிசித்தது. அன்றிலிருந்து அவர் ஈழ விடுதலைப் போராட்ட களத்தில் முதன்மை பெற்ற தாய்க்குல அரசியாக மிளிர்வதை அவதானிக்க முடிகிறது. சத்தியாக்கிரகப் போராட்டம் தொடங்கிய முதலாவது தினமே அவர் ஊர்வலமாகச் சென்றவர்களோடு வரிசையில் நடந்து சென்று சத்தியாக்கிரகிகளின் இரண்டாவது வரிசையில் அமர்ந்து பக்திக் கீதங்கள் இசைத்தார். அவரது தேன் போல இனிக்கும் குரல் சத்தியாக்கிரகிகளுக்கு ஊக்கம் அளித்தது. மூன்றாம் நாள் பெண்கள் தினம். அன்று அவர் 500 பெண்களை அழைத்துச் சென்று சத்தியாக்கிரகத்துக்கு உயிரளித்தார். சத்தியாக்கிரகத்தில் ஆயிரக்கணக்கில் பெண்கள் பங்கு கொள்வதற்கு காரணமாக இருந்தவர் அவர்.

1961 ஏப்ரல் 17ந் திகதி அமிர்தலிங்கம் அவர்களோடு சேரக் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு பணாகொட முகாமில் 170 தினங்கள் சிறையில் வைக்கப்பட்டார். அங்கு மொத்தம் 74 பேர் சிறைவைக்கப்பட்டிருந்தனர். அதில் திருமதி மங்கையர்க்கரசி மட்டுமே பெண்ணாவார். அவர் விடுதலையாகிய பொழுது தினகரன் நிருபர் பேட்டி கண்ட பொழுது,

"எனது ஒரு வயது மகனைப் பிரிந்து இருக்க வேண்டி வந்துவிட்டதே என்பதுதான் எனது கவலை" என்றார். எந்தத் தாயும் செய்யாத தியாகம்.

1979 மார்ச் மாதம் அமிர்தலிங்கம் தம்பதியினர் தமிழ் நாடு சென்றனர். அங்கு அரசினர் விருந்தாளிகளாகத் தங்கியிருந்தனர். மார்ச் 16ந் திகதி திராவிட முன்னேற்றக் கழகம், கலைஞர் கருணாநிதி தலைமையில் திரு. அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கு சென்னை ஈரோட்டில் ஒரு வரவேற்பளித்தது. ஐந்து இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

அச்சமயம் மங்கையர்க்கரசி அம்மையார் இலங்கையில் தமிழர்கள் படும் இன்னல்களை - கொலைகளை, கற்பழித்தலை, சூறையாடலை - விபரித்து தமிழகத்தை உணர்ச்சி கொள்ளச் செய்தார். அவர் பேசி முடிந்ததும் பெண்கள் பலர் அவரைச் சூழ்ந்து கண்ணீர் கலங்க ஆறுதல் கூறினர். தமிழக பத்திரிகைகள் எல்லாம் அடுத்த தினம் அவரது பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன. தமிழ் நாடு கொதித்தது. கொழும்பு இனவாதப் பத்திரிகைகள் விசம் கக்கின. தம்பதிகள் கொழும்பு திரும்பினர்.

தமிழகத்தில் இருந்து திரும்பி அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றம் சென்றார். தமிழ் நாட்டில் இலங்கையை விமர்சித்ததாக அவர் மீது விசமக்கணைகளை சிங்கள அரசியல்வாதிகள் அள்ளி இறைத்தனர். அச்சமயம் அமைச்சர் சிறில் மத்தியூ "மங்கையர்க்கரசி நோநாவின் (அம்மாவின்) தொண்டைக்குள் சேவலின் தலையை அறுத்துச் சொருக வேண்டும்" என்றார். அப்படி எல்லாம் திட்டும் கொட்டும் வாங்கிய பொழுதிலும் அம்மையார் தனது விடுதலைப் பணியிலிருந்து ஒதுங்கவில்லை. தமிழ் நாட்டில் எமது இளைஞர்கள் சுதந்திரப் பணிகளில் ஈடுபட அத்திபாரம் இட்டு வைத்தவர்களில் ஒருவர் அம்மையார். அரவணைத்து அன்னம் இட்டவர் அம்மையார். அவர்களாலேயே கைம்பெண்ணாக்கப்பட்டமை எமது பண்பாட்டுக்குக் கரி பூசுகிறது.

தமிழ ஈழ வரலாற்றில் முன்னோடியாக உழைத்த முதல் பெண்மணி அவர். கணவனின் உயிரைப் பறித்தமை அவரை மிகவும் கொடுமையாக வாட்டும் ஒரு துயர்நிறைந்த நிகழ்வாகும். அதனை அவர் கிளிநொச்சியிலும் லண்டனிலும் இருவருக்கு அளித்த பேட்டியில் இருந்து உணர முடிகிறது.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் இப்பொழுது லண்டன் புறநகர்ப் பகுதியில் வசிக்கிறார். மற்றும் அரசியல் தலைவர்களைப் போல வெளிநாட்டு வங்கிகளில் அமிர்தலிங்கம் அவர்கள் பணத்தைச் சேர்த்து வைத்துவிட்டுப் போகவில்லை. பத்திரிகையாளர் திரு.கே.ரி. இராசசிங்கம் அந்த அம்மாவை 1995 டிசம்பர் மாதம் சந்தித்ததைப் பற்றித் தனது 'சொல்லப்படாத கதை' என்ற இணையதள நூலில் பதிவு செய்துள்ளார்:



"தம்பி எனது கணவரைக் கொல்ல ஆட்களை அனுப்புவார் என்று கனவிலும் நான் நினைக்கவில்லை. பையனாக இருந்த காலகட்டத்தில் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து போனவர். அவருக்கு பல நாட்கள் உணவு பரிமாறி இருக்கிறேன். அவருக்கு எனது கணவர் என்ன தீமை செய்தவர்? அவர்தான் இளைஞர்களை எல்லாம் தமிழ் சமூகத்துக்கு அறிமுகமாக்கினவர். அரசியல் சொல்லிக் கொடுத்தவர். எல்லோரையும் தனது பிள்ளைகளாகவே நடத்தினவர்."

இதே கருத்தை அவர் 2003ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ந் திகதி ஞாயிற்றுக்கிழமை, கொழும்பில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அமிர்தலிங்கம் அவர்களது 76ஆவது பிறந்தின விழாவில் கலந்து கொண்டு பேசிய பொழுதும் வெளியிட்டார். லண்டனில் இருந்து கொழும்பு சென்று அந்த விழாவில் பங்குபற்றி உரை நிகழ்த்தியபொழுது அவர் கூறினார்:

"பதின்மூன்று வருடங்களுக்கு மேலாக நான் விருப்பம் இல்லாத வாழ்க்கை வாழ்ந்து வருகிறேன். எம் நாட்டைவிட்டு உறவுகளைவிட்டு அந்நிய நாட்டில் வாழ்வது எனக்குப் பிடிக்கவில்லை. என்று இலங்கையில் சமாதானம் ஏற்படுமோ அன்றுதான் எனது கணவரின் ஆத்மா சாந்தி அடையும். - எனது சொந்த மகனைப் போன்று பிரபாகரனைக் கவனித்து வந்தேன். ஏன் அவர் அவ்வாறு நடந்துகொண்டார் என்ற கேள்விக்கு விடை தேடுகிறேன். இதுவரைக்கும் எனக்கு விடைகிடைக்கவில்லை. எனது கணவர் என்ன குற்றம் செய்தார்? அதை அவர் மக்களுக்குச் சொல்ல வேண்டும்."

மனிதம் செத்து மடிந்து விட்டதா? சமயங்கள் தருமங்கள், நேர்மைகள் நியாயங்கள் எல்லாம் பொய்யாகிக்கொண்டு போகின்றன. பண்பாடு கலாச்சாரம் என்ற பாரம்பரியத் தேடல்கள் எல்லாம் சிறுமைப் படுத்தப்படுகின்றன. கீழ் மட்டத்தில் உள்ள மனிதன் காரணமாகச் சமுதாயத்தைக் கேடு சூழவில்லை. மனித குலத்தின் தலைவர்கள் என்று பெருமைப்படுகிறவர்களே சகோதர உயிர்களை ஆயிரக் கணக்கில் கொன்றுதள்ளிவிட்டு அதற்கு நியாயம் கற்பிக்கிறார்கள், சாட்சியாக தரும தேவதையை வேறு இழுக்கிறார்கள். கைதவறி ஒருவனைக் கொலை செய்தவனைக் கொலைஞன் என்று ஒதுக்குகிற அதே சமுதாயம், ஆயிரக்கணக்கில் அப்பாவி உயிர்களைக்

கொன்றவனை இரட்சிக்க வந்த தேவன் என்று துதி பாடுகிறது. ஒரு அக்கினிக் குண்டால் யப்பானில் இலட்சக்கணக்கில் மக்களை அழித்த பெருமக்கள் தொடக்கம் சிலவாயிரம் உயிரை அழித்த பெரிய மனிதர்வரை தங்கள் செயல் தருமத்தின்பாற்பட்டது என்று பிரசாரம் வேறு செய்கிறார்கள்.

மனிதம் என்றால் மனிதனின் மகத்தான குணநலங்களைக் குறிக்கும் என்பர். அன்றும்சரி இன்றும்சரி மனிதன் விலங்குகளிலும் கேவலமாகத்தான் நடக்கிறான். நாகரிகமடைய முன்னர் இனக் குழுமங்கள் ஒன்றையொன்று கொன்று இரத்தத்தில் தோய்ந்து வெறியாடின. இன்று நாகரிகமடைந்த மனிதன் என்று தனக்குத்தானே நற்சாட்சிப் பத்திரம் வழங்கும் சமூகம் - பிற இனத்தவனையும் தன் இனத்தவனையும் வேறுபாடில்லாமல் கொல்லும் போட்டியில் வெல்பவனைப் பெருமையோடு தலைவனாகப் போற்றுகிறது. அவ்வளவுக்கு மனித சமுதாயம் சிந்திக்கத் தெரியாத மரக்கட்டையாகவே அன்றுபோல் இன்றும் உள்ளது. சமயம், ஒழுக்கம், நீதி நியாயம், கலாச்சாரம் பண்பாடு பாரம்பரியம் பற்றிப் பேசிப் பெருமைப்படும் மனிதசமூகம், இன்னும் பழைய கொலை வெறித்தனத்துள்ளிருந்து விடுபடவில்லை. அப்படி ஒரு வெறிக்குத்தான் மங்கையர்க்கரசி அம்மையார் இலக்காகிக் கண்ணீரும் கம்பலையுமாக வாழ்கிறார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் 2002ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ந் திகதி அமரர் மு. சிவசிதம்பரம் அவர்களது பூதவுடலோடு யாழ்ப்பாணம் சென்ற பொழுது வன்னியில் நடந்த ஒரு நிகழ்வை, சட்டத்தரணி கனக மனோகரன் அவர்கள் கனடாவில் வெளிவரும் பிரபல 'உதயன்' பத்திரிகையில், அமிர்தலிங்கம் அவர்களின் பவளவிழாவை முன்னிட்டு எழுதிய கட்டுரையில் இவ்வாறு பதிவு செய்துள்ளார்:

"சோடி இழந்த இப்பேடு, கொண்ட இலட்சியத்திற்காகத் தான் கொண்டவனைப் பிரிந்தவள். இன்றைய இவரது விதைவைக் கோலம் எம் இனத்திற்கு இறை இட்ட சாபம். சனி தொட்ட தோசம்.

அண்மையில் அமரர் சிவசிதம்பரம் அவர்களின் பூதவுடலுடன் தன் பிறந்தகம் போன இந்த மாதரசியைச் சந்தித்த தமிழ் ஈழ



விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப்பாளர் சு.ப. தமிச்செல்வன் கிளிநொச்சியில் இவரிடம் கேட்டார்,

"என்னம்மா சொல்ல விரும்புகிறீர்கள்?" இந்தம்மா சொன்ன வாசகங்கள்.

"எங்கள் இனத்திற்கு விமோசனம் காட்டுவீர்கள் என்றால் உங்களுக்காக நானும் கடவுளைப் பிரார்த்திப்பேன்." பின்னர் குரல் தளதளக்கச் சொன்ன வாசகங்கள்:

"தம்பி பிரபாகரனை நான் என் பிள்ளைகளில் ஒருவனாகத்தான் நினைத்தனான். எங்க வீட்டுக்கு வரும் போதெல்லாம் விருந்து கொடுத்துத்தான் வழி அனுப்புகிறனான். பிரபாகரனட்டை நான் அவரை விசாரித்ததாகச் சொல்லுங்கள்."

மங்கையர்க்கரசி அம்மையார் அரசியலுக்கு மீண்டும் வர வேண்டும். தன் கணவனின் பணியை அவர் தொடரவேண்டும். கூட்டணி ஆதரவாளர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

அம்மையார் ஒரு வைதீக கட்டுப்பாடான குடும்பத்தில் பிறந்தவர். பாடசாலைக்கும் காரில்தான் போய் வந்தவர். மற்றும்படி யாழ் மங்கையர்க்குரிய கிடுகு வேலிதாண்டிப் போகாத கலாச்சார எல்லைகளுக்குள் வாழ்ந்தவர். அரசியல் என்றால் என்ன, சமூக சேவை என்றால் என்ன, மேடைப் பேச்சு என்றால் என்ன என்று தெரியாது வாழ்ந்தவர். வேலிக்குள் அமைந்த கலாச்சார வாழ்க்கை. கணவனை வரித்துக்கொண்ட பின்னர் தன் வாழ்க்கைப் போக்கை மாற்றிக்கொண்டவர். விடுதலைக் களத்தில் கணவனுடன் சமமாக நின்று தொண்டாற்றியவர். வருடத்தில் பாதிநாட்கள் நள்ளிரவுக்குப் பின்னர்தான் வீடுதிரும்பும் வாழ்க்கை. தினம் தினம் எங்கோ ஒரு மூலையில் கூட்டம் நடக்கும். அது பிரசாரக் கூட்டமாக இருக்கலாம், இலக்கியக் கூட்டமாக இருக்கலாம், சனசமூக நிலய ஆண்டு விழாவாக இருக்கலாம், பாடசாலை பரிசளிப்பு விழாவாக, விளையாட்டுப் போட்டியாக, இராப்போசன விருந்தாக இருக்கலாம். இப்படி எத்தனையோ வைபவ நிகழ்வுகள் வரிசையாக அவர்களுக்காகக் காத்திருக்கும். அவற்றில் கணவனோடு சேரக் கலந்து களைத்து வீடு திரும்புவார். பிள்ளைகள் சிறியவர்களாக இருந்த பொழுது அவர்களும் பெற்றோருடன் சேரத் தண்டனை அனுபவித்தார்கள்.

வாகனம் வீடு சேர்ந்ததும் தூங்கும் பிள்ளைகளை தூக்கிச் சென்று வளர்த்தி வளர்த்தவர். 'நேரகாலத்துக்கு உண்டு அறியாத வாழ்க்கை. கூட்டத்திற்குச் சென்ற விடத்தில் வயிறு கொதிக்கிறது என்று சொல்ல முடியாது. நேரத்துக்கு எங்களை அனுப்புங்கள் என்ற கேட்க முடியாது. ஏனெனில் அமிர்தலிங்கம் அவர்களது பேச்சே இறுதியாக இருக்கும். அவர் முதலில் பேசினால் அத்தோடு கூட்டம் கலைந்துவிடும். சில இடங்களில் நள்ளிரவாகிய பின்னர் கூட்டம் முடிய விருந்து கொடுப்பார்கள். அப்படி நடப்பது அருமை. அன்று அவர்களுக்கு அருமையான நாட்கள். யாழ்ப்பாணத்தில் மட்டும் அல்லாமல் வன்னி மன்னார் வவுனியா திருகோணமலை மட்டக்களப்பு என்று தமிழ் ஈழம் முழுவதும் கணவனுடன் சென்று அரசியற் பணி ஆற்றியவர். இப்படி வாழ்நாள் முழுவதும் கணவனின் அரசியற் பணியில் சரிசமமாகப் பங்கு கொண்ட எந்த மாதரசியையும் வரலாற்றில் சந்திக்க முடியாது. இரண்டாவது மகாயுத்தத்தை நடாத்திய பிரித்தானிய சாம்ராச்சிய பிரதமர் வின்சன் சேச்சிலின் மனைவியும் கணவனின் அரசியல் வாழ்வில் பங்கு கொண்டதாக வரலாறு உண்டு. மக்கள் சபையில் சேர்ச்சில் அவர்கள் உரையாற்றும் பொழுது பார்வையாளர் பகுதியை அடிக்கடி பார்ப்பார். அங்கு அவரது மனைவி இருப்பார். அவர், கணவன் பேசுவதை மெச்சிச் சைகைகாட்டி உற்சாக மூட்டுவார். அதுதான் அவர் கணவனின் அரசியல் பணியில் கொண்ட மகத்தான பங்கு. உலக அரசியல் வரலாற்றில் தனக்கென ஒரு தனித்தடம் பதித்த மங்கையர்க்கரசி அம்மையாருக்கு, உலகத்தில் எந்த மாதும் ஈடு நிற்க முடியாது.

கணவன் காவல்துறையினாலும் இராணுவத்தாலும் தாக்கப்பட்டு இரத்தக் கறையுடன் வீடு வந்த பொழுதில் தாயாகவும் தலைவியாகவும் அமைந்து அவருக்கு தேறுதல் வார்த்தைகள் சொல்லி, வைத்தியம் செய்து கணவனை மீண்டும் விடுதலைக் களத்துக்கு அனுப்பி வைத்தவர் மங்கையர்க்கரசியார். ஸ்ரீ அழிப்புப் போராட்த்தின் பொழுது கைதாகி யாழ்ப்பாணச் சிறையில் இருந்த இளைஞர்கள் ஐவர்கள் விடுதலையான பொழுது அவர்களை வரவேற்கச் சிறைச்சாலை வாசலுக்கு அமிர்தலிங்கம் அவர்கள் சென்றார். சிறைச்சாலை வாசலில்தான் யாழ்ப்பாணத் தலைமைக் காவல் நிலையம் உண்டு. அப்பொழுது சிங்களப் பொலிசார் சிலர் அவரின் கார் பொனற்றில் ஏறி நின்று போத்துக்கேயரிடம் இரவல்வாங்கிய 'பைலா' நடனம் ஆடினர். வேறு சில பொலிசார் அமிர்தலிங்கம் அவர்களை நையப் புடைத்தனர். அவற்றை எல்லாம் கார் முன் ஆசனத்தில் இருந்தபடி மங்கையர்க்கரசியார் பார்த்துக்கொண்டு இருந்தவர். நெஞ்சம் குமுற கண்கள் கண்ணீர் கொட்ட இரத்தம் குமுறிக் கொதிக்க உலகத்து வேதனைகளை எல்லாம் தாங்கிக்கொண்டு சிலையாக இருந்தவர். அவர் விடுதலைப் பாதையிலே அப்படி எத்தனையோ வேதனை களையும் சோதனைகளையும் சுமந்தவர். 1975இல் கணவனையும் அம்மையாரையும் காவல் துறையினர் மூளாயில் உள்ள அவர்களது வீட்டில் வைத்துக் கைது செய்து கொண்டு போனார்கள். யாழ் தலைமைக் காவல் நிலையத்தில் தனக்கு நடந்ததைப் பற்றி அவர் சொல்வது:



"பொலிஸ் நிலையத்தில் எனது கணவரை டி.ஐ.ஜி. சில்வா விசாரணை செய்தார். வேறு ஓரறையில் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம் பிள்ளை என்னை விசாரணை செய்தார். அவரோடு இரண்டு பெண் பொலிசாரும் இருந்தனர். பஸ்தியாம்பிள்ளை கட்டைக் காற்சட்டை அணிந்திருந்தார். அவர் தனது தொடையை அடிக்கடி உள்ளங்கையால் தட்டியபடி என்னைச் சுற்றி வந்து முழுசிப் பார்த்துக் கேள்விகள் கேட்டார். சில சமயம் குரலை நெருமி வெருட்டினார். எனது இளைய மகனைப் பிடித்து வந்து சித்திரவதை செய்யப் போவதாக உறுமினார். நான் அவரைப் பார்த்து "இவ்வளவு கேவலமாக நடத்துகிறியே. பதவி உயர்வு பெறத்தானே உப்படிச் செய்கிறாய். நீ என்ன தமிழனா?" என்று கேட்டேன். அவன் ஓவென்று உரத்து ஊளையிட்டான்."

நாடாளுமன்ற அமைச்சர்கள் தொடக்கம் பொலிஸ்காரன்வரை அம்மையாரை வதைத்த காட்சிகள் அனந்தம்.

வசதியான குடும்பத்தில் மூத்த மகளாக அவதரித்த இவர் பொருளியல் வாழ்க்கை பரிதாபகரமானது. இனத்துக்காக உழைக்கப்போய்க் குட்டிச் சுவராகிய குடும்பத்தின் தலைவி இவர். அப்படியிருந்தும் மனங்கோணாமல் இனவிடுதலைக்காகக் கணவனுடன் தோளோடு தோள்நின்று உழைத்தவர். தனது அரும்பணிகளால் இனத்தின் விடுதலை விளக்கை ஏற்றி வைத்த மங்கையர்க்கரசி அம்மையாருக்கு தமிழ் ஈழம் நிரம்பக் கடமைப்பட்டிருக்கிறது.

அக்கினிக் குஞ்சுகள்
பலி தேடி அலைகின்றன.

நாளைப் பொழுது
எனக்கு விடியுமா?
நரிகள் என்னை
உருசி பார்க்குமா?

வாழ வழிசமைத்த ஐயனே,
உன் வழி அடைத்து
நான் குருதி யாற்றில்
கரைசேர நீச்சலடிக்கிறேன்.

மீண்டும் எழுந்து வா!
உன் வருகைக்காக
ஒரு நாடு
இங்கு தவஞ் செய்கிறது.

# அதிகாரம் 55
# உரிமைப் போராட்ட வரலாறு

அமிர்தலிங்கம் அவர்கள் ஈழத் தமிழ் மக்களது உரிமைப் போராட்ட வரலாற்றை மிகச் சுருக்கமாக நாடாளுமன்றப் பதிவேட்டில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபொழுது - 1977 - ஆவணப்படுத்தி யுள்ளார். அந்த வரலாறு அவரது வார்த்தைகளிலேயே தரப்படுகிறது:

"கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கையின் பண்டைய கால குடியேற்றங்கள், அரசியல் வரலாறு பற்றிய செய்திகள் தெளிவில்லாமல் உள்ளன. இருபகுதியும் கட்டுக் கதைகளினால் மேலும் அவற்றைத் தெளிவில்லாமல் செய்துள்ளனர். ஆனால் கேள்விக்கிடமில்லாமல் இன்று புரிகிறது - கி.மு. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டில் ஆரம்ப ஆரியக் (சிங்களக்) குடியேற்றம் நடந்த பொழுது



திராவிடர்கள் (தமிழர்கள்) இந்த நாட்டில் வாழ்ந்தார்கள். ஐரோப்பியர்கள் முதன் முதலில் இலங்கையை ஆக்கிரமித்த பொழுது - அதாவது கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் போத்துக்கேயர் இலங்கைக்கு வந்தபொழுது அவர்கள் முற்றிலும் தனித்த இரண்டு பண்டைய அரசுகள் - அதாவது வடக்கில் தமிழர்களது இராச்சியமும் தெற்கில் சிங்களவரது இராச்சியமும் அமைந்துள்ளதைக் கண்டனர். போத்துக்கேயர் காலத்திலும், அவர்களைத் தொடர்ந்து ஆட்சி நடாத்திய ஒல்லாந்தர் காலத்திலும் அந்த இரு இராச்சியங்களும் தனித்தனியே இயங்கின. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் 19ஆம் நூற்றாண்டில்தான் இரு அரசுகளும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவரப பட்டன. "போத்துக்கேயரின் ஆட்சி" என்ற கொல்வின் ஆர் டி சில்வா வின் நூலில் 45ஆம் பக்கத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:"

"கண்டிய இராச்சியத்துக்குப் படைகள் செல்ல அனுமதித்த அல்லது உதவிய யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்ற வேண்டிய அவசியம் இருந்தபடியால்தான் போத்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்ற விசேட முயற்சிகள் எடுத்தனர்."

"அதாவது போத்துக்கேயருடன் உடன்பாடு செய்திருந்த யாழ்ப்பாண மன்னன், அதற்கு முரணாகக் கண்டி அரசனது படைகள் தனது இராச்சியத்தினூடாகச் செல்ல அனுமதித்தான். ஆகவேதான் போத்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முனைத்தனர். ஆனால் இந்தச் சபையிலே பரிதாபகரமான காட்சியைக் காண்கின்றோம். கண்டி நாடாளுமன்ற உறுப்பினர் யாழ்ப்பாண இராச்சியம் என்றும் இருந்ததில்லை என்று புலம்புகிறார். யாழ்ப்பாண இராச்சியம் அஸ்தமித்ததற்குக் காரணமே யாழ்ப்பாண அரசன் கண்டி அரசனுக்கு உதவி செய்யப் போனதால்தான்."

'பிரித்தானியர் இந்த நாட்டை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்ததின் பின்னர் சிங்களவர்கள் தமிழர்கள் முஸ்லீம்கள் பறங்கியர்கள் மலாயர்கள் யாவரும் சகோதரர்களாய் வாழ்ந்தார்கள். எனினும் 1915இல் முஸ்லிம்களுக்கு எதிராகச் சிங்களவர்கள் இனக் கலவரம் செய்தார்கள். அப்பொழுது சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் நீர்மூழ்கிக் கப்பல்கள் நிறைந்த கடல்களைத் தாண்டி லண்டன் சென்று சிங்கள-முஸ்லிம் கலகத்தையடுத்துச் சிறையில்

இருந்த சிங்களத் தலைவர்களை விடுவித்தார். அவர் நாடு திரும்பிய பொழுது நிலப்பாவர்டை விரித்து அவரைத் துறைமுகத்தில் இருந்து பல்லக்கில் ஏற்றி அப்பல்லக்கைச் சிங்களத் தலைவர்கள் கொழும்பு வீதிகளில் இழுத்து வந்தனர். அச்செய்திகள் வரலாற்றில் பதிவாகி உள்ளன."

"சேர் பொன்னம்பலம் அருணாசலம், சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆகிய தமிழர்கள் இந்த நாட்டு அரசியல் நீரோட்டத்தில் மிக முக்கிய பங்கு வகித்தார்கள். 1918 ஆம் ஆண்டில் சேர் பொன்னம்பலம் அருணாசலம் இலங்கைத் தேசிய காங்கிரஸ் அரசியல் கட்சியை நிறுவினார். அதன் முதலாவது தலைவரும் அவரேதான். அந்த இயக்கமே இலங்கைக்குப் பூரண சுயாட்சி வேண்டும் என்று முதன்முதலில் குரல் கொடுத்தது. முதலில் அவர்கள் டொமினியன் அந்தஸ்துக் கோரினர். பின்னரே சுயாட்சி கோரினர். ஆனால் 1924இல் என்ன நடந்தது? இலங்கைத் தேசிய காங்கிரசை நிறுவிய அவர் பெரும்பான்மைச் சமூகத்தின் போக்கிலும் நோக்கத்திலும் வெறுப்படைந்து 1924இல் இலங்கைத் தமிழர் லீக்கை நிறுவினார். 1924இல் கட்சி ஆரம்பித்து நிகழ்த்திய தனது தலைமை உரையின் பொழுது 'நாம் (தமிழர்கள்) எமது அடையாளத்தையும் உரிமையையும் தனித்துப் பேணவேண்டும்' என்று கூறினார்."

"1926ஆம் ஆண்டு காலஞ்சென்ற திரு. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க 'சிலோன் மோணிங் ஸ்ரார்' என்ற பத்திரிகையில் இலங்கைக்குச் சமஷ்டி ஆட்சியே உகந்தது என்று கூறியிருந்தார். அவர் சிறுபான்மை மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றி எழுதியுள்ளதை வாசிக்கின்றேன்: 'இலங்கையில் ஒவ்வொரு மாகாணமும் உள்ளகச் சுதந்திர முடையதாக இருக்கவேண்டும். தீவின் வருவாயைக் கவனிக்க ஒன்று அல்லது இரண்டு சபைகள் இருக்க வேண்டும். எனது சமஷ்டி அமைப்பு கருதுகோளுக்கு எதிராக ஆயிரக்கணக்கான எதிர்ப்புக்கள் தோன்றலாம். அந்த எதிர்ப்புக்கள் மங்கி மறையும் பொழுது இலங்கைக்கு பொருத்தமான அரசியல் அமைப்பு சமஷ்டி மட்டுமே என்பது வெளிச்சமாகும்' இறுதியில் அவர் என்ன செய்தவர்?"

"கௌரவ சபாநாயகர் அவர்களே, நான் இப்பொழுது 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்துக்கு வருகிறேன். இலங்கைத் தமிழ் காங்கிரஸ் உட்படச் சகல தமிழ் சமூகங்களின் தலைவர்களும் சுதந்திரத்தை அடுத்துப் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவின் அரசோடு ஒத்துழைத்தார்கள். தமிழ் முஸ்லிம் பறங்கியர் சமூகங்கள் அனைத்தும் சுதந்திர இலங்கையில் தமக்கு நியாயம் கிடைக்கும் என்று உறுதியாக இருந்தார்கள்."



"என்ன நடந்தது என்று எல்லோருக்கும் தெரியும். இன்றைய தமிழ் மக்களின் நிலைக்கு என்ன செயற்பாடுகள் காரணமாக விருந்தன என்பதைச் சொல்லவேண்டிய கட்டாயநிலையில் உள்ளேன். இந்த நாட்டிலே பெரும்பான்மை மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது இனவாதம் எவ்வளவு உக்கிரமாக இருந்தாலும் - அது தேசியம் என்ற பதத்தால் குறிக்கப்படுகிறது. அதனை ஆசன பீடத்தில் ஏற்றிப் பின்பற்ற வேண்டிய உதாரணமாகக் காட்டப்படுகிறது. ஆனால் சிறுபான்மையினர் தங்களது உரிமைகளைக் கேட்டால் அல்லது போராடினால் அது இனவாதம் என்று நாமகரணம் செய்யப்படுகிறது. அவர்கள்மீது கெட்ட பெயர் சுமத்தித் தூக்கிலிடத் துடிக்கிறார்கள்."

"சுதந்திரம் அடைந்த கையோடு முதல் வருசத்திலேயே மூன்று சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. இலங்கைப் பிரசா உரிமைச் சட்டம், இந்தியர்-பாகிஸ்தானியர் வதிவிடச் சட்டம், பாராளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் என்பன அவை. இந்த மூன்று சட்டங்களும் கொண்டுவந்த விளைவு நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் அங்கத்தவர்கள் பாதிப் பேருடைய அங்கத்துவம் பறிபோனதாகும்."

"சோல்பரி ஆணைக்குழு ஒரு விசேட அரசியல் யாப்பை இலங்கைக்கு வழங்கியது. தமிழ் உறுப்பினர் சி.சுந்தரலிங்கம் அதனை ஒரு குறித்த அடிப்படையில் ஏற்றுக்கொண்டார். அந்த யாப்பில் சொல்லப்பட்ட முறையில் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட 95 அங்கத்தவர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த 15 அங்கத்தவர்கள் இருப்பார்கள். மலைநாட்டுத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தப் 14 அங்கத்தவர்கள் இருப்பார்கள். மொத்தமாக 95 உறுப்பினர்களில் 29 பேர் தமிழராக இருப்பர். இது நியமன உறுப்பினர்கள் ஆறுபேரைத்தவிரவாகும். இன்னும் எட்டு முஸ்லிம் உறுப்பினர்கள்

இருப்பார்கள். அதன்படி சிறுபான்மையோர் மொத்தம் 37 பேர் நாடாளுமன்றத்தில் இருப்பார்கள்."

"ஆனால் சுதந்திரம் பெற்று ஒரு வருடத்தில் அந்த அங்கத்துவ அமைப்பு முறை முற்றாக மாற்றி அமைக்கப்பட்டது. அது மட்டுமல்ல. அந்தக் காலந் தொடக்கம் ஒரு விசமத்தனமான கூடிய அங்கத்துவப் பங்களிப்பு பெரும்பான்மைக்கு வழங்குவது நடைமுறையில் இருந்து வருகிறது. பெரும்பான்மைக்குக் கூடிய சலுகை அளிக்கும் கைங்கரியம் உலகில் வெறெந்த நாட்டிலும் இடம்பெற்றதாகவில்லை."

:இந்த நாட்டிலே 74 சதவீத பெரும்பான்மை மக்களுக்கு 80 சதவீத நாடாளுமன்ற அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பிரசா உரிமைச் சட்டத்தினால் அப்படி ஒரு அநியாயம் செய்யப்பட்டுள்ளது. ஜனநாயகத்தைச் சீரழித்துச் செய்யப்பட்ட அந்த நடைமுறையை ஒத்த செயல்கள் தொடர்ந்தும் சிறுபான்மையினருக்கு எதிராகக் கைக்கொள்ளப்படுகின்றன."

"சிறுபான்மையினரான தமிழர் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் திட்டமிட்டுச் சிங்களவர்களைக் குடியேற்றியதால் மேலும் தங்கள் பங்கிற்கு உரிய பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அவர்கள் இழக்க நேரிட்டுள்ளது. இவை சுதந்திரத்தின் பின்னர் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இரு துறைப் பாதிப்புகளாகும்."

"அதனையடுத்து 1956 பண்டாரநாயக்க யுகம் ஆரம்பித்தது. சுதந்திரத்துக்கு முன்னர் 1944இல் மட்டக்களப்பு உறுப்பினர் நல்லையா அவர்களது கேள்விப்படி இன்றைய பிரதம மந்திரி (ஜே.ஆர்.ஜயவர்த்தன) இந்த நாட்டின் உத்தியோக மொழிகளாக சிங்களமும் தமிழும் இருக்கும் என்ற பிரேரணையைச் சட்ட சபையில் கொண்டு வந்து நிறைவேற்றினார். 1956வரை எல்லா அரசியல் கட்சிகளும் இந்த நாட்டின் உத்தியோக மொழியாக சிங்களமும் தமிழும் இருக்கும் என்ற கொள்கை அடிப்படையிலேயே இயங்கின. தேசிய மொழிகளுக்காக ஒரு தனிப்பட்ட இலாகா இயங்கியது."

"பின்னர் அரசியல் அதிகாரத்தைக் குறுக்குவழியால் கைப்பற்ற முனைந்த சிலர் (எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க) மொழிக்கு முதன்மை கொடுத்து பிரசாரிக்கத் தொடங்கினர். அவர்கள் 'சிங்களம் மட்டுமே உத்தியோக மொழியாக இருக்கும்' என்று ஆர்ப்பரித்தார்கள். அவர்களின் பிரசாரம், புயல் வேகம் அடைந்ததைக் கண்ட ஐக்கிய தேசியக் கட்சியினர் தமது புனித கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டுப் பெரும்பான்மையினரின் பேரினவாதத்துக்கு ஆட்பட்டு 1956 பெப்புருவரி 18ந் திகதி களனி மகாநாட்டில் 'சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி' என்று பிரகடனம் வெளியிட்டனர். அதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த சகல தமிழ் அங்கத்தவர்களும் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாகக்கூறி இராஜினாமாச் செய்தார்கள். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக் கொள்கை மாறினாலும் சிங்கள மக்கள் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவையே விரும்பினர். அவரில் நம்பிக்கை வைத்தனர். அவரது மகாஜன எக்சத் பெரமு னையை ஆட்சிப்பீடத்தில் ஏற்றினர். யூன் 5ந் திகதி சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்ட பொழுது நடந்த கேவலங்கள் நாடு முழுவதும் தெரிந்த கதையே. எமது தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் தலைமையில் நாங்கள் மகாத்மா காந்தியைப் பின்பற்றிக் காலி முகத் திடலில் சத்தியாக்கிரகம் செய்தோம். எங்கள்மீது காடையர்கள் ஏவிவிடப்பட்டார்கள். பாராளுமன்றக் கட்டடத்தின் மாடத்தில் நின்று பார்த்த அப்போதைய பிரதம மந்திரி சொன்னார் "மழை அவர்களைக் குழுமைப்படுத்தட்டும். நீங்கள் போய் அவர்களைத் தாக்கத் தேவையில்லை" என்று. ஆனாலும் அவர்கள் எங்களைத் தாக்கினார்கள். நான் எனது உடைந்த தலைக்குப் பத்துக்கட்டியபடி இந்தச் சபைக்கு வந்தேன். நான் உள்ளே வந்த பொழுது அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க "யுத்தத்தின் தழும்புகள்" என்று குறிப்புரை கூறினார். அப்பொழுது அவருடைய மனநிலை அப்படித்தான் இருந்தது. தமிழிலே ஒரு பழமொழி உண்டு 'பூனைக்கு விளையாட்டு. சுண்டெலிக்கு சீவன் போகிறது' என்று."

"அதனையடுத்து நாங்கள் சாத்வீகப் போராட்டங்களை ஆரம்பித்தோம். எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தமிழர்களுக்கு நீதி செய்ய விரும்பினார். அவர் எமது தலைவர் அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களுடன் 1957 யூலை 26ந் திகதி ஒரு ஒப்பந்தம் செய்தார். நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணியிடம் நல்லாக வாங்கிக்கட்டிய ஐக்கிய தேசியக் கட்சியினர், மீண்டும் சிங்கள மக்களிடம் செல்ல ஒரு பொன்னான சந்தர்ப்பங்

கிடைத்திருப்பதைக் கண்டனர். தமிழர்களைப் பணயம் வைத்து ஆட்சிபீடத்தை மீண்டும் கைப்பற்ற "பிரதமர் பண்டாரநாயக்க சிங்கள மக்களைத் தமிழர்களுக்கு விற்றுப் போட்டார்" என்று குரல் கொடுக்கத் தொடங்கினர். அவமானப் பட்ட கண்டி யாத்திரையை மேற்கொண்டனர். எஸ்.டி.பண்டாரநாயக்க கம்பஹாவில் உள்ள இம்புல்கொடையில் வீதிக்குக் குறுக்கே தடை போட்டார். அதனால் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் நடந்த கண்டி யாத்திரை கைவிடப்பட்டது. ஆனாலும் அதன் பின்னர் ஐக்கிய் தேசியக் கட்சியால் தூண்டிவிடப்பட்ட தீயசக்திகள் காரணமாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா எவரையும் கலந்து பேசாமல் தான் செய்த ஒப்பந்தத்தை 1958 ஏப்பிரல் 8ந் திகதி கிழித்தெறிந்தார். ஆனால் 1957 தொடக்கம் ஐக்கிய தேசியக் கட்சியால் அவிழ்த்துவிடப்பட்ட தீய சக்திகளை அரசாங்கத்தால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அது 1958 மே மாதத்தில் இனஅழிப்பை ஏற்படுத்தியது. இன்றைக்கு தமிழர்கள் தாக்கப்பட்டால் "நீங்கள் தமிழ் ஈழம் கேட்பதனால்" என்று சொல்கிறார்கள். 1958இல் ஏன் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள்? அப்பொழுது உள்ள பிரதமர் எனது கட்சியின் தலைவருடன் ஒரு ஒப்பந்தம் செய்தார். அதனைச் சிங்கள மக்களின் இன்னொரு கட்சி ஆதரிக்கவில்லை. அவர்கள் அப்படிச் செய்ததற்குக் காரணம் பண்டாரநாயக்காவை ஆட்சியில் இருந்து இறக்கி தாம் ஆட்சியைக் கைப்பற்ற அது உதவும் என்ற காரணத்தால்."

"1958 இனவாத கலவரத்தால் இரத்தம் வழிந்தோடியது. பலர் நினைத்தார்கள் - விரும்பினார்கள் - அப்டியான வன்முறைகள் இந்த நாட்டில் மேற்கொண்டு நடைபெறாது என்று. அந்த 1958 கலவரத்தின் பொழுது சிங்கள வன்முறையாளர் தமது கைவரிசையைக் காட்ட இரு தினங்கள் கொடுக்கப்பட்டன. அந்த இரு நாட்களுள் தமிழர் களுக்குப் போதிய சேதம் ஏற்படுத்தப்பட்டாயிற்று. இரண்டு நாட்கள் முடிவில் அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டு சமாதானமும் ஒழுங்கும் நிலைநிறுத்தப்பட்டன. அப்பொழுது கே.எம்.பி.இராசரத்தினவும் அவரது மனைவியாரும் சிறைவைக்கப்பட்டார்கள். நாங்களும் சிறைவைக்கப்பட்டோம்."

"1960 மார்ச் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.



அதனால் இரு கட்சிகளும் எமது ஆதரவை நாடின. தமிழர்களின் நீண்ட காலப் பிரச்சினைகளைத் தீர்க்கச் சம்மதித்தால் நாங்கள் ஆதரவளிப்பதாகக் கூறினோம். ஆனால் அரசை அமைத்த ஐக்கிய தேசியக் கட்சி எமது கோரிக்கையை ஏற்க மறுத்தது. அதனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1960யூலை மாதத்தில் தேர்தல் நடந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எமது கோரிக்கை பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நிகர்த்ததாக இருப்பதாகக் கூறி அதனை ஏற்பதில் தமக்கு ஆட்சேபம் இல்லை என்ற உடன்பாட்டுக்கு வந்தனர். தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. அவர்கள் எம்மோடு செய்த உடன்பாட்டை அலட்சியப்படுத்தினர்."

"அதனால் நாங்கள் சாத்வீக வழியில் போராடத் தொடங்கினோம். 1961 ஆம் ஆண்டில் தொடர்ந்து இரண்டு மாதங்களாக நாங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள கச்சேரிகளின் முன்னர் சத்தியாக்கிரகம் செய்தோம். அதனைக் கலைக்க அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இராணுவம் அழைக்கப்பட்டது. எமது மக்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார்கள். நாங்கள் பணாகொட முகாமில் 1961 ஏப்பிரல் தொடக்கம் 1961 அக்டோபர்வரை ஆறுமாதங்கள் சிறையில் வைக்கப்பட்டோம். அச்சமயத்தில் வடகிழக்கை நிர்வகிக்க இராணுவ தளபதிகள் அனுப்பப்பட்டார்கள்."

"1965 தேர்தலும் 1960 மார்ச் தேர்தலைப் போலவே அமைந்தது. இரண்டில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. காலஞ்சென்ற திரு. டட்லி சேனநாயக்கவும் எமது தலைவர் காலஞ்சென்ற திரு.செல்வநாயகம் அவர்களும் ஒரு எழுத்து மூலமான உடன்பாடு செய்தனர். அதன் அடிப்படையில் நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கம் அமைக்க உதவிபுரிந்தோம். அதன் அடிப்படையில் 1966 ஜனவரி 8ந் திகதி தமிழ் மொழி விசேட சட்டமூலத்தை இன்றைய கௌரவ பிரதமர் (ஜே.ஆர்.ஜயவர்த்தன) சபையில் சமர்ப்பித்தார். அன்றைய தினம் எனது இடது பக்கத்தில் உள்ள நண்பர்கள் - இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் உட்பட - யாவரும் விகாரமாதேவி பூங்காவில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு "சிங்கள மக்களின் உரிமைகளை டட்லி சேனநாயக்கா தமிழர்களுக்கு விற்றுப்போட்டார்" என்று கோசமிட்டனர். அவர்கள் ஊர்வலத்தின் முன்வரிசைகளில் சிறுவர்-சிறுமிகளையும் புத்த குருமாரையும் வைத்து

ஊர்வலம் நடத்தினர். யாரோ ஒருவர் சுட்டதில் புத்தபிக்கு சங்கைக்குரிய இரத்தினசார தேரோ மரணமானார். எனது இடது பக்கத்தில் உள்ளவர்கள் அதனைப் பூதாகாரமாக்கினர். ஒருவர் இரத்தம் தோய்ந்த மேலங்கியை இந்தச் சபையிலே காட்டினார். எனக்கு அது இறந்தவருடைய அங்கியோ இல்லையோ என்பது தெரியாது. அவர்கள் சிங்கள மக்களைத் தமிழர்களுக்கு எதிராகக் கிளர்ச்சிக்குத் தூண்டினர். அவர்கள் இந்தச் சபையிலே தமிழர்களை வடைதோசை என்று நையாண்டி செய்தார்கள். வெளியில் நல்லெண்ணெய் என்று வைதார்கள்."

"எனினும் எதிர்ப்புக்கிடையில் தமிழ் மொழி விசேட சட்டமூலம் இந்தச் சபையிலே 1966 ஜனவரி மாதம் நிறைவேற்றப்பட்டது."

"அதுமட்டுமல்ல. நிர்வாகத்தைப் பரவலாக்க மாவட்ட சபை நிர்வாக அமைப்புத் தருவதாகச் சொன்னார்கள். அது திரு.டட்லி சேனநாயக்காவினால் அளிக்கப்பட்ட சத்திய உறுதியாகும். ஒரு முன்னோடி மாதிரித் திட்டம் தயாரிக்கப்பட்டு இந்தச் சபையில் வைக்கப்பட்டது. சிங்கள மக்களும், பின்வரிசைப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதனை எதிர்ப்பதாகவும், அதனால் மாவட்டசபைச் சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது, "நான் என்ன செய்ய முடியும்?" என்று திரு.டட்லி சேனநாயக்க சொன்னர். இரண்டு பிரதான கட்சிகளதும் வழிகாட்டிகள், தத்துவமேதைகள், அவற்றிற்கு அறிவுரை வழங்கும் அறிஞர்கள் தானத்தில் அமர்ந்திருந்த இரண்டு கௌரவ பிரதம மந்திரிகளும் - தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காண்பதற்காகத் தமிழர்களின் தலைவரான செல்வநாயகம் அவர்களுடன் ஒப்பந்தம் செய்தவர்கள். அவர்கள் இருவரும் தமது வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமல்போனார்கள்."

"அதன் பின்னர், 1970 தேர்தல் ஐக்கிய முன்னணி கட்சியை மிகப் பெரும்பான்மையோடு ஆட்சியில் ஏற்றியது. அவர்கள் தாங்கள் ஒரு புதிய அரசியல் யாப்பு வரையப் போவதாகச் சொன்னார்கள். நாங்கள் அரசியல் நிர்ணய சபையின் முன் தோன்றி மிகக் குறைந்த அளவிலான கேள்விகளை முன் வைத்தோம். ஆகக் குறைந்தது தமிழ் மொழி விசேட சட்ட விதிகளையாவது அரசியல் திட்டத்தில் சேர்க்கும்படி வேண்டினோம். எதுவும் நடக்கவில்லை. புதிய அரசியல் யாப்பின் 8(2) விதி குறிப்பாகச் சொன்னது - தமிழ் மொழி விசேட சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் எந்தச் சட்டமும் அரசியல் யாப்பில் சேர்க்கப்படமாட்டாது என்று. ஐக்கி தேசியக் கட்சியால் தரப்பட்ட மிகச் சிறிய சலுகைகள்கூட புறந்தள்ளப்பட்டன. நாங்கள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறினோம். தமிழ்க் கட்சிகள் யாவும் தங்களது கருத்துவேறுபாடுகளை மறந்து தமிழர் ஐக்கிய முன்னணியை (Tamil United Front) ஏற்படுத்தி ஒரு ஆறு அம்சத் திட்டத்தை அரசியல் யாப்பில் திருத்தம் செய்வதற்காகக் கொடுத்தோம். நாங்கள் பெரிதாக எதனையும் கேட்கவில்லை. பேச்சுவார்த்தைக்கு மட்டும் கேட்டோம். அவர்கள் செவி சாய்க்கவில்லை. முடிவில் உரிமைகளைக் கேட்டதற்காக நாங்கள் வன்முறைகளுக்கு இலக்கானோம் - ஒரு முறை அல்லப் பல தடவைகள்."



"1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடந்தது. உலகம் எங்கும் இருந்து அறிஞர்கள் வந்திருந்தனர். மக்கள் வெள்ளம் அலைபுரண்டது. யாரோ ஒரு இந்தியர் பேசப்போவதாகப் பொய்க்கதை பரவியது. திடீரென வந்த பொலிசார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர். குண்டாம் தடிகளால் மக்களை அடித்தனர். றைபிள்களால் சுட்டனர். மின்சாரக்கம்பி அறுந்து விழுந்து ஒன்பது பேர் பலியாகினார்கள்."

"அதன் பின்னர் எமது சிங்களச் சகோதரர்களிடமிருந்து மேலும் உதவியை எதிர்பார்க்க முடியாது என்று உணர்ந்தார்கள். அவ்வேளைதான் எமது தலைவர் செல்வநாயகம் அவர்கள் புதிய அரசியல் யாப்பில் தமிழர்கள் உரிமைகள் புறக்கணிக்கப் பட்டுள்ளதைக் காரணம் காட்டிக் காங்கேசன்துறையில் உப தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தார். தேர்தலில் 74 சதவீத மக்கள் அவரது முயற்சியை ஆதரித்து வாக்களித்தனர். இப்பொழுது நடப்பது எமது உரிமைகள் மறுக்கப்படுவது பற்றிய விடயம் மட்டுமல்ல. நாங்கள் வாழ்வதற்கு உரிய உரிமையும் புறக்கணிக்கப்படுகிறது. சட்டமும் ஒழுங்கும் சிங்கள மக்களுக்கு ஒரு விதமாகவும் தமிழ் மக்களுக்கு வேறுவிதமாகவும் செயல்படுகின்றன. இந்தப் பரிதாபகரமான சூழ்நிலையில்தான் மக்கள் தமது சுயநிர்ணயவுரிமையைப் பயன்படுத்தி எங்களுக்கு 1977 தேர்தலில் அளவுக்கு அதிகமான வாக்குகளைத்

தந்து இந்தச் சபையிலே எங்களை 1619இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போத்துக்கேயரிடம் இழந்த உரிமையைக் கோர அனுப்பி உள்ளார்கள்."

## மக்கள் சிந்திக்க வேண்டும்

மக்கள் அரசியல் தலைவர்களை மதிக்கவேண்டும். தலைவர்கள் யார்? சூத்தைகள் பேத்தைகள் காற்றோடு அள்ளுப்பட்டுப் போய்விடுவார்கள். மாணிக்கங்கள் வைடூரியங்கள்தான் எஞ்சி நிற்பார்கள். அவர்களைக் கண்மணி போலக் காப்பாற்ற வேண்டியது சமுதாயக் கடமை. கண்களை மூடிக்கொண்டிருந்தால் பேரிடிகள்தான் தலையில் கொட்டுப்படும். மக்கள் தாங்களே தங்கள் தலைகளில் மண் அள்ளிக் கொட்டினால் ஆண்டவனாலும் அவர்களைக் காப்பாற்ற முடியாது. தேர்தல்கள்தான் ஜனநாயகத்தின் உயிர்நாடி. அதனை நசுக்கி வைத்துக்கொண்டு தலைவர்களைத் தேட முடியாது. அதற்காக மக்கள் புரட்சி செய்ய வேண்டும் என்பது ஜனநாயக நீரோட்டத்தில் அமைந்துள்ள நாடுகளுக்குத் தேவை இல்லாத கோசம். மக்கள் சிந்தித்துச் செயற்பட்டாலே அவர்களது பிரச்சினைகள் பல மங்கி மறைந்துவிடும். அவர்கள் ஊர்வலங்களில் உற்சாகமாகப் பங்கேற்க வேண்டும். பதாதைகள் காவவேண்டும். உரத்த குரலில் கோசமிட வேண்டும். மேடையில் ஏறி எவர் பிதற்றினாலும் காது கொடுத்துக் கேட்கவேண்டும். கைதட்ட வேண்டும். விசிலடிக்க வேண்டும். ஊடகங்கள் பொடிவைத்து ஊதுவதை அப்படியே விழுங்கி ஜீரணித்து ஏப்பம்விடக்கூடாது. ஜனநாயக நாட்டு மக்களுக்கு பல உரிமைகள் சுதந்திரங்கள் இருப்பது போல எல்லாவற்றுக்கும் மேலான கடமை ஒன்று உள்ளது. அதுதான் தலையாய ஜனநாயகக் கடமை. அவர்கள் இன்னொருத்தனின் அடாவடித்தனத்துக்குத் தமது தலை ஓணானைப் போல ஆட அனுமதிக்கக்கூடாது. அதைச் செய்யாதவரை அவர்களது துன்பங்கள் துயரங்கள் தீரப்போவதில்லை.





பாலம் விமான நிலையத்தில் இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி.வி. நரசிம்மராவுடன் திரு. அ. அமிர்தலிங்கம் (1983)



கொழும்பு அனைத்துக் கட்சிகள் மாநாடு
ஜே.ஆர்.ஜயவர்த்தனவுடன் திரு. அ. அமிர்தலிங்கம் (1984)





இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர்
சென்னை மரீனா கடற்கரையில்
கூட்டமொன்றில் ராஜீவ்காந்தியுடன் திரு. அமிர்தலிங்கம் (1987)



நெடுந்தீவில் திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன்
திருமதி. மங்கையர்கரசி அமிர்தலிங்கம் (1955)





திரு. அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சி அலுவலகத்தின்முன்
கு. வன்னியசிங்கம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜெயசிங்கம்,
க. துரைரத்தினம் (1957)



திரு. அமிர்தலிங்கம் வாலிப முன்னணித் தலைவராக வவுனியா தமிழரசுக் கட்சி மாநாட்டில் (1958)





திருமலை யாத்திரை அ.அமிர்தலிங்கம், கு. வன்னியசிங்கம், வ.ந. நவரத்தினம் (1957)



திருமதி & திரு. அமிர்தலிங்கம் - சிறீ எதிர்ப்பு போராட்டத்தில் கைதாகி தடுத்துவைக்கப்பட்டபோது (1958)

# பாகம் 2

# அழிப்பின் கதை

மனையமைத்த கொத்தனைப் பலி கொடுத்து கிருகப் பிரவேசம் செய்த கதை.

## அதிகாரம் 56
## கொலைச் சூழ்நிலை

தமிழ் மக்களின் ஈடிணையற்ற தலைவனாக வாழ்ந்த தலைவர் அமிர்தலிங்கம் அவர்களது சேவைகளைத் தமிழ் மக்கள் இழக்க நேரிட்டது துரதிட்டமானதே. தமிழரின் சுபீட்சத்துக்காக வாழ்க்கை முழுக்கப் போராடியவர். துயில் கொண்ட தமிழ் இனத்தைத் தட்டி எழுப்பியவர். அவர்களைப் போர்க்களத்துக்கு அழைத்து வந்தவர். தீர்க்கதரிசனத்தோடு மக்களை வழிநடத்தியவர். இந்தியாவின் மேலான கருணையை ஈழத் தமிழர் பக்கம் கொண்டு வந்தவர். சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து வாழ்நாள் முழுக்கப் போராடியவர். தமிழ் ஈழ மக்களின் உரிமைகளுக்காக ஆயுதம் தூக்கிய வன்முறையாளர்கள், அதே நோக்கத்துக்காக நாற்பது ஆண்டுகள் (1949 - 1989) புனித அரசியற்பணி ஆற்றிய தலைவர் அமிர்தலிங்கம் அவர்களை அழித்துள்ளனர். மானுடம் பொறுக்காது. அவர்களின் அநீதியான செயல் தமிழ் ஈழ அரசியல் வரலாற்றில் ஒரு கறை படிந்த அத்தியாயமாக கரித்துண்டினால் எழுதப்படும்.

ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கொலைக்கும் அக்காலத்தில் கொழும்பில் நிலவிய அரசியல் சூழ்நிலைக்கும் இறுக்கமான தொடர்புண்டு. ஆகவே கொலை பற்றிய அந்தரங்க சூழ்ச்சிகளை அறிந்துகொள்ள அக்காலகட்டத்தில் கொழும்பில் நிலவிய அரசியல் சூழ்நிலையைப் புரிந்துகொள்வது அவசியமாகிறது. அன்னாரது கொலை பற்றி மக்கள் அறியாத பல திகில் மிக்க விடயங்கள் உள்ளன. அண்ணலின் கொலைக்கான காரணங்கள் சில இன்னும் தமிழ்ச் சமூகத்தை எட்டாத மூடுமந்திரங்களாகவே உள்ளன.

அமிர்தலிங்கம் அவர்கள் கொலை செய்யப்பட்ட காலகட்டத்தில் இந்திய அமைதி காக்கும் படை இலங்கையின் வடகிழக்கில் நிலை கொண்டிருந்தது (1987 யூலை - மார்ச் 1990). 1987 யூலை 29 இந்திய-இலங்கை ஒப்பந்தப் பிரகாரம் வடகிழக்கில் முன்னர் அட்டூழியம் பண்ணிய சிங்களப் படைகள் முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்தன. ஆயுதங்களுடன் முகாம்களுக்கு வெளியில் வடகிழக்கில் நடமாடுவது தடைசெய்யப்பட் டிருந்தது. வடகிழக்கில் போர்புரிந்த ஒரு பகுதிச் சிங்கள இராணுவம் தென் இலங்கையில் ரோகன் விஜயவீரவின் ஜனதா விமுக்திப் பெரமுனையின் (JVP) கிளர்ச்சியை அடக்க ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவால் மீட்கப்பட்டுவிட்டது. வடகிழக்கில் இந்திய அமைதி காக்கும் படையின் அதிகாரம் மேலோங்கி இருந்தது.

அவ்வேளை நடந்த ஒரு சம்பவம் வரலாற்றை மீண்டும் குருதியினால் எழுதியது. புதிய மரண யுகச் சூழ்நிலைக்கு காரணமாகிய அச்சம்பவம்:

1987 அக்டோபர் மாதம் 4ந் திதி பலாலியில் இலங்கை இராணுவத்தின் காவலில் இருந்த விடுதலைப் புலிப் பிரமுகர்கள் யாழ்ப்பாணத் தளபதி குமரப்பாவும், திருகோணமலைத் தளபதி புலேந்திரனும் இன்னும் பத்துப் பேரும் சைனைட் உட்கொண்டு தற்கொலை செய்தனர். சைனைட் உட்கொண்ட ஐவர் உயிர் பிழைத்தனர். காவலில் இருந்த அவர்களை அதன் முதல் நாள் மாத்தையாவும், அன்ரன் பாலசிங்கமும் போய்ப் பார்த்தபொழுது அவர்களுக்குச் சைனைட் குப்பிக்ளைக் கொடுத்தனர். தனது தளபதிகளதும் தனது கழுத்திலும் தொங்கிய சைனைட் குப்பிகளைக் கழற்றி அவர்கள் இருவரது கழுத்திலும் அணிவித்துக் காவலில் இருந்த போராளிகளுக்குக் கொடுக்கும்படி திரு. பிரபாகரன்தான் அனுப்பினார். (தகவல்: The Will to Freedom by Adale Balasingham) இறந்தவர்களில் அறுவர் பிரபாகரனின் உறவினர். வல்லுவெட்டித் துறையைச் சேர்ந்தவர்கள். திரு.பிரபாகரன் வல்லுவெட்டித் துறையில் இடம்பெற்ற அவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டார். அதனை அடுத்து ஆக்டோபர் 5ந் திகதி ஒரு பொலிஸ்காரன் வல்லுவெட்டித்துறையில் விறகு கொட்டனால் அடித்துச் சாகடிக்கப்பட்டார். வவுனியாவில் ஆறு பொலிசாரை சுட்டுக்கொன்றனர். அன்றிரவு தங்கள் காவலில் இருந்த சிங்கள இராணுவ வீரர்கள் எட்டு பேரைக் கொன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் வீசினர். அக்டோபர் 6ந் திகதி விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு எதிரே வைத்து ஐந்து இந்திய படை வீரர்களைச் சுட்டுக் கொன்றார். அதனைத் தொடர்ந்து 9ந் திகதி இந்திய அமைதி காக்கும் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் மூண்டது. விடுதலைப் புலிகளின் கெரில்லாப் போர்த் தந்திரம் இந்தியப் படைக்குப் புதிது. இந்தியப் படை அவ்வகையான போருக்கு ஆயத்தமாக வரவில்லை. விடுதலைப் புலிகளின் கரந்தடிக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் திணறியது.



இந்தியப் படை இலங்கைவர ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவே ஒப்புதல் கொடுக்க வேண்டியவராக இருந்தார். அதனை ஆரம்பத்தில் இருந்து எதிர்த்து வந்தவர் பிரதமர் ரணசிங்க பிரேமதாசா. இந்தியப் படையை இலங்கையில் இருந்து வெளியேற்ற விரும்பிய ஆரம்பத்தில் பிரதமராகவும் - 1988 டிசம்பரின் பின்னர் ஜனாதிபதி யாகவும் - பதவி வகித்த ரணசிங்க பிரேமதாசா இந்தியப் படைகளுடன் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் கெரில்லாப் போர் வல்லமையைத் தனது நோக்கத்தை நிறைவேற்றப் பயன்படுத்தக் காயை நகர்த்தினார். விடுதலைப் புலிகள் தமது தேவைக்குப் பிரேமதா சாவைப் பயன்படுத்தக் காயை நகர்த்தினர். ரணசிங்க பிரேமதாச விடுதலைப் புலிகளை ஏவி இந்திய அமைதி காக்கும் படையை வெளியேற்ற வியூகம் வகுத்தார். அதன் விளைவாக ரணசிங்க பிரேமதாசாவின் ஐக்கிய தேசியக் கட்சிப் பேரினவாத சிங்கள அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நெருக்கமான

இனிப்பான நட்பு வளர்ந்தது. அக்கால கட்டத்தைத் தேன் நிலவு நாட்கள் என்று பத்திரிகைகள் வர்ணித்தன.

விடுதலைப் புலிகள் கொழும்பில் அரசாங்க செலவில் ஆயுதங்களோடு ஹில்ரன் ஹோட்டலில் தங்குவதற்கு பிரதமர் பிரேமதாசா வசதி செய்து கொடுத்திருந்தார். அவர்களின் ஆடம்பர வாழ்கைக்குத் தினமும் பணம் அள்ளி இறைத்தார். அவர்களுக்குப் பாதுகாப்பாக 70 விசேட அதிரடிப் படையினரை வழங்கினார். விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் யோகி என்ற யோகரத்தினமும், பரமு மூர்த்தி என்பவரும் முதலில் அங்கு போய்ச் சேர்ந்தனர். இலங்கை விமானப் படையைச் சேர்ந்த ஹெலிகொப்டரே அவர்கள் இருவரையும் வன்னியில் இருந்து ஏற்றிச் சென்றது. விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா என்ற கோபாலசாமி மகேந்திரராசா பின்னர் அவர்களோடு சேர்ந்து கொண்டார். மாத்தையா அக்காலத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சிக்குத் தேவையான யாப்பை ஆக்குவதில் அக்கறை செலுத்தினார். யோகி தன்னை கொழும்பில் அடையாளம் காட்டுவதிலும் வேறு மறைமுக வேலைகளிலும் ஈடுபட்டார்.

இந்தியப் படை இலங்கைக்கு வரமுன்னர் இராணுவத்தை ஏவி தமிழ் மக்களை வடகிழக்கில் கொன்றுகுவித்த பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விசயரதத்தின ஹில்ரன் ஹோட்டலில் தங்கிய யோகியை அடிக்கடி சந்தித்தார். இந்தச் சந்திப்பு பின்னர் பல கேள்விகளுக்கு இலக்காகியது.

யோகி கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் விடுதிவிடத் தொடங்கியதை அடுத்து விடுதலைப் புலிகளின் முன்னர் வடமராட்சி அரசியல் பிரிவுப் பொறுப்பாளனாக இருந்த விசு எனப்படும் இராசையா அரவிந்தராசா, வவுனியாத் தளபதி அலோசியஸ் எனப்படும் பீற்றர் அலோசியஸ் லீயோன் ஆகியோர் நாரயம்பிட்டியில் வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கி இருந்தனர். விசுவும் அலோசியசும் ஹில்ரன் ஹோட்டலில் யோகியோடு அடிக்கடி காணப்பட்டனர்.

இக்கால கட்டத்தில்தான் விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பாரியார் மதிவதினி அம்மையார் ஐரோப்பிய நாடொன்றில் இருந்து இரண்டரை வருடங்களின் பின்னர்



1990 ஜனவரி 20ந் திகதி இலங்கைக்குத் திரும்பினார். அவரோடு அவர்களின் மகள் துவாரகாவும், மகன் சாள்ஸ்சும் வந்திருந்தனர். மதிவதனி அம்மையார் ரி-சேட்டும்•ஜீன்சும் அணிந்திருந்தார். அவர்கள் ஐரோப்பிய நாடு ஒன்றிலிருந்து வந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை அடைந்தனர். அன்றிரவு விமான நிலையத்தில் தங்கிநின்றனர். அடுத்த நாள் அவர்களை விமானப் படையைச் சேர்ந்த ஒரு ஹெலிகொப்டர் வன்னிக்கு ஏற்றிச் சென்று பிரபாகரனின் பாசறையில் ஒப்படைத்தது. இந்த வசதிகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சேபால அட்டிக்லை ஒழுங்கு செய்தார்.

ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கொலை செய்யப்பட்ட தினத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைக்குச் சென்ற கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம், யூட், லலித், லோறன்ஸ் முதலிய விடுதலைப் புலித் தலைவர்கள் கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் அரசாங்க விருந்தாளிகளாகத் தங்கி நின்றனர். அரசாங்கம் அவர்களுக்கு 'கண்ட பொண்ட துண்ணா' ('தின்னக் குடிக்கக் கொடுத்தனான்'). பிரேமதாச புலிகளால் ஏமாற்றப்பட்ட பின்னர் அப்படித்தான் அவர்களைப் பற்றிய பேச்சு வந்தபோது பாராளுமன்றத்தில் சிங்களத்தில் குறிப்பிட்டார்.

இப்படியான கொழும்புச் சூழ்நிலையிலேயே மக்கள் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் 1989 யூலை 13ந் திகதி சுடப்பட்டார். முன்னர் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த அவர் அப்பொழுது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

### யோகேஸ்வரனின் வன்னிப் பயணம்

அமிர்தலிங்கம் அவர்கள் கொலை செய்யப்பட்ட வேளை வெற்றிவேலு யோகேஸ்வரன் அவர்களும் கொலை செய்யப்பட்டார். முருகேசு சிவசிதம்பரம் அவர்கள் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தார். கொலைஞர்களின் குறி தலைவர் அமிர்தலிங்கம் அவர்களே. யோகேஸ்வரன் அவர்களின் மரணம் கொலைத்திட்ட உண்மைகளை மறைக்கச் செய்யப்பட்டது. யோகேஸ்வரனின் சிறுபிள்ளைத்தனமான எதிர்பார்ப்பே, அமிர்தலிங்கம் அவர்களது கொலைக்கு வாய்ப்பாகியது. யோகேஸ்வரன் விடுதலைப் புலிகளின் நண்பராகவிருந்து, விடுதலையை முன்னெடுத்துச் செல்ல விரும்பினார். ஒரு தினம் அவர் முன்னாள்

பாராளுமன்ற உறுப்பினர்களான சூசைதாசன், ஆனந்தசங்கரி முதலியோருக்குத் தான் கண்டிக்குப் போவதாகக் கூறிவிட்டுக் கொழும்பில் கூட்டணியினர் வசித்த புல்லர்ஸ் வீதி இல்லத்தி லிருந்து வானில் புறப்பட்டார். அவரை அழைத்துச் சென்றவர் முன்னர் அமரர் ஆலாலசுந்தரத்தின் செயலாளராக இருந்த நெடுந்தீவைச் சேர்ந்த ஐ.இரத்தினம் என்பவராகும். வன்னியில் குடியேறிய அவர் அரசாங்க சேவையில் இருந்து ஆலாலசுந்தரத்தின் செயலாளர் கடமைக்கு அனுப்பப்பட்டவர். அவர்களது வாகனம் கண்டிக்குச் செல்லவில்லை. வடக்கே வன்னிப் பக்கமாக அந்த வாகனம் பறந்தது. வன்னியின் வடபாகத்திற்குச் சற்று அப்பால் உள்ள இயக்கச்சியில் மாவிலங்கை என்ற ஒரு தென்னந் தோட்டம் யோகேஸ்வரனுக்கு உள்ளது. அங்கும் போகும் உத்தேசத்தோடு புறப்பட்டவர் அங்கு போகவில்லை. இரத்தினம் அவரை மல்லாவிக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து வவனிக்குளக்கட்டைக் கடந்து, பாண்டியன் குளம் சென்றனர். அவரது நோக்கம் விடுதலைப் புலிகளின் தலைவருடன் விடுதலை முயற்சி பற்றிக் கதைப்பதாகும். ஆனால் அவரால் புலிகளின் தலைவரைச் சந்திக்க முடியவில்லை. கீழ் மட்டத்தலைவர்களை மட்டுமே சந்திக்க முடிந்தது. திரும்பி வந்து அன்று இரவு மான்குளம் அரசினர் விடுதியில் தங்கிவிட்டுக் கொழும்பு திரும்பினார்கள். அவர்கள் பிரயாணம் செய்த வாகனம் கூட்டணி அலுவலகத்தை அடைந்தது. "கண்டி போய்வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டு யோகேஸ்வரன் வானிலிருந்து இறங்கினார். வானிலிருந்து பாலாப்பழமும் விறகுக் கட்டுக்களும் இறக்கப்பட்டன. "உந்த விறகுக் கட்டுக்கள் வன்னி விறகு போல இருக்கிறதே?" என்று ஒரு முன்னாள் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்புரை சொன்னார். யோகேஸ்வரன் காதில் விழாதது போல நடந்து கொண்டார். அந்த வன்னிப் பயணத் தொடர்பே விசு முதலியோர் கொழும்பு சென்று வீட்டுக்குள் வைத்தே அமிர்தலிங்கம் அவர்களைக் கொலை செய்ய வாய்ப்பாகியது. அமிர்தலிங்கம் அவர்களது கொலை முயற்சியை ஆரம்பித்து வைத்த பயணம் அது.

### எதிர்க்கட்சிகளின் எதிரொலி

தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் கொலைக்கும் அன்றைய கொழும்புச் சுழ்நிலைக்கும் தொடர்பு இருந்ததை அன்றைய



எதிர்க்கட்சிகள் தெளிவாக உணர்ந்திருந்தன. அமிர்தலிங்கம் அவர்களின் மறைவை யொட்டி எதிர்கட்சிகள் கூட்டாகப் பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கையில் இச்செய்தி தெளிவான வாசகங்களால் பொறிக்கப்பட்டிருந்தது. அதன் ஒரு பகுதி:

"எச்சூழ் நிலையில் அந்த கொலைச் செயல் நடந்தது என்று ஒரு பாரபட்சமற்ற விசாரணை நடத்தவேண்டும். அரச கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்கள் ஊகத்தில் செய்திகள் வெளியிடுகின்றன. அந்த ஊகச் செய்திகள் கொலை பற்றிய ஒரு பொருத்தமான விசாரணையை நடத்தக் குந்தகம் விளைவிக்கும் என்றும் கடுமையாக எச்சரிக்கின்றோம்." பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்துத் தயாரித்து பத்திரிகைகளுக்கு கொடுத்த அறிக்கையில் எதிர்க்கட்சித் தலைவி சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையார், ஐக்கிய சோசலிச கூட்டணியைச் சேர்ந்த அத்தாவுட செனிவரத்தின, மகாஜன எக்சத் பெரமுன தலைவர் தினேஸ் குணவர்தன, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் யோகசங்கரி ஆகியோர் கையெழுத் திட்டிருந்தனர்.

இன்னும் கம்யூனிஸ்ட் கட்சி, பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கையும் கொழும்பின் அன்றைய அரசியல் சூழ்நிலை கொலைக்கு உடைந்தையாக இருந்ததையே சொல்கிறது.

"எந்தச் சூழ்நிலையில் கொலை செய்யப்பட்டார் என்றும், அந்தச் சூழ்நிலைப் பின்னணியை ஆராய வேண்டும் என்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வேண்டிக்கொள்கிறது." மத்திய குழுச் செயலாளர் டி.ஈ.டபிள்யூ, குணசேகரா அந்த அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருந்தார்.

சூழ்நிலை என்று எதனைச் சொல்கிறார்கள்? அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இருந்த தொடர்பையா அல்லது யோகிக்கும் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினவுக்கும் இடையில் இருந்த தொடர்பையா என்பதைப் பின் வந்த மாதங்களில் அரசாங்கம் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாடுகள் தெளிவுபடுத்தின.

வன்முறையாளர்கள் அமிர்தலிங்கம் அவர்களைக் கொலை செய்தமைக்குச் சொன்ன காரணம் வேறு. அதாவது 'காட்டிக்கொடுத்தவர். இந்திய ஏஜன்ட், தமிழ் ஈழத்தைக் கைவிட்ட

துரோகி' என்று வசை பாடினார்கள். ஆனால் அவர்கள் கொலை செய்தமைக்கு உரிய காரணம் வேறு. (அத்தியாயம் 63 பார்க்கவும்.) அதேசமயம் இனவெறிகொண்ட சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடும், துணிவு மிக்க தமிழ் அரசில் சாணக்கியரை ஒழித்துக்கட்ட விரும்பினார்கள். ஏனெனில் அமிர்தலிங்கம் அவர்கள் இந்தியாவை இலங்கைப் பிரச்சினைக்குள் தலையை நுழைக்கச் செய்தமையும், அதனால் பிரதமர்களான ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையாரும் அவர்தம் புத்திரன் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களும் அடிக்கடி இலங்கைக்கு அச்சுறுத்தல் கொடுத்தமையும் - குறிப்பாக அம்மையார் நாடாளுமன்றத்தில் 1983 இனக்கலவரத்தை இன அழிப்பு என்று உலகத்துக்குப் பிரசாரித்தமையும், பின்னர் 1987 ஏப்பிரல் மாதம் ராஜீவ் காந்தி அவர்கள் 'உச்ச இரகசியம்' என்ற அந்தரங்கக் கடித மூலம் ஜனாதிபதி ஜெயவர்தனவை இன அழிப்பில் ஈடுபடுவதாக அச்சுறுத்தியதோடு, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் வடகிழக்கைத் தமிழரின் பாரம்பரிய பிரதேசமாக கட்டாயத்தின் பேரில் ஒப்புக்கொள்ள வைத்தமையும் சிங்கள சமூகம் ஒட்டுமொத்தமாக அமிர்தலிங்கம் அவர்கள்மீது வன்மம் சாதிக்கக் காரணமாகும். இன்னும் பாராளுமன்றத்தில் அவரது சாதுரியம் மிக்க வாதத்துக்கு ஈடுகொடுக்க முடியாது சிங்கள இனவாதிகள் பலதடவைகள் அவமானப்பட்டிருந்தனர். எனவே முற்றாக அவரை ஒழித்துவிடத் துடித்த அவர்களுக்கு விடுதலைப் புலிகள் கொழும்பு கோட்டையில் உள்ள ஹில்ரன் ஹோட்டலில் வாடிபோட்டிருந்த தேன்நிலவு காலத்தில் கிடைத்த வெகு வாய்ப்பாக இருந்தது. விடுவார்களா? இரு சூழ்நிலை பகுதியினரும் கைகோர்த்துக்கொண்டு தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் கதையை முடித்திருக்கிறார்கள் என்று சொல்வதில் தப்பிருக்கிறதா என்பதை வாசகன் தீர்மானத்துக்கு விடுகிறேன்.



# அதிகாரம் 57

## மானுடம் தலைகுனியும்

ஆறு காவல்துறையினர் துப்பாக்கிகளுடன் காவல் புரிந்த இல்லத்தில் வாழ்ந்த தலைவர் அமிர்தலிங்கம் அவர்களைக் கொலை செய்ய எப்படிச் சந்தர்ப்பம் வாய்த்தது? முன்னைநாள் யாழ்ப்பாண நாடாளுமன்ற தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் வெற்றிவேலு யோகேஸ்வரன் அவர்கள் புலிகளின் நண்பர். அவர் புலிகளின் வன்னிப் பாசறைக்கும் சிலதடவைகள் போய் வந்தவர். அவருக்குக் கொழும்பில் தங்கியிருந்த விடுதலைப் புலிகள் அலோசியஸ், விசு ஆகியோருடன் நெருக்கமான தொடர்பு இருந்தது. அவர்கள் யோகேஸ்வரனுக்குத் தூது அனுப்பி 'இயக்கங்களை ஒன்று சேர்ப்பது பற்றி' தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களோடு கலந்துரையாடச் சந்தர்ப்பம் கேட்டார்கள். சூதுவாது புரியாத யோகேஸ்வரன் அவர்கள் சந்தர்ப்பத்தை ஒழுங்கு செய்ததோடு 'வாருங்கள். உங்களுக்கு விருந்தும் தரப்படும்' என்று பதில் தூது அனுப்பினார்.

அக்கால கட்டத்தில் கொழும்பில் பொறளையில் அமைந்த பௌத்தலோக மாவத்தையில் உள்ள இலக்கம் 342-2இல் உள்ள இல்லத்தில்தான் கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் தம்பதிகளும், முன்னாள் நல்லூர் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சிவசிதம்பரம் அவர்களும் வசித்தார்கள். அது ஒரு மாடி வீடு. அது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமரர் நீலன் திருச்செல்வமும், திரு.சூசைதாசனும் பாதுகாப்புக் கருதி ஒழுங்கு செய்த வீடு. முதலாம் மாடியில் யோகேஸ்வரன் தம்பதிகளும், சிவசிதம்பரம் அவர்களும் வாழ்ந்தனர். நிலத் தளத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் குடும்பத்தோடு வசித்தார்.

அந்த இல்லத்துக்கு காவல்துறையைச் சேர்ந்த ஆறு காவலர்கள் இருபத்திநாலு மணிநேர காவல் புரிந்தனர். அவர்கள் காவல்துறைச் சப்-இன்ஸ்பெக்டர் தம்பிராசா கந்தசாமி தலைமையில் கடமையில் இருந்தனர். சுடப்பட்ட அன்று மாலை நாலு மணியளவில் சப்-இன்ஸ்பெக்டர் தம்பிராசா கந்தசாமியை வெற்றிவேலு யோகேஸ்வரன் அவர்கள் அழைத்து,

"விடுதலைப் புலி உறுப்பினர்கள் மூவர் இன்று பேச்சு வார்த்தைக்கு வருகிறார்கள் அவர்களைச் சோதனை செய்யாமல் உள்ளே அனுப்பு" என்று கூறினார்.

"புலிகளை நம்பேலாது, ஐயா" என்றார் சப்-இன்ஸ்பெக்டர் கந்தசாமி.

"அவர்கள் எங்களின் விருந்தாளிகளாக வருகிறார்கள். சோதிப்பது விருந்தாளிகளை அவமானப் படுத்துவதாக அமையும். மனம் நோவார்கள். சோதனையிடாமல் அனுப்பு" என்றார் யோகேஸ்வரன்.

1989 ஆம் ஆண்டு யூலை 13ந் திகதி வியாழக்கிழமை மாலை விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் - முன்னாள் வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் விசு எனப்படும் இராசையா அரவிந்தராசா, வவுனியாத் தளபதி அலோசியஸ் எனப்படும் பீற்றர் அலோசியஸ் லீயோன், மற்றும் விக்னன் எனப்படும் சிவகுமார் ஆகியோர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைச் சந்திக்க நாரயம்பிட்டியில் இருந்து பறப்பட்டனர்.

பிற்பகல் 6.40 மணியளவில் ஒரு மஞ்சள் வாடகைக் கார் அமிர்தலிங்கம் அவர்களது இல்லத்து இரும்புக் 'கேற்' எதிரே நின்றது. அதிலிருந்து மூவர் இறங்கினர். வாசலில் காவலுக்கு நின்ற சத்தியமூர்த்தி என்ற பொலிஸ்காரர் அவர்களிடம் அடையாளம் கேட்டார், பின்னர் "விடுதலைப் புலிகள்" என்று மாடியைப் பார்த்துச் சத்தியமூர்த்தி குரல் கொடுக்க "அவர்களை உள்ளே அனுப்பு" என்று பல்கனியில் நின்ற சப்- இனஸ்பெக்டர் தம்பிராசா கந்தசாமி கூறினார்.

விசு, அலோசியஸ் ஆகிய இருவரும் படிவழியே ஏறி மாடியில் உள்ள வரவேற்பறைக்குச் சென்றார்கள். அவர்களை யோகேஸ்வரன் அவர்கள் வரவேற்று இருக்கைகளில் அமரச் செய்தார். மூன்றாம் ஆள் விக்னன் மாடிப்படி ஆரம்பத்தில் நின்றான்.

சிறிது நேரத்தில் அமிர்தலிங்கம் அவர்கள் முதலாம் மாடியில் உள்ள வரவேற்பறைக்குள் சென்றார். அவரைக் கண்டதும் விசுவும் அலோசியசும் இருக்கையால் எழுந்து மரியாதை செய்தார்கள். அமிர்தலிங்கம் அவர்கள் விசுவின் முதுகில் தட்டி சிரித்துச் சுகம் விசாரித்தார். அலோசியசைப் பார்த்துச் சிரித்தார்.



சம்பாசனையின் பொழுது அவர்கள் ஏன் பாண்டிக்குளம் வரவில்லை என்று விசு வினாவினான். அதற்கு அமிர்தலிங்கம் அவர்கள் யோகேஸ்வரனுக்குச் சுகம் இல்லாமல் இருந்தமையாலும், அச்சமயம் சிவசிதம்பரம் அவர்கள் இந்தியாவில் இருந்தமையாலும் வர முடியவில்லை என்று பதிலளித்தார். அத்தோடு தாங்கள் அங்கு வருவது புத்தியானதல்ல வென்றும் அது விடுதலைப் புலிகளின் மறைவிடத்தைக் காட்டிக்கொடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அச்சமயம் அமிர்தலிங்கம் அவர்கள் அரசாங்கத்துடனான விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தை எப்படி இருக்கிறது என்று விசாரித்தார். அதற்கு விசு தாங்கள் ஸ்ரீலங்கா அரசை ஏமாற்றுவதாகக் கூறினார். தொடர்ந்து அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைக்குத் தங்களுடைய தங்குமிடத்துக்கு வரமுடியமா என்று விசு விசாரித்தான். அமிர்தலிங்கம் அந்த இடம் பாதுகாப்பானது அல்ல என்று கூறினார். சிவசிதம்பரம் அவர்கள் கொழும்பில் ஒரு குறித்த தனிநபரின் வீட்டில் அப்பேச்சுவார்த்தையை வைத்துக்கொள்ளலாம் என்றார். அதற்கு விசு கூட்டத்துக்குச் சமுகமளிக்க முன்னர் தாம் அந்த இடத்தைப் பார்வையிடவேண்டும் என்றான்.

உள்ளே சம்பாசனை நடந்து கொண்டிருந்த சமயம் கீழே காவலுக்கு நின்ற பாதுகாப்பு அதிகாரிக்கு விக்கினனின் பதட்டமான நடத்தையில் சந்தேகம் வந்தது. அவனைச் சோதனை செய்த பொழுது அவனிடம் வெடிப்பொருட்களும், எறி குண்டும் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அந்தப் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஏனைய பாதுகாப்பு உத்தியோகத்தர்களை உசார்படுத்திவிட்டு மாடிக்கு விரைந்தார்.

நேரம் இரவு 7.30. வதனங்களில் மகிழ்ச்சி பொங்கச் சம்பாசனை தொடர்ந்தது. அவர்களின் சிரிப்பொலி உள்ளே தேநீர் தயாரித்துக்கொண்டு நின்ற திருமதி யோகேஸ்வரனின் காதுகளில் கலீரெனக் கேட்டது. அமிர்தலிங்கம் அவர்களுக்கு அருகில் இருந்த விசு வெற்று தம்பிளரை மேசையில் வைக்க எழுந்தான். அப்படிச் செய்கையில் அமிர்தலிங்கம் அவர்களைப் பார்த்து "நீங்கள் எங்களை இராட்சதர்கள் என்று எண்ணலாம். ஆனால் நீங்கள்தான் உண்மையான இராட்சதன்" என்றான். அதனைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர். அச்சமயம் விசு தனது பிஸ்டலை இழுத்து எடுத்து அமிர்தலிங்கம்

அவர்களின் தலையிலும் நெஞ்சிலும் சுட்டான். அப்பொழுது எழுந்த யோகேஸ்வரன்மீது பல தடவைகள் அலோசியஸ் சுட்டான். விசுவும் அவர்மீது சுட்டான். அச்சமயம் பல்கனியை அடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் துப்பாக்கிச் சத்தம் கேட்டு கொலையாளிகள்மீது கண்ணாடி யன்னல் வழியாக சுட்டு அவர்களைக் காயப்படுத்தினார். காயப்பட்ட கொலையாளிகள் சிவசிதம்பரம் அவர்களை நோக்கியும் சுட்டனர். ஆனால் அவரைக் காயப்படுத்வே முடிந்தது. கொலையாளிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது சுட்டபடி படிவழியே விரைந்தனர். விசு ஒரு கைக்குண்டை எறிய முயன்றான். ஆனால் பாதுகாப்பு உத்தியோகத்தர்களது சூட்டில் அவர்கள் இறந்தனர். சூடு வாங்கிய விக்னன் சிறிது நேரம் உயிருடன் இருந்தான்.

பத்து நிமிடங்களுள் இரண்டு பொலிஸ் வண்டிகள் வந்துவிட்டன. நாலா பக்கமும் ஓடித் தடை போட்டனர் சிலர். வந்த பொலிஸ் அதிகாரியை சப்-இனஸ்பெக்டர் கந்தசாமி மாடி வரவேற்பறைக்கு அழைத்துச் சென்றார்.

பொலிஸ் அதிகாரி வரவேற்பறையைப் பார்த்தார். மங்கையர்க்கரசியின் மடியில் அமிர்தலிங்கம் தலை வைத்தபடி கிடந்தார். தலையிலும் நெஞ்சிலும் பட்ட காயங்களால் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. சிவசிதம்பரம் அவர்கள் சுவரில் சாய்ந்தபடி இருந்தார். அவரது தோள் பட்டையிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. யோகேஸ்வரன் நிலத்தில் மல்லாக்காகக் கிடந்தார். அவரது நெஞ்சில் இருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

சிவசிதம்பரம் அவர்கள் மிக ஆபத்தான நிலையில் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர் வைத்தியர்களின் பிரயாசத்தால் உயிர் பிழைத்தார்.

1978 ஏப்பிரல் 25ந் திகதியிட்டு விடுதலைப் புலிகள் வெளியிட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தில் அதற்கு முந்தித் தாங்கள் செய்த அரசியல் கொலைகளுக்கு உரிமை கோரி இருந்தனர். அதன் பின்னரும் விடுதலைப் புலிகள் பல அரசியல் தலைவர்களைக் கொன்றவர்கள். ஆனால் எவர் கொலைக்கும் உரிமை கோரவில்லை. அத்தோடு எத்தருணத்திலும் தலைவர்களைக் கொன்ற கொலைஞர்களை யாரும் கண்டதும் இல்லைச் சுட்டதுமில்லை. அவர்கள் உடல் உருப்படியாகக்



கிடைத்ததுமில்லை. யார் என்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டதும் இல்லை. எந்த இயக்கத்தைச் சேர்ந்தவன் என்று அடையாளம் காணப்பட்டதும் இல்லை. அமிர்தலிங்கம் அவர்கள் கொலை விடயத்தில்தான் கொலைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவர்கள் பெயர்கள் மற்றும் விபரங்களும் அடையாளங்கள் காணப்பட்டன. விசு என்ற இராசையா அரவிந்தராசா விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளனாக இருந்தவர் என்பது உறுதியாகத் தெரிய வந்தது.

காவல்துறையினர் விசு அலோசியஸ் ஆகியோர் நாரயம்பிட்டியில் வசித்த வீட்டைச் சோதனையிட்டனர். அங்கு வெடிபொருட்கள், ஆயுதங்கள், சைனைட் வில்லைகள், கூட்டணித் தலைவர்கள் வசித்த வீட்டின் மாதிரிப் படம் என்பன சிக்கின. அன்று இரவு அவர்கள் வெளியேறுவதற்குத் தயாராக அடையாளங்கள் இருந்ததாகக் காவல்துறைப் பதிவுகள் கூறுகின்றன. அதாவது கொலைஞர்கள் தாம் கொலை செய்துவிட்டு மீண்டதும் கொழும்பை விட்டு வன்னிக்குத் தப்பிச் செல்லும் நம்பிக்கையோடுதான் கொலை செய்யப் போயிருக்கிறார்கள்.

விசு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஒரு பிரபல பேர்வழி. அவனைக் கொலை செய்ய அனுப்பியிருக்கக்கூடாது என்ற வாதப் பிரதிவாதம் உண்டு. விசு சிக்க வாய்ப்பு உள்ளது என்பதை எதிர் பார்த்திருந்தால் அவன் அனுப்பப்பட்டிருக்க மாட்டான் என்று பேசப்பட்டது.

தமிழனின் விருந்தோம்பலை இலக்கியங்கள் பெருமையோடு எடுத்துரைக்கின்றன. செல்விருந்து போக வருவிருந்து பார்த்து வாழ்ந்தவன் தமிழன். விருந்தாளியின் மனம் பூரிப்பது கண்டு மகிழ்ந்தவன் தமிழன். விருந்து கொடுத்தவனை வாழ்த்தி விடை பெறுபவன் விருந்துண்ட தமிழன்.

அவ்வாறு தமிழன் பெருமை புகழ்பாட, விருந்துக்கு என்று சென்றவர்கள் மறைத்துக் கொண்டு சென்ற பிஸ்ரலாலும் றிவோல்வராலும் விருந்து படைத்த நிராயுதபாணிகளைச் சுட்டுக் கொன்றுள்ளார்கள். "மஞ்சள் துண்டுக்குக் கழுத்தறுத்தவன்" என்று தமிழர்கள் அவர்களைச் சொல்கிறார்கள். அவர்கள் திருப்பி "நீங்கள்

விருந்து கொடுத்தவனைக் கொன்ற அநாகரிக திராவிடயோ. திருவள்ளுவரின் விருந்தோம்பல் அதிகாரத்தைக் கிழித்தெறியுங்க தெமிலோ" என்று பழி சுமத்த ஒரு வரலாறு பதிவாகி இருக்கிறது.

புறநானூறு தமிழர் வீரம் பேசுகிறது. பெருமையாக இருக்கிறது. புறமுதுகு காட்டாத வீரம் அது. மன்னனே போர்க் களத்தில் யானைமீது வீற்றிருந்து வாள் கொண்டு போர் புரிந்த வீரம் அது. முதுகிலா நெஞ்சிலா வேல்வாங்கி இறந்தான் என்று அன்னை போர்க் களத்தில் தன் மகனைப் புரட்டிப் பார்த்த வீரம் அது. தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கொலை புறநானூற்றுக்கு கரும்புள்ளி குத்தியுள்ளது. மானுடம் முழுமைக்கும் அவமானம் தேடியுள்ளது.

துப்பாக்கியை மறைத்துக் காவிச் சென்று யாழ்ப்பாண மேயர் திருமதி சரோஜினி யோகேஸ்வரனை நல்லூரில் அவர் வாழ்ந்த வீட்டில் வைத்து 1998 ஆம் ஆண்டு ஒரு காலைநேரம் கொன்றார்கள். அவர்களாலேயே கைம்பெண் ஆக்கப்பட்டவர் யாழ்ப்பாண மேயர் திருமதி யோகேஸ்வரன். அந்த யாரும் துணையற்ற அன்னை, "நான் கணவனைப் பறிகொடுத்த கைம்பெண். என்னை யாரும் எதுவும் செய்ய மாட்டார்கள். பாதுகாப்பு வேண்டாம்" என்று கூறித் தனிமையில் கவலையோடு போராடி வாழ்ந்தவர். கரந்து சென்று ஆதரவற்ற அந்த அம்மையாரின் உயிரைப் பலி எடுத்தார்கள்.

இப்படிப் பல கொலைகள். அதில் ஒன்று கவனத்திற்குரியது.

பிச்சைக்காரன் வேசத்திலே நொண்டிச் சென்ற தற்கொலைப் போராளி மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற நியமன உறுப்பினர் நீலன் திருச்செல்வத்தை கொழும்பில் கொன்றார்கள். அன்று என்ன சொன்னார்கள்? இன்று என்ன சொல்கிறார்கள்? நீலன் திருச்செல்வம் தயாரித்த 1994 ஓகஸ்ட் 4ந் திகதிய நிருவாக பரவலாக்க அரசியல் திட்டத்தை துரோகச் செயல் என்று கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் சு.ப.தமிழ்ச்செல்வனும் 1995 ஓகஸ்ட் 11ந் திகதி சுண்டிக்குழியில் கூட்டம் போட்டுக் கூறினார்கள். தொடர்ந்து ஆத்தானக் கவிஞர் தலைமையில் நீலனைத் துரோகி என்று பிரசாரம் செய்வித்தார்கள். இறுதியில் 1999 யூலை 29ந் திகதி தற்கொலையாளியை ஏவி நீலனின் உயிரைப் பறித்தார்கள். மூன்றரை வருடங்கள் கழித்து 2003 மார்ச் மாதம் 11ந் திகதி கிளிநொச்சியில்



வைத்து அன்ரன் பாலசிங்கம் நீலனின் பரவலாக்க அரசியல் திட்டத்தை வரவேற்றுப் புகழ்ந்து பேசியதாக (மார்ச் 13) யாழ். உதயன் பத்திரிகை செய்தி வெளியிட்டது. அதனை உறுதிப்படுத்தி, 20.07.2003 அன்று நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற - சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான நிறுவனம் - ஒழுங்குசெய்த 'சமாதான செயல்முறை' பற்றிய கலந்துரையாடலில், நீதிபதி ஆர்.ரி.விக்கினராஜா அவர்கள் கூறிய பின்வரும் செய்தியும் அதனை உறுதிப்படுத்துகிறது. "11.03.2003 அன்று தமிழீழ நீதிமன்ற வளாகம் கிளிநொச்சியில் திறக்கப்பட்ட அன்றைய நாளைச் சரித்திரப்பிரசித்தி பெற்ற தினமாகக் கருதுகிறேன். அன்று நீதிமன்றத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமது உரையில், கலாநிதி நீலன் திருச்செல்வம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை சம்பந்தமாக வரைந்த அரசியல் யாப்பு சிறந்தது, வரவேற்கக்கூடியது. தமிழ் மக்களுக்குப் பயன் உடையது எனக் குறிப்பிட்டதுடன் அதில் சில விடயங்களை ஜனாதிபதி நீக்கிவிட்டார் எனவும் கூறினார்" என்று கனம் நீதிபதி விக்னராஜா அவர்கள் (யாழ். உதயன்: மார்ச் 20, 2003) கூறியுள்ளார். அப்படியானால் நீலன் அழிக்கப்பட்டதுக்கு என்ன காரணம்? இதன் பதிலுக்குள் அமிர்தலிங்கம் அவர்களின் கொலைக்கான காரணம் தொக்கி நிற்கிறது.

காற்சட்டைப் பைக்குள் மறைத்துக் காவிச் சென்ற துப்பாக்கிகளால் சுடப்பட்ட அமிர்தலிங்கம் அவர்களின் உயிர் பிரிய நீண்ட நேரம் எடுக்கவில்லை. தமிழ் மக்களுக்காக நாற்பது ஆண்டுகள் உடல் பொருள் சுகம் அத்தனையையும் இழந்து, தமிழ் மக்களின் சுபீட்சத்துக்காக அல்லும் பகலும் உழைத்த அந்த உத்தமரின் ஆவி பிரியும் தறுவாயில் உயிர் வாழும் தமிழனைப் பற்றி என்ன எண்ணியிருக்கும்? அவர் யாரையும் வைதிருக்க மாட்டார். அந்த மகான் திருவாய் மலர்ந்து,

"சுதந்திரத் தமிழ் ஈழம் மலரும்
வைத்தால் பலி என்னுயிர் என்றால் -
மூட்டுங்கள் தீக்கொழுந்தை,
வெஞ் சோதியுட் புகுந்து

மூச்சையும் உடலையும்
சாம்பலாக்கிச்

சரித்திரம்
வரைகின்றேன்"

என்று சூழுரைத்து மகிழ்ச்சியோடு உயிரைக் தமிழினத்துக்குக் காணிக்கையாகச் செலுத்தி இருப்பார். ஏன் என்றால் அவர் ஈழத் தமிழரின் இன்னல் போக்க அவதரித்த திருமகன்.

# அதிகாரம் 58
# பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின?

தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கொலையை அடுத்துக் குறிப்பாகக் கொழும்பில் ஊகங்கள் சந்தேகங்கள் இறக்கைகட்டிப் பறந்தன. யோகிக்கும் ரஞ்சன் விஜரத்தினவுக்கும், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிலவிய நெருக்கமான தொடர்பே அவ்வகையான சந்தேகங்களைத் தோற்றுவித்தது.

பேரினவாத சிங்கள அரசியல் வாதிகள் மட்டுமல்ல தமிழ் ஈழவிடுதலைக்குத் துப்பாக்கி ஏந்திய சகல தம்பிகளும் அண்ணலைப் பகைவராக்வே நோக்கினர். பிரேமதாச விடுதலைப் புலிகளை இலகுவில் மடக்கிக் கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் வாடி போடச் செய்தது போல எந்த ஆசையைக் காட்டியும் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களை அவரால் விலைக்கு வாங்க முடியவில்லை. பாராளுமன்றத்தில் அண்ணலுக்கு ஈடுகொடுக்கக் கூடிய சிங்கள அரசியல் வாதிகள் எவரும் இல்லை. அவர் பாராளுமன்றம் செல்வதை பேரினவாதிகள் வேம்பாக வெறுத்தார்கள். முக்கியமாக அன்னை இந்திரா காந்தியோடு அமிர்தலிங்கம் அவர்கள் வைத்திருந்த நெருக்கமான இராசதந்திர உறவும் - அமிர்தலிங்கம் அவர்களின் சாணக்கியம் காரணமாகவே பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் ஜனாதிபதி ஜயவர்த்தனவை அந்தரங்கக் கடித மூலம்



அச்சுறுத்தியதோடு இலங்கைக்குப் படையை அனுப்பினார் என்ற கருத்தும் சிங்களவர்கள் மனதில் கொழுந்து விட்டு எரிந்தது. இந்தியா மூலம் மேலும் அழுத்தத்தை ஏற்படுத்துவார் என்ற பயம் நிறைந்த சூழ்நிலை கொழும்பில் சிங்கள அரசியல்வாதிகளிடம் காணப்பட்டது. அதனைவிட எதிர்க் கட்சித் தலைவராக இருந்த சமயம் ஈழத் தமிழர் பிரச்சினையை உலக மயப்படுத்திய செயலும் அவர்களிடையே ஆத்திரத்தை வளர்த்திருந்தது. விடுதலைப் புலிகள் முற்றிலும் வேறுபட்ட ஒரு காரணத்துக்காகவே (பின்னர் சொல்லப்படும்) அண்ணலைப் பகைத்தனர். அவர்கள் அமிர்தலிங்கம் அவர்களுக்கு 1987 பெப்புருவரி மாதம் மரணதண்டனை விதித்திருந்தனர். அதனை 1987 யூலை 11ந் திகதி வெளிவந்த 'இந்தியா ருடே' சஞ்சிகை உறுதிப்படுத்தியது. அதன் காரணமாகவே கலாநிதி நீலன் திருச்செல்வமும், முன்னாள் மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் சூசைதாசனும் மிகவும் பிரயாசப் பட்டுப் பாதுகாப்பான பௌத்தலோக மாவத்த வீட்டைத் தெரிவு செய்தனர். அதன் பின்னரே தமிழகத்தில் இருந்து தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கொழும்பில் குடியிருக்க வந்திருந்தார்.

தலைவர் கொலையை அடுத்து எதிர்க்கட்சிகள் இணைந்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் தலைமையிலும், கம்யூனிஸ்ட் கட்சி தனித்தும் கொலைக்கான சூழ்நிலையை விசாரணை செய்ய குழு அமைக்கவேண்டும் என்று வேண்டின. விசாரணைக் குழு அமைப்பது பற்றி எதுவும் பேசாமல் அமிர்தலிங்கம் அவர்கள் கொலை விடயத்தை மூடிமறைக்கும் கைங்கரியத்தில் ஆரம்பத்தில் இருந்தே அரசாங்கம் ஈடுபட்டமை சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

கொலையாளிகளுக்கு உடைந்தையாக இருந்தவர்களைத் தெரிந்தும் தெரியாதது போல அரசாங்கம் பாசாங்கு செய்தது. கொலை நடந்த வேளை ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் அம்பாறையில் ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டு நின்றார். உடனே கூட்டத்துக்கு அமிர்தலிங்கம் அவர்களது மறைவுச் செய்தியைச் சொல்லி வன்முறையைக் கண்டித்துக் காரசாரமாகக் கூட்டத்தில் பேசினார். திருகோணமலைக்கும் சென்று பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார். ஆனால் விசாணைக் குழுவை ஏன் அமைக்கவில்லை?

விடுதலைப் புலிகள் அக்கொலையைச் செய்யவில்லை என்று மறுப்புத் தெரிவிப்பதில் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின சுறுசுறுப்புக் காட்டினார். கொலைக்கு முன்னர் விசு அலோசியஸ் ஆகியோர் ஹில்ரன் ஹோட்டலுக்குப் போய் யோகியை அடிக்கடி சந்தித்து வந்தவர்கள். அது யாவரும் அறிந்த உண்மை. அத்தோடு விடுதலைப் புலிகளே கொலையைச் செய்ததாகப் பொலிஸ் விசாரணை பற்றிய பத்திரிகைச் செய்திகள் உறுதி செய்ததால் கட்டாயமாக ஹில்ரன் ஹோட்டலில் இருந்த யோகி, மாத்தையா, பரமு மூர்த்தி ஆகியோர் விசாரணை செய்யப்பட்டிருக்க வேண்டும். எனினும் காவல்துறை அந்த ஹோட்டல் பக்கம் தலைகாட்டி விசாரணை செய்யவில்லை.

புலிகளின் மீது பழி சுமத்த வேறு யாரோ செய்ததாக கொலையின் மறுதினம் வெளி வந்த 'டெயிலி நியூஸ்' பத்திரிகை கூறினது. அரசின் ஊதுகுழலான அப்பத்திரிகை தனது கடமையில் கவனமாக இருந்தது. 'டெயிலி நியூசின்' கண்துடைப்புச் செய்தியைக் கண்டித்து நாடாளுமன்ற எதிர்க்கட்சிகள் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் அறிக்கைகள் வெளியிட்டன. காவல்துறையின் விசாரணையைத் திசை திருப்ப 'டெயிலி நியூஸ்' பத்திரிகை முயல்வதாகக் குற்றஞ்சாட்டின.

விடுதலைப் புலிகளின் லண்டன் தலைமையகம் வழமை போல தமக்கும் அமிர்தலிங்கம் அவர்கள் கொலைக்கும் தொடர்பில்லை என்று அறிக்கை வெளியிட்டது.

புலிகள் அக்கொலைகளைச் செய்யவில்லை என்று ரஞ்சன் விஜயரத்தின தேவையில்லாமல் பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டி வைத்துச் செய்திகள் வெளியிட்டார்.

1989 ஆகஸ்ற் பத்திரிகையாளர் மகாநாடு

கொலை நடந்த அடுத்த மாதம் - 1989 ஆகஸ்ற் மாதம் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டினார். அந்த மகாநாட்டிற்கு ரஞ்சன் விஜரத்தின பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஏணஸ்ற் பெரேராவை அழைத்துப் போனார். அங்கு பத்திரிகையாளருக்கு "அமிர்தலிங்கம் கொலை



தொடர்பான உண்மைகளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கூறுவார்" என்றார்.

ஏணஸ்ற் பெரேரா கூறினார்: "நாரயம்பிட்டியில் உள்ள அன்டசன் தொடர் மாடியில் வசித்த வில்லியம் மரியதாசனும், நாரம்பிட்டிய கஸபா வீதியில் வசித்த நடராசா சத்தியானந்தனும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் 1989 யூலை 21ந் திகதி மூன்று கொலைஞர்களின் சடலங்களையும் - விசு எனப்படும் இராசையா அரவிந்தராசா, அலோசியஸ் எனப்படும் பீற்றர் அலோசியஸ் லீயோன், விக்னன் எனப்படும் சிவகுமார் - என்பதாக அடையாளம் காட்டியுள்ளனர். அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், விசு எனப்படுபவன் முன்னாள் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளன் என்றும் அடையாளம் கூறியுள்ளனர். கொலைஞர்களின் உறவினருக்கு சடலங்களைப் பொறுப்பேற்க வரும்படி செய்திகள் தெரிவிக்கப்பட்டன. எனினும் கொலைஞரின் சடலங்களைப் பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை."

அந்தப் பத்திரிகையாளர் மகாநாட்டில் "கொழும்பில் உள்ள விடுதலைப் புலிகளை ஏன் விசாரிக்கவில்லை?' என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்டதற்குப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின பதில் இறுக்கவில்லை. "பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதில் சொல்வார்" என்று கூறி ஒதுங்கிக்கொண்டார். அமிர்தலிங்கம் அவர்களது கொலை தொடர்பான பத்திரிகையாளரின் கேள்விகளுக்குப் பதில் கூறமுடியாமல் ஏணஸ்ற் பெரேரா திணறினார். சில கேள்விகளின் பொழுது பாதுகாப்பு அமைச்சரைப் பார்த்தபடி மௌனம் சாதித்தார்.

பத்திரிகையாளர் மகாநாடு - றீத்தா

1989 அக்டோபர் கொலை நடந்து இரண்டு மாதங்கள் கழித்து கொழும்பில் ரஞ்சன் விஜயரத்தின அவர்கள் ஒரு பத்திரிகையாளர் மகாநாடு நடத்தினார். அதில் இந்தியன் எகஸ்பிரஸ் பத்திரிகை நிருபர் றீத்தா செபஸ்தியான் கலந்து கொண்டார். அவர் அந்தப் பத்திரிகையாளர் மகாநாட்டுக்கு முன்னதாக மட்டக்களப்பு சென்று வந்திருந்தார். மட்டக்களப்பில் அவர் ஒரு விடுதலைப் புலிகளின் முகாமுக்குச் சென்று வந்திருந்தார். "விடுதலைப் புலிகள் முகாமில் வீரச் சாவைத் தழுவிய விடுதலைப் புலிகளின் புகைப்படங்களின்

மத்தியில் விசு அலோசியஸ் விக்கினன் ஆகிய மூவரது புகைப்பட்ங்களும் பரர்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. நான் அவற்றை அங்கே பார்த்தேன். விடுதலைப் புலிகள் உடந்தை என்பதை அப்புகைப் படங்கள் சாட்சி பகர்கின்றனவே? அதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்று பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜரத்தினவிடம் கேட்டார். தான் அதனை யோகியிடம் விசாரிப்பதாகக் கூறி ரஞ்சன் விஜயரத்தின மழுப்பினார். பின்னர் யோகியிடம் விசரரித்தது பற்றி ஏதும் அமைச்சர் சொல்லவில்லை. ஏன்?

1990 மார்ச் 15 - பிரதித் தலைவர் மாத்தையா

எட்டு மாதங்களாக விடுதலைப் புலிகள் தமக்கும் அமிர்தலிங்கம் அவர்களின் கொலைக்கும் சம்பந்தமில்லை என்றே கூறிவந்தனர். விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா என்னும் கோபாலசாமி மகேந்திரராசா 1990 ஆம் ஆண்டு மார்ச் 15ந் திகதி அமிர்தலிங்கம் அவர்களை விடுதலைப் புலிகளே கொலை செய்ததாக 'லங்கா கார்டியன்' பத்திரிகையின் ஆசிரியர் மேவின் டி சில்வாவுக்கு அளித்த பேட்டியின் போது கூறினார்.

"பல கட்சி ஆட்சி முறையை ஏற்பதாகக் கூறுகிறீர்கள்? அப்படியானால் ஏன் அமிர்தலிங்கத்தைக் கொன்றீர்கள்?" என்று மேவின் டி சில்வா கேட்க

"தமிழ் ஈழத்தைக் கைவிட்டு இந்தியாவின் 'ஏஜன்டாக' இருந்ததற்காகக் கொன்றோம். அவர் ஒரு துரோகி. எங்களைக் காட்டிக் கொடுத்தவர்." என்று பதிலளித்தார்.

1990 மார்ச் 22 - பத்திரிகையாளர் மகாநாடு

1990 மார்ச் 22ந் திகதி பாதுகாப்பு அமைச்சர் கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் அமிர்தலிங்கம் அவர்கள் கொலை பற்றி மீண்டும் வினாக்கள் எழுப்பப்பட்டன.

"எனக்கு அவ்விடயம் பற்றிச் சொல்ல முடியாமல் உள்ளது. மரியதாசனின் ஒப்புதல் வாக்கு மூல சாட்சியத்தின்படியே அதனை நோக்குகிறேன்" என்றார் பாதுகாப்பு அமைச்சர்.

"யோகியை விசாரித்துச் சொல்வதாகச் சென்ற தடவை சொன்னீர்கள்" - ஒரு பத்திரிகையாளர்.



"அதற்குப் பிறகு நான் யோகியைச் சந்திக்கவில்லை." பாதுகாப்பு அமைச்சர் சொன்னார்.

"நீங்கள் பங்கு பற்றிய வட்ட மேசை மகாநாட்டில் யோகியும் இருந்தாரே" - ஒரு நிருபர்.

அந்த மகாநாட்டில் விடுதலைப் புலிகளின் சீருடையில் ஆயுதத்தோடு யோகி காணப்பட்டார். அது பற்றிய செய்தி அடுத்த தினம் சகல பத்திரிகைகளிலும் முக்கிய செய்தியாக வெளிவந்திருந்தது. பல பத்திரிகைகள் அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்தன. யாழ்ப்பாணம் முழுவதும் அது ஒரு துணிகரச் செயலாகக் கருதப்பட்டது. அதனையே பத்திரிகையாளர் குறிப்பிட்டார்.

1990, ஏப்பிரல் மாதம் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டிலும் பத்திரிகையாளர்கள் அமிர்தலிங்கம் அவர்களின் கொலைபற்றியும் மாத்தையா 'லங்கா காடியனுக்கு' அளித்த பேட்டி பற்றியும், பாதுகாப்பு அமைச்சரிடம் வினாக்கள் எழுப்பினார்கள். "மரியதாசன் விரைவில் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவான்" என்று மட்டும் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின பதிலளித்தார். அவரிடம் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கொலை பற்றி விசாரித்த சமயம் எல்லாம் மிகச் சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு மௌனம் சாதித்து வந்தார்.

பாணந்துறை உயர் நீதிமன்றத்தில் வில்லியம் மரியதாசன் விசாரணை செய்யப்பட்டான். முடிவில் அவனுக்கு ஏழு வருட கடுங்காவல் சிறை விதிக்கப்பட்டது. மரியதாசன் மேன் முறையீடு செய்தான். மேன்முறையீட்டு நீதிமன்றம் 'மரியதாசன் கொடுக்காத ஒப்புதல் வாக்கு மூல அடிப்படையிலேயே மரியதாசனுக்கு ஏழு வருடம் சிறை விதிக்கப்பட்டது. ஆகவே அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தை ஏற்க முடியாது.' என்று கூறி 1995 ஆம் ஆண்டு பெப்புருவரி ந் திகதி மரியதாசனை விடுதலை செய்தது.

அவ்வாறாயின் மரியதாசன் மீது ஏன் பாதுகாப்பு அமைச்சர் கொலையைச் சுமத்தினார்? யோகி முதலியோரைப் பாதுகாக்க அப்டிச் செய்திருப்பாரோ அல்லது தன்னைப் பாதுகாக்க அப்படிச் செய்திருப்பாரோ என்று கேள்வி எழுப்ப வேண்டி உள்ளது.

பாஸ்கரலிங்கம் சொன்ன கதை

இக்கொலை பற்றிய விடயங்களை ஐக்கி தேசிய கட்சி அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின கையாண்ட முறை சந்தேகங்களைக் கிளப்புவதாக உள்ளது. அமிர்தலிங்கம் அவர்கள் கொலை செய்யப்பட்ட அன்று (யூலை 13, 1989) மாலை ஹோட்டல் சமுத்திராவில் இந்திய அரசாங்க தூதுவரின் விருந்து உபசாரம் ஆரம்பிக்க இன்னும் சொற்ப நேரமே இருந்தது. விருந்தினர்கள் வரத் தொடங்கிவிட்டார்கள். அந்த விருந்துக்கு ஏற்கனவே ரஞ்சன் விஜரத்தினவும் வந்து சேர்ந்துவிட்டார். அமிர்தலிங்கம் சிவசிதம்பரம் ஆகிய இருவரது வருகையை தூதுவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது நிதி அமைச்சின் நிரந்தர செயலாளராக இருந்தவர் பி. பாஸ்கரலிங்கம். அப்பொழுதுதான் அவர் உள்ளே வந்தார். அவர் நேரே இந்திய அரசாங்க தூதுவர் லேகன் லால் மெறோத்திரா அவர்கள் அமர்ந்திருந்தவிடம் சென்று "அமிர்தலிங்கம் சுடப்பட்டுவிட்டார்" என்றார்.

அதனைக் கேட்ட பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின "யாரால்" என்று கேட்டார்?

"தெளிவாளன செய்தி இல்லை. சுடப்பட்ட கொலைஞன் ஒருவன் யோகியைப் போல இருப்பதாகப் பொலிஸ் சொல்கிறது" என்றார்.

விருந்துக்காகக் குழுமி இருந்தவர்கள் திகைத்தனர். சஞ்சலம் அடைந்தனர்.

பதட்டமடைந்த பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின தாமதமில்லாமல் தொலை பேசியை எடுத்து மறுபக்கத்தில் நின்றவரை "யோகி தப்பிவிட்டாரா? அவருக்கு ஒன்றும் இல்லையே?" என்று விசாரித்தார். பின்னர் விருந்துக்குச் சென்றவர்களுக்கு "அது யோகி அல்ல. யோகி உயிருடன் உள்ளார்" என்று கூறினார். ஏன் யோகியின் உயிர் மீது அத்தனை அக்கறை? யாரை விசாரித்தார்? அப்பொழுது யோகி கோட்டை ஹில்ற்றன் ஹோட்டலில் இருந்தாரா?

கொலைச் செய்தி கேட்ட ரஞ்சன் விஜயரத்தினவின் மனக்குழப்பக் காட்சியை கொழும்பில் இருந்து வெளிவரும் ஞாயிறு ஆங்கில இதழ் ஒன்றும் சுடச் சுடச் செய்தியாக வெளியிட்டது. சில



எழுத்தாளர்களும் இந்தக் மனக் குழப்ப நிகழ்வைத் தங்களது கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் கவனிக்க வேண்டியது எல்லோரும் அமிர்தலிங்கம் அவர்களின் கொலை அறிந்து பரிதாபப்பட்ட வேளை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின விடுதலைப் புலி யோகிக்காகப் பதட்டம் அடைந்துள்ளார். ஏன்? அவர்மீதும் சந்தேகம் விழுவது நியாயமா, இல்லையா? சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்ன பேசுகின்றன? 1991ஆம் ஆண்டு மார்ச் 2ந் திகதி கொழும்பில் கார் குண்டு வெடிப்பில் சிக்கி மரணமான ரஞ்சன் விஜயரத்தினவுக்கு கொலையில் தொடர்பில்லை என்று சொல்லமுடியுமா?

தொலை பேசிச் சம்பாசனை அமிர்தலிங்கம் அவர்கள் கொலை செய்யப்படப்போவது அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினாவுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கிறது என்பதை ஊர்ஜிதப் படுத்துகிறது என்று வைத்துக்கொள்ளலாமா, இல்லையா? கொலை செய்யப் போவதை விடுதலைப் புலிகள் பறைசாற்றிச் சொல்பவர்கள் அல்ல. அவர்களது இரகசியத் திட்டங்களைக் காற்றுக்கூட அணுக முடியாது. அப்படியானால் எப்படி அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினவுக்கு முன்கூடியே தெரிய முடியும்? அவரின் ஏவலில்தான் பேய் கூரையைப் பிடுங்கியதா? இவை யாவும் கேள்விகளாகவே உள்ளன. புத்தியுள்ள ஜீவன்கள் பின்வரும் அறிக்கைகளை ஆழ்ந்து நோக்குவார்கள்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கையில்

" ........ எந்தச் சூழ்நிலையில் கொலை செய்யப்பட்டார் என்றும், அந்தச் சூழ்ச்சிப் பின்னணியை ஆராயப்பட வேண்டும் என்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வேண்டிக்கொள்கிறது. ...."

எதிர்க்கட்சிகள் இணைந்து வெளியிட்ட அறிக்கையிலும் 'கொழும்புச் சூழ்நிலை' பற்றிய சந்தேகம் எழுப்பப்பட்டது.

"எச்சூழ் நிலையில் அந்த கொலைச் செயல் நடந்தது என்று ஒரு பாரபட்சமற்ற விசாரணை நடத்தவேண்டும். அரச கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்கள் ஊகத்தில் செய்திகள் வெளியிடுகின்றன. அந்த ஊகச் செயல் கொலை பற்றிய ஒரு பொருத்தமான விசாரணையை நடத்த குந்தகம் விளைவிக்கும் என்றும் கடுமையாக எச்சரிக்கின்றோம்."

திருகோணமலைப் பிரதிபலிப்புகள்

தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் மறைந்த சமயம் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அம்பாறையில் நின்றார். மறைவுச் செய்தி கேட்டதும், பௌத்த சமயக் கூட்டத்தில் இருந்த மக்களை இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செய்யச் செய்து முதலாவது இரங்கல் செய்தியை வெளியிட்டவர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச. அவர் கொழும்பில் இல்லாதபடியால் அங்கு வைத்து அமிர்தலிங்கம் அவர்களின் பூதவுடலுக்கு மரியாதை செய்ய வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவரின் பூதவுடல் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இறுதி மரியாதை செலுத்த அம்பாறையில் இருந்து நேரே திருகோணமலைக்குப் போவதாகச் செய்திகள் வெளியாகின. அவர் அங்கு சென்று பூதவுடலுக்கு மரியாதை செய்வதை திருகோணமலைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை. இராணுவ பாதுகாப்புடன் பூதவுடல் வைத்த இடத்தை ஜனாதிபதி பிரேமதாச அடைந்தபொழுது "துரோகி, கொலைகாரன்" என்று திருமலை மக்கள் கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டஞ் செய்து கல் எறிந்தார்கள். 1993 மே முதலாந் திகதி கொழும்பில் மே தின ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்த பொழுது தற்கொலைப் போராளியினால் கொல்லப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசாவை ஏன் மக்கள் 'துரோகி கொலைகாரன்' என்று வைதார்கள்? இந்த நிகழ்வு எதனை வலியுறுத்துகிறது என்பதனை வாசகனின் தீர்மானத்துக்கு விட்டுள்ளேன்.

எதற்காகப் பணம்?

அரசாங்கத்துடனான பேச்சு வார்த்தைகள் முறிந்து ஆங்காங்கு வடகிழக்கில் விடுதலைப் புலிகள் கைவரிசையைக் காட்டத் தொடங்கி இருந்தனர். கொழும்பில் இருந்த விடுதலைப் புலித்தலைவர்களைப் பாதுகாப்பாக வன்னிக்கு அனுப்ப வேண்டியிருந்தது. ஹில்ரன் ஹோட்டலில் இருந்த விடுதலைப் புலித்தலைவர்கள் களுத்துறையில் உள்ள இராணுவ அதிரடிப் படைமுகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுக்கு அப்பொழுது விடுதலைப் புலிகள் ஒரு வானொலிச் செய்தி அனுப்பி இருந்தனர். அந்தச் செய்தி: 'என்ன நடந்தாலும் உங்களுக்குத் தரப்பட்ட பணத்தைக் கொண்டுவருவதில் உறுதியாயிருங்கள்.' (தகவல்: மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க.)—



"Whatever happens ensure that the money offered is brought with you." 'A Soldier's Version' by Major General Sarath Munasinghe. page101. எந்தப் பணம்? எதற்காகக் கொடுக்கப்பட்டது? அடியாட்களுக்குக் கொடுக்கப்பட்டதா? வாசகர்களின் முடிவுக்கே இதனையும் விடுகிறேன். பிரபல சிங்கள எழுத்தாளர் ரோகன் குணரத்தினவும் தனது நூலில் விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாச பணத்தைத் தண்ணி போல அள்ளி இறைத்ததாகக் கூறுகிறார்.

கொழும்பின் அன்றைய அரசியல் சூழ்நிலை கொலைக்கு உடந்தையாக இருந்ததா என்று கேட்கவைக்கிறது. அதாவது விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நிலவிய தேன்நிலவு நாட்கள் கொலைக்கு உடந்தையாக இருக்கவில்லையா என்று வினா எழுப்பச் செய்கிறது. அரசாங்கம் - ரஞ்சன் விஜரத்தின - கொடுக்க வேண்டியதைக் கொடுத்து செய்வித்திருக்க முடியாதா என்று சிந்திக்க வைக்கிறது.

# அதிகாரம் 59
# கொலைக்கு ஆதாரம்

விடுதலைப் புலிகளின் நடைமுறை. முதலில் மரண தண்டனை விதிப்பார்கள். ஆத்தான கவிஞர் மூலம் அதனைப் பிரசாரிப்பார்கள். பின்னர் குறித்த நபரை மறைந்து நின்று கொல்வார்கள். அதனையடுத்துப் போர்க்களத்து வீரசாதனையாக ஆர்ப்பரிப்பார்கள். அதன் பின்னர் அந்தக் கொலைக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்று லண்டனில் இருந்து அறிக்கை வெளியிடுவார்கள். அவ்வாறே அமிர்தலிங்கம் அவர்களது கொலையை அடுத்து தாம் அதைச் செய்யவில்லை என்று லண்டனிலிருந்து அறிக்கை வெளியிட்டார்கள்.

யோகியின் நண்பர் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினவும் விடுதலைப் புலிகள் அக்கொலையைச் செய்யவில்லை என்று சாட்சியம் கூறினார். ஆனால் விடுதலைப் புலிகளே அக் கொலையைச் செய்தார்கள் என்பதற்கு நிறைவான சாட்சியங்கள் உண்டு.

'இந்தியா ருடே' சஞ்சிகை

1987 யூலை 11ந் திகதிய 'இந்தியா ருடே' சஞ்சிகையில் வெளிவந்த செய்தி: "தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமிர்தலிங்கத்தைத் 'துரோகி என்று பிரகடனப்படுத்தி உள்ளார்கள். காரணம் அவர் இந்தியாவுடன் நட்பான உறவைக் கொண்டுள்ளமையே."

கொலைப் பிரகடனம் 1987 பெப்ருவரியில் செய்யப்பட்டது. மயிலிட்டியில் உள்ள ஒரு வீட்டில் பிரபாகரனது தலைமையில் நடந்த கூட்டத்தில் அமிர்தலிங்கம் அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதோடு தமிழர் விடுதலைக் கூட்டணி தடை செய்யப்பட்டதாகவும் 'சொல்லப்படாத கதைகள்' என்ற இணையதள நூலில் கே.ரி.இராசசிங்கம் அவர்கள் சொல்லி உள்ளார்.

திருமதி சரோஜினி யோகேஸ்வரன்

கொலை செய்யப்பட்ட யோகேஸ்வரன் அவர்களின் மனைவியார் சரோஜினி கொலைஞர்களுக்குச் சிற்றுண்டி வழங்கியவர். அவர் மேலதிக நீதிபதி எம்.எம்.ஏ. கபூருக்கு அளித்த வாக்கு மூலம்:

"13ந் திகதி வியாழக்கிழமை காலை எனது கணவர் எனக்கு விசு அலோசியஸ் என்ற இருவர் தன்னைச் சந்திக்க வருவதாகவும் அவர்களுக்குச் 'சான்ட்விச்சும்' குளிர் பானமும் தயாரிக்கும் படியும் கூறினார். அலோசியஸ் என்பவர் அன்று காலையிலும் மாலையிலும் இரு தடவைகள் தொலை பேசியில் எனது கணவரோடு பேசினார். பி.ப. 6.30 க்கும் 7.00 மணிக்கும் இடையில் அவர்களை எதிர் பார்ப்பதாகக் கூறினார். கடந்த மாதத்தில் 4 தடவைகள் அலோசியஸ் எனது கணவனை வந்து சந்தித்தவர். எனது கணவர் இரண்டு குளிர் பானமும் ஒரு தேநீரும் தயாரிக்கச் சொன்னார். நான் சமையல் கட்டில் தேநீர் தயாரித்துக் கொண்டு நின்றேன். அவர்கள் சிரிப்பதும் பேசுவதும் எனக்குக் கேட்டது. திடீரெனப் பல சூட்டுச் சத்தங்கள் கேட்டன."

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்

1989 ஆகஸ்ற் பத்திரிகையாளர் மகாநாட்டில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஏணஸ்ற் பெரேரா "விசு, அலோசியஸ், விக்னன் ஆகியோர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். நாரயம்பிட்டியில் உள்ள அன்டசன் தொடர் மாடியில் வசித்த வில்லியம் மரியதாசனும், நாரயம்பிட்டிய கஸபா வீதியில் வசித்த நடராசா சத்தியானந்தனும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 1989 யூலை 21ந் திகதி அவர்கள் மூன்று கொலைஞர்களையும் அடையாளம் காட்டினர்" என்று பத்திரிகைகளுக்குக் கூறியுள்ளார்.



1989 ஆக்டோபர் பத்திரிகையாளர் மகாநாடு - றீத்தா

கொலை நடந்து இரண்டு மாதங்கள் கழித்து - 1989 ஒக்டோபரில் கொழும்பில் ரஞ்சன் விஜயரத்தின அவர்கள் கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் இந்தியன் எகஸ்பிரஸ் பத்திரிகை நிருபர் றீத்தா செபஸ்தியான் மட்டக்களப்பில் அவர் ஒரு விடுதலைப் புலிகளின் முகாமில் வீரச் சாவைத் தழுவிய விடுதலைப் புலிகளின் புகைப்படங்களின் மத்தியில் விசு, அலோசியஸ், விக்கினன் ஆகிய மூவரது புகைப்படங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததைத் தான் கண்டதாக அந்தப் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

1990 மார்ச் 15 - புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா

விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா என்னும் கோபாலசாமி மகேந்திரராசா 1990 ஆம் ஆண்டு மார்ச் 15ந் திகதி அமிர்தலிங்கம் அவர்களை விடுதலைப் புலிகளே கொலை செய்ததாக 'லங்கா கார்டியன்' பத்திரிகைக்குக் கூறியுள்ளார்.

மு. சிவசிதம்பரம் அவர்கள் கூற்று

அமிர்தலிங்கம் அவர்களைச் சுட்டவேளை சூடுவாங்கி உயிர் பிழைத்தவர் நல்லூர் முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் முருகேசு சிவசிதம்பரம் அவர்கள். அவர் வாய்ப்பிறப்பை 'ஒரு மிதவாதியின் கொலை' என்ற நூலின் புகுமுக வாயிலில் அதன் ஆசிரியர் ரி. சபாரத்தினம் தந்துள்ளார்:

"அவர்கள் எங்களுடைய விருந்தாளிகளாக வந்தார்கள். அவர்கள் எங்களின் நண்பர்கள் என்று கூறினார்கள். சிற்றுண்டியை உண்டார்கள். திருமதி யோகேஸ்லரன் அவர்களுக்குப் பரிமாறினார். அவர் ஊற்றிக் கொடுத்த பானத்தைப் பருகினார்கள். தமிழர் ஐக்கியம் பற்றி எங்களோடு கலந்து உரையாடினார்கள். மேசையில் தேநீர்க்

கோப்பைகளை வைக்க எழுந்தார்கள். அவர்கள் தங்களுடைய பைகளுள் கைகளை நுழைத்து றிவோல்வர்களை இழுத்து எடுத்து எங்களைச் சுட்டார்கள்."

மாதரசி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள், கணவனின் கொலையை அடுத்து லண்டனில் அகதியாக வாழ்கிறார். அவரை கே.ரி. இராசசிங்கம் என்ற எழுத்தாளர் சந்தித்தபொழுது அம்மையார் கூறிய வார்த்தைகளைத் தனது 'சொல்லப்படாத கதை' என்ற இணையதள நூலில் சொல்லியிருப்பது:

மங்கையர்க்கரசி எனக்குச் சொன்னார் "தம்பி எனது கணவனைக் கொல்ல ஆள் அனுப்புவார் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. அவர் தனது இளமைப்பருவத்தில் அடிக்கடி எங்கள் வீடு வந்து போனவர்." மங்கையர்க்கரசி என்னைக் கேட்டார்: "எனது கணவன் அவருக்கு என்ன துனபம் இழைத்தவர்? அவர்தான் எல்லா இளைஞர்களையும் அரசியலுக்குக் கொண்டு வந்து பிரபலப்படுத்தியவர். எல்லோரையும் தனது பிள்ளைகள் போல நடத்தினவர்."

முறிந்த பனை நூலும் பிறவும்

'முறிந்த பனை' என்ற பிரபலமான நூல் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் எழுதப்பட்டது. இந்திய அமைதி காக்கும் படையின் அட்டகாசங்கள் இயக்கங்களின் அயோக்கியத்தனங்கள் என்பன இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

அந்த நூலில் 'அமிர்தலிங்கத்தைத் தாங்களே கொன்றதாக விடுதலைப் புலிகள் தாம் நடத்திய கூட்டங்களில் கூறினார்கள். அதனை வீரகேசரி செய்திகளாகப் பல தடவைகளில் வெளியிட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1990 இல் லண்டன் மாநகரில் உள்ள தமிழ் வைத்தியர்களின் நிறுவனம் ஒழுங்கு செய்த கூட்டத்தில் பேசும் பொழுது, கிட்டு என்னும் சதாசிவம் கிருஷ்ணகுமார் தாங்களே அமிர்தலிங்கம் அவர்களைக் கொன்றதாகச் சொன்னார். அந்தக் கொடுமையான வார்த்தைகளைக் கேட்ட வைத்திய காலாநிதிகள் வாயடைத்துப் போயிருந்தனர்.



வல்லரசுகளின் அதிர்ச்சியூட்டும் முன்வைப்புக்கள் தூண்டினவா?

அமிர்தலிங்ம் அவர்களது உயிர் பறிக்கப் படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒரு வல்லரசு அமிர்தலிங்கம் அவர்களுக்குக் கைகொடுத்து உதவ முன்வந்தது. அதன் முன்னர் 1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகிய கையோடு வேறொரு வல்லரசு அவரைச் சென்னையில் அணுகி உதவி வழங்க முன்வந்திருந்தது. அந்த இரகசிய இராசதந்திர முயற்சிகள் எதிரிக்கு எட்டியதால் அவரது மரண தண்டனை விரைவு படுத்தப்பட்டதா என்ற முன்வைப்பும் கூட்டணி உள்வட்டாரத்தில் உண்டு.

இந்தியாவின் மிகப் பிரபல்யமான சஞ்சிகை 'ஃபுறன்ற் லைன்.' அதில் அமிர்தலிங்கம் அவர்களது துன்பியல் நிகழ்வு நடந்த அதே தினம் அமிர்தலிங்கம் அவர்கள் பற்றிய கட்டுரை ஒன்று அச்சுவாகனத்தில் பதிவாகிக்கொண்டிருந்தது. அதன் சாரம்: 'தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம், விடுதலை முயற்சியை புதிய கோணத்தில் அணுகித்துள்ளாரா' என்ற சாரப்பட அச்சுக்கு ஆயத்தமாக இருந்தது. ஆனால் அந்தக் கட்டுரை அமிர்தலிங்கம் அவர்களின் திடீர் மறைவை அடுத்து நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக 'ஒரு யுகத்தின் முடிவு' என்ற கட்டுரை 'ஃபுறன்ற் லைன்' சஞ்சிகையில் வெளியிடப்பட்டது என்று கூட்டணி உள்வட்டாரத்தில் பேசப்படுகிறது.

கொலை செய்யப்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் அமிர்தலிங்கம் அவர்கள் அவசரமாக கொழும்பு இந்திய தூதுவர் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டார். அங்கு அவருக்காக டில்லியில் இருந்து வந்த செய்தியோடு முதலாவது செயலாளர் திரு. ஜெயசங்கர் காத்திருந்தார். அமிர்தலிங்கம் அவர்கள் ஜெயசங்கரைச் சந்தித்த பின்னர் திரும்பி வந்து காரில் பின் ஆசனத்தில் ஏறியதும் அவரது இளைய மகன் பகீரதன் "என்னப்பா மிகவும் சந்தோசமாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "எங்கள் இன்னல்களுக்கெல்லாம் விரைவில் தீர்வு வரும் போல இருக்கிறது" என்று அவர் பதில் சொன்னார். இதே வார்த்தைகளை அன்றைய தினம் தனக்குச் சொன்னதாகப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவசிதம்பரம் அவர்கள் கூறியதும் ஆவணமாகி உள்ளது.

இவை எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் பொழுது - அமிர்தலிங்கம் அவர்களது கொலைக்குச் சற்று முன்னர் - இந்தியாவின் ஆசீர்வாதத்தோடு தமிழர் பிரச்சினையைப் புதிய வழியில் தீர்க்கக் காய்கள் மிக இரகசியமாக நகர்த்தப்பட்டுள்ளமை தெரிய வருகிறது. இக்கால கட்டத்தில் இந்தியா விடுதலைப் புலிகள் மீது கடும் சீற்றம் கொண்டிருந்தது. இந்திய படைகளுக்கு ஏற்பட்ட அவமானமே இந்தியாவை அப்படி ஒரு முயற்சியில் இறங்கவைத்தது. அத்தோடு கொழும்பு கால்.்.பேஸ் திடலில் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் படை அணிவகுப்பைப் பார்வையிட்ட சமயம் அவரைச் சிங்கள கடற்படைச் சிப்பாய் வித்தமுனி றோஹன டி சில்வா என்பவன் துப்பாக்கிச் சோங்கால் அடித்துக் கொல்ல எடுத்த முயற்சியும், இலங்கை அரசின் சில அமைச்சர்களது போக்கும், அமெரிக்க அரசு அமிர்தலிங்கம் அவர்களைத் தம்பக்கம் திசை திருப்ப எடுத்த முயற்சியுமே இந்தியாவை அப்படி ஒரு செயலில் இறங்கத்தூண்டியது. இப்படியான ஒரு முயற்சியில் அமிர்தலிங்கம் அவர்கள் ஈடுபட்டு வந்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதி காக்கும் படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. தனது முயற்சிக்குக் குந்தகம் ஏற்படுத்தும் என்ற காரணத்தினாலாயே அக்காலத்தில் போரினால் எற்பட்ட அவலங்களைப்பற்றிக் கண்டன அறிக்கைகளை மேற்கொள்வதை அமிர்தலிங்கம் அவர்கள் தவிர்த்திருந்தார்.

இதற்கு முன்னர் நடந்த ஒரு இரகசிய நிகழ்ச்சி. இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகிய இரண்டாவது தினம் சென்னை அமெரிக்க தூதுவர் அலுவலகத்தைச் சேர்ந்த உதவித் தூதுவர் - இவர் ஒரு பெண்மணி - அமிர்தலிங்கம் அவர்களை அழைத்து "உங்களுக்கு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் திருப்தி இல்லாவிட்டால் நீங்கள் அதனை அறிக்கையாக வெளியிடுங்கள். நாங்கள் உதவி செய்ய ஆயத்தமாக இருக்கிறோம்" என்ற வேண்டுகோளை முன்வைத்தார். அதற்கு அமிர்தலிங்கம் அவர்கள் 'இதுவரை காலமும் இந்தியாதான் எங்களுக்கு உதவி செய்தது. 1983 கலவரத்தை அடுத்து ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் 'இனஅழிப்பு' என்று தெரிவித்து எடுத்த முயற்சிகளை நாம் மறக்க முடியாது. அவர்கள் எங்களுக்கும் மக்களுக்கும் அடைக்கலம் தந்தவர்கள். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் எடுத்த துணிகரமான முயற்சிகளையும் உதாசீனம்



செய்ய முடியாது. நன்றி மறப்பது நல்லதல்ல' என்று பதில் அளித்தார். அவர் நாடியிருந்தால் அமெரிக்க வல்லரசின் உதவி எந்தச் சந்தர்ப்பத்திலும் கிடைக்கக்கூடிய சூழ்நிலை காணப்பட்டதாக உள்வட்டாரத்தில் பேசப்படுகிறது.

மேலே சொன்ன இரண்டு நிகழ்ச்சிகளும் புலனாய்வு வழியாகக் கசிந்து அவரது மரணத்தைத் துரிதப்படுத்தினவா என்றும் வினா எழுப்பச் செய்கிறது.

இதுவரை மேலே தரப்பட்டுள்ள சாட்சியங்கள் யாவும் யார் அமிர்தலிங்கம் அவர்களைக் கொன்றார்கள் என்பதை ஐயம்திரிபற உலக சமூகத்துக்குத் தெரிவிக்கின்றன. ஆனால் சிலர் அக்கொலையின் சூத்திரதாரிகளைப் புனிதப்படுத்தும் கைங்கரியத்தில் இறங்கி உள்ளனர். ஜனநாயக நீரோட்டத்தில் சங்கமிக்க விரும்புகிறவர்களுக்கு அப்படி ஒரு சுத்திகரிப்புத் தேவையோ?

# அதிகாரம் 60
# இந்திய உளவுத்துறை (RAW) சம்பந்தமா?

யப்பான் கியோட்டோ பல்கலைக்கழகத்தில் 'விசிற்றிங்' பேராசிரியராகப் பணியாற்றும் சச்சி சிறீகாந்தா தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கொலை பற்றி ஒரு புதிய கதை கட்டுகிறார். இவர் முன்னர் பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் உயிரியல் இரசாயன விரிவுரையாளராக இருந்தவர். இப்பொழுது ஜப்பானிய மாதைத் திருமணம் செய்து ஜப்பானில் நிரந்தரமாக வாழ்கின்றார்.

'அமிர்தலிங்கம் அவர்களின் கொலை விடுதலைப் புலிகளால தான் செய்யப்பட்டது. ஆனால் அதற்கும் புலிகளின் தலைவருக்கும் எதுவித தொடர்பும் இல்லை. அதனைச் செய்தது, இந்திய உளவுத்துறை RAW வின் ஏவுதல்படி விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா என்னும் கோபாலசாமி மகேந்திரராசா' என்று பேராசிரியர் சிறீகாந்தா தனது 'பிரபாகரன் மான்மியம்' என்ற

இணையத்தள நூலின் 'இந்தியர்களின் சூழ்ச்சி' என்னும் 22ஆம் பாகத்தில் சொல்கிறார்.

அமிர்தலிங்கம் அவர்கள் கொலைசெய்யப்பட்டு ஒரு தசாப்தமும் இரண்டு வருடங்களும் கழிந்து, 2001ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளின் தலைவரை அந்தப் பழியில் இருந்து விடுவித்து அவருக்குப் பட்டாபிசேகம் செய்யப் பிரயத்தனப்படுகிறது அவரின் இணையத்தள 'பிரபாகரன் மான்மியம்' நூல். மருதநிலத்துத் தலைமையை நெய்தல் நிலத்துக்கு மாற்றுவதற்கு அப்படியான ஒரு குடமுழுக்கு அவருக்குத் தவிர்க்க முடியாமல் உள்ளதனால் அந்தப் பணியைத் தனது காவியத்தின் மூலம் சிறீகாந்தா முன்னெடுக்கின்றார்.

அவரது முன்னெடுப்பு மஹாவம்சத்தில் மஹாநாம தேரர் துட்டகாமினியைக் காவியநாயகனாக்கக் கையாண்ட உத்திகளை நினைவூட்டு கின்றது.

**காவியநாயகன்**

புலிகளின் தலைவரை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவனாகக் காட்ட சிறீகாந்தா முயல்கின்றார். அதற்காக அவர் அவரைத் தனது காவியத்தின் நாயகனாகச் சித்தரித்துள்ளார். நூலாசிரியர் நாமம் மறைக்கப்பட்ட மாத்தையா என்னும் கோபால சுவாமி மகேந்திரராசாவையும், எதிர்வாதம் புரிய வரமுடியாத 'றோ' (RAW- Research Analysis Wing) எனப்படும் இந்திய உளவுத் துறையையும் சாட்டுக்கு இழுத்து வைத்துத் தனது இஷ்டத்துக்குப் பொய்க் கணக்குக் காட்டி அமிர்தலிங்கம் அவர்கள் கொலைப் பழியை மாத்தையாமீது சுமத்துகிறார். சுயமாகச் சிந்திப்பதை எப்பவோ இழந்துவிட்ட சமூகம் மறுவார்த்தை பேசாது என்ற துணிவில் அப்படி ஒரு கதையைக் கட்டுகிறார். எல்லாப் பாவம் பழிகளையும் 'றோவின்' தலையில் சுமத்துகிற சரித்திரம் ஆரம்பமாகி உள்ளது.

1956ஆம் ஆண்டு பிறந்த பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட மாத்தையா பிரபாகரனின் சாகியத்தவர். பருத்தித்துறைப் பாராளுமன்ற முன்னைநாள் உறுப்பினர் துரைரத்தினம் அவர்களின் மருமகன். வல்லுவெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் பயின்ற மாத்தையா 1978இல் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தவர். வன்னிப் பிரதேசத்தில் புகழ்பூத்த தளபதியாக இருந்தவர். 1987



மார்ச் 13ந் திகதி கைக்குண்டு வீச்சில் யாழ்ப்பாணத் தளபதியும், விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவருமான கிட்டு ஒரு காலை இழந்த பின்னர் யாழ்ப்பாணத் தளபதியாக்கப்பட்டதோடு விடுதலைப் புலிகளின் பிரதித்தலைவருமானார். இந்திய அமைதி காக்கும் படைக் காலத்தில் வன்னியில் இந்தியப் படைகளை முறியடித்து வீர வரலாறு படைத்ததோடு தனது தலைவரின் உயிரையும் பாதுகாத்தவர். அவரது புகழ் இயக்கத்தில் கொடிகட்டிப் பறந்த வேளை - 'றோவின்' ஏவுதல்படி பிரபாகரனைக் கொன்று தலைமைப் பதவியைக் கைப்பற்ற முயன்றதாக 1993 மார்ச் 31ந் திகதி மாத்தையா கைது செய்யப்பட்டு 1994ஆம் ஆண்டு டிசம்பர் 28ந் திகதி மரணதண்டனைக்கு ஆளாக்கப்பட்டவர்.

மாத்தையா இனிச்சாட்சி சொல்ல வரமாட்டார் என்ற வாய்ப்பைப் பயன்படுத்திச் சிறீகாந்தா தனது காவியநாகன்மீது விழுகின்ற அபாண்டங்களை யெல்லாம் அந்த மரணித்த மனிதரின் தலையில் ஏற்றி வைத்து ஆத்மதிருப்தி காண்கின்றார்.

**இந்திய உளவுத்துறை RAW**

அமிர்தலிங்கம் அவர்களின் கொலையை விடுதலைப் புலிகளின் தலைவர் செய்வித்தாகக் குற்றஞ் சுமத்துவது தவறு எனச் சொல்ல வந்த சிறீகாந்தா 'அரசியல் வாதியும் பத்திரிகையாளனும் பொய்யன்கள்' என்று கூறும் ஆங்கிலக் கவிஞர் வை.பி. யீட்சின் கவிதையைத் (The Old Stone Cross by W.B.Yeats) துணைக்கு இழுத்து வைத்துக்கொண்டு தனது புராணத்தை வாசிக்கத் தொடங்குகிறார். அந்தக் கவிதை அவருக்கும் பொருந்தாதோ என்று வாசகன் தீர்மானிப்பானாக. அவர் சொல்வதன் சுருக்கம்:

'றோ' எனப்படும் இந்திய உளவுத்துறையின் ஏவுதலுக்கு எடுபட்டு மாத்தையாவே அமிர்தலிங்கத்தைக் கொன்றதாகச் சொல்கிறார். 'விடுதலைப் புலிகளில் இரண்டு பிரிவுகள் இருந்தன. அதாவது தலைவர் பிரிவு மாத்தையா பிரிவு என்று இரண்டு பிரிவுகள். மாத்தையா பிரிவே 'றோவின்' தூண்டுதலால் அமிர்தலிங்கத்தைக் கொன்றது' என்கிறார்.

ஏன் இந்திய உளவுத்துறை (RAW) மாத்தையாவை ஏவியது என்பற்கு சிறீகாந்தா கூறும் காரணம்: 'விடுதலைப் புலிகள் தலைவருக்குச் சங்கடத்தை ஏற்படுத்தவும், பிரேமதாசாவைச்

சார்ந்தவர்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தவுமே அமிர்தலிங்கம் அவர்கள் கொலை செய்யப்பட்டார் என்கிறார். (Embarrassing the LLTE leadership and creating confusion in Premadasa's camp.) இந்த ஒரு சின்னக் காரணத்தை மட்டுமே முன்வைத்துள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. யோகேஸ்வரன் கொலை விபத்தாக நடந்தது என்ற அவரது கூற்று நியாயமானதே.

அமிர்தலிங்கம் அவர்களைக் கொலை செய்விப்பதை 'றோ' எண்ணிப் பார்க்கக்கூடிய முன்நிகழ்வுகளோ சூழ்நிலையோ காரணமோ நியாயமோ பகைமையோ எதுவுமே இருக்கவில்லை. இலங்கை அரசும் அரசியல் கட்சிகளும், சிங்கள முஸ்லிம் மக்களும், பெரும்பகுதித் தமிழ் மக்களும், பல ஆயுதம் ஏந்திய இயக்கங்களும் இந்தியாவைப் பகைத்த பொழுதும், அமிர்தலிங்கம் அவர்கள் தீர்க்கதரிசனமாக இந்தியாவின் நேசக் கரத்தைத் தொடர்ந்து பற்றியே நின்றவர். இந்தியாவின் உதவியுடன்தான் ஈழத் தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்பதில் பூரண நம்பிக்கை வைத்திருந்தவர். அதற்காக அவர் பல தடவைகள் தமிழ் நாட்டிற்கும் வடஇந்தியாவுக்கும் பிரயாணித்தவர். இந்தியா பதினெட்டு மைல்கள் தொலைவுக்குள் அமைந்த ஒரு பெரிய வல்லரசு. பிரமிக்கத்தக்க அரசியல் சாணக்கியர்கள் நிறைந்த நாடு. அது தனது பிராந்தியத்தில் உள்ள நிட்சயமான ஒரு நேச கரத்தைத் துண்டிக்க முற்படக்கூடிய இராசதந்திரம் அற்ற நாடல்ல. அவ்வகையில் இந்தியாவோடு முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக நட்புறவை வளர்த்து வரும் அமிர்தலிங்கம் அவர்களைக் கொலை செய்விக்க RAW முடிவெடுத்திருக்குமா? மாத்தையாவை ஏவியிருக்குமா?

பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியுடனும் அவரின் மகன் பிரதமர் ராஜீவ் காந்தியுடனும் அமிர்தலிங்கம் அவர்களுக்கு இருந்த நெருங்கிய இராசதந்திர உறவு யாவரும் அறிந்ததே. ஒரு முறை ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் அமிர்தலிங்கம் அவர்களை ராஸ்திரபதி பவானுக்கு அழைத்திருந்தார். அங்கு சென்ற சமயம் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையார் தானே தேநீர் தயாரித்து அமிர்தலிங்கம் அவர்களுக்குக் கொடுத்ததாக அவரோடுகூடச் சென்ற நியூயோக்கில் விசிக்கும் வின்சன் பஞ்சாட்சரம் அவர்கள் 'வரலாற்றில் மனிதன்' மலரில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.



அவ்வகையில் பாரதத்தின் நேசத்துக்கு உரியவர் அமிர்தலிங்கம் அவர்கள். அவரைக் கொல்ல RAW மாத்தையாவை ஏவியது என்று சிறீகாந்தா சொல்வது கட்டுக்கதை போல உள்ளது.

சரி. 'RAW'தான் ஏவியது என வைத்துக்கொள்வோம். அப்படியானால் ஏன் பதின்மூன்று வருடங்களாக விடுதலைப் புலிகள் அந்த உண்மையை மறைத்து வைத்திருக்கிறார்? உண்மையைச் சொல்லி வீண் பழியைத் தவிர்த்திருக்லாமே?

விடயத்தை மேலும் தொடர முன்னர் இரு பிரபல்யமான எழுத்தாளர்களுக்கு மங்கையர்க்கரசி அம்மையார் சொன்ன வார்த்தைள் மாற்றம் இன்றி அப்படியே இங்கு சமர்ப்பிகக்கப்படுகின்றன. அவை பிரபாகரனே அண்ணலைக் கொலை செய்ய ஆளனுப்பினார் என்பதைச் சொல்கின்றன.

கே.ரி.இராசசிங்கம் அவர்கள் தனது 'சொல்லப்படாத கதை' என்ற இணையதள கட்டுரையில் சொல்லியிருப்பது:

மங்கையர்க்கரசி எனக்குச் சொன்னார் "தம்பி எனது கணவனைக் கொல்ல ஆள் அனுப்புவார் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. அவர் தனது இளமைப்பருவத்தில் அடிக்கடி எங்கள் வீடு வந்தவர்." மங்கையர்க்கரசி என்னைக் கேட்டார்: "எனது கணவன் அவருக்கு என்ன துன்பம் இழைத்தவர்? அவர்தான் எல்லா இளைஞர்களையும் அரசியலுக்குக் கொண்டு வந்து பிரபலப்படுத்தியவர். எல்லோரையும் தனது பிள்ளைகள் போல நடத்தினவர்."

மங்கையர்க்கரசி அம்மையார் அமரர் சிவசிதம்பரம் அவர்களது பூதவுடலோடு 2002ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ந் திகதி வன்னி வழியாகச் சென்ற பொழுது விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் "எப்படி அம்மா சுகம்?" என்று கேட்டதற்கு அம்மையார் சொன்ன பதில்:

"எங்கள் இனத்துக்கு விமோசனம் காட்டுவீர்கள் என்றால் உங்களுக்காக நானும் கடவுளைப் பிரார்த்திப்பேன்." தொடர்ந்து சொன்னார் "தம்பி பிரபாகரனை நான் எனது பிள்ளைகளில் ஒருவனாகத்தான் நினைத்தனான். எங்கள் வீட்டுக்கு வரும் போதெல்லாம் விருந்து கொடுத்துத்தான் வழியனுப்புகிறனான். பிரபாகரனிடம் நான்

அவரை விசாரித்ததாகச் சொல்லுங்கள்." தகவல்: சட்டத்தரணி கனக மனோகரன் - கனேடிய பிரபல 'உதயன்' பத்திரிகையில் எழுதிய அமிர்தலிங்கம் அவர்களின் பவளவிழாக் கட்டுரையிலிருந்து.

'லங்கா காடியன்' மேவின் டி சில்வா

சிறீகாந்தா சொல்கிறார் ஸ்ரீ ராஜீவ் காந்தி சார்பில் 'றோ' என்ற இந்திய உளவுத்துறையின் ஏவுதலின் காரணமாகவே மாத்தையா அமிர்தலிங்கம் அவர்களைக் கொன்றதாக.

அமிர்தலிங்கம் அவர்களை விடுதலைப் புலிகளே கொலை செய்ததாக 1990 ஆம் ஆண்டு மார்ச் 15ந் திகதி 'லங்கா கார்டியன்' பத்திரிகையின் ஆசிரியர் மேவின் டி சில்வாவுக்கு அளித்த பேட்டியின் போது மாத்தையா கூறி உள்ளார். அதாவது 'இந்தியாவின் ஏஜன்டாக இருந்த காரணத்தினாலும், தமிழ் ஈழத்தைக் கைவிட்ட துரோகி என்ற காரணத்தினாலும் அமிர்தலிங்கம் அவர்களைக் கொன்றோம்' என்று மாத்தையா கூறியுள்ளார். மாத்தையா கூறியது தவறானால் ஏன் அதனைத் தலைமைப் பீடம் அப்பொழுது மறுக்கவில்லை?

கணக்குத் தவறுகிறது.

1989 இல் இலங்கையில் தமிழரைப் பொறுத்தவரை மூன்று பிரமுகர்கள் கொலை செய்யப்பட்டதாகச் சிறீகாந்தா சொல்கிறார். இவர்கள் யாவரதும் கொலைக்கு இந்திய 'றோ' உளவுத்துறையே காரணம் என்றும் சொல்கிறார்.

1. யூலை 13 - கூட்டணியைச் சேர்ந்த அமிர்தலிங்கமும் யோகேஸவரனும் - கொழும்பில்.
2. யூலை 16 -'புளட்' இயக்கத் தலைவர் உமா மகேஸ்வரன் - கொழும்பில்
3. செப்டம்பர் 21 - மனித உரிமைப் பேச்சாளர் ரஜனி திரணகம - யாழ்ப்பாணத்தில்

'விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தவும், பிரேமதாசாவைச் சார்ந்தவர்கள் இடையே சந்தேகத்தை ஏற்படுத்தவுமே' 'றோவின்' ஏவுதலால் மாத்தையாவால் அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்டார் என்கிறார் சிறீகாந்தா.



1988இல் உமா மகேஸ்வரன் மாலைதீவின் மீது மேற்கொண்ட படை எடுப்புச் சதிவிடயங்கள் அம்பலத்துக்கு வராமல் இருக்கவே அவரை 'றோ' கொல்வித்தது என்கிறார் சிறீகாந்தா. ஆனால் உமா மகேஸ்வரன் கொலைக்கு உள்வீட்டுப் பிரச்சினையே காரணம் என்பது பிரசித்தமானது. அதனை 'றோவுடன்' சம்பந்தப்படுத்துவது தனது காவிய நாயகனை பழியில் இருந்து பாதுகாக்க அது உதவும் என்பதனாலேயே.

இந்திய அமைதி காக்கும் படையின் அட்டூழியங்கள் வெளிவராமல் இருக்கவே 'முறிந்த பனை' ஆசிரியர்களில் ஒருவரான ரஜனி திரணகமவை 'றோ' கொல்வித்ததாகச் சிறீகாந்தா சொல்கிறார். அந்த விடயம் எமது நோக்கத்துக்கு அப்பாற்பட்டது.

ஆனால் அதே ஆண்டில் - 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ந் திகதி கொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட சபைத்தலைவரும், மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் முக்கிய மூவரில் ஒருவருமான கல்குடாவைச் சேர்ந்த அமரர் எஸ்.சம்பந்தமூர்த்தி அவர்கள் பற்றி எதுவுமே சிறீகாந்தா சொல்லவில்லை. மேலே கூறிய மூவரும் இந்திய 'றோ' உளவுத்துறை ஏவாலால் கொலை செய்யப்பட்டது போல சம்பந்தமூர்த்தி அவர்களும் அவ்வாறே கொலைசெய்யப் பட்டிருக்க வேண்டுமே? அதே காலத்தில் கொலை செய்யப்பட்ட கூட்டணி உள்ளூர்த் தலைவர்கள் முன்னாள் மாவட்டசபை உறுப்பினா அமரர் நடேசு, 'தினகரன்' நிருபர் மயிலிட்டி அமரர் செல்வராசா ஆகியோர் கொலை பற்றி ஸ்ரீகாந்தா எதுவும் பேசவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் என்பதற்காகச் சம்பந்தமூர்த்தி அவர்களை யார் கொலை செய்தார்கள்? அது ஒரு தொடர் கதை. அதன் ஒரு அங்கமே அமிர்தலிங்கம் அவர்கள் கொலையும்.

# அதிகாரம் 61
# கொலை ஒரு தொடர் கதை

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களை - மேல்மட்டத் தலைவர்களை மட்டும் அல்லாமல் உள்ளூர் சின்னத் தலைவர்களையும் - கொல்வது ஆயுதக் குழுக்கள் எழுதும் ஒரு தொடர் கதை என்பது மக்கள் கருத்து. அப்படித் தொடர்ந்து கொல்வதற்கு ஒரு உறுதியான காரணம் வேண்டும். அல்லாவிட்டால் கொல்பவன் மனபலத்தைச் சிதைத்தவனாக இருக்க வேண்டும். அதனைச் சிறீகாந்தா புரிந்து கொள்ளாமல் மாத்தையா பிரிவுதான் 'றோவின்' ஏவலில் அமிர்தலிங்கம் அவர்களைக் கொலை செய்தது என்று கதை சொல்கிறார். அப்படியானால் மாத்தையா பிரிவினர் சிறை வைக்கப்பட்ட பின்னர் - அதாவது 1993 மாச் 31ந் திகதியின் பின்னர் - தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கொலை தொடர்ந்திருக்க முடியாதே? அதன் பின்னர் மொத்தம் 6 தமிழர் விடுதலைக் கூட்டணியினர் - திருகோணமலை பா.உ. திரு.அருணாசலம் தங்கத்துரை, யாழ் மேயர் திருமதி சரேஜினி யோகேஸ்வரன், யாழ் மேயர் திரு.பொன்னுத்துரை சிவபாலன், நியமன பராளுமன்ற உறுப்பினர் திரு.நீலன் திருச்செல்வம் , யாழ் கூட்டணிப் பிரமுகர் திரு.பொன் மதிமுகராசா, மட்டக்களப்பு பா.உ. திரு.நிர்மலன் சௌந்தரநாயகம் - படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரைக் கொல்லும் தொடர் கதையை 1986ல் கிராம சேவகர்களான கிருஸ்ணமூர்த்தி-சண்முகநாதன் இரட்டைக் கொலையோடு ஆரம்பித்தனர். அதன் தொடர்ச்சி 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ந் திகதி மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் நிர்மலன் சௌந்தரநாயகம் கொலை வரை நீண்டு வளர்ந்துள்ளது. நிர்மலன் சௌந்தரநாயகத்தின் கொலை 19வது கொலையாகும்.

ஆரம்பத்தில் எல்லா ஆயுதம் ஏந்திய இயக்கங்களும் தமிழர் விடுதகைக் கூட்டணியை விமர்சித்தே சோத்துப் 'பார்சல்' வாங்கிச் ஜீவித்தன. கூட்டண்ியை விமர்சிப்பதில் இயக்கங்கள் இடையே ஒரு போட்டி மனப்பான்மை இருந்தது. அத்தோடு ஆரம்ப காலக் கட்டத்தில் புதிய கவர்ச்சியான காரியங்களை யார் முதலில் செய்வது என்ற



ஒரு போட்டி மனப்பான்மையும் இயக்கங்கள் மத்தியில் நிலவியது. ஆகவே அதுவரை எவரும் தடம் பதிக்காத தமிழர் விடுதலைக் கூட்டணிக் கொலையை ஆரம்பித்து வைத்து அந்தப் பெருமையைக் கொண்டாடியவர் ரெலோ (தமிழ் ஈழ விடுதலை இயக்கம்) இயக்கத் தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் என்று நாரயன்சுவாமி தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

ஸ்ரீ சபாரத்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.தர்மலிங்கம், எம்.ஆலாலசுந்தரம், கே.இராசலிங்கம், கே.துரைரத்தினம் ஆகியோர்மீது குறிவைத்தார். அந்த நான்கு கூட்டணிப் பிரமுகர்களும் அரசியலில் இருந்து முற்றாக ஒதுங்கி வாழ்ந்தவர்கள்.

இரண்டு ரெலோ இயக்கப் போராளிகள் 1985 செப்டம்பர் 2ந் திகதி இரவு முன்னாள் கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினரான ஆலாலசுந்தரம் அவர்களது கல்வியங்காட்டில் உள்ள வீட்டுக்கு நன்நடத்தைப் பத்திரம் பெறும் சாட்டில் சென்று அவரைப் பலாத்காரமாக இழுத்துச் சென்று தமது வாகனத்தில் ஏற்றினர். பின்னர் சுன்னாகம் சென்றனர். அங்கு உடுவில்-மானிப்பாய் தொகுதிகளின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் அவர்கள் ஒரு கலியாண வீட்டில் நின்றார். "ஆலாலசுந்தரம் ஐயா வாகனத்தில் இருக்கிறார். உங்களை வரட்டுக்குமாம்" என்று கூற அவரும் நம்பி அவர்களுடன் சென்றார். அவரையும் கடத்திச் சென்றனர். இருவரையும் சுட்டுக்கொன்று, தர்மலிங்கம் அவர்களது சடலத்தை தாவடி மயானத்தில் வீசிவிட்டு ஆலாலசுந்தரம் அவர்களது உடலை எடுத்துச் சென்று நல்லூரில் வீசினார்கள்.

வசதியான செல்வந்தக் குடும்பத்தில் 1918 ஆம் ஆண்டில் பிறந்த அமரர் தர்மலிங்கம் அவர்களைப் பற்றி மக்களிடம் மிக மேலான மதிப்பு இருந்தது. 23 வருடங்கள் (1960-1983) பாராளுமன்ற உறுப்பினராக இருந்து தொண்டு செய்தவர். அதன் முன்னர் உடுவில் கிராம சபைத் தலைவராக இருந்தவர். 'அவர் நடந்தால் மிதித்த இடத்துப் புல்லும் சாகாது' என்று சொல்வர். பார்ப்பதற்கும் பேசுவதற்கும் மிக எளிமையானவர். எல்லாவிதமான பிரச்சினைகளைத் தீர்க்கவும் அவரிடம் மக்கள் செல்வர். அவர் தனது துவிச்சக்கர வண்டியில் செல்வதைச் சாதாரணமாகச் சுன்னாகத்தில் தரிசிக்கலாம்.

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக்கொண்ட அமரர் ஆலாலசுந்தரம் அவர்கள் மத்தியதர குடும்பத்தில் பிறந்தவர். இந்திய பட்டதாரியான இவர் ஒரு சட்டத்தரணியுமாகும். பதினைந்து வயதிலேயே தமிழரசுக் கட்சி மேடைகளில் பேசத் தொடங்கியவர். அவர் 1970ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் கிளிநொச்சியில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வீ. ஆனந்தசங்கரி அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டு 657 வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்தவர். கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை அவர்களின் மறைவை யடுத்து கோப்பாயத் தொகுதி வெற்றிடமானது. கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் கோமான் கு.வன்னியசிங்கம் அவர்களது மறைவுக்குப் பின்னர் எம்.பாலசுந்தரம் அவர்களை அத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக ஏற்றிப் பின் இறக்கிய கோப்பாயத் தொகுதியின் 'கிங்மேக்கர்' ஆவரங்கால் சின்னத்துரை அவர்களின் ஆதரவில் 1981 ஆம் ஆண்டு அத்தொகுதியின் நியமனப் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியவர் ஆலாலசுந்தரம். கட்சியின் சுறுசுறுப்பான பேச்சாளராக இருந்தவர். இவர் இறக்கும் தறுவாயில் மிகவும் பணமுடையில் காணப்பட்டார். தனது மகளுக்குத் துவிச்சக்கரவண்டி வாங்கப் பணம் இல்லாமல் தனது மனைவியின் நகையை விற்றவர்.

ரெலோ இயக்கத் தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தின் ஏவுதலினாலேயே இருவரும் கொல்லப்பட்டதாக இந்தியப் பத்திரிகையாளர் நாராயன் சுவாமியும், 'முறிந்த பனை' நூலும் குறிப்பிடுகின்றன. ஸ்ரீசபாரத்தினம் பின்னர் புகையிலைத் தோட்டத்துள் வைத்து விடுதலைப் புலிகளால் கும்பிட்டு மன்றாடிய நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்த இவர்களை ஸ்ரீசபாரத்தினம் ஏன் கொன்றார்? அதற்குச் சிறீகாந்தா 'பிரபாகரன் மான்மியம்' 23ஆம் அத்தியாயத்தில் சொல்லும் காரணம்: "பிரபாகரன் மீது அந்தப்பழி விழுந்து அவருக்கு இழுக்குதேடும்" என்பதற்காவே என்று கூறுகிறார். இந்த விளக்கம் வெறும் ஆதாரமில்லாத கண்துடைப்பு.

இன்னும் மு.ஆலாலசுந்தரம் அவர்கள் கடத்தப்பட்ட அதே இரவு வேளை கடத்தல் காட்சியைப் பார்த்த - கல்வியங்காட்டில் சைவம் கடைக்கு முன்னால் இரும்புப் பட்டறை வைத்திருந்த மனிதர் - அந்த அடாவடித்தனத்தை அடுத்த நாள் முத்திரைச் சந்தையில் சனத்துக்குச் சொன்னார். அதனை அறிந்த 'ரெலோ' இயக்கம் அந்த இரும்புப்பட்டறைச் சொந்தக்காரரைக் கடத்திச் சென்று நெல்லியடியில் தந்திக் கம்பத்தோடு கட்டிச் சுட்டுக் கொன்றனர். சுட்டுக் கொன்றவர் பெண் வேடம் தாங்கி வந்த ஒரு போராளியாகும். (இவர் பின்னர் 1986ஆம் ஆண்டு மார்ச் 11ந் திகதி யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்து மற்றும் நால்வரோடு சேரப் பகை இயக்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவர்.) 'ரெலோ' இயக்கம் அந்த அப்பாவி மனிதனைச் சுட்டுக் கொல்ல - வீதியோரம் பயந்து ஆவென்று பார்த்து நின்ற பேசா மந்தைகளுக்குச் - சொன்ன காரணம் 'அந்த இரும்புப்பட்டறை மனிதர் ஒரு பெண்ணைக் கற்பழித்தார்' என்பதாகும். இதனையையும் திரு.பிரபாகரன்மீது கரி பூசவா ஸ்ரீசபாரத்தினம் செய்தார்?



இன்னும் வி.தர்மலிங்கம், மு.ஆலாலசுந்தரம் அவர்கள் கடத்தப்பட்ட அதே இரவு, வேறு இரு தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கடத்தப்பட்டனர். அதனைப் பற்றிச் சிறீகாந்தா 'பிரபாகரன் மான்மியத்தில்' சொல்லாது சாதுரியமாகத் தவிர்த்துள்ளார்.

அதே இரவு முன்னைநாள் உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினராகிய கே.இராசலிங்கம் அவர்களும், பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினராகிய கே.துரைரத்தினம் அவர்களும் கடத்திச் செல்லப்பட்டார்கள். ஆனால் விடியற் காலையானதும் அவர்கள் இருவருக்கும் கோப்பி கொடுத்து அவரவர் வீட்டில் உயிரோடு இறக்கி விட்டனர். அவர்கள் ஏன் கொலை செய்யப்படவில்லை. 'றோ' அப்படி எதாவது தட்டளையைச் ஸ்ரீசபாரத்தினத்துக்குப் பிறப்பித்ததா?

இயக்கங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேட்டுக் குடியினரை மட்டும் ஒழித்துக்கட்ட விரும்பினர். அதனால்தான் அந்த இருவரையும் - மேட்டுக் குடியினர் அல்லாதபடியால் - உயிரோடு வாழ விட்டனர். மேட்டுக் குடிகளை மட்டும் தெரிந்தெடுத்து 'ரெலோத்' தலைவர் ஸ்ரீசபாரத்தினம் மூலம் அவர்களை ஒழிப்பிக்கும் எண்ணம் 'றோ' வுக்கு வந்திருக்குமா?

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைக் கொல்வது ஒரு தொடர் கதை. 1965 ஆம் ஆண்டு அதனை ஆரம்பித்த 'ரெலோ'

(தமிழ் ஈழ விடுதலை இயக்கம்) ஒதுங்கிக்கொள்ள, அந்தத் தொடர் கதையை 1986 தொடக்கம் தொடர்பவர்கள் விடுதலைப் புலிகளே என்று பேசப்படுகிறது. யாழ் மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதிகாரபீடத்தில் உள்ளவருமான ஒரு தலைவர், மொத்தமாக 19 கூட்டணிப் பிரமுகர்கள் சுதந்திரப் போராளிகளால் கொலை செய்யப்பட்டுள்ளதாகக் கூறுகிறார். 1986 இன் பின்னர் கொலை செய்யப்பட்டவர்களின் பட்டியலை நான் தயாரிக்க உதவிய அவர், கொலையாளிகளைச் சுட்டிக்காட்டிய பொழுதும், தனது பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்று வேண்டிக்கொண்டார்

ஆயுதம் ஏந்தியவர்களால் கொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள்:

1. வி.தர்மலிங்கம் பா.உ. உடுவில்-மானிப்பாய் 02.09.85

2 மு.ஆலாலசுந்தரம் பா.உ. கோப்பாய் 02.09.85

3. எஸ்.கிருஷ்ணமூர்த்தி யூன் 1986

இளைஞர் பேரவையைச் சேர்ந்த இவர் சொந்த ஊர் ஏழாலை கிராம சேவகரான இவரை நீர்வேலி வாழைத் தோட்டத்துள்வைத்துச் சுட்டுக் கொன்றனர்.

4. எஸ்.சண்முகநாதன் யூன் 1986

இளைஞர் பேரவை உறுப்பினர். கட்டுவனைச் சேர்ந்த இவர் ஒரு கிராம சேவகர். இவரை நீர்வேலி வாழைத்தோட்டத்துள் வைத்துச் சுட்டுக் கொன்றனர்.

5. செனேட்டர் எஸ். நடராசா 22-02-1987

யாழ் மாவட்டசபைத் தலைவர். இவர் இலங்கையில் மூதவை இருந்த காலத்தில் அதில் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினராக இருந்தவர். அதனால் செனேற்றர் நடராசா என்றும் சொல்வர். இவர் ஒரு சட்டத்தரணி. கட்சியின் ஆரம்பகால வளர்ச்சியில் பங்கு கொண்டவர்.

6. வேல்முருகு மாஸ்டர் 20.03.88

கல்முனை கூட்டணிக் கிளைத் தலைவர். மட்டகளப்பில்



6. வேல்முருகு மாஸ்டர் 20.03.88

கல்முனை கூட்டணிக் கிளைத் தலைவர். மட்டகளப்பில் தமிழரசுக் கட்சி காலம் தொடக்கம் செல்வாக்கு மிக்க தலைவராக விளங்கியவர். மட்டக்களப்பு முதல் மூன்று தலைவர்களில் இவரும் ஒருவர்.

7. டாக்ர் அன்ரன் வாஸ் 16-11-1988

மூதூர் கூட்டணித் தலைவர். இவரது தந்தையார் றோச் டி வாஸ் தமிழரசுக் கட்சியை மூதூர்-கிளிவெட்டிப் பிரதேசத்தில் வேரூன்றச் செய்த பிரமுகராகும்.

8. எஸ்.சம்பந்தமூர்த்தி 07.03.89.

மாவட்ட சபைத்தலைவர், மட்டக்களப்பு. கற்குடாத் தொகுதியில் பாராளுமன்ற தேர்தலில் இருமுறைகள் போட்டியிட்டு மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தவர். மட்டக்களப்பு முதல் மூன்று தலைவர்களில் ஒருவர்.

9. அ.அமிர்தலிங்கம் 13.07.89

பாராளுமனன்ற உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர், சட்டத்தரணி. கலைப் பட்டதாரியான இவர் மத்தியதர குடும்பத்தைச் சேர்ந்தவர்.

10. வி.யோகேஸ்வரன் பா.உ. 13.07.89

இவர் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். இங்கிலாந்தில் தனது உயர்கல்வியைப் பெற்றவர். சட்டத்தரணியாகும்.

11. அராலி நடேசு 20-01-1990

கொழும்பு தமிழர் விடுதலைக் கூட்ணிக் காரியாலயத்துக்குச் சென்று திரும்பி வந்ததும் யாழ்ப்பாணத்தில் வைத்துச் சுடப்பட்டவர். அராலியைச் சேர்ந்த இவர் யாழ் மாவட்டசபை உறுப்பினர்.

12. மயிலிட்டி செல்வராசா 20-01-1990

மயிலிட்டியைச் சேர்ந்தவர். கொழும்பு தமிழர் விடுதலைக் கூட்ணிக் காரியாலயத்துக்குச் சென்று திரும்பி வந்த வேளை யாழ்ப்பாணத்தில் பஸ் வண்டியில் வைத்துக் கடத்திச் சென்று சுடப்பட்டார். இவர் தினகரன் பத்திரிகையின் நிருபராகக் கடமை யாற்றிவர்.

13. திருமதி கலா தம்பிமுத்து 07.05.90

கலா மாணிக்கம் தமிழ் அரசுக்கட்சிக் காலம் தொடக்கம் அதன் பிரசாரப் பீரங்கியாக இருந்தவர்.

14. அ. தங்கத்துரை 05.07.97

திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர். கிளிவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்டவர். அரசினர் எழுதுவினைஞர் சேவையில் இருந்து தமிழ் அரசுக் கட்சிக்கு வந்து முதலில் மூதூர்ப் பாராளுமன்ற உறுப்பினராகவும், பின்னர் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

15. திருமதி சரோஜினி யோகேஸ்வரன் 17.05.98

யாழ்ப்பாண மேயர். விடுதலைப் புலிகளால் 1989இல் கொலை செய்யப்பட்ட வி.யோகேஸ்வரன் அவர்களின் மனைவியாகும். பாதுகாப்பு தனக்குத் தேவை இல்லை என்று சொல்லி நல்லூரில் தனித்து வாழ்ந்தவர். இவரே யாழ்ப்பாண மாநகர சபையின் மேயராகிய முதற் பெண்மணியாகும்.

16. பொன்னுத்துரை சிவபாலன் 11.09.98

யாழ்ப்பாண மேயர். இவர் ஒரு சட்டத்தரணி. பேச்சாற்றல் மிக்க கட்சியின் துடிப்பான இளைஞர். கொலைக்குப் பயந்து இளைஞர்கள் கட்சியில் சேரப் பயந்து நின்றவேளை அதில் இணைந்து தீவிர அரசியலில் ஈடுபட்டவர்.



உலகமெல்லாம் பிரபல்யமான அரசியல் யாப்பு வல்லுனர். மரணச் செய்தி கேட்டு அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனும் பாரியாரும் தனித்தனியே விசேட அநுதாபம் தெரிவித்திருந்தார்கள். அமெரிக்க ஹாவாட் பல்கலைக் கழகத்தின் 'விசிற்றிங்' அரசியல் துறைப் பேராசிரியர். இவர் 1994இல் தயாரித்த அரசியல் திட்டம் பொருத்தமானதாக இருப்பதாக அன்ரன் பாலசிங்கம் கூறியதாக யாழ் உதயன் செய்தி வெளியிட்டுள்ளது.

18. பொன் மதிமுகராசா 24.12.1998

நல்ல பேச்சாளர். தமிழ் அரசுக் கடசிக் காலம் தொடக்கம் கட்சியின் கொள்கையைப் பரப்புவதில் பெரும் பங்கு கொண்டவர். இளைஞர் பேரவை உறுப்பினர். சுடப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண கூட்டணி அலுவலகத்தின் பொறுப்பாளராக இருந்தவர்.

19. நிர்மலன் சௌந்தரநாயகம் 08.11.2000

மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர். 2000 தேர்தலில் மட்டக்களப்பில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற துடிப்பான இளைஞர். இவர் கட்சிக்குப் புதிய வருகை.

அமிர்தலிங்கம் அவர்களது கொலையை 'றோ' செய்வித்ததாகச் சொல்லும் சிறீகாந்தா மேலே தரப்பட்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களை 1988 - 2000 வரை யார் கொன்றார்கள் ஏன் கொன்றார்கள் என்பதை ஆராய்ந்திருந்தால் அவர் உண்மையை உணர்ந்திருக்க முடியும்.

சிறீகாந்தாவின் கருத்தைச் சுருக்கமாகச் சொன்னால்:

'பொல் பொற்றின் ஹெமர் றோக் (Pol Pot's Khmer Rouge) இயக்கம் போலப் புலிகள் தலைவர் என்ன கிட்டத்தட்ட 27 இலட்சம் பொது மக்களையா கொன்று போட்டார்? வெறும் 2,300 பொதுமக்களை (தொகையைக் குறைத்துக்காட்டுகிறார்) மட்டுமே கொன்றுள்ளார்' என்று சிறீகாந்தா தனது இணையத் தளத்தில் பிரசாரிக்கிறார்.

எப்படி இருக்கிறது சிறீ காந்தாவின் போதனை? 2300 அப்பாவிப் பொது மக்களின் உயிர் ஒரு சின்னத் தொகைதானே என்று பேசுகிறார்.

இந்த நூல் - பத்து லட்சம் அல்ல, 2,300 அல்ல ஒரு 'சிவிலியன்' உயிரைப் பற்றித்தான் பேசுகிறது. ஏன் அமிர்தலிங்கம் அவர்களைக் கொன்றார்கள்?

'The Will of Freedom' என்ற நூலை எழுதிய அவுஸ்திரேலியாவில் பிறந்த திருமதி அடேல் பாலசிங்கம் அம்மையார் விடுதலைப் புலிகளின் பாசறையைச் சேர்ந்தவர். தனது நூலில் தான் இலங்கையில் சென்றவிடமெல்லாம் கண்டு கேட்ட அரசியற் சம்பவங்களை மிக அழகாக நுணுக்கமாக விபரித்துள்ளார். அவர் அறிஞர் அமிர்தலிங்கம் அவர்கள் கொலை செய்யப்பட்ட சமயம் அரசாங்க செலவில் கொழும்பில் ஹில்ரன் ஹோட்டலில் தங்கி இருந்தார். வரலாற்றுப் பொக்கிசமான தனது நூலில் நாற்பது ஆண்டுகள் தமிழ் மக்களின் தலைமகனாக இருந்த அமிர்தலிங்கம் அவர்கள் கொலை பற்றி எதுவும் குறிப்பிடாமல் மௌனம் சாதிக்கிறார்? அடேல் அம்மையார் புலிகள் சார்பாக நியாயம் சொல்லவும் இல்லை மறுக்கவும் இல்லை. அக்கொலை பற்றிக் குறிப்பிடவும் இல்லை. தனது கருத்தை எடுத்துச் சொல்லச் சாதகம் இல்லாதவற்றைத் தவிர்த்துள்ளார். அது அவரது கனதியான நூலின் இழைகளை அறுக்கிறது. அவரது மௌனம் சொல்லும் கதை என்ன?

தமிழ்ச் சமுதாயம் அமிர்தலிங்கம் அவர்களது இழப்பை மறக்க முடியாது நின்று வதைக்கும் ஆழ்ந்த மனவேதனையோடு சுமக்கிறது. அத்தோடு இன்னும் எத்தனையோ புத்திஜீவிகளை இழந்து அல்லல்பட்டு அழுது புலம்புகிறது. விடுதலைப் பாதையிலே அர்த்தமற்ற சகொதரர் உயிர்ப்பறிப்புக்கள் பல நூறுகள் நடந்துள்ளன. தனிமனித உணர்வுகள் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி உயர்த்தி வாழ வைத்த வரலாறுகள் பலவுண்டு. வேறு சில சந்தர்ப்பங்களில் தனிமனித உணர்வுகள் அவனது சமுதாயத்தை மட்டுமல்லாது பிற சமுதாயங்களையும் மிருக வெறியில் அழித்து இரத்த சாகரத்தில் வெறியாடிய வரலாறும் சென்ற நூற்றாண்டில் நிகழ்ந்துள்ளது. மனிதனுக்குப் பாடசாலையில் வைத்தே சரித்திரம் போதிக்கப்படுகிறது. அக்கிரமங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று போதிக்கப்படுகிறது. சமயம் வேறு போதிக்கப்படுகிறது. மனித உயிரின் மகத்துவம்பற்றிச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவன் அதனால் எதுவித



நன்மையும் பெறவில்லை என்பதையே உலக அரங்கில் நடக்கும் கொடிய மனித நேயமற்ற சம்பவங்கள் கூறுகின்றன. மூலவளம் உள்ளவன், படைபலம் உள்ளவன், அண்ணன் தம்பி உள்ளவன் அடாத்துப் பண்ணிச் சகோதர உயிர்களின் இரத்ததில் வெற்றிக் கொடி பறக்கவிட்டுப் பெரிய மனிதனாக ஆட்டம் போடுகிறான். இத்தனைக்கும் அப்பாவிச் சமுதாயம், பயந்த சமுதாயம் அடியையும் உதையையும் வாங்கிக்கொண்டு பணிந்து போகிறது. இன்று அடாவடித்தனம் மிக்கவன்தான் பெரிய மனிதன். அரசாங்கங்களோ தலைவர்களோ சண்டியர்களாக மாறக்கூடாது. உண்மையான தலைவர்களானால் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும். அவர்களைத் துன்பங்களிலிருந்து பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கு நாலு ஆறுதல்வார்த்தைகள் சொல்லவேண்டும். அதைவிடுத்துச் சமுதாயத்தின் நம்பிக்கைச் சொத்தான அப்பாவித் தலைவர்களைக் கொன்றுவிட்டு வீரவரலாறு எழுதுவதைச் சரித்திரம் ஏற்காது. சரித்திரம் பேசத் தொடங்குகின்ற சமயம் அவையெல்லாம் நாற்றமடிக்கத் தொடங்கும்.

அப்படியொரு நாற்றமடிக்கின்ற சரித்திரத்தைத்தான் முன்னாள் புலிகளின் வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளன் விசு என்ற இராசையா அரவிந்தராசா, அமிர்தலிங்கம் அவர்களைக் கோழைத்தனமாகச் சுட்டுக்கொன்று பதிவு செய்து வைத்திருக்கிறான். விருந்து உண்டபின் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் நிராயுத பாணியைச் சுட்டதை ஈழத் தமிழன் வரலாறு கவலையுடன் சுமக்கும். அமிர்தலிங்கம் அவர்கள் காற்சட்டைப் பையில் இருந்து விசு துப்பாக்கியை எடுப்பதைக் கண்டிருந்தாற்கூட அவர் பாய்ந்து எதிர்த்துப் போராடியிருப்பார். அவ்வளவுக்குத் துணிச்சலான வரலாறு அவருக்கு உண்டு. அவர் சிங்கத்தின் குகையில் புகுந்து நின்று குதறியவர். விசு துப்பாக்கியை நீட்டியதும் அவர் போராட எழுந்தார் என்ற பதிவுகள் உள்ளன. அதுதான் அவரின் குணவியல்பு. விசு அவரைக் கோழைத்தனமாகக் கொன்றதால் தமிழனின் வீரவரலாற்றுக்கே கறை விழுந்துள்ளது.

சிறீகாந்தா சொல்வது போல மாத்தையா கோஷ்டிதான் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களைக் கொலை செய்ததென்றால் நிட்சயமாக

விசு கொண்டு வந்த வீண் பழியைத் தவிர்க்க, 1994இல் மாத்தையாவுக்கு புலிகள் மரண தண்டனை விதித்த பொழுது அதனையும் ஒரு காரணமாகக் காட்டி இருக்கவேண்டுமே? அப்படி எதுவும் நடக்கவில்லையே.

# அதிகாரம் 62
# இறுதி அஞ்சலி

கொலை நடந்த 1989 யூலை 13ந் திகதி இரவு பிபிசி வானொலி கேட்டுக்கொண்டிருந்தேன். இடையில் 'ஒரு முக்கிய செய்தி. பொறுத்திருங்கள்' என்று சொன்னார்கள். "என்ன செய்தியாய் இருக்கும்?" என்று நீண்ட நேரம் யோசிக்கவிடவில்லை. அமிர்தலிங்கம் அவர்களின் கொலை வானொலியில் சொல்லப்பட்டது. கொலைஞர்கள் மூவரும் சுடப்பட்ட செய்தியும் சொல்லப்பட்டது. நான் கல்லாய்ச் சமைந்தேன். மணித்தியாலக் கணக்காக இருக்கையைவிட்டு எழும்ப முடியவில்லை. வீதியில் இறங்கி கவலையைப் பகிரவும் முடியவில்லை. இரவு வேளை. இந்திய அமைதி காக்கும் படையின் கண்ணில் பட்டால் உயிரை எடுத்துவிடுவார்கள். அப்படி ஒரு இருள் சூழ்ந்த யாழ்ப்பாண இரவு.

அடுத்த நாட் காலை ஒரு குடையைக் கிழித்துப் பெற்ற கறுப்புத் துணியை எனது கேற்றில் பறக்கவிட்டிருந்தேன். தூண் ஓரம் சிறிய ஒரு மேசையில் அமிர்தலிங்கம் அவர்களது படத்தை வைத்து மலர்மாலை சாத்தி இருந்தேன். அதைப் பார்ப்பதற்காகவே சிலர் சற்றுத் தொலைவில் இருந்தும் வந்து கடைக்கண்ணால் பார்த்துவிட்டுச் சென்றனர். எனது நெருங்கிய உறவினர் "வீண் பிரச்சினை வரும். கொடியை அவிழுங்கள், படத்தை எடுங்கள்" என்றார். அயலவர்கள்தான் அவரை அனுப்பி இருந்தார்கள். நான் எதுவும் செய்யவில்லை. இரவு எவராவது கொடியை அறுத்து வீசுவார்கள், படத்தைத் தூக்கிச் செல்வார்கள் என்று எதிர் பார்த்தேன். காலையில் பார்த்த பொழுது ஆச்சரியமாக இருந்தது. கனகாம்பரப் பூமாலை ஒன்று புதிதாக அண்ணலின் படத்துக்குப் போடப்பட்டிருந்தது. எல்லோருக்கும் கறுப்புக் கொடி பறக்கவிட விருப்பம். ஆனால் பயத்தில் முன்வரவில்லை.



அப்படியான ஒரு பயப்பிராந்தியத்துள் யாழ்ப்பாணச் சனம் வாழ்ந்த, பகலிலும் மக்கள் நடமாட்டம் அருகிய காலமே, அவரது இறுதி அஞ்சலி யாழ்ப்பாணத்தில் நடந்தது.

அப்பொழுது வடகிழக்கு முழுவதும் இந்திய அமைதி காக்கும் படை முகாமிட்டு இருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எ.'.ப். கட்சியின் அட்டகாச ஆட்சி நடந்த காலம் அது. விடுதலைப் புலிகள் சிவில் உடைகளில் எங்கள் வீட்டுக்கு முன்பக்கத்தாலும் பின் பக்கத்தாலும் எப்போதாவது ஒரு தடவை இருவராய் மூவராய் ஒன்றில் வடக்குப் பக்கமாக அல்லது தெற்குப் பக்கமாக நகர்வதைப் பார்த்திருக்கிறேன். சில தடவைகளில் வேலி ஓரம் வந்து 'இந்தப் பக்கம் நிற்கிறார்களா?' என்று விசாரிப்பார்கள். இந்திய அமைதி காக்கும் படையைத்தான். அவ்வாறு ஊருக்குள் இடைக்கிடை பகல் வேளைகளிலேயே காணப்பட்ட புலிகளுக்குப் பயந்தே படத்தை அகற்றிக் கொடியை அவிழ்க்கச் சொன்னார்கள்.

கொலை கேட்டு யாழ்ப்பாணம் முழுவதும் சோகம் முட்டிய மௌனம். வெளியே மெல்ல விசாரிப்பதோடு சரி. பயம். விடுதலைப் புலிகள் ஏதாவது செய்துவிடுவார்கள் என்று. ஏனைய இயக்கங்களும் ஏதும் செய்வார்களோ என்ற அச்சம். அப்படி எதுவும் நடக்கவில்லை. அமிர்தலிங்கம் அவர்களது கொலையை அடுத்து ஈ.பி.ஆர்.எல்.எ.'.ப். இயக்கம் தவிர மற்ற எல்லா இக்கங்களும் மௌனம் சாதித்தன. அவர் மறைந்ததைப் பற்றி அலட்டிக்கொள்ளவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எ.'.ப். இயக்கமும் பெரிதாக தலைவர் மறைவின் தாக்கத்தை வெளிப்படுத்தவில்லை.

யாழ்ப்பாணத்தில் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்ட மக்கள் வெள்ளமும் - மற்றும் இலங்கை இந்திய தலைவர்கள் உரைகளும் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் பெருமைகளையும் தன்னிகரில்லாச் சிறப்புக்களையும் உலகிற்கு எடுத்துக் காட்டின. அவருடைய இறுதி அஞ்சலியின் ஐந்து மையங்களிலும் மக்கள் வெள்ளத்தின் சோக அலை கரை புரண்டது.

கொழும்பு திருகோணமலை மட்டக்களப்பு மூளாய் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து இடங்களில் இறுதி மரியாதை வைபவங்கள் நடந்தன.

யோகேஸ்வரனது மறைவு விபத்து என்றே முன்னர் குறிப்பிட்டிருந்தேன். அப்படி இருக்கவும் மூளாயைத் தவிர்ந்த நான்கு மையங்களிலும் அமிர்தலிங்கம் அவர்களது பூதவுடலருகே யோகேஸ்வரனது பூதவுடலும் வைக்கப்பட்டே இறுதி மரியாதை நடந்தது.

அமிர்தலிங்கம் அவர்கள் இறந்து ஒரு மணிநேரம் முடிய முன்னரே அம்பாறையில் ஒரு பௌத்த சமயக் கூட்டத்தில் அவரது மறைவுக்கு இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அச்சமயம் மேன்மைதங்கிய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தார். அவருக்கு அமிர்தலிங்கம் அவர்களது துன்பவியல் நிகழ்வு அறிவிக்கப்பட்டதும் அவர் வன்முறையைக் கண்டித்துப் பேசி சபையோரை இரண்டு நிமிட நேரம் மௌனம் அனுட்டித்து பிரார்த்தனை செய்யும்படி வேண்டிக்கொண்டார்.

பின்னர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அம்பாறையில் இடம்நகர் சேவையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சமயமும் அமிர்தலிங்கம் அவர்கள் மறைவு பற்றிக் குறிப்பிட்டார். "நான் இந்தச் சந்தர்ப்பத்தை ஒரு மாபெருந் தலைவருக்கு விசேட மரியாதை செய்யப் பயன்படுத்த விரும்புகிறேன். அரசியல் பிச்சினைகளானாலும் சரி தனிப்பட்ட பிச்சினைகளானாலும் சரி அவற்றைத் தீர்க்கக் கொலைகள் உதவா. அதன் காரணமாகவே நாட்டில் சமாதானம் ஏற்படுத்த நாம் அஹிம்சையே பொருத்தமானது என்று சொல்கிறோம். அந்த மாமனிதரின் அருங்குணங்களை நான் அறிவேன். தமிழர்கள் கொடுத்து வைக்காதவர்கள்." இதற் கெல்லாம் அமிர்தலிங்கம் அவர்களுடன் பிரேமதாசாவுக்கு இருந்த நட்பு அல்லக் காரணம். மரணத்தின் பின்னர் பகைமைகள் நிலைப்பதில்லை. அவை மரணித்து விடுகின்றன. அது மனிதனின் அரிய சீரிய பண்பு.

## கொழும்பு அரசில்வாதிகளின் எதிரொலி

இலங்கையில் உள்ள பிரதான அரசியல் கட்சிகள் மட்டுமின்றிச் சிறிய அரசியல் கட்சிகளும் பொதுச் சங்கங்களும் தனியார் நிறுவனங்களும் அமிர்தலிங்கம் அவர்களின் கொலையைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டன. சிறீலங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, ஈழம் மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, சிறீலங்கா மகாஜன கட்சி, இலங்கைத் தொழிலாளர்



காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், எக்சத் லங்கா ஜனதா கட்சி, லிபரல் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் முதலிய அரசியல் கட்சிகள் இரங்கல் செய்தி வெளியிட்டதோடு, கொலைஞர்களை வன்மையாகக் கண்டித்தும் செய்திகள் வெளியிட்டன.

அப்பொழுது சிறீமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தார். அந்த அம்மையார் பிரதமராக இருந்த காலத்தில் அமரர் அமிர்தலிங்கம் அவர்களை மூன்று தடவைகள் சிறைக்கு அனுப்பினவர். அவர் ஐக்கிய சோசலிசக் கூட்டணியினரை பாராளுமன்றத்தில் தனது அலுவலகத்துக்கு அழைத்து ஒரு அறிக்கை வெளியிட்டார்: அதாவது,

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சிவசிதம்பரம் ஆகியோர் மீது மேற்கொண்ட கோழைத்தனமான அரக்க செயலைக் கண்டிப்பதாகவும், கொலைஞர்களின் கொடுஞ் செயலால் ஏற்பட்ட அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் ஆகியோரது மறைவு தங்களை அதிர்ச்சிலும் கவலையிலும் ஆழ்த்தி உள்ளதாகவும் ஒரு நீண்ட அறிக்கையை எதிர்க் கட்சியினரை ஒன்றிணைத்து வெளியிட்டு இருந்தார்.

அத்தோடு "எச்சூழ் நிலையில் அந்த கொலைச் செயல் நடந்தது என்று ஒரு பாரபட்சமற்ற விசாரணை நடத்தவேண்டும். அரச கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்கள் ஊகத்தில் செய்திகள் வெளியிடுகின்றன. அந்த ஊகச் செய்திகள் கொலை பற்றிய ஒரு பொருத்தமான விசாரணையை நடத்தக் குந்தகம் விளைவிக்கும் என்றும் கடுமையாக எச்சரிக்கின்றோம். (தொடர்ந்து .....) அண்மைக் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் சில தமிழ் ஆயுதக் குழுக்கள் அரசியல் சமூக மாற்றங்களுக்காக வன்முறையைப் பயன்படுத்துவதை பகிரங்கமாகக் கண்டித்து வந்துள்ளார். அவர் பல்லின பல்கலாச்சார இலங்கை மக்கள் தங்களுடைய உள்நாட்டுப் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் விரைவாகச் சமாதானமாகத் தீர்த்து ஐக்கியமாக வாழ வேண்டும் என்று சொல்லி வந்துள்ளார். தேசம் அபாயமான கட்டத்தில் இருக்கும் இவ்வேளை அமிர்தலிங்கம் அவர்கள் போன்ற பெறுதற்கரிய தகமை உடைய ஒருவரின் மறைவு நாட்டுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்." இந்த நீண்ட ஐக்கிய சோசலிச கூட்டணி

அறிக்கையில் எதிர்க்கடசித் தலைவி சிறீமாவோ பண்டாரநாயக்கா, அத்தாவுட செனிவரத்தின, தினேஸ் குணவர்தன, யோகசங்கரி ஆகியோர் கையெழுத்திட் டிருந்தனர்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அப்துல் அசீஸ் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்:

"திருவாளர்கள் அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் ஆகிய இருவரையும் கொன்றதோடு திருவாளர் சிவசிதம்பரம் அவர்களைச் சுட்டுக் காயப்படுத்திய எவரென்றாலும் அவர்கள் படுமோசமான கொலைக் குற்றம் புரிந்துள்ளார்கள். அவர்கள் தமிழ்ச் சமூகத்துக்கு எதிராக மட்டும் செயல்படவில்லை தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைக்கு எதிராகவும் செயல்பட்டிருக்கிறார்கள். அத்தோடு இந்த நாட்டின் நடுநிலை அரசிலுக்கும் பாரிய அடிபோட்டிருக்கிறார்கள்.

தான் தழுவிக்கொண்ட கொள்கைகளில் அமிர்தலிங்கம் அவர்கள் கொண்ட பக்தி பூர்வமான ஈடுபாடும், அதற்காக அவர் புரிந்த தியாகமும் மகத்தானது. அவர் கொள்கைக்காகத் தனது எதிர்க் கட்சித் தலைவர் பதவியை தூக்கி வீசினார். அத்தோடு தனதும் தன்னுடைய சகாக்களதும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளையும் துறந்தார். தன்னுடைய கொள்கைக்காவே இத்தனை தியாகங்களை எல்லாம் செய்தார்.

அவருடைய பெருமை எல்லாம் அவர் ஈழத் தமிழர் உரிமைப் போராட்ட வரலாற்றிலே தீர்க்கதரிசனமாக வன்முறையை ஏற்காமல் அஹிம்சை வழியைப் பின்பற்றியதுதான். மக்களைப் பலிகொடுத்து அரசியல் இலாபந்தேட முனையவில்லை. ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் பேச்சுவார்த்தை மூலமே சமாதானத்தை அடையவேண்டும் என்று கூறினார்." - அசீஸ்.

சிறீலங்கா எக்சத் பெரமுன தனித்து வெளியிட்ட ஒரு இரங்கல் அறிக்கையில் " .... திருவாளர் அமிர்தலிங்கம் அவர்கள் இலங்கையின் ஒரு மூத்த அரசியல்வாதி. ஒரு காலம் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த அவர் பாராளுமன்றத்துக்கு உள்ளும் புறமும் ஜனநாயக உரிமைகளுக்காகவும் மனித உரிமைகளுக்காவும் உழைத்த பெருமகன்" என்று குறிப்பிட்டிருந்தது.



உரிமைகளுக்காகவும் மனித உரிமைகளுக்காவும் உழைத்த பெருமகன்" என்று குறிப்பிட்டிருந்தது.

"........ இருவரும் பச்சை இரத்தம் சீறிப்பாயக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் விருந்துக்கு வந்தவர்கள். அரசியல் பேச விருந்தாளிகளாக வந்தவர்கள் - விருந்துக்கு அழைத்தவர்களைச் சுட்டுக் கொன்றுள்ளார்கள். அவ்வகையான பழி சுமந்த கொலைகள் மூலம் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது" - இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டைமான் கண்டனம் தெரிவித்திருந்தார்.

தொடர்ந்து சில நாட்கள் ஆங்கில சிங்கள தமிழ் பத்திரிகைகள் யாவும் அவரது கொலைக்கு அனுதாபம் தெரிவிக்கும் செய்திகளையும் கண்டன அறிக்கைகளையும் வெளியிட்டன. இலங்கை அரசியல்வானை கருமேகங்கள் மூடிநின்றன. வேதனையும் சோகமும் கலந்த நாட்கள் அவை.

இந்திய அரசாங்கம், இலங்கைக்கான கனடிய அரச தூதுவர், இலங்கைக்கான பிரித்தானிய ஹைகொம்மிசனர், இலங்கைக்கான இந்திய ஹைகொம்மிசனர் ஆகியோரும் கொலையைக் கண்டித்ததோடு அவருடைய மறைவுக்கு அனுதாபமும் தெரிவித்தார்கள்.

கொழும்பில் பொறளையில் உள்ள பௌத்தலோக மாவத்தையில் அமிர்தலிங்கம் அவர்கள் வசித்த இல்லத்தில் பூதவுடல் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டிருந்தது. அவரது கட்சியினர் ஆதரவாளர்கள் மட்டுமின்றிப் பாராளுமன்றத்தில் அவரை வாழ்நாள் முழுவதும் பகைத்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் தலைவர்களும்கூடக் கலந்து அஞ்சலி செலுத்தினர்.

## திருகோணமலையில் குமுறல்

மறைந்த தலைவர்கள் இருவரதும் பூதவுடல்கள் அவர்கள் வாழ்ந்த பௌத்தலோக மாவத்தை இல்லத்தில் இருந்து 15ந் திகதி திருகோணமலைக்கு விமானப் படை விமானம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன. பூதவுடல் பேழைகள் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கொடியால் மூடப்பட்டிருந்தன.

திருகோணமலையை அடைந்த பூதவுடல்கள் விமான நிலையத்தில் இருந்து அலங்கரிக்கப்பட்ட பூதவுடல் வண்டிகளில்

திருகோணமலை நகர மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள். 'அங்கு கடமையாற்றிய இந்திய ஜவான்கள் மிதமிஞ்சிய சன வெள்ளத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் சிரமப்பட்டனர்.

தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் மறைந்த சமயம் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அம்பாறையில் நின்றார். அவர் கொழும்பில் இல்லாதபடியால் அங்கு வைத்து அமிர்தலிங்கம் அவர்களின் பூதவுடலுக்கு மரியாதை செய்ய வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவரின் பூதவுடல் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இறுதி மரியாதை செலுத்த அம்பாறையில் இருந்து நேரே திருகோணமலைக்கு விமானத்தில் சென்றார். அவர் அங்கு சென்று பூதவுடலுக்கு மரியாதை செய்வதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. பெரும் எதிர்ப்புக் காட்டினார்கள். (இன்னோரிடத்தில் இது விடயம் நோக்கப்படுகிறது) இருப்பினும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இராணுவ உதவியோடு தனது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்.

### மட்டக்களப்பில் பெருஞ்சோகம்

திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பிற்கு பூதவுடல்கள் கொண்டு செல்லப்பட்டன. அங்கு பூதவுடல்கள் அடைந்ததும் விமானப்படையினர் அணிவகுப்பு மரியாதை செய்தனர். மட்டக்களப்பு நகர மண்டபத்தில் பூதவுடல்கள் வைக்கப்பட்டன. பூதவுடல்களுக்கு மக்கள் அஞ்சலி செய்வதற்கு வாய்ப்பாக இரவு ஊரடங்குச் சட்டத்தை இந்திய இராணுவம் தளர்த்தி இருந்தது. அன்றிரவு முழுக்க ஆயிரக்கணக்கில் மக்கள் சென்று இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். அங்கு கண்ட காட்சியை ஒரு இந்திய இராணுவ உயர் அதிகாரி இவ்வாறு வர்ணித்தார்: "என்னுடைய வாழ்க்கையில் இப்படி ஒரு மனதை நெகிழ வைக்கும் சோகக் காட்சியைப் பார்த்ததில்லை. வந்தவர்கள் யாவரும் சோகத்தில் உணர்ச்சிவசப்பட்டி ருந்தார்கள். பெண்கள் ஓவென்று கதறி அழுதனர். ஆண்கள் கவலையில் விம்மினார்கள். அது மனதை உருக்கும் சோகச் சமுத்திரக் காட்சியாக விருந்தது."



### மூளாயில் கண்ணீர் அஞ்சலி

பூதவுடல் திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு வரப்படுவதாகச் செய்திகள் தெரிவித்தன. மக்கள் மத்தியில் ஏக்கம் கலந்த பயம். பூதவுடலைப் பார்க்கப் போனால் இன்னலுக்குள் சிக்க நேரிடுமோ என்ற அச்சம். இந்திய ஜவான்களின் மனநிலை தெளிவாக வெளியே தெரியவில்லை. இயக்கங்கள் என்ன பண்ணுமோ என்ற பயம் ஒரு புறம். ஏனெனில் சகல இயக்கங்களும் அவரை விமர்சித்தே களம் இறங்கியவை. பயமும் சோகமும் முட்டிய நாள். நான் எனது மோட்டார் பைசிக்கிலை எடுத்துக்கொண்டு காலையில் மூளாய் நோக்கிப் புறப்பட்டேன். பாதையில் வீதிகள் வெறிச்சோடி இருந்தன. இடையிடையே சென்றியில் நின்ற இந்திய ஜவான்கள் பார்வையை என்னால் தாங்க முடியவில்லை. பயம் மெதுவாகத் தலைகாட்டும். பிறகு தணியும். நீண்ட நேரம் வரை வீதியில் ஒரு கறுப்புக் கொடியைக் கூடக்காண முடியவில்லை. பாதையில் ஓரிடத்தில் தலைவர் மறைவுக்கு பதாதை அமைக்கப் பட்டிருந்தது. என் மனதில் அறியமுடியாத ஆனந்தத் துள்ளல். அங்கு சிலர் நின்றார்கள். 'ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தவர்கள் போலிருக்கிறது' என்று எண்ணிக்கொண்டேன். மனதில் சிறிது தென்பு ஏற்பட்டது. நான் மூளாயை அடைந்த பொழுது எனக்கு ஏமாற்றமே காத்திருந்தது. அண்ணலின் வீட்டுக்கு எதிரே வீதியில் ஒரு சிலர் மட்டுமே நின்றனர். 'எவ்வளவு விரைவாக நன்றி கொன்றவர்களாக சமூகம் மாறுகிறது' என்று மனம் அழுதது. சில மணி நேரத்தின் பின்னர்தான் எனது கணிப்புப் பிழை என்பதை உணர்ந்தேன்.

இரவுவேளை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த, பஸ்வண்டிப் போக்குவரத்துச் சேவை இல்லாத நாட்கள். நேரம் செல்ல செல்ல கார்கள் துவிச்சக்கர வண்டிகளில் சிறிது சிறிதாக மக்கள் வரத்தொடங்கினர். சிலர் நடந்து வந்தார்கள். பயத்தில் ஒதுங்கி இருந்த மக்கள் ஒருவரைப் பார்த்து மற்றவர் வரத்தொடங்கி வளவும் வீதியும் முட்டிய சனம். பூதவுடல் ஹெலிகொப்டரில் வந்து சேர கிட்டத்தட்ட நண்பகலாகிவிட்டது. வந்ததும் சனம் அவரது பூதவுடலுக்கு மரியாதை செலுத்த முண்டியடித்தது. ஓவென்ற அழுகுரல்கள் பூதவுடல் வைத்த அறைக்குள் இருந்து வெளியே

ஓயாமல் கேட்டன. வளவு முட்டிய மக்கள் கண்கள் குளமாகக் கலங்கி இருந்தன. சுதை இல்லை. ஒருவர் மற்றவரைப் பார்ப்பதோடு சரி. ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். இயக்கத்தவர்கள் சனத்தை ஒழுங்கு படுத்தினர். பூதவுடலை யாழ்ப்பாணம் கொண்டு போகும் நேரம் நெருங்கியது. எங்கு என்னால் பூதவுடலைப் பார்க்க முடியாமல் போய்விடுமோ என்ற கவலை. இயக்கத்தைச் சேர்ந்த எனது மாணவர் இறுதி அஞ்சலியைச் செலுத்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார். அவ்வளவுக்குச் சனம் அலைமோதியது.

யாழ்ப்பாணத்தில் சங்கமம்

மூளாயிலிருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்துக்கு ஹெலிகொப்டர் மூலம் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டது. அவ்விடத்தை நான் அணுகியபொழுது மக்கள் சாரிசாரியாக இறுதி அஞ்சலியிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அந்தப் பெரிய விளையாட்டு மைதானத்தைச் சுற்றிச் சன சமுத்திரம்.

இந்திய இராணுவத்தின் கெடுபிடி, ஆயுதம் தூக்கியவர்களின் அக்கிரமம், ஊரடங்குச் சட்டம், பஸ் போக்குவரத்து வசதியின்னை, குறிப்பாக இறுதி அஞ்சலிக்கு வந்தவர்கள் திரும்பிச் செல்லவே பஸ் போக்குவரத்து வசதி இல்லாத சூழ்நிலை - இப்படியான பயமும் ஏக்கமும் பிரயாணவதி இன்மையும் சூழ்த சூழ்நிலை இல்லாவிட்டால் அண்ணலின் இறுதிக்கிரியைக்கு சமூகமளிக்கும் மக்களைக் கொள்ளக்கூடிய இட வசதி யாழ்நகரத்துக்குள் எங்கும் இல்லை. தொண்டைமனாற்று ஏரி ஓரம் உள்ள ஏதாவது மைல்கணக்கில் நீண்டு பரந்த வெளியே தேவைப்பட்டிருக்கும். பல இலட்சக் கணக்கில் மக்கள் கூடியிருப்பர். அன்று அங்கு சேர்ந்த கூட்டம் எது நடந்தாலும் பரவாயில்லை என்ற துணிவில் வந்தவர்களே அத்தனை ஆயிரம் சனம்.

இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக இலங்கை இந்திய அரசாங்கங்களின் சிரேட்ட அங்கத்தவர்களும் தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சமூகமளித்திருந்தனர். இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் காமினி திசநாயக்கா, இந்திய அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டு அமைச்சர் நட்வர் சிங், இலங்கைக்கான இந்திய தூதுவர் லால் மெஹ்றோத்திரா, தமிழ்நாடு



காங்கரிஸ் (ஐ) சார்பில் திருமதி டி.யசோதா, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதவிச் செயலாளர் ராகவானந்தன், இந்திய ஐக்கிய முஸ்லிம் லீக் (சமீட் குழு) காஜா முகைதீன் ஆகியோர் கலந்து கொண்டவர்களில் முக்கியமானவர்கள். அவர்கள் பேச்சின் சில வார்த்தைகள்:

இந்திய வெளிநாட்டு அமைச்சர் நட்வர் சிங்:

“அமிர்தலிங்கம் 1984ஆம் ஆண்டு தொடக்கம் ஆயுதக் குழுக்களை ஒன்றிணைக்க அரும்பாடு பட்டவர். ஆயுதக் குழுக்களின் தலைவர்களை ஐக்கியப்படுத்தப் பல கூட்டங்களை நடாத்தினவர். அவர்கள் தங்களுக்கிடையில் போரிட்டு ஒருவரை மற்றவர் கொன்ற பொழுது அவரது இதயம் இரத்தம் சொரிந்தது. கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அவர் பயனப்படுத்தி அவர்களை ஒன்றிணையும்படி மன்றாடினார்.”

அமைச்சர் காமினி திசநாயக்கா:

“விடயங்களை அணுகுவதில் எங்களுக்கிடையே வேற்றுமைகள் இருந்தன. ஆனால் அமிர்தலிங்கம் அவர்களின் புனிதமான கொள்கைப் பற்றையும் நேர்மையையும் எவரும் சந்தேகிக்க முடியாது. கடந்த காலத்தின் எமது நாட்டுச் சாபக் கேடான அரசியல் காரணமாக 1983இன் பின்னர் அவர் சிறீலங்கா அரசியல் தொடர்புகளைவிடுத்து ஈழத் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவை நாடினார். நீங்கள் - இந்த மண்ணின் ஆயிரக்கணக்கான மைந்தர்கள் இங்கே குழுமி இருக்கிறீர்கள். மக்களுக்காகப் பெருமனதோடு உழைத்த இந்த மனிதர்களுக்கு நாம் தலைவணங்குகின்றோம். அவர்களது கைம்பெண்கள் பிள்ளைகளின் கவலையில் நாமும் பங்கு கொள்கின்றோம்.”

காணாமல்போன கவிஞர்

நான் இறுதி மரியாதை செலுத்த வந்தவர்களின் மத்தியில் எதிர்பார்த்தவர்களில் முக்கியமானவர் ஒருவர் காசி ஆனந்தன். அமிர்தலிங்கம் அவர்களது உள்வீட்டுப் பிள்ளையாக ஒருகாலம் இருந்தவர். தமிழ் அரசுக் கட்சியால் வளர்க்கப்பட்டவர். தமிழரசுக் கட்சிக் காலம் தொடக்கம் அதன் ஆதரவாளர்களால் மதிக்கப்பட்டவர்.

1938ஆம் ஆண்டு மட்டக்களப்பில் பிறந்த இவர் 1979இல் ஒரு தாதியை மணந்தார். இவரது இரண்டு பெண்பிள்ளைகள் சென்னை ஸ்ரான்லி மருத்துவ கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு முன்னாள் பா.உ. செ.இராசதுரை அவர்கள் அமிர் அவர்களின் மரணச் செய்தி அறிந்ததும் மலேசியாவில் இருந்து கொழும்பு வந்து அவர் பூதவுடலைப் பார்த்து 'அண்ணா அண்ணா' என்று அழுது புலம்பினார். அவர் கட்சியை விட்டு வெளியேறி இருந்த பொழுதும் மரணம் என்றதும் தான் வளர்த்துக் கொண்ட பகைமைகளை மறந்து கடல்கடந்த தூரதேசத்தில் இருந்து பறந்து வந்து அஞ்சலி செலுத்தினார். மூன்று முறைகள் சிறைவைத்த முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரும் கொழும்பில் இறுதிமரியாதை செலுத்தியவர்களில் ஒருவர்.

ஆனாலும் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் நிழலில் தழைத்தவர், அவரைக்கொண்டு பணம் சேர்த்தவர், அந்தப் பணத்தில் மாடி வீடு கட்டியவர் நாடறிந்த காசி ஆனந்தன். அவர் இறுதிக் கிரியைகளில் கலந்த கொள்ளவில்லை. ஒரு இரங்கல் செய்திகூட அனுப்பவில்லை.

1976 இல் சிறையில் இருந்து மீண்ட காசி ஆனந்தன் அண்ணலிடம் பணம் கேட்டார். தலைவர் என்ன வங்கியில் தேட்டம் ஏதும் வைத்திருந்தவரா? கட்சியில் தேட்டம் இருந்ததா? அவருடைய வாழ்க்கை அன்று உழைத்து அன்று வாழ்ந்த வாழ்க்கையே. கொழும்பு வீதிகளில் கடைகளின் படிகள் ஏறி இறங்கி அந்த ஆத்தான கவிஞனுக்காக பணம் சேர்த்துக் கொடுத்தார். கட்சியின் தேவைக்காகக்கூடத் தெண்டலில் இறங்காதவர் சிறை மீண்ட அந்தக் கவிஞருக்காகப் பிச்சா பாத்திரம் ஏந்தினார். அவருடைய கலியாணத்துக்குக் கட்சிப் பணத்தில் இருந்து பணம் கொடுத்தார்.

போதாததற்கு யாழ்ப்பாணத்தில் சிறை மீண்ட கவிஞருக்குப் பண உதவி செய்யும்படி சில கூட்டணிக் கிளைகளைக் கேட்டார். அதில் இந்த நூல் ஆசிரியனும் ஒருவன். கட்சிக் கிளையின் பெயரில் பணம் சேர்த்து வீமன்காமம் காந்தி சனசமூக நிலையத்தில் வரவேற்பு வைத்து அந்தப் பொற்கிளி வழங்கப்பட்டது.



பின்னர் காசி ஆனந்தனை 1977 பாராளுமன்றத் தேர்தலில் பொத்துவில் தொகுதியில் போட்டியிடும்படி தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் வேண்டினார். பொத்துவில் மக்கள் வாகனமும் பணமும் தருகிறோம் அங்கு வந்து போட்டியிடும்படி அவரை அன்போடு அழைத்தார்கள். கவிஞர் மறுத்து மட்டக்களப்பில்தான் தான் போட்டியிடுவேன் என்று அடம்பிடித்தார். அப்பொழுதே அவரைத் தூக்கி எறியாமல் செ.இராசதுரை அவர்களோடு சேர மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட அனுமதிக்க வேண்டியதாயிற்று. அதனால் கட்சிக்கு விளைந்த அனர்த்தங்கள் பல.

பின்னர் ஆத்தான கவிஞர் கட்சியை விட்டு வெளியேறினார். ஜனநாயக நாட்டில் எவருக்கும் உள்ள உரிமை. வல்வெட்டித்துறையில் நடந்த ஒரு கூட்டத்தில் அந்த ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கவிஞர் காசி ஆனந்தன் அறை கூவல்விட்டார்.

“அமிர்தலிங்கமே! உன்னைப் பார்த்துக் கேட்கிறேன். நீ உன் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியை இன்றே கலைத்துவிடு. எனது தலைவன் புலிகள் தலைவனை உன்னுடைய தலைவனாக ஏற்றுக்கொள். அவரது இயக்கத்தில் உன்னை ஒரு அடிமட்டத் தொண்டனாக இணைத்துக்கொள்.”

இவர்தான் தமிழரசுக் கட்சியால் கூட்டணியால் ஆத்தான கவிஞர் என்று போற்றி வளர்க்கப்பட்ட காசி ஆனந்தன் எனப்படும் காத்தமுத்து சிவானந்தன்.

காசி ஆனந்தன் தமிழனின் கலாச்சாரம் அறிந்தவர். இளைய தலைமுறைக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டியவர். தலைவர் அமிர்தலிங்கம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்த யாழ்ப்பாணம் வந்திருக்கத் தேவையில்லை ஒரு வரி எழுதி யிருக்கலாம் அல்லவா?

# அதிகாரம் 63
# கொலையின் நோக்கம்

வடகிழக்கு தமிழ் மக்களின் ஈடிணையற்ற தலைவனாக தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கொடிகட்டிப் பறந்தார்கள். மக்களே ஏகோபித்து அவரைத் தலைவராக்கினர். அன்னாரின் தலைமையைப் பறித்தெடுப்பதற்காக ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் மத்தியில் நிலவிய ஒரு போட்டியின் விளைவே அண்ணலின் கொலை. ஆயுதம் தாங்கிய இயக்கங்களின் தோற்றத்தையும் உடைவுகளையும், அவற்றின் வளர்ச்சிப் பாதையில் ஏற்பட்ட முரண்பாடுகளையும் குத்து வெட்டுக்களையும் கொலைகளையும் ஆராய்ந்தால் இந்தக் கருதுகோளின் உண்மை புலனாகும்.

### இயக்கங்களின் வேணவா

தமிழ் ஈழ மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றிலே தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் தேன் மழை பொழியும் உணர்ச்சி மிக்க பேச்சுக்களும், இன உரிமைப் போராட்டத்தில் அவர் காட்டிய ஆழ்ந்த பக்திபூர்வமான அக்கறையும், அவரது பிரமிக்கத் தக்க ஞாபகசக்தியோடுகூடிய அறிவாற்றலும் சாதுரியம் நிறைந்த இராசதந்திரமும், அசையாத தன்னம்பிக்கையும், களத்தில் முதல் மனிதனாக நின்று போராடும் துணிவும் ஒரு இளைஞர் படை அவரின் பின்னே கிசுகிசு என்று வளரச் செய்தது. விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், மாணவர் பேரவையைச் சேர்ந்த சத்தியசீலன், ஈழப் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) தலைவர் பத்மநாபா, தமிழ் மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOT) தலைவர் உமா மகேஸ்வரன், தமிழ் ஈழ விடுதலை இயக்க (TELO) தலைவர் ஸ்ரீசபாரத்தினம், ஈழப் புரட்சிகர மாணவர் அமைப்பின் தலைவர் (EROS) இரத்தினசபாபதி, காசி ஆனந்தன் வரை சகலரும் அமிர்தலிங்கம் அவர்களின் அரசியல் பிரயாண வண்டியில் ஒரு கால கட்டத்தில் கூடப் பிரயாணம் செய்தவர்களே. அமிர்தலிங்கம் அவர்களின் வார்த்தைகளைத் தலையில் தூக்கி வைத்து ஆடியவர்களே. அண்ணனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தம்பிகளாக இருந்தவர்கள்தான்.



தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் அரவணைப்பு இல்லாவிட்டால் அவர்களுடைய நாமம் அடுத்த தெருவுக்கும் தெரிந்திருக்காது. இவர்கள் பெயர்கள் அரசியல் அரங்கில் அடிபடத் தொடங்கியதும் அமிர்தலிங்கம் அவர்களது அரசியலைப் பாராளுமன்றக் கதிரைகளுக்காகக் காலம் கடத்தும் அரசியல் என்று குற்றச்சாட்டி அவரைவிட்டுப் பிரிந்து சென்றார்கள். அப்படி ஒரு காரணத்துக்காகப் பிரிந்தவர்கள் மத்தியில் ஏன் பல இயக்கங்கள்? எண்ணிலடங்காத தலைவர்கள்? பிரிந்து போனவர்கள் காலம் கடத்தாது - இரண்டொரு வருடங்களில் - தமிழ் ஈழம் கொண்டுவர ஒரு தலைமையின் கீழ் போராடி இருக்கலாமே? ஏன் ஒன்றுபடவில்லை? இதன் விடையில் கொலைக்கான அவர்களது நோக்கம் தொக்கி நிற்கிறது.

இயக்கங்களின் வேணவா அமிர்தலிங்கம் அவர்களின் தலைமைப் பீடத்தைப் பறித்து அதில் சிக்காராக அமர்வதே. ஜனநாயக நீரோட்டத்தில் தேர்தல் மூலம் மட்டுமே அதனைச் செய்ய முடியும். கூட்டணிக்கு நிலையான வாக்கு வங்கி ஒன்று இருப்பில் உண்டு. அதனால் இயக்கங்களால் ஜனநாயக முறையில் தலைமைப் பீடத்தை வெற்றி கொள்ள முடியாது. எனவே எல்லா ஆயுதம் தூக்கிய இயக்கங்களும் அவரை விமர்சித்தன. துப்பாக்கியின் மூலம் தலைமையை வெற்றி கொள்வதே அவர்களின் நோக்கம் என்பதனை, விடுதலைப் புலிப் பிரதான பிரமுகர் ஒருவர் கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் பிரேமதாசவின் செலவில் உல்லாசமாகப் பொழுது போக்கிய சமயம் (1987 -1990) நிகழ்ந்த ஒரு சம்பவம் சாட்சி பகர்கிறது.

அக்காலத்தில் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஐந்து யாழ்ப்பாணத்துத் தமிழ் பெண்பிள்ளைகள் ஒரே வகுப்பில் பயின்றார்கள். அதில் ஒருவருக்கு அந்தப் பிரதான பிரமுகர் கிட்டிய உறவினர். அவர் ஏனைய நால்வரையும் அழைத்துக்கொண்டு ஹில்டன் ஹோட்டலில் தங்கியிருந்த அவரைப் பார்க்கப் போனார். அவ்வேளை அவரிடம் "நீங்கள் ஏன் கூட்டணியினரைக் கொல்கிறீர்கள்?" என்று ஒரு வைத்திய மாணவி கேட்டார். அவர் எதுவித பதட்டமுமில்லாமல் "அமிரை வாழ விடக்கூடாது. அவன் உயிருடன் இருந்தால் எங்கள் பேய்த் தமிழ் சனம் அவனுக்குத்தான் வோட்டுப் போடும்" என்று பதில் அளித்தார். இந்தச் சம்பாசனை ஒன்றே சொல்கிறது எல்லா இயக்கங்களும் அமிர்தலிங்கம் அவர்களைப் பகைத்தமைக்குக்

காரணம் வாக்கு வங்கி என்பதே. அவரின் அரசியற் கொள்கை அல்ல.

தலைமையைக் கைப்பற்றவே ஒன்றுக்குப் போட்டியாக இன்னொன்று அதற்குப் போட்டியாக வேறு ஒன்று என்று பல இயக்கங்களை ஆரம்பித்தனர். இயக்கங்கள் கால் நூற்றாண்டு காலம் (1977 - 2002) தங்களுக்குள் முட்டி மோதி ஆளை ஆள் சுட்டு வெட்டிக் கொலை செய்வதெல்லாம் வடகிழக்குத் தமிழரின் தலைமைப் பதவியைக் கைப்பற்றவே. அந்தத் தலைமை தலைவர் அமிர்தலிங்கம் அவர்களிடம் இருந்த காரணத்தால் அவர்மீது அவர்கள் யாவரும் புழுதிவாரித் தூற்றினர். இறுதியில் அவரின் உயிருக்கே உலைவைத்தனர்.

அண்ணலின் மறைவின் பின்னரும் தலைமை விடுதலைப் புலிகளுக்கு கிட்டவில்லை. அண்ணல் பெயர் மறையவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி பட்ட மரமாகவில்லை. அதன் வாக்கு வங்கி நிலை குலையவில்லை. அதனால்தான் இப்பொழுது அதனுட் புகுந்து அதன் ஆணிவேரை அறுக்கப் பார்க்கிறார்கள்.

### கூட்டணியின் வாக்கு வங்கி இருப்பு

1981 மாவட்ட சபைத் தேர்தலும், 1997 யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தல்களும், அக்டோபர் 2000, டிசம்பர் 2001 ஆகிய ஆண்டுகளில் நடந்த பாராளுமன்றத் தேர்தல்களும் கூட்டணியின் வாக்கு வங்கி இருப்பு குலையவில்லை என்பதைக் காட்டும். அதாவது இயக்கங்களின் வெருட்டல்களுக்கு மக்கள் எடுபடவில்லை என்பதையே காட்டும். 1981 மாவட்ட சபைத் தேர்தலின் பொழுது வாக்களிக்க வேண்டாம் என்று மக்கள் ஆயுதக் குழுக்களால் எச்சரிக்கப்பட்டார்கள். பயத்தினால் ஒரு பகுதி வாக்காளர்கள் வாக்களியாதபோதும், கணிசமான மக்கள் துப்பாக்கிகளைப் பொருட்படுத்தாமல் வாக்களித்தனர். இத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கடுமையாக விமர்சித்தவரும், பின்னர் வலிந்து அரசை எதிர்த்து பத்திரிகைகளில் ஒருசில கட்டுரைகள் எழுதிப் புகழ் பெற்றவருமாகிய கனடாவில் முத்திரை வெளியிடப்பட்டு ஏற்றிப் போற்றப்படும் குமார் பொன்னம்பலத்தின் தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் போட்டியிட்டது. அத்தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் கீழே தரப்படுகின்றன. மக்கள்



அளித்த தீர்ப்பை அவதானியுங்கள்:

1981 மாவட்ட சபைத் தேர்தல் - யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| த.வி.கூ. பெற்ற வாக்குகள்: | 2,63,369 |
| ஐ.தே.க. | 23,302 |
| தமிழ் காங்கிரஸ் - குமார் தலைமையில் | 21,682 |

வடகிழக்கில் நடந்த மொத்தமாக 6 மாவட்ட சபைத் தேர்தல்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றிவாகை சூடியது.

பாராளுமன்றத் தேர்தல் 2000 இலங்கை முழவதும்

| | |
|---|---|
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 106,033 |
| ஈ.பி.டி.பி. | 56,890 |
| தமிழ் காங்கிரஸ் | 27,323 |
| தமிழ் ஈழ விடுதலை இயக்கம் | 26,112 |

பாராளுமன்றத் தேர்தல் 2001 டிசம்பர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2001 டிசம்பரில் நடந்த பாராளுமன்றத் தேர்தல் ஒரு வெள்ளோட்டத் தேர்தல். அது ஒவ்வொரு கட்சிக்கும் அதன் வாக்கு வங்கியை இடித்துக் கூறிய தேர்தல். ஆயுத இயக்கங்களின் அடாவடித் தனங்களுக்கு உடன்பிறந்த சகோதரர் அமரர் இராசசங்கரியையும் அண்ணன் மகன் பாராளுமன்ற உறுப்பினர் யோகசங்கரியையும் பறிகொடுத்த கூட்டணியின் தலைமை வேட்பாளராக யாழ்ப்பாணத்தில் போட்டியிட்ட வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்கள் 36,000 வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் வந்தமையும், கூட்டணி சார்பில் போட்டியிட்ட மாவை சேனாதிராசா அவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றதும் மக்கள் இன்றும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பக்கமே நிற்கிறார்கள் என்பதை விடுதலைப் புலிகளுக்கு அழுத்திக் காட்டியது.

2001 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தல்தான் - குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் எவர் பக்கம் என்பதை வெளி உலகத்துக்குத் தெளிவாக எடுத்துக்காட்டிய தேர்தலாகும்.

இத்தேர்தலில் தமிழர் தேசிய கூட்டமைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்பன இணைந்து போட்டியிட்டன. போராளிக் குழுக்கள் இத்தேர்தலில் தமது யாழ்ப்பாண வாக்கு வங்கியைக் கணித்துக்கொள்ளத் தமது சாதுரியத்தைப் பயன்படுத்தினர். புலிகள் தங்கள் பிரதிநிதியாக தமிழ் காங்கிரஸ் போட்டியிடுவதை தங்கள் வாக்காலும் செயலாலும் தெளிவாக வாக்காளருக்குப் புலப்படுத்தியிருந்தனர். கனடாவில் வைத்து மறைந்த குமார் பொன்னம்பலத்துக்கு முத்திரை வெளியிட்டும், மற்றும் வெளிநாடெங்கும் அவருக்கு விழாக்கள் எடுத்தும் தமது ஆசீர்வாதத்துடன் தமிழ் காங்கிரஸ் களத்தில் இறங்கி உள்ளதை மக்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களின் நாடியைப் பிடித்துப் பார்த்தனர். அவர்களுக்கு மக்கள்மீது சந்தேகம். பழையதையும் புதியதையும் மனதில் வைத்து கழுத்தறுத்து விடுவார்களோ என்று உள்ளூரப் பயம். அதனால்தான் அப்படி ஒரு கணிப்பில் ஈடுபட்டார்கள். இத்தேர்தல் அவர்களுக்கு ஒரு வெள்ளோட்டம்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் கூட்டணி மண் கௌவும் - மக்களால் சகல தேர்தல்களிலும் தோற்கடிக்கப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மகன் கஜேந்திரகுமார் தலைமை தாங்கும் - தமிழ்க் காங்கிரஸ், கூட்டணியைக் கூண்டோடு கைலாயம் அனுப்பும் என்ற நப்பாசையில் 'பாட்டிகள்' வைத்துக் கொண்டாட ஆவலோடு காத்திருந்தார்கள். ஏமாற்றந்தான் எஞ்சியது. கூட்டணியின் வாக்கு வங்கி தளம்பாமல் ஆணி வேர் பாய்ச்சி நிற்பதை அத்தேர்தல் எடுத்துக் காட்டியது. ஈ.பி.டி.பி. கட்சி டக்ளஸ் தேவானந்தாவின் அரச செல்வாக்காலும் அடாவடித்தனத்தாலும் ஓரளவு வாக்குளை மேலதிகமாகப் பெற்றிருந்தது. அது தேர்தல் முடிவுப் போக்கில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

2000ஆம் ஆண்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி 3 ஆசனங்களைக் கைப்பற்றியது. வி.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, எஸ். சிவமகாராசா ஆகியவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். 2001ஆம் ஆண்டில் நடந்த தேர்தலிலும் கூட்டணி 3 ஆசனங்களை மட்டுமே கைப்பற்றியது. வி.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, (சிவமகாராசாவிற்குப் பதிலாக) என்.ரவிராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.



தேசியக் கூட்டமைப்பில் கூட்டணி போட்டியிட்டதால் விடுதலைப் புலிகளின் வாக்குகள் அவர்களுக்கும் கைகொடுத்தது என்ற ஒரு மாயையைச் சிலர் திணிக்க முயல்கிறார்கள். அதனால் கூட்டணி அவர்களின் தாளத்துக்குச் சுழன்று ஆடவேண்டும் என்ற கருத்தும் உண்டு. ஆனால் அவர்களின் எந்த ஒரு வாக்கும் கூட்டணிக்குக் கிடைக்கவில்லை. அவர்களின் வாக்குகள் முழுவதும் தமிழ்க் காங்கிரசுக்கே கிடைத்தன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 1 ஆசனத்தையே 2000 ஆம் ஆண்டு தேர்தலில் பெற்ற தமிழ்க் காங்கிரஸ் 2001இல் 2 ஆசனங்களைப் பெற்றது. அதில் ஒன்று விடுதலைப் புலிகளின் பெயரால் கிடைத்தது. இன்னும் 1947 தொடக்கம் மட்டக்களப்பில் ஒரு ஆசனத்தைக்கூட பெற்ற வரலாறில்லாத அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 2001 பாராளுமன்றத் தேர்தலில் அங்கு ஒரு ஆசனத்தைப் பெற்றது. அது விடுதலைப் புலிகளின் வாக்கு வங்கி மூலம் கிடைத்த ஆசனம். அதனைத்தான் 2001 டிசம்பரில் நடந்த பாராளுமன்றத் தேர்தல் பகிரங்கப்படுத்தி உள்ளது.

2001 ஆம் ஆண்டு தேர்தல் வெள்ளோட்டத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் கோட்டைவிட்டுள்ளனர். 2001 தேர்தலின் தீர்ப்பு அவர்களைத் தேர்தல் களத்தில் இறங்குவதில் இருந்து தள்ளி வைத்திருக்கிறது. அதனால்தான் தேர்தல் மூலம் அல்லாத இடைக்கால அரச அதிகாரம் முழுவதையும் கோருகிறார்கள். தேர்தலில் எப்பவோ ஒரு நாளைக்கு இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு உண்டு. ஜனநாயக தேர்தல் மூலம் தலைமையை உறுதி செய்யவேண்டிய சூழ்நிலைக்குள் சிக்கி உள்ளார்கள். இல்லாவிட்டால் அவர்கள் அரசியல் வானில் இருந்து மறைந்து போவார்கள். அரசியல் களத்தில் அவர்களது பரம எதிரி தமிழர் விடுதலைக் கூட்டணியே. விடுதலைப் புலிகள் தேர்தல்களத்தில் இறங்குவதும் வெற்றி பெறுவதும் கூட்டணியின் உறுதியிலும் கட்டுக்கோப்பிலுந்தான் தங்கி உள்ளது. ஆகவே அதனை உடைப்பதற்கு முற்பட்டுள்ளார்கள்.

### உள்ளூராட்சித் தேர்தல்

1997 ஆண்டில் யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலிலும் வலி-வடக்கு உள்;ராட்சித் தேர்தலிலும் மட்டுமே கூட்டணியினர் பங்கு பற்றினர். மாநகர சபைத் தேர்தலைப் பொறுத்தவரை அவர்களது

நியமனப் பத்திரம் செல்லாது என்று ஈ.பி.டி.பி. கட்சியினர் வழக்குத் தொடுத்திருந்தனர். அதன் முடிவு தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் வெளிவரும் வரை பிரசாரம் தடைப்பட்டது. அத்தோடு கூட்டணியினர் பயம் இல்லாமல் சுதந்திரமாகத் தேர்தல் பிரசாரத்தைச் செய்யும் வாய்ப்பில்லாத சூழ்நிலை. களத்தில் போட்டியிட்ட ஏனைய கட்சிகளைச் சார்ந்தவர்கள் அரசாங்க ஆதரவு பெற்றவர்களாகவும் கையில் ஆயுதம் உடையவர்களாகவும் இருந்தனர். இப்படியான பாதகமான சூழ் நிலையிலும் கூட்டணி யாழ் மாநகர சபையைக் கைப்பற்றியமை மக்களின் வெளித்தோற்றத்தில் என்ன தெரிகிறது என்பதையும் உள் மனதில் என்ன உறைந்து இருக்கிறது என்பதனையும் உலகறிய வைத்தது.

இன்னும் தமிழர் விடுதலைக் கூட்டணி வலி-வடக்குப் பிரதேச சபைக்கு மட்டும் போட்டியிட்டது. அதனையும் அது கைப்பற்றியது. யாழ் மாநகர சபை, வலி-வடக்கு பிரதேச சபைத் தேர்தல் முடிவுகள் இரண்டும் ஏனைய உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் கூட்டணி பங்குபற்றியிருந்தாலும் நூற்றுக்கு நூறு வெற்றியைப் பெற்றிருக்கும் என்பதைக் காட்டுகின்றன. எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் சிறிய அசைவுகளைத் தவிர்த்து கூட்டணியின் வாக்கு வங்கி இன்னும் நிரந்தரமாக உள்ளதைத் தெளிவாகக் காணலாம்.

1989 ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி ஒரு ஆசனத்தைக்கூடப் பெறவில்லை. அதற்குக் காரணம்:

1 இத்தேர்தலில் ஆயுதமேந்திய இயக்கங்களுடன் இணைந்து போட்டியிடும்படி கூட்டணியை ராஜீவ் காந்தி அவர்கள் நிர்ப்பந்தித்தார்.

கூட்டணி ஆதரவாளர்கள் அதனை விரும்பவில்லை.

2 கூட்டணியினர் கொழும்பில் இருந்து விமானத்தில் வந்து கச்சேரியில் நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பித்தனர். அதன் பின்னர் பிரசாரத்துக்கு யாழ்ப்பாணம் தலைகாட்டவில்லை. உயிருக்குப் பயந்த சூழ்நிலை.

3 மாவை சேனாதிராசா பயத்தில் கொழும்பில் இருந்து 'போஸ்ட் காட்' எழுதி வாக்களிக்கும் படி கேட்டார் யாழ்ப்பாணம் வரவில்லை. சிலர் 'போஸ்ட் காட்டே' எழுதவில்லை.



4 இயக்கங்கள் துப்பாக்கிகளுடன் தங்கள் கட்சிகளுக்கு வாக்கு வேட்டையாடினர்.

5 ஒரு பகுதிக் கூட்டணியினர் 'ஈரோஸ்' கட்சிக்கு வாக்களித்தனர். காரணம் அக்கட்சி மக்களைத் துன்புறுத்தாமல் நடந்தமைக்காக மட்டுமல்ல கூட்டணி ஆயுதக் குழுக்களுடன் இணைந்து போட்டியிட்டதற்குப் பாடம் புகட்டவே.

6 அமிர்தலிங்கம் அவர்கள் மட்டக்களப்பில் போட்டியிட்டார். பிரதேச உணர்வு மட்டுமல்ல ஒரு குறித்த இயக்கத்தவர்கள் செய்த சூழ்ச்சிகளும் அவரைப் பாதித்தன. (தினமுரசு பத்திரிகையில் பேர் விபரம் வாசித்தேன். ஞாபகம் இல்லை.) அந்த இயக்கத்தவர்கள் அமிர்தலிங்கம் அவர்களை விழுத்த வேண்டும் என்பதற்காக நிரம்பக் கள்ள வாக்குகளை இன்னொரு வருக்குப் போட்டனர். இயக்கங்களுடன் சேராது அமிர்தலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டிருந்தால் நிட்சயம் பிரசாரமின்றியே குறைந்தது யாழ்ப்பாணத்தில் மட்டும் நான்கு ஆசனங்களைப் பெற்றிருப்பார்.

தலைமையைக் கைப்பற்றவே அண்ணலின் உயிர் பறிக்கப்பட்டது. எவராவது தாமே ஈழத் தமிழ் மக்களின் தலைவர் என்று கூற விரும்பினால் ஒரு நேர்மையான நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் அதனை நிரூபிக்க முடியும். அதனைச் தமிழ்ச் சமூகம் கேள்விக்கு இடமின்றி ஏற்றுக்கொள்ளும். அதைவிடுத்து எந்த ஆதாரமும் இன்றி தாமே மக்களின் தலைவர் என்று பேசுவது ஜனநாயகத்துக்குப் பொருத்தமான நடைமுறை அல்ல. உலகம் ஏற்காது. கூட்டத்தைக் கூட்டிவைத்து இதோ எங்கள் சனசமுத்திரம் என்பது எடுபடக்கூடிய விவாதம் அல்ல. கவர்ச்சியான சினிமா நட்சத்திரத்தால்கூட சன சமுத்திரத்தைக் காட்ட முடியும். ஜனநாயக நாட்டின் தலைவனை மக்கள் வாக்குப் பலமே தீர்மானிக்கும். அதனைப் புறந்தள்ளிக் கிரீடம் அணிய ஆசைப்படுவது, தேர்வு எழுதாதவன், தவறான பத்திரவழியில் பதவி பெறுவது போன்றதே.

மிரட்டல்களுக்கு மத்தியிலும் கூட்டணிக்கு ஒரு வாக்கு வங்கி குலையாமல் இருக்கிறது. எனவேதான் கொலைகள் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைத் தொடர்ந்து அழித்து - கூட்டணியை ஒழித்து - வடகிழக்குத் தமிழர் தலைவர் பதவியைக் கைப்பற்றும் மோகத்தில் வன்முறையைப் பாவிக்கிறார்கள். இப்படியானதொரு தொடர்ச்சியான கொலையின் ஒரு கட்டமே தலைவர் அமிர்தலிங்கம் அவர்களது கொலை.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்னற உறுப்பினர்கள் திருவாளர்கள் தர்மலிங்கம் ஆலாலசுந்தரம் ஆகியோர் கொலை செய்யப்பட்ட காலம் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்திருந்தால் அவரையும் தமிழ் ஈழ விடுதலை இயக்க (TELO) தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தின் ஏவுதலில் 1985 செப்டம்பர் 2ந் திகதி கடத்திச் சென்று சுட்டுக் கொன்று சடலத்தை எங்கேயாவது ஒரு வீதி ஓரத்திலோ சுடலையிலோ வீசி இருப்பார்கள்.

இயக்கங்கள் எல்லாவற்றுக்கும் தங்களுக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கில் சந்தேகந்தான். மக்களை அவர்கள் மக்களாக நடத்தவில்லை. செம்மரிகளாகவே நடத்தினார்கள். மக்களைப் பிச்சுப் பிடுங்கிச் சித்திரவதைசெய்து கொன்று உபத்திரப்படுத்திய தங்களைச் செம்மரிகள் திருப்பி உதைக்குமோ என்ற பயம். அப்ப அப்ப செம்மரிகள் வீதியில் இறங்கிப் பெரும் எண்ணிக்கையில் சொல்லிக் கொடுத்தது போலக் கனைத்தாலும் துப்பாக்கி இல்லாவிட்டால் செம்மரிக் குணத்தைக் காட்டாமல் விடா என்பது தெரியாமல் இல்லை. ஆகவே அண்ணலைச் சாகடித்து விட்டால் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒழிந்துவிடும், எப்படியும் மந்தைகளைத் தங்கள் பட்டிக்குள் ஓட்டிச் செல்லலாம் - மன்னனின் சிங்காசனத்தில் குந்திவிடலாம் என்று மனப் பால் குடித்தார்கள். அப்படியே செய்து விட்டார்கள். மந்தைகள்தான் பட்டிப் பக்கம் செல்லவில்லை. எனவே இப்பொழுது சிலர் புதுப்படலம் ஆரம்பித்துள்ளார்கள். கூட்டணிக்குள் கலகத்தை உண்டாக்கி அதனை ஒழித்துக்கட்ட முனைந்துள்ளார்கள்.

அதன் விளைவாக, தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சிக்குள் தலைவர் தொடர்பான குழப்பங்கள் தோன்றின (2003). அமரர் மு.சிவசிதம்பரம் அவர்களது மறைவை அடுத்து மத்திய செயற்



குழுவால் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டவர் திரு.வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்கள். மற்றவர்கள் பயத்தில் கொழும்பு நாரயம்பிட்டியில் இருந்த கட்சித் தலைமையகப் பக்கம் தலைகாட்டப் பயந்து இருந்த காலகட்டத்தில் துணிந்து கட்சியைப் பாதுகாத்தவர். அவ்வேளை அவருக்குப் பக்கபலமாக இருந்தவர்கள் திருவாளர்கள் அ.தங்கத்துரை திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர், ஆவரங்கால் க.சின்னத்துரை, நீலன் திருச்செல்வம், மாவை சேனாதிராசா, மேயர் பொன். சிவபாலன், த.முகுந்தன், என்போர் மட்டுமே. எத்தனையோ சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் கட்சியை எடுத்துச் சென்றவர் ஆனந்தசங்கரி. உள்ளூராட்சித் தேர்தல்களில் பங்குபற்றி யாழ் மாநகரசபை, வலி-வடக்குப் பிரதேச சபைகளுக்கு மட்டும் போட்டியிட்டு இரண்டையும் கைப்பற்றச் செய்தவர் ஆனந்தசங்கரி. இரண்டு மேயர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபொழுதும் பின்வாங்காது முதலில் திரு. நடராசா ரவிராஜையும் பின்னர் திரு. செல்லன் கந்தையன் அவர்களையும் மேயராக்கித் தொடர்ந்து மாநகரசபை ஆட்சியைக் கூட்டணிவசம் வைத்திருந்தவர். அந்த முயற்சியே கூட்டணி 2000 ஆண்டில் பாராளுமன்ற தேர்தலில் களம் இறங்க அத்திபாரமாக அமைந்தது. யாழ்ப்பாணத்தில் 2000, 2001 ஆண்டுகளில் நடந்த இரண்டு பாராளுமன்றத் தேர்தல்களிலும் மக்கள் அதிக வாக்குகளை அவருக்கு வழங்கி அவரது முதன்மையை அங்கீகரித்தனர். தலைவர் திரு.ஆனந்தசங்கரி அவர்களைப் பதவியால் இறக்கி, கூட்டணிக் கட்சியைத் தமது ஏவல்காரனாக வைத்துக்கொள்ள முயன்றார்கள். ஆனால் அமரர்கள் தந்தை செல்வா-வன்னியசிங்கம்-அமிர்தலிங்கம் ஆகியோர் பாசறையில் வளர்ந்த மத்திய குழு உறுப்பினர்கள் நிதானம் இழக்காமல், ஊடகங்களின் கூச்சல்களைப் பொருட்படுத்தாமல் செயல்பட்டமை அவர்களின் அனுபவ முதிர்ச்சியையும் மன உறுதியையும் ஆழ்ந்த கட்சிப்பற்றையும், அரசியல் சாணக்கியத்தையும் உலகிற்கு எடுத்துக் காட்டியது. இறுதியில் ஆவரங்கால் சின்னத்துரை தலைவர் ஆனந்தசங்கரிமீது நம்பிக்கைப் பிரேரணை கொண்டு வந்தார். அப்பிரேரணையை மட்டக்களப்பைச் சேர்ந்த அல்போன்ஸ் மேரி வழிமொழிந்தார். சபை எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ஆனாலும் பின்னர் அடுத்தடுத்து நடந்த சம்பவங்கள் ஆதரவாளர்களை மிகவும் வேதனைப்படுத்தியுள்ளன. இன்று தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வருகின்ற சேதம் ஆதரவாளர்களால் வரவில்லை. அந்நியரால் வரவில்லை. கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களாலேயே வருகின்றது. அவர்கள் சுயநலங்கருதிக் கூட்டணியின் குரல்வளையைத் திருகுகிறார்கள். தமிழரசுக் கட்சியின் பரிணாம வளர்ச்சியே தமிழர் விடுதலைக் கூட்டணி. அரை நூற்றாண்டுக்கு மேலான பழமையும் பெருமையும், தனக்கென ஒரு தனித்த ஆளுமையுமுடைய கட்சி. அதன் தலைவர்களை அழித்தவர்களின் எடுபிடிகளாக இன்றைய கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாறியுள்ளமை கட்சியின் வரலாற்றில் கரித்துண்டினால் பதியப்படும். குறிப்பாக அமிர்தலிங்கம் அவர்களின் அழிப்பை கட்சி ஆதரவாளர்கள் என்றைக்கும் மன்னிக்கப் போவதில்லை. அவரது பலியெடுப்பை நியாயப்படுத்துவது போலச் செயற்படுகிறார்கள். அவர்களது செயல் கட்சியைக் கட்டிவளர்த்த அமரர்கள் வன்னியசிங்கம், தந்தை செல்வா, அமிர்தலிங்கம் ஆகியோர்களின் ஆத்மாக்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்யும்.

ஆதரவாளர் ஒருவர் தொலைபேசியில் "நீங்கள் கட்சியை ஏவல்காரனாக்குகிறீர்களே" என்று ஒரு யாழ் கூட்டணிப் பராளுமன்ற உறுப்பினரைக் கேட்டார். அதற்கு அவர் "கனடாவில் இருந்து எதனையும் சொல்வீர்கள். இங்கு வந்து பார்த்தால்தான் எமது நிலை புரியும்" என்று கூறினார். ஆதரவாளர் திருப்பிச் சொன்னார்:

"உயிருக்குப் பயந்தால் பதவியை இராஜினாமச் செய்யுங்கள். கட்சிக்குப் பாராளுமன்ற உறுப்பினர் அவசியமில்லை. நீங்கள் எம்.பியாக விருந்து என்ன வெட்டிக் கிழிச்சுப் போட்டீர்கள்?" என்று சுடச்சுடக்கேட்டார்.

### ஒன்றிணைக்க அரும்பாடுபட்டார்

தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் இயக்கங்களை ஒன்றிணைக்க அரும்பாடுபட்டார். ஆயுதம் தூக்கிய இயக்கங்களுக்குத் தமிழ் மக்களின் விடிவு காலம்மீது அக்கறை இருந்தால் 'யார் குத்தி அரிசியாகினாலும் சரி' என்று ஒதுங்கி இருந்திருப்பார்கள் அல்லது 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்று எல்லா இயக்கங்களும்



ஒன்று சேர்ந்து பேரினவாத சிங்கள அரசை எதிர்த்துப் போராடி இருப்பார்கள். பிரிந்து நின்று குத்தி வெட்டிச் சாகாமல் இயக்கங்களை ஒன்றிணைக்க அண்ணல் எத்தனை தடைவைகள் கெஞ்சினார். அவர்கள் தமக்குள் செய்த குத்துவெட்டுக்களே ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் நீண்டு நீண்டு இன்னுமொரு கால் நூற்றாண்டைக் கடக்கக் காரணமாகி உள்ளது. வரலாறு அந்தக் கேள்வியை ஆக்கிரோசத்துடன் முன்வைக்கும். அண்ணலின் இறுதி அஞ்சலி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடந்த பொழுது இந்திய வெளிநாட்டு அமைச்சர் நட்வர் சிங் சொன்னார்:

"அமிர்தலிங்கம் 1984ஆம் ஆண்டு தொடக்கம் ஆயுதக் குழுக்களை ஒன்றிணைக்க அரும்பாடுபட்டவர். ஆயுதக் குழுக்களின் தலைவர்களை ஐக்கியப்படுத்தப் பல கூட்டங்களை நடாத்தினவர். அவர்கள் தங்களுக்கிடையில் போரிட்டு ஒருவரை மற்றவர் கொன்ற பொழுது அவரது இதயம் இரத்தம் சொரிந்தது. கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அவர் பயனப்படுத்தி அவர்களை ஒன்றிணையும்படி மன்றாடினார்."

பாராளுமன்ற உறுப்பினர்கள் தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் அவர்களது படுகொலையை அடுத்து, அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் நாட்டில் சென்னையில் உள்ள பெரியார் திடலில் நடந்த அஞ்சலிக் கூட்டத்திலும் ஆயுதக் குழுக்கள் ஒன்றுபட்டாலே தமிழ் மக்களுக்கு விமோசனம் உண்டு என்று வலியுறுத்தினார். அவர் கூறியது:

"உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும் இதைச் செய்தவர்கள் யார் என்று. அதற்காக அவர்களை நான் கோபிக்கவில்லை. இந்த நிலையில் இனவெறியன் ஜயவர்த்தனா எமது பிரிவினைகளைப் பயன்படுத்தி எம்மை அழிக்க வாய்ப்பாகிவிடும். எமது இளைஞர்கள் இந்த அநியாயமான படுகொலையில் இருந்து படிக்க வேணடியதைப் படிப்பார்களானால் பயனுள்ளதாக இருக்கும். இவர்களது இறப்பில் இருந்து ஒற்றுமைப்பட்டு செயல்பட வேண்டிய அவசியத்தை உணர்வார்களானால், அவர்களது மரணம்கூட எமது இனத்தின் விடிவுக்குப் பயன்பட்டது என்று நான் கூறுவேன். இங்கு இளைஞர்கள் இருக்கிறீர்கள். நீங்கள் இந்தச் செய்தியை உங்கள் தோழர்கள் எல்லோருக்கும், சகாக்கள் எல்லோருக்கும் எடுத்துச் சொல்லுங்கள்."

இவர்கள் ஏன் ஒற்றுமைப்பட வில்லை? ஒற்றுமைப்பட்டால் தலைவர் யார்? அகவேதான் எல்லோரையும் சுட்டு ஒழித்துவிட்டு தலைமையைக் கைப்பற்ற வகுத்த திட்டத்துக்கே அண்ணல் பலியானார்.

இயக்கங்கள் மக்களுக்குக் கொடுத்த சொத்து:

1949 - 1977 வரையான கால் நூற்றாண்டு காலத்தில் தமிழ் அரசுக் கட்சியும் - தமிழர் விடுதலைக் கூட்டணியும் தொடர்ந்து தமிழ் மக்களை எமாற்றிப் பாராளுமன்றக் கதிரைச் சுகத்தை அனுபவித்ததாக இளைஞர்கள் குற்றஞ் சுமத்தினர். அஹிம்சை பேசும் அவர்களால் தமிழ் மக்கள்து துன்பங்களைத் துடைக்க முடியாது. வன்முறையால் மட்டுமே தமிழ் ஈழத்தை நிறுவி பேரினவாத சிங்கள அரசிடம் இருந்து தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்கலாம் என்று பிரசாரித்தார்கள்.

'பெடியள்' துப்பாக்கி மூலம் இரண்டொரு வருடத்தில் தமிழ் ஈழம் கொண்டு வருவார்கள் என்று மக்கள் நம்பிச் சோத்துப் 'பார்சல்' கொடுத்தார்கள். கூட்டணி ஆதரவாளர்களும் ஓரளவுக்கு அவர்களது பிரசாரத்துக்கு எடுபட்டார்கள். சோத்துப் பார்சலோடு புறப்பட்ட 'பெடியளும்' கால் நூற்றாண்டைக் (1975 - 2002) கடந்துவிட்டார்கள். தமிழ் ஈழத்தின் மணமே இல்லை. தங்களுக்குள் தாண்டவமாடுகிற போட்டி பொறாமைகள், குத்துவெட்டுக்கள் கொலைகளையே அவர்களால் இன்னும் தீர்க்க முடியவில்லை. ஒரு பகுதியினர் சிங்களப் பேரினவாத அரசின் சம்பளப் பட்டியலில் இராஜபோக சுகம் அனுபவிக்கிறார்கள். ஒரு பகுதியினர் மக்களை மறந்து தங்கள் நலன்களை மையமாக வைத்துப் பேரம்பேசுகிறார்கள்.

தமிழ் ஈழம் கொண்டு வருவதற்குப் பதிலாக மக்களுக்குச் சொல்லொண்ணாத் துன்பங்களை இயக்கங்கள் பரிசாக அள்ளி இறைத்திருக்கின்றன. அது இன்னும் ஓயவில்லை. அவற்றிற்கு மக்களின் உணவு உறையுள் பயமின்மை நின்மதி அமைதி ஜனநாயக உரிமைகள் என்பனவற்றிலும் பார்க்க - வடகிழக்குத் தமிழர் தலைமைக் கிரீடத்தில்தான் தீராத மோகம். பட்டாபிசேகம் செய்யாமலே மன்னர்பிரான் என்று வையத்தைச் சுற்றி வேதம் ஓதுகிறார்கள்.



தமிழ் ஈழ சுதந்திர தாகத்தோடு ஆயுதக் குழுக்களின் அழைப்பை ஏற்றுப் போர்க்களம் புறப்பட்ட ஆயிரக்கணக்கான விபரம் புரியாத இளைஞர்கள் இயக்கப் பகைமைகளால் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள். சுட்டுத் தள்ளப்பட்டார்கள். தீயில் போட்டு நடு வீதிகளில் எரிக்கப்பட்டார்கள். கண்களைக் கட்டி நிரையாக விட்டுச் சுட்டுத்தள்ளப்பட்டார்கள். புதைகுழிகளில் கால்கள் தெரிய புதைக்கப்பட்டார்கள். தலையில்லாத முண்டங்களாக வீதிகளில் வீசப்பட்டார்கள். இயக்க உட்பகைகளால் எத்தனை இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு இலங்கையில் மட்டுமல்லாமல் வட இந்திய மலைச் சாரல்களிலும் புதைக்கப்பட்டார்கள்? படுத்த பாயில் வைத்து தலைகள் துண்டிக்கப்பட்டார்கள். தனிமனித பழிவாங்கும் உணர்வுகளுக்கு எத்தனை ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் பலியாகினார்கள்.

அப்பாவிப் பொது மக்களை விட்டார்களா? இரவிரவாக வீட்டுப் பொருட்களைச் சூறையாடினார்கள். மக்கள் பயத்தில் இரவு வேளைகளில் பற்றைகளுக்குள் தூங்கினார்கள். குடியிருந்த வீடுகளைப் பறித்து எடுத்தார்கள். வாகனங்களை அடாத்தாகப் பறித்தார்கள். தோட்டங்களைப் பறித்து எடுத்தார்கள். இருட்டு பங்கர்களில் சங்கிலிகளில் பூட்டிவைத்து உதைத்தார்கள். கைப் பெருவிரல்களில் கட்டித் தொங்க விட்டார்கள். தந்தித் தூண்களில் கட்டிச் சுட்டார்கள். கழுத்தில் இருந்த தாலியைப் பறித்தார்கள். மடியை உதறிப் பிடுங்கி எடுத்தார்கள். எத்தனை எத்தனை ஆயிரம் தாய்மார்கள் சகோதரிகள் இழந்தவற்றை எண்ணி எண்ணித் தினம் தினம் இன்றும் மண் அள்ளித் திட்டிக் கண்ணீர் சொரிகிறார்கள். 'இந்தா' தமிழ் ஈழம் கொண்டுவருகிறோம் என்று ஆயுதம் தூக்கிய இயக்கங்கள் மக்களுக்குக் கொடுத்த சொத்து கண்ணீர்க் குளங்கள், இரத்த ஆறுகள், கால் இல்லாத ஜென்மங்கள், கையில்லாத மனிதர்கள், நடமாடும் எலும்புக் கூடுகள், உடைமைகளை இழந்த ஓட்டாண்டிகள், பிச்சை ஏந்தி உயிர் வாழும் மனிதர்கள், குடில் தேடி அலையும் குடும்பங்கள், கூரையில்லாத வீடுகள், கதவில்லாத மனைகள், இடிந்த சுவர்கள், அண்ணன் இல்லாத தங்கைகள், அப்பனை இழந்த பிள்ளைகள், மகனை இழந்த தாய்மார்கள், கணவனை இழந்த கைம்பெண்கள், கையேந்தி அழும் தந்தையர்கள், நாளை விடியாதா

என்று ஏங்கும் மனிதர்கள். இவையெல்லாம் ஏன்? தலைவர் அமிர்தலிங்கம் இரந்து கேட்டபடி இயக்கங்கள் ஒன்றுபட்டுப் போராடி இருந்தால் இத்தனை அவலங்களை இழப்புக்களை, துன்பங்கள் துயரங்களை மக்கள் சந்திக்கவேண்டி வந்திருக்குமா? வடகிழக்கு மக்களின் சுபீட்சம் 1987இல் உதயமாகியிருக்கும். இன்றைக்கு மக்கள் சுதந்திர மக்களாக சுபீட்சம் நிறைந்த மக்களாக மண்ணின் பெருமை உலகறிய உயர்ந்திருப்பார்கள்.

இத்தனை அழிவுகளுக்கும் காரணம் தமிழர்தம் தலைமையைக் கைப்பற்றுவதற்காக ஆயுதக் குழுக்களிடையே அடம்பிடித்து நடந்த மரணப் போட்டியே.

வரலாறு தேடல் செய்யும்

தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் இழப்பு தமிழர் அரசியல் பரப்பில் நிரப்ப முடியாத பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தி உள்ளது. வரலாறு அதைச் சொல்வதோடு மட்டும் நிற்காது. ஏன் தமிழ் மக்களின் அருஞ் சொத்தை அழித்தீர்கள் என்றும் கேள்விகள் எழுப்பும். அவர் அப்படி என்ன கெடுதல் மக்களுக்குச் செய்தார்?

அந்தப் பெருந்தகை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தகாலை, மக்களுக்குக் கொடுத்த வாக்கைத் தூக்கி வீசிவிட்டு பேரினவாதச் சிங்கள அரசில் அமைச்சர் பதவி பெற்றுப் பணம் பொருள் சேர்த்து வீடுவாசல் வாங்கியதற்காக அல்லது இலஞ்சம் வாங்கிச் சுவிற்சலாந்து நாட்டு வங்கிகளிலே இனபந்துக்கள் பெயரில் இருப்பு வைத்தமைக்காகக் கொலை செய்யப்பட்டாரா? மக்களிடம் துப்பாக்கி முனையில் உருவிய பணத்தில் உறவினர்கள் பெயரில் வெளிநாடுகளில் வர்த்தகத்தில் முதலீடு செய்தமைக்காக அல்லது பெண்கொடுத்த மாமா பெயரில் சொத்துக்கள் வாங்கியதற்காக அல்லது மக்களிடம் பிடுங்கிய தங்கப் பாளங்களைச் சந்ததிக்காக நிலத்தில் புதைத்து வைத்துள்ளதற்காகக் கொலை செய்யப்பட்டாரா? சகோதர தமிழனைக் கடத்திச் சென்று கப்பம் பிடுங்கிச் சுருட்டிய பணத்தில் தமிழகத்தில் பண்ணை வாங்கினார் என்பதற்காகக் கொலை செய்யப்பட்டாரா அல்லது கொழும்பில் அச்சகம் வாங்கித் தம்பி பெயரில் தொழில் நடத்துவதற்காகக் கைதுசெய்யப்பட்டாரா?



அண்ணலை ஏளனம் பண்ணி ஆயுதம் தூக்கிய இளைஞர்கள் பலர் இன்று பலகோடி பணத்துக்கும் சொத்துக்கும் சொந்தக்காரர்கள். இலங்கையில் மட்டுமல்லாமல் உலகம் முழுக்க பணத்தை முதலீடு செய்துள்ளார்கள். சுவிற்சலாந்து வங்கியில் மில்லியன் (யூ.எஸ். டொலர்) கணக்கில் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் வீடுகள் குபேர மாளிகைகள். அவர்கள் பிரயாணம் செய்வது பென்ஸ் பி.எம்.டபிள்யூ. மோட்டார் வாகனங்கள். அண்ணல் துணைவியார் கொண்டு வந்த சீதனத்தையும் மக்கள் பணியில் கைவிட்டவர். இந்த விடத்தில் இந்த ஆசிரியர் நேரே பார்த்த ஒரு நிகழ்ச்சி.

அப்பொழுது தலைவர் எதிர்க்கட்சித் தலைவராகிவிட்டார். ஒரு மாலை நேரம் தெல்லிப்பழையில் காசிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகே உள்ள அவரது தெல்லிப்பழை அலுவலகத்துக்குப் போயிருந்தேன். மக்களைச் சந்திக்கும் அறைக்குள் தலைவர் இருந்தார். அவர் எதிரே நான் இருந்தேன். அவரது அலுவலக உத்தியோகத்தர் தம்பி சிவமகாராசா வேறு அங்கிருந்தார். விறாந்தையில் அவரைச் சந்திக்க வந்த பலர். அவருடைய இரண்டாவது மகன் பகீரதன் அங்கு வந்தார்.

"என்னத்துக்கு அவ்வளவு காசு?"

"ரூ இன் வன் றேடியோ? மலிவாக ஒருவர் விற்கப் போகிறார்' அப்பா."

"என்ன? இன்றைக்குப் புதுமையாக என்னிடம் வாறாய்."

"அம்மா .." வசனத்தை மகன் முடிக்கவில்லை.

"அம்மா குப்பபை விற்கப் போறன் என்றவ. நான் சொல்கிறன். போய் வாங்கு." அண்ணலின் பதில்.

எதிர்க் கட்சித் தலைவருக்கும் மகனுக்குமிடையில் நடந்த இந்தச் சம்பாசனை அவரின் கை எவ்வளவு சுத்தமானது என்பதை மட்டுமல்ல அவர் உழைத்தது எல்லாவற்றையும் மக்கள் சேவைக்காகவே செலவு செய்ததைக் காட்டும். அவரிடம் எஞ்சியிருந்தது எல்லாம் ஒரு மூன்றறை ஆடம்பரம் இல்லாத சின்னவீடு. அதற்கு நீண்ட காலமாகச் சமையல் அறை இல்லை. அவரைச் சந்திக்க ஏழை தொடக்கம் பணக்காரர் வரை செல்வர். அங்கே ஒரு

வாங்கு உண்டு. அதில்தான் அமர வேண்டும். அவரும் அந்த வாங்கில் இருந்து சந்தோசமாக உரையாடுவார். அந்த வீட்டுக்கு ஒரு 'பிரிட்ஜ்' வந்ததுக்கும் ஒரு கதை உண்டு. அவர் வடடுக்கோட்டைத் தேர்தலில் தோற்றபின்னர் கிடைத்த ஓய்வில் தனது சட்டத்தரணித் தொழில் மூலம் உழைத்தபோதுதான் அந்த வீட்டுக்கு ஒரு 'பிரிட்ஜ்' வந்தது.

வேண்டுமானால் சு.நடேசன் போல, சி. சுந்தரலிங்கம் போல, ஜீ.ஜீ.பொன்னம்பலம் கல்குடாத் கே.டபிள்யூ.தேவநாயகம், செ. இராசதுரை போல தலைவர் அமிர்தலிங்ம் அவர்கள் அமைச்சர் பதவி பெற்றிருக்கலாம். அதன் பின்னர் தூதுவர் பதவி பெற்றிருக்கலாம். அதன் மூலம் நன்மைகள் பல பெற்றிருக்கலாம். அமைச்சர் பதவிக்கு 'ஓம்' என்று சொல்லி இருந்தால் சிங்கள அரசு பெருமகனை ஆலவட்டம் சாமரை வீசிச் சிங்காசனத்தில் ஏற்றி இருக்கும். அவர் கொள்கைக்காக வாழ்ந்த ஓர் இலட்சிய புருசர்.

மாத்தையா 'லங்கா காடியன்' பத்திரிகைக்கு அமிர்தலிங்கம் அவர்களை 'இந்தியாவுக்குக் காட்டிக் கொடுத்தவர் - துரோகி' என்று குற்றஞ் சாட்டினார். அதற்காகத்தான் சுட்டதாகச் சொன்னார்.

இந்தியாவுக்கு அமிர்தலிங்கம் அவர்கள் எதனைக் காட்டிக் கொடுத்தார்? அவர் அன்னை இந்திரா காந்தி அவர்களை ஈழத் தமிழர் பக்கம் கருணைகாட்ட வைத்த பெருமை உடையவர். அதன் காரணமாகவே விடுதலை இயக்கங்கள் இந்தியாவில் பயிற்சி பெற முடிந்தது. 1983 இனக் கலவரத்தை இந்திரா காந்தி அம்மையார் லோக சபையில் 'இன அழிப்பு' என்று சொல்ல வைத்து தமிழர் பிரச்சினையை உலகறியச் செய்தவர். பின்னர் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் மூலம் டிசம்பர் 19 தீர்வுகளை நடைமுறைப் படுத்த முயன்றவர். 'உச்ச இரகசியம்' என்ற எச்சரிக்கைக் கடிதத்தை ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் அனுப்பக் காரணமாக இருந்தவர். இலங்கை அரசின் படைகளிடம் யாழ்ப்பாணம் வீழ்ச்சி அடையாமல் இருக்க இந்தியா படை எடுக்கக் காரணமாக இருந்தவர். அதைச் சொல்லாமல் காட்டிக் கொடுத்ததாகச் சொல்கிறார்கள்.

இந்திய 'ஏஜன்ற்' என்று சொல்கிறார்கள். அப்படியானால் எதற்காக நோர்வேயின் தலைமையிலான பேச்சு வார்த்தையை முன்னெடுக்க இந்தியாவில் இடம் கேட்டார்கள்?



கிளிநொச்சியில் 2002 ஏப்பிரல் 10ந் திகதி நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் "ராஜீவ் காந்தி கொலையில் தொடர்பிருப்பதை நீங்கள் மறுக்கிறீர்களா?" என்று கேட்டதற்கு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் என்ன சொன்னார்?

"எனக்குத் தெரியும் இது ஒரு உணர்ச்சியைத் தூண்டும் விடயமென்று. உங்களுக்கு மட்டுமல்ல எங்களுக்குந்தான். பத்து வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு விடயத்தைக் கிளப்புகிறீர்கள். நாங்கள் இந்தியாவோடு நட்புறவாக இருக்க விரும்புகிறோம்" என்று கூறினாரே?

அவ்வாறாயின் எப்படி இந்திய அனுசரணையுடன் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று கூறிய அமிர்தலிங்கம் அவர்கள் மட்டும் இந்தியாவின் 'ஏஜன்ராக - துரோகியாக' இருக்க முடியும். இன்னும் தமிழ் ஈழத்தைக் கைவிட்டதற்காகச் சுட்டதென்றும் மாத்தையா குற்றஞ் சுமத்தினார்.

தலைவர் கொழும்புப் பாராளுமன்றத்தில் தமிழ் ஈழம் பற்றிய தனது நிலைப்பாட்டைத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்:

"1977 மக்கள் எங்களுக்குத் தந்த ஆணை தமிழ் ஈழம் மட்டுமே தீர்வு என்பது. ஆனால் அதிலும் குறைவாக எமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக ஏதாவது தீர்வை முன்வைத்தீர்களானால் நாங்கள் தமிழ் மக்களின் அனுமதியோடு அதனைப் பரிசீலிக்க ஆயத்தமாக இருக்கிறோம்." இவ்வார்த்தைகள் அன்று அவரது வாயினால் வந்த தீர்க்கதரிசனமான வார்த்தைகள். இதற்காகத்தான் 'துரோகி' என்றார்கள்.

2002 - இன்று விடுதலைப் புலிகள் என்ன செய்துள்ளார்கள்? தாய்லாந்தில் வைத்து 'தமிழினத்தின் தாகம் தமிழ் ஈழத் தாயகம்' என்ற மூலமந்திரத்தைக் கைகழுவிவிட்டு ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட தீர்வுக்கு ஆலாய்ப் பறக்கிறார்கள். தமிழ் ஈழத்திலும் குறைந்த தீர்வானால் மக்கள் சம்மதம் பெற்றே அதற்கு முடிவு சொல்ல முடியும் என்றார் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள். ஆனால் மக்கள் சம்மதம் பற்றி இப்பொழுது யாருமே மூச்சு விடுவதில்லை.

இவை யாவும் வரலாற்றில் பதிவு செய்யப்படும். வரலாறு இத்தோடு வினாக்களை முடித்துக் கொள்ளாது.

கடமை கண்ணியத்தில் நேர்மை நியாயத்தில் தவறியதற்காகவா அல்லது வாழ்க்கையில் ஒழுக்கவீனமாக நடந்ததற்காகவா கொலை செய்யப்பட்டார்? அதனையும் வரலாறு விசாரணை செய்யும். அவர் ஒரு நிறை குடம். புகைத்தல், மதுவருந்துதல் போன்ற வரிசையில் வரும் எந்தவித தீய பழக்கங்களும் அற்றவர். அவர் வாழ்க்கை குடும்பத் தலைவன்-தலைவி உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கூறும் இலக்கணம். அரசியல்வாதி எப்படி வாழவேண்டும் என்பதைச் சொல்லும் இலக்கணம். அவர் மாணவப் பருவம் ஒரு மாணவன் எப்படித் தன்னை மனிதனாக்க வேண்டும் என்பதனை அறிவுறுத்தும் இலக்கணம். ஒருவன் மக்கள் தலைவனாகப் போராடப் புறப்பட்டால் முதல் மனிதனாக களத்தில் நின்று போராட வேண்டும் என்பதனைப் போதிக்கும் இலக்கணம்.

1956 - 1987 க்கும் இடையில் தமிழரசு-கூட்டணிக் கட்சி முன் எடுத்த அரசியல் நடவடிக்கைகளால் மக்களின் எத்தனை உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டன? ஒரே ஒரு உயிர். தமிழரசுக் கட்சி ஆரம்ப காலத்தில். திருமலை நடராசன் உயிர் மட்டுமே. திருகோணமலைச் சந்தை அருகே தமிழரசுக் கடசிக் கொடியைப் பறக்கவிட மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஏறிய பொழுது சந்தைக்குள் இருந்த சிங்களவன் சுட்டதால் விழுந்து இறந்தார். திருமலை நடராசன்தான் தமிழர் உரிமைப் போராட்டத்தின் முதல் உயிர்ப் பலி. அந்தக் கொடுமையைத் தலைவர்களால் தாங்க முடியவில்லை. ஆனால் 1987 - 2001 கால இடைவெளியில் எத்தனை எத்தனை ஆயிரம் உயிர்கள் பறி போயிருக்கின்றன? யாராவது கவலைப்பட்டார்களா? யாரால்? அத்தனை உயிர்களைப் பறி கொடுத்தும் தமிழ் ஈழம் கிடைத்தா? கூட்டணி 1987இல் விட்ட இடத்திற்கே ஆயதக் குழுக்கள் இறங்கியுள்ளன. பின்னர் எதற்காக அத்தனை ஆயிரம் ஆயிரம் இரத்தம் உறையும் அவலங்கள்?





திரு. அமிர்தலிங்கம் சிறீ எதிர்ப்பில் விடுதலை - வட்டுக்கோட்டையில் வரவேற்பு (1958)



சிறீ எதிர்ப்புப் போராட்டத்தில் கைதானவர்கள். வ.ந. நவரத்தினம், ஜி. நல்லையா, கு. வன்னியசிங்கம், ந.இ. இராஜவரோதயம், அ. அமிர்தலிங்கம், வ.நவரத்தினம், செ. இராசதுரை (1958)





திரு. அமிர்தலிங்கம் சிறீ எதிர்ப்பு போராட்டத்தில் இரண்டு மாத தடுப்புக்காவலின் பின் விடுதலை (1958)



'சிங்களம் மட்டும்' சட்ட நகலை தீயிடல்
திரு. அ. அமிர்தலிங்கம (1961)





யாழ், கச்சேரியின் பின்புற வாயிலால் வெளிவர முயன்ற அரசாங்க அதிபரின் வாகனத்தை தடுத்து நிறுத்தும் இ.மு.வி. நாகநாதன், திரு. அமிர்தலிங்கம் (1961)



திரு. அமிர்தலிங்கம் சத்தியாக்கிரகத்தில் கட்சி செயற்குழு அங்கத்தவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விசெட கைப்பட்டியுடன் (1961)





தமிழரசு தபால் அதிபர் நாயகம் எஸ். நடராசா, எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம்



தமிழரசு தபால் விநியோகம் - மு. சிவசிதம்பரம்



# பாகம் 3

போரால்
நிகழ்ந்த
அனர்த்தங்கள்
அழிவுகள் சேதங்கள்
வேதனைகள் சோதனைகள் -

அதற்கு அப்பால்
குபேர வாழ்வுகள்
வீரதீரப் பதிவுகள்
அடாவடித்தனங்கள்
அதிகார அதட்டல்கள் -

தலையில் அடித்து
இரத்தக் கண்ணீர்
கொட்டும்
கருவாடாகிச் சுருளும்
அப்பாவி மாந்தர்கள் -

இத்தனையும்
அண்ணலின் வேதம்
மறுத்த
அழிப்பின்
பரிசுகள்.

# அதிகாரம் 64
# அழிவுகளும் அனர்த்தங்களும்

அமிர்தலிங்கம் அவர்களின் இந்திய சார்புச் சிந்தனைகளுக்கு மதிப்பளித்து, 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நிரந்தரப் படுத்தத் தவறியமை தவறு என்பது இப்போதுதான் உணரப்படுகிறது. 1987 - 2001 வரை விடுதலையின் பெயரால் செய்த போர்கள் அர்த்தத்தை இழந்துள்ளன. ஏனெனில் அந்தப் போர்கள் 'தமிழினத்தின் தாகம் தமிழ் ஈழத் தாயகம்' என்ற மூலமந்திரத்தில் சொன்ன 'தமிழ் ஈழத்தைக்' கொண்டு வரத்தவறி உள்ளன. பதினாலு வருட அழிவுகள் இழப்புக்கள் அத்தனையும் அர்த்தம் இழந்துள்ளன.

1987 - 1990 மார்ச் வரை இந்திய அமைதி காக்கும் படையை எதிர்த்துச் செய்த போர்

1990 யூன் - 1994 வரை ஜனாதிபதி பிரேமதாச காலத்தில் செய்த போர்

1995 - 2001 வரை ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் செய்த போர்.

அமிர்தலிங்கம் அவர்களின் இந்தியக் கொள்கை:

இலங்கையின் பூகோள அமைவு இந்தியாவின் தெற்கே 18 மைல் தொலைவில் உள்ளபடியால் வேறெந்த வல்லரசும் இலங்கைத் தமிழருக்காக உதவி செய்ய முன்வர வாய்ப்பில்லாததை அமிர்தலிங்கம் அவர்கள் தீர்க்கமாக உணர்ந்தார். அத்தோடு தமிழ் நாட்டுத் தமிழ் மக்கள், இந்தியாவில் இளவரசனாக மதிக்கப்படும் ராஜீவ் காந்தி அவர்கள் கொலைக்கு (மே 1991) முன்னர், இலங்கை வடகிழக்குத் தமிழர் விடயத்தில் உணர்ச்சிமயமான அக்கறை காட்டினர். 1983 யூலை இனக் கலவரத்தை அடுத்துத் தமிழகம் குமுறிக்கொண்டிருந்தது. அவர்கள் தீக்குளித்தார்கள். இந்திய மத்திய அரசு தமிழ் நாட்டின் ஐந்து கோடி மக்களின் உணர்ச்சிகளைப் புறக்கணிப்பது அதன் தென் பிராந்தியத்தைப் பகைப்பதாக அமையும்



என்பதனால், நம்பிக்கையாக இந்திய உதவி கிடைக்கும் என்பதனைத் தீர்க்கமாக அமிர்தலிங்கம் உணர்ந்தார். அதனால் அவர் வெளிநாடுகள் பல வற்றுக்குச் சென்று ஈழத் தமிழர் பிரச்சினைகளை உலகறியச் செய்தபொழுதும் இந்தியாவையே இறுகப் பற்றி நின்றார்.

இந்தியா மட்டுமே உதவ வாய்ப்பிருப்பதை உணர்ந்த அண்ணல் அமிர்தலிங்கம் அவர்கள் பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அம்மையாரின் கரங்களை வலுவாகப் பற்றி இருந்தார். அவரின் மறைவுக்குப் பின்னர் அவரின் மகன் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் ஆதரவைப் பெற்றார். அமிர்தலிங்கம் அவர்களது இராசதந்திர முயற்சிகள் காரணமாக 1985 ஜனவரி 18ந் திகதி டில்லியில் கடமை புரிந்த இலங்கைத் தூதுவர் திரு. பேனட் திலகரத்தினவை அழைத்து தான் இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்க்க விரும்புவதாக ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் தெரிவித்தார். அது விடயமாக இலங்கை ஜனாதிபதி ஜயவர்தனவைச் சந்திக்க விரும்புவதாக்வும் கூறினார். ஆனால் திரு.ஜயவர்த்தன அவரைச் சந்திக்க விரும்பவில்லை. அதனைத் தொடர்ந்து உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு. பி.சிதம்பரம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திரு. நட்வர் சிங் ஆகியோரை அனுப்பி, 1986 டிசம்பர் 19 தீர்வைத் திணித்தார். அதற்கும் மசியாத போது "உச்ச இரகசியம்" என்ற கடிதத்தின் மூலம் இலங்கை ஜனாதிபதி ஜயவர்தனவை அச்சுறுத்தினார். (இவை முதலாம் பாகத்தில் விரிவாக உள்ளன)

இலங்கைப் படைகள் 1987 மே மாதம் டென்சில் கொப்பக்கடுவ தலைமையில் வடமராட்சியைக் கைப்பற்றியதும் அங்கிருந்து 4500க்கும் மேற்பட்ட இளைஞர்களைக் கைது செய்து இலங்கையின் தென் அந்தக் கடற்கரை ஓரம் உள்ள பூசா சிறைச்சாலைக்கு கப்பல்களில் ஏற்றி அனுப்பின. இலங்கை அரசின் திட்டம் யாழ்ப்பாண இளைஞர்களை எல்லாம் சிறையில் அடைத்துவிட்டு, ஏனைய மக்களுக்கு பங்கீட்டில் அரிசி-மா-மண்ணெண்ணெய்-சவுக்காரம் வழங்கி அடிமைக் கூட்டமாக வைத்துக் கொள்வதே. அவர்களது திட்டம் அடுத்து வலிகாமம், அதனை அடுத்து தென்மராட்சியாக இருந்தது. அமிர்தலிங்கம் அவர்களின் முயற்சியால் "யாழ்ப்பாணம் வீழ்ச்சி அடையக்கூடாது" என்று மேன்மை தங்கிய ராஜீவ் காந்தி அவர்கள் படையை அனுப்பி இருக்காவிட்டால் யாழ்ப்பாண இளைஞர்கள்

யாவரும் சிறையில் அடைக்கப்பட்டிருப்பார்கள். யாழ்ப்பாண மக்கள் பங்கீட்டு உணவில் வாழும் அடிமைக் கூட்டமாக்கப்பட்டிருக்கும்.

1987 இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவிடம் திணித்த மேன்மை தங்கிய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் விடுதலைப் பங்களிப்பு மகத்தானது. வடக்கையும் கிழக்கையும் ஒரு நிர்வாக அலகாக இணைத்தார். அது ஒரு வருடத்தைத் தாண்டி 16வது வருடத்தைக் கடந்துள்ளது. வடகிழக்கைத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் என ஒத்துக்கொள்ள வைத்த மகத்துவ பங்களிப்பு தமிழ் ஈழ விடுதலைவரலாற்றின் அதி உன்னத சாதனையாகப் பதிவாகி உளள்ளது. கற்பனைக்கும் எட்டாத 'பாரம்பரிய தாயக கோட்பாட்டை' சிங்கள அரசு ஏற்க வைத்த பெருமை பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களுக்கும், அவரை ஊக்குவித்த அமிர்தலிங்கம் அவர்களுக்குமே உரியது. பாரம்பரிய தாயக உரிமையை ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்கள் 1987இல் திணித்திருக்காவிட்டால், அந்தப் பிரச்சினை என்றுமே தீர்க்க முடியாத ஒன்றாகவே வளர்ந்திருக்கும் என்பதை, இன்று இழுபறிப்படும் பேச்சுவார்த்தை சாட்சியம் பகர்கிறது. ஈழத் தமிழ் மக்கள் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளார்கள். 'செய்நன்றி கொன்ற மகர்க்கு உய்வில்லை' என்பது தமிழரின் கலாச்சாரம்.

ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டவை:

இந்திய-இலங்கை ஒப்பந்தம்

1. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகமாக உள்ளன. (The Northern and the Eastern Provinces have been areas of historical habitation of Sri Lankan Tamil-speaking people.)
2. தமிழும் ஆங்கிலமும் சிங்கள மொழிக்குச் சமமான உத்தியோக மொழிகளாக இருக்கும்.
3. வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்து ஒரே ஆட்சி அலகாக இருக்கும். அது தொடர வேண்டுமா என்பது ஒரு வருடமுடிவில் கிழக்கு மாகாணத்தில் நடாத்தப்படும் ஒப்புதல் வாக்கு எடுப்பு மூலம் தீர்மானிக்கப்படும். ஜனாதிபதி விரும்பினால் வாக்கெடுப்பை ஒத்திப் போடலாம்.



4. ஒரு இடைக்கால மாகாண அரசும், ஒரு இடைக்கால மந்திரிசபையும் நிறுவப்படும். அவை 17 மாதங்களுக்கு ஆட்சி செய்யும்.
5. மகாண அரசுக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய 1987 டிசம்பரின் முன்னர் தேர்தல் நடாத்தப்படும்.
6. அதிகாரங்களைப் பரவலாக்க அரசியல் திட்டத்தில் அதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்தல் வேண்டும்.
7. இராணுவம் புதிய முகாம்களை விட்டு வெளியேறி 1987 மே 25ந் திகதியில் இருந்த எல்லைக்குள் செல்ல வேண்டும்.
8. அரசியல் கைதிகளுக்கும், பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.
9. வடகிழக்கு மாகாணங்களில் இருந்து அரசாங்கம் அதிரடிப் படைகளை (STF) மீளப் பெற வேண்டும். வடகிழக்கில் உள்ள ஊர்காவல் படைகளைக் கலைக்க வேண்டும்.
10. தமிழ் ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும்.

இதற்குக் கண்டிப்பான கால எல்லை குறிக்கப்படவில்லை.

நோர்வே தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ள இன்றைய சமாதானத்தை நோக்கிய தீர்வு ஒரு கேள்வியை முன்வைக்கிறது. தமிழ் ஈழம் இல்லாத ஐக்கியப்பட்ட ஒற்றை ஆட்சிக்குள் கிடைக்கும் தீர்வு போதுமென்றால் - 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கையை ஏற்று வடகிழக்கு நிருவாகத்தை பொறுப்பேற்றிருந்தால் இற்றை வரையில், தமிழர் தாயகம் பூத்து மலரத் தொடங்கி ஒன்றரைத் தசாப்தங்கள் ஓடி முடிந்து இருக்கும். இந்திய-இலங்கைச் சமாதான ஒப்பந்தப் பிரகாரம் வடகிழக்கில் முகாம்களுக்குள் முடக்கப்பட்ட சிங்கள இராணுவம் படிப்படியாகத் தென் இலங்கைக்கு நகர்த்தப்

பட்டிருக்கும். இந்திய அமைதி காக்கும் படை வந்த பின்னர் திருகோணமலையில் தமிழன் விட்ட சுதந்திரக் காற்றை இனி என்றும் கற்பனையிலும் நினைக்க முடியாது. மேலும், 1987 - 2001 பதினாலு வருட கால இடைவெளியில் இந்தியாவின் உதவியோடு ஈழத் தமிழர்களின் உரிமைகளை மேலும் வலுப்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் நிரம்ப நிரம்ப இருந்தன. ஆகவேதான் 1987 - 2001 வரை 14 வருடங்கள் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள் அனுபவித்த துயரங்கள் பேரழிவுகள் அர்த்தமற்றவை என்று சொல்ல வைக்கிறது. இன்னும் 1987 ஒப்பந்தம் இந்திய அரசின் மேலாண்மையில் செய்யப்பட்ட தீர்வானபடியால் அதனை முன்னரைப் போலச் சிங்கள அரசால் கிழித்தெறிய வாய்ப்பிருக்க வில்லை. இப்பொழுது நோர்வே அனுசரணையில் எழுதப்படும் தீர்வை சிங்கள அரசு கிழத்தெறிந்தால் என்ன செய்வது?

அறுவடை

1987 - 2001 வரையான விடுதலைப் புலிகளின் 14 வருடப் போர்கள் - தமிழ் ஈழம் கொண்டு வருவதற்குப் பதிலாக - சுமந்து வந்த பிரதான விளைவுகள் விசித்திரமானவை. இப்பொழுது தமிழ் ஈழம் என்ற பேச்சையே காதில் கேட்க முடியவில்லை. தாய்லாந்தில்தான் அதன் இறுதி மூச்சுக் கேட்டது. ஆகவேதான் அப்போர்கள் அர்த்தம் இழந்தவை என ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. அப் போர்கள் ஆறு பிரதானமான விளைவுகளைக் கொண்டு வந்துள்ளன:

1 புகழும் புதியபுறநானூறும்
2 இனிமேல் இனக்கலவரம் செய்யமாட்டார்கள்.
3 தமிழ் மொழித் தொண்டு
4 புலம் பெயர்ந்த குபேரர்கள்
5 பேரழிவும் பெருந்துயரமும்
6 தீராத பகை கொண்டுவந்துள்ளது

1. புகழும் புதியபுறநானூறும்

14 வருடப் போர்கள் விடுதலைப் புலிகளுக்குப் பேரையும் புகழையும் கொண்டுவந்து குவித்துள்ளன. வரலாற்றில் புதிய



புறநானூற்றைப் பதிவு செய்துள்ளன. அதாவது விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு முகாமையும் ஆனையிறவு முகாமையும் அடித்து நொருக்கிக் கைபப்பற்றினார்கள். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புலிக் கொடி பறக்க விட்டார்கள். வடகிழக்கு கரையோரத்து அதிமுக்கிய இராணுவ முகாம் முல்லைத்தீவு முகாம். நவீன ஆயுதங்களையும் 1500 இராணுவ சிப்பாய்களையும் கொண்டது. 1996ஆம்ஆண்டு யூலை 18ந் திகதி விடியற் காலை 1.30 மணிக்கு அந்த முகாமைத் தாக்க ஆரம்பித்து 40 மணி நேரத்துள் முகாமைச் சேர்ந்த 1408 சிங்கள இராணுவ வீரர்களைக் கொன்று அதனைக் கைப்பற்றிய பெருமை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு உண்டு.

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான கேந்திர தானத்தில் உள்ள ஆனையிறவு இராணுவ முகாம் நூற்றாண்டு பழமை வாய்ந்தது. 2002 ஏப்பிரல் மாதம் ஏறக்குறைய இரண்டு வாரங்கள் போரிட்டு அந்த முகாமைச் சேர்ந்த ஏறக்குறைய 1000 படை வீரர்களைக் கொன்று ஆனையிறவைக் கைப்பற்றிய வீரப் பெருமைக்கு உரித்து உடையவர்கள் விடுதலைப் புலிகள். அதனைவிடக் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புரிந்த சாகச சாதனைகள் உலக வரலாற்றில் எழுதப்பட்டுள்ளன. தமிழ் இனம் பெருமைப்படக் கூடிய சாதனைகள் 14 வருடப் போர்களின் பொழுது பதிவாகி உள்ளன.

2 இனிமேல் இனக்கலவரம் செய்யமாட்டார்கள்.

பதினாலு வருடப் போர் மூலம் புலிகள் எழுதப்படாத மிகப் பெரும் சாதனை ஒன்றைப் பதிவு செய்துள்ளார்கள். 1983 யூலை மாதம் திருநெல்வேலியில் 13 இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் கொன்றதை அடுத்து சிங்களவர்கள் இனக் கலவரத்தை ஆரம்பித்தனர். இப்படியாக சில்லறைச் சாட்டை வைத்து 1958 தொடக்கம் விட்டு விட்டு இனக் கலவரம் செய்து வந்த சிங்கள சமூகம், 1996ஆம் ஆண்டு யூலை 18ந் திகதி முல்லைத்தீவில் 1408 சிங்கள இராணுவ வீரர்கள் விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்டபோது இனக் கலவரத்தை ஆரம்பிக்க வில்லை. அதன் பின்னர் 2002இல் ஆனையிறவில் 1000 சிங்கள இராணுவ வீரர்கள் இறந்த போதும் இனக் கலவரம் தொடங்கவில்லை. கட்டுநாயக்கா பற்றி எரிந்ததை யடுத்தும் இனக் கலவரம் ஆரம்பிக்கவில்லை. இனிமேல் அவர்கள்

இனக்கலவரத்தை நினைத்துப் பார்க்கமாட்டார்கள். இது விடுதலைப் புலிகள் வரலாற்றில் பதித்த ஈடிணையற்ற மகத்தான சாதனை. தமிழன் தலை நிமிர்ந்து நடக்க வைத்த பெருமைக்குரியவர்கள் விடுதலைப் புலிகள்.

## 3. தமிழ் மொழித் தொண்டு

பதினான்கு வருடப் போர்க் காலத்தில் விடுதலைப் புலிகள் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு மகத்தானது. அவர்களின் தமிழ் மொழியிலான பிரசாரங்கள் உலகளாவியவை. தமிழ் நாட்டில் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தமிழைக் கொலை செய்கின்றன. ஆங்கில வார்த்தைகளைப் புகுத்தி வாசகனைப் பதம்பார்க்கின்றன. சிறுகதைகள் நாவல்கள் கட்டுரைகள் நாடகங்களில் படு மோசமாக ஆங்கில மொழிக் கலப்புச் செய்யப்படுகின்றது. செந்தமிழ் உருமாறித் தெரிகிறது. சஞ்சிகைகளில் வரும் சில சிறுகதைகள், தொடர் நாவல்கள், சில நாவல்கள் - அவை சிலவேளை தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு விளங்கலாம். எமக்கு விளங்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியிடும் ஆக்கங்களில் ஆங்கிலக் கலப்பு முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. ஒரு புதிய தூய தமிழ் வசனநடையைத் தமிழுக்கு வழங்கியுள்ளார்கள். தமிழர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர் வைக்கவேண்டும் என்று பிரசாரம் செய்கிறார்கள். தமிழ் இலக்கிய வரலாற்றில் விடுதலைப் புலிகளின் உரைநடைத் தொண்டு பற்றி நிரம்பவே போற்றிப் பேசப்படும். மொழி என்று வருகிற சமயத்தில் ஆங்கிலத்தின் புதை குழியில் தமிழ் வளரக்கூடாது. இரண்டு மொழிகளும் இரு கண்களாக இருக்க வேண்டும்.

## 4. புலம் பெயர்ந்த குபேரர்கள்

மூன்றாவதாக 14 வருடப்போர்களின் கொடுமை ஏறக்குறைய நான்கு இலட்சம் ஈழத் தமிழர்கள் வெளிநாடுகளில் குபேர வாழ்க்கை நடாத்த வழிசெய்துள்ளது. அவர்கள் படுப்பது நறுமண மூட்டிய பஞ்சணை மெத்தைகளில். கட்டிலில் இருந்து கால்மிதிப்பது பளபளக்கும் கம்பள்த்தில். கழிவு அறைக்குள் புகுந்தால் பன்னீர் வாசம். கண்ணைப் பறிக்கும் சலவைக்கற்கள். குளிக்கும் தொட்டிக்குள் ஒரு வெந்நீராட்டம். கோட் சூட் மாட்டி காலணி கொழுவி வேலைக்குப்



புறப்படுகிறார்கள். வாசலில் அழகான புதுக்கார். அப்பாவுக்கு ஒரு வான். அம்மாவுக்கு ஒரு கார். மகளுக்கு வேறு கார். அவை தேவலோக மங்கை போல அவர்களைச் சுமந்து செல்கின்றன. வேலையால் திரும்பினால் ஒரு புது உலகம். விதவிதமான குடிவகைகள். நண்பர்கள் வருவார்கள் நளள்ளிரவுவரை ஒரே கொண்டாட்டம். ஆட்டம் பாட்டு கச்சேரி. இறைச்சி சமைக்காத நாட்கள் இல்லை. மாட்டிறைச்சிதான் ஆரோக்கிமானது என்று சொல்கிறார்கள். கோழி வேணுமா ஆடு வேணுமா பன்றி வேணுமா மான் வேணமா மரை வேணுமா? எல்லாம் கிடைக்கும். குடிவகையும் இறைச்சியும் பாலும் பழமும் முட்டையும் கொள்ளை மலிவு. எல்லாம் 'பிறீசர்' நிறைய வைத்திருக்கிறார்கள். போதாததுக்கு 15 அல்லது 20 இலட்சம் செலவழித்து பிறந்த தினக் கொண்டாட்டங்கள், பூப்பு நீராட்டு விழாக்கள். எல்லாம் போட்டிக்குப் போட்டி. படித்தவர் படியாதவர் - முன்னர் ஆங்கிலம் படித்தவர் படியாதவர் என்றில்லை. எல்லோரும் ஒரேவகை வாழ்க்கைதான். குபேர வாழ்க்கை.

ஈழத்து ஒட்டாண்டிகளுக்குப் புத்திமதி சொல்லும் வெளிநாட்டில் வாழும் தமிழ் குபேரர்கள் இன்னும் இரண்டு மூன்று தலை முறைகள் கழிய தென் அமெரிக்காவில் உள்ள கயானாத் தமிழர்கள், மேற்கு இந்திய தீவுகளில் உள்ள ரிறினிடாட் தமிழர்கள், யமேக்கா தமிழர்கள் போல மூலவேர் தெரியாத, தமிழ் தெரியாத, ஒரு இனமாகிவிடுவர். குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் 1838 - 1917 காலப் பகுதியில் தோட்டங்களில் வேலை செய்வதற்காகத் தென் இந்தியாவில் இருந்து கொண்டு செல்லப்பட்டவர்கள். அவர்களுக்கு ஏற்பட்ட கதி புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்கு வராது என்று சொல்ல முடியாது. ஏனெனில் இரண்டாவது தலை முறை தெக்கித் தெக்கித் தமிழ் பேசினாலும் எழுத வாசிக்க முடியாத சமூகமாக உள்ளது. மூன்றாவது தலைமுறையின் தமிழ் ஞானம் எப்படியாகும்? அவர்களுக்கு இலங்கைத் தமிழ்க் கலாச்சாரம், மொழி, நாகரிகம் எதுவும் ஒத்துவராது. அவர்களது கண்களில் யாழ்ப்பாணம் ஒரு அநாகரிக தேசம். தமிழ் தெரியாத தமிழ் கலாச்சாரம் அருகிய தமிழ்த் தோலை மட்டும் உடைய ஒரு ஈழத் தமிழ்ச் சமுதாயம் வெளிநாடுகளில் உருவாகவே 1987இன் பிந்திய 14 வருட கால விடுதலைப் போர் வழிசமைத்துள்ளது. இன்னும் ஒரு அரை நூற்றாண்டில் மூலவேரை மறக்கப் போகும்

சமூகம், அமிர்தலிங்கம் அவர்களைப் பகைத்துப் பார்க்கப் பாடம் நடாத்தப்படுகிறது. அவர்களுக்கு குமார் பொன்னம்பலம் மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் என்று வேதம் ஓதப்படுகிறது. குமார் பொன்னம்பலத்துக்குக் கனடாவில் முத்திரை வெளியிட்டுள்ளார்கள். வருடா வருடம் விழா எடுக்கிறார்கள். மக்களால் அடுத்து அடுத்து தேர்தல்களில் முற்றாக ஒதுக்கப்பட்ட - நேரத்துக்கு ஒரு விலை உயர்ந்த ஆடம்பரக் காரில் பவனிவந்த இந்தக் கோடீஸ்வர மனிதர் குமார் பொன்னம்பலம் ஈழத் தமிழர்களின் அரை நூற்றாண்டு உரிமைப் போராட்ட வரலாற்றில் எப்போது பங்கு கொண்டார்? இவர் தன்னை விடுதலைப் போராட்ட வரலாற்றோடு அடையாளப்படுத்த முயன்று தோற்றது அவரது இறுதி தசாப்தத்தின் இறுதிப் பாதியில்தான். அதன் முன்னர் கிடையவே கிடையாது. அவர் பத்திரிகைகளில் துணிகரமாக விடுதலைப் பேராட்டம் சார்பாக ஒரு சில கட்டுரைகள் எழுதினார். ஏழையும் தாண்டாது. வெளிநாடுகளுக்கு நாலு தடவைகள் தனது செலவில் போய் ஆயுதப் போராட்டத்துக்குச் சார்பாகப் பிரசாரம் செய்தார். அந்த முயற்சிகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணியை சாடுவதற்கான களமாகப் பயன்படுத்தினார். அவர் விடுதலைப் புலிகள் தன்னைப் பேச்சாளராக வைத்துக்கொள்வார்கள் என்ற பேராசையிலேயே அப்படி யெல்லாம் முயன்று பார்த்தார். ஆனால் விடுதலைப் புலிகள் அந்த மாமனிதர் மறையும் வரை அப்படி எதுவும் தவறாகச் செய்யவில்லை. ஆனால் அதே குமார் பொன்னம்பலத்தை அவர் மறைவின் பின்னர் விசேடமாகப் புலம் பெயர்ந்த சமூகத்துக்குத் தூக்கிப்பிடித்துக் காட்டுவது ஒரு உண்மையை மறைக்கவே. அதைத்தான் இந்த நூலின் இறுதி அத்தியாயங்கள் பேசுகின்றன.

## 5. பேரழிவும் பெருந்துயரமும்

விடுதலை புலிகளின் பதினாலு வருடப் (1987-2001) போர்கள் பரிசளித்த பேரழிவுகளுக்கு எல்லை இல்லை. பாடசாலைகள், கோவில்கள், பொதுக் கட்டடங்கள், வீடுகள் குண்டுகளால் குப்பை மேடுகளாக்கப்பட்டுள்ளன. எஞ்சிய கட்டடங்கள் வீடுகள் எதுவும் உருப்படியாக இல்லை. சில ஊர்மனைகள் இருந்த சுவடே தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளன. பல ஊர்மனைகள் சுடலைகளாகக் காட்சி அளிக்கின்றன. யாழ்ப்பாணம் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள வலிவடக்கின் வடபகுதி முழுவதும் 13 வருடங்களாக மக்கள் கால்



மிதிக்காத பற்றைக் காடுகளாக மாறியுள்ளன. கிழக்கு மாகாணத்திலும் சில கிராமங்களுக்கு இன்னும் 'மக்கள் திரும்பவே இல்லை. சில கிராமங்களின் மக்கள் ஓடியபின்னர், அவர்களின் காணி பூமிகளை அறாவிலைக்கு வேற்று இனத்தவர்கள் வாங்கியுள்ளார்கள். இனிமேல் அந்தக் கிராமங்களில் என்றுமே தமிழர் குடியிருக்க வாய்ப்பில்லை. கிழக்கில் பாரம்பரிய தமிழ்க் கிராமங்கள் ஒட்டு மொத்தமாக விலை போயிருக்கின்றன. இராணுவம் அழித்ததுபோக எஞ்சிய மனைகள் கறையான் ஆட்சிக்கு இரையாகியுள்ளன. வெளிநாடுகளுக்கு ஓடித்தப்ப முடியாமல் எஞ்சியவர்கள் உள்நாட்டில் உயிரைப் பிடித்துக்கொண்டு வாழ்கிறார்கள். ஒரு பக்கம் இராணுவம். மறு பக்கம் இயக்கங்கள். கணிசமான தொகையினர் இடம் பெயர்ந்து குடில்களில் வாழ்கிறார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 80,000 அகதிகள் ஐந்தடி உயரம் 30 சதுரவடி உடைய சின்னச் சின்ன ஓட்டைக் குடில்களில் வாழ்கிறார்கள்.

நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சு வார்த்தை தொடங்கி ஒரு வருடம் முடிந்தும் யாழ்ப்பாணத்தில் மட்டும் யுத்தத்தால் இடம் பெயர்ந்த 21 ஆயிரத்து 232 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 181 பேர் நலன்புரி நிலையங்களில் தொடர்ந்து (2003 ஜனவரி) வாழ்ந்து வருகிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| நெடுந்தீவு | 5 | குடும்பங்களைச் சேர்ந்த | 21 பேர் |
| வேலணை | 24 | குடும்பங்களைச் சேர்ந்த | 94 பேர் |
| யாழ்ப்பாணம் | 1,281 | குடும்பங்களைச் சேர்ந்த | 4,782 பேர் |
| நல்லூர் | 3,842 | குடும்பங்களைச் சேர்ந்த | 12,999 பேர் |
| சண்டிலிப்பாய் | 2,292 | குடும்பங்களைச் சேர்ந்த | 9,152 பேர் |
| சங்கானை | 1,643 | குடும்பங்களைச் சேர்ந்த | 5,941 பேர் |
| உடுவில் | 3,078 | குடும்பங்களைச் சேர்ந்த | 10,636 பேர் |
| தெல்லிப்பழை | 1,172 | குடும்பங்களைச் சேர்ந்த | 4,344 பேர் |
| கோப்பாய் | 1,791 | குடும்பங்களைச் சேர்ந்த | 6,264 பேர் |
| கரவெட்டி | 506 | குடும்பங்களைச் சென்ற | 2,369 பேர் |
| பருத்தித்தறை | 2,061 | குடும்பங்களைச் சேர்ந்த | 6,555 பேர். |
| மருதங்கேணி | 3,537 | குடும்பங்களைச் சேர்ந்த | 14,024 பேர் |

இதே நிலைதான் மட்டக்களப்பு திருகோணமலை மன்னார் வன்னி அம்பாறை மாவட்டங்களிலும். அம்பாறை மாவட்டத்தில் சில தமிழ்க் கிராமங்களில் இருந்து தமிழ் மக்கள் ஊர்காவல் படை முஸ்லிம்களால் முற்றாகவே வெளியேற்றப்பட்டுள்ளார்கள். சில தமிழ்ப் பாடசாலைகள் முஸ்லிம் பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. அட்டப்பள்ளம், மீனோடைக்கட்டு, திராயக்கேணி, சம்மாந்துறை தமிழ்க் குறிச்சி, நிந்தவூர் கடற்கரை ஒழுங்கை ஆகிய பாரம்பரிய தமிழ் கிராமங்களில் வசித்த தமிழ் மக்கள் முற்றாக வெளியேற்றப் பட்டுள்ளார்கள். மீனோடைக்கட்டு சைவக்கோவில், நிந்தவூர் ஐனார் கோவில் என்பன அழிக்கப்பட்டு அவற்றின் நிலங்கள் முஸ்லிம்களால் பறிக்கப்பட்டுள்ளன. அக்கரைப்பற்று கருங்கொட்டித்தீவில் உள்ள ஆதிசைவப் பிராமண குரு பரம்பரைக்குரிய யாருக்கும் விற்க முடியாத உறிதியை உடைய 19 ஏக்கர் நெல்வயல் முஸ்லிங்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்மாறாக வடமாகாணத்தில் இருந்து வெறுங்கையோடு வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் இன்னும் இன்னல்கள் தீர்க்கப்படாதவர்களாக தென் இலங்கை அகதிக் குடில்களில் அல்லல்படுகின்றனர். அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் தமிழர்கள் பார்த்துக்கொண்டு மௌனமாகவிருந்தனர். இது தமிழர்களின் பாரம்பரிய பெருமைகளுக்கும் தீராத பழி கொண்டு வந்துள்ளது. வட திருகோணமலை மாவட்டத்தில் அகதிகளாகிய முஸ்லிம் மக்களும் இன்னும் சகஜவாழ்வுக்குத் திரும்ப வில்லை. மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உள்ள தங்கள் வயல்களுக்கு முஸ்லிம் சகோதரர்கள் போய் அவற்றைச் செய்கை பண்ண முடியாத நிலை காணப்படுகிறது. முஸ்லிம் மக்கள், தமிழ் மக்கள் - இருபகுதியுமே பாதிக்கப்பட்டுள்ளனர்.

1987இல் இந்திய அமைதி காக்கும் படை வந்த போதும் வலிவடக்கு மக்கள் மல்லாகத்துக்குத் தெற்கே இடம்பெயர்ந்து வாழ்ந்தார்கள். இந்திய அமைதி காக்கும் படை வந்த மறுதினமே மக்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்ப முடிந்தது. இப்போது பேச்சுவார்த்தை தொடங்கி இரண்டு வருடங்கள் முடிந்துவிட்டன. குடியிருந்த வீட்டுக்கே திரும்பிப் போக வழி செய்யமுடியாததால் மக்கள் திண்டாடுகிறார்கள். நலன்புரி நிலையங்களுக்கு வெளியே தங்கள் இல்லங்களில் வாழும் மக்கள்தானும் சுகபோகமாக



வாழ்கிறார்களா என்ன? வலிகாமத்தை மட்டும் பார்ப்போம். 1995இல் உயிரைப் பிடிக்கத் தென்மராட்சிக்கு ஓடிச்சென்ற வலிகாமத்து மக்கள் வீடு திரும்பிக் கண்ட காட்சிகள்? வீடுகள் பல சுடலை மேடுகளாக இருந்தன. எஞ்சிய வீடுகளுக்கு கூரைகள் இல்லை. கதவுகள் இல்லை. யன்னல்கள் இல்லை. வீட்டில் விட்டுச் சென்ற சட்டி பானைகள் பாய் படுக்கைகள்கூட இல்லை. ஒரு நீர்வேலிக் கத்தி வாங்கவே பல நாட்கள் யோசித்த தமிழன் ஒரு அகப்பைக் காம்புக்காக ஆலாய்ப் பறக்கிறான். இதே நிலைதான் வடகிழக்கு முழுவதும். போதாதற்கு வரி அறவிடுவோரின் அட்டகாசம், அடாவடித்தனம் வேறு.

உள்நாட்டில் உயிர் பிழைத்த மக்களைப் போர்கள் ஓட்டாண்டிகள் ஆக்கியுள்ளன. தோட்டங்களுள் கால் மிதிக்க பயம். பயிர் செய்தாலும் விற்க மார்க்கம் இல்லை. ஒரு காவோலை எடுத்துவர அடுத்த பனை அடைப்புக்குள் கால் மிதிக்க முடியாது. போனவர் காலை இழக்காமல் திரும்பி வந்தால் முற்பிறப்பின் புண்ணியம் அது. அரச உத்தியோகத்தர்களைத் தவிர்ந்தவர்களுக்கு வேலை இல்லை. வருவாய் இல்லை. பொருட்களின் விலை ஆனைவிலை குதிரைவிலை. வெளிநாட்டுப் பணம் கிடைப்பவர்கள் விடும் கொட்டாவியைப் பார்த்து ஏனையவர்கள் ஏங்கும் நிலை. மக்களை மனநோய்க்கு ஆளாக்கி உள்ளது. உயிரைப் பிடித்து வைத்து வாழ முடியாதவர்கள் தற்கொலை செய்கிறார்கள். அடிப்படைக் கட்டுமானங்கள் யாவும் சிதைக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் மூலவளமான கல்வி சாகடிக்கப்பட்டு விட்டதை 2002 பல்கலைக்கழக அனுமதி சொல்கிறது. கல்விப் பொதுத் தராதர் (சாதாரணதரப்) பத்திரப் பரீட்சைப் பெறுபேறுகளும் படுமோசமாக வீழ்ச்சி கண்டுள்ளன. தாய் மொழியில் எழுத வாசிக்கத் தெரியாதவர்களும் ஏழாம் எட்டாம் வகுப்புகளில் உள்ளனர்.

தமிழ் ஈழ விடுதலைப் போருக்கு அடிப்படையான உடனடிக் காரணி பல்கலைக்கழக அனுமதிக்கு 1972இல் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மொழிமூல தரப்படுத்தலாகும். யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை அது காலம்காலமாக இலங்கையின் ஏனைய சகல மாவட்டங்களை விடவும் கல்வியில் முன்னணியில் திகழ்ந்தது. 1948ல் கிடைத்த சுதந்திரத்துக்கு முன்னர் அரச

சேவைகளில் தமிழர்களே பெரும்பாலும் கடமை புரிந்தனர். புகையிரத இலாகா போன்ற சிலவற்றில் தமிழர்கள் ஏகபோகமாகக் காணப்பட்டனர். தமது சனத்தொகை விகிதத்துக்குப் பலமடங்கு அதிகமாக - சில இலாகாக்களில் 75 சதவீதமானவர்கள். தமிழர்களாக- குறிப்பாக யாழ்ப்பாணத்தவராக விருந்தனர்.

சுதந்திரத்தை அடுத்துப் பல்கலைக்கழகங்களின் அனுமதி திடீரென அதிகரித்தது. அந்த அதிகரிப்புத் தமிழர்களுக்கே வாய்ப்பானதாக இருந்தது. திறமை அடிப்படையில் பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றினர். சனத்தொகையில் 74 சதவீத மக்களைக் கொண்ட சிங்களவர்கள் தமது உரிமையை, திறமை அடிப்படைத் தெரிவு தட்டிப் பறிப்பதாக எண்ணினர்.

அதன் விளைவாக பல்கலைக்கழக அனுமதிக்கு மொழிமூலத் தரப்படுத்தல் புகுத்தப்பட்டது. அதற்கு இருந்த எதிர்ப்பின் காரணமாக 30:55:15 என்ற விகித முறை கொண்டு வரப்பட்டது. 30 சதவீதம் திறமைக்கும், 15 சதவீதம் பின்தங்கிய மாவட்டங்களுக்கும் வழுங்கப்பட்டது. வவுனியா, அம்பாறை, திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, பதுளை, மொனறாகலை, மட்டக்களப்பு என்பன பின்தங்கிய மாவட்டங்களாகக் கொள்ளப்பட்டன. 55 சதவீதம் மாவட்ட சனத்தொகை அடிப்படையில் வழங்கப்பட்டது. அப்படியிருந்தும் யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் திறமைக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் பெரும்பகுதியைக் கைப்பற்றினர். அதனால் தரப்படுத்தல் பற்றிய குரோதம் எப்பவோ மறைந்து போயிற்று.

புலிகளின் 14 வருடப்போர் யாழ்ப்பாணத்தில் காலாதிகாலமாக பெருமையோடு ஏற்றிப் போற்றி வளர்க்கப்பட்ட கல்வியில் மண் அள்ளிக் கொட்டியுள்ளது. வைத்தியத்துறைக்கு மாவட்ட கோட்டாவுக்கே மாணவர்கள் தேவையான புள்ளிகளைப் பெறமுடியாத அவலம். பொறியியல் துறை படுமோசமான வீழ்ச்சி கண்டுள்ளது. யாழ்ப்பாணக் கல்வி எவ்வளவுக்கு 14 வருடப்போரால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதனை 2003 டிசம்பர் மாதம் நடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இப்பரீட்சையில் ஆகக்கூடுதலான புள்ளிகளை சிங்களப்பிதேசப் பாடசாலைகள் பெற்றுள்ளன. முதலாவதாக வந்த கேகாலை மாணவன் கே.ரி.ஏ.ஆரியரத்தின 193 புள்ளிகள் பெற்றுள்ளார். மேலும் பல சிங்கள மாணவர்கள் 190 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். ஆயிரக்கணக்கான சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களைவிடக் கூடுதலான புள்ளிகள் பெற்றுள்ளனர். வடகிழக்கு மாகாண மாணவர்கள் ஆதாளபாதாளத்தில் உள்ளனர். அங்கு ஆகக்கூடி புள்ளியாக 182 புள்ளிகளை திருகோணமலை மாவட்ட ஸ்ரீ கோணேஸ்வர கல்லூரி மாணவன் என்.அபிலாஸ் பெற்றுள்ளார். அடுத்து 180 புள்ளிகளைத் திருகோணமலை மாவட்ட நிலாவெளி மஹாவித்தியாலய மாணவனும், அதனை யடுத்து 173 புள்ளிகளை மட்டக்களப்பு மாவட்ட பட்டிருப்பு மத்திய கல்லூரி மாணவனும், வவுனியா மாவட்ட வவுனியா தமிழ் மஹாவித்தியாலய மாணவனும் பெற்றுள்ளனர். யாழ் மாவட்டம் பரிதாபமான இறுதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.



யாழ் மாவட்டம் பெற்ற அதியுச்ச புள்ளி 171. அதனை யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் பி.யதுர்ஷணன் பெற்றுள்ளார். 14 வருடப்போர் கொண்டுவந்த பாதிப்பின் கொடுமையை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் எடுத்துக்காட்டப் போதுமானவை.

தரப்படுத்தலை எதிர்த்து திறமையடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி தேவையென்று முதலில் துப்பாக்கி ஏந்திய மாவட்டம் யாழ்ப்பாணம். அந்த மாவட்டம் இப்பொழுது திறமைக்குப் போராடவில்லை. கருணையில் தங்கிய பின்தங்கிய மாவட்டங்களோடுகூடப் போட்டியிட முடியாத பரிதாப நிலையில் வதைகிறது. பின்தங்கிய மாவட்ட உரிமைக்காகத் துப்பாக்கி ஏந்திப் போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு யாழ் மாவட்டம் ஆளாக்கப்பட்டுள்ளது.

இவ்வகையான அழிவுகள் மக்களுக்கு வரக்கூடாது என்பதைத் தீர்க்கதரிசனமாக உணர்ந்தே அமிர்தலிங்கம் அவர்கள் இந்திய மேலாண்மையில் கிடைத்த 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க வேண்டும் என்று புத்திமதி சொன்னார். கெடு குடி சொற்கேளாது. மக்களும் செவியாக்கவில்லை. அவரது சாணக்கியத்தை உதாசீனம் செய்து 'பெடியளின்' பின்னே தமிழ் ஈழம் அமைக்கச் சென்ற மக்கள் தமது தவறுகளுக்காக வட்டியும் முதலுமாக இப்பொழுது வருந்துகிறார்கள். போன உயிர் திரும்பி வருமா? அழிந்த சொத்து எழுந்து வருமா?

எரிந்த வீடு பண்டம் பொருட்கள் மீண்டும் கிடைக்குமா? பட்ட வேதனைகளில் உளலும் மக்கள் வாய் திறக்கப் பயப்படுகிறார்கள். அவர்களுக்கு நியாயங் கேட்கச் சந்தர்ப்பங்கள் இனி நிரம்ப வரும். அப்பொழுது "இத்தனை நாட்கள் பட்டது போதும் சாமி" என்று வணக்கம் சொல்ல, அவர்கள் பட்ட அனுபவங்கள் நிர்ப்பந்திக்கும்.

வெளிநாடுகளுக்கு ஓடித் தப்ப முடியாமல் ஈழத்திய வாழும் சமூகம் அனுபவத்தில் நிரம்பக் கற்றுக்கொண்டுள்ளது. 1987இன் பிந்திய ஈழத் தமிழ் மக்கள் வரலாறு, மக்களை மையமாக வைத்து அல்ல, போர்க்கள வெற்றிகளை மையமாக வைத்தே நகர்கின்றது. அதனால் மக்களைப் பலிவைக்க வேண்டிய பல சந்தர்ப்பங்களைத் தவிர்க்க முடியவில்லை. இப்பொழுது படையெடுத்து வரும் போர்க்கள வெற்றிப் பிரசாரங்கள், வீதி அட்டை ஆர்ப்பாட்டங்கள் வெறும் கண்துடைப்பு என்பதை மக்கள் புரியத் தொடங்கியுள்ளார்கள். சமாதானம் 2002இல் வந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்த மக்களுக்கு, இரு வருட அனுபவம் மீண்டும் தாம் பேச்சுவார்த்தையின் மையத்தில் இல்லை என்பதை உணர்த்தி யுள்ளது. ஜனநாய நீரோட்டத்துடன் இணைய முடியாத பின்னணியைக் கொண்டவர்கள் தொடர்ந்தும் கண்ணாம்பூச்சி காட்டுகிறார்கள். மக்களை ஈடேற்ற யாரும் இல்லை.

## 6. தீராத பகை கொண்டுவந்துள்ளது

பாரத மாதாவின் பாதங்களில் யாழ்ப்பாணம் தவஞ் செய்கின்றது. மதம் கலாச்சாரம் மொழி வரலாறு என்பனவற்றில் ஈழத் தமிழருக்கும் பாரதத்துக்கும் பிரிக்க முடியாத பிணைப்புண்டு. பாரதம் ஈழத் தமிழரின் நேசக்கரம். ஈழத் தமிழருக்கு உலகில் வேறு எங்கும் அப்படி ஒரு இரத்தவுறவு இல்லை. யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டதை யடுத்துத் தமிழகம் கொதித்தது. தீக்குளித்தது. 1983 கறுப்பு ஆடிக் கலவரத்தை யடுத்து உலகம் முழுவதும் கேட்க அபயக் குரல்கொடுத்த தேசம் பாரதம். சுதந்திரப் போராளிகளின் ஆயுதப் போராட்டத்துக்கு அர்த்தம் கொடுத்த தேசம் அது. இளைஞர் ஆயுத முயற்சிகள் முளையிலே கிள்ளி எறியப்படாமல் அபயம் கொடுத்த நாடு பாரதம். யாழ்ப்பாணம் வீழ்ச்சி அடையாமல் அபயம் அளித்த நாடு பாரதம். வடகிழக்கு இணைந்த ஆட்சிக்கு கால்கோளிட்ட நாடு பாரதம். வடகிழக்கைத் தமிழரின் பாரம்பரிய தேசம் என ஆவணப்படுத்திய நாடு பாரதம்.



ஆனால் 14 வருடப்போர்க் காலம் பாரதத்தின் தொடர்பை அறுத்தெறிந்து தீராத பகை கொண்டுவந்துள்ளது. இந்தியா ஈழத் தமிழரோடு போர் செய்ய வென்று அமைதிப் படையை அனுப்பவில்லை. அவர்கள் போர் செய்யக் காரணமான நிகழ்ச்சி என்ன? அது ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது. தூரப்பார்வை, சாணக்கியம் இரண்டும் அற்ற சீற்றத்தால்தான் பாரதத்தின் பக்க பலத்தை ஈழத் தமிழர்கள் இழந்து நிற்கிறார்கள். தீர்வு ஏற்பட்டால்கூட அதனைச் சிங்கள அரசு தூக்கி வீசாமலிருக்க இந்திய உதவி தேவை. விடுதலைப் புலிகள் களத்தில் நிற்கும்வரை இந்தியா எமக்காகப் பரிந்து செயல்படக்கூடிய அறிகுறிகள் தென்படவில்லை. இந்தியாவை விடுங்கள். தமிழ் நாடுகூட - ஒரு சிலர் ஆதரவு இருந்தாலும் - முற்றாகப் பகைத்து நிற்கிறது. ஒரு தனிமனிதனின் குணவியல்புகளுக்காக ஒரு முழுச் சமுதாயமுமே பழிக்கு ஆளாகி யுள்ளது. புலிகளின் இந்தியக் கொள்கை சிங்கள அரசுக்குப் பால் வார்த்துள்ளது.

அமிர்தலிங்கம் அவர்கள் இந்திய உதவியுடன் மட்டுமே பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று திடமாக நம்பினார். அதற்காக ஓயாது வெற்றியோடு உழைத்தார். வெண்ணெய் திரண்டு வரும் சமயம் தாழி உடைந்த கதையாகியது ஈழத் தமிழர் கதை.

உதவிக்கு வந்த இந்திய அமைதி காக்கும் படையைப் பகைத்ததோடு, இந்தியாவின் இளவரசன் எனப்போற்றப்பட்ட ராஜீவ் காந்தி அவர்களைத் தமிழ் நாட்டில் ஸ்ரீபெரும்புதூரில் வைத்துக் கொலை செய்ததையும் இந்தியா மன்னிப்பதாக இல்லை. 1983 இனக் கலவரத்தை அடுத்து தமிழ் நாட்டில் பொங்கி எழுந்த ஆதரவு அலை - சென்னையில் உள்ள இலங்கை ஹைகொமிசனர் அலுவலகத்தின் முன்னே மக்கள் மறியல் செய்து ஆயிரக்கணக்கில் சிறைசென்ற நிகழ்வுகள், பாடசாலை மாணவர்களும் பிற அமைப்புக்களும் செய்த ஆர்ப்பாட்டங்கள், இளைஞர்கள் மேற்கொண்ட தீக்குளிப்பு முயற்சிகள் போன்ற நிகழ்வுகள் - அல்லது ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் டில்லி நாடளுமன்றத்தில் 1983 கறுப்பு யூலை இனக் கலவரத்தை 'இனஅழிப்பு' என்று உலகத்துக்குப் பிரசாரித்தது போன்ற நிகழ்வு எதுவும் - சிங்கள இராணுவ படையெடுப்பால் 5 இலட்சம் தமிழ் மக்கள், 1995இல் வலிகாமத்தை விட்டு இடம் பெயரவேண்டிய கொடுமைக்கு ஆளானபொழுது -

இந்தியாவின் பக்கமிருந்து நடைபெறவில்லை. 1987 மே மாதம் வடமராட்சி மீது டென்சில் கொப்பகடுவ தலைமையில் இராணுவ படையெடுப்பு நடந்த பொழுது, பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் "யாழ்ப்பாணம் வீழ்ச்சி" அடையக்கூடாது என்று இலங்கை அரசுக்கு எச்சரிக்கை அனுப்பினார். வானத்தில் இருந்து உணவும் மருந்தும் இறக்கம் செய்தார். பின்னர் படையை அனுப்பினார். அந்தவகை இந்திய உதவிகள் எதுவும் 1995இல் சிங்கள இராணுவம் வலிகாமத்தை ஆக்கிரமித்த பொழுது கிடைக்கவில்லை. அதன் பின்னரும் கிடைக்கவில்லை.

நடந்ததை மறக்கும்படி கேட்கிறோம். ஒரு அன்னையின் இளம் குருத்தைப் பச்சை இரத்தம் கொட்ட வெட்டிச் சரித்துவிட்டு, அந்த அன்னையிடம் இழப்பை மறக்கச் சொல்லி நாம் கேட்கிறோம். அந்த அன்னையின் இனபந்துக்களின் குருதியில் நீராடிவிட்டு அந்தச் சோகத்தை மறக்கச்சொல்லிக் கேட்கிறோம். எமது வீட்டுக்குள் நாமே தீப்பொறியை வீசி எரித்துவிட்டு, சாம்பலில் குளித்து விடயங்களைப் பூதாகாரமாக்கி ஆப்பிழுத்த குரங்காக அவதியுறுகின்றோம். அப்படியிருந்தும் நாம் கேட்கின்றோம் - எம்மைக் கைகழுவி விடாதீர்கள். குற்றம் புரியாத எங்களை - மக்களை - தண்டிக்காதீர்கள். எங்களுக்கு கைகொடுத்து உதவுங்கள். உங்களுக்கு நாங்கள் தர்மம் போதிக்கத் தேவையில்லை.

பராதம் இல்லாத தீர்வுகள் எதுவும் எமது இன்னல்களை முற்றாகப் போக்காது. சிரஞ்சீவியத்துவம் உடையதாக இருக்காது. இன்று நம்பிக்கையான பக்கத் துணை எதுவும் அற்ற தனி மரமாக ஈழத் தமிழ்ச் சமூகம் தவிக்கிறது. ஈழத் தமிழ் சமூகம் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று, சிங்கள சமூகத்துக்குச் சமமான உரிமைகளோடு, இந்த நாட்டில் தலை நிமிர்ந்து வாழ தமிழ் நாடும், இந்திய அரசும் உதவவேண்டும் என்பதே ஈழமக்கள் பெருவிருப்பம். அதுவே அண்ணல் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் நாடு, பாரதம் இரண்டினிடமும் வேண்டி நின்ற உதவி. அதனை நிறைவேற்றி எம்மை ஈடேற்ற வேண்டுகின்றோம்.

இவற்றைவிட கலாச்சாரம், பொருளியல், கல்வி, ஒழுக்கவியல், சட்டமும் ஒழுங்கும், உளவியல், மனநலம் தொடர்பான வேறும் பல



சீரழிவுகளையும் பதினாலு வருடப் போர்கள் கொண்டுவந்துள்ளன. குளிக்கப் போய்ச் சேறுவாரிப் பூசிய கோலத்துக்குச் சமூகம் உட்படுத்தப்பட்டுள்ளது.

நான் முற்பிறப்பில்
யாருக்கு
என்ன கேடு செய்தேன்?
இப்படி ஒரு கொடுமை!

நாளை விடியும் நாளை விடியுமென்று
பதினாலு வருடங்கள்
பாம்பும் பூச்சியும் குடிகொள்ளும்
வீதியோரத்திலும் விருட்ச நிழலிலும்
ஐந்து பிள்ளைகளுடன்
ஒரு கண் தூக்கத்துக்காகப் போராடுகின்றேன்.
ஒரு வேளை கஞ்சிக்காக ஆலாய்ப் பறக்கிறேன்.

அபயமளிக்க
அண்ணல் இல்லாத வனத்தில்
நான் இரத்தக்கண்ணீர் சொரிகின்றேன்

# அதிகாரம் 65
# வரலாறு பேசுகிறது

தமிழ் மக்கள் - குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் -

புத்திஜீவிகள் என்று தம்மை அடையாளப் படுத்தியுள்ள சமூகம்.

ஆனால் அவர்கள் சிந்திக்க விரும்பாமை புதிராக இருக்கிறது.

ஒட்டுமொத்தமாக ஈழத் தமிழ்ச் சமூகம் - புலம் பெயர்ந்தவர்கள் தவிர - கடந்த கால் நூற்றாண்டாக அனுபவிக்கும் இன்னல்களுக் கெல்லாம் என்ன காரணம்? அந்த விடிவில்லாத இதயத்தைப் பிழியும் துன்பங்கள துயரங்கள் அழிவுகள் அவலங்கள் இன்னும் தொடர

வேண்டுமா? என்ன உரிமைகளுக்காகத் துப்பாக்கி தூக்கினோம்? துப்பாக்கி ஏந்தி இதுவரை ஏதாவது உரிமைகள் பெற்றோமா? அஹிம்சை வழியிலாவது ஏதாவது உரிமைகள் பெற்றோமா?

மிகுதி இன்னும் என்ன உரிமைகள் எஞ்சி யிருக்கின்றன?

இவற்றைச் சிந்திக்கச் சொன்னால்,

'வேண்டாம் வம்பு' என்று காதைக் கடிக்கிறார்கள்.

கால் நூற்றாண்டு காதைக் கடித்தது போதாதா?

தொட்ட சனியன் தொடராமல் இருக்க,

சமூகம் இனியாவது சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும்.

சிந்திக்கத் தெரிந்தவன் சிந்திக்காது விடுவது சமூக துரோகம். சிந்திக்கத் தெரியாதவன் சிந்திப்பது சமூக விரோதம்.

ஈழத் தமிழ் மக்கள் உரிமைப் போராட்டம் தொடங்கி அரை நூற்றாண்டைத் தாண்டிவிட்டது. அதில் முதல் 27 ஆண்டுகள் தந்தை செல்வா-அமிர்தலிங்கம் காலம். அஹிம்சை வழியில் போராடிய காலம். மிகுதி 28 ஆண்டுகள் ஆயுத இயக்கங்களின் காலம். உரிமைகளை வென்றெடுக்கத் துப்பாக்கிகள் குரல் கொடுத்த காலம். இந்த 55 வருட காலப் பகுதியில் தமிழ் மக்கள் எதிர் நோக்கிய உரிமைப் பிரச்சினைகள் என்ன? அவற்றில் எவை எவை யாரால் தீர்க்கப் பெற்றன? இன்னும் தீர்க்கப்படாமல் உள்ள பிரச்சினைகள் என்ன? புதிய பிரச்சினைகள் யாரால் வந்தன? இவற்றை உணர்ந்து கொண்டால்தான் எமது சமூகம் தனது துன்பங்களில் இருந்து விடுபட வழிபிறக்கும். தமிழரசு-கூட்டணிக் கட்சிகள் என்ன பிரச்சினைகளை எதிர் நோக்கின? ஏதாவது சாதித்தனவா? இயக்கங்கள் என்ன பிரச்சினைகளைத் தீர்க்க ஆயுதம் ஏந்தின? கிழட்டு அரசியல்வாதிகள் காலங் கடத்துகிறார்கள் என்று ஆயுதம் ஏந்திய 'பெடியள்' இந்த 28 வருட நெடுங்காலத்தில் ஏதாவது பிரச்சினைகளைத் தீர்த்தார்களா? மேலே கேட்கப்பட்ட வினாக்களும், அவற்றிற்குரிய விடைகளும் பின்வரும் அட்டவணையில் இரத்தினச் சுருக்கமாகப் பார்வைக்கு வைக்கப்படுகின்றன:



எதிர் கொண்ட பிரச்சினைகள்?

| தமிழரசு-தமிழர் விடுதலைக கூட்டணி | ஆயுத இயக்கங்கள |
|---|---|
| 1948 - இந்திய வம்சாவழியினர் பிரசாவுரிமை<br>1949 - குடியேற்றத் திட்டங்கள்<br>1956 - மொழிப் பிரச்சினை<br>1956 - தமிழ் அரச ஊழியர் பிரச்சினை<br>1965 - மாணவர் போதனா மொழிப் பிரச்சினை<br>1970கள் - தரப்படுத்தல்<br>தாயக உரிமை<br>வடகிழக்கு இணைந்த நிர்வாகம் | இந்திய வம்சாவழியினர் பிரசாவுரிமை<br>குடியேற்றத் திட்டங்கள்<br>மொழிப் பிரச்சினை<br>மாணவர் போதனா மொழிப் பிரச்சினை<br>தரப்படுத்தல்<br>தாயக உரிமை<br>வடகிழக்கு இணைந்த நிர்வாகம் |

தீர்வுக்காக முன்வைத்த வழிமுறை

| | |
|---|---|
| சமஷ்டி அரசு நிறுவுதல்<br>அஹிம்சை மூலம் | தமிழ் ஈழம் நிறுவுதல்<br>ஆயுத மூலம் |

தீர்வு கண்டவை: யாரால்? எப்பபோது? தீர்வு காணப்பட்டது?

| | |
|---|---|
| 1966 - மாணவர் போதனா மொழி தமிழரசுக் கட்சி | ஆயுத இயக்கங்கள் |
| 1966 ஜனவரி - தமிழ் மொழி சட்டம் தமிழரசுக் கட்சி | |
| 1966 தமிழ் அரச ஊழியர் பிரச்சினை தமிழரசுக் கட்சி | |
| 1967 -இந்திய-இலங்கை உடன்படிக்கை (நடைமுறைப்படுத்தல்) தமிழரசுக் கட்சி | இதுவரை எதனையும் |
| 1980 தரப்படுத்தல் - 30:55:15 த.வி.கூட்டணி | தீர்க்கவில்லை |
| 1987 - வடகிழக்கு தமிழர் தாயகம் த.வி.கூட்டணி | |
| 1987 - வடகிழக்கு இணைந்த நிர்வாகம். த.வி.கூட்டணி??? | |

தீர்க்கப்படாமல் உள்ள பழைய பிரச்சினைகள்

| | |
|---|---|
| சமஷ்டி ஆட்சி | தமிழ் ஈழம் |
| ஒரே நிர்வாக அலகு? | ஒரே நிர்வாக அலகு? |

ஆரம்பத்தில் நாம் கேட்டுப் போராடத் தொடங்கிய தமிழ் மக்களது உரிமைப் பிரச்சினைகள் - இந்திய வம்சாவழித் தமிழர் பிரசாவுரிமை-வாக்குரிமை, தமிழ் மொழி நிர்வாக உரிமை, தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினை, சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், தரப்படுத்தல், தமிழ் மாணவர் போதனா மொழி, வடகிழக்கு தமிழர் தாயகம், சமஷ்டி ஆட்சி அமைப்பது என்பனவே. சிங்களக் குடியேற்றம் இப்பொழுது கைவிடப்பட்ட பிரச்சினை. சமஷ்டி ஆட்சி மட்டுமே தீர்க்கப்படாமல் உள்ள பிரச்சினை.



இத்தீர்வுகளை ஆவணப்படுத்திய பெருமையில் பெரும் பகுதி அமிர்தலிங்கம் அவர்களுக்கே உரியது. 1965 -1968 காலப் பகுதியில் தேசிய அரசில் தமிழ் அரசுக் கட்சி சேர்ந்திருந்தது. அப்பொழுது அமிர்தலிங்கம் அவர்களை இராசதுரை-நவரத்தினம் கோஷ்டியும், வேறு சில பாராளுமன்ற, வாலிப முன்னணி உறுப்பினர்களும் எதிர்த்துத் தேசிய அரசைவிட்டு வெளியேறும் படி நெருக்குவாரம் கொடுத்த பொழுதும், அவர் அவசரப்படவில்லை. இராசதந்திரமாக சாத்வீக வழியில் வடகிழக்கு நிர்வாக மொழி, தமிழ் மாணவர் போதனாமொழி, அரச ஊழியர் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வெற்றி கண்டார். பின்னர் 1980இல் கட்சியைச் சேர்ந்த இராசதுரை-கோவை மகேசன்-சேனாதிராசா கூட்டத்தின் எதிர்ப்புக் கிடையில், மாவட்ட சபை மசோதா மூலம் தமிழ் மாவட்டங்களின் எல்லைப் பிரதேசங்கள் பறிபோகாமல் சட்டப்பாதுகாப்புச் செய்தார். 1983இன் பின்னர் இந்தியாவில் வாழ்ந்த காலை, இந்தியப் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களின் மூலம் வடகிழக்கு மாகாணங்களைத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்று சட்டவுரிமை பெறுவதிலும், வடகிழக்கு மாகாணங்களை இணைந்த நிர்வாக அலகாக ஏற்படுத்துவதிலும் வெற்றி பெற்றார் (ஒரு வருட நிபந்தனை).

தீர்வு காணததில் ஒன்று சிங்களக் குடியேற்றத் திட்டம் சம்பந்தமானது. அது தீர்க்கக்கூடிய பிரச்சினையா? குடியேற்றத் திட்டங்களில் வாழும் சிங்களவர்கள் வடகிழக்கிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்று - துப்பாக்கி ஏந்தியவர்களோ அஹிம்சைவாதிகளோ - இப்பொழுது கேட்கிறார்களா? 70ஆம் பத்தாண்டுகளின் இறுதியில் நாம் கேட்கத் தொடங்கிய தமிழ் ஈழம் பற்றியும் யாராவது இப்பொழுது பேசுகிறார்களா? அது சாத்தியப்படக்கூடிய சங்கதியா? சமஷ்டி ஆட்சி மட்டுமே எஞ்சி நிற்கும் பிரச்சினை. ஆனால் பதினாலு வருடப் போர் காரணமாக புதிய பல சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்கும் விடைகாண வேண்டியவர்களாக உள்ளோம். குளிக்கப் போய், குளித்து முடிந்து வரும் வழியில் சேற்றை வாரிப் பூசிக்கொண்டு வந்துள்ளோம்.

ஆயுத பலம் பேச்சுவார்த்தைக்குப் பேரினவாத அரசை இழுத்து (2002) வந்துள்ளது. முன்னரும் அஹிம்சைப் போராட்டங்களையடுத்துப் பலதடவைகள் அரசு பேச்சு வார்த்தைக்கு வந்ததுதான். 1987 இந்திய-

இலங்கை உடன்படிக்கையை உதாசீனப்படுத்தாமல் பொறுமையைக் கடைப்பிடித்திருந்தால் புதிய பிரச்சினைகள் படை எடுத்திருக்கா. இதுவரையில் சமஷ்டி ஆட்சியில் வடகிழக்கு பூரித்திருக்கும்.

"நான் தமிழ் மக்களின் சேவகன். என் பணி அவர்களை வழிநடத்தி அவர்கள் வாழ்வின் சுபீட்சத்துக்காக உயிருள்ளவரை உழைப்பதே" என்று சொல்லிக் கொள்வதில் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் பெருமிதம் காண்பவர். அவர் நாற்பது ஆண்டு காலம் தமிழனின் உரிமைக்காக மேன்மைக்காக உழைத்தவர். அவரது நாட் குறிப்பில் தமிழனை மறந்து ஓய்ந்திருந்த ஒரு தினமும் கிடையாது. அவர் சிந்தனைகள்-செயல்கள் எல்லாம் மக்களின் நன்மைகளை மையமாக வைத்தே மலர்ந்து படரும். தன்னை நாடி வந்தவர்களுக்குத் தன் ஆள் பிறன் ஆள் என்று வேறுபாடு காட்டாமல் உதவிபுரிந்தவர். அவர் உயர்வு தாழ்வு பாராட்டாமல் மனிதனை மனிதனாக மதிக்கத் தெரிந்தவர். எல்லோரையும் வரவேற்கின்ற அவருடைய சமதர்மப் புன்னகை - அதில் அன்பின் பண்பின் தர்மத்தின் பெருமைகள் பொலிந்து நிறைந்து சொரியும். அபயம் என்று சென்றவரை அவர் அரவணைக்காமல் விட்டதில்லை. தெல்லிப்பழையில் கல் எறிந்த மதுபானக் கடைக்காரனுக்கும் அவர் அருள்புரிந்தவர். யாழ்பாணத்தில் தனது மண்டையை அடித்து உடைத்த பொலிஸ்காரனையும் மன்னித்து தன் பாதுகாவலராக வைத்துக் கொண்டவர். மூன்று முறைகள் தன்னைச் சிறைக்கு அனுப்பிய ஸ்ரீமாவோ அம்மையாரின் குடியியல் உரிமையை 7 வருடங்களுக்குப் பறிக்கப் பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் (1980) அம்மையாருக்குச் சார்பாக பல மணி நேரம் வாதாடியவர். அமிர்தலிங்கம் அவர்கள் ஈழத்து அரசியல் வானில் மக்கள் சுபீட்சங்களுக்கு முதன்மை கொடுத்துத் திருப்பணிபுரிந்த ஒரு புனித நட்சத்திரம்.

தமிழனைத் தேடி வரும் அபாயங்களை எடுத்துச் சொல்லி மக்களை அஹிம்சைப் போராட்டக் களத்துக்கு இழுத்து வந்தவர். ஈழத் தமிழருக்குத் தெய்வம் தந்த சொத்து அவர். மக்களை மையமாக வைத்து, மக்களின் உயிர் உடைமைகளுக்குப் பேரழிவு ஏற்படாமல் இருக்கவே, தந்தை செல்வாவைப் பின்பற்றி அஹிம்சைவழியில் விடுதலைப் பணியை முன்னெடுத்தார். அதனை இளைஞர்கள் உதாசீனம் செய்து விடுதலைக்கு அவசரப்பட்டனர். அவர்கள் கால் நூற்றாண்டைக் கடந்தும் சமூகத்தின் பிரச்சினை ஒன்றைத்தானும் இன்னும் தீர்க்கவில்லை. பதிலாகப் புதிய பிரச்சினைகளை மக்கள் தலையில் கட்டியடித்துள்ளனர்.



தமிழ் ஈழ உரிமைப் போராட்ட வரலாறு என்ன பேசுகிறது? அரசியல் தீர்க்கதரிசனமும், அனுபவ முதுமையும், அறிவும் விவேகமும் உடைய தலைவர்களை அக்கினியில் எரித்துச் சாம்பல் ஆக்கிவிட்டு, இளமையின் துடிப்பையும் இரும்பையும் நம்பிய ஈழத் தமிழ் மக்கள் தாம் செய்த தவறுகளுக்கு நிரம்ப வருந்துகிறார்கள். தாம் செய்த தவறுகள் கொண்டு வந்த கொடுமைகளுக்குப் பயந்து வெளிநாடுகளுக்கு ஓடித்தப்ப முடியாமல் ஈழத்தில் எஞ்சி வாழ்பவர்கள் கொடுத்த கொடுக்கின்ற விலை மிகமிக அதிகம்.

நான்கு தசாப்த விடுதலைப் போராட்ட வரலாற்றில் அண்ணல் அமிர்தலிங்கம் அவர்கள் என்ன செய்தார் என்று புரளிபண்ணும் மனிதர்களும் உண்டு. அவர்களின் இருதய கவனத்துக்கு அவர் வரலாற்றில் பதித்த அருஞ் சொத்துக்கள்:

1. தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக விடுதலைக் களத்துக்கு இழுத்து வந்தது.
2. ஈழத் தமிழர் பிரச்சினையை உலக மயப்படுத்தியது.
3. இந்தியாவின் பேராதரவைப் பெற்றதோடு, அந்த நாட்டை ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளச் செய்தது.
4. ஈழத் தமிழர் இன்னலுற்றபோது தமிழ்நாட்டைக் கொதித்தெழச் செய்தது.
5. இந்திய அரசாங்க-எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் யாவரையும் ஈழத் தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவு தரச் செய்தது.
6. வடகிழக்கிற்கு வெளியே உள்ள - குறிப்பாக மலையகத்தில் உள்ள - தமிழ்ப் பிள்ளைகளின் போதனா மொழி சிங்களமாக மாற்றப்படாமல் இருக்கச் சட்டப்படி ஆவன செய்தது.

7 பெற்றாரின் தாய் மொழியே மாணவனின் போதனா மொழியாக் இருக்கவேண்டும் என்று சட்டம் இயற்றச் செய்தது.

8. வடகிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகத் தமிழ் மொழியைச் சட்டப்படி அரசாங்கம் ஏற்கச் செய்தது.

9. வடகிழக்கு நீதிமன்ற மொழியாக தமிழ் மொழியை சட்டப்படி ஏற்கச் செய்தது.

10. தமிழ் மொழியைத் தேசிய மொழியாக அரசு ஏற்கச் செய்தது.

11 தேசிய அரசில் சேர்ந்திருந்த வேளை இந்திய வம்சாவழித் தமிழ் மக்களின் இன்னல்களின் சுமையை வெகுவாகக் குறைத்ததோடு, 75,000 பேருக்கு பிரசாவுரிமை வழங்கியது.

12 பல்கலைக்கழக அனுமதிக்கு மொழிமூல தரப்படுத்தல் முறை தொடராமல் செய்து 55-30-15 அனுமதி முறையை ஏற்படுத்தியது

13. வடக்கு-கிழக்கு மாகாணங்களின் எல்லைப்புற நிலப்பகுதிகளைப் பிடுங்கி எடுத்து சிங்கள மாவட்டங்களோடு இணைப்பதற்கு முற்றுப் புள்ளி வைத்தது.

14. 1987இல் யாழ்ப்பாண வீழ்ச்சி முற்றுப் பெறாமல் தடுத்துப் பாதுகாத்தது.

15. வடகிழக்கு மாகாணங்களைத் தற்காலிகமாக இணைத்து ஒரு முன்மாதிரியை ஏற்படுத்தியது.

16. 'இந்த மண் எங்கள் சொந்த மண்' என்று உரிமை பாராட்டக் கூடியதாக வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் என்பதை பேரினவாத அரசு ஏற்கச் செய்து வரலாறாக ஆவணப்படுத்தியது.



ஆவணப்படுத்திய அத்தனை சேவைகளும் - அமிர்தலிங்கம் அவர்களைத் தமிழ் ஈழ விடுதலை வரலாற்றில் விஸ்வரூபமாக அடையாளப் படுத்துகின்றன. தமிழ் ஈழ அரசியல் வரலாறு, அவர் சாத்வீக வழியில் நின்று தமிழ் மக்களுச் ஆற்றிய அளப்பரிய சேவைகளை என்றும் சிரமேற் சுமந்து பேசும். ஒரு சமுதாயத்தின் எழுச்சியும், மேன்மையும், சீரும் சிறப்பும் - நேர்மை நீதி நியாயம், பாசம் பரிவு இரக்கம், கல்வி கேள்வி சாணக்கியம் நிறைந்த தலைவர்களின் புனித பணியின் வழிவரும் விளைவுகளே. தனது சமூகத்தின் ஈடேற்றத்துக்காக, மனிதவுரிமைகளுக்காக, விடுதலைக் காகத் தம்மை அர்ப்பணித்து - தர்மத்தின் வழிநின்று உழைத்த புனித தலைவர்களை மக்கள் வைடூரியங்களாக-மாணிக்கங்களாக-அவதாரங்களாக மதிக்க வேண்டும். அவ்வகையில் மதிக்கத் தெரிந்த சமூகமே அமைதியும் சமாதானமும் தர்மமும் செல்வப் பெருமையும் குறைவறப் பெற்றதாகத் தன்புகழ் தரணியில் நின்று நிலைக்க நீடூழி வாழும்.

நிறைவுற்றது.



திரு. அமிர்தலிங்கம் 1970 பொதுத் தேர்தலில் தோல்வியுற்றபோது அருகே. சி.கதிரவேலுப்பிள்ளை





சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதிய அரசியலமைப்புக்கு சமர்ப்பிப்பதற்கான ஆறு அம்ச திட்டத்தை வல்வெட்டித்துறையில் வரைந்தபோது என். சிவநேசன், சி. சுந்தரலிங்கம், க. துரைரத்தினம், திரு. அமிர்தலிங்கம் (1971)



தமிழர் கூட்டணி யாழ், முற்றவெளி கூட்டம் அமிர்தலிங்கம், சி.சுந்தரலிங்கம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், எம்.எஸ். செல்லசாமி (1972)





தமிழர் கூட்டணி யாழ். முற்றவெளி கூட்டம் அமிர்தலிங்கம், சி. சுந்தரலிங்கம், எஸ். ஜே.வி. செல்வநாயகம், எம்.எஸ். செல்லசாமி (1972)




திரு. அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சியின் பன்னிரண்டாவது மாநாட்டில் (1974)





அரசியலமைப்பு சட்டத்தை எதிர்த்து முள்வேலித் தடைக்குப் பின்னால் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம் (1975)



கொழும்பில் கூட்டமொன்றில் தொணடமான், நீலன் திருச்செல்வம் மற்றும் திரு. அமிர்தலிங்கம் (1982)





திரு. அமிர்தலிங்கம் ட்ரயல் அற் பார் (1975)



திரு. அமிர்தலிங்கம் ட்ரயல் அற் பார் விசாரணையில் விடுதலை செய்யப்பட்டபின் யாழ், புகையிரத நிலையத்தில் வரவேற்பு (1975)





1982 இனக்கலவரத்தின் பின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அங்கதவர்கள் கறுப்பு சட்டை அணிந்து ஒரு மாத காலம் துக்கம் அனுஷ்டித்தபோது முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனுடன் திருமதி & திரு. அமிர்தலிங்கம் மற்றும் இரா. ஜனார்த்தனன் (1983)



சென்னையில் இந்திரா காந்தியின அந்தரங்க செயலாளர் ஜி. பார்த்தசாரதியுடன் திரு. அமிர்தலிங்கம் மற்றும் இரா. ஜனார்த்தனன் (1984)

# உசாவிய துணை நூல்கள்


A Soldier's Version by Major General Sarath Munasinghe
Assignment Colombo by J.N.Dixit
Broken Palmyrah - University Teachers
'Broken Promises' by M.Thirunavukkarasu
Devolution of Power in Sri Lanka - TULF Publication
Emergenvy '58 by Tarzue Vittachi
Hansard - Colombo Parliament
Hansard - New Delhi Parliament
Indian Intervention in Sri Lanka by Rohan Gunaratna
Jain Commission Report
'Sunday Leader' Colombo.
The Murder of a Moderate by T.Sabaratnam
The Pirabhakaran Phenomenon by Prof. Sachi Sri Kantha - Website
The War in Sri Lanka - Unending Conflict by Apratim Mukarji
The Will to Freedom by Adale Balasingham
Tigers of Lanka by R. Narayan Swamy
Untold Story by K.T.Rajasingam - Website
இலட்சிய இதயங்களோடு - அ.அமிர்தலிங்கம்.
'உதயன்' - தினசரி, யாழ்ப்பாணம்.
'உதயன்' வாரவிதழ் கனடா.
'என்று முடியும் எங்கள் போட்டிகள்? எஸ்.கே.மகேந்திரன்
ஒலி, ஒளி நாடாக்கள் - கனடாக்கிளைச் சேகரிப்பு
ஒளியில் எழுதுதல் - அமிர்தலிங்கம் அறக்கட்டளை வெளியீடு
தரணியெங்கும் தமிழ் வளர்ப்போம் - சாமி அப்பாத்துரை
'தினக்குரல்' நாளிதழ், கொழும்பு.
பாராளுமன்றப் பதிவேடு - கொழும்புப் பாராளுமன்றம்
வரலாற்றின் மனிதன் - அமிர்தலிங்கம் அறக்கட்டளை வெளியீடு
'வீரகேசரி' - கொழும்பு
வெள்ளி விழா மலர் - தமிழரசுக் கட்சி வெளியீடு.


# பெயர்ச் சுட்டிகள்


| | |
|---|---|
| .சந்திரசேகரன் | 17 |
| .·.பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா | 109, 150 |
| ஸ்ரீகாந்தலிங்கம் | 174, 175, 176 |
| ஸ்ரீதரன் | 57, 146 |
| ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க | 60, 70, 71, 105, 110, 122, 133, 138, 149, 150, 155, 311 |
| ஜனார்த்தனம் | 115, 123, 209 |
| ஜீ.ஜீ. பொன்னம்பலம் | 8, 9, 10, 14, 56, 103, 116, 139, 140, 141, 370 |
| ஹன்டி பேரின்பநாயகம | 22 |
| ஹர்கிரத | 242, 244 |
| ஹர்தீப் பூரி | 236 |
| ஹமீட் | 221 |
| ஹியூஜ் கிளெஹோன் | 211, 215 |
| உமா மகேஸ்வரன் | 171, 330, 331, 354 |
| இந்திரா காந்தி | 54, 117, 184, 185, 186, 189, 190, 191, 192, 193, 194, 197, 199, 210, 236, 238 |
| நட்வர்சிங் | 223, 224, 227 |
| கனகரத்தினம் | 10 |
| கந்தசாமி | 303 |
| கப்டன் குப்தா | 242 |
| கா.பொ.இரத்தினம் | 86, 129, 175 |
| காமாட்சி ஜெயராமன் | 115 |
| காமினி ஜயசூரிய | 191, 237 |
| காமினி திசநாயக்க | 163, 191, 350, 351 |
| காசி ஆனந்தன் | 110, 117, 351, 352, 353, 354 |
| காண்டீபன் | 6, 49, 268 |
| குமரப்பா | 244, 246, 247, 248, 296 |
| குமரி அனந்தன் | 27 |
| குட்டிமணி | 180, 181 |

| | |
|---|---|
| கருணாநிதி | 184, 269 |
| கலா மாணிக்கம் | 75, 264, 338 |
| பஸ்தியாம்பிள்ளை | 134, 135, 136, 275 |
| பகீரதன் | 6, 323, 369 |
| பான் மதிமுகராசா, | 332 |
| பார்த்தசாரதி | 191, 192, 201 |
| பத்மநாபா | 257, 354 |
| புலேந்திரன் | 247 |
| பி.சி. பெர்னான்டோ | 77 |
| பிரபாகரன | 171, 172, 203, 224, 236, 247, 297, 298, 320, 326, 330 |
| பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க | 151, 152, 153, |
| பீலிக்ஸ் ஆர்.டி. பண்டாரநாயக்கா | 155 |
| பிலிப் குணவர்த்தன | 8, 38 |
| பலன்சூரிய | 41 |
| ஐ.இரத்தினம் | 300 |
| வைத்தியலிங்கம் | 14, 25, 70 |
| தகநாயக்க | 40, 44, 54, 94, 183, 257 |
| துரையப்பா | 131, 132 |
| துரைரத்தினம் | 74, 83, 137, 326 |
| தம்பிமுத்து | 51 |
| தியாகராசா | 104, 164 |
| திகம்பரலிங்கம் | 6 |
| தினேஸ் சிங் | 227 |
| திருச்செல்வம் | 77, 86, 138, 139 |
| திலகரத்தின | 171, 200 |
| தங்கத்துரை | 180, 181, 338, 363 |
| மு.கருணாநிதி | 115 |
| மு.மாணிக்கம | 75, 109 |
| மாத்தையா | 244, 247, 248, 296, 297, 298, 312, 314, 321, 326, 327, 332, 342 |
| மாணிக்கம் | 86 |
| மரைக்கார் கச்சி | 81 |
| மதிவதனி | 299 |
| மகேஸ்வரனு | 105 |





| | |
|---|---|
| மங்கையர்க்கரசி | 6, 61, 62, 73, 78, 79, 134, 263, 264, 265, 273, 274, 275, 306, 322, 329 |
| மசூர் மௌலானா | 82, 108, 109 |
| முருகேசு சிவசிதம்பரம் | 299, 303, 321 |
| மரியநாயகம் | 112இ 113 |
| மரியதாசன் | 313, 314, 315, 321 |
| மலர்விழி | 6 |
| டயஸ் பண்டாரநாயக்கா | 70 |
| டட்லி சேனநாயக்க | 85, 86, 88, 91, 92, 95, 96, 283, 284 |
| அயின்றிக்ஸ் ஓட்ஸ் | 227 |
| அன்ரன் பாலசிங்கம் | 224, 299, 309, 339, 371 |
| அன்ரன் வாஸ் | 337 |
| அகமது எம்.சி | 419 |
| அப்துல் மஜீத் | 89 |
| அப்துல் அசீஸ் | 346 |
| ஆர்ன்ட் | 74 |
| அத்தாவுட செனிவரத்தின | 301, 346, 419 |
| அடேல் பாலசிங்கம் | 299, 340, 419 |
| அலோசியஸ் | 298, 303, 304, 306, 307, 312, 313, 314, 320, 321 |
| ஆவரங்கால் க. சின்னத்துரை | 260 |
| அரியநாயகம் | 51, 75, 108 |
| அல்பேட் டி சில்வா | 153 |
| அண்ணாதுரை, சி.என். | 419 |
| ஜே.என்.தீக்சிற் | 201, 227, 232, 234, 239, 253 |
| ஜெயசிங்க | 223 |
| ஜெயசங்கர் | 323 |
| ஜோன் கொத்தலாவல | 21, 22 |
| யோகி | 298, 301, 310, 312, 316 |
| யோகசங்கரி | 301, 346, 357 |
| யோகேஸ்வரன | 162, 299, 303, 304, 305, 337 |
| நெவில் ∴பெர்னான்டோ | 169, 168, 170 |
| கே.கனகரத்தினம் | 14 |
| கே.துரைரத்தினம் | 333 |
| கே.டபிள்யூ.தேவநாயகம் | 88, 370 |

| | |
|---|---|
| கோவை மகேசன் | 159, 403 |
| கோமதி வன்னியசிங்கம் | 268 |
| கொல்வின் ஆர் டி சில்வா | 105, 106, 277 |
| பொன் மதிமுகராசா | 339 |
| பொன். சிவபாலன் | 363 |
| பொன்னுத்துரை சிவபாலன் | 332, 338 |
| பெரேரா | 94 |
| மேவின் டி சில்வா | 314, 330 |
| மெரில் பெர்னான்டோ | 93 |
| டென்சில் கொப்பக்கடுவ | 383 |
| டேவிட் | 58 |
| சேனநாயக்க | 3, 9, 279 |
| சேனாதிராசா | 158, 159. 255, 258, 267, 357, 358, 360, 363 |
| சொய்சா | 53, 54 |
| சொலமன் பண்டாரநாயக்கா | 70 |
| சௌ. தொண்டமான | 79 |
| செல்லையா | 35, 45 |
| செல்வத்துரை | 26, 160, 261 |
| செல்வராசா | 331, 338 |
| செல்லத்தம்பு | 121 |
| வேல்முருகு மாஸ்டர் | 75, 336 |
| ரொனி டி மெல் | 18 |
| றொமேஸ் பண்டாரி | 201, 202 |
| லெஸ்லி குணவர்த்தன | 97 |
| லோறன்ஸ் திலகர் | 224 |
| சூசைதாசன் | 30( |
| சு.நடராசா | 65 |
| சந்ததியார் | 133, 179, 180 |
| சந்திரபால | 169 |
| சுந்தரசிவம் | 69 |
| சுந்தரலிங்கம் | 29, 31, 33, 35, 40, 44, 47, 55, 92, 103, 279, 370, 409 |
| சுப்பிரமணியம் | 84, 117, 176 |
| சபாரத்தினம் | 158, 195, 204, 256, 321 |



| | |
|---|---|
| சாஸ்திரி | 99 |
| சாம் தம்பிமுத்து | 75 |
| சாலி | 78 |
| சத்தியானந்தனு | 313, 321 |
| சத்தியசீலன் | 128, 354 |
| சம்பந்தமூர்த்தி | 331, 337 |
| சம்பந்தன் | 201, 203, 211, 220, 221 |
| சரோஜினி யோகேஸ்வரன் | 320, 338 |
| சி.க.சிற்றம்பலம் | 262 |
| சி.பொன்னம்பலம் | 21 |
| சிங்கில்ரன | 46 |
| சிவகுமாரன் | 124, 125, 128 |
| சிவகுரு | 11 |
| சிவமகாராசா | 174, 254, 358, 369 |
| சிவஞானகிராமணியார் | 101 |
| சிவஞானம் | 115 |
| சிவசிதம்பரம் | 75, 321, 362 |
| சிறில் மத்தியூ | 126, 162, 163, 270 |
| சில்வா | 134, 135 |
| சச்சி சிறீகாந்தா | 325 |
| சரத் முனசிங்க | 163, 318 |
| சண்முகநாதன | 332, 336 |
| வன்னியசிங்கம் | 11, 15, 25, 34, 35, 51, 55, 62, 65, 109, 334 |
| வன்டசன் | 83 |
| வித்தியானந்தன | 123, 145, 173 |
| வீரசிங்கம | 14, 123, 131, 262, 357 |
| ராஜீவ் காந்தி | 54, 199, 200, 201, 202, 214, 220, 230, 238, 302, 310, 324, 382, 383 384, 397, 398 |
| இராசகுலசூரியர் | 180 |
| இராசதுரை, செ | 75 |
| இராசமாணிக்கம | 77 |
| இராசவரோதயம | 15, 206 |
| இராசலிங்கம் | 66, 333, 335 |

| | |
|---|---|
| இரத்தினசபாபதி | 354 |
| ருத்திரா | 14 |
| ரி.மகேஸ்வர | 257 |
| ஏ.ஆர்.உடுகம | 78 |
| ஏ.சி.ஹமீட் | 223 |
| எஸ். சிவமகாராசா | 358 |
| எஸ்.கிருஷ்ணமூர்த்தி | 336 |
| எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா | 22, 27, 35, 54, 59, 182, 278, 280, 281, |
| எஸ்.ஜே.வி.செல்வநாயகம் | 359 959 14259 281 |
| எஸ்.சிவபாலன் | 9 |
| எஸ்.எம். இராசமாணிக்கம் | 64 |
| எஸ்.எம்.மாணிக்கராசா | 95 |
| ஏகாம்பரம், த | 74 |
| எலியேசர் | 198 |
| ஏணஸ்ற் பெரேரா | 313, 320 |
| றீத்தா | 313, 321 |
| ஓலிவர் குணதிலக்க | 61 |
| லலித் அத்துலத் முதலி | 224 |



யாழ்ப்பாணம் ஆவரங்காலில் பிறந்தவரான
திரு. கதிர் பாலசுந்தரம்,
பேராதனைப் பல்கலைக் கழகப் பட்டதாரி.
ஆசிரியராகப் பணிபுரிந்த இவர்
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில்
ஒரு தசாப்பத காலம்
நிருவாகசேவை அதிபராக இருந்தவர்.
சிறுகதை, நாவல், வானொலி நாடகம்,
மேடை நாடகம் எனப் பல்துறை சார்ந்த எழுத்தாளர்.
'அந்நிய விருந்தாளி' என்ற சிறுகதைத் தொகுப்பையும்
'மறைவில் ஐந்து முகங்கள்',
'கனடாவில் நவீன சாவித்திரி'
என்னும் நாவல்களையும் எழுதியுள்ளார்.
திரு பாலசுந்தரம் அவர்கள்
பொது வாழ்விலும் அரசியல் வாழ்விலும்
அமரர் திரு அமிர்தலிங்கம் அவர்களை நன்கு அறிந்தவர்;
அவருடன் நன்கு பழகியவர்.
யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதி காக்கும்படை
நிலைகொண்டிருந்த காலப்பகுதிக்கும் பின்னரும்வரை
யாழ்ப்பாணத்து அரசியலை நன்கு அவதானித்தவர்.